SURYA®
POWER TO SCORE

# இளமைத்தமிழே

## பத்தாம் வகுப்பு

**2020-21 புதிய பாடநூலின்படி**

**3000**க்கும் மேற்பட்ட கூடுதல் வினா விடைகள்
**1000**க்கும் மேற்பட்ட கூடுதல் குறு–சிறு வினா விடைகள்
**200**க்கும் மேற்பட்ட மொழி பயிற்சி கூடுதல் வினா விடைகள்

**இலவசம்**

1. மொழி பயிற்சி புத்தகம்
2. IDEAL தமிழ் வினா வங்கி


**உரையாசிரியர்கள்:**

**முனைவர் சி. பரந்தாமன்,** M.A., M.Ed., M.Phil, Ph.D.,
முதுகலைத்தமிழாசிரியர், கடலூர்.

**ச. சேட்டு மதார்சா,** M.A., M.A., M.Phil., B.Ed., TPT, PGDTR, UGC-NET, Ph.D., Dip.Folk, PGDCA
ஈரோடு.

**வீ. அபிஷேகா கேத்தரின்,** M.A., B.Ed.,
பாளையங்கோட்டை.

**கோ. பாக்கியநாதன்,** M.A., M.Phil, B.Ed.,
பாளையங்கோட்டை.

**முனைவர் ப.பெ. கலியமூர்த்தி,** M.A., B.Ed., Ph.D.,
(இலக்கியத் தோழன்), தமிழாசிரியர், கும்பகோணம்.



**SURYA PUBLICATIONS®**
(A UNIT OF **SHYAMALA** GROUP)
Tirunelveli - Chennai

Price ₹ 300/-



www.tnpscjob.com

*Published By*
*B. ARUMUGAM*
**SURYA PUBLICATIONS**
*(A unit of **Shyamala** Group)*

முதல் பதிப்பு : 2019 ஏப்ரல்
இரண்டாம் பதிப்பு : 2019 ஜூன்
மூன்றாம் பதிப்பு : 2019 ஜூலை
நான்காம் பதிப்பு : 2020 ஜனவரி
ஐந்தாம் (திருத்திய) பதிப்பு : 2020 ஜூன்

## BANK DETAILS

### TIRUNELVELI ACCOUNT

| | |
|---|---|
| Account Name | : **Surya Publications** |
| Account Number | : **446971431** |
| Bank Name | : **Indian Bank** |
| IFSC Code | : **IDIB000T034** |
| Branch Name | : **Tirunelveli Junction** |

| | |
|---|---|
| Account Name | : **Surya Publications** |
| Account Number | : **510909010051752** |
| Bank Name | : **City Union Bank** |
| IFSC Code | : **CIUB0000230** |
| Branch Name | : **Palayamkottai** |

### CHENNAI ACCOUNT

| | |
|---|---|
| Account Name | : **Sri Ganga Publication** |
| Account Number | : **928507483** |
| Bank Name | : **Indian Bank** |
| IFSC Code | : **IDIB000A031** |
| Branch Name | : **Ashok Nagar** |

| | |
|---|---|
| Account Name | : **Sri Ganga Publication** |
| Account Number | : **512020010022514** |
| Bank Name | : **City Union Bank** |
| IFSC Code | : **CIUB0000230** |
| Branch Name | : **Palayamkottai** |

## SURYA PUBLICATIONS®
(A UNIT OF **SHYAMALA** GROUP)

**Corporate Office :**
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
**Tirunelveli - 627001.**
Phone : 0462 - 233 8899 / 233 8484
Mobile : 94431 58484 / 95978 39822
Email : suryaguides@yahoo.com

**Registered Office :**
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
Ashok Nagar,
**Chennai - 600 083.**
Phone : 044 - 2474 4484
Mobile : 94421 58484 / 94425 58484
Email : srigangapublications5@gmail.com

**Website : www.suryapublications.in**

www.tnpscjob.com

# முகவுரை ....

**"தமிழுயரத் தானுயர்வான் தமிழன்"**

*-பாவாணர்*

அறிவார்ந்த மாணவச் செல்வங்களே!

**'அறிவுடையார் எல்லாம் உடையர்'**

என்ற வள்ளுவன் சொல்லாய் தோற்றம் கொண்ட மாணவக் கண்மணிகளே! தமிழ்மொழிப் பாடத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்றிடவும், பிழையின்மையோடு கற்கும் வகையிலும், இந்த **"சூர்யா - இளமைத்தமிழே"** உரைநூல் அமைக்கப்பட்டுள்ளன.

- ★ **3000 கூடுதல் வினாக்கள் விடைகளுடன்**
- ★ **எளிய நடையில் இயல்சார்ந்த பொதுக்கட்டுரைகள் மற்றும் கடிதங்கள்**

தமிழ்நாடு அரசு புதிய திருத்தங்களுடன் வெளியிட்டுள்ள 2020-ஆம் ஆண்டிற்கான புதிய பாடநூலினை நுணுகி, ஆய்ந்து வினா விடைகள் செம்மைப்படுத்தப்பட்டுப் பிழையின்றி மாணவர்கள் கற்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்று மாணவர்கள் உயர்சாதனை படைத்திட இவ்வுரை வழிகாட்டும்.**

**உங்கள் சாதனைக்கு எங்கள் வாழ்த்துகள்.**

**"வாழ்க...வளர்க...தமிழ் உணர்வு"**

**பதிப்பகத்தார்.**

www.tnpscjob.com

# பொருளடக்கம்


| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் | மாதம் |
|---|---|---|---|---|
| **ஒன்று** | மொழி | **அன்னை மொழியே★** | 1 | ஜூன் |
| | | தமிழ்ச்சொல் வளம் | 8 | |
| | | இரட்டுற மொழிதல் | 21 | |
| | | உரைநடையின் அணிநலன்கள் | 25 | |
| | | எழுத்து, சொல் | 31 | |
| **இரண்டு** | இயற்கை, சுற்றுச்சூழல் | **கேட்கிறதா என்குரல்!** | 45 | ஜூன் |
| | | காற்றே வா! | 58 | |
| | | முல்லைப்பாட்டு★ | 64 | |
| | | புயலிலே ஒரு தோணி | 72 | |
| | | தொகைநிலைத் தொடர்கள் | 77 | |
| **மூன்று** | பண்பாடு | **விருந்து போற்றுதும்!** | 87 | ஜூலை |
| | | காசிக்காண்டம்★ | 100 | |
| | | மலைபடுகடாம் | 104 | |
| | | கோபல்லபுரத்து மக்கள் | 111 | |
| | | தொகாநிலைத் தொடர்கள் | 115 | |
| | | திருக்குறள் | 127 | |
| **நான்கு** | அறிவியல், தொழில்நுட்பம் | **செயற்கை நுண்ணறிவு** | 136 | ஜூலை |
| | | பெருமாள் திருமொழி★ | 148 | |
| | | பரிபாடல் | 152 | |
| | | விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை | 159 | |
| | | இலக்கணம் - பொது | 166 | |
| **ஐந்து** | மணற்கேணி | **மொழிபெயர்ப்புக் கல்வி** | 180 | ஆகஸ்ட் |
| | | நீதி வெண்பா★ | 191 | |
| | | திருவிளையாடற் புராணம்★ | 195 | |
| | | புதிய நம்பிக்கை | 204 | |
| | | வினா, விடை வகைகள், பொருள்கோள் | 208 | |


www.tnpscjob.com

| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் | மாதம் |
|---|---|---|---|---|
| ஆறு | கலை, அழகியல், புதுமைகள் | **நிகழ்கலை** | 220 | ஆகஸ்ட் |
| | | பூத்தொடுத்தல் | 233 | |
| | | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்* | 236 | |
| | | கம்பராமாயணம்* | 241 | |
| | | பாய்ச்சல் | 249 | |
| | | அகப்பொருள் இலக்கணம் | 252 | |
| | | திருக்குறள் | 267 | |
| ஏழு | நாகரிகம், நாடு, சமூகம், | **சிற்றகல் ஒளி (தன் வரலாறு)** | 276 | அக்டோபர் |
| | | ஏர் புதிதா? | 285 | |
| | | மெய்க்கீர்த்தி | 289 | |
| | | சிலப்பதிகாரம்* | 297 | |
| | | மங்கையராய்ப் பிறப்பதற்கே.... | 306 | |
| | | புறப்பொருள் இலக்கணம் | 311 | |
| எட்டு | அறம், தத்துவம், சிந்தனை | **சங்க இலக்கியத்தில் அறம்** | 321 | அக்டோபர் |
| | | ஞானம் | 331 | |
| | | காலக்கணிதம்* | 337 | |
| | | இராமானுசர் (நாடகம்) | 344 | |
| | | பா-வகை, அலகிடுதல் | 351 | |
| ஒன்பது | மனிதம், ஆளுமை | **ஜெயகாந்தம் (நினைவு இதழ்)** | 363 | நவம்பர் டிசம்பர் |
| | | சித்தாளு | 371 | |
| | | தேம்பாவணி* | 375 | |
| | | ஒருவன் இருக்கிறான் | 384 | |
| | | அணி | 387 | |


www.tnpscjob.com

# மனப்பாடப் பகுதி

## அன்னை மொழியே - அழகார்ந்த செந்தமிழே!

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

*-பாவலரேறு பெருஞ்சித்திரனார்*

## முல்லைப்பாட்டு

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

*-நப்பூதனார்*

## காசிக்காண்டம்

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே

*-அதிவீரராம பாண்டியர்*

## பெருமாள் திருமொழி

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

*-குலசேகராழ்வார்*

## நீதி வெண்பா

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

*-கா.ப. செய்குதம்பிப் பாவலர்*

## திருவிளையாடற் புராணம்

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

*-பரஞ்சோதி முனிவர்*

### முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை - *குமரகுருபரர்*

### கம்பராமாயணம்

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண்
விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ. -*கம்பர்*

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான். -*கம்பர்*

### சிலப்பதிகாரம்

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;

பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்; -*இளங்கோவடிகள்*

### காலக்கணிதம்

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!
-*கண்ணதாசன்*

### தேம்பாவணி

நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே.
-*வீரமாமுனிவர்*

## திருக்குறள்

### மெய் உணர்தல்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

### பெரியாரைத் துணைக்கோடல்

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

### கண்ணோட்டம்

பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

### ஆள்வினை உடைமை

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.
முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

### அமைச்சு

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.

### பொருள் செயல் வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

### குடிசெயல் வகை

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

### நல்குரவு

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

-திருவள்ளுவர்

www.tnpscjob.com

இயல் 1 மொழி

கவிதைப் பேழை

# அன்னை மொழியே

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்**

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா **[விடை: இ) எம் + தமிழ் + நா]**

### குறுவினா

**1. ''மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!''**
**- இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

- சீவக சிந்தாமணி,
- வளையாபதி,
- குண்டலகேசி

இவையாவும் எஞ்சிய ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

### சிறுவினா

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?**

**''அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!''**

- அன்னை மொழியே! அழகான செந்தமிழே!
- பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
- குமரிக்கண்டத்தில் நிலைபெற்று அரசாட்சி செலுத்திய மண்ணுலகப் பேரரசே!
- பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
- பாட்டும், தொகையும் ஆனவளே! பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே!
- கடல் கொண்ட குமரியில் நிலையாய் நின்று அரசாட்சி செய்த பெருந்தமிழ் அரசே!
- பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து தமிழே உன்னை வாழ்த்துகின்றோம்.

**''முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!''**

www.tnpscjob.com

## நெடுவினா

**1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

**அறிமுக உரை:**

**தாயே! தமிழே! வணக்கம்.**
**தாய் பிள்ளை உறவம்மா, உனக்கும் எனக்கும்.**

என்று தமிழ்த்தாயை வணங்கி, இங்கு மனோன்மணீயம் சுந்தரனாரின் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் பாடலையும் ஒப்பிட்டுக் காண்போம்.

| சுந்தரனார் | பெருஞ்சித்திரனார் |
|---|---|
| நீர் நிறைந்த கடலை ஆடையாக உடுத்திய பெண்ணாக பூமியையும்,<br>பாரதத்தை முகமாகவும், பிறை போன்ற நெற்றியாகவும்,<br>நெற்றியில் இட்ட பொட்டாக தமிழும்,<br>தமிழின் மணம் எத்திசையும் வீசுமாறு உருவகப்படுத்திப் பாடியுள்ளார் சுந்தரனார். | குமரிக்கண்டத்தில் நின்று நிலைபெற்ற மண்ணுலகம் போற்ற வாழ்ந்த பேரரசியே!<br>பழமைக்கும் பழமையானவளே!<br>பாண்டியனின் மகளே! திருக்குறளின் புகழே!<br>பாட்டும் தொகையே! கீழ்க்கணக்கே! சிலம்பே! மேகலையே! என்று பெருஞ்சித்திரனார் தமிழை முடிதாழ வணங்கி வாழ்த்துகிறார். |
| "நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்....." | "அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!" |

**நிறைவுரை:**

இருவருமே தமிழின் பெருமையைத் தம் பாடல்களில் பூட்டி, காலந்தோறும் பேசும்படியாக அழகுற அமைத்துப் பாடியுள்ளனர்.

## கூடுதல் வினாக்கள்

### இலக்கணக் குறிப்பு

**செந்தமிழ், நறுங்கனி, பேரரசு, செந்தாமரை** - பண்புத்தொகைகள்

**பாடி, குடித்து** - வினையெச்சங்கள்

### பகுபத உறுப்பிலக்கணம்

**முகிழ்த்த = முகிழ் + த் + த் + அ**

| | | |
|---|---|---|
| முகிழ் | - | பகுதி |
| த் | - | சந்தி |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |

## பலவுள் தெரிக

**1. ஐம்பெருங்காப்பியங்களுள் பொருந்தாததைத் தேர்க.**

அ) யசோதர காவியம் ஆ) சிலப்பதிகாரம்
இ) மணிமேகலை ஈ) சீவக சிந்தாமணி **[விடை: அ) யசோதர காவியம்]**



www.tnpscjob.com

**2. உள்ளத்தில் கனல் மூள செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடியது எது?**
அ) தேன்சிட்டு ஆ) வண்டு
இ) தேனீ ஈ) வண்ணத்துப்பூச்சி **[விடை: ஆ) வண்டு]**

**3. ''அன்னை மொழியே'' என்ற கவிதையில் இடம்பெறும் மூவேந்தருள் ஒருவர்**
அ) சேரன் ஆ) சோழன்
இ) பாண்டியன் ஈ) பல்லவன் **[விடை: இ) பாண்டியன்]**

**4. பொருந்தாதவற்றைக் கண்டறிக.**
அ) பாவியக்கொத்து ஆ) நூறாசிரியம்
இ) தென்தமிழ் ஈ) பள்ளிப்பறவைகள் **[விடை: இ) தென்தமிழ்]**

**5. பொருந்தாதவற்றைக் கண்டறிக.**
அ) தமிழ்ச்சிட்டு ஆ) பள்ளிப்பறவைகள்
இ) எண்சுவை எண்பது ஈ) உலகியல் நூறு **[விடை: அ) தமிழ்ச்சிட்டு]**

**6. பொருத்துக.**
1. மாண்புகழ் - அ) சிலப்பதிகாரம்
2. மன்னும் - ஆ) திருக்குறள்
3. வடிவு - இ) பத்துப்பாட்டு
4. பாப்பத்தே - ஈ) மணிமேகலை

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.இ 2.ஈ 3.அ 4.ஆ
இ) 1.ஆ 2.இ 3.ஈ 4.அ ஈ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

**7. 'அன்னை மொழியே' கவிதை இடம் பெறும் நூல்**
அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு
இ) எண்சுவை எண்பது ஈ) பாவியக்கொத்து **[விடை: ஆ) கனிச்சாறு]**

**8. ''முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே'' - என்று பாடியவர்**
அ) பெருஞ்சித்திரனார் ஆ) க.சச்சிதானந்தன்
இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன் **[விடை: அ) பெருஞ்சித்திரனார்]**

**9. ''முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே'' - என்று பாடியவர்**
அ) க.சச்சிதானந்தன் ஆ) துரை. மாணிக்கம்
இ) வாணிதாசன் ஈ) முடியரசன் **[விடை: ஆ) துரை. மாணிக்கம்]**

**10. ''நற்கணக்கே'' என்பதில் சுட்டப்படும் நூல்கள் எத்தனை?**
அ) 18 ஆ) 10
இ) 8 ஈ) 5 **[விடை: அ) 18]**

**11. ''மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே!'' எஞ்சியுள்ள பெருங்காப்பியங்கள் எத்தனை?**
அ) ஐந்து ஆ) மூன்று
இ) இரண்டு ஈ) எட்டு **[விடை: ஆ) மூன்று]**

**12. துரை. மாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்டவர் யார்?**
அ) பெருஞ்சித்திரனார் ஆ) பெரியவன்கவிராயர்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) தமிழண்ணல் **[விடை: அ) பெருஞ்சித்திரனார்]**

**13. பெருஞ்சித்திரனார் பாடலில் 'பழமைக்குப் பழமை' என்னும் பொருள் தரும் சொல்.**
அ) முன்னை முகிழ்ந்த ஆ) முன்னைக்கும் முன்னை
இ) முன்னும் நினைவால் ஈ) முந்துற்றோம் யாண்டும்
**[விடை: ஆ) முன்னைக்கும் முன்னை]**



www.tnpscjob.com

14. **‘பாப்பத்தே எண் தொகையே’ – சரியான பொருளைக் கண்டறி.**
அ) பாடல் பத்து, எண் தொகை ஆ) பா பத்து, எட்டுத் தொகை
இ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஈ) பத்தும் எட்டும் **[விடை: இ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை]**

15. **பெருஞ்சித்திரனாரின் ‘முந்துற்றோம் யாண்டும்’, ‘தமிழ்த்தாய் வாழ்த்து’ என்னும் இரு தலைப்பிலுள்ள பாடல்கள் எத்தொகுப்பிலிருந்து எடுத்தாளப் பெற்றன?**
அ) எண்சுவை எண்பது ஆ) உலகியல் நூறு
இ) நூறாசிரியம் ஈ) கனிச்சாறு **[விடை: ஈ) கனிச்சாறு]**

16. **செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகார்ந்த அந்தும்பி பாடும் அது போல – பயின்று வரும் அணி**
அ) உவமையணி ஆ) உருவகஅணி
இ) எடுத்துக்காட்டு உவமையணி ஈ) தற்குறிப்பேற்றணி **[விடை: அ) உவமையணி]**

17. **செந்தமிழ் – பிரித்து எழுதுக.**
அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ்
இ) செ + தமிழ் ஈ) செம்மை + தமிழ் **[விடை: ஈ) செம்மை + தமிழ்]**

18. **செந்தமிழ், செந்தாமரை ஆகிய சொற்களில் இடம் பெறும் இலக்கணக் குறிப்பைச் சுட்டுக.**
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உம்மைத் தொகை ஈ) அன்மொழித்தொகை **[விடை: அ) பண்புத்தொகை]**

19. **உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல் மூள – இவ்வடியில் காணும் நயம்**
அ) மோனை ஆ) எதுகை
இ) முரண் ஈ) இயைபு **[விடை: அ) மோனை]**

20. **தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண் தொகையே! நற்கணக்கே
மன்னுஞ் சிலம்பே! மணிமேகலை வடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!
இப்பாடலில் அமைந்த எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.**
அ) தென்னன் ஆ) மன்னும்
இ) இன்னறும் ஈ) இவையனைத்தும் **[விடை: ஈ) இவையனைத்தும்]**

21. **‘அன்னை மொழியே’ என்னும் தமிழ்த்தாய் வாழ்த்தின் ஆசிரியர்**
அ) சுந்தரனார் ஆ) பாரதிதாசன்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) பாவாணர் **[விடை: இ) பெருஞ்சித்திரனார்]**

22. **“சாகும் போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்” என்று பாடியவர் யார்?**
அ) பாரதிதாசன் ஆ) பெருஞ்சித்திரனார்
இ) சச்சிதானந்தன் ஈ) ஆறுமுகநாவலர் **[விடை: இ) சச்சிதானந்தன்]**

23. **பெருஞ்சித்திரனாரின் பணிகளில் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த நூல் எது?**
அ) பாவியக்கொத்து ஆ) கனிச்சாறு
இ) திருக்குறள் மெய்ப்பொருளுரை ஈ) உலகியல் நூறு
**[விடை: இ) திருக்குறள் மெய்ப்பொருளுரை]**

24. **தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களின் ஆசிரியர் யார்?**
அ) கண்ணதாசன் ஆ) பாரதிதாசன்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) திரு.வி.க **[விடை: இ) பெருஞ்சித்திரனார்]**



www.tnpscjob.com

## குறுவினா

1. **பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தமிழுணர்வை உலகெங்கும் பரப்ப காரணமாய் இருந்த இதழ்கள் யாவை?**
   - தென்மொழி
   - தமிழ்ச்சிட்டு

2. **பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைப்புகள் யாவை?**
   - உலகியல் நூறு
   - கனிச்சாறு
   - பாவியக்கொத்து
   - மகபுகுவஞ்சி
   - நூறாசிரியம்
   - பள்ளிப் பறவைகள்
   - எண்சுவை எண்பது

3. **வண்டு - தேன் தமிழர் - தமிழ்ச்சுவை இவற்றை ஒப்பிட்டுப் பெருஞ்சித்திரனார் குறிப்பிடும் செய்தி யாது?**

   **வண்டு - தேன்:**

   உள்ளத்தில் கனல் மூள வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுகின்றது.

   **தமிழர் - தமிழ்ச்சுவை:**

   தமிழர் செந்தமிழைச் சுவைத்து தமிழின் பெருமையை எங்கும் முழங்குகின்றனர்.

4. **"அன்னை மொழியே" என்ற பாடலில் அமைந்துள்ள விளிச்சொற்களை எழுதுக.**
   - செந்தமிழே!
   - மாண்புகழே!
   - நறுங்கனியே!
   - எண்தொகையே!
   - பேரரசே!
   - நற்கணக்கே!
   - தென்னன் மகளே!
   - சிலம்பே!

5. **பதினெண் மேற்கணக்கு நூல்கள் எவை?**

   எட்டுத்தொகை, பத்துப்பாட்டு.

6. **தமிழ் எவற்றின் காரணமாகத் தமக்குள் பற்றுணர்வை ஏற்படுத்துவதாகப் பெருஞ்சித்திரனார் கூறுகிறார்?**
   - பழம்பெருமையும் தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டது தமிழ்.
   - நீண்ட நிலைத்த தன்மை உடையது.
   - வேற்றுமொழியார் தமிழைக் குறித்து உரைத்த புகழ்மொழிகள்.

   ஆகிய இவையே தமக்குள் பற்றுணர்வை ஏற்படுத்துவதாகப் பெருஞ்சித்திரனார் கூறுகிறார்.

7. **"இன்னறும் பாப்பத்தே! எண் தொகையே! நற்கணக்கே!"**
   **- இவ்வடியில் சுட்டப்படும் மொத்த நூல்கள் எத்தனை?**

| | | |
|---|---|---|
| பாப்பத்து | பத்துப்பாட்டு | 10 |
| எண் தொகை | எட்டுத்தொகை | 8 |
| நற்கணக்கு | பதினெண்கீழ்க்கணக்கு | 18 |
| **மொத்த நூல்களின் எண்ணிக்கை** | | **36** |

இயல் 1

## சிறுவினா

**1. பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| இயற்பெயர் | : | துரை. மாணிக்கம் |
| ஊர் | : | சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம் |
| பெற்றோர் | : | துரைசாமி, குஞ்சம்மாள் |
| இயற்றிய நூல்கள் | : | கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம், எண்சுவை எண்பது, மகபுகு வஞ்சி. |
| சிறப்பு | : | இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது. |
| காலம் | : | 10.03.1933 முதல் 11.06.1995 வரை |

**2. 'முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே' என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் கூறக் காரணம் யாது?**

- செழுமை மிகுந்த தமிழே! என்னுயிரே! சொல்லுவதற்கு அரிதான உன்னுடைய பெருமைகளை என் தமிழ் நாக்கு எவ்வாறு தான் விரித்துரைக்கும்.
- பழம்பெருமை, தமக்கெனத் தனிச்சிறப்பு, இலக்கிய வளம் கொண்ட தமிழே!
- உன்னுடைய நிலைத்த தன்மையும் வேற்றுமொழி பேசுபவர்கள் உன்னைப் பற்றிக் கூறிய புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன.

**“செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த**
**அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி”**

- என் தனித்தமிழே! வண்டு செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போல நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 3*

**1. “நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
**இத்திறத்த எட்டுத்தொகை”**

**இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

1. **நற்றிணை** = **நல்** + **திணை**
   தொகை நூல்களுள் முதல் நூல். நல் என்னும் அடைமொழி பெற்ற நூல்.

2. **குறுந்தொகை:**
   நல்ல குறுந்தொகை எனவும் அழைக்கப்படும். குறைந்த அடியளவால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆதலால் குறுந்தொகை என அழைக்கப்பட்டது.

3. **ஐங்குறுநூறு:**
   ஐந்திணைகளைப் பாடும் நூல். குறுகிய பாடலடிகள் கொண்ட நூல்.

4. **பதிற்றுப்பத்து:**
   சேர அரசர்கள் பத்துப் பேரை 10 புலவர்கள் பத்துப் பத்தாகப் பாடியது பதிற்றுப்பத்து.



www.tnpscjob.com

5. **பரிபாடல்:**

இது அகம், புறம் சார்ந்த நூல். தமிழின் முதல் இசைப்பாடல் நூல். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களாலும், பலவகையான அடிகளாலும் பாடப்பட்டுள்ளது.

6. **கலித்தொகை:**

ஐந்திணையும் ஐவரால் கலிப்பாவில் அமைந்த நூல். கலிப்பாவின் ஓசை துள்ளல் ஓசை. 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' எனவும் கூறப்படுகிறது.

7. **அகநானூறு:**

அகம் சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது. களிற்றியானை நிரை, மணிமிடைப் பவளம், நித்திலக்கோவை என மூன்று பிரிவுகளைக் கொண்டது.

8. **புறநானூறு:**

புறம் சார்ந்த நூல். 400 பாடல்களை உடையது. தமிழரின் வரலாற்றுப் பெட்டகம். இது பழந்தமிழரின் வீரம், பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம், கொடை ஆகியவற்றைப் பற்றிக் கூறுகிறது.

**2. "எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்" என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்துநிமிட உரை நிகழ்த்துக.**

வணக்கம்!

தமிழ் இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. தமிழர் அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர். தமிழின் பழமையையோ அல்லது அதன் பெருமையையோ வேறு எம்மொழியும் நெருங்கவியலாது. தமிழ்மொழி இறவா இலக்கிய, இலக்கண வளங்கொண்டு தனக்கெனத் தனிநோக்கும் போக்கும் கொண்டுள்ளது. "தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும்" மாக்சு முல்லர் என்னும் மொழி நூலறிஞர் தமிழ்மொழியைச் சிறப்பித்துள்ளார்.

நிறைவாக, தமிழின் சிறப்பை நிலைக்கச் செய்வதும் மேலும் வளரச் செய்வதும் தமிழர்களாகிய நமது கடமையாகும். இதனை உணர்ந்து தமிழின் சீரிளமையைக் காக்க என்றும் பாடுபடுவோம்.

நன்றி!

வணக்கம்!!



www.tnpscjob.com

இயல் 1 மொழி

உரைநடை உலகம்

# தமிழ்ச்சொல் வளம்

தேவநேயப் பாவாணர்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது**

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும் **[விடை: ஈ) சருகும் சண்டும்]**

2. **வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை**

அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை **[விடை: ஆ) மணி வகை]**

### குறுவினா

1. **ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**

| சரியான தொடர்கள்: | பிழையானத் தொடர்: |
|---|---|
| ♦ ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.<br>♦ ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. | ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.<br>**பிழைக்கான காரணம்:**<br>தாறு – வாழைக்குலை;<br>சீப்பு – வாழைத் தாற்றின் பகுதி |

### சிறுவினா

1. **'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'**
**இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.**

**பிள்ளை** – தென்னம் பிள்ளை வாங்கி வந்தேன்.

**வடலி** – காட்டில் பனை வடலியைப் பார்த்தேன்.

**நாற்று** – நெல் நாற்று நட்டேன்.

**கன்று** – வாழைக்கன்று நட்டேன்.

**பைங்கூழ்** – சோளப் பைங்கூழ் பசுமையாக உள்ளது.



www.tnpscjob.com

## நெடுவினா

1. **தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.**

| குறிப்புச்சட்டம் |
|---|
| அறிமுகவுரை |
| சொல்வளம் |
| சொல்லாக்கத்திற்கான தேவை |
| நிறைவுரை |

**அறிமுகவுரை:**

வணக்கம்! அன்னைமொழியே! அழகார்ந்த செந்தமிழே! எனப் போற்றப்படும் தமிழ்மொழி பிறமொழிகளுக்கெல்லாம் தலைச்சிறந்த மொழியாகும். அம்மொழியின் சொல்வளத்தைப் பற்றிக் காண்போம்.

**சொல்வளம்:**

- இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ்மட்டும் அதில் தலை சிறந்ததாகும்.
- தமிழ்ச்சொல் வளத்தைப் பலதுறைகளிலும் காணலாம்.
- ஒருபொருட் பல சொல் வரிசைகள் தமிழைத் தவிர வேறு எந்தத் திராவிட மொழிகளின் அகராதிகளிலும் காணப்படவில்லை.
- “பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள” என்கிறார் கால்டுவெல்.

**சொல்லாக்கத்திற்கான தேவை:**

- சொல்லாக்கத்திற்கான தேவை என்பது அதன் பயன்பாட்டு முறையைக் கொண்டே அமைகிறது.
- இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ப நூல்களைப் புதிய சொல்லாக்கத்துடன் படைத்தல் வேண்டும்.
- இலக்கிய மேன்மைக்கும் மக்கள் அறிவுடையவர்களாக உயர்வதற்கும், புதிய சொல்லாக்கம் தேவை.
- மொழி என்பது உலகின் போட்டி போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். அக்கருவி காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும்.
- தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்க தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.
- உலகின் பிற ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி எழுதும் போது பிறமொழி அறியாத தமிழரும் அவற்றைக் குறித்து அறிந்துகொள்ள முடியும்.
- மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி. அதை நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவை.
- மக்களிடையே பரந்த மனப்பான்மையையும், ஆளுமையையும் நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவைப்படுகிறது.
- பிறமொழிச் சொற்கள் கலவாமல் இருக்க காலத்திற்கேற்ப புதிய கலைச்சொல்லாக்கம் ஏற்படுத்த வேண்டும்.

**நிறைவுரை:**

மென்மையான தமிழை மேன்மையான தமிழாக்க அறிவியல் தொழில்நுட்பச் சொற்களைத் தமிழ்ப்படுத்தி தமிழின் பெருமையை உலகிற்குக் கொண்டு செல்வோம்.

**புதிய சொல்லாக்கத்தின் சேவை**
**இன்றைய தமிழுக்குத் தேவை**

நன்றி!

www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலையைக் குறிக்கும் சொல் எது?
   அ) அரும்பு ஆ) மலர்
   இ) வீ ஈ) செம்மல் [விடை: இ) வீ]

2. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?
   அ) பாவாணர் ஆ) கால்டுவெல்
   இ) இரா. இளங்குமரனார் ஈ) திரு.வி.க [விடை: ஆ) கால்டுவெல்]

3. திருவள்ளுவர் தவச்சாலை அமைந்துள்ள இடம் எது?
   அ) அல்லூர் ஆ) திருவள்ளூர்
   இ) கல்லூர் ஈ) நெல்லூர் [விடை: அ) அல்லூர்]

4. குச்சியின் பிரிவு எச்சொல்லால் அழைக்கப்படுகிறது?
   அ) போத்து ஆ) குச்சி
   இ) இணுக்கு ஈ) சினை [விடை: இ) இணுக்கு]

5. பொருத்துக.
   1. தாள் - அ) குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி
   2. தண்டு - ஆ) நெட்டி, மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடி
   3. கோல் - இ) தண்டு, கீரை முதலியவற்றின் அடி
   4. தூறு - ஈ) நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி
   அ) 1.ஈ 2.இ 3.ஆ 4.அ ஆ) 1.ஆ 2.அ 3.ஈ 4-இ
   இ) 1.இ 2.ஈ 3.அ 4.ஆ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ [விடை: அ) 1.ஈ 2.இ 3.ஆ 4.அ]

6. பொருத்துக.
   1. தட்டு - அ) கரும்பின் அடி
   2. கழி - ஆ) புளி, வேம்பு முதலியவற்றின் அடி
   3. கழை - இ) கம்பு, சோளம் முதலியவற்றின் அடி
   4. அடி - ஈ) மூங்கிலின் அடி
   அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.இ 2.அ 3.ஈ 4.ஆ
   இ) 1.ஈ 2.இ 3.அ 4.ஆ ஈ) 1.இ 2.அ 3.ஆ 4.ஈ [விடை: ஆ) 1.இ 2.அ 3.ஈ 4.ஆ]

7. பொருத்துக.
   1. கவை - அ) அடிமரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
   2. கொம்பு - ஆ) கிளையின் பிரிவு
   3. சினை - இ) கவையின் பிரிவு
   4. போத்து - ஈ) சினையின் பிரிவு
   அ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ ஆ) 1.ஈ 2.இ 3.அ 4.ஆ
   இ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஈ) 1.இ 2.ஆ 3.அ 4.ஈ [விடை: அ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ]

8. பொருந்தாதவற்றைக் கண்டறிக.
   அ) தூறு ஆ) கழி
   இ) கழை ஈ) கவை [விடை: ஈ) கவை]

இயல் 1

www.tnpscjob.com

**9. பொருந்தாதவற்றைக் கண்டறிக.**

அ) தாள் ஆ) தண்டு
இ) கிளை ஈ) கோல் **[விடை: இ) கிளை]**

**10. பொருந்தாதவற்றைக் கண்டறிக.**

அ) கவை ஆ) தட்டு
இ) கொம்பு ஈ) சினை **[விடை: ஆ) தட்டு]**

**11. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) கவை - குச்சியின் பிரிவு
ஆ) கொம்பு - கவையின் பிரிவு
இ) போத்து - சினையின் பிரிவு
ஈ) குச்சி - போத்தின் பிரிவு **[விடை: அ) கவை-குச்சியின் பிரிவு]**

**12. வேறுபட்ட குழுவினைக் கண்டறிக.**

அ) தாள், தண்டு, கோல், தூறு
ஆ) கவை, கொம்பு, கிளை, சினை
இ) சுள்ளி, விறகு, வெங்கழி, கட்டை
ஈ) கழி, குச்சு, இணுக்கு, கழை **[விடை: ஈ) கழி, குச்சு, இணுக்கு, கழை]**

**13. பொருத்துக.**

1. இலை - அ) தென்னை, பனை முதலியவற்றின் இலை
2. தாள் - ஆ) சோளம், கம்பு முதலியவற்றின் அடி
3. தோகை - இ) புளி, வேம்பு முதலியவற்றின் இலை
4. ஓலை - ஈ) நெல், புல் முதலியவற்றின் இலை

அ) 1.ஈ 2.இ 3.அ 4.ஆ ஆ) 1.இ 2.ஈ 3.ஆ 4.அ
இ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஈ) 1.இ 2.ஈ 3.அ 4.ஆ **[விடை: ஆ) 1.இ 2.ஈ 3.ஆ 4.அ]**

**14. பொருத்தமற்ற ஒன்றைக் கண்டறிக.**

அ) சண்டு ஆ) சருகு
இ) தோகை ஈ) கட்டை **[விடை: ஈ) கட்டை]**

**15. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) சண்டு - காய்ந்த தாளும் தோகையும்
ஆ) சருகு - காய்ந்த இலை
இ) தாள் - புலி, வேம்பு முதலியவற்றின் இலை
ஈ) தோகை - சோளம், கம்பு முதலியவற்றின் இலை

**[விடை: இ) தாள் - புலி, வேம்பு முதலியவற்றின் இலை]**

**16. வேறுபட்ட குழுவினைக் கண்டறிக.**

அ) தோகை, ஓலை, சண்டு, சருகு ஆ) துளிர், முறி, கொழுந்து, கொழுந்தாடை
இ) பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, கவ்வை ஈ) கருக்கல், கச்சல், கொத்து, குலை

**[விடை: ஈ) கருக்கல், கச்சல், கொத்து, குலை]**

**17. தும்பி - இச்சொல்லின் பொருள்**

அ) தும்பிக்கை ஆ) வண்டு
இ) துந்துபி ஈ) துன்பம் **[விடை: ஆ) வண்டு]**

இயல் 1

**18. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களுள் - சரியானவற்றைச் தேர்ந்தெடு.**

அ) இலை, தாள், தோகை, ஒலை, சண்டு, சருகு
ஆ) இலை, தோகை, தாள், தளிர், குருத்து, அரும்பு
இ) தாள், தோகை, தூறு, தட்டு, தண்டு, ஓலை
ஈ) இலை, தாள், ஓலை, தளிர், கொழுந்து, சண்டு

**[விடை: அ) இலை, தாள், தோகை, ஒலை, சண்டு, சருகு]**

**19. 'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்று பாடியவர் யார்?**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) தேவநேயப் பாவாணர் **[விடை: அ) பாரதியார்]**

**20. சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார்?**

அ) தேவநேயப் பாவாணர் ஆ) இளங்குமரனார்
இ) திரு.வி.கலியாணசுந்தரனார் ஈ) மறைமலையடிகள் **[விடை: ஆ) இளங்குமரனார்]**

**21. பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர் யார்?**

அ) தேவநேயப் பாவாணர் ஆ) இளங்குமரனார்
இ) திரு.வி.க ஈ) மறைமலையடிகள் **[விடை: ஆ) இளங்குமரனார்]**

**22. தமிழ்வழித் திருமணங்களை நடத்தி வருபவர் யார்?**

அ) தேவநேயப் பாவாணர் ஆ) பெருஞ்சித்திரனார்
இ) இளங்குமரனார் ஈ) பெருந்தேவனார் **[விடை: இ) இளங்குமரனார்]**

**23. விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடக் கூடாது என்று எண்ணியவர் யார்?**

அ) ஜி. யு. போப் ஆ) வீரமாமுனிவர்
இ) இளங்குமரனார் ஈ) பெருங்குமரனார் **[விடை: இ) இளங்குமரனார்]**

**24. இளங்குமரனார் யார் போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர்?**

அ) திரு.வி.க ஆ) பாவாணர்
இ) மு.வ ஈ) ஜீவா **[விடை: அ) திரு.வி.க]**

**25. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்**

அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா.இளங்குமரனார் **[விடை: ஈ) இரா.இளங்குமரனார்]**

**26. விழிகளை மூடியபடி எழுதும் ஆற்றல் வாய்ந்தவர்கள் ............, .............**

அ) திரு.வி.க., இளங்குமரனார்
ஆ) தமிழழகனார், அப்பாத்துரையார்
இ) தேவநேயப் பாவாணர், கால்டுவெல்
ஈ) பெருஞ்சித்திரனார், சுந்தரனார்

**[விடை: அ) திரு.வி.க., இளங்குமரனார்]**

**27. 'தமிழ்த்தென்றல்' என்று போற்றப்பட்டவர் யார்?**

அ) இளங்குமரனார் ஆ) பெருந்தேவனார்
இ) திரு.வி.க ஈ) ம.பொ.சி **[விடை: இ) திரு.வி.க]**

**28. உலகிலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது? மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே என்று கூறியவர் யார்?**

அ) மலேசியா, க. அப்பாத்துரையார் ஆ) சிங்கப்பூர், தேவநேயப் பாவாணர்
இ) இந்தியா, இளங்குமரனார் ஈ) கனடா, ஜி.யு. போப்

**[விடை: அ) மலேசியா, க. அப்பாத்துரையார்]**

இயல் 1

www.tnpscjob.com

**29. 'பன்மொழிப் புலவர்' என்றழைக்கப்பட்டவர் யார்?**

அ) க.அப்பாத்துரையார் ஆ) தேவநேயப் பாவாணர்

இ) இளங்குமரனார் ஈ) ஜி.யு.போப் **[விடை: அ) க.அப்பாத்துரையார்]**

**30. சம்பா நெல்லின் உள் வகைகள் எத்தனை?**

அ) 30 ஆ) 60

இ) 40 ஈ) 80 **[விடை: ஆ) 60]**

**31. 'மொழி ஞாயிறு' என்றழைக்கப்பட்டவர் யார்?**

அ) க.அப்பாத்துரை ஆ) தேவநேயப் பாவாணர்

இ) இளங்குமரனார் ஈ) ஜி.யு.போப் **[விடை: ஆ) தேவநேயப் பாவாணர்]**

**32. 'தமிழ்ச்சொல் வளம்' என்னும் கட்டுரை இடம் பெற்றுள்ள நூல் எது?**

அ) சொல்லாய்வுக் கட்டுரைகள், தேவநேயப் பாவாணர்

ஆ) தேவநேயம், இளங்குமரனார்

இ) மொழி மரபு, மு.வ

ஈ) ஆய்வியல் நெறிமுறைகள், பொற்கோ

**[விடை: அ) சொல்லாய்வுக் கட்டுரைகள், தேவநேயப் பாவாணர்]**

**33. பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | சுள்ளி | - | 1. காய்ந்த குச்சு (குச்சி) |
| ii) | விறகு | - | 2. காய்ந்த சிறுகிளை |
| iii) | வெங்கழி | - | 3. காய்ந்த கொம்பும் கவையும் அடியும் |
| iv) | கட்டை | - | 4. காய்ந்த கழி |

அ) 1, 2, 4, 3 ஆ) 2, 1. 3, 4

இ) 1, 3, 4, 2 ஈ) 4, 3, 2, 1 **[விடை: அ) 1, 2, 4, 3]**

**34. பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | இளநீர் | - | 1. வாழைப்பிஞ்சு |
| ii) | நுழாய் | - | 2. இளநெல் |
| iii) | கருக்கல் | - | 3. இளம்பாக்கு |
| iv) | கச்சல் | - | 4. முற்றாத தேங்காய் |

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 3, 4, 1

இ) 1, 2, 3, 4 ஈ) 3, 4, 2, 1 **[விடை: அ) 4, 3, 2, 1]**

**35. பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | சிவியல் | - | சூட்டினால் பழுத்த பிஞ்சு |
| ii) | அளியல் | - | பதராய்ப் போன மிளகாய் |
| iii) | சொண்டு | - | குளுகுளுத்த பழம் |
| iv) | வெம்பல் | - | சுருங்கிய பழம் |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4

இ) 1, 3, 4, 2 ஈ) 1, 3, 4, 2 **[விடை: அ) 4, 3, 2, 1]**

**36. ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களுக்கு எது அமைந்திருக்கும்?**

அ) அன்பொழுக்கம் ஆ) அறிவொழுக்கம்

இ) களவொழுக்கம் ஈ) கற்பொழுக்கம் **[விடை: ஆ) அறிவொழுக்கம்]**



www.tnpscjob.com

37. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் யார்?
அ) தேவநேயப் பாவாணர் ஆ) வெள்ளைவாரணார்
இ) இளங்குமரனார் ஈ) பெருந்தேவனார் [விடை: அ) தேவநேயப் பாவாணர்]

38. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர் யார்?
அ) தனிநாயகம் அடிகள் ஆ) தேவநேயப் பாவாணர்
இ) இளங்குமரனார் ஈ) மு. வரதராசனார் [விடை: ஆ) தேவநேயப் பாவாணர்]

39. போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் எது?
அ) லெபனான் ஆ) லிசுபன்
இ) கெய்ரோ ஈ) ஹராரே [விடை: ஆ) லிசுபன்]

40. இந்திய மொழிகளிலேயே மேலை நாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறிய மொழி எது?
அ) இந்தி ஆ) தமிழ்
இ) தெலுங்கு ஈ) வங்காளம் [விடை: ஆ) தமிழ்]

41. கார்டிலா என்னும் போர்ச்சுகீசிய நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதைக் குறிப்பிடுவது எது?
அ) ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்
ஆ) நான்காம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்
இ) செம்மொழி மாநாட்டு மலர்
ஈ) தமிழிலக்கிய வரலாறு மு.வ. [விடை: அ) ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்]

42. கொழுந்தாடை என்பது யாது?
அ) நெல், புல் ஆகியவற்றின் கொழுந்து
ஆ) புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து
இ) தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து
ஈ) கரும்பின் நுனிப்பகுதி [விடை: ஈ) கரும்பின் நுனிப்பகுதி]

## குறுவினா

1. தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள் யாவை?
தாள், தண்டு, கோல், தூறு, தட்டு, கழி, கழை, அடி.

2. தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கப்படும் சொற்கள் யாவை?
கவை, கொம்பு, கொப்பு, கிளை, சினை, போத்து, குச்சி, இணுக்கு.

3. தாவரங்களின் காய்ந்த பகுதிகளுக்கு வழங்கப்படும் சொற்கள் யாவை?
சுள்ளி, விறகு, வெங்கழி, கட்டை.

4. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?
இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு.

5. தாவரங்களின் நுனிப்பகுதியைக் குறிக்கும் சொற்கள் யாவை? (கொழுந்து வகை)
- துளிர் அல்லது தளிர்
- குருத்து
- முறி அல்லது கொழுந்து
- கொழுந்துதாடை

6. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?
அரும்பு, போது, மலர், வீ, செம்மல்.



www.tnpscjob.com

**7. தாவரங்களின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கப்படும் சொற்கள் யாவை?**

பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, மூசு, கவ்வை, குரும்பை, முட்டுக்குரும்பை, இளநீர், நுழாய், கருக்கல், கச்சல்.

**8. தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான சொற்கள் யாவை?**

கொத்து, குலை, தாறு, கதிர், அலகு அல்லது குரல், சீப்பு.

**9. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கப்படும் சொற்கள் யாவை?**

சூம்பல், சிவியல், சொத்தை, வெம்பல், அளியல், அழுகல், சொண்டு, தேரைக்காய், அல்லிக்காய், ஒல்லிக்காய், கோட்டான்காய் (அ) கூகைக்காய்.

**10. பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள் யாவை?**

தொலி, தோல், தோடு, ஓடு, குடுக்கை, மட்டை, உமி, கொம்மை.

**11. தானியங்களுக்கு வழங்கப்படும் சொற்கள் யாவை?**

கூலம், பயறு, கடலை, விதை, காழ், முத்து, கொட்டை, தேங்காய், முதிரை.

**12. தாவரங்களின் இளமைப் பெயர்களை எழுது.**

நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி, பைங்கூழ், மடலி (அ) வடலி.

**13. கோதுமையின் வகைகளில் சிலவற்றைக் கூறு.**

சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை.

**14. சம்பா நெல் வகைகளை எழுதுக.**

ஆவிரம்பூச்சம்பா, ஆனைக் கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது வகைகள் சம்பாவில் உள்ளன.

**15. இரா. இளங்குமரனாரின் தமிழ்ப்பணியைத் தரம் உயர்த்திய நல்முத்துகள் யாவை?**

- இலக்கண வரலாறு
- தமிழிசை இயக்கம்
- தனித்தமிழ் இயக்கம்
- பாவாணர் வரலாறு
- குண்டலகேசி உரை
- யாப்பருங்கலம் உரை
- புறத்திரட்டு உரை
- திருக்குறள் தமிழ் மரபுரை
- காக்கைப் பாடினிய உரை
- தேவநேயம்

முதலியன இரா. இளங்குமரனாரின் தமிழ்ப்பணியைத் தரமுயர்த்திய நல்முத்துகளாகும்.

**16. உலகத்தமிழ் மாநாடு குறித்து க. அப்பாத்துரையார் கூறுவன யாவை?**

“உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல்நாடு மலேசியா. அம்மாநாட்டுக்குரிய முதல் மொழியும் தமிழே!” என்று க. அப்பாத்துரையார் கூறுகின்றார்.

## சிறுவினா

**1. தேவநேயப்பாவாணர் பற்றி நீவீர் அறிந்தவற்றை எழுதுக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | தேவநேயப் பாவாணர் |
| சிறப்புப்பெயர் | : | மொழிஞாயிறு |
| படைப்புகள் | : | இலக்கணக் கட்டுரைகள், மொழியாராய்ச்சிக் கட்டுரைகள், சொல்லாய்வுக் கட்டுரைகள். |
| பணி | : | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநர், உலகத் தமிழ்க் கழகத் தலைவர் |

**2. இரா. இளங்குமரனார் குறித்து நீவிர் அறிந்தவற்றைக் கூறுக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | இரா. இளங்குமரனார் |
| தமிழ்ப்பற்று | : | விழிகளை இழக்க நேரிட்டால்கூட தாய்த்தமிழினை இழந்துவிடக் கூடாது என்றார். |
| திரு.வி.க வழி | : | தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல் இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கொண்டவர். |
| சிறந்த நூல்கள் | : | இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, புறத்திரட்டு உரை, காக்கைப் பாடினிய உரை, தேவநேயம் |
| பிற செய்திகள் | : | திருவள்ளுவர் தவச்சாலை மற்றும் பாவாணர் நூலகத்தை அமைத்தார். |

**3. கார்டிலா - நூல் குறிப்பு வரைக.**

- 1554-ல் போர்ச்சுகீசு நாட்டில் தமிழில் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்.
- ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்ட நூல்.
- இதனை Carthila de lingoa Tamul e Portugues என்பர்.
- இந்திய மொழிகளுள் மேலை நாட்டு மொழிகளில் அச்சிடப்பட்ட முதல் நூல் தமிழ்மொழி நூலே.

**4. எந்தெந்தத் தாவரங்களின் அடிப்பகுதி என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகிறது எனப் பட்டியலிடுக.**

- தாள் - நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி
- தண்டு - கீரை, வாழையின் அடி
- கோல் - நெட்டி, மிளகாய்ச் செடியின் அடி
- தூறு - குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி
- தட்டு (அ) தட்டை - கம்பு, சோளம் முதலியவற்றின் அடி
- கழி - கரும்பின் அடி
- கழை - மூங்கிலின் அடி
- அடி - புளி, வேம்புவின் அடி

**5. தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களையும் அவை தாவரங்களின் எப்பகுதிக்குப் பொருந்தும் என்பதையும் எழுது.**

- கவை - மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
- கொம்பு (அ) கொப்பு - கவையின் பிரிவு
- கிளை - கொம்பின் பிரிவு
- சினை - கிளையின் பிரிவு
- போத்து - சினையின் பிரிவு
- குச்சி - போத்தின் பிரிவு
- இணுக்கு - குச்சியின் பிரிவு

**6. எந்தெந்தத் தாவரங்களின் இலைகள் என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன என்பதைப் பட்டியலிடுக.**

- புளி, வேம்பு - இலை
- தென்னை, பனை - ஓலை
- நெல், புல் - தாள்
- காய்ந்த இலை - சருகு
- சோளம், கரும்பு - தோகை



www.tnpscjob.com

**7. தாவரங்களின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கப்படும் பெயர்களையும் அவை எத்தாவரப் பிஞ்சுகளுக்குப் பொருந்தும் என்பதையும் கூறு.**

(பூம்பிஞ்சு -பூவோடு கூடிய இளம்பிஞ்சு, பிஞ்சு -இளம்காய்)

- வடு - மாம்பிஞ்சு
- மூசு - பலாப்பிஞ்சு
- கவ்வை - எள் பிஞ்சு
- குரும்பை - தென்னை, பனை பிஞ்சு
- இளநீர் - முற்றாத தேங்காய்
- நுழாய் - இளம்பாக்கு
- கருக்கல் - இளநெல்
- கச்சல் - வாழைப்பிஞ்சு

**8. எந்தெந்தத் தாவரங்களின் குலைகள் என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன எனப் பட்டியலிடுக.**

- கொத்து - அவரை, துவரை
- குலை - கொடி முந்திரி
- தாறு - வாழைக்குலை
- கதிர் - கேழ்வரகு, சோளக் கதிர்
- அலகு (அ) குரல் - நெல், தினைக் கதிர்
- சீப்பு - வாழைத் தாற்றின் பகுதி

**9. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கப்படும் பெயர்கள் யாவை?**

- சூம்பல் - நுனியில் சுருங்கிய காய்
- சிவியல் - சுருங்கிய பழம்
- சொத்தை - புழுபூச்சி அரித்த காய் (அ) கனி
- வெம்பல் - சூட்டினால் பழுத்த பிஞ்சு
- அளியல் - குளுகுளுத்த பழம்
- அழுகல் - குளுகுளுத்து நாறிய பழம் (அ) காய்
- சொண்டு - பதறாய்ப் போன மிளகாய்
- கோடான்காய் (அ) கூகைக்காய் - கோட்டான் அமர்ந்ததினால் கெட்ட காய்
- தேரைக்காய் - தேரை அமர்ந்ததினால் கெட்டகாய்
- அல்லிக்காய் - தேரை அமாந்ததினால் கெட்ட தேங்காய்
- ஒல்லிக்காய் தென்னையில் கெட்ட காய்

**10. பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க அவற்றின் தன்மைக்கேற்ப தாவரங்களுக்கு வழங்கப்படும் சொற்களை எழுதுக.**

- தொலி - மிக மெல்லியது
- தோல் - திண்ணமானது
- தோடு - வன்மையானது
- ஓடு - மிக வன்மையானது
- குடுக்கை - சுரையின் ஓடு
- மட்டை - தேங்காய் நெற்றின் மேற்பகுதி
- உமி - நெல், கம்பு ஆகியவற்றின் மூடி
- கொம்மை - வரகு, கேழ்வரகு உமி

**11. தானியங்களுக்குத் தாவரத்திற்கேற்ப வழங்கப்படும் சொற்கள் யாவை?**

- கூலம் - நெல், புல் தானியங்கள்
- பயறு - அவரை, உளுந்து
- கடலை - வேர்க்கடலை
- விதை - கத்தரி, மிளகாய் வித்து, கொண்டைக் கடலை
- காழ் - புளி, காஞ்சிரை வித்து
- முத்து - வேம்பு, ஆமணக்கு வித்து
- கொட்டை - மா, பனை வித்து
- தேங்காய் - தென்னை வித்து
- முதிரை - அவரை, துவரை பயறுகள்



www.tnpscjob.com

**12. தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்களையும் அதற்குரிய தாவரங்களின் பெயர்களையும் எழுது.**

- நாற்று - நெல், கத்திரியின் இளநிலை
- கன்று - மா, புளி, வாழையின் இளநிலை
- குருத்து - வாழையின் இளநிலை
- பிள்ளை - தென்னையின் இளநிலை
- குட்டி - விளாவின் இளநிலை
- மடலி (அ) வடலி - பனையின் இளநிலை
- பைங்கூழ் - நெல், சோளத்தின் இளநிலை

**13. தமிழ்ச் சொல் வளம் குறித்து கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.**

- தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும்.
- தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில்உள என்கிறார் கால்டுவெல்.

**14. எவற்றை அமைத்துக்கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்?**

- திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும்.
- பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும், நுண்பொருட்சொற்களும் அமைத்துக்கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்.

**15. பழங்காலத்தில் விளைந்த அளவு இக்காலத்தில் விளையாதவை எவை? விளைந்து வருபவை எவை?**

பழங்காலத்தில் விளைந்த அளவு பொன்னும் மணியும் முத்தும் பவளமும் இன்று விளையாவிடினும் அருமையான கூலங்களும் சிறுகூலங்களும் இன்றும் தென்றமிழ் நாட்டில் விளைந்து வருகின்றன.

இயல் 1

## நெடுவினா

**1. தமிழ், சொல் வளமுடையதென்றும் தமிழ்நாடு பொருள் வளமுடையதென்றும் தெளிவாக விளங்குவதற்கான காரணங்கள் சிலவற்றைத் தொகுத்தெழுதுக.**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| தாவரங்களின் அடிப்பகுதிப் பெயர் |
| அடிப்பகுதிபிரிவு பெயர் |
| தாவர இலைப் பெயர் |
| தாவரங்களின் பிஞ்சுவகைப் பெயர் |
| தாவரங்களின் குலைப் பெயர் |
| கெட்டுப்போன காய், கனிப்பெயர் |
| முடிவுரை |

www.tnpscjob.com

### முன்னுரை:

தமிழ், சொல் வளமுடையது, தமிழ்நாடு பொருள் வளமுடையது என்பதைப் பாவாணர், சொல்லாய்வுக் கட்டுரைகள் என்ற நூலில், 'தமிழ்ச் சொல்வளம்' என்னும் கட்டுரையில் எடுத்துரைக்கிறார்.

### தாவரங்களின் அடிப்பகுதிப் பெயர்:

- தாள் - நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி
- தண்டு - கீரை, வாழையின் அடி
- கோல் - நெட்டி, மிளகாய்ச் செடியின் அடி
- தூறு - குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி
- தட்டு (அ) தட்டை - கம்பு, சோளம் முதலியவற்றின் அடி
- கழி - கரும்பின் அடி
- கழை - மூங்கிலின் அடி
- அடி - புளி, வேம்புவின் அடி

### அடிப்பகுதிபிரிவு பெயர்:

- கவை - மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
- கொம்பு (அ) கொப்பு - கவையின் பிரிவு
- கிளை - கொம்பின் பிரிவு
- சினை - கிளையின் பிரிவு
- போத்து - சினையின் பிரிவு
- குச்சி - போத்தின் பிரிவு
- இணுக்கு - குச்சியின் பிரிவு

### தாவர இலைப் பெயர்:

- புளி, வேம்பு - இலை
- தென்னை, பனை - ஓலை
- நெல், புல் - தாள்
- காய்ந்த இலை - சருகு
- சோளம், கரும்பு - தோகை

### தாவரங்களின் பிஞ்சுவகைப் பெயர்:

(பூம்பிஞ்சு -பூவோடு கூடிய இளம்பிஞ்சு, பிஞ்சு -இளம்காய்)

- வடு - மாம்பிஞ்சு
- மூசு - பலாப்பிஞ்சு
- கவ்வை - எள் பிஞ்சு
- குரும்பை - தென்னை, பனை பிஞ்சு
- இளநீர் - முற்றாத தேங்காய்
- நுழாய் - இளம்பாக்கு
- கருக்கல் - இளநெல்
- கச்சல் - வாழைப்பிஞ்சு

### தாவரங்களின் குலைப் பெயர்:

- கொத்து - அவரை, துவரை
- குலை - கொடி முந்திரி
- தாறு - வாழைக்குலை
- கதிர் - கேழ்வரகு, சோளக் கதிர்
- அலகு (அ) குரல் - நெல், தினைக் கதிர்
- சீப்பு - வாழைத் தாற்றின் பகுதி

### கெட்டுப்போன காய், கனிப்பெயர்:

- சூம்பல் - நுனியில் சுருங்கிய காய்
- சிவியல் - சுருங்கிய பழம்

- சொத்தை - புழுபூச்சி அரித்த காய் (அ) கனி
- வெம்பல் - சூட்டினால் பழுத்த பிஞ்சு
- அளியல் - குளுகுளுத்த பழம்
- அழுகல் - குளுகுளுத்து நாறிய பழம் (அ) காய்
- சொண்டு - பதறாய்ப் போன மிளகாய்
- கோடான்காய் (அ) கூகைக்காய் - கோட்டான் அமர்ந்ததினால் கெட்ட காய்
- தேரைக்காய் - தேரை அமர்ந்ததினால் கெட்டகாய்
- அல்லிக்காய் - தேரை அமாந்ததினால் கெட்ட தேங்காய்
- ஒல்லிக்காய் தென்னையில் கெட்ட காய்

**முடிவுரை:**

மேற்குறித்த பெயர்கள் மூலம், தமிழின் சொல்வளத்தையும் தமிழ்நாட்டின் பொருள் வளத்தையும் நன்கு அறிய முடிகின்றது.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 8*

**1. பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.**

**தரிசு, சிவல், கரிசல், முரம்பு, புறம்போக்கு, சுவல், அவல்.**

**தரிசு நிலம்** : பயிர் செய்யாத நிலம்

**சிவல் நிலம்** : செந்நிலம் அல்லது சிவந்த நிலம்

**கரிசல் நிலம்** : கரிய நிறமுடைய மண் கொண்ட நிலம் கரிசல் நிலம் (அ) கரிந்த பாலை நிலம்

**முரம்பு நிலம்** : பருக்கைக் கற்கள் கொண்ட மேட்டு நிலம்

**புறம்போக்கு நிலம்** : ஊர்ப்புறத்தே குடிகள் வாழ்தலில்லாத நிலம்

**சுவல் நிலம்** : மேட்டு நிலம்

**அவல் நிலம்** : 'அவல்' என்பதன் பொருள் 'பள்ளம்'. ஆகவே பள்ளமான நிலப்பகுதி அவல் என அழைக்கப்படுகிறது. விளை நிலமாகவும் அமைகிறது.

**2. ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.**

**எ.கா:** சொல்லுதல் - பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்பல், மொழிதல்

**அ) மலர்தல்** - அவிழ்தல், அலர்தல், நெகிழ்தல், விள்ளல், விரிதல்.

**ஆ) ஞாயிறு** - சூரியன், கதிரவன், வெய்யோன், பகலவன், பரிதி.

**இ) அரசன்** - கோ, கொற்றவன், வேந்தன், ராஜா, கோன்.

**ஈ) அழகு** - அணி, வடிவு, பொலிவு, எழில்.

**உ) அடி** - கழல், கால், தாள், பதம், பாதம்.

**ஊ) தீ** - அக்கினி, நெருப்பு, தழல்.

**எ) அச்சம்** - பயம், பீதி, உட்கு.

**ஏ) துன்பம்** - இன்னல், அல்லல், இடும்பை

**ஐ) அன்பு** - கருணை, நேசம், ஈரம், பரிவு, பற்று.

**ஒ) செய்யுள்** - பா, கவிதை, யாப்பு.

**ஓ) பெண்** - நங்கை, வனிதை, மங்கை.

**ஔ) வயல்** - கழனி, பழனம், செய்.



www.tnpscjob.com

இயல் 1 மொழி

கவிதைப் பேழை

# இரட்டுற மொழிதல்

*சந்தக்கவிமணி தமிழழகனார்*

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது**

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

**[விடை: அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்]**

### குறுவினா

**1. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**

ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி என்பர். இதனை சிலேடை அணி என்றும் அழைப்பர்.

எ.கா: சீனிவாசன் பாற்கடலில் துயில்கொள்கிறான்.

-இத்தொடர் எவ்வித மாற்றமுமின்றி இரண்டு விதமான பொருளைத் தருகிறது.

- சீனியில் (சர்க்கரை) வாசம் செய்யும் எறும்பு பாலில் இறந்து மிதக்கிறது.
- சீனிவாசகனாகிய திருமால் பாற்கடலில் துயில்கொள்கிறார்.

### சிறுவினா

**1. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.**

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் துய்ப்பதால் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழாய் வளர்ந்தது. | முத்தினை அமிழ்ந்து தருகிறது. |
| முச்சங்கம் கண்டதால் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| மெத்த வணிகலமும் மேவதால் (மெத்த அணிகலன்) | ஐம்பெருங்காப்பியங்கள் அணிகலனாய்ப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் வந்து சென்றது. |
| நித்தம் அணை கிடந்தே சங்கத்தவர் காக்க | சங்கப்பலகையில் அமர்ந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தனர். | தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காத்தது. |

www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. 'தமிழ், ஆழி இரண்டுக்கும் பொருள்படும் படியான' - இரட்டுற மொழிதலணி அமைய பாடிய ஆசிரியர் யார்?
அ) தேவநேயப் பாவாணர் ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
இ) தமிழழகனார் ஈ) எழில் முதல்வன் **[விடை: இ) தமிழழகனார்]**

2. கடல் தரும் சங்குகளின் வகைகள் எத்தனை?
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **[விடை: ஆ) மூன்று]**

3. கடல் தன் அலையால் எதைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது?
அ) மணல் ஆ) சங்கு
இ) கப்பல் ஈ) மீனவர்கள் **[விடை: ஆ) சங்கு]**

4. முத்தினையும் அமிழ்தினையும் தருவதாகச் சந்தக்கவிமணி தமிழழகனார் குறிப்பிடுவது எதை?
அ) மூங்கில் ஆ) கடல்
இ) மழை ஈ) தேவர்கள் **[விடை: ஆ) கடல்]**

5. தமிழ் அணிகலன்களாகப் பெற்றவை எவை?
அ) சங்க இலக்கியங்கள் ஆ) ஐம்பெருங்காப்பியங்கள்
இ) ஐஞ்சிறு காப்பியங்கள் ஈ) நீதி இலக்கியங்கள்
**[விடை: ஆ) ஐம்பெருங்காப்பியங்கள்]**

6. இரட்டுறமொழிதல் அணியின் வேறுபெயர் யாது?
அ) வேற்றுமை அணி
ஆ) பிறிதுமொழிதல் அணி
இ) சொற்பொருள் பின்வருநிலையணி
ஈ) சிலேடை அணி **[விடை: ஈ) சிலேடை அணி]**

7. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது எது?
அ) இரட்டுறமொழிதல் அணி ஆ) வேற்றுமை அணி
இ) உவமை அணி ஈ) உருவக அணி **[விடை: அ) இரட்டுறமொழிதல் அணி]**

8. சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் என்ன?
அ) சண்முகமணி ஆ) சண்முகசுந்தரம்
இ) ஞானசுந்தரம் ஈ) ஆறுமுகம் **[விடை: ஆ) சண்முகசுந்தரம்]**

9. தமிழழகனார் எத்தனை சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்?
அ) பத்து ஆ) பன்னிரண்டு
இ) பதினான்கு ஈ) பதினாறு **[விடை: ஆ) பன்னிரண்டு]**

10. முத்தமிழ் துய்ப்பதால் என்னும் பாடல் இடம் பெற்றுள்ள தொகுப்பு யாது?
அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) சிற்றிலக்கியங்கள் ஈ) தனிப்பாடல் திரட்டு **[விடை: ஈ) தனிப்பாடல் திரட்டு]**



www.tnpscjob.com

## குறுவினா

**1. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?**

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

**2. கடலிலிருந்து கிடைக்கும் பொருட்கள் யாவை?**

- முத்தும், அமிழ்தமும் கிடைக்கிறது.
- வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகள் கிடைக்கிறன.

**3. தமிழ்மொழி குறித்து தமிழழகனார் கூறிய செய்தி யாது?**

- தமிழ் இயல், இசை, நாடகம் முத்தமிழாய் வளர்ந்தது.
- முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.
- ஐம்பெருங் காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
- சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

**4. இரட்டுற மொழிதல் அணி என்றால் என்ன? அதன் வேறுபெயர் யாது?**

- ஒரு சொல்லோ சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுறமொழிதல் அணி எனப்படும்.
- வேறுபெயர் - சிலேடை அணி.

**5. சிலேடைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சிலேடைகள் இரண்டு வகைப்படும். அவை:

- செம்மொழிச் சிலேடை
- பிரிமொழிச் சிலேடை

## கற்பவை கற்றபின்

பக்கம்: 10

**1. அ) காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா. ஜகந்நாதன். அவரை மாலையிட்டு வரவேற்றனர். அப்போது கி.வா.ஜ., ‘‘அடடே! காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே!’’ என்றார். எல்லோரும் அந்தச் சொல்லின் சிலேடைச் சிறப்பை மிகவும் சுவைத்தனர்.**

**ஆ) இசை விமரிசகர் சுப்புடுவின் விமரிசனங்களில் நயமான சிலேடைகள் காணப்படும். ஒரு முறை ஒரு பெரிய வித்துவானுடைய இசைநிகழ்ச்சியை விமர்சனம் செய்யும் போது அவர் குறிப்பிட்டது: ‘‘அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்.’’**

**இ) தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதன் பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தபோது ‘‘இவர் பல்துறை வித்தகர்’’ என்று குறிப்பிட்டார்.**

**இவைபோன்ற பல சிலேடைப் பேச்சுகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவற்றைத் தொகுத்துச் சொல்நயங்களைப் பதிவு செய்து கலந்துரையாடுக.**

**ஆசிரியர்** : இன்று வகுப்பிற்கு புதிதாக வந்த மாணவன் எங்கே?

**மாணவன்** : இதோ, உள்ளேன் ஐயா. (மாணவன் வகுப்பின் கடைசி இருக்கையிலிருந்து கூறுகிறான்)

**ஆசிரியர்** : உன் பெயர் என்ன?

**மாணவன்** : கவியரசன்.

**ஆசிரியர்** : அப்படியானால் உனக்கு இருக்க வேண்டிய நீண்ட வாலையும் கூர்மையான நகங்களையும் காணவில்லையே.



www.tnpscjob.com

[மாணவர்கள் அனைவரும் காரணம் புரியாமல் சிரிக்கின்றனர். அதற்கு ஆசிரியர் கூறிய விளக்கம் பின்வருமாறு அமைந்தது.]

'கவி என்றால் குரங்கு என்று இன்னொரு பொருளும் உண்டு. ஆகவேதான் நீ குரங்குகளின் அரசனானால் உன் வாலையும், கூரிய நகங்களையும் எங்கே என்றேன்' என விளக்கினார்.

**2. மொழியின் சிறப்புகளைப் பாடும் கவிதைகளுள் உங்களுக்குப் பிடித்தவற்றை வகுப்பறையில் படித்துக்காட்டுக.**

வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!!

வாழிய வாழியவே!
வானம் அளந்த
வண்மொழி வாழியவே – வாழ்க

ஏழ்கடல் வைப்பினும்
தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
என்றென்றும் வாழியவே – வாழ்க
வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த
அனைத்தும் அறிந்திடும்
வளர்மொழி வாழியவே!

வாழியவே!
வாழியவே!
வாழியவே! – *பாரதியார்*

இயல் 1

இயல் 1 மொழி

விரிவானம்

# உரைநடையின் அணிநலன்கள்

எழில் முதல்வன்

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

**1. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.**

சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

**பங்குபெறுவோர் - தமிழன், உறவினர் மகள்**

**உறவினர் மகள்** : வணக்கம் ஐயா.

**தமிழன்** : வணக்கம்

**உறவினர் மகள்** : உரையாடல், உரைநடை என்றால் என்ன?

**தமிழன்** : நீயும் நானும் பேசினால் உரையாடல். அதையே எழுதினால் உரைநடை.

**உறவினர் மகள்** : உரைநடை வளர்ச்சி பற்றி உங்கள் கருத்து யாது?

**தமிழன்** : உரைநடையில் எதுகை மோனை போன்ற அணிகளோ இல்லை. ஆனால் அடுக்கு மொழிகள் உண்டு. கவிதையானது செயற்கைத் தன்மை கொண்டது. உரைநடையோ இயல்பான ஒழுங்கில் அமையும்.

**உறவினர் மகள்** : தமிழ் உரைநடையின் வேறு வகைகள் உண்டா?

**தமிழன்** : உண்டு. பொதுவாக உரைநடையினை ஆறு பிரிவுகளாகப் பிரிக்கலாம். விளக்க உரைநடை, அளவை உரைநடை, எடுத்துரை உரைநடை, வருணனை உரைநடை, நாடக உரைநடை, சிந்தனை உரைநடை.

**உறவினர் மகள்** : எனக்கு வருணனை உரைநடையைப் பற்றி கூற முடியுமா?

**தமிழன்** : கூறுகிறேன். வருணனை உரைநடை என்பது புலனுணர்வு அனுபவங்களை வருணனையாக விவரிப்பது. மக்கள், உயிரினங்கள், பொருள்கள் ஆகியவற்றை வருணிப்பது.

**உறவினர் மகள்** : உரைநடையில் ஓசை இன்பம் ஏற்படுமா?

**தமிழன்** : எதுகை, மோனைச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தி உரையாசிரியர்கள் பலர் உரையெழுதி உள்ளனர். எடுத்துக்காட்டாக இரா. பி. சேதுபிள்ளையின் தமிழின்பம் என்னும் நூலைக் கூறலாம்.

**உறவினர் மகள்** : உரைநடையில் இலக்கிய உத்திகள் உண்டா?

**தமிழன்** : உண்டு. மு.வ. உரைநடையில் உவமை, எதுகை, மோனை சொல்லாட்சி போன்ற நான்கு உலக உத்திகளைக் கையாண்டுள்ளார்.

**உறவினர் மகள்** : உரைநடையில் மோனை நயம் உள்ளதா?

**தமிழன்** : உள்ளது. சான்றாக, இரா.பி. சேதுபிள்ளையின் 'தமிழ் விருந்து' என்னும் நூலில் 'கலையும் கற்பனையும்' என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில்,



www.tnpscjob.com

'**மலையிலே மழை பொழிந்து வெள்ளம் பொங்கி எழுகின்றது.**
**அருவியாய் விழுந்து ஆறாய் பாய்கிறது**' என்பதை அறிய முடிகிறது.

**உறவினர் மகள்** : மோனையும், இயைபும் வருவதுபோல் உரைநடை சொல்லுங்கள் ஐயா!

**தமிழன்** : சொல்கிறேன். இரா.பி.சேதுபிள்ளையின் 'உமறுப்புலவர்' எனும் கட்டுரையில், **பாண்டிய நாட்டில் பருவமழை பெய்யாது ஒழிந்தது, பஞ்சம் வந்தது, பசி நோயும் மிகுந்தது.**

**உறவினர் மகள்** : ஐயா கடைசியாக, முரண் நயம் பற்றி மட்டும் கூறுங்கள் ஐயா!

**தமிழன்** : முரண் என்பது முரண்பட்ட இரண்டுச் சொற்கள் அருகருகே அடுக்கி வருதல். இரா.பி.சேதுபிள்ளையின் 'ஊரும் பேரும்' என்னும் நூலில், **வாழ்வும் தாழ்வும்** நாடு நகரங்களும் உண்டு. **சீரும் சிறப்பும்** உற்று விளங்கிய சில நகரங்கள் இக்காலத்தில் புகைபடிந்த ஓவியங்கள் போல் பொலிவிழந்து உள்ளது.

**உறவினர் மகள்** : மிக்க நன்றி ஐயா. தங்களிடமிருந்து உரைநடையின் சிறப்பினை நன்கு அறிந்து கொண்டேன்.

**தமிழன்** : வணக்கம்!

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **முதல் தமிழ்க்கணினி உருவாக்கப்பட்ட ஆண்டு**
அ) 1983 ஆ) 1938
இ) 1893 ஈ) 1980 **[விடை: அ) 1983]**

2. **முதல் தமிழ்க் கணினிக்குச் சூட்டப்பட்ட பெயர்**
அ) திருவள்ளுவர் ஆ) தொல்காப்பியர்
இ) அகத்தியர் ஈ) கம்பர் **[விடை: அ) திருவள்ளுவர்]**

3. **புதிய உரைநடை என்னும் நூலினை எழுதியவர்**
அ) க. அப்பாதுரை ஆ) எழில் முதல்வன்
இ) பாவாணர் ஈ) இளங்குமரனார் **[விடை: ஆ) எழில் முதல்வன்]**

4. **எழில் முதல்வனின் இயற்பெயர்**
அ) மா. இராமலிங்கம் ஆ) க. அப்பாதுரை
இ) பாவாணர் ஈ) இளங்குமரனார் **[விடை: அ) மா. இராமலிங்கம்]**

5. **எழில் முதல்வனின் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல்**
அ) புதிய உரைநடை ஆ) இனிக்கும் நினைவுகள்
இ) யாதுமாகி நின்றாய் ஈ) எங்கெங்கு காணினும் **[விடை: அ) புதிய உரைநடை]**

6. **எழில் முதல்வன் கற்றல் கற்பித்தல் பணியை மேற்கொண்ட கல்லூரி**
அ) புதுக்கல்லூரி ஆ) மாநிலக் கல்லூரி
இ) இராணி மேரிக்கல்லூரி ஈ) குடந்தை அரசு ஆடவர் கல்லூரி
**[விடை: ஆ) மாநிலக் கல்லூரி]**

7. **சங்கப் புலவரிடம் இணையத் தமிழன் எவ்விலக்கியங்களைக் குறித்து உரையாடிக் கொண்டிருந்தான்?**
அ) சங்க இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம்
இ) உரைநடை இலக்கியம் ஈ) சிற்றிலக்கியம் **[விடை: இ) உரைநடை இலக்கியம்]**



www.tnpscjob.com

8. **“உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அது உருவகமாகும்” - என்றவர்**
அ) தொல்காப்பியர் ஆ) பவணத்தியார்
இ) தண்டி ஈ) அகத்தியர் **[விடை: இ) தண்டி]**

9. **“இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக் கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர் நிறைந்த கண்மாய்கள்” என்று குறிஞ்சிமலர் நூலில் நா. பார்த்தசாரதி பயன்படுத்திய நயம்**
அ) உவமை ஆ) உருவகம்
இ) எடுத்துக்காட்டு உவமையணி ஈ) சிற்றிலக்கியம் **[விடை: அ) உவமை]**

10. **எடுத்துக்காட்டு உவமையணியை உரைநடையில் பயன்படுத்துகையில் அதனை எப்படி அழைப்பர்?**
அ) இலக்கணை ஆ) இணை ஒப்பு
இ) முரண்படு மெய்ம்மை ஈ) சொல்முரண் **[விடை: ஆ) இணை ஒப்பு]**

11. **குடிசையின் ஒருபக்கம் கோபுரங்கள் மறுபக்கம்; பசித்த வயிறுகள் ஒரு பக்கம் புளிச் சேப்பக்காரர்கள் மறுபக்கம்; மெலிந்த எலும்புக் கூடுகள் ஒருபக்கம் பருத்த தொந்திகள் மறுபக்கம் - தோழர் ப. ஜீவானந்தம் உரைநடை எதற்கு எடுத்துக்காட்டு?**
அ) எதிரிணை இயைபு ஆ) முரண்படு மெய்ம்மை
இ) இலக்கணை ஈ) சொல்முரண் **[விடை: அ) எதிரிணை இயைபு]**

12. **உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றிபெறுவன?**
அ) உவமையை விட உருவகமே ஆ) உருவகத்தை விட உவமையே
இ) எதுகையை விட மோனையே ஈ) கேள்வியிலே பதில் இருப்பது போல
**[விடை: அ) உவமையை விட உருவகமே]**

## நெடுவினா

1. **உணர்ச்சிகளைக் காட்ட உவமை கொண்ட மொழிநடையே ஏற்ற கருவி என்பதை நிறுவுக:**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை<br>குறிஞ்சிமலர் என்னும் நூலில் நா. பார்த்தசாரதி<br>அறிஞர் அண்ணாவின் உரைநடை<br>எடுத்துக்காட்டு உவமை அணியும் இணை ஒப்பும்<br>மழையும் புயலும் என்னும் நூலில் வ. ராமசாமி |

**முன்னுரை:**

உணர்ச்சிகளைக் காட்ட உவமை கொண்ட மொழிநடையே ஏற்ற கருவியாக விளங்குவதால் தற்காலத்திலும் இதனைப் பயன்படுத்துவதைப் பல இலக்கியங்களில் காண முடிகிறது.

**குறிஞ்சிமலர் என்னும் நூலில் நா. பார்த்தசாரதி:**

‘திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக் கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர் நிறைந்த கண்மாய்கள்’ என்று, ‘குறிஞ்சி மலர்’ என்னும் நூலில் நா. பார்த்தசாரதி உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.

இக்கால இலக்கியங்களில் உவமையை விட உருவகமே உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுகின்றது. ‘முகநிலவில் வியர்வை முத்துகள் துளிர்த்தன’ என்று உருவகமாக எழுதுகிறார்கள்.

**அறிஞர் அண்ணாவின் உரைநடை:**

‘களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய் உன் புன்னகை தான் அதற்குச் சான்று’ என்பது இக்காலத்தில் வாழ்ந்த அறிஞர் அண்ணாவின் உரைநடை ஆகும்.



www.tnpscjob.com

**எடுத்துக்காட்டு உவமை அணியும் இணை ஒப்பும்:**

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்"

என்னும் குறட்பாவில் உவம உருபு மறைந்து வருவதால் எடுத்துக்காட்டு உவமையணி என்பர். இவ்வணியை உரைநடையில் பயன்படுத்துகையில் 'இணை ஒப்பு' என்று கூறுவர்.

**மழையும் புயலும் என்னும் நூலில் வ. ராமசாமி:**

'ஊர் கூடிச் செக்குத் தள்ள முடியுமா? என்று கேட்கிறார்கள். ஊர் கூடின பிறகு தான் செக்குத் தள்ள வேண்டும் என்று காத்திருப்பவர்களின் காரியம் கை கூடாது, புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை' என்று எழுத்தாளர் வ. ராமசாமி 'மழையும் புயலும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை:**

ஒன்றை விளக்குவதற்கு அதனோடு தொடர்புடைய பிறிதொன்றைக் கூறி விளக்குவதே உவமை என்பர். அந்த வகையில் அக்காலத்தில் செய்யுள்களில் பயன்படுத்தப்பட்ட உவமை, இக்காலத்தில் உரைநடையிலும் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. இது உணர்ச்சிகளைக் காட்ட ஏற்ற கருவியாகவும் விளங்குகிறது.

**2. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வடிவில் விடை தருக.**

**சங்கப் பாடல்களுக்குப் பின் தோன்றிய இலக்கிய வடிவங்கள் - இலக்கியங்களின் கற்பனையும் இலக்கணையும் - மோனையும் எதுகையும் - சொற்களின் அளவும் அழகும் - முரண்பாடு மெய்ம்மையும், எதிரிணை இசைவும் - கேள்விலேயே பதில் - சொல்லையும் கருத்தையும் வைக்கும் முறை.**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| சங்கப் பாடல்களுக்குப் பின் தோன்றிய இலக்கிய வடிவங்கள் |
| இலக்கியங்களில் கற்பனையும் இலக்கணையும் |
| இலக்கியங்களில் மோனையும் எதுகையும் |
| சொற்களின் அளவும் அழகும் |
| முரண்பாடு மெய்ம்மை |
| கேள்விலேயே பதில் |
| சொல்லையும் கருத்தையும் வைக்கும் முறை |
| முடிவுரை |

**முன்னுரை:**

சங்க இலக்கியம் நம் பாட்டனார் தோப்பாகவும், இடைக்கால இலக்கியம் நம் தந்தையார் தோட்டமாகவும், இக்கால இலக்கியம் நம் பூங்காவாகவும் விளங்குகிறது. தோப்பு ஈந்த பயன்களையும் தோட்டம் தந்த நயங்களையும் பூங்காவின் அழகினையும் ஒன்று சேர்த்து உரைநடையின் அணிநலன்களாக அவை விளங்குவதைக் காண்போம்.

**சங்கப் பாடல்களுக்குப் பின் தோன்றிய இலக்கிய வடிவங்கள்:**

சங்கப் பாடல்களுக்குப் பின், தமிழ் இலக்கியம் அற இலக்கியங்களாகி, காப்பியங்களாகி, சிற்றிலக்கியங்களாகி, சந்தக் கவிதைகளாகி, புதுக்கவிதைகளாகி, இன்றைய நிலையில் நவீன கவிதைகளில் வந்து நிற்கிறது. உரைநடையின் வளர்ச்சியில் சிறுகதை, கட்டுரை, புதினம் என்ற வடிவங்கள் உருவாகியுள்ளன.

**இலக்கியங்களில் கற்பனையும் இலக்கணையும்:**

அஃறிணைப் பொருள்களையும் உயர்திணையாகக் கருதிக் கற்பனை செய்து எழுதுவது இலக்கணத்தில் உண்டு. தொல்காப்பியர், 'ஞாயிறு, திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப்



www.tnpscjob.com

பொருள்கள். சொல்லுந போலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும்' (செய்யுளியல், 192) என்று எழுதும் திறத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். உயிர் இல்லாத பொருட்களை உயிர் உள்ளன போலவும், உணர்வு இல்லாத பொருள்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்வதுண்டு என்று எடுத்துக்காட்டியிருக்கிறார். இதனை உரைநடையில் 'இலக்கணை' என்று கூறுவர்.

**சான்று:**

"சோலையில் புகுவேன்; மரங்கள் கூப்பிடும்: விழுந்து வைக்கும், ஆலமர நிழலில் அமர்வேன்', ஆல், என் விழுதைப் பார். அந்த அரசுக்கு இஃது உண்டா? என்னும். அரசு கண்ணிற்படும். 'யான் விழுதின்றி வானுற ஓங்கி நிற்கிறேன், என்னை மக்கள் சுற்றிச் செல்கிறார்கள், காண்' என்னும். 'வேம்பு என் நிழல் நலஞ்செய்யும். என் பூவின் குணங்களைச் சொல்கிறேன் வா' என்னும். அத்தி, நாகை, விளா, மா, வில்வம் முதலிய மரங்கள் விளியாமலிருக்குமோ? சிந்தனையில் அவைகளின் நுட்பங்கள் விளங்கும். மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது இவர்வேன் ஒரிடத்தில் அமர்வேன்' மேலும் கீழும் பார்ப்பேன் சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்.

என்ற தமிழ்த்தென்றல் திரு.வி. கல்யாண சுந்தரனாரின் எழுத்துகள் அஃறிணைப் பொருள்களை உயர்திணையாகக் கருதி எழுதப்பட்டிருப்பதற்குச் சான்றாகிறது.

## இலக்கியங்களில் மோனையும் எதுகையும்.

மோனையும் எதுகையும் செய்யுளில் வருமாயின் இனிய ஓசையின்பம் விளையும். இவற்றினை உரைநடையிலும் பயன்படுத்துவர்.

'சான்றாக, 'தென்றல் அசைந்துவரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே, கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும் குரவமும் முல்லையும் நறுமணங் கமழும்! கோலமாமயில் தோகை விரித்தாடும்; தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும்; இத்தகைய மலையினின்று விரைந்து வழித்திறங்கும் வெள்ளருவி வட்டச் சாலையிலே வீழ்ந்து பொங்கும் பொழுது சிதறும் நீர்த்திவலைகள் பாலாவியோற் பரந்தெழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும்' என்று சொல்லின் செல்வர் இரா.பி. சே. தமிழன்பம் என்னும் நூலில் எழுதியுள்ளமையைக் கூறலாம்.

## சொற்களின் அளவும் அழகும்:

வெளிப்பாட்டிற்கும் சொல்லப்படும் கருத்திற்கு அழுத்தம் தரவும் உரைநடையில் சொல்லையோ கருத்தையோ திரும்பத் திரும்பச் சொல்வதுண்டு. சொற்களை அளவாகப் பயன்படுத்தி உரைநடையை அழகு செய்ய மு. வரதராசனார், தம் நாட்டுப்பற்று என்னும் கட்டுரைத் தொகுப்பில், 'வாழ்க்கை நடத்துவதற்குப் பொருள்கள் பல வேண்டும். அரிசி, காய், கனி முதலியவை வேண்டும். உடை, வீடு முதலியவை வேண்டும். காசும் காகித நோட்டும் வேண்டும், இன்னும் பல வேண்டும். இவற்றை ஆளும் அறிவும் வேண்டும்' என்று எழுதியிருக்கிறார்.

## முரண்பாடு மெய்ம்மை:

படிப்பவருக்கு முரண்படுவது போல இருப்பினும் உண்மையில் முரண்படாத - மெய்ம்மையைச் சொல்லுவது 'முரண்பாடு மெய்ம்மை' ஆகும்.

**சான்று:**

'இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்பட வேண்டும்?' சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவதை 'எதிரிணை இசைவு' என்பர்.

'குடிசைகள் ஒரு பக்கம்; கோபுரங்கள் மறுபக்கம்; பசித்த வயிறுகள் ஒரு பக்கம்; புளிச்சேப்பக்காரர்கள் மறுபக்கம்; மெலிந்த எலும்புக்கூடுகள் ஒரு பக்கம்; பழுத்த தொந்திகள் மறுபக்கம்; கேடு கெட்ட இந்தச் சமுதாயத்திற்கு என்றைக்கு விமோசனம்? தோழர்களே, சிந்தியுங்கள்! என்று தோழர் ப. ஜீவானந்தம் எழுதியிருப்பது இதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

**கேள்விலேயே பதில்:**

விடைத்தர வேண்டிய தேவை இல்லாமல் கேள்விலேயே பதில் இருப்பதைப் போலவும் எழுதுவது உணர்ச்சி வெளிப்பாட்டுக்கு உதவக் கூடியதாக இருக்கிறது. சான்றாக, 'அவர் (பெரியார் ஈ. வெ. ரா) பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத பழமை உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்? எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது? ........ எனவே தான் பெரியாருடைய பெரும் பணியை நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல ஒரு சகாப்தம். ஒரு கால கட்டம்- ஒரு திருப்பம் - என்று கூறுகிறேன்' என்னும் பெரியாரைப் பற்றிய அறிஞர் அண்ணாவின் கூற்றினைக் கூறலாம்.

**சொல்லையும் கருத்தையும் வைக்கும் முறை:**

உரைநடையில் சொல்லையோ கருத்தையோ அடுத்தடுத்து வைக்கும் முறையிலே உள்ள சிறப்பினை 'உச்சநிலை' என்பர்.

'இந்தியா தான் என்னுடைய மோட்சம்! இந்தியாவின் நன்மைதான் என் நன்மை. இந்தியா தான் என் இளமையின் மெத்தை என் யௌவனத்தின் நந்த வனம் என் கிழக்காலத்தின் காசி' என்று பாரதி என்னும் தமிழ்க்கவிஞர் நம் நாட்டை உயர்த்திக் கூறுவதைச் சான்றாகக் கூறலாம்.

**முடிவுரை:**

ஈராயிரம் ஆண்டுகட்கு மேலாக எல்லா வளத்துடனும் காலமாற்றத்திற்கு ஏற்றவாறு தகவமைத்துக் கொள்கின்ற நம் தாய்மொழியாகிய தமிழ், தற்கால உரைநடை வடிவத்திலும் மிகுந்த செழுமையுடன் விளங்குவதை அறிய முடிகிறது.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 15*

**1. நீங்கள் படித்தவற்றுள் நினைவில் நீங்கா இடம் பெற்ற இலக்கியத் தொடர்கள், நயங்களை எழுதுக.**

| இலக்கியத் தொடர் | இடம்பெற்றுள்ள நயம் |
|---|---|
| உள்ளங்கை நெல்லிக்கனி போல. | உவமை |
| முகநிலவில் வியர்வை முத்துக்கள் துளிர்த்தன. | உருவகம் |

**2. கொடுத்த தலைப்பில் பேசுவோம்.**

தலைப்பு : நேரம்

தவிர்க்க வேண்டிய சொல் : கடிகாரம்

குறிப்பு : ஒரு நிமிடம் பேச வேண்டும். தமிழ்ச்சொற்களை மட்டும் பயன்படுத்த வேண்டும். ஐந்து வினாடிகளுக்கு மேல் இடைவெளி இருத்தல் கூடாது.

**இது போன்று வேறு வேறு தலைப்புகளில் வகுப்பறையில் பேசிப் பழகுக.**

**"காலத்தே கடமையைச் செய்**
**காலம் பொன் போன்றது."**

என்பர் தமிழ்ச் சான்றோர். காலம் நமக்காக காத்திருப்பதில்லை. நான் செலவழித்த மணித்துளிகள் மீண்டும் கிடைப்பதில்லை. குறித்த நேரத்தில் குறித்த செயலைச் செய்பவன் பிறரால் மதிக்கப்படத் தக்கவன். காந்தியடிகளிடம் காணப்படும் சிறந்த பண்புகளில் ஒன்று காலம் தவறாமை. குறித்த நேரத்தில் குறித்த செயலைச் செய்வதற்காகவே காந்தியடிகள் தன் இடையில் (இடுப்பு) எப்பொழுதும் நேரம் பார்க்கும் கருவியைத் தொங்கவிட்டிருப்பார்.

**காலம் தவறாமையைக் கடைபிடிப்பீர்!**
**காலத்தை வீண் செய்யாதீர்!!**
**காலம் நம்மை வாழ்த்தும்.**



www.tnpscjob.com

இயல் மொழி 1

கற்கண்டு

# எழுத்து, சொல்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே**

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர் **[விடை: ஈ) பாடல்; கேட்டவர்]**

### குறுவினா

1. **'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**

வேங்கை : வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும் (தனிமொழி)

வேம் + கை : வேகின்ற கை எனவும் பொருள் தருகிறது (தொடர்மொழி)

2. **''உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்''
- இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.**

- உடுப்பதூஉம் உண்பதூஉம் : இன்னிசை அளபெடை வந்துள்ளது.
- செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடையாகும்.

### சிறுவினா

1. **'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும்.**

**இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.**

| தொழிற்பெயர் | எதிர்மறைத் தொழிற்பெயர் |
|---|---|
| அறிதல் | அறியாமை |
| புரிதல் | புரியாமை |
| தெரிதல் | தெரியாமை |
| பிறத்தல் | பிறவாமை |

இயல் 1

www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **குறுக்கங்கள் எத்தனை வகைப்படும்?**
அ) மூன்று ஆ) நான்கு
இ) ஐந்து ஈ) இரண்டு **[விடை: ஆ) நான்கு]**

2. **எஃஃஃ கிலங்கிய, உரனசைஇ - இச்சொற்களில் உள்ள அளபெடைகள்**
அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை
ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை
ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை **[விடை: அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை]**

3. **ஒற்றளபெடையில் அளபெடுக்கும் ஒற்றெழுத்துகளின் எண்ணிக்கை எத்தனை?**
அ) 11 ஆ) 13
இ) 15 ஈ) 12 **[விடை: அ) 11]**

4. **பொருத்துக.**
i) ஓ ஒதல் வேண்டும் - 1. இன்னிசை அளபெடை
ii) கெடுப்பதூஉம் - 2. செய்யுளிசை அளபெடை
iii) உரனசைஇ - 3. ஒற்றளபெடை
iv) எஃஃஃ கிலங்கிய - 4. சொல்லிசை அளபெடை
அ) i.2 ii.1 iii.4 iv.3 ஆ) i.4 ii.3 iii.2 iv.1
இ) i.2 ii.3 iii.4 iv.1 ஈ) i.3 ii.4 iii.1 iv.2 **[விடை: அ) i.2 ii.1 iii.4 iv.3]**

5. **வேறுபட்ட ஒன்றினைத் தேர்வு செய்க.**
அ) உறாஅர் ஆ) கெடுப்பதூஉம்
இ) வரனசைஇ ஈ) எஃஃஃ கிலங்கிய **[விடை: ஈ) எஃஃஃ கிலங்கிய]**

6. **பொருத்தமற்ற ஒன்றினைத் தேர்வு செய்க.**
அ) ஓஒதல் ஆ) உறாஅர்க்கு
இ) படாஅபறை ஈ) தம்பீஇ **[விடை: ஈ) தம்பீஇ]**

7. **பொதுமொழிக்குரிய சான்றினைத் தேர்வு செய்க.**
அ) படி ஆ) வேங்கை
இ) கண்ணன் ஈ) கண்ணன் வந்தான் **[விடை: ஆ) வேங்கை]**

8. **எட்டு = எள் + து எனப் பிரிந்து தரும் பொருள்**
அ) எட்டு ஆ) எள்ளை உண்
இ) வேகின்ற கை ஈ) எள்ளை எடு **[விடை: ஆ) எள்ளை உண்]**

9. **பொருத்துக.**
1. நடத்தல் - அ) எதிர்மறைத் தொழிற்பெயர்
2. கொல்லாமை - ஆ) வினையாலணையும் பெயர்
3. கேடு - இ) தொழிற்பெயர்
4. வந்தவர் - ஈ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்



www.tnpscjob.com

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.இ 2.அ 3.ஈ 4.ஆ
இ) 1.இ 2.ஆ 3.ஈ 4.அ ஈ) 1.இ 2.அ 3.ஆ 4.ஈ **[விடை: ஆ) 1.இ 2.அ 3.ஈ 4.ஆ]**

**10. எதிர்மறைத் தொழிற்பெயர் சான்றினைத் தேர்ந்தெடுக்க.**
அ) கொல்லாமை ஆ) வாழ்க்கை
இ) நடத்தல் ஈ) சூடு **[விடை: அ) கொல்லாமை]**

**11. மொழியின் சிறப்புகளை அறிய துணை செய்வது**
அ) கவிதை ஆ) இலக்கணம்
இ) உரைநடை ஈ) எதுவுமில்லை **[விடை: ஆ) இலக்கணம்]**

**12. சார்பெழுத்துகளின் எண்ணிக்கை**
அ) முப்பது ஆ) பன்னிரண்டு
இ) பத்து ஈ) ஒன்பது **[விடை: இ) பத்து]**

**13. உயிரளபெடை எத்தனை வகைப்படும்?**
அ) இரண்டு ஆ) மூன்று
இ) ஐந்து ஈ) ஆறு **[விடை: ஆ) மூன்று]**

**14. நெட்டெழுத்து அளபெடுப்பது என்பது என்ன?**
அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை ஈ) எதுவுமில்லை **[விடை: அ) செய்யுளிசை அளபெடை]**

**15. சொல் திரிந்து அளபெடுப்பது என்பது யாது?**
அ) செய்யுளிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) எதுவுமில்லை **[விடை: ஆ) சொல்லிசை அளபெடை]**

**16. மொழி என்பது எத்தனை வகை?**
அ) இரண்டு ஆ) மூன்று
இ) ஐந்து ஈ) ஆறு **[விடை: ஆ) மூன்று]**

**17. "அந்தமான்" என்பது எவ்வகை மொழி?**
அ) தொடர் மொழி ஆ) தனி மொழி
இ) பொது மொழி ஈ) எதுவுமில்லை **[விடை: இ) பொது மொழி]**

**18. பொருத்திக் காட்டுக.**
1. அந்தமான் - அ) தொடர்மொழி
2. கண் - ஆ) தொழிற்பெயர்
3. நடத்தை - இ) பொதுமொழி
4. கண்ணன் வந்தான் - ஈ) தனிமொழி

அ) 1.ஆ 2.ஈ 3.அ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.இ 2.ஈ 3.ஆ 4.அ ஈ) 1.இ 2.ஆ 3.ஈ 4.அ **[விடை: இ) 1.இ 2.ஈ 3.ஆ 4.அ]**

**19. உறாஅர்க்கு, வரனசைஇ - அளபெடை வகை**
அ) சொல்லிசை, இன்னிசை
ஆ) ஒற்றளபெடை, சொல்லிசை
இ) செய்யுளிசை, சொல்லிசை
ஈ) இன்னிசை, சொல்லிசை **[விடை: இ) செய்யுளிசை, சொல்லிசை]**

இயல் 1

20. **தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது**

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

**[விடை: ஈ) வினையாலணையும் பெயர்]**

21. **மூவிடத்திற்கும் உரியது .............; படர்க்கைக்கே உரியது .............**

அ) தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்
ஆ) வினையாலணையும் பெயர், தொழிற்பெயர்
இ) உரிச்சொற்றொடர், வினையாலணையும் பெயர்
ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: ஆ) வினையாலணையும் பெயர், தொழிற்பெயர்]**

22. **'நடத்தல்' என்னும் சொல்லில் 'நட' என்பது**

அ) வினையடி ஆ) விகுதி
இ) தொழிற்பெயர் ஈ) இடைநிலை **[விடை: அ) வினையடி]**

23. **'வேம் + கை' என்பதன் பொருள்**

அ) வேட்கை ஆ) வேங்கை
இ) வேகின்ற கை ஈ) வேகாத கை **[விடை: ஈ) வேகாத கை]**

24. **'வாழ்க்கை' என்னும் சொல்லுக்குரிய விகுதியைக் குறிப்பிடுக.**

அ) வாழ் ஆ) க்
இ) கை ஈ) ஐ **[விடை: இ) கை]**

25. **அளபெடுத்தல் என்பதன் பொருள்**

அ) நீண்டு ஒலித்தல் ஆ) குறுகி ஒலித்தல்
இ) அளவாக ஒலித்தல் ஈ) ஒலித்தல் இல்லை **[விடை: அ) நீண்டு ஒலித்தல்]**

26. **'நசைஇ' என்பதன் பொருள்**

அ) விருப்பம் ஆ) விரும்பி
இ) துன்பம் ஈ) கவனித்து **[விடை: ஆ) விரும்பி]**

## குறுவினா

1. **சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சார்பெழுத்துகள் பத்து வகைப்படும். அவை:

- உயிர்மெய்
- ஆய்தம்
- உயிரளபெடை
- ஒற்றளபெடை
- குற்றியலுகரம்
- குற்றியலிகரம்
- ஐகாரக்குறுக்கம்
- ஔகாரக்குறுக்கம்
- மகரக்குறுக்கம்
- ஆய்தக் குறுக்கம்

2. **குறுக்கங்கள் எத்தனை வகைப்படும்?**

குறுக்கங்கள் நான்கு வகைப்படும். அவை:

- ஐகாரக்குறுக்கம்
- ஔகாரக் குறுக்கம்
- மகரக்குறுக்கம்
- ஆய்தக் குறுக்கம்

3. **அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

அளபெடை இரண்டு வகைப்படும். அவை: உயிரளபெடை, ஒற்றளபெடை.



www.tnpscjob.com

**4. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

உயிரளபெடை மூன்று வகைப்படும்.

அவை: செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை.

**5. உயிரளபெடை என்றால் என்ன? சான்று தருக.**

- செய்யுளில் ஓசை குறையும் போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர் நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும்.
- அளபெடுக்கும் போது அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் பக்கத்தில் வரும்.
- **சான்று:** உழாஅர்.

**6. செய்யுளிசை அளபெடை / இசைநிறை அளபெடை என்றால் என்ன? சான்று தருக.**

- செய்யுளின் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய நெட்டெழுத்துகள் அளபெடுக்கும். (ஈரசை கொண்ட சீர்களில் மட்டும் வரும்)
- **சான்று:** உழாஅர் (உழா/அர்)

**7. செய்யுளிசை அளபெடைக்கு மூன்று சான்று தருக.**

- ஓஒதல் வேண்டும் - மொழி முதல்
- உறாஅர்க்கு உறுநோய் - மொழி இடை
- நல்ல படாஅ பறை - மொழி இறுதி

**8. இன்னிசை அளபெடை என்றால் என்ன? சான்று தருக.**

- செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை எனப்படும்.
- **சான்று:** கெடுப்பதூஉம் (கெடுப்/பதூ/உம்)
  (மூவசை கொண்ட சீர்களில் மட்டும் வரும்)

**9. சொல்லிசை அளபெடை என்றால் என்ன? சான்று தருக.**

- செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச்சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசையளபெடை ஆகும்.
- **சான்று:** வரனசைஇ, உரனசைஇ.

**10. ஒற்றளபெடை என்றால் என்ன? சான்று தருக.**

- செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய சில மெய்யெழுத்துகளும், ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடையாகும்.
- **சான்று:** எஃஃஃ கிலங்கிய, எங்ங்கிறைவன்.

**11. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகள் மற்றும் ஆய்த எழுத்து ஆகியவற்றை எழுதுக.**

- மெய் எழுத்துகள் - ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் (பத்து)
- ஆய்த எழுத்து - ஃ (ஒன்று)
- மொத்த எழுத்துகள் - 11

**12. சொல் என்றால் என்ன?**

ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தருமாயின் அது சொல் எனப்படும். (சொல்லின் வேறுபெயர்கள் - பதம், மொழி, கிளவி)

**13. மொழி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

மொழி மூன்று வகைப்படும்.

அவை: தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி.

இயல் 1

**14. தனிமொழி என்றால் என்ன? சான்று தருக.**

- ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது தனிமொழி எனப்படும்.
- **சான்று:** கண், படி.

**15. தொடர்மொழி என்றால் என்ன? சான்று தருக.**

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும்.
- **சான்று:** கண்ணன் வந்தான்.

**16. பொதுமொழி என்றால் என்ன? சான்று தருக.**

- ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தருவது பொதுமொழி ஆகும்.
- தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமையும்.
- **சான்று:** எட்டு.

  எட்டு - எண்ணைக் குறிக்கிறது. எள் + து - எள்ளை உண்.

**17. தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.**

- ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், பால், காலம் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும்.
- **எ.கா:** ஈதல், வாழ்க்கை.

**18. விகுதி பெற்ற தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.**

- வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும்.
- **சான்று:** நடத்தல். நட - வினையடி, தல் - விகுதி.

**19. எதிர்மறைத் தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.**

- எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர் எனப்படும்.
- **சான்று:** நடவாமை, கொல்லாமை.

**20. தொழிற்பெயர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொழிற்பெயர் இரண்டு வகைப்படும். அவை:

- முதனிலைத் தொழிற்பெயர்
- முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**21. முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.**

- விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத் தொழிற் பெயராகும்.
- **சான்று:** தட்டு, உரை, அடி.

  இச்சொற்கள் முறையே தட்டுதல், உரைத்தல், அடித்தல் என்று பொருள்படும் போது முதனிலைத் தொழிற்பெயர்களாகின்றன.

**22. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.**

- முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்பது விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வருவது. முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.
- **சான்று:** கெடு - கேடு, சுடு - சூடு.

  கேடு, சூடு (கெடு, சுடு என்னும் முதனிலைகள் கேடு, சூடு எனத் திரிந்து வந்துள்ளது)



www.tnpscjob.com

**23. வினையாலணையும் பெயர் என்றால் என்ன? சான்று தருக.**

- வினையைக் குறிக்காமல் வினை செய்தவரைக் குறிக்கும்.
- ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடியும்.
- தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வரும்.
- மூன்று காலங்களிலும் வரும்.
- **சான்று:** வந்தவர்.

**24. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறு.**

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| தொழிலைக் குறிக்கும். | தொழில் செய்யும் கருத்தாவைக் குறிக்கும். |
| காலம் காட்டாது. | காலம் காட்டும். |
| படர்க்கை இடத்தில் மட்டும் வரும். | மூவிடத்திலும் வரும். |
| **எ.கா:** பாடுதல், படித்தல். | **எ.கா:** பாடியவள், படித்தவர். |

## சிறுவினா

**1. மொழியின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**மொழிவகைகள்:**

மூன்று வகைப்படும்.

அவை: தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்பன.

**தனிமொழி:**

- ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது தனிமொழி எனப்படும்.
- **எ.கா**: கண், மரம்.

**தொடர்மொழி:**

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும்.
- **எ.கா:** கண்ணன் வந்தான்.

**பொதுமொழி:**

- ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தருவது பொதுமொழி ஆகும்.
- தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமையும்.
- **சான்று:** எட்டு
  எட்டு – எண்ணைக் குறிக்கிறது. எள் + து – எள்ளை உண்.

**2. சொல்லின் செயல்களைக் குறிப்பிடுக.**

- இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.
- மூவகை இடங்களிலும் வரும்.
- உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.
- வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளங்கும்.



www.tnpscjob.com

## கற்பவை கற்றபின்

பக்கம்: 18

**1. தேன், நூல், பை, மலர், வா - இத் தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.**

**தேன்** - தேன் மருந்துப் பொருளாக பயன்படுகிறது.

**நூல்** - நூல் பல கல்.

**பை** - பை நிறைய பணம் இருந்தது.

**மலர்** - மலர் பறித்து வந்தேன்.

**வா** - விரைந்து வா.

**2. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.**

**காண், சிரி, படி, தடு.**

எ.கா: **காண் - காட்சி, காணுதல், காணல், காணாமை**

சிரி - சிரிப்பு, சிரித்தல், சிரிக்காமை

படி - படிப்பு, படித்தல், படிக்காமை

தடு - தடுப்பு, தடுத்தல், தடுக்காமை

**3. தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.**

**அண்ணன்** : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி)

**தம்பி** : கடைக்கு (தனிமொழி)

**அண்ணன்** : இப்பொழுது என்ன வாங்குகிறாய்? (தொடர்மொழி)

**தம்பி** : பருப்பு வாங்குகிறேன். (தொடர்மொழி)

**அண்ணன்** : எதற்கு? (தனிமொழி)

**தம்பி** : பருப்பு சோறு செய்ய அம்மா வாங்கி வரச் சொன்னார்கள் (தொடர்மொழி)

**அண்ணன்** : இன்று பருப்பு சோறு வேண்டாமென்று அம்மாவிடம் சொல்வோம் (தொடர்மொழி)

**தம்பி** : சரி இன்று அம்மாவைப் பிரியாணி செய்து தரச்சொல்வோம். (தொடர்மொழி)

**4. மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலை மீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்.**

**இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.**

- **அழைக்கும்** - அழைத்தல்
- **ஏறுவேன்** - ஏறுதல்
- **அமர்வேன்** - அமர்தல்
- **பார்ப்பேன்** - பார்த்தல்
- **எய்தும்** - எய்தல்

**5. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, கோறல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.**

**கட்டு** : முதனிலைத் தொழிற்பெயர்

**சொட்டு** : முதனிலைத் தொழிற்பெயர்

**வழிபாடு** : விகுதி பெற்ற தொழிற்பெயர்

**கேடு** : முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**கோறல்** : விகுதி பெற்ற தொழிற்பெயர்



www.tnpscjob.com

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 21

**படித்துச் சுவைக்க.**

**பாடலில், மரம் என்னும் சொல், இடத்திற்கேற்ப பொருள் தருவதாய் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளது. பொருள்களைப் பொருத்திப் படித்து சுவைக்க.**

**பாடலின் பொருள்:**



"**அரசன் குதிரையில்** ஏறி
**வேலைத்** தோளில் வைத்து
**அரசன் புலியைக்** கண்டு
**வேலினால் புலியைக்** குத்தி
**காட்டு வழியே சென்று**
வளமனைக் கேட்கும் போது
**அரசனைக்** கண்ட மாதர்
**ஆலமரமுடன் ஆரத்தி** எடுத்தார்."

**மொழிபெயர்ப்பு:**

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. – **Nelson Mandela**

   நீங்கள் ஒரு மனிதனிடம் ஏதாவது ஒரு மொழியில் பேசினால் அதை அவன் புரிந்து கொண்டு அவன் மூளைக்குச் செல்கிறது. ஆனால் அவனுடைய மொழியில் பேசினால் அது அவன் நெஞ்சத்தைத் தொடும். – **நெல்சன் மண்டேலா**

2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. – **Rita Mae Brown**

   மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி. அதுவே மக்கள் எங்கிருந்து வந்தார்கள் மற்றும் எங்குப் போகிறார்கள் என்பதைச் சொல்லும். – **ரிட்டா மே பிரவுண்**

**சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**

**"தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை**
**தேரும் சிலப்பதி காறமதை**
**ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்**
**ஓதி யுனர்ந்தின் புருவோமே"**

– *கவிமணி தேசிக விநாயகனார்.*

**திருத்தம்:**

"தே<u>னி</u>லே ஊ<u>றி</u>ய செந்தமிழின் – சுவை
தே<u>று</u>ம் சிலப்பதி கா<u>ர</u>மதை
ஊனிலே எம்முயிர் உ<u>**ள்ளள**</u>வும் – நிதம்
ஓதி யு<u>**ண**</u>ர்ந்தின் பு<u>று</u>வோமே"

**கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

**(குவியல், குலை, மந்தை, கட்டு)**

- கல் – குவியல் (கற்குவியல்)
- பழம் – குலை (பழக்குலை)
- புல் – கட்டு (புற்கட்டு)
- ஆடு – மந்தை (ஆட்டுமந்தை)



www.tnpscjob.com

**வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

1. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.**

   **எ.கா:** கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.

2. **ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.**

   ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

3. **நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.**

   நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.

4. **பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.**

   பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.

**தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தி தொடர்களை மீள எழுதுக.**

1. **உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்.**

   **புவியில்** வாழும் **மானுடர்கள்** சிலர் **பழ**மிருக்கக் காய் **உண்**பதைப்போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி **துன்பப்**படுகின்றனர்.

2. **வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றான்.**

   வள்ளல் குமணன் **துன்பத்தால்** வாடிவந்த **அறிஞர்களுக்குத்** தனது தலையை **ஈந்து** மங்காப் **பெருமை** பெற்றான்.

3. **நளனும் அவனது துணைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழைமுகில் கண்ட மஞ்ஞை போலக் களி கொண்டனர்.**

   நளனும் அவனது மனைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை**மேகம்** கண்ட **மயிலைப்** போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

4. **சோலையிற் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.**

   **நந்தவனத்தில்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடி **தேனை** உண்டன.

5. **பசுப்போல் சாந்தமும் புலிபோல் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.**

   **ஆ**ப்போல் **அமைதியும் வேங்கை** போல் **வீரமும் களிறு** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**கட்டுரை எழுதுக.**

குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

www.tnpscjob.com

**இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**தலைப்பு : சான்றோர் வளர்த்த தமிழ்**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை<br>சங்கத்தமிழ்<br>அறத்தமிழ்<br>காப்பியத்தமிழ்<br>சிற்றிலக்கியம்<br>சமயத்தமிழ்<br>முடிவுரை |

**முன்னுரை:**

> **"சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே -அதைத்**
> **தொழுது படித்திடடி பாப்பா"**
> *-பாரதியார்*

உலகில் மனித இனம் என்று தோன்றியதோ, அன்றே தமிழ் மொழியும் தோன்றியது. அன்று முதல் இன்று வரை தமிழ்மொழி இளமையாகவே இருந்துவருகின்றது. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வாழ்ந்த சான்றோர்களால் தமிழ் சிறப்புற்று நிற்கின்றது.

**சங்கத்தமிழ்:**

'தமிழ்' என்ற சொல் தொல்காப்பியப் பாயிரத்தில் இடம்பெறுகின்றது. கிபி. 2 ஆம் நூற்றாண்டிற்கு முன் தோன்றிய இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் ஆகும். அவையே சங்கத்தமிழ் தரும் களஞ்சியம் ஆகும். கபிலர், பரணர், ஔவையார், நக்கீரர், நல்லந்துவனார் முதலிய எண்ணற்றத் தமிழ்ச் சான்றோர்களால் பாட்டும் தொகையும் உருவாக்கப்பட்டு சங்கத்தமிழ் வளர்க்கப்பட்டது.

**அறத்தமிழ்:**

சங்ககாலத்திற்குப் பின் தோன்றிய காலத்தில் பொய்யும் குற்றமும் தோன்ற ஆரம்பித்தது. அதனைப் போக்க திருவள்ளுவர், சமண முனிவர்கள், விளம்பிநாகனார், கபிலர், கணிமேதாவியார் ஆகிய பல சான்றோர் பெருமக்கள் அறநூல்களைப் படைத்து, அறத்தமிழை வளர்த்தனர்.

**காப்பியத்தமிழ்:**

ஐம்பெருங்காப்பியங்களும், ஐஞ்சிறுகாப்பியங்களும் காப்பியத் தமிழை வளர்த்தன. இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்தனார், திருத்தக்கத்தேவர் ஆகிய சான்றோர்கள் காப்பியத் தமிழைத் தழைக்கச் செய்தனர்.

**சிற்றிலக்கியம்:**

(பரணி, சதகம், பிள்ளைத்தமிழ்)

சிற்றிலக்கியங்கள் 96 வகைப்படும். அவை வழி சிற்றிலக்கிய வகைகள் பெருகி சிற்றிலக்கியத் தமிழை வளர்த்தனர். ஒருவரைக் குழந்தையாகப் பாவித்து, 10 பருவங்களில் வளர்ச்சி நிலையைப் பாடுவது பிள்ளைத்தமிழ் ஆகும். ஒட்டக்கூத்தர், குமரகுருபரர் ஆகியோர் பிள்ளைத்தமிழ் பாடி வளர்த்தனர். சதகம் (100) பாடல்களைக் கொண்டது சதகம். ஆத்மநாத தேசிகர், கார்மேகக் கவிஞர் ஆகியோர் சதகம் பாடினார். ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார் பரணி இலக்கியத்தை வளர்த்தனர்.

**சமயத்தமிழ்:**

சைவம், வைணவம், கிறித்தவம், இஸ்லாம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களும் தமிழ் வளர்க்கும் பணியில் ஈடுபட்டு சமயத்தமிழை வளர்த்தனர். திருநாவுக்கரசர், வீரமாமுனிவர், உமறுப்புலவர் ஆகியோர் சமயத்தமிழை வளர்த்தனர். இதற்கு பன்னிரு திருமுறைகள், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், சீறாப்புராணம், தேம்பாவணி சான்றாகும்.



www.tnpscjob.com

**முடிவுரை:**

காலந்தோறும் தமிழ், தன்னை வளர்ப்பவர்களால் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வளர்ந்தும் சிறந்தும் வருகின்றது என்பதை இலக்கிய வரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன.

**''தமிழுயரத் தமிழன் உயர்வான்**
**தமிழயரத் தமிழன் அயர்வான்''**
*-பாவாணர்*

**நயம் பாராட்டுக.**

**தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே**
**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே**
**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே**
**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே**
**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே**
**மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே**
**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே**
**தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே**

*– கா. நமச்சிவாயர்*

**திரண்ட கருத்து:**

**'வாழைக்கு அழகு குருத்து**
**செய்யுளுக்கு அழகு திரண்ட கருத்து'**

“தேனினும் இனிமையான செம்மை பெற்ற மொழி தமிழ் மொழி. தென்னாட்டில் சிறந்து விளங்குகின்ற மொழி தமிழ்மொழி. ஒளி வீசி அறிவும், செறிவும் நுட்பமும் கொண்ட மொழி தமிழ்மொழி உணர்வோடு உணர்வான மொழி, வானினும் உயர்ந்த வளம்மிக்க மொழி தமிழ். தழைத்து ஓங்குவாய் குளிர்ச்சி தங்கிய தமிழ் மொழியே'' என தமிழ்மொழியைச் சிறப்பித்துக் கூறியுள்ளார் க. நமச்சிவாயர்.

**தொடை நயம்:**

**'தொடையற்ற பாட்டு**
**நடையற்றுப் போகும்'**

செய்யுளானது எதுகை, மோனை, இயைபு, முரண் முதலியவற்றால் தொகுக்கப்படுவது தொடை எனப்படும். இப்பாடலில் தொடை நயங்கள் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன.

**'மோனை நயம்:**

**'மோனையற்ற பாட்டு**
**சேனையற்ற நாடு'**

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடை.

ஒண்டமிழ், ஒளிர்தமிழ், ஒளிர்வுறும்,

தனித்தமிழ், தண்டமிழ் ஆகிய மோனைச் சொற்கள் பாடலில் சிறப்பாக அமைந்துள்ளது.

**எதுகை நயம்:**

**'வீரத்துக்கு அழகு வேங்கை**
**செய்யுளுக்கு அழகு எதுகை'**

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகைத் தொடை.

தேனினும், ஊனினும், வானினும் ஆகிய எதுகைச் சொற்கள் பாடலில் சிறப்பாக அமைந்துள்ளது.



www.tnpscjob.com

**இயைபு நயம்:**

**'பாடலின் இயைபு
படிப்போர்க்கு வியப்பு'**

செய்யுளில் கடைசி எழுத்தோ சீரோ அசையோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும். 'மொழியே' என்னும் சொல் அடிதோறும் வந்து இயைபாக அமைந்துள்ளது. அடிதோறும் மூன்றாம் சீரில் செந்தமிழ், ஒண்டமிழ், ஒளிர்தமிழ், வண்டமிழ், தனித்தமிழ், தண்டமிழ் என்னும் சொற்கள் வந்து பாடலுக்கு இயைபாக அமைந்துள்ளன.

**அணி நயம்:**

**'கோவிலுக்கு அழகு மணி
செய்யுளுக்கு அழகு அணி'**

இப்பாடலில் 'மொழி' என்ற சொல் ஒரே பொருளில் பலமுறை வந்து சொற்பொருட் பின்வரு நிலையணியைக் கொண்டுள்ளது.

**பாவகை :** எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

## மொழியோடு விளையாடு

*பக்கம்: 23*

**சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

**தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ.**

**எ.கா:** பூமணி

**புதிய சொற்கள்:**

| | | | |
|---|---|---|---|
| பொன்விலங்கு<br>மணிமேகலை<br>வான்மழை<br>பூமழை | பொன்மணி<br>பொன் விளக்கு<br>செய்தேன் | செய்வான்<br>தேன்பூ<br>விளக்குவான் | விண்மணி<br>தேன்மழை<br>பூவிலங்கு |

**குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.**

**குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்**

**எ.கா:** குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?

**சுவைக்காத இளநீர்** : மன்னன் சுவைக்காத இளநீர் உண்டோ?

**காப்பியச் சுவை** : கம்பர் காலத்தில் காப்பியச் சுவை உச்சநிலையில் இருந்ததோ?

**மனிதகுல மேன்மை** : இந்நூற்றாண்டில் மனிதகுல மேன்மை சிறப்புற்று விளங்குகிறதோ?

**விடுமுறைநாள்** : தேரோட்டம் அன்று விடுமுறை நாள் என அறிவிக்கப்படுமா?

**எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.**

| செய்யுள் அடி | எண்ணுப் பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | சஉ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க000 |

### அகராதியில் காண்க.

**அடவி, அவல், சுவல், செறு, பழனம், புறவு.**

**அடவி** - காடு, திரள், தொகுதி, சோலை

**அவல்** - பள்ளம், விளைநிலம், குளம், நெல் இடியல்

**சுவல்** - பிடரி, முதுகு, மேடு, தொல்லை

**செறு** - வயல், குளம், பாத்தி, கோபம்

**பழனம்** - வயல், மருதநிலம், பொய்கை

**புறவு** - புறா, சிறுகாடு, முல்லைக்கொடி, பயிரிடும் நிலம்

### காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



குரங்கு மரத்திற்கு மரம் தாவுவது போல
நாள்தோறும் எதை எதையோ எண்ணி
உனது பெருமைகளை இழக்கிறாய்.
காரணம் உன் அறிவுப்பூட்டு
இன்னும் திறக்கப்படாததே!
உன் அறிவுப்பூட்டைத் திற
வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான
செயல்களில் ஈடுபடு
உன் உடலும் உள்ளமும் செழிக்கும்
வாழ்வின் உயர்விடத்தில் இருப்பாய் நீ!

## நிற்க அதற்குத் தக

பக்கம்: 24

| இன்சொல் வழி | தீயசொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

**இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?**

நாங்கள் இன்சொல் வழியையே பின்பற்றுவோம். எங்கள் நண்பருக்கும் அவ்வழியையே காட்டி அவர்களையும் அவ்வழியின் படி நடக்கச் செய்வோம்.

### கலைச்சொல் அறிவோம்

- Vowel - உயிரெழுத்து
- Consonant - மெய்யெழுத்து
- Homograph - ஒப்பெழுத்து
- Monolingual - ஒரு மொழி
- Conversation - உரையாடல்
- Discussion - கலந்துரையாடல்



www.tnpscjob.com

இயல் இயற்கை 2

உரைநடை உலகம்

# கேட்கிறதா என் குரல்!

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. செய்தி 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
   செய்தி 2 : காற்றாலை மின்உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
   செய்தி 3 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.
   அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
   இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி
   [விடை: ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி]

2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
   i) கொண்டல் - 1. மேற்கு
   ii) கோடை - 2. தெற்கு
   iii) வாடை - 3. கிழக்கு
   iv) தென்றல் - 4. வடக்கு
   அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2
   இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2 [விடை: ஆ) 3, 1, 4, 2]

### குறுவினா

1. 'நமக்கு உயிர் காற்று
   காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
   வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்'

   -இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.
   - உயிர்களின் சுவாசம் காற்று!
     காற்றின் சுவாசம் மரம்!
   - தூய்மையை நேசிப்போம்!
     தூய காற்றைச் சுவாசிப்போம்!

### சிறுவினா

1. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்......... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால் ........... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

இயல் 2

www.tnpscjob.com

- நானே! நீர்
- உலகில் முக்கால் பாகம் நான்
- நான் இல்லை என்றால் உலகம் இல்லை
- ஆதவனின் அணைப்பில் கருவுற்று
  மேகமாய் வளர்ந்து
  மழையாய் பிறப்பேன் நான்
- விண்ணிலிருந்து நான் விழுந்தால்
- என்னைக் கண்டு உலகம் சிரிக்கும்
- மலையில் விழுந்து
  நதியில் ஓடி
  கடலில் சங்கமிக்கும்
  சரித்திர நாயகன் நான்.

**2. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.**

மின் விசிறிக் காற்று : நண்பா! வா எங்கெல்லாம் சுற்றித் திரிந்து வருகிறாய்? என்னைப் போல் நிலையாக ஓரிடத்திலிருந்து வீசக் கூடாதா.

சோலைக்காற்று : நீ ஓரிடத்தில் இருந்து நிலையாக வீசினாலும் உன்னை இயக்க ஒருவர் தேவை. அது மட்டுமல்லாமல் நீ கொடுக்கும் வெப்பக்காற்றை மனிதர்கள் வேறு வழியின்றி பயன்படுத்துகின்றனர். மின்சாரம் தடைப் பட்டாலும் மனிதர்கள் உன்னை இயக்க முடியாது.

மின் விசிறிக் காற்று : மனிதர்கள் உன்னை விரும்புகிறார்களா?

சோலைக்காற்று : ஆம், நான் மக்களுக்குக் குளிர்ந்த காற்றைக் கொடுக்கிறேன். என்னிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்றனர். காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடத்திலும் தமிழகம் முதல் இடத்திலும் உள்ளது. புதுப்பிக்கக் கூடிய வளமான என்னைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும் போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிம வளங்கள் பாதுகாக்கப்படுகிறது.

மின் விசிறிக் காற்று : இத்தனை சிறப்புகள் கொண்ட உன்னை வைத்து ஒரு புது மொழியை உலகிற்குக் கூறப்போகிறேன்.

சோலைக்காற்று : அப்படியா! அப்புது மொழி யாது?

மின் விசிறிக் காற்று : “காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக் கொள்”.

## நெடுவினா

**1. மலர்ந்தும் மலராத பாதிமலர் போல**
**வளரும் விழி வண்ணமே - வந்து**
**விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக**
**விளைந்த கலை அன்னமே**
**நதியில் விளையாடி கொடியில் தலைசீவி**
**நடந்த இளந்தென்றலே - வளர்**
**பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு**
**பொலிந்த தமிழ் மன்றமே**

**- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.**



www.tnpscjob.com

**காற்றைப் பாராட்டல் :**

மலர்ந்த மலராத பாதி மலரையும், விடிந்தும் விடியாத காலைப் பொழுதையும் விரும்பாதார் எவருமில்லை. அனைவரும் காற்றாகிய உன்னையும் நீ இளந்தென்றலாக வரும் போது விரும்புவர் எனக் குறிப்பிட்டுள்ளார் கண்ணதாசன். காற்றானது நதிகளை வருடியும், செடி கொடிகளை வருடியும் இளந்தென்றலாக வருகிறது. காற்றைப் போலவே தமிழும் அனைவராலும் விரும்பத்தக்கதாய் இருக்கிறது. தெற்கிலுள்ள பொதிகை மலையில் தோன்றிய தமிழுக்கு மதுரையிலே சங்கம் வைத்து அழகிய தமிழ் வளர்த்ததாகவும் கருத்துக் கொள்ளலாம்.

**கவி நயம்:**

கவிஞர் கண்ணதாசனின் பாடலில் எதுகை, மோனை, இயைபு இயைந்தோடும் வகையிலும் கற்பனை காட்சியளிக்கும் வகையிலும், அணி அழகுற வகையிலும், சந்த தாளமிட்டு சொந்தம் கொண்டாடும் தன் கவி நயத்தைக் காட்சிபடுத்தியுள்ளார்.

**சான்று:**

| | | |
|---|---|---|
| மோனை | : | **வ**ளரும் **வ**ண்ணமே |
| எதுகை | : | ந**தி**யில் பொ**தி**கை |
| முரண் | : | மலர்ந்தும் × மலராத |
| | | விடிந்தும் × விடியாத |
| இயைபு | : | வண்ண**மே** அன்ன**மே** |
| அணி | : | பாதி மலர் **போல** வளரும் விழி வண்ணமே (உவமையணி வந்துள்ளது) |

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **தென்மேற்குப் பருவக்காற்று இந்தியாவிற்கு எத்தனை விழுக்காடு மழைப்பொழிவினைத் தருகிறது?**
அ) ஐம்பது ஆ) அறுபது
இ) எழுபது ஈ) எண்பது **[விடை: இ) எழுபது]**

2. **தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு எப்பாடல்களைத் தாய்மொழியில் எழுதி வைத்துப் பாடுகிறார்கள்?**
அ) திருமந்திரம், திருவாசகம் ஆ) திருக்குறள், திருமந்திரம்
இ) திருவருட்பா, திருப்பாவை ஈ) திருவெம்பாவை, திருப்பாவை
**[விடை: ஈ) திருவெம்பாவை, திருப்பாவை]**

3. **பொருத்துக.**
1. மூச்சு - அ) நீர்
2. தாகம் - ஆ) நிலம்
3. உறைவது - இ) காற்று
4. ஒளி - ஈ) கதிரவன்
அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.இ 2.ஆ 3.அ 4.ஈ
இ) 1.ஈ 2.இ 3.ஆ 4.அ ஈ) 1.இ 2.அ 3.ஆ 4.ஈ **[விடை: ஈ) 1.இ 2.அ 3.ஆ 4.ஈ]**

4. **உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்றவர்?**
அ) திருமூலர் ஆ) அகத்தியர்
இ) வள்ளுவர் ஈ) தொல்காப்பியர் **[விடை: ஈ) தொல்காப்பியர்]**

5. "வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம்" என்ற பாடலடியைப் பாடியவர்

அ) திருமூலர் ஆ) ஔவையார்
இ) தொல்காப்பியர் ஈ) கம்பர் [விடை: ஆ) ஔவையார்]

6. பொருத்துக.

1. மேற்கு - அ) வாடை
2. வடக்கு - ஆ) குடக்கு
3. தெற்கு - இ) குணக்கு
4. கிழக்கு - ஈ) தென்றல்

அ) 1.ஈ 2.இ 3.அ 4.ஆ ஆ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.இ 2.ஈ 3.ஆ 4.அ [விடை: ஆ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]

7. "முந்நீர்" என்பதன் பொருள்

அ) கடல் ஆ) கப்பல்
இ) பயணம் ஈ) நீர் [விடை: அ) கடல்]

8. பொருந்தாத ஒன்றினைத் தேர்வு செய்க.

அ) வளி ஆ) தென்றல்
இ) புயல் ஈ) கடல் [விடை: ஈ) கடல்]

9. "வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்" எனக் கூறும் நூல் எது?

அ) தென்றல் விடு தூது ஆ) சிலப்பதிகாரம்
இ) மணிமேகலை ஈ) புறநானூறு [விடை: ஆ) சிலப்பதிகாரம்]

10. பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது என்ற நூலின் ஆசிரியர்?

அ) இளங்கோவடிகள்
ஆ) ஔவையார்
இ) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்
ஈ) திருமூலர் [விடை: இ) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்]

11. 'வளிதொழில் ஆண்ட உரவோன்' - எனக் குறிப்பிடப்படும் மன்னன்

அ) கரிகாலன் ஆ) இராசராசன்
இ) இராசேந்திரன் ஈ) பாழி [விடை: அ) கரிகாலன்]

12. கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடிய சங்ககாலப் பெண்புலவர்

அ) ஔவையார் ஆ) ஆதிமந்தியார்
இ) அள்ளூர் நன்முல்லையார் ஈ) வெண்ணிக் குயத்தியார்
[விடை: ஈ) வெண்ணிக் குயத்தியார்]

13. முசிறி துறைமுகத்துக்கு விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்த கிரேக்க மாலுமி

அ) ஹிப்பாலஸ் ஆ) யுவான்சுவாங்க்
இ) பிளைனி ஈ) தாலமி [விடை: அ) ஹிப்பாலஸ்]

14. ஜூன் முதல் செப்டம்பர் வரை வீசும் பருவக்காற்று

அ) வடகிழக்குப் பருவக் காற்று ஆ) தென்மேற்குப் பருவக் காற்று
இ) வடமேற்குப் பருவக் காற்று ஈ) தென்கிழக்குப் பருவக் காற்று
[விடை: ஆ) தென்மேற்குப் பருவக் காற்று]



www.tnpscjob.com

**15. அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசும் பருவக்காற்று**

அ) வடகிழக்குப் பருவக் காற்று ஆ) தென்மேற்குப் பருவக் காற்று
இ) வடமேற்குப் பருவக் காற்று ஈ) தென்கிழக்குப் பருவக் காற்று

**[விடை: அ) வடகிழக்குப் பருவக் காற்று]**

**16. உலகக் காற்றாலை உற்பத்தியில் ஐந்தாம் இடம் பெற்றுள்ள நாடு**

அ) இந்தியா ஆ) அமெரிக்கா
இ) சீனா ஈ) ஜப்பான் **[விடை: அ) இந்தியா]**

**17. இந்தியாவில் காற்றாலை மின் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம்**

அ) குஜராத் ஆ) கேரளா
இ) தமிழ்நாடு ஈ) ஆந்திரா **[விடை: இ) தமிழ்நாடு]**

**18. உலகிலேயே அதிக அளவு மாசுபடுத்தும் நாடுகளில் இரண்டாமிடம் பெற்றுள்ள நாடு**

அ) சீனா ஆ) அரேபியா
இ) இந்தியா ஈ) ஜப்பான் **[விடை: இ) இந்தியா]**

**19. இந்தியாவில் மிகுந்த உயிரிழப்பைத் தரும் காரணிகளில் ஐந்தாமிடம் பெறுவது**

அ) காற்று மாசு ஆ) நீர் மாசு
இ) நில மாசு ஈ) ஒலி மாசு **[விடை: அ) காற்று மாசு]**

**20. உலகக் காற்று நாள்**

அ) ஜூன் 15 ஆ) ஜூலை 15
இ) ஜனவரி 15 ஈ) டிசம்பர் 10 **[விடை: அ) ஜூன் 15]**

**21. 'யுனிசெப்' என்பது**

அ) பருவநிலை மாறுபாடு ஆ) சிறுவர் நிதியம்
இ) உலக சுகாதார நிறுவனம் ஈ) உலக வங்கி நிறுவனம் **[விடை: ஆ) சிறுவர் நிதியம்]**

**22. "பூங்காற்றே! இத்தனை நாள் உனைப் பாடாதிருந்துவிட்டேன்" என்று வருந்திய கவிஞர்**

அ) தனிநாயக அடிகள் ஆ) தேவகோட்டை வா.மூர்த்தி
இ) இளங்குமரனார் ஈ) பாரதியார் **[விடை: ஆ) தேவகோட்டை வா.மூர்த்தி]**

**23. உயிரின வாழ்வின் அடிப்படை**

அ) இயற்கை ஆ) செயற்கை
இ) மனிதன் ஈ) மரங்கள் **[விடை: அ) இயற்கை]**

**24. தொல்காப்பியர், உலகம் என்பது எதனால் ஆனது என்கிறார்?**

அ) கடவுளால் ஆ) மனிதனால்
இ) ஐம்பெரும் பூதங்களால் ஈ) இன்பதுன்பங்களால் **[விடை: இ) ஐம்பெரும் பூதங்களால்]**

**25. மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியவர் யார்? கூறப்பட்ட நூல் எது?**

அ) மாணிக்கவாசகர், திருவாசகம் ஆ) திருமூலர், திருமந்திரம்
இ) திருநாவுக்கரசர், தேவாரம் ஈ) ஔவையார், ஆத்திச்சூடி

**[விடை: ஆ) திருமூலர், திருமந்திரம்]**

**26. 'வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்' - என்று உரைத்தவர் யார்?**

அ) ஔவையார்
ஆ) இளங்கோவடிகள்

இயல் 2

இ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்
ஈ) குமரகுருபரர் [விடை: ஆ) இளங்கோவடிகள்]

**27. தென்றல் காற்று என அழைக்கப்படக் காரணம்**
அ) மரம், செடி, கொடி, ஆறு, மலை தாண்டி வருவது
ஆ) வேகமாக வீசுவது
இ) சுழன்று வீசுவது
ஈ) மணற்பகுதியிலிருந்து வீசுவது [விடை: அ) மரம், செடி, கொடி, ஆறு, மலை தாண்டி வருவது]

**28. 'நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற் செந்தமிழின் பின்னுதித்த தென்றலே' - என்று பெண்ணொருத்தி, தூது செல்ல காற்றினை அழைத்ததாகப் பாடியவர்**
அ) ஔவையார்
ஆ) இளங்கோவடிகள்
இ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்
ஈ) குமரகுருபரர் [விடை: இ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்]

**29. "நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே" - என்ற பாடலை இயற்றியவர்**
அ) வாலி ஆ) கண்ணதாசன்
இ) வைரமுத்து ஈ) மீரா [விடை: ஆ) கண்ணதாசன்]

**30. நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!**
**களிஇயல் யானைக் கரிகால் வளவ!" - என்று பழங்காலத்தில் கடல் கடந்த பயணங்கள் அனைத்தும் காற்றினால் இயக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களால்தான் நிகழ்ந்தன என்று குறிப்பிடும் நூல்**
அ) புறநானூறு ஆ) அகநானூறு
இ) பரிபாடல் ஈ) கலித்தொகை [விடை: அ) புறநானூறு]

**31. ஹிப்பாலஸ் என்பவர்**
அ) கிரேக்க மாலுமி ஆ) போர்ச்சுக்கீசிய மாலுமி
இ) பிரெஞ்சு மருத்துவர் ஈ) ஆங்கில ஆளுநர் [விடை: அ) கிரேக்க மாலுமி]

**32. பருவக் காற்றின் உதவியினால் முசிறித் துறைமுகத்திற்கு நேரே நடுக்கடல் வழியாக விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தவர்**
அ) வாஸ்கோடகாமா ஆ) ஹிப்பாலஸ்
இ) பார்த்தலோமியோ டயஸ் ஈ) டெமாஸ்தனிஸ் [விடை: ஆ) ஹிப்பாலஸ்]

**33. ஹிப்பாலஸ் பருவக்காற்று என்று பெயரிட்டவர்கள்**
அ) யவனர் ஆ) சீனர்
இ) ஆங்கிலேயர் ஈ) அமெரிக்கர் [விடை: அ) யவனர்]

**34. ஹிப்பாலஸ் பருவக்காற்று கண்டுபிடிக்கப்பட்ட நூற்றாண்டு**
அ) கி.பி. முதல் நூற்றாண்டு ஆ) கி.மு. முதல் நூற்றாண்டு
இ) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு ஈ) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு
[விடை: அ) கி.பி. முதல் நூற்றாண்டு]



www.tnpscjob.com

35. **வெண்ணிக்குயத்தியார் என்பவர்**

அ) சங்ககாலப் பெண் புலவர் ஆ) காப்பிய நாயகி
இ) பாண்டிமாதேவி ஈ) இடைக்காலப் பெண் புலவர்

**[விடை: அ) சங்ககாலப் பெண் புலவர்]**

36. **"களிஇயல் யானைக் கரிகால் வளவ!" என்று பாடியவர்**

அ) காக்கைப் பாடினியார் ஆ) வெண்ணிக்குயத்தியார்
இ) வெள்ளிவீதியார் ஈ) நப்பசலையார் **[விடை: ஆ) வெண்ணிக்குயத்தியார்]**

37. **வெண்ணிக்குயத்தியார் கரிகால் வளவனைப் புகழ்ந்து பாடும் பாடலில் 'வளி' எனக் குறிப்பிடப்படுவது**

அ) வலிமை ஆ) காற்று
இ) விரைவு ஈ) வறுமை **[விடை: ஆ) காற்று]**

38. **பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்திய கிரேக்க அறிஞர்**

அ) டெமாஸ்தனிஸ் ஆ) ஹிப்பாலஸ்
இ) பெர்னாட்ஷா ஈ) சாக்ரடீஸ் **[விடை: ஆ) ஹிப்பாலஸ்]**

39. **ஹிப்பாலஸ் பருவக்காற்றின் பயனைக் கண்டறியும் முன்னரே காற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி கடல் வணிகத்தில் வெற்றி கண்டவர்கள்**

அ) வட இந்தியர்கள் ஆ) ஆப்பிரிக்கர்கள்
இ) தமிழர்கள் ஈ) ஐரோப்பியர்கள் **[விடை: இ) தமிழர்கள்]**

40. **இந்தியாவின் முதுகெலும்பு**

அ) நெசவு ஆ) வேளாண்மை
இ) கட்டிடத்தொழில் ஈ) பேரளவு ஊற்பத்தி **[விடை: ஆ) வேளாண்மை]**

41. **காற்று தாழ்வு மண்டலமாய்த் தவழ்ந்து புயலாய் மாறும் காலம்**

அ) தென்மேற்குப் பருவக்காலம் ஆ) தென்கிழக்குப் பருவக்காலம்
இ) வடமேற்குப் பருவக்காலம் ஈ) வடகிழக்குப் பருவக்காலம்

**[விடை: ஈ) வடகிழக்குப் பருவக்காலம்]**

42. **'வளிமிகின் வலி இல்லை' என்று பாடியவர் யார்? நூல் எது?**

அ) புறநானூறு, ஐயூர் முடவனார் ஆ) ஆத்திச்சூடி, ஔவையார்
இ) கலித்தொகை, நல்லந்துவனார் ஈ) புறநானூறு, இளநாகனார்

**[விடை: அ) புறநானூறு, ஐயூர் முடவனார்]**

43. **கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று கூறும் நூல் எது? கூறியவர் யார்?**

அ) புறநானூறு, ஐயூர் முடவனார் ஆ) ஆத்திச்சூடி, ஔவையார்
இ) கலித்தொகை, நல்லந்துவனார் ஈ) புறநானூறு, மதுரை இளநாகனார்

**[விடை: ஈ) புறநானூறு, மதுரை இளநாகனார்]**

44. **புறஊதாக் கதிர்களைத் தடுக்கும் அரண்**

அ) ஓசோன் படலம் ஆ) எரிகற்கள்
இ) விடிவெள்ளி ஈ) காடு **[விடை: அ) ஓசோன் படலம்]**

45. **குளிர்பதனப்பெட்டி வெளியிடும் நச்சுக்காற்று**

அ) கார்பன்-டை-ஆக்சைடு ஆ) குளோரோ புளோரோ கார்பன்
இ) ஆக்சிஜன் ஈ) ஹைட்ரோ கார்பன்

**[விடை: ஆ) குளோரோ புளோரோ கார்பன்]**

இயல் 2

46. குளோரோ புளோரோ கார்பன் வாயிலாக உருவாகும் பாதிப்புகளைக் குறைக்கும் விதமாகப் பயன்படுத்தப்படும் குளிர்பதனி __________.
அ) ஹைட்ரோ கார்பன் ஆ) கார்பன் மோனாக்சைடு
இ) நைட்ரஜன் ஈ) ஹைட்ரஜன் [விடை: அ) ஹைட்ரோ கார்பன்]

47. கந்தக டை ஆக்சைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு ஆகியவை மழை பெய்யும் போது நீரில் கரைந்து விடுவதால் பெய்வது __________.
அ) அமில மழை ஆ) கல் மழை
இ) கன மழை ஈ) மிதமான மழை [விடை: அ) அமில மழை]

48. அமில மழையால் துன்பத்திற்கு உள்ளாகுபவை
i) மண் ii) நீர்
iii) கட்டடங்கள் iv) காடுகள்
v) நீர்வாழ் உயிரினங்கள்
அ) i, ii - சரி ஆ) iii, iv - சரி
இ) iv, v - சரி ஈ) ஐந்தும் சரி [விடை: ஈ) ஐந்தும் சரி]

49. குளோரோ புளோரோ கார்பனின் ஒரு மூலக்கூறு, ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்து விடும்.
அ) ஓராயிரம் ஆ) ஈராயிரம்
இ) ஒரு இலட்சம் ஈ) ஒரு கோடி [விடை: இ) ஒரு இலட்சம்]

50. ஒரு மணித்துளிக்கு 12 முதல் 18 முறை மூச்சுக்காற்றாய் நாம் வெளியிடுவது
அ) ஆக்சிஜன் ஆ) நைட்ரஜன்
இ) கார்பன்-டை-ஆக்சைடு ஈ) ஹைட்ரஜன் [விடை: இ) கார்பன்-டை-ஆக்சைடு]

51. மரங்கள் நம் நுரையீரலுக்குத் தேவையான எதைத் தருகிறது?
அ) உயிர் வளி (ஆக்சிஜன்) ஆ) கார்பன்-டை-ஆக்சைடு
இ) நைட்ரஜன் ஈ) ஹைட்ரஜன் [விடை: அ) உயிர் வளி (ஆக்சிஜன்)]

52. தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் திருவெம்பாவை, திருப்பாவை பாடல்களைத் தாய்மொழியில் எழுதி வைத்துப் பாடுகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளவர்
அ) மறைமலையடிகள் ஆ) தனிநாயக அடிகள்
இ) ஞானியாரடிகள் ஈ) அமுதன் அடிகள் [விடை: ஆ) தனிநாயக அடிகள்]

53. இயற்கையின் கூறுகளில் எதின் பங்கு கூடுதலானது?
அ) நிலத்தின் ஆ) நீரின்
இ) நெருப்பின் ஈ) காற்றின் [விடை: ஈ) காற்றின்]

54. கேட்கிறதா என் குரல் - என்னும் பாடப்பகுதி யாருடைய குரலாக எதிரொலிக்கிறது?
அ) நிலம் ஆ) நீர்
இ) காற்று ஈ) வானம் [விடை: இ) காற்று]

55. தாஜ்மகால் கட்டப்பட்ட நூற்றாண்டு
அ) கி.பி. 16 ஆ) கி.பி. 17
இ) கி.பி. 15 ஈ) கி.பி. 18 [விடை: ஆ) கி.பி. 17]

## குறுவினா

1. மூச்சுப்பயிற்சி குறித்துத் திருமூலர் கூறிய செய்தி யாது?
மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியுள்ளார்.

இயல் 2

www.tnpscjob.com

**2. காற்றைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை?**

காற்று, வளி, தென்றல், புயல், சூறாவளி.

**3. பருவநிலை, சூழல், வீசும் வேகம் ஆகியவற்றிற்கேற்ப காற்றிற்கு வழங்கப்படும் பல்வேறு பெயர்களைக் கூறு.**

தென்றல் காற்று, பூங்காற்று, கடல் காற்று, பனிக்காற்று, வாடைக்காற்று, மேல் காற்று, கீழ்க்காற்று, மென் காற்று, இளந்தென்றல், புழுதிக்காற்று, ஆடிக்காற்று, கடுங்காற்று, புயல் காற்று, பேய்க்காற்று, சுழல் காற்று, சூறாவளிக்காற்று.

**4. கிழக்குக் காற்று குறிப்பு வரைக. (அல்லது) கொண்டல் காற்று குறிப்பு வரைக.**

- கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல் காற்று.
- மழையைத் தருவதால் மழைக்காற்று என்றும் அழைக்கப்படுகிறது.

**5. மேற்குக் காற்று குறிப்பு வரைக. (அல்லது) குடக்குக் காற்று குறிப்பு வரைக.**

- மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசும்.
- வறண்ட நிலப்பகுதியிலிருந்து வீசுவதால் வெப்பக்காற்று அல்லது கோடைக்காற்று என அழைக்கப்படுகிறது.

**6. வாடைக்காற்று குறிப்பு வரைக.**

- வடக்கிலிருந்து வீசும் காற்று வாடைக்காற்று.
- பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் குளிர்ச்சியான ஊதைக்காற்று எனவும் அழைக்கப் படுகிறது.

**7. தென்றல் காற்று குறிப்பு வரைக.**

- தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல் காற்று.
- மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான காற்றைத் தருகிறது.

**8. நாற்றிசையின் பெயர்களையும் அவற்றின் வேறு பெயர்களையும் எழுது.**

| திசைகள் | | வேறு பெயர்கள் |
|---|---|---|
| ♦ கிழக்கு | - | குணக்கு |
| ♦ மேற்கு | - | குடக்கு |
| ♦ வடக்கு | - | வாடை |
| ♦ தெற்கு | - | தென்றல் |

**9. காற்று குறித்து சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறிய செய்தி யாது?**

தென்றல் காற்று பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வருகிறது; கூடவே வண்டுகளையும் அழைத்து வருகிறது என இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

**10. இருவகைப் பருவக்காற்றுகள் யாவை?**

தென்மேற்குப் பருவக்காற்று, வடகிழக்குப் பருவக்காற்று.

**11. தென்மேற்குப் பருவக்காற்று குறிப்பு வரைக.**

- ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக்காற்றுக் காலம்.
- இவை மழைப்பொழிவினைத் தருகின்றன.
- இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையினை இப்பருவக்காற்று மூலம் பெறுகிறோம்.

**12. காற்று மாசடைவதினால் ஏற்படும் நோய்கள் யாவை?**

கண் எரிச்சல், தலைவலி, தொண்டைக்கட்டு, காய்ச்சல், நுரையீரல் புற்றுநோய், இளைப்பு நோய், மூளை வளர்ச்சிக் குறைவு.



www.tnpscjob.com

**13. ஓசோன் படலத்தின் பயன்களைக் கூறு.**

- கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்களைத் தடுக்கிறது.
- புவியைப் போர்வை போலச் சுற்றி கதிரவனின் வெப்பத்தைக் குறைத்துக் கொடுக்கிறது.

**14. ஓசோன் படலத்தில் உருவான ஓட்டையினால் ஏற்படக்கூடிய தீமைகள் யாவை?**

- புறஊதாக் கதிர்கள் நேரடியாக உயிரினங்களைத் தாக்குவதால் மிகுந்த துன்பத்தை உயிரினங்கள் அடைகின்றன.
- கண்களும் தோலும் பாதிப்படைகின்றன.

**15. அமில மழை எவ்வாறு பெய்கிறது?**

காற்றில் கலந்துவிடும் கந்தக டை ஆக்சைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு ஆகியவை மழை பெய்யும் போது நீரில் கரைந்து அமில மழையாகப் பெய்கிறது.

**16. அமில மழையினால் ஏற்படக்கூடிய தீமைகள் யாவை?**

மண், நீர், கட்டடங்கள், காடுகள், நீர்வாழ் உயிரினங்கள் மிகுந்த துன்பத்திற்குள்ளாகின்றன.

**17. குளோரோ புளோரோ கார்பன் குறிப்பு வரைக.**

- குளிர்ப்பதனப் பெட்டியிலிருந்து வெளிவரும் நச்சுக்காற்று குளோரோ புளோரோ கார்பன்.
- குளோரோ புளோரோ கார்பனின் ஒரு மூலக்கூறு, ஒரு இலட்சம் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்துவிடும்.

**18. காற்று மாசடைதலைத் தவிர்க்கும் வழிகளைக் கூறுக.**

- மேம்பட்ட குப்பை மேலாண்மையை மேற்கொள்ளுதல்.
- பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளித்தல்.
- மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளை மிகுதியாகப் பயன்படுத்துதல்.
- புதை வடிவ எரிபொருட்களைத் (கச்சா எண்ணெய், நிலக்கரி) தவிர்த்தல்.
- சமையலுக்கு விறகுகளைப் பயன்படுத்தாமை.

**19. ஹிப்பாலஸ் பருவக்காற்றின் பயன்களைக் கூறு.**

- புதிய கடல்வழி ஏற்படக் காரணமானது.
- கிரேக்கம் – முசிறிக்கு விரைவான கடல் பயணம்.
- யவனக் கடல் வணிகம் பெருகியது.

**20. பருவக்காற்று எவ்வாறு உருவாகிறது?**

கதிரவனின் வெப்பத்தால் அடர்த்தி குறைந்து மேலே செல்லும் காற்றானது அங்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பி பருவக்காற்றாகிறது.

**21. காற்றாலையின் பயன்களைக் கூறு.**

- மின்னாற்றலை உற்பத்தி செய்தல்.
- நிலக்கரியின் தேவை குறைத்து கனிம வளம் பாதுகாக்கப்படல்.

**22. காற்றின் ஆற்றல், வேகம் இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன?**

- காற்றின் ஆற்றலை, வளி மிகின் வலி இல்லை (புறம் 51) என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார்.
- காற்றின் வேகத்தை, கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று மதுரை இளநாகனார் குறிப்பிட்டுள்ளார்.

**23. இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் தென்றலை எவ்வாறு நயம்பட உரைக்கிறார்?**

- தென்றலானது பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வருகிறது.
- அவ்வாறு வரும்போது கூடவே வண்டுகளையும் அழைத்து வருகிறது.



www.tnpscjob.com

## சிறுவினா

**1. ஹிப்பாலஸ் பருவக்காற்று குறிப்பு வரைக.**

- கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க மாலுமி ஹிப்பாலஸ்.
- இவர் பருவக்காற்றின் உதவியால் முசிறித் துறைமுகத்திற்குப் புதிய வழியைக் கண்டுபிடித்தார்.
- விரைவான பயணத்திற்கு இப்புதிய வழி உதவியதால் யவனக் கப்பல்கள் சேரர்களின் முசிறித் துறைமுகத்திற்கு அதிகமாக வந்தன. (கிரேக்கரும் உரோமானியரும் யவனர் ஆவர்)
- யவனர் இப்பருவக்காற்றிற்கு அதைக் கண்டுபிடித்த ஹிப்பாலஸ் பெயரையே சூட்டினர்.

**2. பருவக்காற்றின் வகைகளைக் கூறி விளக்குக.**

கதிரவனின் வெப்பத்தால் சூடாகி அடர்த்தி குறைந்து மேலே செல்லும் காற்று அங்குள்ள வெற்றிடத்தை நிரப்பி பருவக்காற்றாகிறது.

**பருவக்காற்றின் வகைகள் :**

தென்மேற்குப் பருவக்காற்று, வடகிழக்குப் பருவக்காற்று என இரு வகைப்படும்.

**தென்மேற்குப் பருவக்காற்று :**

- ஜூன் முதல் செப்டம்பர் வரை வீசும்.
- இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையளவினைத் தருகிறது.

**வடக்கிழக்குப் பருவக்காற்று :**

- அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசும்.
- இந்தியாவின் முதுகெலும்பான வேளாண்மை சிறக்கிறது.
- நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற உதவுகிறது.

**3. காற்றின் பயன்கள் யாவை?**

- உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கிறது.
- தாவரங்கள் ஒளிச்சேர்க்கை மூலம் உணவை உற்பத்தி செய்ய உதவுகிறது.
- விதைகளைப் பல இடங்களுக்குப் பரப்புகிறது.
- உயிர்ச் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறது.
- நவீன தொலைத்தொடர்பின் மையமாக விளங்குகிறது.
- காற்றாலை மூலம் மின்னாற்றலைப் பெறுகிறோம்.

**4. காற்று குறித்து இலக்கியத்தில் சொல்லப்பட்ட செய்திகள் யாவை?**

- தென்றலானது மலர்களின் நறுமணத்தை அள்ளி வரும் போது வண்டுகளையும் அழைத்து வருகிறது என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் உரைத்துள்ளார்.
- பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இயற்றிய பத்மகிரிநாதர் தென்றல் விடு தூதுவில் "தமிழும் குளிர்ச்சியான பொருநை நதியும் சேரும் செந்தமிழ் மலையின் பின் தோன்றிய தென்றலே" என்று பெண்ணொருத்தி தென்றலைத் தூது செல்வதற்காக அழைக்கிறாள்.
- சங்ககாலப் பெண் புலவர் வெண்ணிக்குயத்தியார் கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடிய பாடலில் 'வளி' எனக் குறிப்பிட்டுச் சிறப்பித்துள்ளார்.



www.tnpscjob.com

## நெடுவினா

**1. காற்று பேசியதைப் போல நிலம், நீர், வானம் பேசுவதாகவும் அவை இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்பினை வலியுறுத்துவதாகவும் ஓர் உரையாடல் அமைக்க.**

**நிலம்** : என் உடலெல்லாம் காய்கிறது. என்னைக் குளிர்விக்கமாட்டாயா வானமே?

**வானம்** : இதற்கு நான் என்ன செய்ய முடியும்? உன்னில் வாழும் மனிதர்கள் காடுகளை அழித்துக் கொண்டிருக்கிறார்களே! மரங்களை வெட்டுகிறார்களே தவிர, அவற்றை வளர்ப்பதற்குச் சிறிதும் சிந்திக்கிறார்களா என்பது ஐயமே.

**நிலம்** : ஆம் வானமே! வருடந்தோறும் மரம் நடுவிழாவைக்கூட நட்ட இடத்திலேயே நடத்துகிறார்கள். மரங்களை நட்டு அவற்றைப் பராமரிக்கும் பணியைச் செய்பவர்கள் குறைவே.

**வானம்** : அதுவும் சரிதான்!

**நீர்** : நண்பர்களே! என்னை நீங்களும் கண்டுகொள்ள மாட்டீர்களா? இந்த மனிதர்கள் என்னை எப்படி அழுக்காக்கி உள்ளார்கள் பார்த்தீர்களா?

**வானம்** : ஐயகோ! உன்னை அடையாளம் காண்பதற்கே சிரமமாக இருக்கிறதே!

**நீர்** : ஆம் நண்பா!
விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்ற உடற்றும் பசி
- என்னும் குறட்பா, வானமே நீ மழை பெய்யாமல் போனால் அடையும் இன்னல்களை அல்லவோ கூறுகிறது.

**வானம்** : 'நீரின்றி அமையாது உலகு' என்றும் திருக்குறள் கூறுகிறது

**நிலம்** : "மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதை வரு வளியும்
வளித்தலை இய தீயுங்
தீமுரணிய நீரும், என்றாங்
கைம்பெரும் பூதத்தியற்கைப் போலப்" என்று நம்மைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் சங்க இலக்கிய நூலான புறநானூற்றில்.

**வானம்** : "உலகமாவது நிலம் தீ நீர் விசும்பொடு
வளி ஐந்தும் கலந்த மயக்கம்" என்கிறார் தொல்காப்பியர்.

**நீர்** : "இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு" என்று நாட்டிற்குத் தேவையான உறுப்புகளில் என்னையும் சேர்த்தே கூறியுள்ளார் திருவள்ளுவர்.

**நிலம்** : சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக 1986-ல் இயற்றப்பட்டுள்ள சட்டம் இந்திய அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**நீர்** : ஆம் நண்பா! இயற்கை சார்ந்த அனைத்தும் குறிப்பாக நீ, நான், காற்று ஆகிய காரணிகளுடன் தொடர்புடைய அனைத்துக்கும் இச்சட்டம் பொருந்தும்.

**வானம்** : மிக்க மகிழ்ச்சி! மனிதர்கள் தங்கள் நடவடிக்கையில் மாற்றத்தைக் கொண்டு வருவார்கள் என்று நம்புவோமா!

**நிலம், நீர்** : உறுதியாக நண்பா!



www.tnpscjob.com

## கற்பவை கற்றபின்

பக்கம்: 30

**1. காற்று பேசியதைப் போல நிலம் பேசுவதாக எண்ணிக் கொண்டு பேசுக.**

**நான்தான் நிலம் :**

நான் உங்கள் காலடிகளால் மிதிபட்ட போதும் வருந்தாமல் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் மனிதர்கள் எனக்கு எதிராக செய்யும் செயல்களை எண்ணி மிகுந்த வேதனையடைகிறேன். நான்தான் நிலம் பேசுகிறேன்.

**என்னைக் காப்பாற்றுங்கள் :**

மனிதர்களே! நெகிழிப்பைகளை உபயோகிப்பதை நிறுத்துங்கள். தொழிற்சாலைக் கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துங்கள். குப்பைகளைக் குப்பைத் தொட்டிகளில் போடுங்கள். விவசாயத்திற்குத் தொழு உரங்களைப் பயன்படுத்துங்கள். இச்செயல்களைச் செய்தால் மட்டுமே என்னைக் காப்பாற்ற முடியும். நான் நலமாய் இருந்தால் மட்டுமே உங்களால் நலமாய் வாழ முடியும். மனிதர்களே சிந்தியுங்கள், செயல்படுங்கள்.

**2. 17ஆம் நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு இன்றும் உலக விந்தையாகத் திகழும் தாஜ்மகால், இன்றளவில் மஞ்சள், பழுப்பு என நிறம் மாறிக் காட்சியளிப்பதன் காரணங்களையும் தீர்வுகளையும் கலந்துரையாடுக.**

**மதன்** : வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு இன்று உலக விந்தையாகத் திகழும் தாஜ்மகால், இன்றளவில் மஞ்சள், பழுப்பு என நிறம் மாறிக் காட்சியளிப்பதன் காரணம் என்ன?

**சுதன்** : ஆக்ராவில் தாஜ்மகாலைச் சுற்றியுள்ள தோல் தொழிற்சாலை மற்றும் எண்ணெய் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சல்பர் டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு மற்றும் கார்பன் மோனாக்சைடு ஆகிய தீங்கு விளைக்கும் நச்சு வாயுக்கள் காற்றில் கலந்து பரவுவதால் அவை வெள்ளைப் பளிங்குக் கற்களின் மீது பட்டு அவற்றின் நிறத்தையும் தன்மையையும் மாற்றுகிறது.

**மதன்** : இதற்கான தீர்வுதான் என்ன?

**சுதன்** : எல்.பி.ஜி. வாயு உருளைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். நிலக்கரி மற்றும் கச்சா எண்ணெய் பொருட்களை எரிக்கக் கூடாது என்று 1995 ஆம் ஆண்டில் அரசு ஒரு சட்டம் இயற்றியது. அதன்படி தாஜ்மகாலைச் சுற்றியுள்ள குறிப்பிட்ட பகுதிகள் இன்று வரை இச்சட்டத்தை மதித்து வருகின்றன. ஆகவேதான் அவை மேலும் சேதமடையாமல் காக்கப்பட்டு வருகிறது.



www.tnpscjob.com

இயல் இயற்கை 2

கவிதைப் பேழை

# காற்றே வா!

பாரதியார்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **“உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்”
- பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?**

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை **[விடை: ஆ) மோனை, எதுகை]**

### குறுவினா

1. **வசன கவிதை - குறிப்பு வரைக.**

- உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும். கவிதை வடிவம் வசன கவிதை எனப்படும்.
- ஆங்கிலத்தில் Prose Poetry என்பர்.
- தமிழில் பாரதியார் இதனை அறிமுகம் செய்தார்.

**சான்று :**

இவ்வுலகம் இனியது, இதிலுள்ள வான் இனிமை
யுடையது காற்றும் இனிது - பாரதியார்

## கூடுதல் வினாக்கள்

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **சுமந்து, வீசி** | - | வினையெச்சங்கள் |
| **மிகுந்த** | - | பெயரெச்சம் |
| **நல்லொளி, நெடுங்காலம்** | - | பண்புத்தொகைகள் |
| **நல்லலயத்துடன்** | - | குறிப்புப்பெயரச்சம் |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| பாடுகிறோம் = பாடு + கிறு + ஓம் | வழிபடுகின்றோம் = வழிபடு + கின்று + ஓம் |
|---|---|
| பாடு - பகுதி | வழிபடு - பகுதி |
| கிறு - நிகழ்கால இடைநிலை | கின்று - நிகழ்கால இடைநிலை |
| ஓம் - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி | ஓம் - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி |



www.tnpscjob.com

## பலவுள் தெரிக

**1. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத இணையைக் கண்டுபிடி.**

அ) மயலுறுத்து - மயங்கச்செய்
ஆ) ப்ராண - ரஸம் - உயிர்வளி
இ) லயத்துடன் - சீராக
ஈ) வாசனை - மனம் **[விடை: ஈ) வாசனை - மனம்]**

**2. பொருத்திக் காட்டுக.**

i) பாஞ்சாலி சபதம் - 1. குழந்தைகளுக்கான நீதிப்பாடல்
ii) சுதேசமித்திரன் - 2. பாராட்டப்பெற்றவர்
iii) புதிய ஆத்திசூடி - 3. இதழ்
iv) சிந்துக்குத் தந்தை - 4. காவியம்

அ) 3, 4, 2, 1 ஆ) 1, 2, 3, 4
இ) 4, 3, 1, 2 ஈ) 2, 4, 1, 3 **[விடை: இ) 4, 3, 1, 2]**

**3. 'நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்று பாராட்டப்பட்டவர்.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கவிமணி **[விடை: அ) பாரதியார்]**

**4. 'சிந்துக்குத் தந்தை' என்று பாராட்டப்பட்டவர்.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கவிமணி **[விடை: அ) பாரதியார்]**

**5. கேலிச் சித்திரம், கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கவிமணி **[விடை: அ) பாரதியார்]**

**6. பாட்டுக்கொரு புலவன் என்று பாராட்டப்பெறுபவர்.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கவிமணி **[விடை: அ) பாரதியார்]**

**7. 'காற்று' என்னும் தலைப்பில் வசன கவிதை எழுதியவர்.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கவிமணி **[விடை: அ) பாரதியார்]**

**8. "காற்றே, வா**
**மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை**
**மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா" - என்று பாடியவர்**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கவிமணி **[விடை: அ) பாரதியார்]**

**9. ப்ராண-ரஸம் என்ற சொல் உணர்த்தும் பொருள்**

அ) சீராக ஆ) அழகு
இ) உயிர்வளி ஈ) உடல்உயிர் **[விடை: இ) உயிர்வளி]**

**10. வசன கவிதையைத் தமிழில் அறிமுகப்படுத்தியவர்**

அ) பாரதிதாசன் ஆ) வல்லிக்கண்ணன்
இ) பிச்சமூர்த்தி ஈ) பாரதியார் **[விடை: ஈ) பாரதியார்]**



www.tnpscjob.com

**11. 'காற்றே வா' என்னும் கவிதையின் ஆசிரியர்**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) வாணிதாசன் **[விடை: அ) பாரதியார்]**

**12. காற்று எதைச் சுமந்து கொண்டு வர வேண்டுமென்று பாரதி அழைக்கிறார்?**

அ) கவிதையை ஆ) மகரந்தத்தூளை
இ) விடுதலையை ஈ) மழையை **[விடை: ஆ) மகரந்தத்தூளை]**

**13. பொருத்திக் காட்டுக:**

i) மயலுறுத்து - 1. மயங்கச் செய்
ii) ப்ராண - ரஸம் - 2. உயிர்வளி
iii) லயத்துடன் - 3. மணம்
iv) வாசனை - 4. சீராக

அ) 1, 2, 4, 3 ஆ) 2, 3, 1, 4
இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4 **[விடை: அ) 1, 2, 4, 3]**

**14. ஆங்கிலத்தில் Prose Poetry (Free verse) என்றழைக்கப்படும் வடிவத்தைத் தமிழில் அறிமுகப்படுத்தியவர்**

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன் **[விடை: ஆ) பாரதியார்]**

**15. புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணம்**

அ) பாரதியின் வசன கவிதை
ஆ) ஜப்பானியரின் ஹைக்கூ
இ) வீரமாமுனிவரின் உரைநடை
ஈ) கம்பரின் கவிநயம் **[விடை: அ) பாரதியின் வசன கவிதை]**

**16. பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள்**

i) இந்தியா ii) சுதேசமித்திரன்
iii) எழுத்து iv) கணையாழி

அ) i, ii - சரி ஆ) முதல் மூன்றும் சரி
இ) நான்கும் சரி ஈ) i, ii - தவறு **[விடை: அ) i, ii - சரி]**

**17. பக்க மலைகள் உடைந்து வெள்ளம்**
**பாயுது பாயுது பாயுது - தாம்தரிகிட**
**என்ற இயற்கையொலிகளை உணர்வுடன் வெளிப்படுத்தும் பாடல்களைப் பாடியவர்**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) வாணிதாசன் **[விடை: அ) பாரதியார்]**

**18. 'இனிய வாசனையுடன் வா' என்று பாரதி அழைத்தது**

அ) காற்று ஆ) மேகம்
இ) குழந்தை ஈ) அருவி **[விடை: அ) காற்று]**

**19. பாரதியார் காற்றை 'மயலுறுத்து' அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர்**

அ) மணம் வீசும் காற்றாய் நீ வா
ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு வா
இ) மயிலாடும் காற்றாய் நீ வா
ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா **[விடை: ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு வா]**

இயல் 2

www.tnpscjob.com

## குறுவினா

**1. பாரதியாரின் படைப்புகள் சிலவற்றைக் கூறு.**

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திசூடி.

**2. பாரதியார் எவ்வாறெல்லாம் பாராட்டப்பட்டார்?**

நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா, சிந்துக்குத் தந்தை, பாட்டுக்கொரு புலவன், மகாகவி, கலைமகள்.

**3. பாரதியாரின் பன்முகங்கள் யாவை?**

கவிஞர், கட்டுரையாளர், சிறுகதை, ஆசிரியர், இதழாசிரியர், கேலிச்சித்திரங்கள், கருத்துப்படங்களை உருவாக்குபவர்.

**4. பாரதியார் இதழாசிரியராகப் பணியாற்றிய இதழ்களின் பெயர்களை எழுது.**

இந்தியா, சுதேசமித்திரன்.

**5. 'காற்றே வா' பாடலில் இடம் பெற்றுள்ள இயைபுச் சொற்களைக் கூறு.**

பாடுகிறோம், கூறுகிறோம், வழிபடுகின்றோம்.

**6. காற்றிடம் எதனைக் கொண்டுவந்து கொடுக்குமாறு பாரதியார் வேண்டுகிறார்?**

மகரந்தத்தூளைச் சுமந்து, மனதை மயக்கும் வாசனையுடன், இலைகள் மற்றும் நீரலைகள்மீது உராய்ந்து மிகுந்த உயிர்வளியைக் கொண்டு வந்து கொடுக்குமாறு காற்றிடம் பாரதியார் வேண்டுகிறார்.

**7. எப்படி வீசுமாறு காற்றைப் பாரதியார் பணிக்கிறார்?**

காற்றை மெதுவாக, நல்ல முறையில் சீராக, நீண்டகாலம் நின்று வீசிக் கொண்டிருக்குமாறு பாரதியார் பணிக்கிறார்.

**8. "உனக்குப் பாட்டுகள் பாடுகின்றோம்.
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்
உன்னை வழிபடுகின்றோம்" - என்று யார் யாரிடம் கூறுகின்றார்?**

பாரதியார், காற்றிடம் கூறுகின்றார்.

## சிறுவினா

**1. 'காற்றே வா' பாடலில் பாரதியார் கூறும் செய்தி யாது?**

- மகரந்தத்தூளைச் சுமந்து கொண்டு மனதை மயங்கச் செய்கின்ற வாசனையுடன் வா.
- இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து வா.
- உயிர்வளியைக் கொடு. ஆனால் பேய்போல் வீசி உயிராகிய நெருப்பை அணைத்து விடாதே.
- நீடித்து நின்று நன்றாக வீசு, உன் சக்தி குறைத்து எம் உயிரை அவித்து விடாதே!
- உம்மை நாம் பாடுகிறோம், புகழ்கிறோம், வழிபடுகிறோம் என்றெல்லாம் பாரதி, 'காற்றே வா' என்ற பாடலில் பாடுகிறார்.

> **"உனக்குப் பாட்டுகள் பாடுகின்றோம்.
> உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்
> உன்னை வழிபடுகின்றோம்"**

**2. மகாகவி பாரதியார் குறிப்பு வகை.**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | மகாகவி சுப்பிரமணிய பாரதியார் |
| **பெற்றோர்** | : | சின்னசாமி – இலக்குமி அம்மையார் |



www.tnpscjob.com

| | | |
|---|---|---|
| **பாராட்டுகள்** | : | 'சிந்துக்குத் தந்தை', 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' |
| **பணி** | : | ஆசிரியர், இதழாசிரியர், சிறுகதை ஆசிரியர். |
| **படைப்புகள்** | : | கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பாப்பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திசூடி. |
| **பணியாற்றிய இதழ்கள்** | : | இந்தியா, சுதேசமித்திரன். |

**3. புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணம் யாது?**

- உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்பிலக்கணத்திற்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் 'வசன கவிதை' ஆகும்.
- ஆங்கிலத்தில் prose poetry (free verse) என்றழைக்கப்படும் இவ்வடிவம் பாரதியாரால் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- உணர்ச்சி பொங்கக் கவிதை படைக்கும் இடங்களில் யாப்பு, தடையாக இருப்பதை உணர்ந்த பாரதியார் வசனகவிதை வடிவத்தைக் கையாண்டார்.
- இந்த வசன கவிதையே 'புதுக்கவிதை' என்ற வடிவம் உருவாகக் காரணமாயிற்று.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 32*

**1. இவ்வசன கவிதையில் இடம் பெற்றுள்ள வேண்டுகோள் சொற்களும் கட்டளைச் சொற்களும் (வாசனையுடன் வா, அவித்து விடாதே.....) கவிதையின் உட்பொருளை வெளிப்படுத்தத் துணை நிற்பது குறித்துப் பேசுக.**

**வாசனையுடன் வா :**

மகரந்தத்தூளைச் சுமந்து கொண்டு மனதை மயங்கச் செய்கின்ற இனிய வாசனையுடன் வா என்பதன் பொருளாவது இயற்கையின் தூய மணமிக்க காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

**மடித்து விடாதே :**

நெருப்பு எரிய சீரான காற்று அவசியம். அதிவேகக் காற்று நெருப்பைப் பரவச் செய்து மிகுந்த துன்பத்தை உருவாக்கும் மிகவும் குறைவான வேகத்தில் வீசும் காற்றானது நெருப்பு பற்றி எரிய முடியாமல் நெருப்பு அணைவதற்குக் காரணமாகிறது.

பாரதி தமது உயிரை நெருப்புக்கு ஒப்பிட்டுள்ளார். காற்றானது சக்தி குறைந்து போய் தன் உயிரை அவித்துவிடக் கூடாது எனவும் பேய் போல வீசி தமது உயிரை மடித்துவிடக் கூடாது எனவும் உட்பொருள் கொண்டு இவ்வேண்டுகோள் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

**2. திக்குகள் எட்டும் சிதறி - தக்கத்**
**தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட**
**பக்க மலைகள் உடைந்து வெள்ளம்**
**பாயுது பாயுது பாயுது - தாம்தரிகிட**
**தக்கத் ததிங்கிட தித்தோம் - அண்டம்**
**சாயுது சாயுது சாயுது - பேய் கொண்டு**
**தக்கை யடிக்குது காற்று - தக்கத்**
**தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட**
*- பாரதியார்*

**இது போன்ற இயற்கையொலிகளை உணர்வுடன் வெளிப்படுத்தும் கவிதைகளைத் திரட்டி வந்து வகுப்பறையில் படித்துக் காட்டு.**

www.tnpscjob.com

**விடை :**

| | |
|---|---|
| அ) மழையே மழையே வா வா - நல்ல<br>வானப் புனலே வா வா - இவ்<br>வையத் தமுதே வா வா<br>தகரப் பந்தல் தணதண என்ன<br>தாழும் கூரை சளசள என்ன<br>நகரப் பெண்கள் செப்புக் குடங்கள்<br>நன்றெங் கும்கண கணகண என்ன<br>(மழையே மழையே)<br>*- பாரதிதாசன்* | ஆ) கிலுகிலு கிலுகி லெனவும் ; 'கிக்கீ'<br>கிக்கீ யென்றும் 'கேக்க, கேக்க'<br>'கேட்க, கேட்க' எனவும்; 'கொக்கெக்கே'<br>'குக்குக் குக்குக் குக்குக் குக்குக்<br>குக்கூவே! என்றும்; கீச்கீச், கீச்சீச்'<br>'கிசு, கிசு, கிசு' கீச் என்றும்;<br>'ரங்க, ரங்க என்றும்<br>பல்லாயிர வகையினில்<br>இசைக்கும் குயில்களும் கிளிகளும்<br>குலவுபல ஜாதிப் புட்களும்<br>இனிய பூங்குர லுடையன.<br>*- பாரதியார்* |



www.tnpscjob.com

இயல் இயற்கை 2

கவிதைப் பேழை

# முல்லைப்பாட்டு

நப்பூதனார்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?**
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்
**[விடை: அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்]**

### குறுவினா

1. **பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.**

தம்பி அழாதே! அப்பாவும் அம்மாவும் விரைவில் வந்து விடுவார்கள். வரும்போது உனக்கு விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொண்டு வருவார்கள்.

2. **மாஅல் - பொருளும், இலக்கணக் குறிப்பும் தருக.**

| மாஅல் | | |
|---|---|---|
| **பொருள்** | திருமால் | பேருருவம் |
| **இலக்கணக்குறிப்பு** | செய்யுளிசை அளபெடை | உரிச்சொல் தொடர் |

### நெடுவினா

1. **முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்தியை விவரித்து எழுதுக.**

**குறிப்புச்சட்டம்**

மழை
தெய்வ வழிபாடு
கன்றின் வருத்தம்
வருந்தாதே
முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது

**மழை:**

மேகம் அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. மாவலி மன்னன் திருமாலுக்கு நீர்வார்த்துத் தரும்பொழுது மண்ணுக்கும், விண்ணுக்கும் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம். அம்மழை மேகம் ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்டு வலமாய் எழுகிறது. மலையைச் சூழந்து விரைந்து வேகத்துடன் பெரு மழையைப் பொழிகிறது.

இயல் 2

www.tnpscjob.com

### தெய்வ வழிபாடு:

முதுபெண்கள் காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர். யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் நறுமணம் கொண்ட பூக்களைச் சுற்றி ஆரவாரிக்கும். மலர்ந்த முல்லைப் பூவோடு நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவி வழிபடுவர். தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நிற்பர்.

### கன்றின் வருத்தம்:

> **"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்**
> **உறுதுயர் அலமரல் நோக்கி"**

சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள்.

### வருந்தாதே :

புல்லை மேய்ந்த உன் தாய்மாரை வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட என் இடையர் இப்பொழுது ஓட்டி வந்து விடுவார் 'வருந்தாதே' என்றாள் இடைமகள்.

### முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது :

இடைமகள் மூலம் நற்சொல்லைக் கேட்டோம். நின் தலைவன் பகைவரை வென்று திறைப் பொருளோடு வருவது உறுதி. மனத்தடுமாற்றம் கொள்ளாதே!

### இலக்கணக் குறிப்பு.

| | | |
|---|---|---|
| மூதூர் | - | பண்புத்தொகை |
| உறுதுயர் | - | வினைத்தொகை |
| கைதொழுது | - | மூன்றாம் வேற்றுமைத் தொகை |
| தடக்கை | - | உரிச்சொல் தொடர் |
| நன்மொழி | - | பண்புத்தொகை |

### பகுபத உறுப்பிலக்கணம்.

**பொறித்த = பொறி + த் + த் + அ**

| | | |
|---|---|---|
| பொறி | - | பகுதி |
| த் | - | சந்தி |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |

**கொண்ட = கொள் (ண்) + ட் + அ**

| | | |
|---|---|---|
| கொள் | - | பகுதி, ள்(ண்) ஆனது விகாரம் |
| ட் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |

**பொழிந்த = பொழி + த் (ந்) + த் + அ**

| | | |
|---|---|---|
| பொழி | - | பகுதி |
| த் | - | சந்தி (ந்) ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |

## கூடுதல் வினாக்கள்

### இலக்கணக் குறிப்பு.

| | | |
|---|---|---|
| **பெரும்பெயல்** | - | பண்புத்தொகை |
| **சிறுபுன்** | - | பண்புத்தொகை |

www.tnpscjob.com

**அருங்கடி** - பண்புத்தொகை
**பெருமுதுபெண்டிர்** - பண்புத்தொகை
**நல்லோர்** - வினையாலணையும் பெயர்

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| | |
|---|---|
| **நிமிர்ந்த = நிமிர் + த(ந்) + த் + அ**<br>நிமிர் - பகுதி<br>த் - சந்தி (ந்) ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி | **நோக்கி = நோக்கு + இ**<br>நோக்கு - பகுதி<br>இ - வினையெச்ச விகுதி |
| **அசைத்த = அசை + த் + த் + அ**<br>அசை - பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி | |

## பலவுள் தெரிக

**1. முல்லைப்பாட்டின் மொத்த அடிகள் எத்தனை?**
அ) 101 ஆ) 102
இ) 103 ஈ) 104 **[விடை: இ) 103]**

**2. முல்லைப்பாட்டு எந்த நூல் வகையைச் சார்ந்தது?**
அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) கீழ்க்கணக்கு ஈ) சிற்றிலக்கியம் **[விடை: ஆ) பத்துப்பாட்டு]**

**3. முல்லைத் திணைக்குரிய பூ வகை**
அ) காந்தள் ஆ) பிடவம்
இ) தாழை ஈ) பாதிரி **[விடை: ஆ) பிடவம்]**

**4. முல்லைப்பாட்டு எந்தக் கணக்கு நூல்களுள் ஒன்று?**
அ) பதினெண்மேல் கணக்கு ஆ) பதினெண்கீழ்க்கணக்கு
இ) சிற்றிலக்கியம் ஈ) காப்பியம் **[விடை: அ) பதினெண்மேல் கணக்கு]**

**5. பத்துப்பாட்டில் மிகக் குறைந்த அடிகளைக் கொண்ட நூல்**
அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) முல்லைப்பாட்டு
இ) பட்டினப்பாலை ஈ) திருமுருகாற்றுப்படை **[விடை: ஆ) முல்லைப்பாட்டு]**

**6. பொருத்துக.**
1. நேமி - அ) மலை
2. கோடு - ஆ) வலம்புரி சங்கு (சக்கரத்துடன் கூடிய)
3. விரிச்சி - இ) தோள்
4. சுவல் - ஈ) நற்சொல்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ
இ) 1.ஈ 2.ஆ 3.இ 4.அ ஈ) 1.இ 2.ஈ 3.அ 4.ஆ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

7. **வலம்புரிச் சங்கு பொறித்த கைகளையுடையவர்**
அ) முருகன் ஆ) திருமால்
இ) மாவலி மன்னன் ஈ) நான்முகன் **[விடை: ஆ) திருமால்]**

8. **குறுகிய வடிவம் கொண்டு நீர்வார்த்துத் தந்தவன்**
அ) முருகன் ஆ) திருமால்
இ) மாவலிமன்னன் ஈ) நான்முகன் **[விடை: இ) மாவலிமன்னன்]**

9. **மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து நின்றவர்**
அ) முருகன் ஆ) திருமால்
இ) மாவலிமன்னன் ஈ) நான்முகன் **[விடை: ஆ) திருமால்]**

10. **"கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி"**
**- இவ்வடிகளில் 'மேகம்' என்னும் பொருள்தரும் சொல்**
அ) கோடு ஆ) செலவு
இ) எழிலி ஈ) கொடு **[விடை: இ) எழிலி]**

11. **"கொடுங்கோற் கோவலர்" - இதில் குறிப்பிடப்படும் கோவலர் யார்?**
அ) கோவலன் ஆ) குறவர்
இ) உழவர் ஈ) இடையர் **[விடை: ஈ) இடையர்]**

12. **முல்லைப்பாட்டு என்னும் நூலை இயற்றியவர்**
அ) கபிலர் ஆ) மாங்குடிமதேனார்
இ) நப்பூதனார் ஈ) நக்கீரர் **[விடை: இ) நப்பூதனார்]**

13. **மழையின் சீற்றம் இயல்பு வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்களைப் படம் பிடித்துக் காட்டுவது எது?**
அ) சங்க இலக்கியம் ஆ) திருக்குறள்
இ) நாலடியார் ஈ) சிலப்பதிகாரம் **[விடை: அ) சங்க இலக்கியம்]**

14. **'நனந்தலை உலகம்' என்பதில் 'நனந்தலை' என்பதன் பொருள்**
அ) கவர்ந்த ஆ) அகன்ற
இ) சுருங்கிய ஈ) இழந்த **[விடை: ஆ) அகன்ற]**

15. **'நறுவீ' என்பதில் 'வீ' என்பதன் பொருள்**
அ) மலர்கள் ஆ) மான்கள்
இ) விண்மீன்கள் ஈ) கண்கள் **[விடை: அ) மலர்கள்]**

16. **பொருத்திக் காட்டுக:**

| | | | |
|---|---|---|---|
| i) | மூதூர் | - | 1. உரிச்சொற்றொடர் |
| ii) | உறுதுயர் | - | 2. மூன்றாம் வேற்றுமைத்தொகை |
| iii) | கைதொழுது | - | 3. வினைத்தொகை |
| iv) | தடக்கை | - | 4. பண்புத்தொகை |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2
இ) 1, 3, 4, 2 ஈ) 2, 1, 3, 4 **[விடை: அ) 4, 3, 2, 1]**

17. **பொறித்த - பகுபத உறுப்பிலக்கணத்தின்படி பிரிக்கும் முறை**
அ) பொறி + த் + த் + அ ஆ) பொறித்து + அ
இ) பொறி + த்(ந்) + த் + அ ஈ) பொறி + த் + த **[விடை: அ) பொறி + த் + த் + அ]**

இயல் 2

18. **தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றவர்கள்**
அ) இளம் பெண்கள் ஆ) முதிய பெண்டிர்
இ) தோழிகள் ஈ) சான்றோர் **[விடை: ஆ) முதிய பெண்டிர்]**

19. **சிறுதாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட எது பசியால் வாடிக் கொண்டிருந்தது?**
அ) பசு ஆ) இளங்கன்று
இ) எருமை ஈ) ஆடு **[விடை: ஆ) இளங்கன்று]**

20. **பசியால் வாடிக் கொண்டிருந்த இளங்கன்றின் வருத்தத்தைக் கண்டவள்**
அ) குறமகள் ஆ) இடைமகள்
இ) தலைவி ஈ) தோழி **[விடை: ஆ) இடைமகள்]**

21. **'கைய கொடுங்கோற் கோவலர் பின் நின்று உய்த்தர இன்னே வருகுவர், தாயர்' என்று யார் யாரிடம் கூறியது?**
அ) இடைமகள் இளங்கன்றிடம் ஆ) முதுபெண்டிர் பசுவிடம்
இ) தலைவன் காளையிடம் ஈ) தலைவி மேகத்திடம்
**[விடை: அ) இடைமகள் இளங்கன்றிடம்]**

22. **'நன்னர் நன்மொழி கேட்டனம்' - யார் யாரிடம் கூறியது?**
அ) முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது
ஆ) தலைவி முதுபெண்டிரிடம் கூறியது
இ) தோழி தலைவியிடம் கூறியது
ஈ) தலைவி தலைவனிடம் கூறியது **[விடை: அ) முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது]**

23. **பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள முல்லைப்பாட்டின் அடிகள்**
அ) 1 - 17 ஆ) 17 - 25
இ) 4 - 16 ஈ) 5 - 20 **[விடை: அ) 1 - 17]**

24. **முல்லையின் நிலம்**
அ) காடும் காடு சார்ந்த இடமும் ஆ) மலையும் மலை சார்ந்த இடமும்
இ) வயலும் வயல் சார்ந்த இடமும் ஈ) கடலும் கடல் சார்ந்த இடமும்
**[விடை: அ) காடும் காடு சார்ந்த இடமும்]**

25. **இருத்தலும் இருத்தல் நிமித்தமும் (காத்திருத்தல்) எந்நிலத்துக்குரிய உரிப்பொருள்**
அ) குறிஞ்சி ஆ) முல்லை
இ) மருதம் ஈ) பாலை **[விடை: ஆ) முல்லை]**

26. **கார்காலத்துக்குரிய மாதங்கள்**
அ) தை, மாசி ஆ) பங்குனி, சித்திரை
இ) ஆவணி, புரட்டாசி ஈ) கார்த்திகை, மார்கழி **[விடை: இ) ஆவணி, புரட்டாசி]**

27. **நப்பூதனாரின் தந்தை**
அ) பொன்முடியார் ஆ) பொன்வணிகனார்
இ) மாசாத்துவாணிகனார் ஈ) மாணிக்கநாயனார் **[விடை: ஆ) பொன்வணிகனார்]**

28. **பொன்வணிகனாரின் ஊர்**
அ) உறையூர் ஆ) மதுரை
இ) காவிரிப்பூம்பட்டினம் ஈ) குற்றாலம் **[விடை: இ) காவிரிப்பூம்பட்டினம்]**



www.tnpscjob.com

## குறுவினா

**1. முல்லைப்பாட்டு நூல் குறிப்பு வரைக.**
- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
- 103 பாடல் அடிவரையறை கொண்டது.
- ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.
- முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது.
- பத்துப்பாட்டில் மிகக் குறைந்த அடிகளைக் கொண்ட நூல்.

**2. நப்பூதனார் குறிப்பு வரைக.**
- முல்லைப்பாட்டைப் பாடியவர்.
- காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனாவார்.

**3. விரிச்சி கேட்டல் என்றால் என்ன?**
- ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப்பக்கத்தில் போய், தெய்வத்தைத் தொழுது நிற்பர்.
- அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர்.
- அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையில் முடியும்.
- தீய மொழியைக் கூறின் தம் செயல் தீயதாய் முடியும் என்று எண்ணுவர்.

**4. இளங்கன்று வருந்தக் காரணம் யாது?**

சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது.

**5. இளங்கன்றின் வருத்தத்தைப் போக்க இடைமகள் கூறிய செய்தி யாது?**

புல்லை மேய்ந்த உன் தாய்மாரை வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் இப்போது ஓட்டி வந்துவிடுவர் - வருந்தாதே.

**6. தலைவியை முதுபெண்டிர் எவ்வாறு ஆற்றுப்படுத்தினர்?**
- நின் தலைவன் பகைவரை வென்று திரைப்பொருளோடு வருவான்.
- தலைவியே! மனத்தடுமாற்றம் கொள்ளாதே.

**7. முல்லைப்பாட்டில் திருமால் குறித்து கூறப்பட்ட செய்தி யாது?**
- வலம்புரிச்சங்கு பொறித்த கைகளை உடையவன் திருமால்.
- குறுகிய வடிவம் எடுத்தவன்.
- மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்போது மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்தவன்.

**8. மழைப்பொழிவு குறித்து முல்லைப் பாட்டில் கூறப்பட்டுள்ள செய்தி யாது?**
- ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகி பெருந் தோற்றம் கொண்டது மேகம்.
- அம்மேகமானது வலமாய் எழுந்தது.
- மலையைச் சூழ்ந்தது.
- விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிந்தது.

**9. முதிய பெண்கள் (முதுபெண்டிர்) தெய்வத்தை எவ்வாறு தொழுது நின்றனர்?**
- முல்லைப் பூக்களோடு நாழி அளவு நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவினர்.
- தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

**10. பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பொழுது இரண்டு வகைப்படும். அவை: பெரும் பொழுது, சிறு பொழுது.



www.tnpscjob.com

**11. முல்லை நிலத்திற்குரிய பொழுதுகள் எவை?**

பெரும் பொழுது - கார்காலம் (ஆவணி, புரட்டாசி)

சிறு பொழுது - மாலை

**12. முல்லைப்பாட்டில் இடம்பெற்றுள்ள கருப்பொருளைக் கூறுக.**

நீர் - குறுஞ்சுனை நீர், காட்டாறு

மரம் - கொன்றை, காயா, குருந்தம்

பூ - முல்லை, பிடவம், தோன்றிப்பூ

## சிறுவினா

**1. முல்லைப்பாட்டு குறிப்பிடும் மாலைக்கால செய்தி யாது?**

- துன்பத்தைத் தருகின்ற மாலைப் பொழுதில் முதிய பெண்கள் காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர்.
- யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள்.
- மலர்ந்த முல்லைப் பூக்களோடு நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவுவர்.
- தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நிற்பர்.

**2. முதுபெண்டிர் விரிச்சி கேட்டு தலைவிக்குக் கூறிய செய்தி யாது?**

**இளங்கன்றின் பசி :**

- சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக்கொண்டிருந்தது.
- அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள்.
- புல்லை மேய்ந்த உன் தாயாரை வளைந்த கத்தியுடைய கம்பைக் கொண்ட எம் இடையர் இப்போது ஓட்டி வந்துவிடுவர் வருந்தாதே என்றாள் இடைமகள்.

**நற்சொல்லைக் கேட்டோம் :**

- இடைமகளது நற்சொல்லை நாங்கள் கேட்டோம்.
- தலைவன் திறைப்பொருளோடு வருவது உறுதி.

**3. மழை மேகம் - மழைப் பொழிவு குறித்து முல்லைப்பாட்டு எவ்வாறு வருணித்துள்ளது?**

**மழை மேகம்:**

- வலம்புரிச் சங்கு பொறித்த கைகளையுடையவன் திருமால்.
- மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்போது விண்ணுக்கும் மண்ணுக்குமாய் பேருருவம் எடுத்தவன் திருமால்.
- அப்பேருருவத்தைப் போன்றுள்ளது மழை மேகம்.

**மழைப் பொழிவு :**

- பேருருவம் கொண்ட மேகமானது வலமாய் எழுந்தது.
- மலையைச் சூழ்ந்தது.
- விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிந்தது.

**4. முல்லைப்பாட்டு பாடலில் இடம் பெற்றுள்ள முதல், கரு, உரிப்பொருள்களை எழுது.**

| திணை | நிலம் | சிறுபொழுது | பெரும்பொழுது |
|---|---|---|---|
| முல்லை | காடும் காடு சார்ந்த நிலமும் | மாலை | கார்காலம் |



www.tnpscjob.com

| கருப்பொருள் | | | உரிப்பொருள் |
|---|---|---|---|
| நீர் | மரம் | பூ | இருத்தல் இருத்தல் நிமித்தமும் |
| குறுஞ்சுனை நீர், காட்டாறு. | கொன்றை, காயா, குருந்தம். | முல்லை, பிடவம் தோன்றிப்பூ. | |

## கற்பவை கற்றபின்

பக்கம்: 35

**1. முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலை உணர முடிகிறதா? உங்களின் கருத்துகளைப் பதிவு செய்க.**

- மக்கள் பிறருக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தனக்கு ஏற்பட்ட துன்பமாகவே கருதியிருக்கின்றனர்.
- மனிதர்களுடைய துன்பங்கள் மட்டுமின்றி அஃறிணை உயிரினங்களின் துன்பங்களையும் நீக்க முற்பட்டிருக்கின்றனர்.
- தெய்வ நம்பிக்கை உடையவர்கள்.
- விரிச்சி கேட்டலில் நம்பிக்கை உடையவர்கள்.
- ஒருவரையொருவர் ஆற்றுப்படுத்தி மகிழ்ந்திருக்கின்றனர்.

**2. குறிப்புகளைக் கொண்டு ஆர்வமூட்டும் வகையில் கதை / நிகழ்வை எழுது.**

அமைதி - வனம் - மனத்தைத் தொட்டது - கொஞ்சம் அச்சம் - ஆனால் பிடித்திருந்தது - இரவில் வீட்டின் அமைதியைவிட - வனத்தின் அமைதி - புதுமை - கால்கள் தரையில் - இலைகளின் சலசலப்பு - பறவைகள் மரங்களின் மேல் - சிறகடிப்பு - அருகில் திரும்பியவுடன் - திடீரென ஆரவார ஓசை - தண்ணீரின் ஓட்டம் - அழகான ஆறு - உருண்ட சிறு கூழாங்கற்கள் - இயற்கையின் கண்காட்சி.

### இயற்கையின் கண்காட்சி

**அமைதியான வனம் :**

அடர்ந்த மரங்களைக் கொண்ட பசுமை மிகுந்த அமைதி நிறைந்த வனத்திற்குச் சென்றேன். வனத்தாவரங்கள் மற்றும் மலர்களின் நறுமணம் என் மனதைத் தொட்டது. அச்சூழ்நிலை மிகவும் பிடித்திருந்தது. இரவில் வீட்டில் இருக்கும் அமைதியைவிட வனத்தின் அமைதி என்னை மிகவும் கவர்ந்தது.

**காட்டுயிரிகள் :**

புதுமையான ஓர் அனுபவத்தைப் பெற்றேன். என் கால்கள் தரையில் ஊன்றியிருப்பதாய்த் தெரியவில்லை. இலைகளின் சலசலப்பு கேட்டு ஓசை வந்த திசை நோக்கித் திரும்பினேன். மரங்களின் மேலிருந்த பறவைகள் தங்கள் சிறகுகளை அடித்து சோம்பலைப் போக்கிக் கொண்டிருந்தன.

**ஆரவார ஓசை :**

திடீரென ஏற்பட்ட ஆரவார ஓசையைக் கேட்டு திரும்பிப் பார்த்தேன். குரங்குகள் தண்ணீரின் ஓட்டத்தில் தங்கள் முகங்களின் அழகைக் கண்டு ஆரவாரம் செய்து கொண்டிருந்தன.

**அழகான ஆறு :**

தெளிவான நீரோடையின் உள்ளே, உருண்டை வடிவில் சிறு கூழாங்கற்கள் பார்ப்பதற்கு விலையுயர்ந்த கற்களைப் போலவும், கண்ணாடியால் செய்யப்பட்ட உருண்டைகள் போலவும் தோற்றமளித்தன. இத்தகைய இயற்கையின் கண்காட்சி என் மனதை விட்டு அகலவில்லை.



www.tnpscjob.com

இயல் இயற்கை 2

விரிவானம்

# புயலிலே ஒரு தோணி

ப. சிங்காரம்

## பாடநூல் வினாக்கள்

### சிறுவினா

1. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.

**குறிப்பு : இலைகளில் சொட்டும் நீர் - உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல்.**

- தேனடையிலிருந்து விழும் தேன் துளியைப் போல சில மணித்துளிகளுக்கு ஒரு முறை நீர் 'சொட் சொட்' என விழுந்தது.
- விரும்பத்தக்க தென்றலைப் போலவும் மயிலிறகின் வருடல் போலவும் மெல்லிய குளிர் உடலில் ஓடும்.
- நீர் உள்ள தடாகத்திலே பல வகையான மீன்களும் தவளைகளும் தாவிக்குதிக்கும் போது ஏற்படும் ஓசையை ஒத்த 'சளப் தளப்' என்ற சத்தத்துடன் தேங்கிக் கிடந்த நீர்க் குட்டையில் குழந்தைகள் குதித்து விளையாடி மகிழ்ந்தனர்.
- அமைதியான நீரோட்டம் கொண்ட நதியானது இழுத்து வரும் சிறுசிறு கட்டை மற்றும் இதர பொருட்கள் போல குழந்தைகள் ஓடும் நீரில் காகிதக் கப்பல்களை விட்டு மகிழ்ந்தனர்.

### நெடுவினா

1. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| புயல் வருணனை |
| அடுக்குத்தொடர் |
| ஒலிக்குறிப்பு |
| முடிவுரை |

**முன்னுரை:**

மனித வாழ்க்கை போல இயற்கையும் இன்பம் துன்பம் நிறைந்தது. அந்த வகையில் 'புயலிலே ஒரு தோணி' என்ற புதினத்தில், பா.சிங்காரம் எழுதியுள்ள வருணனை, அடுக்குத்தொடர் மற்றும் ஒலிக்குறிப்பும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**புயல் வருணனை:**

கொளுத்தும் வெயில் இமைக்கும் நேரத்தில் மறைந்துவிட்டது. பாண்டியன் அண்ணாந்து பார்த்தான். மேகங்கள் கும்மிருட்டு ஆனது. காற்றில்லாமல் ஒரே இறுக்கமானது. இடிமுழக்கத்துடன் மின்னல் வானத்தைப் பிளந்தது. வானம் உடைந்தன. வெள்ளம் கொட்டியது. சூறாவளி ஆடிக்குதித்தது.



www.tnpscjob.com

வானுடன் கடல் கலந்துவிட்டது. மழை தெரியவில்லை. கடல் வெறிக் கூத்தாட்டத்தால் தொங்கான் மூழ்கி சிப்பங்கள் கடலில் நீந்துகின்றன. வானம், கடல், காற்று, மழை ஒன்று சேர்ந்து கூக்குரலிட்டது. வானம் பிளந்து நெருப்பைக் கக்கியது.

**அடுக்குத்தொடர்:**

தொங்கான் நடுநடுங்கித் தாவி தாவி குதிகுதித்தது. பிறகு தொங்கான் குதித்து விழுந்து நொறுநொறு என்று நொறுங்கியது. சுழன்று கிறுகிறுத்துக் கூத்தாடியது.

**ஒலிக்குறிப்பு:**

தொங்கான் தாவி விழுந்தது, சுழல்கின்றது. கடலில் சிலுசிலு மரமரப்பு நொய்ங் புய்வ், நொய்ங், புய்ங் என இடி முழக்கம் செய்ய சீனப் பிசாசுகள் தாவி வீசுகின்றன. பகல் இரவாகி உப்புக் காற்று உடலை வருடியது.

**முடிவுரை:**

புயலுக்குப் பின்னால் ஐந்தாம் நாள் கரை தென்பட்டது. அடுத்தநாள் முற்பகல் பினாங்கு துறைமுகத்தை அணுகினார்கள். பிலவானிலிருந்து சுமத்ராவரை புயல் இப்படிப் பயமுறுத்தியது. இத்தகைய வருணனையோடு புயலில் தோணி படும்பாட்டை 'அழகாய்' விவரிக்கின்றார் பா. சிங்காரம்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. புயலிலே ஒரு தோணி என்பது**

அ) சிறுகதை ஆ) புதினம்
இ) காப்பியம் ஈ) கவிதை **[விடை: ஆ) புதினம்]**

**2. 'புயலிலே ஒரு தோணி' என்னும் புதினத்தின் ஆசிரியர்**

அ) ப. சிங்காரம் ஆ) மு.வ.
இ) திரு.வி.க. ஈ) அகிலன் **[விடை: அ) ப. சிங்காரம்]**

**3. வடஇந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை தொடங்கப்பட்ட ஆண்டு**

அ) 2004 ஆ) 2000
இ) 1999 ஈ) 1940 **[விடை: ஆ) 2000]**

**4. இலங்கை தந்த புயலின் பெயர்**

அ) அக்னி ஆ) ஆகாஷ்
இ) கஜா ஈ) ஜல் **[விடை: இ) கஜா]**

**5. 'கப்பித்தான்' என்பது எதைக் குறிக்கிறது?**

அ) தலைமை மாலுமி ஆ) கப்பல்
இ) புயல் ஈ) பயணி **[விடை: அ) தலைமை மாலுமி]**

**6. 'தொங்கான்' என்பது எதைக் குறிக்கிறது?**

அ) தலைமை மாலுமி ஆ) கப்பல்
இ) புயல் ஈ) பயணி **[விடை: ஆ) கப்பல்]**

**7. புலம்பெயர்ந்த தமிழர்களைப் பற்றிய முதல் புதினம்**

அ) புயலிலே ஒரு தோணி ஆ) தோணி வருகிறது
இ) கள்ளத் தோணி ஈ) அகல்விளக்கு **[விடை: அ) புயலிலே ஒரு தோணி]**



www.tnpscjob.com

8. **தென்கிழக்காசியப் போர் மூண்டதில் மலேசியா, இந்தோனேசியா பகுதிகளில் நிகழ்வதாக உள்ள கற்பனைப் படைப்பு**

அ) ஆறாம் திணை ஆ) புயலிலே ஒரு தோணி
இ) பால் மரக்காட்டினிலே ஈ) இவற்றில் எதுவுமில்லை

**[விடை: ஆ) புயலிலே ஒரு தோணி]**

9. **புயலிலே ஒரு தோணி என்னும் புதினத்தின் ________ என்னும் அத்தியாயத்தின் சுருக்கப்பட்ட பகுதி பாடமாக வைக்கப்பட்டுள்ளது.**

அ) காவியக்கூத்து ஆ) கலைக்கூத்து
இ) கடற்கூத்து ஈ) இசைக்கூத்து **[விடை: இ) கடற்கூத்து]**

10. **பா. சிங்காரத்தின் ஊர் ________ மாவட்டம் ________**

அ) சிங்கம்புணரி, சிவகங்கை ஆ) உறையூர், திருச்சி
இ) மேட்டுப்புதூர், ஈரோடு ஈ) தென்காசி, திருநெல்வேலி

**[விடை: அ) சிங்கம்புணரி, சிவகங்கை]**

11. **ப. சிங்காரம் ________ இந்தோனேசியா சென்றார்.**

அ) வேலைக்காக ஆ) தூதராக
இ) ஆய்வாளராக ஈ) அகதியாக **[விடை: அ) வேலைக்காக]**

12. **ப. சிங்காரம் பணியாற்றிய இதழ்**

அ) தினகரன் ஆ) தினமணி
இ) தினத்தந்தி ஈ) தினபூமி **[விடை: இ) தினத்தந்தி]**

13. **ப. சிங்காரத்தின் சேமிப்பான ________ இலட்சம் ரூபாயை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கினார்.**

அ) ஏழரை ஆ) ஆறரை
இ) நான்கரை ஈ) பத்து **[விடை: அ) ஏழரை]**

14. **'பல் பழப் பலவின் பயங்கெழு கொல்லி' என்று குறிப்பிடும் நூல்**

அ) புறநானூறு ஆ) அகநானூறு
இ) கலித்தொகை ஈ) நாலடியார் **[விடை: ஆ) அகநானூறு]**

15. **கொல்லிமலை அமைந்துள்ள மாவட்டம்**

அ) தர்மபுரி ஆ) சேலம்
இ) நாமக்கல் ஈ) திண்டுக்கல் **[விடை: இ) நாமக்கல்]**

16. **புதுதில்லியில் உள்ள உலக வானிலை அமைப்பின் மண்டலம் சிறப்பு வானிலை ஆய்வுமையம் 2004 செப்டம்பரில் இருந்து புயல்களுக்குப் பெயர் வைக்க ________ பெயர்களைப் பட்டியலிட்டுள்ளது.**

அ) 62 ஆ) 64
இ) 60 ஈ) 54 **[விடை: ஆ) 64]**

17. **'பெய்ட்டி' புயலின் பெயரைத் தந்த நாடு**

அ) இந்தியா ஆ) இலங்கை
இ) ஓமன் ஈ) தாய்லாந்து **[விடை: ஈ) தாய்லாந்து]**

18. **புயலுக்கு இந்தியா தந்துள்ள பெயர்களில் நான்கு பூதங்களைக் கண்டறி.**

அ) அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல் ஆ) மேக், அக்னி, ஜல்
இ) மேக், சாகர், வாயு, ஆகாஷ் ஈ) பிஜ்லி, அக்னி, மேக், கஜா

**[விடை: அ) அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல்]**

இயல் 2

www.tnpscjob.com

**19. வானிலை ஆய்வாளர்கள், பொதுமக்கள், கடல் மாலுமிகள் ஆகியோர்க்கு வானிலை எச்சரிக்கையைப் புரிந்து கொண்டு செயல்படக் கொடுக்கப்படுவது**

அ) புயலின் பெயர்கள் ஆ) கலங்கரை விளக்கம்
இ) நிவாரண உதவி ஈ) திசைகாட்டும் கருவி **[விடை: அ) புயலின் பெயர்கள்]**

**20. _______ நூற்றாண்டின் தொடக்கத்தில் தெற்காசிய நாடுகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் குடியேறினர்.**

அ) பதினெட்டாம் ஆ) பத்தொன்பதாம்
இ) பதினாறாம் ஈ) பதினேழாம் **[விடை: ஆ) பத்தொன்பதாம்]**

**21. ப. சிங்காரம் இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்த போது இருந்த இடம்**

அ) இந்தோனேசியா, மெபின் நகர் ஆ) இலங்கை, யாழ்ப்பாணம்
இ) மலேசியா, கோலாலம்பூர் ஈ) சீனா, பெய்ஜிங்
**[விடை: அ) இந்தோனேசியா, மெபின் நகர்]**

**22. பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | கப்பித்தான் | - | 1. இந்தோனேசியாவிலுள்ள இடம் |
| ii) | தொங்கான் | - | 2. மீன் வகை |
| iii) | அவுலியா | - | 3. கப்பல் |
| iv) | பிலவான் | - | 4. தலைமை மாலுமி (கேப்டன்) |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4
இ) 2, 1, 3, 4 ஈ) 3, 4, 2, 1 **[விடை: அ) 4, 3, 2, 1]**

**23. "ஓடி வாருங்கள்! இங்கே ஓடி வாருங்கள்! லெக்காஸ், லெக்காஸ்! என்று கத்தியவன்**

அ) பாண்டியன் ஆ) கப்பித்தான்
இ) ஜப்பானிய அதிகாரி ஈ) குஸ்டாவ் **[விடை: ஆ) கப்பித்தான்]**

**24. 'தமிரோ' என்று உறுமியவர்**

அ) மாலுமி ஆ) ஜப்பானிய அதிகாரி
இ) சீன அதிகாரி ஈ) பாண்டியன் **[விடை: ஆ) ஜப்பானிய அதிகாரி]**

**25. வானிலை மாற்றத்தைக் கண்டு எழுந்து போய்ப் பார்த்தவன்**

அ) மாலுமி ஆ) பாண்டியன்
இ) கப்பித்தான் ஈ) சேரன் **[விடை: ஆ) பாண்டியன்]**



## கற்பவை கற்றபின்

பக்கம்: 39

**1. கடலில் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை வெளிப்படுத்த அடுக்குத் தொடர்களும் வருணனைகளும் எவ்வாறெல்லாம் பயன்பட்டுள்ளன என்பது குறித்து வகுப்பில் பேசுக.**

- புயலின் சீற்றத்தினால் சிக்கித் தவித்தவர்கள் 'இருள் நீங்கி சூரிய வெளிச்சத்தைக் கண்டதும் 'சூரியன் சூரியன் சூரியன்' எனச் சற்று பதற்றம் நீங்கக் கூறினர்.
- புயலில் சிக்கி ஐந்தாம் நாள் கரையைக் கண்டபோது "கரை கரை" எனச் சத்தமிட்டனர். மேற்கண்ட அடுக்குத் தொடர்கள் பதற்றத்தின் மத்தியில் காக்கப்படுவோம் என்னும் நம்பிக்கையில் கூறியதாகும்.
- எண்ணெய் பூசியவைப் போல் மொழுமொழுவென நெளிந்த அலைகள் என்ற வருணனை, அலையின் தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

www.tnpscjob.com

- வானைப் பிளந்த பின்னல் கீற்றுகள். வானம் உடைந்து வெள்ளம் கொட்டியது என்ற வருணனைகள் மின்னலின் அகோர ஒளி வீச்சையும், மழைப் பொழிவின் அளவு மற்றும் வேகத்தைக் குறிப்பதாய் அமைந்துள்ளது.
- தலைக்கு மேல் வெள்ளம்; வானுடன் கடல் கலந்து வளியுடன் இணைந்து விட்டது என்னும் தொடர் மூலம் புயலில் தோணியின் நிலை என்னவாயிருக்கும் என்பதை உணர்த்துகிறது.

**2. நீங்கள் எதிர்கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக. (மழை, வெள்ளம், புயல், வறட்சி)**

**மழை :**

தவறிப்பெய்த பருவமழையால் அறுவடைக்குத் தயாராய் இருந்த பயிர்கள் நீரில் நனைந்து நாசம் அடைந்தன. போக்குவரத்து பாதிப்புகளால் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாயினர். மழைப் பொழிவின் காரணமாக மக்கள் பலர் வெளியே செல்ல முடியாததாலும். மின்சாரம் தடை செய்யப்பட்டதாலும் பல தொழில்கள் முடங்கின.

**புயல் :**

சென்னைக்குத் தென்கிழக்கே 260 கி.மீ தொலைவிலும், நாகைக்கு வடகிழக்கே 180 கி.மீ தொலைவிலும் மையம் கொண்டிருந்த கஜா புயல், மேற்கு தென் மேற்குத் திசையில் நகர்ந்து கடலூர் பாம்பன் இடையே நாகைக்கு அருகே மணிக்கு 111 கி.மீ வேகத்தில் கரையைக் கடந்தது. புயலானது கரையைக் கடந்த போதிலும் டெல்டா மற்றும் கரையோர பகுதி மக்களின் கவலை இன்னும் கடந்து போகவில்லை. ஏனெனில் விவசாயிகள், மீனவர்கள் ஆகியோரின் வாழ்வாதாரமே அழிந்தது.

**வெள்ளம்:**

கடந்த 2018 ஆம் ஆண்டு கேரளாவில் ஏற்பட்ட வெள்ளமானது அம்மாநிலத்தையே புரட்டிப் போட்டது. தென்மேற்கு பருவக்காற்றினால் ஏற்பட்ட மழைப்பொழிவே இதற்குக் காரணம். வெள்ளத்தினால் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி பலர் உயிரிழந்தனர். இதில் கேரளாவில் உள்ள இடுக்கி, வயநாடு கோழிக்கோடு உட்பட 10 மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. மலைப்பாதையில் ஏற்பட்ட மண்சரிவினால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

**வறட்சி:**

இந்திய வானிலைத் துறையின் கூற்றுப்படி 10 சதவிதத்திற்கும் குறைவான மழைப்பொழிவு இருக்குமேயானால் அந்நாட்டை வறட்சியால் பாதிக்கப்பட்ட நாடு எனலாம். பற்றாக் குறையான மழைப் பொழிவே வறட்சிக்குக் காரணம் பருவகாலம் பொய்த்துப் போவதால் உருவாகும்.

மழைப் பொழிவின்மை, பருவகால மாறுபாடுகள், காடுகள் அழிவு, சுற்றுச்சூழல் சீர்கேடு, அதிக அளவு ஆவியாதல், மோசமான நில மேலாண்மை, அதீத மேய்ச்சல், மண் அரிப்பு ஆகியன வறட்சி ஏற்பட முக்கியக் காரணங்களாகும்.



www.tnpscjob.com

இயல் 2 இயற்கை

கற்கண்டு

# தொகைநிலைத் தொடர்கள்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'பெரிய மீசை' சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?**

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை **[விடை: அ) பண்புத்தொகை]**

### குறுவினா

1. **தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.**

**தண்ணீர் குடி**
- தண்ணீரைக் குடி (இரண்டாம் வேற்றுமைத் தொகை)
- மிகுந்த தாகத்தினால் தண்ணீரைக் குடித்தேன்.

**தயிர்க்குடம்**
- தயிரை உடைய குடம் (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை)
- கமலா தயிர்க்குடத்திலிருந்து தயிரை ஊற்றினாள்.

### சிறுவினா

1. **தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.**
**இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.**

**மல்லிகைப்பூ**
- இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.
- மல்லிகை என்னும் பூ (மல்லிகை - சிறப்புப் பெயர், பூ - பொதுப் பெயர்)

**பூங்கொடி**
- உவமைத் தொகை
- பூ போன்ற கொடி

**தண்ணீர்த் தொட்டியில்**
- இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
- தண்ணீரை ஊற்றும் தொட்டி

**குடிநீர் நிரப்பினாள்**
- இரண்டாம் வேற்றுமைத் தொகை
- குடிநீரை நிரப்பினாள்



www.tnpscjob.com

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. தொகை நிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?**

அ) இரண்டு ஆ) நான்கு
இ) ஐந்து ஈ) ஆறு **[விடை: ஈ) ஆறு]**

**2. கீழ்க்காணும் சொற்களில் உம்மைத்தொகை அல்லாத சொல் எது?**

அ) தேர்ப்பாகன் ஆ) அண்ணன் தம்பி
இ) வெற்றிலை பாக்கு ஈ) இரவு பகல் **[விடை: அ) தேர்ப்பாகன்]**

**3. 'மதுரை சென்றார்' - இத்தொடரில் அமைந்துள்ள வேற்றுமைத்தொகை எவ்வகை வேற்றுமைத் தொகைக்குப் பொருந்தும்?**

அ) மூன்றாம் வேற்றுமைத் தொகை
ஆ) நான்காம் வேற்றுமைத் தொகை
இ) ஐந்தாம் வேற்றுமைத் தொகை
ஈ) ஆறாம் வேற்றுமைத் தொகை **[விடை: ஆ) நான்காம் வேற்றுமைத் தொகை]**

**4. பொருத்துக.**

1. மதுரை சென்றார் - அ) வினைத்தொகை
2. வீசு தென்றல் - ஆ) பண்புத்தொகை
3. செங்காந்தள் - இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
4. மார்கழித் திங்கள் - ஈ) நான்காம் வேற்றுமைத் தொகை

அ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ ஆ) 1.ஈ 2.இ 3.ஆ 4.அ
இ) 1.ஈ 2.ஆ 3.அ 4.இ ஈ) 1.ஈ 2.இ 3.அ 4.ஆ **[விடை: அ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

**5. பொருத்துக.**

1. உவமைத்தொகை - அ) முறுக்கு மீசை வைத்தார்
2. உம்மைத்தொகை - ஆ) மலர்க்கை
3. அன்மொழித்தொகை - இ) வட்டத்தொட்டி
4. பண்புத்தொகை - ஈ) அண்ணன் தம்பி

அ) 1.ஆ 2.ஈ 3.அ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.இ 3.அ 4.ஈ ஈ) 1.இ 2.ஈ 3.அ 4.ஆ **[விடை: அ) 1.ஆ 2.ஈ 3.அ 4.இ]**

**6. பண்புத்தொகை அல்லாத ஒன்று**

அ) செங்காந்தள் ஆ) வட்டத்தொட்டி
இ) இன்மொழி ஈ) கொல்களிறு **[விடை: ஈ) கொல்களிறு]**

**7. காலம் கரந்த பெயரெச்சம்**

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை **[விடை: அ) வினைத்தொகை]**

**8. வேற்றுமையுருபு அல்லாதது**

அ) ஐ, ஒடு ஆ) கு, இன்
இ) ஆகிய, ஆன ஈ) அது, கண் **[விடை: இ) ஆகிய, ஆன]**



www.tnpscjob.com

9. **பொருந்தாத இணையைக் கண்டறிக**

அ) வினைத்தொகை - தேர்ப்பாகன்
ஆ) பண்புத்தொகை - இன்மொழி
இ) உம்மைத்தொகை - தாய் சேய்
ஈ) அன்மொழித்தொகை - சிவப்புச்சட்டை பேசினார்

**[விடை: அ) வினைத்தொகை - தேர்ப்பாகன்]**

10. **'மலர் போன்ற கை' இதில் 'மலர்' என்பது ______ 'போன்ற' என்பது ______ 'கை' என்பது ______**

அ) உவம உருபு - உவமை - உவமேயம்
ஆ) உவமை - உவம உருபு - உவமேயம்
இ) உவமேயம் - உவமை - உவம உருபு
ஈ) இவற்றுள் ஏதுமில்லை

**[விடை: ஆ) உவமை - உவம உருபு - உவமேயம்]**

11. **சிறப்புப் பெயர், பொதுப்பெயர் ஆகியன வரும் தொகைச்சொல்**

அ) பண்புத்தொகை
ஆ) வினைத்தொகை
இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
ஈ) உம்மைத்தொகை

**[விடை: இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை]**

12. **மார்கழித் திங்கள், சாரைப்பாம்பு ஆகிய சொற்களில் இடம்பெறும் பொதுப்பெயர்கள் எவை?**

அ) மார்கழி, சாரை　ஆ) திங்கள், பாம்பு
இ) மார்கழி, பாம்பு　ஈ) திங்கள், சாரை

**[விடை: ஆ) திங்கள், பாம்பு]**

13. **'செங்காந்தள்' - இப்பண்புத்தொகைச் சொல்லில் மறைந்து வரும் உருபு**

அ) ஆன　ஆ) ஆகிய
இ) போன்ற　ஈ) ஐ

**[விடை: ஆ) ஆகிய]**

14. **'இன்மொழி' - இப்பண்புத்தொகைச் சொல்லில் மறைந்து வரும் உருபு**

அ) ஆன　ஆ) ஆகிய
இ) போன்ற　ஈ) இன்

**[விடை: அ) ஆன]**

15. **'மதுரை சென்றாள்' - இவ்வேற்றுமைத்தொகைச் சொல்லில் இடம்பெறும் வேற்றுமை உருபு**

அ) கு　ஆ) கண்
இ) ஆல்　ஈ) அது

**[விடை: அ) கு]**

16. **கரும்பு தின்றான் - இத்தொடர் ________ வேற்றுமைத்தொடர்.**

அ) இரண்டாம்　ஆ) மூன்றாம்
இ) நான்காம்　ஈ) ஆறாம்

**[விடை: அ) இரண்டாம்]**

17. **நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைக்கான சொல்**

அ) தேர்ப்பாகன்　ஆ) தமிழ்த்தொண்டு
இ) கரும்பு தின்றான்　ஈ) மதுரை சென்றார்

**[விடை: ஆ) தமிழ்த்தொண்டு]**

18. **பொருத்திக் காட்டுக.**

i) வீசு தென்றல் - 1. உம்மைத் தொகை
ii) செங்காந்தள் - 2. உவமைத்தொகை
iii) மலர்க்கை - 3. பண்புத்தொகை
iv) தாய்சேய் - 4. வினைத்தொகை

இயல் 2

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2
இ) 4, 2, 1, 3 ஈ) 2, 3, 4, 1 **[விடை: அ) 4, 3, 2, 1]**

**19. இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கான சொல்**

அ) மலர்க்கை ஆ) அண்ணன் தம்பி
இ) மார்கழித்திங்கள் ஈ) தேர்ப்பாகன் **[விடை: இ) மார்கழித்திங்கள்]**

**20. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| i) | இன்மொழி | – | 1. உவமைத்தொகை |
| ii) | தாய்சேய் | – | 2. வினைத்தொகை |
| iii) | முத்துப்பல் | – | 3. உம்மைத் தொகை |
| iv) | வருபுனல் | – | 4. பண்புத்தொகை |

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 4, 2, 1
இ) 4, 3, 2, 1 ஈ) 4, 3, 1, 2 **[விடை: ஈ) 4, 3, 1, 2]**

**21. சிவப்புச்சட்டை பேசினார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?**

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை **[விடை: அ) பண்புத்தொகை]**

## குறுவினா

**1. சொற்றொடர் என்றால் என்ன? எ.கா. தருக.**

- சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தரும்.
- இது தொடர் அல்லது சொற்றொடர் எனப்படும்.

**எ.கா:** நீர் பருகினான்.

**2. தொகைநிலைத் தொடர் என்றால் என்ன?**

- பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும் சேரும் தொடர்.
- இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை பண்பு முதலியவற்றின் உருபுகளோ மறைந்து வரும்.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்கும்.

**எ.கா:** கரும்பு தின்றான்.

**3. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும். அவை:

- வேற்றுமைத்தொகை
- வினைத்தொகை
- பண்புத்தொகை
- உவமைத்தொகை
- உம்மைத்தொகை
- அன்மொழித்தொகை

**4. வேற்றுமை உருபுகள் எத்தனை? அவை யாவை?**

வேற்றுமை உருபுகள் ஆறு. அவை: ஐ, ஆல், கு, இன், அது, கண்.

**5. வேற்றுமைத்தொகை என்றால் என்ன? எ.கா தருக.**

ஒரு தொடரில் வேற்றுமை உருபுகளில் ஏதேனும் ஒன்று மறைந்து வந்து பொருள் தரும்.
**எ.கா:** மதுரை சென்றார் - மதுரைக்குச் சென்றார்.

**6. உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை என்றால் என்ன? எ.கா. தருக.**

ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வரும்.
**எ.கா:** தேர்ப்பாகன்.



www.tnpscjob.com

தேரை ஓட்டும் பாகன். ஐ - உருபு; ஓட்டும் - பயன்.

இதுவும் வேற்றுமைத் தொகையே.

**7. பண்புத்தொகையைச் சான்றுடன் விளக்குக.**

- அளவு, நிறம், வடிவம், சுவை ஆகியவற்றை உணர்த்தும்.
- பண்புப்பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும். இடையில் 'மை' என்னும் பண்பு விகுதி மறைந்து வரும்.
- ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகள் மறைந்து வரும்.

**எ.கா:** செங்காந்தள், வட்டத்தொட்டி.

**8. இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்றால் என்ன? சான்று தருக.**

- சிறப்புப் பெயர் முன்னும் பொதுப் பெயர் பின்னுமாக வரும்.
- இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு தொக்கி வரும்.

**எ.கா:** மார்கழித் திங்கள்.

**9. உவமைத்தொகை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தந்து விளக்குக.**

உவமைக்கும் உவமேயத்திற்கும் இடையில் உவம உருபு மறைந்து வரும்.

**எ.கா:** மலர்க்கை. உவமை - மலர், உவமேயம் - கை, உவம உருபு - போன்ற.

மலர் போன்ற கை எனப் பொருள் படும்.

**10. உம்மைத்தொகை என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.**

இருசொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வரும்.

**எ.கா:** தாய்சேய், அண்ணன் தம்பி.

தாயும் சேயும், அண்ணனும் தம்பியும் என விரிந்து பொருளை உணர்த்துகின்றன.

**11. அன்மொழித்தொகை என்றால் என்ன?**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகை நிலைத் தொடர்களில் அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தரும்.

**எ.கா:** முறுக்கு மீசை வந்தார்.

முறுக்கு மீசையை உடையவர் வந்தார் எனத் தொகை நிலைத்தொடர் அல்லாத வேறு சொல் மறைந்து நின்று பொருள் தருகிறது.

**12. உம்மைத்தொகை எத்தனை அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும்? அவை யாவை?**

உம்மைத்தொகை நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும். அவை:

- எண்ணல்
- எடுத்தல்
- நீட்டல்
- முகத்தல்

**13. இடைச்சொல் மறைந்து வரும் தொகைச் சொற்கள் எவை?**

- வேற்றுமைத் தொகை
- வினைத்தொகை
- பண்புத்தொகை
- இருபெயரொட்டுப் பண்புத்தொகை
- உவமைத்தொகை
- அன்மொழித்தொகை

**14. வினைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.**

காலம் கரந்த பெயரெச்சம். காலம் காட்டும். இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்கும். வினைப்பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து ஒரு சொல்லைப் போல் நடக்கும்.

**எ.கா: வீசு தென்றல் என்பது**, வீசிய தென்றல், வீசுகின்ற தென்றல், வீசும் தென்றல் என முக்காலத்திற்கும் பொருந்தும்.



www.tnpscjob.com

## கற்பவை கற்றபின்

பக்கம்: 42

**வண்ணமிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக.**

1. **அன்புச்செல்வன் திறன்பேசியின் தொடுதிரையில் படித்துக்கொண்டிருந்தார்.**

   **அன்புச்செல்வன்** – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

   **தொடுதிரை** – வினைத்தொகை

2. **அனைவருக்கும் மோர்ப்பானையைத் திறந்து மோர் கொடுக்கவும்.**

   **மோர்ப் பானை** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

   **மோர் கொடுக்கவும்** – இரண்டாம் வேற்றுமைத் தொகை

3. **வெண்டைக்காய்ப் பொரியல் மோர்க்குழம்புக்குப் பொருத்தமாக இருக்கும்.**

   **வெண்டைக்காய்ப்** – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

   **மோர்க்குழம்பு** – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

4. **தங்க மீன்கள் தண்ணீர்த் தொட்டியில் விளையாடுகின்றன.**

   **தங்கமீன்கள்** – உவமைத்தொகை

   **தண்ணீர்த் தொட்டியில்** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 45

**தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flower's fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**இயற்கை**

பொன்னான கதிரவன் நாள்தோறும் காலையில் எழுந்து அதன் ஒளிக்கதிர்களை வீசி, இருளை மறையச் செய்யும், பால் போன்ற மேகங்கள் சுற்ற ஆரம்பித்துவிடும். வண்ணப் பறவைகள் இதமான சூழ்நிலையைத் தன் இறகுகளை அடிப்பதன் மூலம் உருவாக்கும். அழகான வண்ணத்துப் பூச்சி மலர்களைச் சுற்றி ஆடும். பூக்களின் நறுமணம் தென்றல் காற்றை நிரப்பும். அந்தக் காற்று அனைத்து இடங்களிலும் பரவி ஒரு புத்துணர்வான சூழ்நிலையை உருவாக்கும்.

**சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

**இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்**

**எ.கா: இன்சொல் - பண்புத்தொகை**

**இனிமையான சொல்** கூறுதல் சான்றோர்க்கு அழகு.

1. **எழுகதிர்** – வினைத்தொகை

   மனித வாழ்க்கை **எழுகதிர்** போன்றது.

2. **கீரிபாம்பு** – உம்மைத்தொகை

   கலாவும் மாலாவும் **கீரியும் பாம்பும்** போல எப்பொழுதும் பகைமையோடு வாழ்கின்றனர்.

3. **பூங்குழல் வந்தாள்** – அன்மொழித்தொகை

   **பூ போன்ற கூந்தலையுடைய** (குழல்) பெண் வந்தாள்



www.tnpscjob.com

4. **மலை வாழ்வார்** - ஏழாம் வேற்றுமைத் தொகை
குறிஞ்சி நில மக்கள் **மலையின் கண் வாழ்வார்.**

5. **முத்துப்பல்** - உவமைத்தொகை
மாலாவின் **முத்துப்பல்** மேலும் அவளுக்கு அழகு சேர்க்கிறது.

**செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பூக்களைப் பற்றிய அரிய இலக்கியச் செய்திகள்

பூ உண்டு, ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்பதற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள், ஆல மலர்; பலா மலர்.

மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள் : சுள்ளி மலர், பாங்கர் மலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் : அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன : நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை.

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

*- கோவை. இளஞ்சேரன்.*

1. **மலர் உண்டு; பெயரும் உண்டு - இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக.**
மலருக்குப் பெயர் உண்டு.

2. **அரும்பாகி மொட்டாகிப் பூவாகி.... என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக.**
அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள்.

3. **நீங்கள் அறிந்த இரு பூக்களின் பெயர்களையும் அதன் பயன்களையும் எழுதுக.**
   - **முருங்கைப்பூ:**
   இப்பூவைக் கசாயம் செய்து வாரம் இருமுறை குடிக்கவும். குடித்துவர நீரழிவு நோய், நரம்புத்தளர்ச்சி நோய் நீங்கும். நினைவு ஆற்றல் பெருகும்.
   - **எருக்கம் பூ**
   எருக்கம் பூவைக் காய வைத்து பொடி செய்து புண்களில் பூச விரைவில் குணமாகும். கால் வீக்கம் குறைய இப்பூவை எண்ணெயில் வதக்கிக் கட்ட வீக்கம் நீங்கும்.

4. **அரிய மலர் - இலக்கணக் குறிப்புத் தருக.**
குறிப்புப் பெயரெச்சம்.

5. **தொடரில் பொருந்தாப் பொருள் தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக.**
**இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மனத்தை ஏற்றும்.**
இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை, கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும்.

இயல் 2

**வாழ்த்துமடல் எழுதுக.**

**மாநில அளவில் நடைபெற்ற ''மரம் இயற்கையின் வரம்'' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

திருநெல்வேலி,
12-03-2020.

அன்புள்ள நண்பன் அரசுக்கு,

உன் உயிர் நண்பன் எழுதுவது. நலம் நலமறிய ஆவல்,

நேற்றைய நாளிதழில் 'மரம் இயற்கையின் வரம்' என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் பங்குகொண்டு முதல் பரிசு பெற்றதைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினோம். நாளிதழிலும் அக்கட்டுரை வெளிவந்திருந்தது. அதனைப் படித்துப் பார்த்தோம்.

**மரம்தான் மரம்தான்**
**மனிதன் மறந்தான் மரத்தை**

என்று நீ எழுதிய சொற்கள் விழிப்படையச் செய்துவிட்டது. நாங்களும் எங்கள் பகுதியில் மரங்களை நட்டு இயற்கை வளத்தைப் பாதுகாக்கும் செயல்களில் ஈடுபட ஆரம்பித்து விட்டோம்.

நீயும் இதுபோன்ற பல்வேறு போட்டிகளில் பங்குகொண்டு உலகளாவிய சாதனைகளைப் பெற்று வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமைத் தேடித்தர மனதார உன்னை வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
உன் உயிர் நண்பன்,
க. தமிழ்மணி.

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
ச. அரசு,
103, செந்தமிழ்நகர்,
ஈரோடு - 638 002.

**பாரதியின் வசனநடை - சிட்டுக்குருவி**

சிறியதானியம் போன்ற மூக்கு; சின்னக்கண்கள்; சின்னத்தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள்; இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண் மற்றொன்று பெண்.

இது போன்று உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒன்றைப் பற்றி வசனநடையில் எழுதுக.

**மயில்**

உறுதி மிக்க மூக்கு; விதையொத்த கண்கள்; சின்னத்தலை; கரும்பச்சை மற்றும் கருநீல நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமை, சாம்பல் மற்றும் செந்நிறம் கலந்த பட்டுப்போர்த்த முதுகு; நீண்ட அழகிய பல வண்ணத்தாலான தோகை; பனங்கிழங்கையொத்த கால்கள்; இத்தனையும் சேர்த்து ஒருவர் கையிலே பிடிப்பது மிகவும் அரிது. இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டுத் தோட்டத்திற்கு இரண்டு, உயிர்கள் வந்து போகின்றன. அவற்றில் ஒன்று ஆண் மயில் மற்றொன்று பெண் மயில்.



www.tnpscjob.com

## மொழியோடு விளையாடு

பக்கம்: 47

**சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**

1. **முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும்.**
   நறுமணம்
2. **பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும்.**
   புதுமை
3. **இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை.**
   காற்று
4. **நாலெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும்.**
   விண்மீன்
5. **ஒரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்.**
   காடு

**நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.**

1. **கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது.**
   காற்றின் பாடல்
2. **புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன.**
   மொட்டின் வருகை.
3. **சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன.**
   மிதக்கும் வாசம்.
4. **இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்; மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும்; கசகசத்த உயிரினங்கள்.**
   உயிர்ப்பின் ஏக்கம்.
5. **நின்றுவிட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.**
   நீரின் சிலிர்ப்பு.
6. **குயில்களின் கூவலிசை. புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும். இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம்.**
   வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு.

**அகராதியில் காண்க.**

**அகன்சுடர், ஆர்கலி, கட்புள், கொடுவாய், திருவில்**

**அகன்சுடர்** – (அகல் என்பதன் திரிபு) அகல்சுடர், அகன்ற சுடர்.
**ஆர்கலி** – கடல், மழை, வெள்ளம், பேரொலி, ஆரவாரம்.
**கட்புள்** – ஓர் புலவன்.
**கொடுவாய்** – ஒரு மிருகம், பழிச்சொல், புலி, குறளை, வளைந்த வாய்.
**திருவில்** – இந்திரவில்.

இயல் 2

www.tnpscjob.com

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



ஏ! மானிடா......... ஏ! மானிடா
என்னை (மரத்தை) அழித்தாய்
எனக்கும் ஒரு காலம் வரும்
பள்ளிக்குழந்தைகள்
புத்தகப்பை சுமப்பது போல
உயிர்வளிக்காக
என்னையும் நீ சுமப்பாய்.......
உயிர்வாழ்வதற்கு.

## நிற்க அதற்குத் தக

*பக்கம்: 48*

**வானொலி அறிவிப்பு**

ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**புயலின்போது**

| | |
|---|---|
| புயலின்போது வெளியே செல்ல வேண்டாம். | வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போதே வெளியேறவும். |
| தொலைபேசி, மின்சாதனங்கள் பயன் படுத்துவதைத் தவிர்க்கவும். | மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே தங்கவும். |
| வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும். | காற்று அடிப்பது நின்றாலும் எதிர்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும், எனவே, காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்க வேண்டாம். |
| மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். | வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும். |

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

- புயலின் போது வெளியே செல்ல மாட்டோம்.
- தொலைபேசி மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்போம்.
- மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே குடும்பத்தினரோடு தங்குவேன்.
- காற்றடிப்பது நின்றாலும் வானொலி அறிவிப்பைக் கேட்டு அதற்கேற்ப செயல்படுவோம்.

**கலைச்சொல் அறிவோம்**

- Storm - புயல்    Tornado - சூறாவளி
- Tempest - பெருங்காற்று    Land Breeze - நிலக்காற்று
- Sea Breeze - கடற்காற்று    Whirlwind - சுழல்காற்று


www.tnpscjob.com

இயல் 3 பண்பாடு

உரைநடை உலகம்

# விருந்து போற்றுதும்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **பின்வருவனவற்றுள் முறையான தொடர்.**
   அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
   ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
   இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
   ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.
   **[விடை: இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.]**

2. **விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை.**
   அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
   இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து **[விடை: ஆ) இன்மையிலும் விருந்து]**

### குறுவினா

1. **'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.**
   - விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றாகக் கருதமுடியாது.
   - ஏனென்றால், இனிய சொற்களும், நல்ல உபசரிப்பும் இல்லாமல் செல்வத்தால் செய்யும் விருந்தோம்பலை யாரும் ஏற்கமாட்டார்கள். எனவே, செல்வத்தைவிட விருந்தோம்பலுக்கு இனியச் சொற்களும் நல்ல உபசரிப்பும், மனமும் இருந்தால் போதும் என்பது என் கருத்தாகும்.

### சிறுவினா

1. - **புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.**
   - **திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது.**

   **இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.**
   - அன்றைய காலத்தில் வழிப்போக்கர்களே விருந்தினராகப் போற்றப்பட்டனர்.

- காலமாற்றத்தால் நாகரிகம் என்னும் பெயரால், வழிப்போக்கர்களுக்கு விருந்தளிப்பது மறைந்து, நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் மட்டுமே விருந்தளிக்கும் நிலையைத்தான் இன்று காணமுடிகின்றது.
- வழிப்போக்கர்களுக்கும், ஏழைகளுக்கும் கோவில் மற்றும் அன்னசத்திரங்கள் விருந்திட்டு வருகின்றன.
- விருந்தினர் என்று சொல்லி கயவர்கள் இன்று மக்களை ஏமாற்றுவதால் புதியவர்களை விருந்தினர்களாகப் போற்றப்படுவது இல்லை.
- இன்றைய சமுதாயத்தில் தன்னலம் மேலோங்கியதால் விருந்தென்னும் பொதுநலம் குறைந்து வருகின்றது.

## நெடுவினா

**1. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை<br>இனிது வரவேற்றல்<br>உணவு உபசரிப்பு<br>அன்பு வெளிப்பாடு<br>முடிவுரை |

**முன்னுரை :**

> **“செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
> **நல்விருந்து வானத் தவர்க்கு”**

என்ற குறட்பா வந்த விருந்தினரைப் பேணிப் போற்றி, இனி வரும் விருந்தினரை எதிர்பார்த்து இருப்பவனை வானவர்கள் போற்றும் சிறப்பு விருந்தினனாவான் என்கின்றது. வந்த விருந்தையும் வரும் விருந்தையும் சிறப்புடன் செய்வது இல்லத்தார் கடமையாகும்.

**இனிது வரவேற்றல் :**

வீட்டிற்கு வந்த உறவினர்களிடம் வாருங்கள், அமருங்கள், நலமா? நீர் அருந்துங்கள், குடும்பத்தினர் அனைவரும் நலமா? என சில வார்த்தைகளைக் கூறி முகமலர்ச்சியுடன் விருந்தினரை வரவேற்றேன்.

**உணவு உபசரிப்பு :**

- வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு அவர்கள் விரும்பும் அறுசுவை உணவைத் தயார் செய்து அவரை உணவு உண்ண வருமாறு இன்முகத்துடன் அழைத்து, அமர வைத்தேன்.
- தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது மரபு. ஆகவே தமிழ்ப் பண்பாடு மறையாதிருக்க தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவிட்டேன்.
- உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும், வலப்பக்கம் விரிந்த பகுதியும் வருமாறு வாழையிலையை விரித்தேன்.
- வாழை இலையின் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளை வைத்தேன். வாழை இலையின் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்தேன்.
- உண்பவர் மனமறிந்து அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளை மீண்டும் மீண்டும் பரிவுடன் பரிமாறினேன்.



www.tnpscjob.com

**அன்பு வெளிப்பாடு :**

- ஒரு குவளையில் நீரைக் கொண்டு வந்தேன். அதைக் கொண்டு அவர் அருகில் வைக்கப்பட்ட வெற்றுப்பாத்திரத்தில் அவர் கைகழுவுமாறு நீர் ஊற்றினேன்.
- பிறகு கைகளைத் துடைப்பதற்குத் துண்டினை அளித்தேன்.
- உணவு உண்டு எழுந்தவருக்கு ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு வைத்தேன். அவர் அதை மகிழ்வுடன் உண்டார்.
- உணவுண்டவரிடம் திருப்தியாக உண்டீர்களா? என விசாரித்து, வீட்டில் உள்ள உணவுப் பொருட்கள் சிலவற்றையும் கொடுத்து வீட்டில் உள்ளவர்களுக்குக் கொடுக்குமாறு கூறி, ஏழடி வரை அவருடன் சென்று வழியனுப்பிவைத்தேன்.

**முடிவுரை**

விருந்தினர் பேணுதல் தமிழர் மரபு ஆகும். அதனை அன்போடும் அருளோடும் செய்தல் நனிசிறப்பாகும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. வரிசைப்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடு.**

i) விருந்தே புதுமை - 1. செயங்கொண்டார்
ii) இல்லறவியல் - 2. இளங்கோவடிகள்
iii) சிலப்பதிகாரம் - 3. தொல்காப்பியர்
iv) கலிங்கத்துப்பரணி - 4. திருவள்ளுவர்

அ) 1, 2, 3, 4　ஆ) 4, 3, 2, 1
இ) 4, 3, 1, 2　ஈ) 3, 4, 2, 1　**[விடை: ஈ) 3, 4, 2, 1]**

**2. மினசோட்டா தமிழ்ச்சங்கம் அமைந்துள்ள இடம் எது?**

அ) அமெரிக்கா　ஆ) இலங்கை
இ) மொரிசியஸ்　ஈ) மலேசியா　**[விடை: அ) அமெரிக்கா]**

**3. தொல்காப்பியர் விருந்து என்பதை என்னவென்று கூறியுள்ளார்?**

அ) தொன்மை　ஆ) புதுமை
இ) இளமை　ஈ) முதுமை　**[விடை: ஆ) புதுமை]**

**4. "..........தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"
- என்று குறிப்பிடும் நூல் எது? இது யாருடைய கூற்றாக அமைகிறது?**

அ) கம்பராமாயணம், சீதை　ஆ) சிலப்பதிகாரம், கண்ணகி
இ) நளவெண்பா, தமயந்தி　ஈ) சீவகசிந்தாமணி, காந்தருவதத்தை
**[விடை: ஆ) சிலப்பதிகாரம், கண்ணகி]**

**5. "பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவான யாவையே" - என்று குறிப்பிடும் நூல்?**

அ) கம்பராமாயணம்　ஆ) பெரியபுராணம்
இ) சிலப்பதிகாரம்　ஈ) மணிமேகலை　**[விடை: அ) கம்பராமாயணம்]**



www.tnpscjob.com

6. "அல்லில் ஆயினும் விருந்து வரின்
உவக்கும்" என்று நள்ளிரவிலும் உணவிடும் குடும்பத் தலைவியின் விருந்தோம்பலைச் சிறப்பித்துக் கூறும் நூல்.

அ) குறுந்தொகை ஆ) அகநானூறு
இ) நற்றிணை ஈ) புறநானூறு [விடை: இ) நற்றிணை]

7. 'காலின் ஏழடிப் பின் சென்று' என விருந்தினரை வழியனுப்பும் தமிழரின் இயல்பைக் குறிப்பிடும் நூல்

அ) சிறுபாணாற்றுப்படை ஆ) பெரும்பாணாற்றுப்படை
இ) பொருநராற்றுப்படை ஈ) கூத்தராற்றுப்படை [விடை: இ) பொருநராற்றுப்படை]

8. "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" - இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்?

அ) கம்பராமாயணம் ஆ) கலிங்கத்துப்பரணி
இ) முக்கூடற்பள்ளு ஈ) பெரியபுராணம் [விடை: ஆ) கலிங்கத்துப்பரணி]

9. "குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து
சிறிது புறப்பட்டன்றோ இலள்" என்று புறநானூறு காட்சிப்படுத்தும் கருத்து?

அ) தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினர்க்கு உணவளித்தாள் தலைவி.
ஆ) உணவுக்காக வைத்திருந்த தானியத்தை விதைப்பதற்குத் தலைவனிடம் தந்தாள் தலைவி.
இ) குழந்தையின் பசியைப் போக்க விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்துச் சமைத்துத் தந்தாள் தலைவி.
ஈ) இவற்றில் எதுவுமில்லை.

[விடை: அ) தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினர்க்கு உணவளித்தாள் தலைவி.]

10. தலைவன் விருந்தளிக்க அடகும் பணையமும் வைத்த பொருட்கள் யாவை?

அ) பழையவாள், கருங்கோட்டுச் சீறியாழ்
ஆ) புதியவாள், நெடுங்கோட்டுப் பெரியாழ்
இ) பழையவாள், நெடுங்கோட்டுப் பெரியாழ்
ஈ) புதியவாள், கருங்கோட்டுச் சீறியாழ் [விடை: அ) பழையவாள், கருங்கோட்டுச் சீறியாழ்]

இயல் 3

11. அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்துச் சிவனடியாருக்கு விருந்து படைத்தவர் யார்? இக்காட்சி இடம் பெறும் நூல் எது?

அ) சாக்கியநாயனார், பெரியபுராணம்
ஆ) இளையான்குடி மாறநாயனார், பெரியபுராணம்
இ) காரைக்கால் அம்மையார், அற்புத திருவந்தாதி
ஈ) சுந்தரர், திருத்தொண்டத்தொகை

[விடை: ஆ) இளையான்குடி மாறநாயனார், பெரியபுராணம்]

12. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் கொடுத்தவையாகச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுபவை எவை?

அ) குழல் மீன் கறியும் பிறவும் ஆ) ஆரல் மீன் கறியும் உப்பும்
இ) உப்பும் முத்தும் ஈ) மீன் கறியும் நண்டும் விடை: அ) குழல் மீன் கறியும் பிறவும்]

13. "இலையை மடிப்பதற்கு முந்தைய
வினாடிக்கு முன்பாக
மறுக்க மறுக்க

www.tnpscjob.com

**பரிமாறப்பட்ட கூடுதல் இட்லியில்
நீண்டு கொண்டிருந்தது
பிரியங்களின் நீள் சரடு'' - என்னும் கவிதைக்கு உரியவர் யார்?**

அ) அம்சப்பிரியா ஆ) பா.விஜய்
இ) சிநேகன் ஈ) நா. முத்துக்குமார் **[விடை: அ) அம்சப்பிரியா]**

**14. ''பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீ ரோ''- என்று குறிப்பிடும் நூல் எது?**

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை
இ) பதிற்றுப்பத்து ஈ) பரிபாடல் **[விடை: ஆ) குறுந்தொகை]**

**15. ''மருந்தே ஆயினும் விருந்தோடு உண்'' என்று பாடியவர் யார்? நூல் எது?**

அ) ஔவையார், ஆத்திச்சூடி
ஆ) ஔவையார், கொன்றைவேந்தன்
இ) குமரகுருபரர், நீதிநெறி விளக்கம்
ஈ) வள்ளலார், ஜீவகாருண்ய ஒழுக்கம் **[விடை: ஆ) ஔவையார், கொன்றைவேந்தன்]**

**16. அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் ஆண்டுதோறும் கொண்டாடும் விழா**

அ) வாழையிலை விருந்து விழா
ஆ) இறைச்சி உணவு விருந்து விழா
இ) வேட்டி சேலை உடுத்தும் விழா
ஈ) நவதானிய விழா **[விடை: அ) வாழையிலை விருந்து விழா]**

**17. திருக்குறளில் விருந்தோம்பல் அதிகாரம் இடம்பெறும் இயல்**

அ) இல்லறவியல் ஆ) பாயிரவியல்
இ) அரசியல் ஈ) துறவறவியல் **[விடை: அ) இல்லறவியல்]**

**18. விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை உணர்த்தியவர்.**

அ) திருவள்ளுவர் ஆ) தொல்காப்பியர்
இ) இளங்கோவடிகள் ஈ) செயங்கொண்டார் **[விடை: இ) இளங்கோவடிகள்]**

**19. கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள், விருந்தும் ஈகையும் செய்வதாகக் குறிப்பிட்டுள்ளவர்**

அ) கம்பர் ஆ) தொல்காப்பியர்
இ) இளங்கோவடிகள் ஈ) செயங்கொண்டார் **[விடை: அ) கம்பர்]**

**20. இளையான்குடி மாறநாயனாரின் விருந்தளிக்கும் திறன் பற்றிக் குறிப்பிடும் நூல்?**

அ) பெரியபுராணம் ஆ) நற்றிணை
இ) பொருநராற்றுப் படை ஈ) கம்பராமாயணம் **[விடை: அ) பெரியபுராணம்]**

**21. பொருத்துக.**

1. விருந்தே புதுமை - அ) திருவள்ளுவர்
2. மோப்பக் குழையும் அனிச்சம் - ஆ) தொல்காப்பியர்
3. மருந்தே ஆயினும் விருந்தொடு உண் - இ) இளங்கோவடிகள்
4. விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை - ஈ) ஔவையார்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

இயல் 3

22. **விருந்தோம்பல் பற்றிய 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம் காணப்படுமிடம் ________**
அ) சிதம்பரம் ஆ) மதுரை
இ) மாமல்லபுரம் ஈ) திருச்சி **[விடை: அ) சிதம்பரம்]**

23. **விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே படைத்த புலவர் ________**
அ) ஔவையார் ஆ) திருவள்ளுவர்
இ) கபிலர் ஈ) கம்பர் **[விடை: ஆ) திருவள்ளுவர்]**

24. **"காலின் ஏழடிப் பின் சென்று" - என்னும் பொருநராற்றுப்படை உணர்த்தும் செய்தி**
அ) விருந்தினரின் காலைத் தொட்டு வணங்கினர்
ஆ) விருந்தினரை ஏழு அடி வரை நடந்து சென்று வழியனுப்பினர்.
இ) எழுவர் விருந்தினரின் பின் சென்று வழியனுப்பினர்.
ஈ) ஏழுநாள்கள் விருந்தளித்துப் பின் விருந்தினரை வழியனுப்புவர்.
**[விடை: ஆ) விருந்தினரை ஏழு அடி வரை நடந்து சென்று வழியனுப்பினர்.]**

25. **"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவே புளித்த மோரும்" - எனப் பாடியவர்**
அ) ஔவையார் ஆ) தொல்காப்பியர்
இ) கம்பர் ஈ) திருவள்ளுவர் **[விடை: அ) ஔவையார்]**

## குறுவினா

1. **விருந்தோம்பல் என்றால் என்ன?**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று, உண்ண உணவும் இடமும் கொடுத்தல், அவர்களிடம் அன்பு பாராட்டுதல் இவையே விருந்தோம்பல் எனப்படும்.

2. **உலகம் நிலைத்திருக்கிறதற்கான காரணங்கள் எவையென இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்?**
   - தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.
   - அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது, பிறருக்குக் கொடுக்கும் நல்லோர் உள்ளதால் உலகம் நிலைத்திருக்கிறது.

3. **'உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு' என்பதைக் குறித்து நற்றிணை குறிப்பிடும் செய்தி யாது?**
   - விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
   - நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு.

4. **இன்மையிலும் விருந்தோம்பல் குறித்து புறநானூறு எவ்வாறு காட்சிப்படுத்துகிறது?**
   - வீட்டிற்கு வந்தவர்க்கு வறிய நிலையிலும் எவ்வழியேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர்.
   - தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தி எடுத்து விருந்தினருக்கு உணவளித்தாள் தலைவி.

5. **வாளையும் யாழையும் பணையம் வைத்து விருந்தளிக்கப்பட்ட செய்தியைக் கூறு.**

**பழைய வாள் :**

நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன்

இயல் 3

**சீறியாழ் :**

இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்.

**6. இளையான்குடி மாறநாயனார் சிவனடியார்க்கு விருந்தளித்த நிகழ்வை எழுது.**

இளையான்குடி மாறநாயனாரின் வீட்டிற்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியம் இல்லை. தானியமில்லாததால் அன்று விதைத்துவிட்டு வந்த விதை நெல்லை அரித்துச் சமைத்து விருந்து படைத்தார்.

**7. நெய்தல் நிலத்தவரின் விருந்தளிப்பு குறித்துச் சிறுபாணாற்றுப்படை வழியே செய்தியைக் கூறு.**

நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.

**8. பழந்தமிழர் விருந்தை எதிர்கொள்ளும் தன்மைப் பற்றி குறுந்தொகை கூறும் செய்தி யாது?**

இல்லத்தின் பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் பழந்தமிழரிடையே இருந்ததைக் குறுந்தொகை கூறுகிறது.

**9. இல்ல விழாக்கள் யாவை?**

- திருமணத்தை உறுதி செய்தல்
- திருமணம்
- வளைகாப்பு
- பிறந்தநாள்
- புதுமனை புகுவிழா

**10. மினசோட்டா தமிழ்ச் சங்க 'வாழையிலை விருந்து விழாவில்' வைக்கப்படும் உணவுகள் யாவை?**

- முருங்கைக்காய் சாம்பார்
- மோர்க்குழம்பு
- வேப்பம்பூ ரசம்
- வெண்டைக்காய் கூட்டு
- தினைப்பாயாசம்
- அப்பளம்

**11. யாருடைய ஆட்சி காலத்தில் மிகுதியான சத்திரங்கள் கட்டப்பட்டன?**

நாயக்கர், மராட்டியர்.

**12. "காலின் ஏழடிப் பின் சென்று" - இப்பாடலடி உணர்த்தும் செய்தி யாது?**

- பண்டையத் தமிழர் வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும் போது வழியனுப்பும் விதம்.
- வழியனுப்பும் போது அவர்கள் செல்ல இருக்கின்ற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர் வரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்.

**13. விருந்து பற்றி எடுத்துரைக்கும் தமிழ்நூல்கள் யாவை?**

- தொல்காப்பியம்
- திருக்குறள்
- சிலப்பதிகாரம்
- கம்பராமாயணம்
- கலிங்கத்துப்பரணி
- புறநானூறு
- நற்றிணை
- குறுந்தொகை
- கொன்றைவேந்தன்

**14. விருந்து பற்றி எடுத்துரைக்கும் சங்கஇலக்கிய நூல்கள் எவை?**

புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை.

**15. விருந்து பேணுவதற்காக எவற்றையெல்லாம் தலைவன் பணையம் வைத்ததாகப் புறநானூறு கூறுகின்றது?**

இரும்பினால் செய்யப்பட்ட பழைய வாள், கருங்கோட்டுச் சீறி யாழ்.

**16. விருந்தினர் என்பவர் யார்? (அல்லது) விருந்தே புதுமை - பொருள் விளக்கம் தருக.**

விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். இதனையே தொல்காப்பியர் 'விருந்தே புதுமை' என்கிறார்.

**17. விருந்து மற்றும் விருந்தோம்பல் பற்றிக் குறிப்பிடும் புலவர்கள் யாவர்?**

- தொல்காப்பியர்
- திருவள்ளுவர்
- இளங்கோவடிகள்
- கம்பர்
- செயங்கொண்டார்
- ஔவையார்

**18. மோப்பக் குழையும் அனிச்சம் உவமை கொண்டு வள்ளுவர் வலியுறுத்தும் கருத்து யாது?**

முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதாகும்.

**19. "விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" என்று கண்ணகி வருந்தக் காரணம் யாது?**

கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி வருந்துகிறாள்.

**20. தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை எது?**

தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை ஆகும்.

**21. உலகம் நிலைபெற்றிருக்கக் காரணம் யாது?**

அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுத்து மகிழ்வர் நல்லோர். அத்தகையவர்களால் தான் உலகம் இன்றும் நிலைபெற்று இருக்கின்றது.

**22. "அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்" தொடர் விளக்கம் தருக.**

தொடர் இடம்பெறும் நூல் : நற்றிணை

தொடர் விளக்கம் : நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நற்பண்பு குடும்பத்தலைவிக்கு உண்டு.

**23. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ" தொடர் விளக்கம் தருக.**

தொடர் இடம்பெறும் நூல் : குறுந்தொகை

தொடர் விளக்கம் : இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளனரா ? என்று கேட்கின்றனர்.

## சிறுவினா

**1. இன்மையிலும் விருந்தோம்பல் குறித்து இலக்கியங்கள் கூறும் செய்திகளைக் கூறு.**

- வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்தளித்தனர் பழந்தமிழர் என்று புறநானூறு கூறுகிறது.
- தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தளித்தாள் தலைவி. இன்று வந்த விருந்தினருக்கு விருந்தளிக்க கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்தான் தலைவன்.
- இளையான்குடி மாறநாயனார் தன் வீட்டிற்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க, அன்று விதைத்து விட்டு வந்த நெல்லை அரித்து விருந்து படைத்ததைப் பெரியபுராணம் மூலம் அறியலாம்.

இயல் 3

www.tnpscjob.com

**2. உற்றாரோடு நின்ற விருந்து குறித்து எழுதுக.**

- சங்க காலத்தில் அரசனாயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர்.
- கால மாற்றத்தினால் புதியவர்களை வீட்டிற்குள் அழைத்து உணவளிப்பது குறைந்தது.
- விருந்து புரப்பது குறைந்ததால் நாயக்கர் மராத்தியர் காலத்தில் மிகுதியான சத்திரங்கள் வழிப்போக்கர்களுக்காகக் கட்டப்பட்டன.
- புதியவர்களை விருந்தினராய் ஏற்பது குறைந்து ஓரளவு தெரிந்தவர்களை மட்டுமே விருந்தினர்களாய் ஏற்றனர்.
- படிப்படியாக உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரையே விருந்தினர்களாகப் போற்றும் நிலைக்கு மாறினர்.

**3. விருந்தோம்பல் அன்றும் இன்றும் எவ்வாறு உள்ளது என வேறுபடுத்திக் காட்டுக.**

| அன்று | இன்று |
|---|---|
| **திண்ணை :** புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர். | **திண்ணை :** இன்று வீட்டிற்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை; அறிமுகம் இல்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை. |
| **இல்ல விழாக்கள் :** திருமணத்தை உறுதி செய்தல், திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள், புதுமனை புகுவிழா முதலியவற்றைத் தங்கள் இல்லத்திலேயே நடத்தி விருந்தினர்களுக்கு விருந்தளித்தனர். | **இல்ல விழாக்கள் :** இல்ல விழாக்கள் தற்போது திருமண மண்டபத்திலேயே நடைபெறுகிறது. |
| **விருந்தோம்பல் :** இல்ல விழாக்களில் அப்பகுதி வாழ் மக்களும் வெளியூர் விருந்தினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்கின்றனர். | **விருந்தோம்பல் :** திருமணக் கூடங்களில் நடைபெறும் இல்ல விழாக்களில் விருந்தினரை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும் வரை திருமண ஏற்பாட்டாளர்களே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுகிறது. |
| **பண்பாடு :** பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு சிறந்திருந்தது. | **பண்பாடு :** உயரிய தமிழ்ப் பண்பாடு இன்றைய தமிழர்களிடம் மேற்கூறிய முறையில் உள்ளது. |

**4. மினசோட்டா 'வாழையிலை விருந்து விழா' பற்றி எழுதுக.**

- அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் 'வாழையிலை விருந்து விழா'வை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.
- தமிழர்களின் பாரம்பரிய உணவுகளைக் கொண்டு விருந்து வைக்கின்றனர்.
- முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய்க் கூட்டு, தினைப்பாயாசம், அப்பளம் எனச் சுவையாகத் தமிழர் விருந்து கொடுக்கின்றனர்.
- அங்கு வாழும் தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். தொடர்ந்து பல பண்பாட்டு நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.

**5. வாழை இலை விருந்து, 'உணவு பரிமாறும் முறை' குறித்து எழுது.**

- தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது.
- உண்பவரின் இடப்பக்கம் வாழையிலையின் குறுகிய பகுதியும், வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வர வேண்டும்.



www.tnpscjob.com

- இலையின் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலானவைகளையும், சிறிய உணவு வகைகளையும் வைத்தனர்.
- இலையின் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான உணவு வகைகளை வைப்பர். நடுவில் சோறு வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவர்.

**பரிவுடன் பரிமாற்றம் :**

விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறும் வழக்கத்தை நம் முன்னோர்கள் செய்தனர்.

**6. வாழை இலையில் உண்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?**

- வாழை இலையில் சாப்பிடுவதால், இளநரை வராமல் நீண்ட நாட்கள் தலைமுடி கருப்பாக இருக்கும்.
- வாழை இலை ஒரு கிருமிநாசினி. அது உணவில் உள்ள நச்சுக்கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது.
- வாழை இலையில் தொடர்ந்து உண்பவர்களுக்கு நோய் தாக்குவதில்லை.
- தோல் பளபளப்பாகும்; பித்தம் தணிக்கும்.
- வயிற்றுப் புண் ஆற்றும்; பசியைத் தூண்டும்.

**7. காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த உங்கள் கருத்துகள் மூன்றினை எழுதுக.**

- புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைக்கப்பட்டிருந்த நிலை இக்காலத்தில் இல்லை.
- அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை.
- திருமணம், வளைகாப்பு போன்ற இல்லவிழாக்கள் திருமணக்கூடங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டன.

## நெடுவினா

**1. விருந்தோம்பல் பண்பாடு பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது) விருந்து மற்றும் விருந்தோம்பல் பற்றித் தமிழ் இலக்கியங்கள் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை<br>விருந்து போற்றும் திருக்குறள்<br>தமிழர் மரபு 'விருந்தோம்பல்'<br>விருந்தறம்<br>முடிவுரை |

**முன்னுரை :**

விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**விருந்து போற்றும் திருக்குறள்:**

திருவள்ளுவர் 'விருந்தோம்பல்' என்ற ஒரு அதிகாரத்தையே படைத்துள்ளார். இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கின்றார். முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை 'மோப்பக்குழையும் அனிச்சம் ....' என்ற குறளில் குறிப்பிடுகின்றார்.



www.tnpscjob.com

**தமிழர் மரபு ‘விருந்தோம்பல்’:**

கோவலன் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி கண்ணகி வருந்துகின்றாள் என்பது மூலம் விருந்து தமிழர் மரபு என்கிறார் இளங்கோவடிகள். கம்பரும் செயங்கொண்டாரும் விருந்தைத் தமிழர் மரபாகப் போற்றினர்.

**விருந்தறம்:**

அமிழ்தமே கிடைத்தாலும் தமிழர் தனித்து உண்ணமாட்டார் என்பதைப் புறநானூறு கூறுகின்றது. விருந்தினர் நடு இரவில் வந்தாலும் இன்முகத்துடன் தமிழர் வரவேற்பர் என்கிறது நற்றிணை. பழைய வாளும் யாழும் பணையம் வைத்து விருந்து போற்றப்பட்டதைப் புறநானூறு கூறுகிறது. “மருந்தே ஆயினும் விருந்தொடு உண்” என்கிறார் ஔவையார். வாழை இலையில் விருந்து படைப்பதைத் தமிழர் அவசியமாகக் கொண்டிருந்தனர்.

**முடிவுரை:**

காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர்பண்பாக விளங்கும் விருந்தோம்பலைப் போற்றிப் பெருமிதம் கொள்வோம்.

**2. வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை - பசித்தவருக்கு உணவிடல் - இவை போன்ற செயல்கள் அன்றும் இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பதை அழகுற விவரித்து எழுதுக.**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| வீட்டில் திண்ணை |
| விருந்தினரைப் பேணுதல் |
| தமிழர் பண்பாட்டில் ஈகை |
| பசித்தவருக்கு உணவிடல் |
| விருந்தினர் அன்றும் இன்றும் |
| நிறைவுரை |

**முன்னுரை:**

தம் வீட்டுக்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். ‘விருந்தே புதுமை’ என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**வீட்டில் திண்ணை:**

புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர். ஆனால் இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை. இருப்பினும் திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது.

**விருந்தினரைப் பேணுதல்:**

திருமணத்தை உறுதி செய்தல், திருமணம், வளைகாப்பு, பிறந்த நாள், புதுமனை புகுவிழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினர். அப்போது மிகுதியான விருந்தினர்களை வரவேற்று உணவளித்து மகிழ்ந்தனர். அந்த இல்ல விழா நாட்களில் அப்பகுதி வாழ் மக்களும் வெளியூர் விருந்தினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர்.

காலப் போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் திருமணக்கூடங்களுக்கு இடம் பெயர்ந்துவிட்டன. பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும் வரை 'திருமண ஏற்பாட்டாளர்களே' செய்யும் விருந்தோம்பல் நடைபெறுவதைக் காண முடிகிறது.

**தமிழர் பண்பாட்டில் ஈகை:**

கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

**'பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்**
**வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்**
**விருந்தும் அன்றி விளைவன யாவையே'**

**- கம்பராமாயணம், 1:2:36.**

நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை.

இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியமில்லை எனவே, அன்று விதைத்து விட்டு வந்த நெல்லை அரித்து வந்த பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது. வள்ளல்கள் பலரும் மிகுந்த ஈகைக்குணத்துடன் விளங்கியதை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

**பசித்தவருக்கு உணவிடல்:**

இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை,

**'பலர்புகு நாவில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ!'**

-என்ற குறுந்தொகை (118) அடிகள் புலப்படுத்துகின்றன.

மணிமேகலை 'பசிப்பிணியைப் போக்க மேற்கொண்ட முயற்சியிலும்', இராமலிங்க அடிகள் 'வடலூரில் அணையா அடுப்பை ஏற்படுத்தி பெரும் உதவி புரிந்தமை' இன்னும் தொடர்வதை பசிப்பிணியை நீக்குவதற்கான செயல்களில் முதன்மையானதாகக் குறிப்பிடலாம். இன்றைய நிலையில் பல்வேறு திருக்கோயில்களில் அன்னதானம் வழங்குவதைத் தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

**விருந்தினர் அன்றும் இன்றும்:**

சங்க காலத்திலிருந்தே அரசராயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர். கால மாற்றத்தில் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது. விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.

புதியவர்களான விருந்தினர்களை ஏற்பது குறைந்துவிட்ட காலத்தில், ஓரளவு தெரிந்தவர்களை மட்டுமே விருந்தினர்களாக ஏற்றனர். படிப்படியாக உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரையே விருந்தினர்களாகப் போற்றும் நிலைக்கு மாறினர்.

**நிறைவுரை:**

பண்டைத்தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது. அந்த உயரிய தமிழ்ப் பண்பாடு இன்றைய தமிழர்களிடம் பல்வேறு முறைகளில் பின்பற்றப்படுகிறது. காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர்பண்பான விருந்தோம்பலைப் போற்றிப் பெருமிதம் கொள்வோம்.



www.tnpscjob.com

## கற்பவை கற்றபின்

பக்கம்: 53

**1. வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவர்க்கு உணவிடல் இவை போன்ற செயல்கள் குறித்து உங்கள் வீட்டிலுள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து வந்து கலந்துரையாடல் செய்க.**

**அமுதன்** : வீட்டில் திண்ணை அமைத்ததற்கான காரணம் என்ன என்று கேட்டு வந்தாயா?

**மதி** : கேட்டேன். வழிப்போக்கர்கள் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர் என்று அப்பா கூறினார்.

**அமுதன்** : விருந்தினர் பேணல் குறித்து உன் வீட்டார் உனக்கு கூறிய செய்தி யாது?

**மதி** : வணக்கம் கூறி வரவேற்றல், அமர வைத்தல், தண்ணீர் கொடுத்தல், உணவு உண்ணச்செய்தல் ஆகியவையே விருந்தினர் பேணும் முறையாகும் என்றனர்.

**அமுதன்** : ஈகை என்றால் என்ன என்பது பற்றி கேட்டாயா?

**மதி** : தமிழர் பண்பாட்டில் ஈகை குறித்தும் இலக்கியங்கள் கூறுகின்றன. பாரி என்ற குறுநில மன்னன் முல்லைக்குத் தேர் கொடுத்ததாகவும் பேகன் என்பவன் மயிலுக்குப் போர்வை கொடுத்தான் என்பதையும் நாம் பாடநூலில் படித்திருக்கிறோம் அல்லவா? அதுதான் ஈகை என்றனர்.

**அமுதன்** : 'பசித்தவர்க்கு உணவிடல்' குறித்து உன் பெற்றோர் கூறிய செய்திகளை எனக்கும் கூறு.

**மதி** : "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்கிறது இலக்கியம். பசித்துயரால் வாடுபவருக்கு உணவளிப்பது அவருக்கு புத்துயிர் வந்தது போன்றிருக்கும் என்று அம்மா கூறினார்.

**2. "இட்டதோர் தாமரைப்பூ**
**இதழ்விரித் திருத்தல் போலே**
**வட்டமாய்ப் புறாக்கள் கூடி**
**இரையுண்ணும் ...................."** - *பாரதிதாசனார்*

**இவ்வாறாகக் கவிதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பகிர்ந்துண்ணல் குறித்துப் பேசுக.**

வணக்கம்.

கிடைத்த இரையைப் பகிர்ந்துண்ணும் பொருட்டு புறாக்கள் வட்டமாய் அவ்விரையைச் சுற்றி கூடி நின்றன. இக்காட்சியானது இதழ் விரிந்திருக்கின்ற தாமரை மலரைப் போன்று காட்சியளிப்பதாக கவிஞர் உவமித்துள்ளார்.

மு.வரதராசனார் இயற்றிய 'குறட்டை ஒலி' என்ற சிறுகதையில் ஓர் ஏழைத்தாய் தன் குழந்தைக்கு ஊட்ட வேண்டிய பாலால் பட்டினி கிடந்த நாய்க்குட்டிகளுக்கு ஊட்டுகிறாள். ஓர் ஏழைத்தாயின் வறுமையிலும் பகிர்ந்துண்ணும் தாய்மைப் பண்பு இக்கதையில் புலப்படுத்தப்பட்டுள்ளது.

இக்காலத்தில் பகிர்ந்துண்ணும் வழக்கம் அதிகமாக மனிதர்களிடம் காணப்படுவதில்லை. அன்றாடம் நாம் காணும் ஐந்தறிவு உயிரினமாகிய காக்கை கூட தனக்குக் கிடைத்த சிறிதளவு இரையையும் தன் இனத்தோடு பகிர்ந்து உண்ணும் பொருட்டு கரைந்து தன் இனத்தை அழைத்து உண்கிறது. இத்தகைய உயிரினங்களின் செயல்களைக் கண்டாவது மனிதர்கள் பகிர்ந்துண்ணும் பழைய பண்பாட்டை நிலை நிறுத்த வேண்டும். அப்போதுதான் பசிப்பிணி நீங்கும் என்று சொல்லி என்னுரையை நிறைவு செய்கின்றேன்.

இயல் 3

www.tnpscjob.com

இயல் 3 பண்பாடு

கவிதைப் பேழை

# காசிக்காண்டம்

- அதிவீரராம பாண்டியர்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. காசிக்காண்டம் என்பது ___________.**

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறு பெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

**[விடை: இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்]**

### குறுவினா

**1. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**

- வாருங்கள் ஐயா, வணக்கம்!
- அமருங்கள்.
- நலமாக இருக்கிறீர்களா?
- தங்கள் வரவு நல்வரவு

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **நன்மொழி** | - | பண்புத்தொகை |
| **வியத்தல், நோக்கல், எழுதுதல், உரைத்தல், செப்பல், இருத்தல், வழங்கல்** | - | தொழிற்பெயர்கள் |
| **வருக** | - | வியங்கோள் வினைமுற்று |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **உரைத்த** | - | **உரை + த் + த் + அ** | **பரிந்து** | - | **பரி + த்(ந்) + த் + உ** |
| உரை | - | பகுதி | பரி | - | பகுதி |
| த் | - | சந்தி | த் | - | சந்தி, 'ந்' ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை | த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி | உ | - | வினையெச்ச விகுதி |
| **வருக** | - | **வா(வரு) + க** | **நோக்கல்** | - | **நோக்கு + அல்** |
| வா | - | பகுதி (வரு எனத் திரிந்தது விகாரம்) | நோக்கு | - | பகுதி |
| க | - | வியங்கோள் வினைமுற்று விகுதி | அல் | - | தொழிற்பெயர் விகுதி |



www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### இலக்கணக் குறிப்பு.

| | | |
|---|---|---|
| **வந்து** | - | வினையெச்சம் |
| **நன்முகமன்** | - | பண்புத்தொகை |
| **பொருந்து** | - | வினையெச்சம் |

### பகுபத உறுப்பிலக்கணம்.

| | | |
|---|---|---|
| **வந்து** | - | **வா(வ) + த(ந்) + த் + உ** |
| வா | - | பகுதி (வ) எனக் குறுகியது விகாரம் |
| த் | - | சந்தி (ந்) ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி |

### பலவுள் தெரிக

**1. காசிக்காண்டத்தை இயற்றியவர் யார்?**

அ) துளசிதாசர் ஆ) அதிவீரராம பாண்டியர்
இ) ஔவையார் ஈ) பெருஞ்சித்திரனார் **[விடை: ஆ) அதிவீரராம பாண்டியர்]**

**2. காசிக்காண்டத்தின் இல்லொழுக்கம் பற்றிய பகுதி எத்தனையாவது பாடல்?**

அ) பதினான்காவது ஆ) பதினாறாவது
இ) பதின்மூன்றாவது ஈ) பதினேழாவது **[விடை: ஈ) பதினேழாவது]**

**3. முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர்?**

அ) அதிவீரராம பாண்டியர் ஆ) கிள்ளிவளவன்
இ) செங்குட்டுவன் ஈ) இரண்டாம் புலிகேசி **[விடை: அ) அதிவீரராம பாண்டியர்]**

**4. அதிவீரராம பாண்டியரின் பட்டப்பெயர் __________.**

அ) சீவலபேரி பாண்டி ஆ) சீவலமாறன்
இ) மாறவர்மன் ஈ) மாறன்வழுதி **[விடை: ஆ) சீவலமாறன்]**

**5. அதிவீரராம பாண்டியர் இயற்றாத நூலைக் கண்டறிக.**

அ) நைடதம் ஆ) வாயு சம்கிதை
இ) திருக்கருவை அந்தாதி ஈ) சடகோபர் அந்தாதி **[விடை: ஈ) சடகோபர் அந்தாதி]**

**6. பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | நன்மொழி | - | 1. பெயரெச்சம் |
| ii) | வியத்தல் | - | 2. வியங்கோள் வினைமுற்று |
| iii) | வருக | - | 3. தொழிற்பெயர் |
| iv) | உரைத்த | - | 4. பண்புத்தொகை |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 2, 1
இ) 2, 1, 3, 4 ஈ) 4, 2, 1, 3 **[விடை: அ) 4, 3, 2, 1]**

**7. உப்பிலாக் கூழ் இட்டாலும் உண்பதே அமிர்தம் ஆகும் - என்று குறிப்பிடும் நூல் எது?**

அ) சீவக சிந்தாமணி ஆ) விவேக சிந்தாமணி
இ) மணிமேகலை ஈ) நளவெண்பா **[விடை: ஆ) விவேக சிந்தாமணி]**



www.tnpscjob.com

8. **'அருகுற' என்பதன் பொருள் என்ன?**
அ) அருகில் ஆ) தொலைவில்
இ) அழிவில் ஈ) அழகிய **[விடை: அ) அருகில்]**

9. **முகமன் எனப்படுவது ____________.**
அ) ஒருவரை நலம் வினவிக்கூறும் விருந்தோம்பல் சொற்கள்
ஆ) ஒருவரை எதிர்த்துப் பேசும் சொற்கள்
இ) பெரியோர்களின் கருத்துகளை வரவேற்கும் சொற்கள்
ஈ) மன்னரும் அமைச்சரும் உரையாடும் சொற்கள்
**[விடை: அ) ஒருவரை நலம் வினவிக்கூறும் விருந்தோம்பல் சொற்கள்]**

10. **விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கத்தின் பண்புகள் எத்தனை?**
அ) எட்டு ஆ) ஒன்பது
இ) ஆறு ஈ) பத்து **[விடை: ஆ) ஒன்பது]**

11. **வெற்றிவேற்கை என்னும் நூலின் ஆசிரியர் ____________.**
அ) அதிவீரராம பாண்டியர் ஆ) கரிகாலன்
இ) பாரி ஈ) பாண்டியன் நெடுஞ்செழியன்
**[விடை: அ) அதிவீரராம பாண்டியர்]**

12. **நறுந்தொகை என்னும் நூலின் ஆசிரியர் ____________.**
அ) அதிவீரராம பாண்டியர் ஆ) கரிகாலன்
இ) பாரி ஈ) பாண்டியன் நெடுஞ்செழியன்
**[விடை: அ) அதிவீரராம பாண்டியர்]**

13. **நறுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் எது?**
அ) கொன்றைவேந்தன் ஆ) காசிக்கலம்பகம்
இ) வெற்றிவேற்கை ஈ) காசிக்காண்டம் **[விடை: இ) வெற்றிவேற்கை]**

14. **பொருந்தாதவற்றைக் கண்டறிக.**
அ) நைடதம் ஆ) விவேகசிந்தாமணி
இ) வெற்றிவேற்கை ஈ) காசிக்காண்டம் **[விடை: ஆ) விவேகசிந்தாமணி]**



## குறுவினா

1. **காசிக்காண்டம் நூல் குறிப்பு வரைக.**
♦ காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் காசிக்காண்டம்.
♦ துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது.

2. **அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூல்கள் யாவை?**
காசிக்காண்டம், நைடதம், லிங்கபுராணம், வாயுசம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்மபுராணம், வெற்றி வேற்கை என்றழைக்கப்படும் நறுந்தொகை.

3. **"முகமன்" என்னும் சொல் உணர்த்தும் செய்தி யாது?**
ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொல்லாகும்.

www.tnpscjob.com

4. **''பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்'' - தொடர் பொருள் விளக்கம் தருக.**

தொடர் இடம்பெறும் நூல் : காசிக்காண்டம்

தொடர் விளக்கம் : விருந்தினர் அருகிலேயே விருந்து மேற்கொள்பவர் அமர்ந்து கொள்ளுதல்.

## சிறுவினா

1. **அதிவீரராம பாண்டியர் குறிப்பு வரைக.**

**பெயர்** : அதிவீரராம பாண்டியன்

**சிறப்பு** : கொற்கையின் அரசர் தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்தார்.

**பட்டப் பெயர்** : சீவலமாறன்

**இயற்றிய நூல்கள்** : காசிக்காண்டம், நைடதம், லிங்க புராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம், வெற்றிவேற்கை என்றழைக்கப்படும் நறுந்தொகை.'

2. **விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கம் குறித்து காசிக்காண்டம் குறிப்பிடும் செய்தி யாது?**

**''விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்''**

- விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை எதிர்கொண்டு வியந்து உரைத்தல் வேண்டும்.
- நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல் வேண்டும்.
- முகமலர்ச்சியுடன் அவரை நோக்கி, 'வீட்டிற்குள் வருக' என்று வரவேற்று, அவர் எதிரில் நின்று, அவர் முன் மனம் மகிழும்படி பேசுதல் வேண்டும்.
- அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டு, அவர் விடை பெற்றுச் செல்லும் போது, வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல் வேண்டும்.
- வந்தவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் வேண்டும்.

மேற்கண்ட செயல்கள் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாக காசிக்காண்டத்தில் கூறப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 55



1. **நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வருகிறார். நீங்கள் அவரை எதிர்கொண்டு விருந்து அளித்த நிகழ்வினை விரிவாக ஒரு பத்தியளவில் எழுதிப் படித்துக் காட்டுக.**

உறவினரை வியந்து உரைத்து நல்லச் சொற்களை இனிமையாகப் பேசி முகமலர்ச்சியுடன் அவர்களை நோக்கினேன். வீட்டிற்குள் வருக! வருக! என்று வரவேற்றேன். அவர் எதிரில் நின்று முகமும் மனமும் மலரும்படி உணவருந்திச் செல்லுங்கள் எனக் கூறி உணவு சமைத்து, தலைவாழை இலையில் உணவிட்டேன். அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டேன். அவர் விடை பெற்றுச் செல்லும் போது வாயில் வரை பின் தொடர்ந்து சென்று அவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்பினேன்.

www.tnpscjob.com

இயல் 3 பண்பாடு

கவிதைப் பேழை

# மலைபடுகடாம்

- பெருங்கௌசிகனார்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது ________.

அ) புத்தூர் ஆ) மூதூர்

இ) பேரூர் ஈ) சிற்றூர் [விடை: ஈ) சிற்றூர்]

### குறுவினா

1. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.

### சிறுவினா

1. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவு வகைகள் யாவை?

| திணை | கிடைக்கும் உணவுப் பொருட்கள் |
|---|---|
| முல்லை | வரகு, சாமை. |
| மருதம் | செந்நெல், வெண்ணெல். |

2. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

**வழிகாட்டல் :**

பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள். இரவில் சேர்ந்து தங்குங்கள். எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள். சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்கள், மூங்கில்கள் ஓசை எழுப்பும் மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.

**நன்னனின் கூத்தர்கள் :**

பகைவரே இல்லாமல் ஆட்சிசெய்பவன், பகை வந்தாலும் எதிர்கொள்ளும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

**இன் சொற்கள் :**

நீங்கள் உரிமையுடன் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டிற்குள் நுழையுங்கள். அவர்களும் உங்களிடம், உறவினர் போலப் பழகி இனிய சொற்களைப் பேசுவார்கள்.

**உணவு :**

நெய்யில் வெந்த மாமிசம், தினைச் சோறு ஆகியவற்றை உணவாக அளிப்பர். அவற்றை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.



www.tnpscjob.com

## நெடுவினா

1. **ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.**

| குறிப்புச்சட்டம் |
|---|
| முன்னுரை |
| உணவு |
| கல்வி |
| தொழில் |
| நன்னடை |
| முடிவுரை |

**முன்னுரை:**

அன்றைய நிலையில் பொருளுக்காக ஆற்றுப்படுத்துவது நிகழ்ந்தது. ஆனால் இன்று ஆற்றுப்படுத்தல் அதிலிருந்து விலகி வேறுபடுகின்றது.

**உணவு:**

அன்றைய பாணர்கள் கூத்தர்கள் மன்னனிடமோ, வள்ளலிடமோ ஆற்றுப்படுத்தினர். ஆனால் இன்று வறுமையில் வாடும் ஏழைகளுக்கு உணவு தரும் அன்னச் சத்திரங்கள் பற்றியும், அன்னதானம் நடைபெறும் இடங்களைப் பற்றியும் ஆற்றுப்படுத்துகின்றனர்.

**கல்வி:**

கல்வி கற்க முடியாதவர்களுக்குக் கல்வி உதவித் தொகை அளிக்கும் அரசின் திட்டங்கள் பற்றியும், உதவும் தொண்டு நிறுவனங்கள் குறித்தும் இன்று பலர் வழிகாட்டல் செய்கின்றனர்.

**தொழில்:**

இன்று வேலைவாய்ப்பின்மை பெருகி வருகின்றது. அதனைப் போக்க அரசும் பொதுத்துறை நிறுவனங்களும் தொழிற்பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்தியுள்ளது. வேலையில்லாமல் திண்டாடுவோருக்கு அவை குறித்த வழிகாட்டல்கள் இன்று செய்யப்பட்டு, வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு போக்கப்படுகின்றது.

**நன்னடை:**

சமுதாயத்தில் இன்று வன்முறை பெருகியுள்ளது. இதற்குக் காரணம் சினம், பொறாமை, சகிப்புத்தன்மை இல்லாமை ஆகியவையே! அவற்றைக் கட்டுப்படுத்த, அனைவருக்கும் மனதை ஒருநிலைப்படுத்த தியானப் பயிற்சி செய்ய இன்று வழிகாட்டல்கள் செய்கின்றனர்.

**முடிவுரை:**

வழிகாட்டல் என்பது நெறிபிறழும் சமுதாயத்தைக் காக்க உதவும் ஒரு இன்றியமையாத கருவியாகும். வழிகாட்டலுக்கு வித்து ஆற்றுப்படுத்தல் இலக்கியங்களே சான்றாகும்.

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **அசைஇ, கெழீஇ** | - | சொல்லிசை அளபெடைகள் |
| **பரூஉக், குரூஉக்கண்** | - | செய்யுளிசை அளபெடைகள் |
| **எய்தி** | - | வினையெச்சம் |
| **பொழிந்த** | - | பெயரெச்சம் |

இயல் 3

www.tnpscjob.com

| | | |
|---|---|---|
| **சேர்ந்த** | - | பெயரெச்சம் |
| **கூறி** | - | வினையெச்சம் |
| **புக்கு** | - | வினையெச்சம் |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **மலைந்து** | **=** | **மலை + த(ந்) + த் + உ** | **பொழிந்த** | **=** | **பொழி + த்(ந்) + த் + அ** |
| மலை | - | பகுதி | பொழி | - | பகுதி |
| த் | - | சந்தி, 'ந்' ஆனது விகாரம் | த் | - | சந்தி, 'ந்' ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை | த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி | உ | - | பெயரெச்ச விகுதி |

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பொருத்தமான விடை வரிசையைத் தேர்ந்தெடு.**

i) அசைஇ - 1. சுற்றம்
ii) அல்கி - 2. கன்றின் நெருப்பு
iii) கன்று எரி - 3. இளைப்பாறி
iv) கடும்பு - 4. தங்கி

அ) 3, 4, 2, 1 ஆ) 2, 1, 3, 4
இ) 1, 2, 3, 4, ஈ) 1, 4, 3, 2 **[விடை: அ) 3, 4, 2, 1]**

**2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடு.**

i) ஆரி - 1. பள்ளம்
ii) நரலும் - 2. கூத்தர்
iii) படுகர் - 3. அருமை
iv) வயிரியம் - 4. ஒலிக்கும்

அ) 2, 1, 4, 3 ஆ) 3, 4, 1, 2
இ) 3, 1, 4, 2 ஈ) 2, 4, 1, 3 **[விடை: ஆ) 3, 4, 1, 2]**

**3. பொருந்தாத பொருளுக்கான இணை எது?**

அ) வேவை - வெந்தது
ஆ) இறடி - தினை
இ) பொம்மல் - சோறு
ஈ) நரலும் - சுற்றம் **[விடை: ஈ) நரலும் - சுற்றம்]**

**4. மலைபடுகடாம் எந்த நூல்களுள் ஒன்று?**

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) நீதி ஈ) பதினெண்கீழ்க்கணக்கு **[விடை: ஆ) பத்துப்பாட்டு]**

**5. மலைபடுகடாம் எத்தனை அடிகளைக் கொண்ட நூல்?**

அ) 483 ஆ) 543
இ) 583 ஈ) 643 **[விடை: இ) 583]**



www.tnpscjob.com

6. **மலைபடுகடாமின் வேறு பெயர் என்ன?**
அ) சிறுபாணாற்றுப்படை ஆ) பெரும்பாணாற்றுப்படை
இ) விறலியாற்றுப்படை ஈ) கூத்தராற்றுப்படை **[விடை: ஈ) கூத்தராற்றுப்படை]**

7. **மலைபடுகடாம் என்னும் நூலில் மலைக்கு உவமையாகக் கூறப்படுவது ______.**
அ) யானை ஆ) மேகம்
இ) மான் ஈ) வானம் **[விடை: அ) யானை]**

8. **இரணிய முட்டத்துப் பெருங்குன்றூரைச் சார்ந்த புலவர் ______.**
அ) பெருஞ்சித்திரனார் ஆ) பெருங்கௌசிகனார்
இ) மருதனார் ஈ) நக்கீரர் **[விடை: ஆ) பெருங்கௌசிகனார்]**

9. **'மலைந்து' - என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை ______**
அ) மலைந்து+உ ஆ) மலைந்+த்+உ
இ) மலை+த்(ந்)+த்+உ ஈ) மலை+த்+த்+உ **[விடை: இ) மலை+த்(ந்)+த்+உ]**

10. **'பொழிந்த' - என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை ______**
அ) பொழிந்து+அ ஆ) பொழி+த்+த்+உ
இ) பொழி+த்+ந்+த்+அ ஈ) பொழி+த்(ந்)+த்+அ **[விடை: ஈ) பொழி+த்(ந்)+த்+அ]**

11. **பொருந்தாததைக் கண்டறிக.**
அ) திருமுருகாற்றுப்படை - நக்கீரர்
ஆ) சிறுபாணாற்றுப்படை - நல்லூர் நத்தத்தனார்
இ) பொருநராற்றுப்படை - முடத்தாமக்கண்ணியார்
ஈ) மலைபடுகடாம் - கடியலூர் உருத்திரங்கண்ணனார்
**[விடை: ஈ) மலைபடுகடாம் - கடியலூர் உருத்திரங்கண்ணனார்]**

12. **அன்று அவண் அசைஇ - என்பதில் 'அசைஇ' என்பதன் பொருள் ______.**
அ) அசைவாடிய ஆ) இளைப்பாறி
இ) அமைதியாகி ஈ) இன்பமாகி **[விடை: ஆ) இளைப்பாறி]**

13. **கன்று எரி - என்பதில் 'எரி' எனக் குறிப்பிடப்படுவது ______.**
அ) நெருப்பு ஆ) கொம்பு
இ) வால் ஈ) நீர் **[விடை: அ) நெருப்பு]**

14. **அசோக மரங்கள் எவ்வண்ணப் பூக்களைக் கொண்டது?**
அ) கரும் ஆ) சிவந்த
இ) வெண்மையான ஈ) நீலநிற **[விடை: ஆ) சிவந்த]**

15. **அல்கி என்பதன் பொருள் ______.**
அ) அழிந்து ஆ) தங்கி
இ) உள்ளே ஈ) வெளியே **[விடை: ஆ) தங்கி]**

16. **பொருத்துக.**
1. இறடி - அ) தங்கி
2. அல்கி - ஆ) பள்ளம்
3. படுகர் - இ) வெந்து
4. வேவை - ஈ) தினை

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

இயல் 3

www.tnpscjob.com

**17. கூத்தராற்றுப்படை என்றழைக்கப்படும் நூல் ___________.**

அ) திருமுருகாற்றுப்படை ஆ) மலைபடுகடாம்
இ) பொருநராற்றுப்படை ஈ) சிறுபாணாற்றுப்படை **[விடை: ஆ) மலைபடுகடாம்]**

**18. நன்னன் எந்நில மன்னன்?**

அ) பெருநில ஆ) குறுநில
இ) சிறுநில ஈ) மா **[விடை: ஆ) குறுநில]**

**19. மலைபடுகடாமின் (கூத்தராற்றுப்படை) பாட்டுடைத் தலைவர் ___________**

அ) நன்னன் ஆ) பாரி
இ) கபிலர் ஈ) பெருங்கௌசிகனார் **[விடை: அ) நன்னன்]**

## குறுவினா

**1. மலைபடுகடாம் - பெயர்க்காரணம் கூறு.**

மலைக்கு யானையை உருவகமாகக் கூறி, அதன் ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்துள்ளதால் மலைபடுகடாம் எனப் பெயர் பெற்றது.

**2. ஆற்றுப்படை என்றால் என்ன?**

- ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர் வரும் கூத்தனை அழைத்தல்.
- யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகிறோம்.
- நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல்.

**3. குறுநில மன்னன் நன்னனின் ஊரில் கூத்தர்களுக்கு வழங்கப்படும் உணவாக மலைபடுகடாம் கூறுவன யாவை?**

- நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியல்.
- தினைச் சோறு.

**4. பண்டையத் தமிழ் கலைஞர்கள் யாவர்?**

கூத்தர், பாணர், விறலியர்.

**5. மலைபடுகடாமில் ஒளிரும் பூங்கொத்துகளுக்குக் கூறப்பட்ட உவமை யாது?**

மலைபடுகடாமில் ஒளிரும் பூங்கொத்துகளுக்குக் கூறப்பட்ட உவமை எரியும் நெருப்பு ஆகும்.

**6. "நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மானா விறல்வெள் வயிரியம் எனினே " என்று யார் யாரிடம் கூறினார்?**

நன்னனைப் புகழ்ந்து பாடி பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரிடம் கூறினார்.

**7. "நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மானா விறல்வெள் வயிரியம் எனினே" தொடர் பொருள் விளக்குக.**

தொடர் இடம் பெறும் நூல் : மலைபடுகடாம்

தொடர் பொருள் விளக்கம் : பகைவரைப் பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

**8. தினை, சோறு ஆகியவற்றிற்கு மலைபடுகடாம் தரும் சொற்கள் யாவை?**

தினை - இறடி ; சோறு - பொம்மல்.

**9. "அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்" இவ்வடியில் 'கழை' என்னும் பொருள் தரும் சொல் எது?**

கழை - மூங்கில்.



www.tnpscjob.com

10. **"அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்" இவ்வடியில் "ஆரி", "படுகர்" ஆகிய சொற்களின் பொருள் யாது?**

ஆரி - அருமை ; படுகர் - பள்ளம்.

## சிறுவினா

1. **'மலைபடுகடாம்' நூல் குறிப்பு வரைக.**

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மலைபடுகடாம்.
- வேறு பெயர் : கூத்தராற்றுப்படை
- அடிகள் : 583
- உருவகம் : மலைக்கு யானையை உவமையாக்கி அதன் ஓசையைக் கடாஅம் எனச் சிறப்பித்தது.
- பாட்டுடைத் தலைவன் : நன்னன் என்னும் குறுநில மன்னன்.
- பாடியவர் : இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.

2. **"நெய்க்கண் வேவையொடு குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்" இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:**

இப்பாடல், பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் எனும் நூலில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்:**

பரிசில் பெற்ற கூத்தன் பெறப் போகும் கூத்தனை ஆற்றுப்படுத்தல்.

**விளக்கம்:**

நன்னனின் ஊரில் பரிசு பெற்ற கூத்தன் பரிசு பெறப்போகும் கூத்தனிடம், "அங்கே, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச்சோற்றையும் உணவாகப் பெறுவீர்" என்று ஆற்றுப்படுத்துகின்றான்.

3. **பத்துப்பாட்டில் அமைந்த ஆற்றுப்படை நூல்கள் மற்றும் அதன் ஆசிரியர் பெயர்களையும் எழுதுக.**

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | - | நக்கீரர் |
| பெரும்பாணாற்றுப்படை | - | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| சிறுபாணாற்றுப்படை | - | நல்லூர் நத்தத்தனார் |
| பொருநராற்றுப்படை | - | முடத்தாமக்கண்ணியார் |
| கூத்தராற்றுப்படை | - | பெருங்கௌசிகனார் |

## கற்பவை கற்றபின்

பக்கம்: 57

1. **உணவு, விருந்து குறித்த பழமொழிகளைத் திரட்டி அவை சார்ந்த நிகழ்வுகளை எடுத்துரைக்க.**

**அ) எ.கா : 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை'**

**கதை - எறும்பும் புறாவும் :**

குளத்து நீரில் விழுந்து தத்தளித்த எறும்பைத் தக்க சமயத்தில் புறாவானது ஓர் இலையைப் பறித்துப் போட்டு எறும்பை அதன்மீது ஏறி கரைக்கு வரச் செய்தது. செய்நன்றி மறவாத எறும்பானது மறுமுறை புறாவைக் கொல்ல வந்த வேடனின் காலைக் கடித்ததால் அவன் எய்த அம்பு தவறியது புறா காப்பாற்றப்பட்டது.

**ஆ) எ.கா : அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு**

**கதை :**

பல நாட்கள் பட்டினியாகக் கிடந்த எலி ஒன்று தானியங்கள் நிரப்பப்பட்ட ஓர் உயரமான பானையைப் பார்த்தது. உயரத்தில் ஏற முடியாத காரணத்தால் எலியானது பானையின் அடியில் உள்ள ஓட்டையின் வழியே உள்ளே சென்றது. அளவுக்கு அதிகமான தானியங்களை உண்டதால் வயிறு புடைந்தது. ஓட்டையை விட்டு வெளியேற முடியாத எலி மீண்டும் மீண்டும் முயன்று அதன் வயிறு கிழிந்தது. ஓட்டையை விட்டு வெளியேறிய சில நிமிடங்களிலே வலியால் துடித்துச் செத்தது.

**2. பத்தியைப் படித்து வார இதழ் ஒன்றிற்கு அனுப்பும் வகையில் சமையல் குறிப்பாக மாற்றுக.**

**கம்மங்கூழ் தயாரித்தல் :**

பொசுக்குகிறது வெயில், ஒரு துளி மழை பட்டால் வறுத்த உளுத்தின் வாசம் பரப்பும் வறண்ட மண். வெடித்த நிலம் செழித்து விளைகிறது கம்மம் பயிர். உரலில் குத்தி, சுளகில் புடைக்க அதன் உழி நீங்கும். நீர் தெளித்துத் தெளித்து, மீண்டும் உரலில் இடிக்க அது ஒன்றுடன் ஒன்று ஒட்டி மாவாகும். உப்புக் கலந்து உலையில் ஏற்றி, கொதிக்கும் நீரில் கரையவிட்டுக் கிண்ட, கட்டியாகி அது சோறாகும். கம்மஞ் சோற்றை உருட்டி வைத்து, பின் மோர் விட்டுக் கரைத்தால் அது கம்மங்கஞ்சி அல்லது கம்மங்கூழ், மோர் மிளகாய் வற்றல், உப்பில் தோய்த்த பச்சை மிளகாய் அல்லது சின்ன வெங்காயம் கடித்துக் கஞ்சியைக் குடித்தால் உச்சி தொட்டு உள்ளங்கால் வரை தேகம் குளிர்ந்து போகும், அனல் அடங்கும். உயிர் வரும் கம்பு கறுப்பு நிறக் கரிசல் மண்ணின் இயற்கைத் தங்கம்.

**கம்மங்கூழ் : (தேவையான பொருட்கள்)**

| | | |
|---|---|---|
| கம்மம் பயிர் | - | 2 கைப்பிடி |
| உப்பு | - | தேவைக்கு ஏற்ப |
| நீர் | - | தேவைக்கு ஏற்ப |
| மோர் | - | அரை லிட்டர் |
| மோர் மிளகாய் வற்றல் | - | 10 எண்ணம் |

பச்சை மிளகாய் (அல்லது) சின்ன வெங்காயம் - தேவைக்கு ஏற்ப

**செய்முறை :**

கம்மம் பயிரை நீர் தெளித்துத் தெளித்து உரலில் இடிக்க அது ஒன்றுடன் ஒன்று ஒட்டி மாவாகும். அதனுள் தேவையான அளவு நீரும் உப்பும் சேர்த்து உலையிலிட்டால் அது இறுகி சோறாகும். அந்தச் சோற்றுடன் மோர் விட்டுக் கரைத்தால் கம்மங்கூழ் தயார். மோர் மிளகாய் வற்றல், பச்சை மிளகாய் அல்லது சின்ன வெங்காயத்தைக் கடித்துக் கொண்டு இக்கஞ்சியைக் குடிக்கலாம்.



www.tnpscjob.com

இயல் 3 பண்பாடு

விரிவானம்

# கோபல்லபுரத்து மக்கள்

- கி. ராஜநாராயணன்

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

**1. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.**

| குறிப்புச்சட்டம் |
|---|
| முன்னுரை |
| அன்னமய்யாவுடன் வந்த வாலிபன் |
| நீச்சுத் தண்ணீர் |
| ஜீவ ஊற்று |
| அன்னமய்யாவின் மனநிறைவு |
| பெயர் பொருத்தம் |
| பரமேஸ்வரன் (மணி) |
| முடிவுரை |

**முன்னுரை :**

கோபல்லபுரத்து மக்கள் என்ற கதை சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற கி. ராஜநாராயணன் அவர்கள் எழுதியது. அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை இக்கதையில் காண்போம்.

**அன்னமய்யாவுடன் வந்த வாலிபன் :**

சுப்பையாவுடன் புஞ்சையில் அன்று அருகு எடுக்கும் வேலை. அன்னமய்யா வேலைக்கு ஒரு ஆளை அழைத்து வந்தார். அன்னமய்யாவுடன் வந்தது சன்யாசியோ, பரதேசியோ இல்லை. கிட்டே போய் பார்த்த பிறகுதான் தெரிந்தது அவன் ஒரு வாலிபன். வாலிபனது தாடியும், அழுக்கு ஆடையும், தள்ளாட்டமும் அவனை வயோதிபனைப் போலவும் சாமியாரைப் போலவும் காட்டியது.

**நீச்சுத் தண்ணீர் :**

அன்னமய்யாவைப் பார்த்த அவ்வாலிபன், குடிக்கத் தண்ணி கிடைக்குமா? எனக் கேட்டான். அதற்கு அன்னமய்யா நீச்சுத் தண்ணீ தரவா? எனக் கேட்டான். கரிசல் மண்ணில் பாதி புதைக்கப்பட்டு இருந்த கரிய மண் பாத்திரத்தின் வாய் கற்களால் மூடப்பட்டிருந்தது. அன்னமய்யா மண்பாத்திரத்தின் மேலிருந்த கல்லை அகற்றினான்.

**ஜீவ ஊற்று :**

அன்னமய்யா கலசத்திலிருந்து கஞ்சின் நீத்துப்பாகத்தைச் சிரட்டையில் ஊற்றிக் கொடுத்தான். நீத்துப் பாகமாகிய மேல் கஞ்சை வாலிபன் குடித்ததும் கலயத்தை அலசி தெளிவு மறைந்த சோற்றின் மகுளி கஞ்சையும் வாலிபனுக்கு ஊற்றிக் கொடுத்தான் அன்னமய்யா.வாலிபனுக்குள் ஜீவ ஊற்று பொங்கியது. அவன் உற்சாகம் அடைந்தான்.

**அன்னமய்யாவின் மனநிறைவு :**

கஞ்சியைக் குடித்த வாலிபன் வேப்ப மர நிழலைச் சொர்க்கமாய் நினைத்துத் தூங்கினான். இதைக்கண்ட அன்னமய்யாவுக்கும் மனநிறைவு ஏற்பட்டது. மார்பில் பால் குடித்துக் கொண்டிருக்கும்

போதே வயிறு நிறைந்து அப்படியே தூங்கிவிடும் குழந்தையைப் போலவே அவ்வாலிபனையும் பார்த்தான்.

**பெயர் பொருத்தம் :**

தூக்கம் தெளிந்து எழுந்த வாலிபன் “உன் பெயர் என்ன?” என்று அன்னமய்யாவிடம் கேட்டான். அதற்கு அவன் அன்னமய்யா என்றான். எவ்வளவு பொருத்தம். ‘எனக்கு இன்று நீ இடும் அன்னம் தான்’ என் வாழ்வுக்கு மீண்டும் உயிர் கொடுத்தது என்று மனதுக்குள் கூறினான் அவ்வாலிபன்.

**பரமேஸ்வரன் (மணி) :**

அன்னமய்யா அந்த வாலிபனின் பெயரைக் கேட்டார். அவன் தன் பெயர் பரமேஸ்வரன் என்றும் தற்போதைய பெயர் மணி என்றும் சொன்னான். கம்மஞ்சோறும் துவையலும் கொடுத்தார்கள். பசியால் அதையும் உண்டு உறங்கினான்.

**முடிவுரை :**

அன்னமய்யா என்ற பெயருக்கு ஏற்ப அன்னமிட்டு மனிதநேயம் காத்த அன்னமய்யாவின் பெயர் அவனுக்கே பொருத்தமுடையதாக அமைகிறது. கம்மஞ்சோறும், துவையலும் கரிசல் மண்ணுடன் மணக்கின்றது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. கோபல்ல கிராமம் என்னும் புதினத்தைத் தொடர்ந்து எழுதப்பட்ட கதை ____________.**

அ) கோபல்லபுரம் ஆ) கோபல்லபுரத்துக் கோகிலா
இ) கோபல்லபுரத்து மக்கள் ஈ) கோபல்ல சுப்பையா **[விடை: இ) கோபல்லபுரத்து மக்கள்]**

**2. கோபல்லபுரத்து மக்கள் என்னும் கதையின் ஆசிரியர் ____________.**

அ) கி. ராஜநாராயணன் ஆ) இந்திரா பார்த்தசாரதி
இ) ஜெயமோகன் ஈ) ஜெயகாந்தன் **[விடை: அ) கி. ராஜநாராயணன்]**

**3. உறையூர் உள்ள மாவட்டம் ____________.**

அ) திருச்சி ஆ) தஞ்சாவூர்
இ) கரூர் ஈ) பெரம்பலூர் **[விடை: அ) திருச்சி]**

**4. கறங்கு இசை விழாவின் உறந்தை என்று குறிப்பிடும் நூல் ____________.**

அ) புறநானூறு ஆ) அகநானூறு
இ) கலித்தொகை ஈ) நளவெண்பா **[விடை: ஆ) அகநானூறு]**

**5. கி. ராஜநாராயணின் சொந்த ஊர் ____________.**

அ) கோபல்லபுரம் ஆ) இடைசெவல்
இ) திருச்சி ஈ) நாமக்கல் **[விடை: ஆ) இடைசெவல்]**

**6. இடைசெவல் மக்களின் வாழ்வியல் காட்சிகளுடன் கற்பனையும் புகுத்தி எழுதப்பட்டுள்ள நூல் ____________.**

அ) கோபல்லபுரத்து மக்கள் ஆ) பால்மரக்காட்டினிலே
இ) சட்டை ஈ) சித்தன் போக்கு **[விடை: அ) கோபல்லபுரத்து மக்கள்]**

**7. எப்போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்டது கோபல்லபுரத்து மக்கள் என்னும் நூல்?**

அ) விடுதலைப் ஆ) விவசாயிகளின்
இ) நெசவாளர்களின் ஈ) தொழிலாளர்களின் **[விடை: அ) விடுதலைப்]**



www.tnpscjob.com

8. **கோபல்லபுரத்து மக்கள் என்னும் நூல் சாகித்திய அகாதெமி பரிசினைப் பெற்ற ஆண்டு ________.**
அ) 1988 ஆ) 1991
இ) 1994 ஈ) 1996 [விடை: ஆ) 1991]

9. **எழுத்துலகில் கி.ரா. என்றழைக்கப்படுபவர் ________.**
அ) கி. ராஜமாணிக்கம் ஆ) கி. ராஜநாராயணன்
இ) கி. ராசரத்தினம் ஈ) கி. ராசதுரை [விடை: ஆ) கி. ராஜநாராயணன்]

10. **கரிசல் வட்டாரச் சொல்லகராதி ஒன்றை உருவாக்கியவர் ________.**
அ) தேவநேயப் பாவாணர் ஆ) கி. ராஜநாராயணன்
இ) முத்துலிங்கம் ஈ) அகிலன் [விடை: ஆ) கி. ராஜநாராயணன்]

11. **வட்டார மரபு வாய்மொழிப் புனைக் கதைகள் எவ்விலக்கியம் என்று அழைக்கப்படுகின்றன?**
அ) நாஞ்சில் ஆ) கொங்கு
இ) கரிசல் ஈ) நெய்தல் [விடை: இ) கரிசல்]

12. **வட்டார மரபு வாய்மொழிப் புனைக் கதைகளைத் தொடங்கியவர் ________.**
அ) அகிலன் ஆ) இந்திரா பார்த்தசாரதி
இ) நாஞ்சில்நாடன் ஈ) கி.ராஜநாராயணன் [விடை: ஈ) கி.ராஜநாராயணன்]

13. **கோவில்பட்டியைச் சுற்றிய வட்டாரப் பகுதிகளில் தோன்றிய இலக்கிய வடிவம் ________.**
அ) கரிசல் இலக்கியம் ஆ) நாஞ்சில் இலக்கியம்
இ) புதுக்கவிதை ஈ) புதினம் [விடை: அ) கரிசல் இலக்கியம்]

14. **கி. ராஜநாராயணனுக்கு முன் எழுதத் தொடங்கிய கரிசல் மண்ணின் படைப்பாளி ________.**
அ) கு. அழகிரிசாமி ஆ) பூமணி
இ) பா. செயப்பிரகாசம் ஈ) சோ. தர்மன் [விடை: அ) கு. அழகிரிசாமி]

15. **கரிசல் இலக்கியப் பரம்பரைக்குத் தொடர்பில்லாதவரைக் கண்டறி.**
அ) பூமணி ஆ) வீரவேலுசாமி
இ) வேலராம மூர்த்தி ஈ) ந. பிச்சமூர்த்தி [விடை: ஈ) ந. பிச்சமூர்த்தி]

16. **வட்டார வழக்குச் சொற்களைப் பொருத்திக் காட்டுக.**
i) பாச்சல் - 1. சோற்றுக்கஞ்சி
ii) பதனம் - 2. மேல்கஞ்சி
iii) நீத்துப்பாகம் - 3. கவனமாக
iv) மகுளி - 4. பாத்தி
அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2
இ) 4, 2, 1, 3 ஈ) 3, 1, 4, 2 [விடை: அ) 4, 3, 2, 1]

17. **வட்டார வழக்குச் சொற்களைப் பொருத்திக் காட்டுக.**
i) வரத்துக்காரன் - 1. புதியவன்
ii) சடைத்து புளித்து - 2. சலிப்பு
iii) அலுக்கம் - 3. அழுத்தம்
iv) தொலவட்டையில் - 4. தொலைவில்
அ) 4, 3, 2, 1 ஆ) 1, 2, 3, 4
இ) 2, 1, 4, 3 ஈ) 4, 2, 1, 3 [விடை: ஆ) 1, 2, 3, 4]

18. **காய்ந்தும் கெடுக்கிற பெய்தும் கெடுக்கிற மழையைச் சார்ந்து வாழ்கிற மானாவாரி மனிதர்களின் வாழ்க்கையைச் சொல்லும் இலக்கியங்கள் ________.**
அ) கரிசல் இலக்கியங்கள் ஆ) நெய்தல் இலக்கியங்கள்
இ) கொங்கு இலக்கியங்கள் ஈ) புதினங்கள் [விடை: அ) கரிசல் இலக்கியங்கள்]

## கற்பவை கற்றபின்

பக்கம்: 62

**1. பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயலையும் விருந்தினருக்கு உணவிடுதல் என்ற பண்பாட்டுச் செயலையும் ஒப்பிட்டு பேசுக.**

பசித்தவருக்கு உணவிடுதல் என்பது ஒரு மனிதநேயச் செயலாகும். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற புகழ்மொழிக்கேற்ப பசியால் வருந்தும் ஒருவருக்கு அந்நேரத்தில் உணவளிப்பது அவருக்குப் புத்துயிர் அளிப்பதாக இருக்கிறது.

விருந்தினருக்கு உணவிடுதல் என்பது நாச்சுவைக்காகவும் விருந்தோம்பல் காரணமாகவும் உணவிடப்படுகிறது. தமிழர் பண்பாடுகளில் சிறந்த ஒன்று விருந்தோம்பல். ஆகவே, விருந்தளிப்பதனைப் பெறும்பேறாகக் கருதி உணவளிப்பர்.

**2. உங்கள் கற்பனையை இணைத்து நிகழ்வைக் கதையாக்குக.**

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் இடையே சின்னஞ்சிறு சச்சரவுகள் ஏற்பட்டு, இரண்டு பேருமே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆளுக்கொரு மூலையில் உட்கார்ந்திருக்கும் போது, விருந்தினர் வருகை அவர்களை அன்பான கணவன் மனைவியாக மாற்றிவிடும் அம்மாவின் கெடுபிடியும் அப்பாவின் கீழ்ப்படிதலும் ஆச்சரியமாக இருக்கும். விருந்தாளிகள் அடிக்கடி வரமாட்டார்களா என்று இருக்கும்.

**விருந்தினர் தினம் என்பது எப்படி விடியும் தெரியுமா?**

காலையிலிருந்தே வீட்டிற்குள்ளிருந்து வாசலுக்கு வந்து வந்து எட்டிப் பார்த்துச் செல்வாள் அம்மா. திண்ணையில் பேப்பர் பார்த்துக் கொண்டிருக்கும் அப்பா கேட்பார். "என்ன விஷயம், இன்னிக்கு யாராவது விருந்தாளி வரப்போறாங்களா என்ன?".

"ஏங்க..... காலையிலேருந்து வேப்ப மரத்துல காக்கா விடாம கத்திக்கிட்டே இருக்கே பார்க்கலியா? நிச்சயம் யாரோ விருந்தாளி வரப்போறாங்க பாருங்க." "அடடே, ஆமாம் காக்கா கத்துது யாரு வரப்போறா? இது பலாப்பழ சீசன் ஆச்சே.... உன் தம்பிதான் வருவான், பலாப்பழத்தைத் தூக்கிட்டு" – நாங்கள் ஓடிப்போய் தெருவில் பார்ப்போம். அப்பா சொன்னது சரி, காக்கா கத்தியதும் சரி. தூரத்தில் தெருமுனையில் அறந்தாங்கி மாமா தலையில் பலாப்பழத்துடன் வந்து கொண்டிருந்தார். அம்மாவுக்குக் காக்கை மொழி தெரியும்.

*– தஞ்சாவூர்க் கவிராயர்*

**விடை :**

### விருந்தினர் தினம்

அதிகாலையில் கதிரவன் பொன் நிறமான ஒளிக்கதிர்களை வீசிக் கொண்டிருந்தான். விடியலை உணர்ந்த பறவைகள் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன. குடும்பத் தலைவிகள் சாணநீர் கரைசலுள்ள வாளி, துடைப்பம், கோலப்பொடி கிண்ணம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு வெளியேறி வீட்டின் முன்றிலில் சாணநீர் தெளித்து துடைப்பத்தால் பெருக்கி கோலமிட்டனர். பின் வீட்டிற்குள் சென்று மற்ற வேலைகளில் ஈடுப்பட்டனர்.

ஒருவரது இல்லத்தில் மட்டும் வேப்ப மரத்திலிருந்து காக்கை ஒன்று கரைந்து கொண்டிருந்தது. காக்கை அதிகாலையில் கரைந்தால் விருந்தினர் வருகை இருக்கும் என்பது ஐதீகம். ஆகவே அப்பெண்மணி விருந்துக்கான உணவினைத் தயார் செய்ய ஆரம்பித்தாள். இடையில் தன் கணவனுடன் மனவருத்தம் ஏற்பட்டு சண்டை வேறு குழந்தைகளின் மனதில் விருந்தினர் வந்தால் பெற்றோர் சண்டையை விட்டு விட்டு மகிழ்வர் எனக் கருதிக் கொண்டிருந்த போது பலாப்பழம் ஒன்றைத் தன் தலையில் வைத்து சுமந்தபடி வந்தார். பெற்றோர் சண்டையை விட்டுவிட்டு விருந்தினரை வரவேற்பதிலும் உபசரிப்பதிலும் மூழ்கினர். குழந்தைகள் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.



www.tnpscjob.com

இயல் 3 பண்பாடு

கற்கண்டு

# தொகாநிலைத் தொடர்கள்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது __________.**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல் **[விடை: அ) வேற்றுமை உருபு]**

### குறுவினா

1. **'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?**

'சிரித்து பேசினார்' என்பது, உவகை காரணமாக 'சிரித்து சிரித்து பேசினார்' என அடுக்குத்தொடராகும்.

2. **பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?.**

- பெயர்ப் பயனிலை - கவிஞர்
- வினை பயனிலை - சென்றார்
- வினா பயனிலை - யார்?

### சிறுவினா

1. **'கண்ணே கண்ணுறங்கு!**
**காலையில் நீயெழும்பு**
**மாமழை பெய்கையிலே**
**மாம்பூவே கண்ணுறங்கு!**
**பாடினேன் தாலாட்டு**
**ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!**

**இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**

| | | |
|---|---|---|
| 'கண்ணே கண்ணுறங்கு | - | விளித்தொடர் |
| காலையில் நீயெழும்பு | - | ஐந்தாம் வேற்றுமை தொகாநிலைத் தொடர் |
| மாமழை பெய்கையிலே | - | உரிச்சொல் தொடர் |
| மாம்பூவே கண்ணுறங்கு | - | விளித்தொடர் |
| பாடினேன் தாலாட்டு | - | வினைமுற்றுத் தொடர் |
| ஆடி ஆடி ஓய்ந்துறங்கு | - | அடுக்குத்தொடர் |

www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.**

அ) காவிரி பாய்ந்தது - எழுவாய்த் தொடர்
ஆ) பாடினாள் கண்ணகி - வினைமுற்றுத் தொடர்
இ) நண்பா எழுது - விளித்தொடர்
ஈ) பாடி மகிழ்ந்தனர் - பெயரெச்சத்தொடர்

**[விடை: ஈ) பாடி மகிழ்ந்தனர் - பெயரெச்சத்தொடர்]**

**2. சரியான வரிசையைத் தேர்ந்தெடுத்து எழுது.**

i) பாடத்தைப் படித்தாள் - 1. இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
ii) இசையால் ஈர்த்தார் - 2. மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
iii) கயல்விழிக்குப் பரிசு - 3. ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
iv) முருகனின் சட்டை - 4. நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 1, 4, 3
இ) 1, 2, 4, 3 ஈ) 4, 3, 2, 1 **[விடை: இ) 1, 2, 4, 3]**

**3. ஒரு தொடர் மொழியில் இருசொற்கள் இருந்து அவற்றின் இடையில் சொல்லோ உருபோ இல்லாமல் அப்படியே, பொருளை உணர்த்துவது __________.**

அ) தொகை நிலைத்தொடர் ஆ) தொகாநிலைத்தொடர்
இ) மரபுத்தொடர் ஈ) உவமைத்தொடர் **[விடை: ஆ) தொகாநிலைத்தொடர்]**

**4. தொகாநிலைத் தொடரின் வகைகள் __________.**

அ) 6 ஆ) 7
இ) 8 ஈ) 9 **[விடை: ஈ) 9]**

**5. விளியுடன் எது தொடர்வது விளித்தொடர் ஆகும்?**

அ) பெயர் ஆ) வினா
இ) வினை ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: இ) வினை]**

**6. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது __________.**

அ) எழுவாய்த்தொடர் ஆ) விளித்தொடர்
இ) வினையெச்சத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர் **[விடை: ஈ) வினைமுற்றுத்தொடர்]**

**7. முற்றுப் பெறாத __________ பெயர்ச்சொல்லைத் தொடர்வது பெயரெச்சத்தொடர் எனப்படும்.**

அ) வினா ஆ) எழுவாய்
இ) வினை ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: இ) வினை]**

**8. __________ உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்கள் ஆகும்.**

அ) உவம ஆ) வேற்றுமை
இ) பண்பு ஈ) வினை **[விடை: ஆ) வேற்றுமை]**



www.tnpscjob.com

**9. பொருத்திக் காட்டுக.**

i) கட்டுரையைப் படித்தாள் - 1. உரிச்சொல் தொடர்
ii) அன்பால் கட்டினார் - 2. நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்
iii) அறிஞருக்குப் பொன்னாடை - 3. மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்
iv) சாலச் சிறந்தது - 4. இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2
இ) 2, 3, 1, 4 ஈ) 4, 2, 3, 1 **[விடை: அ) 4, 3, 2, 1]**

**10. பொருத்திக் காட்டுக.**

i) காவிரி பாய்ந்தது - 1. வினையெச்சத்தொடர்
ii) நண்பா எழுது - 2. பெயரெச்சத்தொடர்
iii) கேட்ட பாடல் - 3. எழுவாய்த்தொடர்
iv) பாடி மகிழ்ந்தனர் - 4. விளித்தொடர்

அ) 3, 4, 2, 1 ஆ) 2, 1, 4, 3
இ) 4, 3, 2, 1 ஈ) 3, 2, 1, 4 **[விடை: அ) 3, 4, 2, 1]**

**11. இடைச்சொல் தொடரில் இடைச்சொல்லுடன் தொடர்வது ________.**

அ) பெயர், வினை ஆ) வினா, விடை
இ) பெயர், வினா ஈ) வினை, வினா **[விடை: அ) பெயர், வினை]**

**12. மற்றொன்று என்பது ________**

அ) வினையெச்சத்தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) உரிச்சொல் தொடர் **[விடை: இ) இடைச்சொல் தொடர்]**

**13. ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது ________.**

அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர்
இ) இரட்டுறமொழிதல் ஈ) உரிச்சொல் தொடர் **[விடை: ஆ) அடுக்குத்தொடர்]**

**14. கேட்க வேண்டிய பாடல், சொல்லத் தக்க செய்தி ஆகியன ________**

அ) பெயரெச்சங்கள்
ஆ) கூட்டுநிலைப் பெயரெச்சங்கள்
இ) கூட்டுநிலை வினையெச்சங்கள்
ஈ) வினையெச்சங்கள் **[விடை: ஆ) கூட்டுநிலைப் பெயரெச்சங்கள்]**

**15. அன்பால் கட்டினார், அறிஞருக்குப் பொன்னாடை ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல் **[விடை: அ) வேற்றுமை உருபு]**

## குறுவினா

**1. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன?**

- ஒரு தொடர் மொழியில் இரு சொற்கள் இருக்கும்.
- அவற்றின் இடையில் சொல்லோ உருபோ இல்லாமல் அப்படியே பொருளை உணர்த்தும்.
- இதுவே தொகாநிலைத் தொடர் எனப்படும்.

இயல் 3

**2. தொகாநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது வகைப்படும். அவை:

- எழுவாய்த் தொடர்
- விளித்தொடர்
- வினைமுற்றுத் தொடர்
- பெயரெச்சத் தொடர்
- வினையெச்சத் தொடர்
- வேற்றுமைத் தொடர்
- இடைச்சொல் தொடர்
- உரிச்சொல் தொடர்
- அடுக்குத் தொடர்

**3. எழுவாய்த் தொடர் என்றால் என்ன? சான்றுகள் தருக.**

எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது எழுவாய்த்தொடர்.

**சான்று :**
- இனியன் கவிஞர் - பெயர் பயனிலை
- காவிரி பாய்ந்தது - வினை பயனிலை
- பேருந்து வருமா? - வினா பயனிலை

**4. விளித்தொடர் என்றால் என்ன? சான்று தருக.**

விளியுடன் வினை தொடர்வது விளித்தொடர்.

**சான்று :** நண்பா எழுது.

**5. வினைமுற்றுத் தொடர் என்றால் என்ன? சான்று தருக.**

- வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடரும்.
- வினைமுற்று முதலில் நின்று ஒரு பெயரைக் கொண்டு முடியும்.

**சான்று :** பாடினாள் கண்ணகி.

**6. பெயரெச்சத் தொடர் என்றால் என்ன? சான்று தருக.**

முற்றுப் பெறாத வினை (எச்ச வினை) பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிவது பெயரெச்சத் தொடர் எனப்படும்.

**சான்று :** கேட்ட பாடல் (கேட்ட - எச்சவினை, பாடல் - பெயர்ச்சொல்)

**7. வினையெச்சத் தொடர் என்றால் என்ன? சான்று தருக.**

முற்றுப் பெறாத வினை (எச்ச வினை) வினைச்சொல்லைக் கொண்டு முடிவது வினையெச்சத் தொடர் எனப்படும்.

**சான்று :** பாடி மகிழ்ந்தனர்.

**8. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் என்றால் என்ன? சான்று தருக.**

வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக அமையும் தொடர்கள் வேற்றுமைத் தொகாநிலைத் தொடராகும்.

**சான்று :** கட்டுரையைப் படித்தான்.

**9. இடைச்சொல் தொடர் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.**

இடைச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது இடைச்சொல் தொடர் ஆகும்.

**சான்று :**
- மற்றொன்று - மற்று + ஒன்று
- மற்று - இடைச்சொல்
- ஒன்று - இடைச்சொல்லை அடுத்து நின்று பொருள் தரும் சொல்.

**10. உரிச்சொல் தொடர் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.**

உரிச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது உரிச்சொல் தொடர் ஆகும்.



www.tnpscjob.com

**சான்று :** சாலச் சிறந்தது

சால - உரிச்சொல்

சிறந்தது - உரிச்சொல்லைத் தொடர்ந்து சிறந்தது என்ற சொல் நின்று மிகச் சிறந்தது என்ற பொருளைத் தருகின்றது.

**11. அடுக்குத் தொடர் என்றால் என்ன? சான்று தருக.**

ஒரு சொல் இரண்டு, மூன்று முறை அடுக்கி வரும்.

**சான்று :** வருக! வருக! வருக!

(பிரித்தால் பொருள் தரும். உவகை, விரைவு, அச்சம், வெகுளி ஆகிய பொருள்களில் வரும். சொற்கள் தனித்தனியே நிற்கும்).

## சிறுவினா

**1. கூட்டுநிலைப் பெயரெச்சத்தை சான்றுடன் விளக்குக.**

**கூட்டுநிலைப் பெயரெச்சம் :**

ஒன்றிற்கு மேற்பட்ட எச்சங்கள் சேர்ந்து பெயரைக் கொண்டு முடிவது கூட்டுநிலைப் பெயரெச்சம்.

**உருவாக்கம் :**

வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களை, செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதன் மூலம் கூட்டுநிலைப் பெயரெச்சங்கள் உருவாகின்றன.

**சான்று :** கேட்க வேண்டிய பாடல், சொல்லத் தக்க செய்தி.

**2. வேற்றுமைத் தொகாநிலைத் தொடரைச் சில சான்றுகளுடன் விளக்குக.**

**வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் :**

வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் ஆகும்.

**சான்று :**

**இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ'**

கட்டுரை**யைப்** படித்தாள் - இத்தொடரில் 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பட வந்துள்ளது.

**மூன்றாம் வேற்றுமை உருபு 'ஆல்'**

அன்**பால்** (ஆல்) கட்டினார் - இத்தொடரில் 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு வெளிப்பட வந்துள்ளது.

**நான்காம் வேற்றுமை உருபு 'கு'**

அறிஞருக்**குப்** பொன்னாடை - இத்தொடரில் 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்பட வந்துள்ளது.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 64*

**1. இன்று நீங்கள் படித்த செய்தித்தாள்களில் உள்ள தொகாநிலைத் தொடர்களைத் தொகுத்து வருக.**

**பத்தி செய்தி :**

கதிரவன் வந்தான். கதிரவா வா என அழைத்தாள் சீதா. சீதையைக் கண்டேன் எனக் கூறிய கதிரவன், அம்மா நலமா? எனக் கேட்டான். அம்மா நனி நலம்; நேற்றுதான் வந்து போனாள்; உன்னை

இயல் 3

விசாரித்தாள் எனச் சீதா கூறினாள். இவ்வாறு பேசிக் கொண்டிருந்த சீதாவின் கழுத்தில் கத்தியை வைத்தான் கதிரவன். உன் சங்கிலியைத் தா என்றான். அவள், அவன் கையைத் தட்டிவிட்டு வெளியே ஓடிப்போனாள். திருடன், திருடன் என அவள் கூச்சலிட்டதைக் கேட்ட ஊர் மக்கள் அனைவரும் திரண்டனர்; கதிரவனைப் பிடித்தனர். பின் காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்தனர் காவலர் அவனைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். நம்பிக்கை துரோகி ஒருவனிடமிருந்து தான் காப்பாற்றப்பட்டதற்காக இறைவனுக்கு நன்றி கூறினாள்.

**விடை :**

| | | |
|---|---|---|
| ♦ கதிரவன் வந்தான், அம்மா நலமா?, சீதா கூறினாள், அனைவரும் திரண்டனரா? | - | எழுவாய்த் தொடர்கள் |
| ♦ கதிரவா வா | - | விளித்தொடர் |
| ♦ திருடன் திருடன் | - | அடுக்குத்தொடர் (அச்சம் காரணமாக) |
| ♦ அழைத்தாள் சீதா | - | வினைமுற்றுத் தொடர் |
| ♦ நனிநலம் | - | உரிச்சொல் தொடர் |
| ♦ கூறிய கதிரவன், கேட்ட ஊர் மக்கள் | - | பெயரெச்சத் தொடர்கள் |
| ♦ வந்து போனாள் | - | வினையெச்சத் தொடர் |
| ♦ சீதையைக் கண்டேன், உன்னை விசாரித்தாள், கத்தியை வைத்தான், கதிரவனைப் பிடித்தனர், சங்கிலியைத் தா | - | இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் |
| ♦ கழுத்தில் கத்தி, சிறையில் அடைத்தனர் | - | ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் |
| ♦ காவல் நிலையத்திற்குத் தகவல், இறைவனுக்கு நன்றி | - | நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் |

**2. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.**

மாடியிலிருந்து இறங்கினார் முகமது. அவர் பாடகர். பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும் கொண்ட குறுந்தகடுகளை அடுக்கு அடுக்காக வைத்திருப்பார்.

**விடை :**

| | | |
|---|---|---|
| ♦ இறங்கினார் முகமது | - | வினைமுற்றுத் தொடர் |
| ♦ அவர் பாடகர் | - | எழுவாய்த் தொடர் |
| ♦ பாடுவது கேட்பது | - | கூட்டு வினையெச்சத் தொடர் |
| ♦ கேட்ட பாடல்கள் | - | பெயரெச்சத் தொடர் |
| ♦ கேட்காத பாடல்கள் | - | எதிர்மறைப் பெயரெச்சத் தொடர் |
| ♦ அடுக்கு அடுக்காக | - | அடுக்குத் தொடர் |

**3. வண்ணச் சொற்களின் தொடர் வகைகளை எழுதுக.**

| | | |
|---|---|---|
| ♦ பழகப் பழகப் பாலும் புளிக்கும் | - | அடுக்குத்தொடர் |
| ♦ வடித்த கஞ்சியில் சேலையை அலசினேன் | - | பெயரெச்சத் தொடர் |
| ♦ மேடையில் நன்றாகப் பேசினான். | - | வினையெச்சத் தொடர் |
| ♦ வந்தார் அண்ணன் | - | வினைமுற்றுத் தொடர் |
| ♦ அரிய கவிதைகளின் தொகுப்பு இது. | - | ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் |

www.tnpscjob.com

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 67

### மொழிபெயர்க்க.

Respected ladies and gentleman, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil Culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should proud about our culture. Thank you one and all.

#### தமிழ்ப் பண்பாடு

மரியாதைக்குரியவர்களே! என் பெயர் இளங்கோவன். நான் பத்தாம் வகுப்பில் படிக்கிறேன். நான் தமிழ் பண்பாட்டைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வந்திருக்கிறேன். இரண்டாயிரம் வருடத்திற்கு முன் பண்பாட்டிலும், நாகரிகத்திலும் சிறந்து விளங்கியவர்கள் தமிழர்கள் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழரே வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தனர். தமிழர்களின் பண்பாடு இந்தியா, ஸ்ரீலங்கா, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகமெங்கும் உள்ள தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தில் வேரூன்றி உள்ளது. நம் பண்பாடு பழமையானதாக இருந்தாலும் அது சீரான முறையில் மேம்படுத்தி உள்ளது. நாம் நம் பண்பாட்டைப் பற்றி பெருமிதம் கொள்ள வேண்டும். அனைவருக்கும் நன்றி!

### பழமொழிகளை நிறைவு செய்க.

- உப்பில்லாப் **பண்டம் குப்பையிலே.**
- ஒரு பானைச் **சோற்றுக்கு, ஒரு சோறு பதம்**.
- உப்பிட்டவரை **உள்ளளவும் நினை**.
- விருந்தும் **மருந்தும் மூன்று நாட்கள்**.
- அளவுக்கு **மிஞ்சினால் அமுதமும் நஞ்சு**.

### பத்தியைப் படித்துக் கருத்தைச் சுருக்கி எழுது.

#### பழையசோறு

பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம் வரை சுவைத்தவள் நான். அவித்து, காய்ந்து குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை, அதன் கடுப்பு மணத்தை சோறாகு முன் கை நிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும். விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழைய சோறு அல்லது பழையது காத்திருந்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து நீராகாரம் போல் குடிப்பது ஒரு வகை. வாழை இலையில் அந்தப் பழையச் சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நார்த்தங்காய் அதனுடன் சேர்த்துக் கொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்ட வைத்த முதல் நாள் குழம்பு இன்னும் உச்சம்! நல்ல பழையது மாம்பழம் வாசம் வீசுமாம். பழைய சோறு அது கிராமத்து உன்னதம்.

"கைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து" - *முக்கூடற்பள்ளு*

**விடை :**

நெல்லை அவித்து காயவைத்து எடுக்கும் புழுங்கல் அரிசியைச் சோறாக்கி, அதனை இரவெல்லாம் நீரில் ஊற வைத்து, கிடைக்கும் பழைய சோற்றுடன் சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், வடுமாங்காய், உப்பு நாரத்தங்காய் மற்றும் சுண்ட வைத்த குழம்பு இவற்றில் ஒன்றைக் கூட்டாக வைத்து சாப்பிடுவது கிராமத்து உன்னதம்.

இயல் 3

www.tnpscjob.com

**கதையாக்குக.**

மனித வாழ்வில் ஒவ்வொரு நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம்; புதுப்புதுச் செய்திகள் கிட்டும்! கிட்டுகிற கருப்பொருளைத் திரட்டி, கற்பனை நயம் கதையாக்குவது ஒரு கலை. அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர்பார்த்திருப்பவராக, யாருமற்றவராக...... இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக.

**விடை :**

**உதவி**

அந்திமாலைப் பொழுதில் நடைபயிற்சி மேற்கொண்டிருந்த போது பாலத்தின் கீழிருந்து சத்தம் கேட்டு பாலத்தின் அடியில் எட்டிப் பார்த்தேன். பசிமயக்கத்தால் சுருண்டு கிடந்தாள் ஒரு பெண். குளிர் தாங்க முடியாமல் சத்தம். அரைகுறை ஆடையில் இருந்தாள். மனநலம் பாதிக்கப்பட்ட பெண் எனக் கண்டுபிடித்தேன். உடனே, வீட்டிற்கு வந்து உணவை ஒரு பாத்திரத்திலும், ஆடை மற்றும் ஒரு போர்வையை ஒரு பையிலும் எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தேன்.

அவ்வுணவை எடுத்து சாப்பிடுவதற்குக் கூட அவளிடம் பலமில்லை. பாதி சாப்பிட்டு விட்டு உட்கார முடியாமல் அவ்வுணவின் மீதே சரிந்து விழுந்தாள். உடனே அருகில் இருந்த மருத்துவரை அழைத்து வந்து மருத்துவம் பார்த்து, அவளை மருத்துவரின் உதவியுடன் மனநலக் காப்பகத்திற்கு அனுப்பி வைத்தேன். அவள் மனதில் ஏதோ ஒரு மகிழ்ச்சி தென்பட்டது.

**கடிதம் எழுதுக.**

**உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.**

**உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம்**

அனுப்புநர்

கண்ணன்,
25, வள்ளல் தெரு,
அண்ணாநகர்,
திருநெல்வேலி - 11.

பெறுநர்

உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்பு ஆணையம்,
திருநெல்வேலி.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : தரமற்ற உணவு வழங்கிய உணவு விடுதியின் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுதல் - தொடர்பாக.

வணக்கம்.

இன்று காலை பேருந்துநிலையத்திற்கு வெளியில் உள்ள “சுவையகம்” என்ற உணவகத்திற்குச் சென்றோம். நானும் என் நண்பனும் உணவு உண்டோம். உணவில் கல்லும், குழம்பில் பூச்சியும் கிடந்தது. உணவக மேலாளரிடம் முறையிட்டோம். அதற்குச் சரியான காரணத்தை அவர் அளிக்கவில்லை. மேலும் அங்கு வைக்கப்பட்டிருந்த உணவு விலைப்பட்டியல் பலகையில் எழுதி வைக்கப்பட்டிருந்த தொகையை வாங்காமல் கூடுதலாக இருபது ரூபாயைக் காசாளர் வாங்கினார்.

இயல் 3

www.tnpscjob.com

எனவே, தரமற்ற உணவையும், விலை கூடுதலாகவும் விற்பனை செய்த, அந்த உணவகத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதற்கான தக்க சான்றுகள் (புகைப்படம்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

நன்றி!

திருநெல்வேலி.
23.03.2020.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
கண்ணன்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்பு ஆணையம்,
திருநெல்வேலி.

**நயம் பாராட்டுக.**

**“கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்**
**அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி**
**உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்**
**இலையிலிட வெள்ளி எழும்”.** *- காளமேகப் புலவர்*

**திரண்ட கருத்து :**

**வாழைக்கு அழகு குருத்து**
**செய்யுளுக்கு அழகு திரண்ட கருத்து**

கடல் சூழ்ந்த ஊர் நாகப்பட்டினம். அங்குள்ள காத்தான் சத்திரத்தில் பொழுது இறங்கும் போதுதான் அரிசி வரும். அதனைத் தீட்டி உலையில் போடும்போது ஊரே அடங்கிப் போயிருக்கும். ஓர் அகப்பைச் சோறு இலையில் போடும்போது விடிவெள்ளி முளைத்துவிடும்.

**தொடை நயம் :**

**தொடையற்ற பாட்டு**
**நடையற்றுப் போகும்**

செய்யுளில் எதுகை, மோனை, இயைபு, முரண் ஆகிய உறுப்புகளால் தொடுக்கப்படுவது தொடை.

**மோனை நயம் :**

**மோனையற்ற பாட்டு**
**சேனையற்ற நாடு**

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.

**சான்று:**

**க**த்துகடல், **கா**த்தான்
**உ**லையிலிட, **ஊ**ரடங்கும்
**அ**த்தமிக்கும், **அ**ரிசி வரும்

**எதுகை நயம் :**

**வீரத்துக்கு அழகு வேங்கை**
**பாட்டுக்கு அழகு எதுகை**

அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.

**சீர் எதுகை:**

கத்துகடல், காத்தான், சத்திரத்தில்; அத்தமிக்கும், குத்தி

**அடி எதுகை:**

கத்துகடல் உலையிலிட
அத்தமிக்கும் இலையிலிட

**அணி நயம் :**

**கோவிலுக்கு மணி அழகு**
**செய்யுளுக்கு அணி அழகு**

இப்பாடல் இரு பொருள்பட வந்து இரட்டுற மொழிதல் அணியால் அலங்கரிக்கப்பட்டு உள்ளது.

**பா நயம் :**

இப்பாடல் நேரிசை வெண்பா வகையைச் சார்ந்தது.

**தலைப்பு :**

'நாகை சத்திரம்' என்பது இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பு.

## மொழியோடு விளையாடு

*பக்கம்: 68*

**விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடி.**

இறகு (பறவையிடம் இருப்பது) அக்கா (தங்கைக்கு மூத்தவள்)
குருதி (சிவப்பு நிறத்தில் இருக்கும்) மதி (அறிவின் மறு பெயர்)
வாள் (மன்னரிடம் இருப்பது) படகு (நீரில் செல்வது படகு)

**விடை : திருக்குறள்**

**இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

- **சிலை - சீலை** : எ.கா: சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருந்தனர்.
- **தொடு - தோடு** : காதைத் தொடும்போது தோடு அழகாக ஆடியது.
- **மடு - மாடு** : மடுவில் (குட்டையில்) மாடு நீர்க் குடித்தது.
- **மலை - மாலை** : மலை மீது ஏறி மாலையில் விளையாடினேன்.
- **வளி - வாளி** : வளியும் (காற்றும்) வாளியும் (அன்பும்) இல்லாமல் வாழ முடியாது.
- **விடு - வீடு** : அகந்தையை விடு, வீடுபேறு (சொர்க்கம்) கிடைக்கும்.

**அகராதியில் கண்டு பொருள் எழுதுக.**

**அ) ஊண், ஊன்**

ஊண் - இரை, உண்டி, சோறு, உணவு, ஆன்மாவின் சுகதுக்கனுபவம்.
ஊன் - உடல், தசை, நிணம், மாமிசம், சரீரம்.

**ஆ) திணை, தினை**

திணை - இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி, பொருள்.
தினை - ஒரு சாமை (தானியம்), சிறுமை.

இயல் 3

www.tnpscjob.com

**இ) அண்ணம், அன்னம்**

அண்ணம் - மேல்வாய், மேல் நாக்கு.

அன்னம் - கவரிமான், சோறு தானியம், பிரம்ம வாகனம்.

**ஈ) வெல்லம், வெள்ளம்**

வெல்லம் - கருப்பஞ்சாற்றுக்கட்டி.

வெள்ளம் - நீர்ப்பெருக்கு, கடல், கடலலை, நீர், ஈரம், மிகுதி, உண்மை.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



"வறுமையில் வாடிய
எனக்கு
ஒருநாள் கிடைத்தது
நல்லுணவு......
உண்ணும் வேளையில்
நீ வந்தாய்......
பசியால் இணைந்தோம்
பகிர்ந்து உண்ணலாம்
வா! தோழா வா!"

## செயல் திட்டம்

**உணவு, விருந்து சார்ந்த பழமொழிகளையும் விழிப்புணர்வுத் தொடர்களையும் திரட்டி, அகர வரிசைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

**எ.கா: நொறுங்கத் தின்றால் நூறு வயது**

- அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
- உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
- உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
- ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
- கடைத் தேங்காயை வழிப்பிள்ளையாருக்கு உடைக்காதே.
- நொறுங்கத் தின்றால் நூறு வயது.
- பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்.
- பணம் பந்தியிலே குணம் குப்பையிலே.
- பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
- முழு பூசணியைச் சோற்றில் மறைக்காதே.
- வாழ்வதற்காக உண்; உண்பதற்காக வாழாதே.
- விருந்தும் மருந்தும் மூன்று நாள்.
- விளையும் பயிர் முளையிலே தெரியும்.
- வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்.
- வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவானேன்.



www.tnpscjob.com

**கலைச்சொல் அறிவோம்**

- செவ்விலக்கியம் - Classical literature
- காப்பிய இலக்கியம் - Epic literature
- பக்தி இலக்கியம் - Devotional literature
- பண்டைய இலக்கியம் - Ancient literature
- வட்டார இலக்கியம் - Regional literature
- நாட்டுப்புற இலக்கியம் - Folk literature
- நவீன இலக்கியம் - Modern literature

## நிற்க அதற்குத் தக

"தம்பி... உனக்குப் பிடிச்ச காய் சொல்லு" - "கேரட்"
"பிடிச்ச பழம்" - "ஆப்பிள்"
"பிடிச்ச காலை உணவு" - "நூடுல்ஸ்"
"மத்தியானத்துக்கு" - "ஃப்ரைடு ரைஸ்"
"ராத்திரி" - "பீட்ஸா அல்லது பாஸ்தா"

இது ஏதோ ஆங்கிலப்படத்தின் வசனம் அல்ல. "சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர்" என்று என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல் ஒட்டு மொத்த இளைய தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும் சாம்பார் சாதமும் கத்திரிக்காய்ப் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில் ஆம் காணாமல் போய்விடும்! உங்கள் குழந்தைகள் "ஆடு மாடுகளைத் தவிர மனுஷங்க கூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும்.

மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?

**விடை :**

நாகரிகம் கருதியோ, நாச்சுவை கருதியோ நம் பாரம்பரிய உணவுகளைத் தவிர்த்தல் கூடாது. வெப்பமயமான நம் நாட்டிற்கு புழுங்கல் அரிசியே ஏற்றது. ஆகவே, நம் நாட்டுச் சூழலுக்கு ஏற்ற பாரம்பரிய உணவுகளைத் தினமும் கட்டாய உணவாக உட்கொள்ளும் போது அது நம் உடலுக்கு மிகுந்த சக்தியைக் கொடுக்கும். பாரம்பரிய உணவுகளைத் தவிர்க்கும் போது 'உணவே மருந்து' என்ற நிலை மாறி 'மருந்தே உணவு' என்ற நிலைக்குத் தள்ளப்படுவோம் என்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.



www.tnpscjob.com

இயல் 3 பண்பாடு

வாழ்வியல் இலக்கியம்

# திருக்குறள்

- திருவள்ளுவர்

## பாடநூல் வினாக்கள்

### கற்பவை கற்றபின்

பக்கம்: 73

**1. படங்கள் உணர்த்தும் குறளின் கருத்தினை மையமிட்டு வகுப்பில் கலந்துரையாடுக.**

|  |  |
|---|---|
| முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும். | பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல்; கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண். |

படம் - 1 (அ) :

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

**அறிவு** : மேற்கண்ட படத்தைக் காணும் போது நீ என்ன நினைக்கிறாய்?

**மதி** : மாட்டு வண்டிக்காரனின் உழைப்பு தெரிகிறது.

**அறிவு** : எப்படி?

**மதி** : சொந்த வண்டியோ, வாடகை வண்டியோ தெரியவில்லை. எனினும் மூட்டைகளை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் தன்னுடன் கூலியாட்களை வைக்காமல் தானே அச்செயலைச் செய்கிறான். மேலும் அவன் வண்டியில் அமர்ந்து செல்லவில்லை. இது அவனிடமுள்ள சோம்பலின்மையை வெளிப்படுத்துகிறது.

**அறிவு** : இதன் மூலம் நீ கூறவிருக்கும் கருத்து யாது?

**மதி** : இப்படிப்பட்ட கடின உழைப்பாளி வாழ்வில் ஒரு நாளும் வறுமை நிலையை அடையமாட்டான். வாழ்வில் உயர்வடைவான்.

படம் - 1 (ஆ) : **(உரையாடல் தொடர்ச்சி)**

**மதி** : இப்படத்தில் குடும்பத்தலைவன் உழைப்பின்றி சோம்பேறி இருத்தலால் அவன் குடும்பம் வறுமை நிலையில் உள்ளது.

படம் - 2 (அ) : **பண்என்னாம் பாடற் இயைபின்றேல்; கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.**

**அறிவு** : மேற்கண்ட படத்தைப் பார்க்கும் போது உன் மனதில் தோன்றும் கருத்து யாது?

www.tnpscjob.com

**மதி** : 'தா' என்று பிறரிடம் யாசித்தல் இழிவான செயலாகும். அப்படி கேட்டும் கேட்ட பொருளைக் கொடுக்காமல் இருப்பது அதைவிட இழிவாகும்.

**அறிவு** : இச்செயல் குறித்து நீ என்ன கருதுகிறாய்?

**மதி** : ஐயன் வள்ளுவன் கூறியது போல இரக்கம் இல்லாத கண்களால் பயன் என்ன? என்று கருதுகிறேன்.

**படம் - 2 (ஆ) : (உரையாடல் தொடர்ச்சி)**

**மதி** : இசையோடு பாடல் பொருந்தாததால் மக்கள் அதனை விரும்பாமல் அவ்விடத்தை விட்டுக் கடந்து செல்கின்றனர், பாடல், இசை இரண்டும் வேறுபட்டால் என்ன பயன். இதைப் போலவேதான் இரக்க குணமில்லாதவனுக்குக் கண் இருந்தும் அதனால் பயன் ஒன்றும் இல்லை.

**2. கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.**

'சின்னச்சாமி... யாரோ மரத்தோரமா நிற்கிறாங்க... யாராய் இருக்கும்...'' மாட்டு வண்டிய ஓட்டிக்கிட்டே அப்பா கேட்டார்.

"தெரியலப்பா..''

"இறங்கி யாருன்னு பாரு...''

வாட்டசாட்டமாய், கண்ணாடியும் அலைபேசியும் கையுமாய் சாலையோரத்தில் வண்டியுடன் ஒருவர் நின்றிருந்தார்.

"ஐயா... நீங்க...''

வெளியூருப்பா... வண்டி நின்று போச்சு...!''

"அப்படியா... வண்டியத் தூக்கி மாட்டு வண்டியில வச்சுட்டு வாங்க. மழை வர்ற மாதிரியிருக்கு... ஊரு ரொம்ப தூரம்.. வேற வண்டியும் வராது...''

அவர் உடையையும் உழைத்துக் களைத்த வியர்வை பொங்கிய உடலையும் பார்த்து வரலைன்னுட்டார். மூன்று நான்கு பேர்தான் வண்டியில இருந்தோம்... சிறிது தூரம் போறதுக்குள்ள மழை கொட்டு கொட்டுன்னு கொட்டிருச்சு... நாங்க வீட்டுக்குப் போயிட்டோம்.

இரவுல தூங்கப் போறப்ப... அப்பா சொன்னார். தம்பி... அந்த சூட்டுக்காரர் மழை தாங்காம நடந்திருக்காரு. தேங்கா விழுந்து மண்ட உடைஞ்சு... வேற யாரோ தூக்கிட்டு வந்திருக்காங்க. நம்ம ஊரு ஆசுபத்திரியில... கட்டுப்போட்டுக்கிட்டு இருந்தாங்க.. பாவம் படிச்சவரா இருக்காரு... சூழ்நிலை புரியாம வரமாட்டேன்னு சொன்னாரு. இப்ப வேதனைப்பட்டாரே...

அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார்.

ஆ) பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

இ) ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்.

**விடை : அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.**

**காரணம் :**

வண்டிக்காரரின் உடையையும் உழைத்துக் களைத்த வியர்வை பொங்கிய உடலையும் பார்த்த சூட்டுக்காரன் தனக்கு உதவ வந்த அவனை ஒதுக்கித் தள்ளினான். உலகத்தானோடு பொருத்தி

இயல் 3

வாழும் தன்மையற்றவனாய் இருந்ததால் அவன் விபத்திற்குள்ளாக நேர்ந்தது. இவன் கற்றிருந்தும் அறிவில்லாதவனே.

## குறுவினா

1. **'நச்சப் படாதவன்' செல்வம் - இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.**

நச்சப் படாதவன் என்பதன் பொருள், பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர்.

2. **கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய**
**கோடிஉண் டாயினும் இல் - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.**

கொடுப்பதூஉம் - இன்னிசை அளபெடை

துய்ப்பதூஉம் - இன்னிசை அளபெடை

3. **பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.**

| | |
|---|---|
| **உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும்** | **ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை** |
| **ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது** | **உயிரினும் ஓம்பப் படும்** |
| **ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர்** | **நடு ஊருள் நச்சுமரம் பழுத்தற்று** |

**விடை:**

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் | உயிரினும் ஓம்பப் படும் |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது | நடு ஊருள் நச்சுமரம் பழுத்தற்று |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |

4. **எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?**

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு **[விடை: அ) கூவிளம் தேமா மலர்]**

## சிறுவினா

1. **வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்**
**கோலொடு நின்றான் இரவு - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.**

இப்பாடலில் உவமையணி பயின்று வந்துள்ளது.

**அணி இலக்கணம் :**

உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவமஉருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.

உவமை : வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிபறி செய்தல்.

உவமேயம் : ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மன்னன் வரி விதித்தல்.

உவம உருபு : போல (வெளிப்படை)

**விளக்கம் :**

ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானது ஆகும்.



www.tnpscjob.com

2. **கவிதையைத் தொடர்க.**



தண்ணீர் நிறைந்த குளம்
தவித்தபடி வெளிநீட்டும் கை
கரையில் கைபேசி படமெடுத்தபடி
**பதறுகிறது என் நெஞ்சமடி**
**வருங்கால சமுதாயம் என்னவாகுமடி**
**எப்போது தீரும் தன்படம் மோகமடி**
**மூழ்கியவன் மூச்சு நின்னுப்போச்சு**
**மனிதநேயம் செத்துப்போச்சு**

**திருக்குறள் பற்றிய கவிதை :**

உரை(றை) ஊற்றி ஊற்றிப்
பார்த்தாலும்
புளிக்காத பால்!
தந்தை தந்த
தாய்ப்பால்
முப்பால் - *அறிவுமதி*

## கூடுதல் வினாக்கள்

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **எய்துவர், காண்பர்** | - | வினையாலணையும் பெயர்கள் |
| **எய்தாப் பழி, தமராக் கொளல், ஏமரா மன்னன்** | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரச்சங்கள் |
| **புகுத்தி** | - | வினையெச்சம் |
| **கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம்** | - | இன்னிசையளபெடைகள் |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **எய்துவர்** | - | **எய்து + வ் + அர்** | **புகுத்தி** | - | **புகுத்து + இ** |
| எய்து | - | பகுதி | புகுத்து | - | பகுதி |
| வ் | - | எதிர்கால இடைநிலை | இ | - | வினையெச்ச விகுதி |
| அர் | - | குறிப்பு வினைமுற்று விகுதி | | | |

### பலவுள் தெரிக

1. **கீழக்காண்பனவற்றுள் பொருந்தாத இணை எது?**

அ) உயிரினும் மேலானது - ஒழுக்கம்
ஆ) ஒழுக்கமுடையவர் - மேன்மை அடைவர்
இ) உண்மைப் பொருளைக் காண்பது - அறிவு
ஈ) உலகத்தோடு பொருந்தி வாழக் கல்லாதவர் - அறிவுடையவர்

**[விடை: ஈ) உலகத்தோடு பொருந்தி வாழக் கல்லாதவர் - அறிவுடையவர்]**

2. **பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.**

அ) அழிக்க வேண்டியவை - ஆசை, சினம், அறியாமை
ஆ) பெரியோரை துணையாக்கிக் கொள்ளுதல் - பெறும்பேறு

இயல் 3

www.tnpscjob.com

இ) நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் - பிறர் நன்மையைக் கருதுபவர்
ஈ) ஆராயாத மன்னன் - நாட்டின் வளத்தைப் பெருக்குவான்

**[விடை: ஈ) ஆராயாத மன்னன் - நாட்டின் வளத்தைப் பெருக்குவான்]**

**3. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று - இக்குறளில் பயின்று வரும் அணி எது?**

அ) உவமையணி ஆ) எடுத்துக்காட்டு உவமையணி
இ) ஏகதேச உருவக அணி ஈ) உருவக அணி **[விடை: அ) உவமையணி]**

**4. பொருத்துக.**

1. மேன்மை - அ) சினம்
2. வெகுளி - ஆ) உயர்வு
3. மயக்கம் - இ) வறுமை
4. இன்மை - ஈ) அறியாமை

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

**5. உயிரினும் மேலானதாகக் கருதிப் பாதுகாக்க வேண்டியது __________.**

அ) ஒழுக்கம் ஆ) மெய் உணர்தல்
இ) கண்ணோட்டம் ஈ) கல்வி **[விடை: அ) ஒழுக்கம்]**

**6. "ஒழுக்கம் விழுப்பம் தரலான்" என்பதில் அமைந்துள்ள நயம் __________.**

அ) மோனை ஆ) எதுகை
இ) முரண் ஈ) இயைபு **[விடை: ஆ) எதுகை]**

**7. "பெரியாரைப் பேணித் தமராக் கொளல்" இதில் "தமர்" என்பதன் பொருள் __________.**

அ) நூல் ஆ) துணை
இ) பேறு ஈ) அரிய **[விடை : ஆ) துணை]**

**8. "முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" இதில் "இன்மை' என்பதன் பொருள் __________.**

அ) வறுமை ஆ) இல்லை
இ) முயற்சி ஈ) செல்வம் **[விடை: அ) வறுமை]**

**9. பொருத்துக.**

1. ஒழுக்கமுடைமை - அ) 36 வது அதிகாரம்
2. மெய்உணர்தல் - ஆ)14 வது அதிகாரம்
3. பெரியாரைத் துணைக்கோடல் - இ) 56வது அதிகாரம்
4. கொடுங்கோன்மை - ஈ) 45 வது அதிகாரம்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4. ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

## குறுவினா

**1. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?**

- உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம்.
- ஏனெனில் ஒழுக்கமானது அனைத்துச் சிறப்புகளையும் தருகிறது.



www.tnpscjob.com

**2. ஒழுக்கத்தினால் கிடைப்பது எது? இழுக்கத்தினால் கிடைப்பது எது?**

- ஒழுக்கத்தினால் கிடைப்பது மேன்மை.
- இழுக்கத்தினால் கிடைப்பது அடையக்கூடாத பழிகள்.

**3. பல கற்றும் கல்லாதவராகக் கருதப்படுபவர் யார்?**

உலகத்தோடு பொருந்தி வாழக் கல்லாதவர் பல நூல்களைக் கற்றறிந்தாலும் கல்லாதவராகவே கருதப்படுவார்.

**4. எப்பொருளைக் காண்பது அறிவு?**

எந்தப் பொருள் எந்த இயல்பினதாய்த் தோன்றினாலும், அந்தப் பொருளின் உண்மைப் பொருளைக் காண்பது அறிவு.

**5. நாமம் கெடக்கெடும் நோய் பற்றி எழுதுக.**

- ஆசை, சினம், அறியாமை என்ற மூன்றும் அழிதல் வேண்டும்.
- இம்மூன்றும் அழிந்தால் அவற்றால் வரும் துன்பங்களும் அழியும்.

**6. பெரும்பேறு எது?**

பெரியோரைப் போற்றித் துணையாக்கிக் கொள்ளுதலே கிடைத்தற்கரிய பெரும்பேறாகும்.

**7. கெடுப்பார் இலானும் கெடுபவர் யார்? ஏன்?**

குற்றம் கண்டபோது இடித்துத் திருத்தும் பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத மன்னன் தன்னைக் கெடுக்க பகைவர் இல்லை எனினும் தானே கெட்டழிவான்.

**8. நல்லார் தொடர்பை கைவிடல் எத்தன்மையது?**

தான் ஒருவனாக நின்று பலரோடு பகை மேற்கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு தீமையைத் தரும். ஆகவே நல்லார் நட்பைக் கைவிடல் கூடாது.

**9. ஆட்சியதிகாரம் கொண்டுள்ள அரசன் குறித்துக் கூறப்பட்டுள்ள செய்தி யாது?**

- ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பான்.
- அரசனது இச்செயலானது வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகராகும்.

**10. ஆராயாது ஆட்சி செய்யும் மன்னனைக் குறித்து குறள் கூறும் செய்தி யாது?**

தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னன் தன் நாட்டை நாள்தோறும் இழக்க நேரிடும்.

**11. இரக்கம் இல்லா கண்கள் எதனைப் போன்று பயனற்றது?**

- பாடலோடு பொருந்தாத இசையால் பயனில்லை.
- அதைப் போல இரக்கம் இல்லாத கண்களாலும் பயனில்லை.

**12. உலகமே உரிமையுடையதாகும் எப்போது?**

நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும்.

**13. நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் யார்? ஏன்?**

- விரும்பத்தக்க இரக்ககுணம் கொண்டவர்கள் நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர்.
- ஏனெனில் பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணுவர்.

**14. ஒருவருக்கு பெருமை தருவது எது?**

- ஒரு செயலை முடிப்பதற்கு இயலாது என்று எண்ணிச் சோர்வடையக் கூடாது.
- அச்செயலை முயற்சியுடன் முடிப்பது பெருமை தரும்.

**15. உயர்ந்த நிலையை எப்போது அடைய முடியும்?**

விடாமுயற்சி என்னும் உயர்பண்பு கொள்ளுதல், பிறருக்கு உதவுதல். இவ்விரு பண்புகளால் உயர்ந்த நிலையை அடைய முடியும்.



www.tnpscjob.com

**16. ‘செல்வம் பெருகுதல்’ ‘வறுமை வருதல்’ எப்போது?**

- முயற்சி செய்வதால் செல்வம் பெருகும்.
- முயற்சி இல்லாவிட்டால் வறுமையே வந்து சேரும்.

**17. இழிவற்றது இழிவானது எது?**

- ஐம்புலன்களில் ஏதேனும் குறையிருப்பின் அது இழிவன்று.
- அறிய வேண்டியதை அறிந்து முயற்சி செய்யாததே இழிவாகும்.

**18. சோர்விலாது முயற்சி செய்வோர் குறித்துக் கூறு.**

சோர்விலாது முயற்சி செய்வோர் செய்கின்ற செயலுக்கு இடையூறாய் வரும் முன்வினையையும் தோற்கடித்து வெற்றியடையவர்.

**19. பல கோடி பெறினும் பயனில்லை எப்போது?**

பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருப்பவர் பல கோடிப் பொருள்களைப் பெற்றிருந்தாலும் அதனால் பயன் இல்லை.

**20. விரும்பப்படாதவர் செல்வம் எதனைப் போன்றது?**

பிறருக்கு உதவாமல் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம், ஊரின் நடுவில் நச்சு மரம் பழுத்தது போன்றதாகும்.

**21. “பொறியின்மை யார்க்கும் பழியன்று” - இவ்வடிகளில் “பொறி” என்பது எதனைக் குறிக்கும்?**

பொறி என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளைக் குறிக்கும்.

**22. “முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.” - இக்குறட்பாவில் அமைந்த முரண்சொற்கள் எவை?**

- முயற்சி - முயற்றின்மை
- திருவினை (செல்வம்) - இன்மை (வறுமை)

**23. “அடுக்கிய கோடி உண்டாயினும் இல்” ஏன்?**

பிறருக்கும் கொடுக்காமல், தானும் அனுபவிக்காமல் இருப்பவர் அடுக்கிய பல கோடி பெரினும் பயன் இல்லை.

**24. “உரிமை உடைத்து இவ்வுலகு” - யாருக்கு?**

நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு, உலகமே உரிமை உடையதாகும்.

**25. நாள்தோறும் நாடு கெடும் - என்று வள்ளுவர் கூறக் காரணம் யாது?**

தன் நாட்டில் நடக்கும் நன்மை தீமைகளை ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னன் நாடு நாள்தோறும் கெடும்.

**26. கற்றும் கல்லாதார் அறிவிலாதார் - யார்?**

உலகத்தோடு பொருந்தி வாழக் கல்லாதார், பல நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவர்.

**27. பாடலோடு பொருந்தா இசையால் பயனில்லை என்னும் உவமையைக் கொண்ட திருக்குறளை எழுதுக.**

பண்என்னாம் பாடற் இயைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

**28. முயற்சி இல்லாதவருக்கு வறுமையே கிட்டும் என்பதற்குச் சான்றாக விளங்கும் திருக்குறளை எழுதுக.
(அ) முயற்சி செய்பவருக்கு செல்வம் பெருகும் என்பதற்குச் சான்றாக விளங்கும் திருக்குறளை எழுதுக.**

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

இயல் 3

www.tnpscjob.com

**29. ஒரு செயலை முயற்சியுடன் முடிப்பது பெருமை தரும் என்பதை வலியுறுத்தும் குறட்பாவினை எழுதுக.**

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

**30. நற்பண்புடையோரின் நட்பைக் கைவிடுவது பலமடங்கு தீமையைத் தரும் என்பதைக் குறிப்பிடும் திருக்குறளை எழுதுக.**

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

**31. எந்தப் பொருளாயினும் அதன் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவு என்பதை விளக்கும் குறட்பாவினை எழுதுக.**

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

## சிறுவினா

**1. ஒழுக்கமுடைமை குறித்து வள்ளுவர் கூறிய செய்தி யாது?**

**உயிரினும் மேலானது :**

ஒழுக்கம் எல்லாருக்கும் அனைத்துச் சிறப்புகளையும் தருவதால் அதை உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்தல் வேண்டும்.

**மேன்மை - பழி :**

ஒழுக்கத்தினால் கிடைப்பது மேன்மை. இழுக்கத்தினால் கிடைப்பது அடையக் கூடாத பழி.

**பல கற்றும் அறிவிலார் :**

உலகத்தோடு பொருந்தி வாழக் கல்லாதவர் பல நூல்களைக் கற்றவராயினும் அறிவு இல்லாதவராகவே கருதப்படுவார்.

**2. மெய்யுணர்தல் குறித்து எழுதுக.**

**உண்மைப் பொருளைக் காணல் :**

எந்தப் பொருள் எந்த இயல்பினதாகத் தோன்றினாலும் அந்தப் பொருளின் உண்மைப் பொருளைக் காண்பது அறிவு.

**துன்பம் அழிதல் :**

ஆசை, சினம், அறியாமை என்ற மூன்றையும் அழித்தால் அதனால் வரும் துன்பமும் அழியும்

**3. பெரியாரைத் துணைக்கோடல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.**

**பெரும்பேறு :**

பெரியோரைப் போற்றித் துணையாக்கிக் கொள்ளுதலே பெரும்பேறாகும்.

**பாதுகாப்பற்ற மன்னன் :**

குற்றம் கண்ட இடத்து இடித்துத் திருத்தும் பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத மன்னன் தன்னைக் கெடுக்கப் பகைவர்கள் இல்லையெனினும் தானே கெட்டழிவான்.

**பெரியோர் நட்பைக் கைவிடல் :**

நற்பண்புடைய பெரியோரின் நட்பைக் கைவிடுவதானது, தனியொருவனாக நின்று பகைவர் பலரைப் பகைத்துக் கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு தீமையைத் தரும்.



www.tnpscjob.com

**4. கொடுங்கோன்மை பற்றிய செய்தியைக் கூறு.**

**ஆட்சியதிகாரம் :**

தன் ஆட்சியதிகாரத்தைக் கொண்டு வரி விதிக்கும் மன்னனது செயலானது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிபறி செய்பவனின் செயலுக்கு ஒப்பானது.

**தன் நாட்டை இழத்தல் :**

தன் நாட்டின் நன்மை, தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னன் தன் நாட்டை இழக்க நேரிடும்.

**5. கண்ணோட்டம் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுது.**

**இரக்கம் இல்லாத கண்கள் :**

பாடலோடு பொருந்தாத இசையால் பயன் ஒன்றுமில்லை. அதுபோல, இரக்கமில்லாக் கண்களால் பயன் ஒன்றுமில்லை.

**நடுநிலை :**

நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும்.

**நஞ்சை உண்ணும் பண்பாளர் :**

விரும்பத் தகுந்த இரக்க இயல்பைக் கொண்டவர்கள், பிறரது நன்மைக்காக தனக்கு நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் ஆவார்.

**6. ஒருவனது செல்வம் பயனற்றதாய்ப் போவது எப்போது?**

**பல கோடிப் பொருள்கள் :**

பிறருக்கும் கொடுக்காமல் தானும் அனுபவிக்காமல் இருப்பவர் பல கோடிப் பொருள்கள் பெற்றிருந்தாலும் அதனால் பயன் இல்லை.

**நச்சுமரம் பழுத்தது :**

பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம் ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றதாகும்.

**7. பண்என்னாம் பாடற் இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண் - இக்குறளில் பயின்று வரும் அணியைக் கூறி விளக்குக.**

இப்பாடலில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளது.

**அணி இலக்கணம் :**

உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவமஉருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

| | | |
|---|---|---|
| **உவமை** | : | பாடலோடு பொருந்தவில்லை எனில் இசையால் பயனில்லை. |
| **உவமேயம்** | : | இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் பயன் இல்லை. |
| **உவமஉருபு** | : | போல (மறைந்து வந்துள்ளது) |
| **விளக்கம்** | : | பாடலோடு பொருந்தவில்லை எனில் இசையால் பயன் இல்லை. அதுபோலவே, இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் பயன் இல்லை. |

**8. கீழ்க்காணும் பாடலில் உள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதி அடிக்கோடிடுக.**

1. பண்என்னாம் பாடற் இயைபின்றேல் ; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

**விடை :** பண்என்னாம், கண்என்னாம் - சீர் எதுகை

பண்என்னாம்
கண்ணோட்டம் } - அடி எதுகை



www.tnpscjob.com

இயல் 4 தொழில்நுட்பம்

உரைநடை உலகம்

# செயற்கை நுண்ணறிவு

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

**தலைப்பு : செயற்கை நுண்ணறிவு**

**குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.**

அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.
ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.
இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**[விடை: அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.]**

2. **பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?**

அ) துலா ஆ) சீலா
இ) குலா ஈ) இலா **[விடை: ஈ) இலா]**

### குறுவினா

1. **வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.**

**எ.கா: செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்**

- செயற்கை நுண்ணறிவால் இயங்கும் இயந்திர மனிதன் (Robo-ரோபோ)
- செயற்கை நுண்ணறிவால் இயங்கும் திறன்பேசி (Smart Phone)

### சிறுவினா

1. **இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.**

- இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்தவில்லை.
- அது மனிதனுக்குரியத் தேவைகளை மட்டுமே மேம்படுத்தி இருக்கிறது.
- அறிவியலால் இன்று மனிதன் மனிதனாக வாழவில்லை.
- இயந்திரம் மனிதனாகிவிட்டது. மனிதன் இயந்திரம் ஆகிவிட்டான்.
- மனிதநேயத்தையும் அன்பையும் இரக்கத்தையும் இன்றைய மனிதனிடம் பார்க்க முடியவில்லை.
- பணிகளால் அவன் எந்திரத்தைப் போல ஓடிக்கொண்டே உள்ளான்.



www.tnpscjob.com

**2. மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனித குலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு 'எதிர்காலத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் எழுதுக.**

**எதிர்காலத் தொழில்நுட்பம்**

உயிரினங்களில் மனிதரை உயர்த்திக்காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே! அந்தச் சிந்தனைக்குத் தொழில்நுட்பமும் துணை செய்கிறது. திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப் போல நம்முடன் உரையாடி உதவி செய்கிறது.

நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கும். நாம் திறக்க கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும். நாம் கேட்பதை உலாவியில் தேடும். நாம் விரும்பும் அழகான கவிதைகளை இணையத்தில் தேடித்தரும். எந்தக்கடையில் எது விற்கும் என்று சொல்லும். படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும். நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றி பட்டியலிடும்.

எதிர்காலத்தில் நம் நெருங்கிய நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரை விடவும் உதவு மென்பொருள் நம்மை நன்கு அறிந்திருக்கும்.

## நெடுவினா

**1. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைகொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் "செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்" பற்றி ஒரு கட்டுரை எழுதுக.**

| குறிப்புச்சட்டம் |
|---|
| முன்னுரை |
| ஊர்திகளை இயக்குதல் |
| மனிதர்களிடம் போட்டி |
| கல்வித்துறை |
| பிற செயல்பாடுகள் |
| வேலை வாய்ப்புகளில் மாற்றம் |
| இயந்திர மனிதனிடம் குழந்தை |
| தோழனாய் இயந்திர மனிதன் |
| உயிராபத்தை விளைவித்தல் |
| வணிக வாய்ப்புகள் |
| முடிவுரை |

**முன்னுரை:**

ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைகொள்ளும் வெறும் வணிகத்துடன் அது நின்றுவிடாது. செயற்கை நுண்ணறிவின் வெளிப்பாடுகள் இனி மிகுதியாக இருக்கும்.

**ஊர்திகளை இயக்குதல் :**

- எதிர்காலத்தில் நாம் இயக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவு கொண்டு இயக்கப்படும்.
- இத்தகைய ஊர்திகள் ஏற்படுத்தும் விபத்து குறையும்.
- போக்குவரத்து நெரிசல் இருக்காது.
- பயண நேரம் குறையும்.
- எரிபொருள் மிச்சப்படும்.



www.tnpscjob.com

**மனிதர்களிடம் போட்டி :**

மென்பொருள்கள், கவிதைகள், கதைகள், விதவிதமான எழுத்து நடைகள் போன்றவற்றைக் கற்றுக் கொண்டு மனிதர்களிடம் போட்டியிட்டாலும் வியப்பதற்கில்லை.

**கல்வித்துறை :**

கல்வித்துறையில் இத்தொழில்நுட்பத்தைப் பல விதங்களில் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

**பிற செயல்பாடுகள் :**

- விடுதிகளில், வங்கிகளில், அலுவலகங்களில் தற்போது மனிதன் அளிக்கும் சேவையை இயந்திர மனிதன் செய்யும்.
- நம்முடன் உரையாடுவது, ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்து தருவது, தண்ணீர் கொண்டு வந்து தருவது, குழந்தைகளுக்குப் பொம்மை கொண்டு வந்து தருவது, குழந்தைகளுக்கு வேடிக்கைக் காட்டுவது எனப் பலவற்றையும் செய்யும் நிலை வரும்.

**வேலை வாய்ப்புகளில் மாற்றம் :**

வேலை வாய்ப்புகளில் கணிசமான மாற்றத்தை எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு கொண்டு வரும்.

**இயந்திர மனிதனிடம் குழந்தை :**

எதிர்காலத்தில் இயந்திர மனிதனிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு அலுவலகம் செல்லும் பெற்றோரைப் பார்க்க முடியும்.

**தோழனாய் இயந்திர மனிதன் :**

வயதானவர்களுக்கு உதவிகள் செய்தும், அவர்களுக்கு உற்ற தோழனாய்ப் பேச்சுக் கொடுத்தும் பேணும் இயந்திர மனிதர்களை நாம் பார்க்க முடியும்.

**உயிராபத்தை விளைவித்தல் :**

- செயற்கை நுண்ணறிவுள்ள இயந்திர மனிதர்களால், மனிதர் செய்ய இயலாத அலுப்புத் தட்டக்கூடிய கடினமான செயல்களையும் செய்ய முடியும்.
- மனித முயற்சியில் உயிராபத்தை விளைவிக்கக் கூடிய செயல்களையும் செய்ய முடியும்.

**வணிக வாய்ப்புகள் :**

- பெருநிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும் சந்தைப்படுத்தவும், புதிய வணிக வாய்ப்புகளைச் செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்திக் கொடுக்கும்.

**முடிவுரை:**

- செயற்கை நுண்ணறிவு சாதனங்களால் மனிதனின் வேலைப்பளு குறைந்துள்ளது. கால விரயம் தடுக்கப்பட்டுள்ளது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பொருத்தமான விடை வரிசையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| அ) மின்னணுப் புரட்சி | - | 1. Browser |
| ஆ) செயல்திட்ட வரைவு | - | 2. Data |
| இ) உலாவி | - | 3. Computer Program |
| ஈ) தரவு | - | 4. Digital Revolution |

அ) 1, 4, 3, 2 ஆ) 4, 1, 2, 3
இ) 4, 3, 2, 1 ஈ) 2, 4, 1, 3 **[விடை: இ) 4, 3, 2, 1]**

2. **பொருந்தாத இணையைக் கண்டறிக.**
அ) பெப்பர் - ஜப்பான் சாப்ட் வங்கி
ஆ) வாட்சன் - ஐ.பி.எம். நிறுவனம்
இ) இலா - பாரத ஸ்டேட் வங்கி
ஈ) பெப்பர் - புற்றுநோயைக் கண்டுபிடித்தது
**[விடை: ஈ) பெப்பர் - புற்றுநோயைக் கண்டுபிடித்தது]**

3. **சீன நாட்டில் சூவன்செள துறைமுக நகரில் கட்டப்பட்ட கோயில் ___________.**
அ) சிவன் கோயில் ஆ) பெருமாள் கோயில்
இ) முருகன் கோயில் ஈ) பிள்ளையார் கோயில் **[விடை: அ) சிவன் கோயில்]**

4. **உயிரினங்களில் மனிதரை உயர்த்திக்காட்டுவது அவர்களின் ___________.**
அ) சிந்தனை ஆற்றல் ஆ) செல்வம்
இ) வாழ்நாள் ஈ) ஆற்றல் **[விடை: அ) சிந்தனை ஆற்றல்]**

5. **___________ களில் ஒவ்வொருவருக்குமான தனி நபர் கணினிகளின் வளர்ச்சியும், இணையப் பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் காரணமாயின.**
அ) 1970 ஆ) 1960
இ) 1980 ஈ) 1950 **[விடை: இ) 1980]**

6. **இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில் நுட்பம் ___________.**
அ) செயற்கை நுண்ணறிவு ஆ) மென்பொருள்
இ) மீத்திறன் நுண்ணறிவு ஈ) முகநூல், புலனம் போன்றவை
**[விடை: அ) செயற்கை நுண்ணறிவு]**

7. **இயல்பான மொழிநடையை உருவாக்குதல் என்னும் மென்பொருளின் பெயர் ___________.**
அ) வேர்டுஸ்மித் ஆ) வேர்டுபீட்டர்
இ) வேட்ஸ்வொர்த் ஈ) வேர்ல்டுஸ்மித் **[விடை: அ) வேர்டுஸ்மித்]**

8. **வேர்டுஸ்மித் என்பதைத் தமிழில் ___________ என்று அழைப்பர்.**
அ) எழுத்தாளி ஆ) எழுத்தாணி
இ) எழுத்தோவியம் ஈ) குரலாளி **[விடை: அ) எழுத்தாளி]**

9. **இதழியலில் செயற்கை நுண்ணறிவு செய்துள்ள குறிப்பிடத்தகுந்த மாற்றங்களில் ஒன்று ___________.**
அ) இயல்பான மொழிநடை ஆ) கடினமான மொழிநடை
இ) தாய்மொழிநடை ஈ) உலக மொழிகள் இணைப்பு
**[விடை: அ) இயல்பான மொழிநடை]**

10. **2016 இல் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்த ஐ.பி.எம். நிறுவனத்தின் கணினியின் பெயர் ___________.**
அ) வாட்சன் ஆ) வேர்டுஸ்மித்
இ) ஸ்டீவ்ஸ்மித் ஈ) பெப்பர் **[விடை: அ) வாட்சன்]**

11. **செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன் சில நிமிடங்களில் ___________ தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.**
அ) இருபதாயிரம் ஆ) இரண்டு இலட்சம்
இ) இரண்டு கோடி ஈ) இருபது கோடி **[விடை: இ) இரண்டு கோடி]**

இயல் 4

www.tnpscjob.com

12. __________ உதவியாளர்களை 'இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன் என்று பாரதியார் மெச்சுவதுபோல் மெச்சிக்கொள்ளலாம்.
அ) மெய்நிகர் ஆ) பொய் நிகர்
இ) செயற்கை ஈ) முதன்மை [விடை: அ) மெய்நிகர்]

13. இவ்வுலகை இதுவரை __________ ஆண்டு கொண்டிருக்கிறது; இனிமேல் __________ தான் ஆளப்போகிறது.
அ) மென்பொருள், செயற்கை நுண்ணறிவு
ஆ) செயற்கை நுண்ணறிவு, மென்பொருள்
இ) நுண்ணறிவு, முகநூல்
ஈ) முகநூல், புலனம் [விடை: அ) மென்பொருள், செயற்கை நுண்ணறிவு]

14. செயற்கை நுண்ணறிவின் மிகுதியான வளர்ச்சியால் __________ தேவை கூடியுள்ளது.
அ) மெய்நிகர் உதவியாளர்களின் ஆ) தரவு அறிவியலாளர்களின்
இ) உதவியாளர்களின் ஈ) அறிவியலாளர்களின்
[விடை: ஆ) தரவு அறிவியலாளர்களின்]

15. ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் __________.
அ) வாட்சன் ஆ) பெப்பர்
இ) சோபியா ஈ) வேர்டுஸ்மித் [விடை: ஆ) பெப்பர்]

16. உலக அளவில் அதிகம் விற்பனையாகும் ரோபோ __________.
அ) வாட்சன் ஆ) பெப்பர்
இ) இலா ஈ) சோபியா [விடை: ஆ) பெப்பர்]

17. பெப்பர் ரோபோக்களின் மூன்று வகையினுள் பொருந்தாததைக் கண்டறிக.
அ) வீட்டுக்குப் பயன்படுவது ஆ) வணிகத்துக்குப் பயன்படுவது
இ) படிப்புக்குப் பயன்படுவது ஈ) நாட்டுக்குப் பயன்படுவது
[விடை: ஈ) நாட்டுக்குப் பயன்படுவது]

18. இந்தியாவின் பெரிய வங்கி __________.
அ) இந்தியன் வங்கி ஆ) பாரத ஸ்டேட் வங்கி
இ) கனரா வங்கி ஈ) பரோடா வங்கி [விடை: ஆ) பாரத ஸ்டேட் வங்கி]

19. 'இலா' என்ற உரையாடு மென்பொருளை உருவாக்கியது __________.
அ) ஐ.பி.எம். நிறுவனம்
ஆ) பாரத ஸ்டேட் வங்கி
இ) ஹான்சன் ரோபோட்டிக்ஸ் நிறுவனம்
ஈ) சாப்ட் வங்கி [விடை: ஆ) பாரத ஸ்டேட் வங்கி]

20. இதழியலில் இயல்பான மொழிநடையை உருவாக்கும் மென்பொருள் __________.
அ) வாட்சன் ஆ) வழிகாட்டி வரைபடம்
இ) வேர்டுஸ்மித் (எழுத்தாளி) ஈ) பெப்பர் [விடை: இ) வேர்டுஸ்மித் (எழுத்தாளி)]

21. தகவல்களைக் கொடுத்தால், அழகான சில கட்டுரைகளை உருவாக்கும் மென்பொருள் __________
அ) வாட்சன் ஆ) வழிகாட்டி வரைபடம்
இ) வேர்டுஸ்மித் (எழுத்தாளி) ஈ) பெப்பர் [விடை: இ) வேர்டுஸ்மித் (எழுத்தாளி)]



www.tnpscjob.com

22. 2016 இல் ஐ.பி.எம். நிறுவனத்தின் நுண்ணறிவுக் கணினி ________
அ) வாட்சன் ஆ) வழிகாட்டி வரைபடம்
இ) வேர்டுஸ்மித் (எழுத்தாளி) ஈ) பெப்பர் **[விடை: அ) வாட்சன்]**

23. 50க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளில் இயந்திர மனிதர்களைப் பணியமர்த்தியுள்ள நாடு ________
அ) இந்தியா ஆ) சீனா
இ) அமெரிக்கா ஈ) ஜப்பான் **[விடை: ஆ) சீனா]**

24. செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு ________
அ) வன்பொருள் ஆ) மென்பொருள்
இ) இயந்திர மனிதன் ஈ) கணினி **[விடை: ஆ) மென்பொருள்]**

25. ‘‘இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்’’ என்று பாடியவர் ________
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கவிமணி ஈ) வைரமுத்து **[விடை: அ) பாரதியார்]**

26. ‘இலா’ மென்பொருள் ஒரு விநாடிக்கு உரையாடும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை ________
அ) பத்தாயிரம் ஆ) ஆயிரம்
இ) ஐயாயிரம் ஈ) பத்து **[விடை: அ) பத்தாயிரம்]**

27. சாப்ட் வங்கி உருவாக்கிய நாடு ________
அ) இந்தியா ஆ) சீனா
இ) அமெரிக்கா ஈ) ஜப்பான் **[விடை: ஈ) ஜப்பான்]**

28. பெப்பர் என்பது ஒரு ________
அ) வன்பொருள் ஆ) மென்பொருள்
இ) இயந்திர மனிதன் ஈ) கணினி **[விடை: இ) இயந்திர மனிதன்]**

29. ஜப்பானில் வரவேற்பாளராகவும் பணியாளராகவும் உள்ள இயந்திர மனிதன் ________
அ) வாட்சன் ஆ) இலா
இ) வேர்டுஸ்மித் (எழுத்தாளி) ஈ) பெப்பர் **[விடை: ஈ) பெப்பர்]**

30. ஜப்பானில் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவுவிடுதிகளிலும் பயன்பாட்டில் உள்ள இயந்திர மனிதன் ________
அ) வாட்சன் ஆ) இலா
இ) வேர்டுஸ்மித்(எழுத்தாளி) ஈ) பெப்பர் **[விடை: ஈ) பெப்பர்]**

31. காண்டன் நகர் அமைந்துள்ள நாடு ________
அ) இந்தியா ஆ) சீனா
இ) அமெரிக்கா ஈ) ஜப்பான் **[விடை: ஆ) சீனா]**

32. தமிழ்க் கல்வெட்டு காணப்படும் பிற நாடு ________
அ) ஆஸ்திரேலியா ஆ) சீனா
இ) அமெரிக்கா ஈ) ஜப்பான் **[விடை: ஆ) சீனா]**

33. பண்டையத் தமிழர் அடிக்கடி வணிகத்திற்காகச் சென்று வந்த சீன நகர் ________
அ) காண்டன் ஆ) சூவன்செள
இ) குப்லாய்கான் ஈ) பெய்ஜிங் **[விடை: ஆ) சூவன்செள]**



www.tnpscjob.com

**34. சீனப்பேரரசர் __________**

அ) காண்டன் ஆ) சூவன்சௌ

இ) குப்லாய்கான் ஈ) பெய்ஜிங் **[விடை: இ) குப்லாய்கான்]**

**35. சீனாவில் சிவன் கோவில் கட்டிய சீனப்பேரரசர் __________**

அ) காண்டன் ஆ) சூவன்சௌ

இ) குப்லாய்கான் ஈ) பெய்ஜிங் **[விடை: இ) குப்லாய்கான்]**

**36. பொருத்துக.**

1. பெப்பர் - அ) கட்டுரை உருவாக்கும் மென்பொருள்
2. எழுத்தாளி - ஆ) இயந்திர மனிதன்
3. இலா - இ) நுண்ணறிவுக் கணினி
4. வாட்சன் - ஈ) வாடிக்கையாளர்களுடன் உரையாடும் மென்பொருள்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ

இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

**37. ஸ்மார்ட்போன் என்பதற்கு இணையான தமிழ்ச்சொல் __________**

அ) திறன்பேசி ஆ) தொலைபேசி

இ) அலைபேசி ஈ) செல்பேசி **[விடை: அ) திறன்பேசி]**

**38. __________ தொழிற்புரட்சியின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவும் நம்மை வளப்படுத்த உதவும்.**

அ) மூன்றாவது ஆ) நான்காவது

இ) ஐந்தாவது ஈ) இரண்டாவது **[விடை: ஆ) நான்காவது]**

## குறுவினா

**1. மின்னணுப் புரட்சிக்கான காரணங்களைக் கூறுக.**

- 1980களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் வளர்ச்சி.
- இணையப் பயன்பாட்டின் பிறப்பு.

இவையே இன்றைய மின்னணுப் புரட்சிக்கான காரணங்களாகும்.

**2. 'வேர்டுஸ்மித்' குறிப்பு வரைக.**

- இதழியலில் மொழிநடையை உருவாக்கும் மென்பொருளின் பெயர் வேர்டுஸ்மித்.
- இதற்கு 'எழுத்தாளி' என்று பெயர்.
- இதில் தகவல்களைக் கொடுத்தால் மட்டும் போதும்; சில நொடிகளிலேயே அழகான கட்டுரையை உருவாக்குகின்றன.

**3. 'வாட்சன்' குறிப்பு வரைக.**

- 2016ல் ஐ.பி.எம். நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினி வாட்சன்.
- சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

**4. செயற்கை நுண்ணறிவு நமக்கு எப்படி அறிமுகமாகிறது?**

- சமூக ஊடகங்கள்.
- மின்னணுச் சந்தைகள்.

இவற்றின் மூலம் செயற்கை நுண்ணறிவு நமக்கு அறிமுகமாகிறது.



www.tnpscjob.com

**5. செயற்கை நுண்ணறிவு குறித்த தொழில்நுட்ப வரையறையைக் கூறுக.**

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு செயல்திட்ட வரைவு.

**6. செயற்கை நுண்ணறிவின் பொதுவான பணி யாது?**

மனிதனால் முடியும் செயல்களையும் அவன் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்யக்கூடியது செயற்கை நுண்ணறிவு.

**7. சீனாவில் மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் இயந்திர மனிதனின் செயல்பாடுகளைக் கூறுக.**

- மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் குரலையும் முகத்தையும் அடையாளம் கண்டு அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்கின்றன.
- சீன மொழியின் வெவ்வேறு வட்டார வழக்குகளையும் கூட அவை புரிந்து கொண்டு பதில் அளிக்கின்றன.

**8. ‘இலா’ என்னும் மென்பொருள் குறித்து எழுதுக.**

- பாரத ஸ்டேட் வங்கி ‘இலா’ என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியுள்ளது.
- ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடும்.
- அவர்களுக்கான சேவையை இணையம் மூலம் அளிக்கிறது.

**9. இலா (ELA) என்பதன் ஆங்கில விரிவாக்கத்தை எழுதுக.**

ELA - Electronic Live Assistant

**10. செயற்கை நுண்ணறிவின் சிறப்பு யாது?**

- செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை.
- செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் கேட்கவும் புரிந்து கொள்ளவும் முடியும்.

## சிறுவினா

**1. ‘பெப்பர்’ குறிப்பு வரைக.**

- ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்.
- இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.
- வீட்டுக்கு, வணிகத்துக்குப், படிப்புக்கு என மூன்று வகை ரோபோக்கள் உள்ளன.
- இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுகின்றன.
- பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

**2. செயற்கை நுண்ணறிவு குறித்த தொழில் நுட்ப வரையறையைக் கூறி விளக்குக.**

**வரையறை :**

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம்.

**வடிவமைப்பு :**

ஒலிப்படங்கள், எழுத்துகள், காணொலிகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக் கொள்ளும் மென்பொருளை ஆராய்ச்சியாளர்கள் வடிவமைக்கின்றனர்.

**முடிவெடுக்கும் திறன் :**

இந்த மென்பொருள் அறிவைக் கொண்டு தனக்கு வரும் புதிய புதிய சூழ்நிலைகளில் மனிதரைப் போல தானே முடிவெடுக்கும் திறனுடையது.



www.tnpscjob.com

**சிறப்பு :**

செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை. செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் கேட்கவும் புரிந்து கொள்ளவும் முடியும். மனிதனால் முடியும் செயல்களையும் அவன் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்யக்கூடியது செயற்கை நுண்ணறிவு.

**3. மெய்நிகர் உதவியாளர் பற்றி விவரி.**

**உதவு மென்பொருள் :**

திறன் பேசியில் இயங்கும் உதவு மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப் போல நம்முடன் உரையாடி சில உதவிகளைச் செய்கிறது.

**செயல்பாடுகள் :**

- இம்மென்பொருள் நாம் சொல்லுகிறவர்களுக்குத் தொலைபேசி அழைப்பு விடுக்கும்.
- நாம் திறக்கக் கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும்.
- நாம் கேட்பதை உலாவியில் தேடும்.
- நாம் விரும்பும் அழகான கவிதையை இணையத்தில் தேடித் தரும்.
- எந்தக் கடையில் எது விற்கும் என்றும் சொல்லும்.
- படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும்.
- நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றிக் கருத்துரைக்கும்.

**எதிர்காலத்தில் :**

எதிர்காலத்தில் நம் நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரை விடவும் இது போன்ற மெய்நிகர் உதவியாளர் நம்மை நன்கு அறிந்திருக்கும்.

**4. ஒளிப்படக்கருவியில் செயற்கை நுண்ணறிவு குறித்து சுருக்கி வரைக.**

- சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக்கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கிறது.
- கடவுச் சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது.
- உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது இன்றைய தொழில்நுட்பம்.
- படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.
- திறன்பேசியில் உள்ள ஒளிப்படக் கருவியில் எடுக்கும் படங்களை மெருகூட்ட இத்தொழில்நுட்பம் உதவுகிறது.

**பயன்கள் :**

காணொலிகளைத் தொகுக்கும் மென்பொருள்களில் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் பயன்படுகிறது. நேரம் வீணாவது தவிர்க்கப்படுகிறது.

**5. செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகளை விளக்குக.**

- நம்மை அறியாமலேயே நம் வாழ்க்கையையும், வணிகத்தையும் வளப்படுத்துகிறது.
- இத்தொழில் நுட்பத்தைக் கண்டு அச்சப்படுபவர்களின் அலறல்களை நாம் எதிர்கொள்வதே முதல் அறை கூவல்.
- ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்புகளும் அறிமுகமாகும் போது புதிய வடிவில் மாற்றம் பெறுகின்றன.
- மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காப்பாற்றி, உடல் நலத்தைப் பேணுகிறது.
- கொடிய நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்தல், மருத்துவரைப் போல பரிந்துரை செய்தல் போன்ற மேற்கண்ட செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.



www.tnpscjob.com

**6. நீவிர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக.**

- கண்காணிப்புக் கருவியில் பொதிந்திருக்கும் செயற்கை நுண்ணறிவு பலவிதங்களில் உதவியாக இருக்கின்றது.
- வழிகாட்டி வரைபடமாகத் திறன்பேசியிலிருந்து செயற்கை நுண்ணறிவு பயணம் செய்பவர்களுக்கு வழிகாட்டுகிறது.
- செயற்கை நுண்ணறிவைக் கொண்ட இயந்திரம் மனிதர்களுடன் சதுரங்கம் முதலான விளையாட்டுகளை விளையாடுகிறது.
- கண் அறுவை மருத்துவம் செய்கிறது.
- சமைக்கிறது.
- சில புள்ளிகளை வைத்துப் படம் வரைகிறது.

**7. முக்காலக் கல்வியறிவு குறித்து எழுதுக.**

**முந்தைய கல்வியறிவு :**

ஒரு காலத்தில் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எழுதப் படிக்கத் தெரிந்த கல்வியறிவே போதுமானதாக இருந்தது. ஆனால் இன்று, கல்வியறிவுடன் மின்னணுக் கல்வியறிவையும் மின்னணுச் சந்தைப்படுத்துதலையும் அறிந்திருத்தல் வேண்டும். இது வாழ்க்கையை எளிதாக்கவும் வணிகத்தில் வெற்றியடையவும் உதவுகிறது.

**எதிர்காலக் கல்வியறிவு :**

எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவும் நான்காவது தொழிற் புரட்சியின் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவுமே நம்மை வளப்படுத்தும்.

**8. சீன நாட்டில் அமைந்துள்ள தமிழ்க் கல்வெட்டு குறித்து எழுதுக.**

**சூவன்செள துறைமுக நகர் :**

சீன நாட்டில் காண்டன் நகருக்கு வடக்கே 500 கல் தொலைவில் உள்ளது. சூவன்செள துறைமுக நகர்.

**தமிழ் வணிகர் :**

சூவன்செள துறைமுக நகருக்குத் தமிழ் வணிகர் அடிக்கடி வந்து சென்றனர்.

**சிவன் கோவில் :**

- தமிழர்களின் வரவு காரணமாக சீனாவில் சிவன் கோவில் கட்டும்படியாக அந்நாட்டு மன்னர் குப்லாய்கான் ஆணையிட்டார்.
- இம்மன்னரது ஆணைப்படி இக்கோவில் கட்டப்பட்டது எனத் தமிழ்க் கல்வெட்டு ஒன்று இக்கோவிலில் உள்ளது.
- இக்கோயிலில் சோழர்காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## நெடுவினா

**1. செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினி, மென்பொருள், இயந்திர மனிதன் குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.**

| குறிப்புச்சட்டம் |
|---|
| முன்னுரை |
| வேர்டுஸ்மித் |
| இலா |
| வாட்சன் |
| பெப்பர் |
| முடிவுரை |

**முன்னுரை:**

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு ஆகும். இது பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை.

**வேர்டுஸ்மித்:**

- இதழியலில் மொழிநடையை உருவாக்கும் மென்பொருளின் பெயர் வேர்டுஸ்மித்.
- இதற்கு எழுத்தாளி என்று பெயர்.
- இதில் தகவல்களைக் கொடுத்தால் மட்டும் போதும்; சில நொடிகளிலேயே அழகான கட்டுரையை உருவாக்குகின்றன.

**இலா:**

- பாரத ஸ்டேட் வங்கி 'இலா' என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியுள்ளது.
- ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடும்.
- அவர்களுக்கான சேவையை இணையம் மூலம் அளிக்கிறது.

**வாட்சன்:**

- 2016ல் ஐ.பி.எம். நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினி வாட்சன்.
- சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

**பெப்பர்:**

- ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்.
- இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.
- வீட்டுக்கு, வணிகத்துக்குப், படிப்புக்கு என மூன்று வகை ரோபோக்கள் உள்ளன.
- இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுகின்றன.
- பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

**முடிவுரை:**

இன்று அங்கும் இங்குமாய் இருக்கும் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு, நாளை உலகம் முழுவதும் அனைத்துத் துறைகளிலும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.



www.tnpscjob.com

## கற்பவை கற்றபின்

பக்கம்: 81

**1. இன்றைய செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடுகளைச் செய்தித்தாளிலோ இணையத்திலோ கண்டு அட்டவணையாகத் தருக.**

| துறை | பயன்பாடுகள் |
|---|---|
| **மருத்துவத் துறை** | நோய்களைக் கண்டுபிடிக்கின்றன. கண் அறுவை மருத்துவத்தில் பயன்படுகிறது. சீன மருத்துவமனையில் உள்ள இயந்திர மனிதர்கள் நோயாளிகளின் முகத்தையும் குரலையும் அடையாளம் கண்டு பதில் சொல்கின்றன. |
| **இதழியல் துறை** | வேர்டுஸ்மித் என்னும் செயற்கை நுண்ணறிவு மென்பொருள் நாம் கொடுக்கும் தகவல்களைக் கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்கிவிடும். |
| **போக்குவரத்துத் துறை** | அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம்; இதுவே சுருக்கமான வழி என்று நமது திறன்பேசியில் வழிகாட்ட படம் உதவி செய்கிறது. |
| **வணிகத்துறை** | புதிய வணிக வாய்ப்புகளைச் செயற்கை நுண்ணறிவு நல்குகிறது. பெரு நிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும், சந்தைப்படுத்தவும் செயற்கை நுண்ணறிவு பயன்படுகின்றது. |
| **பிறதுறைகள்** | விடுதிகள், வங்கிகள், அலுவலகங்களில் மனிதர் அளிக்கும் சேவைகளை ரோபோக்கள் அளிக்கும். கல்வித் துறையில் இத்தொழில்நுட்பத்தைப் பல விதங்களில் பயன்படுத்தும் சாத்தியக் கூறுகள் உள்ளன. |

**2. கொடுக்கப்படுகின்ற எல்லாவற்றையும் உள்ளீடு செய்து, தேவைப்படும் வேளையில் வெளிப்படுத்துவதில், இன்று மூளைக்கு இணையாகத் தொழில்நுட்பமும் முன்னேறியுள்ளது.**

**இக்கருத்தையும், படத்தையும் ஒப்புநோக்கிக் கலந்துரையாடுக.**



**யாழினி** : கொடுக்கப்படுகின்ற எல்லாவற்றையும் உள்ளீடு செய்து, தேவைப்படும் வேளையில் வெளியிடுவதில் இன்று மூளைக்குஇணையாகத்தொழில்நுட்பமும்முன்னேறியுள்ளது என்பதைப் பற்றி உன் கருத்து என்ன?

**பைந்தமிழ்** : இன்றைய தேவைகளை விரைவில் பூர்த்தி செய்ய பெரும்பாலும் செயற்கை நுண்ணறிவே பயன்படுகிறது. இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவே.

**யாழினி** : இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் காரணம் என்ன?

**பைந்தமிழ்** : எந்த ஒரு தொழில் நுட்பமும் ஒரே நாளில் வந்து விடுவதில்லை. 1980களில் ஒவ்வொருவருக்குமான தனி நபர் கணினிகளின் வளர்ச்சியும் இணையப் பயன்பாட்டின் பிறப்புமே இம்மாற்றத்திற்குக் காரணம்.

**யாழினி** : மேலே கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பற்றி உன்னுடைய கருத்து யாது?

**பைந்தமிழ்** : ‘கல்விசார் புரட்சி’ என்பதே என் கருத்து. நாம் ஒரு நூலைத் தேடி எடுத்து அதில் நாம் தேடும் சொற்களைக் கண்டு பிடிப்பதற்கு கால விரயம் ஏற்படும். ஆனால் திறன்பேசியோ கணினியோ நாம் சொல்லச் சொல்லத் தன் அகண்ட தரவுகளில் உள்ள கோடிக்கணக்கான சொற்களுடன் ஒப்பிட்டுச் சரியான சொல்லைக் கால் நொடிக்கும் குறைவான நேரத்தில் தேர்ந்தெடுத்துத் திரையில் காண்பிக்கிறது. கல்விசார் தகவல்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ள இத்தொழில் நுட்பம் மிகவும் பயனுடையதாக அமையும். நன்றி!



www.tnpscjob.com

இயல் 4 தொழில்நுட்பம்

கவிதைப் பேழை

# பெருமாள் திருமொழி

- குலசேகராழ்வார்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **‘உனதருளே பார்ப்பன் அடியேனே’ - யாரிடம் யார் கூறியது?**

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன்

ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி

ஈ) நோயாளியிடம் மருத்துவர் **[விடை: ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்]**

### குறுவினா

1. **மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.**

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைத் துன்பம் தரும்படி கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அத்துன்பம் தனக்கு நன்மையே என்று உணர்ந்து நோயாளி மருத்துவர் மீது அன்பு காட்டுவார்.

### சிறுவினா

1. **“மாளாத காதல் நோயாளன் போல்” என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.**

**உடலில் ஏற்பட்ட புண் :**

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைத் துன்பம் தரும்படி கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அத்துன்பம் தனக்கு நன்மையே என்று உணர்ந்து நோயாளி மருத்துவர் மீது அன்பு காட்டுவார்.

**நீங்காத துன்பம் :**

வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! மருத்துவரைப் போன்று நீ எனக்குத் துன்பத்தைத் தந்தாலும், உன் அடியவனாகிய நான் (நோயாளியைப் போல) உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கிறேன்.

## கூடுதல் வினாக்கள்

### இலக்கணக் குறிப்பு.

| | | |
|---|---|---|
| **அறுத்து** | - | வினையெச்சம் |
| **மிளாத்துயர்** | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரச்சம் |
| **ஆளா உனதருளே** | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரச்சம் |

www.tnpscjob.com

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| | | |
|---|---|---|
| **அறுத்து** | - | **அறு + த் + த் + உ** |
| அறு | - | பகுதி |
| த் | - | சந்தி |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி |

## பலவுள் தெரிக

1. **பெருமாள் திருமொழியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?**
அ) 105 ஆ) 155
இ) 205 ஈ) 255 **[விடை: அ) 105]**

2. **வித்துவக்கோடு என்னும் ஊர், ________ மாநிலத்தில் ________ மாவட்டத்தில் உள்ளது.**
அ) கேரள, பாலக்காடு ஆ) கர்நாடக, மாண்டியா
இ) ஆந்திரா, நெல்லூர் ஈ) கேரள, திருவனந்தபுரம் **[விடை: அ) கேரள, பாலக்காடு]**

3. **குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டில் உள்ள இறைவனை உய்ய வந்த பெருமாளை ________ உருவகித்துப் பாடுகிறார்.**
அ) அன்னையாக ஆ) காதலியாக
இ) தோழனாக ஈ) தந்தையாக **[விடை: அ) அன்னையாக]**

4. **வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால் - என்னும் அடிகளில் இடம் பெற்றுள்ள நயம்.**
அ) மோனை ஆ) எதுகை
இ) உருவகம் ஈ) அந்தாதி **[விடை: ஆ) எதுகை]**

5. **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ________ திருமொழியாக உள்ளது பெருமாள் திருமொழி.**
அ) மூன்றாம் ஆ) நான்காம்
இ) ஐந்தாம் ஈ) ஆறாம் **[விடை: இ) ஐந்தாம்]**

6. **பெருமாள் திருமொழியைப் பாடியவர் ________**
அ) திருமங்கையாழ்வார் ஆ) குலசேகராழ்வார்
இ) நம்மாழ்வார் ஈ) பொய்கையாழ்வார் **[விடை: ஆ) குலசேகராழ்வார்]**

7. **குலசேகர ஆழ்வாரின் காலம் ________ நூற்றாண்டு.**
அ) ஆறாம் ஆ) ஏழாம்
இ) எட்டாம் ஈ) பத்தாம் **[விடை: இ) எட்டாம்]**

8. **'வாளால் அறுத்து' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழியின் பாடப்பகுதியாக உள்ள முதலாயிரத்தின் பாசுரம்?**
அ) 681 ஆ) 691
இ) 541 ஈ) 641 **[விடை: ஆ) 691]**

9. **'மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்' என்னும் அடிகளில் 'மாயம்' என்பதன் பொருள்**
அ) பொய்மை ஆ) நிலையாமை
இ) விளையாட்டு ஈ) அற்புதம் **[விடை: இ) விளையாட்டு]**

இயல் 4

www.tnpscjob.com

10. **காதல் நோயாளன் போன்றவர் ________**

அ) குலசேகராழ்வார் ஆ) வித்துவக்கோட்டு இறைவன்
இ) மக்கள் ஈ) மருத்துவர் **[விடை: அ) குலசேகராழ்வார்]**

11. **மருத்துவன் போன்றவர் ________**

அ) குலசேகராழ்வார் ஆ) வித்துவக்கோட்டு இறைவன்
இ) மக்கள் ஈ) மருத்துவர் **[விடை: ஆ) வித்துவக்கோட்டு இறைவன்]**

12. **"நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேன்" என்றவர் ________**

அ) குலசேகராழ்வார் ஆ) வித்துவக்கோட்டு இறைவன்
இ) மக்கள் ஈ) மருத்துவர் **[விடை: அ) குலசேகராழ்வார்]**

13. **மாயத்தால் மீளாத் துயர் தருபவர் ________**

அ) குலசேகராழ்வார் ஆ) வித்துவக்கோட்டு இறைவன்
இ) மக்கள் ஈ) மருத்துவர் **[விடை: ஆ) வித்துவக்கோட்டு இறைவன்]**

14. **பொருத்தமில்லாத ஒன்றினைத் தேர்வு செய்க.**

அ) நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் ஆ) முதலாயிரம்
இ) ஐந்தாம் திருமொழி ஈ) திருப்பாவை **[விடை: ஈ) திருப்பாவை]**

15. **வாளால் அறுத்துச் சுடுபவர் ________**

அ) குலசேகராழ்வார் ஆ) வித்துவக்கோட்டு இறைவன்
இ) மக்கள் ஈ) மருத்துவர் **[விடை: ஈ) மருத்துவர்]**

16. **சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க.**

அ) சங்க இலக்கியத்தில் அறிவியல் கருத்துகள் நிறைந்துள்ளன.
ஆ) அறிவியல் கருத்துகள் சங்க இலக்கியத்தில் நிறைந்துள்ளன.
இ) இலக்கியத்தில் அறிவியல் சங்க கருத்துகள் நிறைந்துள்ளன.
ஈ) சங்க அறிவியல் இலக்கியத்தில் கருத்துகள் நிறைந்துள்ளன.

**[விடை: அ) சங்க இலக்கியத்தில் அறிவியல் கருத்துகள் நிறைந்துள்ளன.]**

17. **"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்"
- இவ்வடிகளில் அமைந்த அடிஎதுகைச் சொற்கள்**

அ) வாளால் - மாளாத ஆ) நோயாளன் - மாயத்தால்
இ) மருத்துவன் - நோயாளன் ஈ) வாளால் - நோயால் **[விடை: அ) வாளால் - மாளாத]**

18. **"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்" இவ்வடிகளில் அமைந்த முரண் சொற்கள்**

அ) வாளால் - மாளாத ஆ) நோயாளன் - மாயத்தால்
இ) மருத்துவன் - நோயாளன் ஈ) வாளால் - நோயால் **[விடை : இ) மருத்துவன் - நோயாளன்]**

## குறுவினா

1. **பெருமாள் திருமொழி நூல் குறிப்பு வரைக.**

- நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழியாக உள்ளது பெருமாள் திருமொழி ஆகும்.
- இதில் 105 பாடல்கள் உள்ளன.
- இயற்றியவர் : குலசேகராழ்வார்



www.tnpscjob.com

**2. குலசேகர ஆழ்வார் குறித்து குறிப்பு வரைக.**

பெயர் - குலசேகர ஆழ்வார்
ஊர் - திருவஞ்சிக்களம் (கேரளம்)
நூல்கள் - பெருமாள் திருமொழி, முகுந்தமாலை.
புலமை - வடமொழி, தென்மொழி
காலம் - எட்டாம் நூற்றாண்டு

**3. "நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே" என்று யார் யாரிடம் கூறினார்?**

குலசேகர ஆழ்வார் திருவித்துவக் கோட்டம்மாவிடம் கூறினார்.

**4. "வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்" - மாயம் செய்தவர் யார்?**

மாயம் செய்தவர் : திருவித்துவக் கோட்டம்மா

**5. "வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்"
- இவ்வடிகளில் சுட்டப்படும் 'மருத்துவன்' மற்றும் 'நோயாளன்' போன்றவர் யாவர்?**

- மருத்துவன் போன்றவர் : திருவித்துவக் கோட்டம்மா
- நோயாளன் போன்றவர் : குலசேகர ஆழ்வார்

## சிறுவினா

**1. குலசேகரர் திருவித்துவக் கோட்டம்மா இறைவனிடம் வேண்டுவது யாது?**

**மருத்துவரை நேசித்தல் :**

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என உணர்ந்து நோயாளி மருத்துவரை நேசிப்பார்.

**இறைவன் அருளை எதிர்பார்த்தல் :**

இறைவா! நீ உன் விளையாட்டால் எனக்கு நீங்காத துன்பத்தைத் தந்தாலும் நோயாளியைப் போல உன் அருளை எதிர்பார்த்து வாழ்கிறேன்.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 82*

**1. தமிழர் மருத்துவமுறைக்கும், நவீன மருத்துவமுறைக்கும் உள்ள தொடர்பு குறித்து ஒப்படைவு உருவாக்குக.**

**தமிழர் மருத்துவம்:**

- தமிழர் மருத்துவமுறை என்பது சித்த மருத்துவம் ஆகும்.
- தாவரம், விலங்கு, உலோகம் அதாவது பஞ்சபூதங்கள் எல்லாம் மனித நலனுக்காக பயன்படுவன என்பது சித்த மருத்துவத்தின் கோட்பாடு.
- தமிழர்கள் நோயைச் சரிபடுத்த இயற்கை தரும் இலை, காய், கனிகளிலிருந்தே மருந்தைக் கண்டனர்.
- வாதம், பித்தம், சீதம் இவை மூன்றும் சமநிலையில் இருந்தால் நோய் நம்மை நாடாது.
- தமிழர் மருத்துவமுறையில் பக்க விளைவுகள் ஏதுமில்லை. குணமாவதற்குச் சில நாட்கள் ஆனாலும் மீண்டும் அந்நோய் நம்மைத் தாக்காது.

இயல் 4

www.tnpscjob.com

**நவீன மருத்துவம்:**

- அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப, மருத்துவத்துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகிறது. அறிவியல் முறையில் சுகமளித்தவர்களில் சிறந்தவர் ஹிப்போகிரேடஸ்.
- நவீன மருத்துவ முறையினால் பக்க விளைவுகள் ஏற்படுவதற்குச் சாத்தியக்கூறுகள் உண்டு.
- நோய்கிருமிகள் உடனடியாக அழிக்கப்படுகின்றன. நோயைக் குணப்படுத்த முடியாது. ஆனால் இவ்வகை மருத்துவத்துறையில் கவனக்குறைவு ஏற்பட்டால் உயிர் இறுதியாகிவிடும்.
- உதாரணமாக, குருதி ஏற்றும்போது தொடர்புடையவரின் குருதி ஒரே இனமாக இருக்க வேண்டும். இவையெல்லாம் பரிசோதனை செய்து நோயாளியைக் குணப்படுத்த வேண்டும்.

இயல் 4 தொழில்நுட்பம்

கவிதைப் பேழை

# பரிபாடல்

– கீரந்தையார்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?**

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

**[விடை: ஈ) வானத்தையும் பேரொலியையும்]**

### குறுவினா

1. **உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.**

நிலம், நீர், காற்று, வானம், நெருப்பு.

### நெடுவினா

1. **நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.**

**பேரன்பிற்குரிய அவையோர் அனைவருக்கும் வணக்கம்! இன்று இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுடன் அறிவியலை நான்காம் தமிழாகக் கூறுகின்றனர். ஆதிகாலந்தொட்டு இயங்கி வரும் தமிழ் மொழியில் அறிவியல் என்பது தமிழர் வாழ்வியலோடு கலந்து கரைந்து வந்துள்ளதை இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அண்டத்தை அளந்தும், புவியின் தோற்றத்தை ஊகித்தும் கூறும் அறிவியல் செய்திகள் இலக்கியங்களில் உள்ளன.**

**சங்க இலக்கியமான பரிபாடலில்......** பூமியின் தோற்றம் குறித்து சொல்லப்பட்டுள்ளது.

- எதுவுமே இல்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு பேரொலியுடன் தோன்றியது.



www.tnpscjob.com

- உருவமில்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதங்கள் உருவாகின.
- அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல காலங்கள் கடந்தது.
- பின்னர் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.
- மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தில் இப்பெரிய புவி மூழ்கி உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.
- இச்சூழல் மாற்றத்தினால் உயிர்கள் தோன்றி நிலை பெற்று வாழ்கின்றன.
- புவி உருவாகிய நிகழ்வை அறிவியல் அறிஞர்கள் கண்டறியும் முன்பே நம் தமிழர் கண்டறிந்தனர் என்பது தமிழருக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியும் பெருமைக்குரிய செயலுமாகும்.

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **ஊழ்ஊழ்** | - | அடுக்குத் தொடர் |
| **வளர் வானம்** | - | வினைத்தொகை |
| **செந்தீ** | - | பண்புத்தொகை |
| **வாரா (ஒன்றன்)** | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| **தோன்றி, மூழ்கி** | - | வினையெச்சங்கள் |
| **கிளர்ந்த** | - | பெயரெச்சம் |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

**கிளர்ந்த = கிளர் + த்(ந்) + த் + அ**

| | | |
|---|---|---|
| கிளர் | - | பகுதி |
| த் | - | சந்தி, 'ந்' ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி |

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பொருத்தமான விடை வரிசையைத் தேர்ந்தெடு.**

| | | |
|---|---|---|
| 1. தண்பெயல் | - | வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த |
| 2. ஆர் தருபு | - | செறிந்து திரண்டு |
| 3. பீடு | - | குளிர்ந்த மழை |
| 4. ஈண்டி | - | சிறப்பு |

அ) 1, 3, 2, 4 ஆ) 3, 2, 4, 1
இ) 4, 2, 1, 3 ஈ) 3, 1, 4, 2 **[விடை: ஈ) 3, 1, 4, 2]**

**2. இதுவரைக்கும் நமக்குக் கிடைத்துள்ள பரிபாடல் நூலில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?**

அ) 24 ஆ) 34
இ) 44 ஈ) 54 **[விடை: அ) 24]**

**3. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று ___________**

அ) பரிபாடல் ஆ) முல்லைப் பாட்டு
இ) நாலடியார் ஈ) மூதுரை **[விடை: அ) பரிபாடல்]**


www.tnpscjob.com

4. **'விசும்பில் ஊழி' எனத் தொடங்கும் பரிபாடலை எழுதியவர்.**
அ) நக்கீரர் ஆ) மருதனார்
இ) கீரந்தையார் ஈ) ஓதலாந்தையார் **[விடை: இ) கீரந்தையார்]**

5. **பரிபாடல் " ___________ " என்னும் புகழுடையது.**
அ) நற்பரிபாடல் ஆ) புகழ் பரிபாடல்
இ) ஓங்கு பரிபாடல் ஈ) உயர் பரிபாடல் **[விடை: இ) ஓங்கு பரிபாடல்]**

6. **சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல் ___________.**
அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு
இ) பட்டினப் பாலை ஈ) பரிபாடல் **[விடை: ஈ) பரிபாடல்]**

7. **பரிபாடலில் எழுபது பாடல்கள் இருப்பதாகக் கூறியுள்ளவர்கள் ___________.**
அ) புலவர்கள் ஆ) வரலாற்று ஆய்வாளர்கள்
இ) இலக்கிய ஆய்வாளர்கள் ஈ) உரையாசிரியர்கள் **[விடை: ஈ) உரையாசிரியர்கள்]**

8. **எட்வின் ஹப்பிள் என்பவர் ___________.**
அ) அமெரிக்க மருத்துவர் ஆ) பிரெஞ்சு ஆளுநர்
இ) அமெரிக்க வானியல் அறிஞர் ஈ) போர்ச்சுக்கீசிய மாலுமி
**[விடை: இ) அமெரிக்க வானியல் அறிஞர்]**

9. **எட்வின் ஹப்பிள் ___________ இல் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார்.**
அ) 1921 ஆ) 1821
இ) 1924 ஈ) 1934 **[விடை: இ) 1924]**

10. **"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும்.
சிறிய ஆகப் பெரியோன் தெரியின்" - என்று குறிப்பிடும் நூல்?**
அ) பரிபாடல் ஆ) கலித்தொகை
இ) பெருமாள் திருமொழி ஈ) திருவாசகம் **[விடை: ஈ) திருவாசகம்]**

11. **பொருத்திக் காட்டுக.**
i) ஊழ் ஊழ் - 1. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
ii) வளர் வானம் - 2. பண்புத்தொகை
iii) செந்தீ - 3. வினைத்தொகை
iv) வாரா - 4. அடுக்குத் தொடர்
அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 2, 1
இ) 2, 4, 1, 3 ஈ) 4, 2, 1, 3 **[விடை: அ) 4, 3, 2, 1]**

12. **பொருத்திக் காட்டுக.**
i) விசும்பு - 1. சிறப்பு
ii) ஊழி - 2. யுகம்
iii) ஊழ் - 3. வானம்
iv) பீடு - 4. முறை
அ) 3, 2, 4, 1 ஆ) 4, 3, 2, 1
இ) 1, 2, 3, 4 ஈ) 3, 4, 1, 2 **[விடை: அ) 3, 2, 4, 1]**



www.tnpscjob.com

13. 'கிளர்ந்த' என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை ________.
அ) கிளர்ந்து + அ ஆ) கிளர் + த் + த் + அ
இ) கிளர் + ந் + த் + அ ஈ) கிளர் + த்(ந்) + த் + அ [விடை: ஈ) கிளர்+த்(ந்)+த்+அ]

14. முதல் பூதம் எனப்படுவது ________.
அ) வானம் ஆ) நிலம்
இ) காற்று ஈ) நீர் [விடை: அ) வானம்]

15. "கரு வளர் வானத்து இசையில் தோன்றி,
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்"
- இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள இலக்கிய நயம்?
அ) எதுகை ஆ) மோனை
இ) இயைபு ஈ) அந்தாதி [விடை: அ) எதுகை]

16. முதல் பூதம் ________.
அ) வானம் ஆ) நிலம்
இ) நீர் ஈ) காற்று [விடை: அ) வானம்]

17. பரிபாடலில் புவிக்குக் கூறப்பட்ட உவமை ________.
அ) நெருப்புப் பந்து ஆ) உருவம் இல்லாத காற்று
இ) வெள்ளம் ஈ) ஊழி [விடை: அ) நெருப்புப் பந்து]

18. "விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல" - இவ்வடியில் அமைந்துள்ள பெரும்பான்மை நயம் ________.
அ) எதுகை ஆ) மோனை
இ) முரண் ஈ) இயைபு [விடை: ஆ) மோனை]

19. நெருப்புப்பந்தாய் வந்து குளிர்ந்தது ________.
அ) பூமி ஆ) காற்று
இ) தீ ஈ) நீர் [விடை: அ) பூமி]

20. "விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல" - இவ்வடியில் 'விசும்பு' என்னும் சொல்லின் பொருள் ________.
அ) வானம் ஆ) காற்று
இ) யுகம் ஈ) முறை [விடை: அ) வானம்]

21. "விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல" - இவ்வடியில் 'ஊழி' என்னும் சொல்லின் பொருள் ________.
அ) வானம் ஆ) காற்று
இ) யுகம் ஈ) முறை [விடை: இ) யுகம்]

22. "விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல" - இவ்வடியில் 'ஊழ்' என்னும் சொல்லின் பொருள் ________.
அ) வானம் ஆ) காற்று
இ) யுகம் ஈ) முறை [விடை: ஈ) முறை]

23. 1300ஆண்டுகளுக்கு முன் திருஅண்டப்பகுதி பற்றிக் கூறியவர் ________.
அ) மாணிக்கவாசகர் ஆ) கீரந்தையார்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) கபிலர் [விடை: அ) மாணிக்கவாசகர்]

24. "தண்பெயல் தலைஇய ஊழியும்" இதில் 'குளிர்ந்த மழை' என்னும் பொருள் தரும் சொல் ________.
அ) தண்பெயல் ஆ) தலை
இ) இய ஈ) ஊழி [விடை: அ) தண்பெயல்]

## குறுவினா

**1. சங்க இலக்கிய நூல்கள் மூலம் நீவீர் அறிந்து கொள்ளும் செய்தி யாது?**

- ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை முறை,
- அறிவாற்றல்,
- சமூக உறவு,
- இயற்கையைப் புரிந்து கொள்ளும் திறன்.

**2. பரிபாடல் நூல் குறிப்பு வரைக.**

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று பரிபாடல் - அகம் புறம் சார்ந்த நூல்.
- இந்நூல் "ஓங்கு பரிபாடல்" என்னும் புகழுடையது.
- சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல்.
- உரையாசிரியர்கள் எழுபது பாடல்கள் இருப்பதாகக் கூறியுள்ளனர்.
- 24 பாடல்களே கிடைத்துள்ளன.

**3. அண்டப்பகுதி குறித்து மாணிக்கவாசகர் குறிப்பிடும் செய்தி யாது?**

- அண்டப்பகுதியின் உருண்டை வடிவம் ஒப்பற்ற வளமான காட்சியும் ஒன்றுடன் ஒன்று ஈர்ப்புடன் நூறுகோடிக்கும் மேல் விரிந்து நின்றன.
- கதிரவனின் ஒளிக்கற்றையில் தெரியும் தூசுத்துகள் போல அவை நுண்மையாக இருக்கின்றன.

**4. பால்வீதி குறித்து எட்வின் ஹப்பிள் நிரூபித்துக் கூறிய செய்தியை எழுது.**

- அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.
- வெளியே எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.
- வெளியே நின்று அதைப் பார்த்தோமெனில் சிறுதூசி போலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும்.

**5. பூமி வெள்ளத்தில் மூழ்கக் காரணம் என்ன?**

தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.

**6. "மீண்டும் பீடு உயர்பு ஈண்டி , அவற்றிற்கும் உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்" - தொடர் பொருள் விளக்குக.**

மீண்டும் மீண்டும் நிறைவெள்ளத்தில் மூழ்குதல் நடந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது, அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலை பெறும்படியான ஊழிக்காலம் வந்தது.

**7. "விசும்பில் ஊழி ஊழ்" என்பதில் விசும்பு, ஊழி, ஊழ் ஆகிய சொற்களின் பொருள் யாது?**

- விசும்பு - வானம்
- ஊழி - யுகம்
- ஊழ் - முறை

## சிறுவினா

**1. அண்டப் பெருவெளி குறித்து மாணிக்கவாசகர் மற்றும் எட்வின் ஹப்பிள் ஆகியோர் மூலம் அறியப்படும் செய்தி யாது?**

**மாணிக்கவாசகர் கூற்று :**

- அண்டப் பகுதியின் உருண்டை வடிவம், ஒப்பற்ற வளமான காட்சியும் ஒன்றுடன் ஒன்று ஈர்ப்புடன் நூறு கோடிக்கும் மேல் விரிந்து நின்றன.

இயல் 4

www.tnpscjob.com

- "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்'' என்னும் திருவாசகப் பாடலில் மேற்கண்ட செய்தியை 1300 ஆண்டுகளுக்கு முன் மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

**எட்வின் ஹப்பிள் கூற்று :**

- அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.
- வெளியே நின்று அதைப் பார்த்தோமெனில் சிறு தூசி போலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும்.
- மேற்கண்ட செய்தியை அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924 இல் நிரூபித்தார்.

**2. ''மீண்டும் பீடு உயர்பு ஈண்டி , அவற்றிற்கும் உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:**

இவ்வடிகள் பரிபாடலில் கீரந்தையார் பாடலில் இடம்பெறுகின்றது.

**பொருள்:**

உயிர்கள் தோன்றி நிலைபெறுதல்.

**விளக்கம்:**

மீண்டும் மீண்டும் நிறைவெள்ளத்தில் மூழ்குதல் நடந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது, அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான ஊழிக்காலம் வந்தது.

**3. பால்வீதிகள் கண்டுபிடிப்பில், ''எட்வின் ஹப்பிளுக்கு முன்னோடி மாணிக்கவாசகர்'' என்பதை நிரூபிக்க.**

**எட்வின் ஹப்பிள்:**

நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன. வெளியில் நின்று பார்த்தால் , சிறு தூசி போல கோடிக்கணக்கில் பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும்.இதனை 1924 இல் அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் நிரூபித்தார்.

**மாணிக்கவாசகர்:**

1300 ஆண்டுகளுக்கு முன் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் திருஅண்டப்பகுதியில்,

**''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**

**........................ ...............................**

**சிறிய ஆகப் பெரியோன் தெரியின்''**

- என்ற அடிகள் பால்வீதிகள் பற்றிய கருத்துகளைக் கூறுகின்றது. இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக் கற்றையில் தெரியும் தூசுத் துகள்போல பால்வீதிகள் நுண்மையாக இருக்கின்றன.

பால்வீதிகள் கண்டுபிடிப்பில், "எட்வின் ஹப்பிளுக்கு முன்னோடி மாணிக்கவாசகர்'' என்பதை அறியமுடிகின்றது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 84

**1. பரிபாடல் இசைப்பாடல் ஆகும். பாடப்பகுதியின் பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

(மாணவர் செயல்பாடு)

**2. பரிபாடல் காட்டும் பெருவெடிப்புக் காட்சியைப் படங்களாக வரைந்து பொருத்தமான செய்திகளுடன் வழங்குக.**

இந்த அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.



www.tnpscjob.com

இப்பால்வீதிகள் தூசுகள் போன்று தோன்றும் இப்பிரபஞ்சம் உருவாக பெருவெடிப்புக் கொள்கையே காரணம். இந்த பெருவெடிப்புக் கொள்கைக்கு முன் எதுவுமே இல்லா பெருவெளி மட்டுமே இருந்தது.

இன்றைய அறிவியல் கொள்கைகளின்படி இந்த பிரபஞ்சமானது கிட்டத்தட்ட பதினான்கு பில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த பெருவெடிப்பும் என்ற ஒரு சம்பவத்துடனே தோற்றம் பெற்றதாக நம்பப்படுகிறது. இவ்வாறு பெருவெடிப்பு சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு பிரபஞ்சத்தின் தோற்றத்தினை விளக்கும் முறையினைப் பெருவெடிப்புக் கொள்கை என்கிறோம். இதைப் பரிபாடல் எதுவுமே இல்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்கு காரணமான கரு பேரொலியுடன் தோன்றியது என்கிறது.



பெருவெடிப்பிற்குப் பின் உருவமில்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் முதலிய பூதங்கள் உருவாகின. அந்த அணுக்களின் ஆற்றலால் பருப்பொருள் சிதறின. இதனால் நெருப்புப் பந்து போல பூமி உருவாகியது. தொடர்ந்து பெய்த மழை வெள்ளத்தால் பூமி மூழ்கியது. பின்னர் இப்புவி உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்ததாலும், சூழல் மாற்றத்தாலும் உயிர்கள் தோன்றி நிலைபெற்றன எனப் பரிபாடல் குறிப்பிட்டுள்ளது. இப்பிரபஞ்சமானது விரிவடைந்து கொண்டே செல்கின்றது என்பதனை 1929ஆம் ஆண்டு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளரான எட்வின் ஹப்பிள் கண்டறிந்துள்ளார்.

இயல் 4 தொழில்நுட்பம்

விரிவானம்

# விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

**1. "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் 'விண்வெளிப் பயணம்' என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.**

| குறிப்புச்சட்டம் |
|---|
| அறிமுகவுரை |
| பேரண்டம் |
| விண்மீன்கள் |
| கதிர்வீச்சும் துகளும் |
| திரும்புதல் |
| நிறைவுரை |

**அறிமுகவுரை:**

இலக்கியங்களில் நிலவிய அறிவியல் கோட்பாடுகளையும் நம்பிக்கைகளையும் அறியும் பொருட்டு நானும், எம் வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்கள் சிலரோடு ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் மேற்கொண்டோம்.

**பேரண்டம்:**

பேரண்டப் பெருவெடிப்பு, கருந்துளைகள் பற்றியதான ஸ்டீபன் ஹாக்கிங்கின் ஆராய்ச்சிகள் முக்கியமானவை. இப்பேரண்டம் பெருவெடிப்பினால் உண்டானதே என்பதற்கான சான்றுகளைக் கணிதவியல் அடிப்படையில் எங்களுக்கு விளக்கினார். 'இப்புவியின் படைப்பில் கடவுள் போன்ற ஒருவர் பின்னணியில் இருந்தார்' என்பதை மறுத்தார். 'பிரபஞ்சத்தை இயக்க வைக்கும் ஆற்றலாகக் கடவுள் என்ற ஒருவரைக் கட்டமைக்க வேண்டியதில்லை' என்றார்.

**விண்மீன்கள்:**

விண்வெளியில் பால்வீதியில் எங்கள் விண்வெளி ஓடம் சுற்றிக் கொண்டிருந்தது. அப்போது ஹ ாக்கின், 'நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிருகின்றன. அவற்றுள் ஞாயிறும் ஒன்று. ஒரு விண்மீனின் ஆயுள் கால முடிவில் உள்நோக்கிய ஈர்ப்பு விசை கூடுகிறது. அதனால் விண்மீன் சுருங்கத் தொடங்குகிறது. விண்மீன் சுருங்கச் சுருங்க அதன் ஈர்ப்பாற்றல் உயர்ந்து கொண்டே சென்று அளவற்றதாகிறது என்று விளக்கினார்.

**கதிர்வீச்சும் துகளும்:**

"சில நேரங்களில் உண்மையானது புனைவை விடவும் வியப்பூட்டுவதாக அமைகிறது. அப்படி ஓர் உண்மைதான் கருந்துளைகள் பற்றியதும் என்பதை அறிந்து கொண்டோம். எப்படியெனில், கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வர முடியாது. கருந்துளையின் ஈர்ப்பு எல்லையிலிருந்து கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. கருத்துளை உண்மையிலேயே

கருப்பாக இல்லை என்பதை நேரில் கண்டோம். அப்போது ஹாக்கிங், கருந்துளையிலிருந்து ஒரு கட்டத்தில் கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசியத் தொடங்கி இறுதியில் வெடித்துவிடும் என்றார்.

முன்னர் அண்டவெளியில் காணப்படும் கருந்துளை அழிவு ஆற்றல் என்று கருதப்பட்டது. ஆனால் கருந்துளை என்பது படைப்பின் ஆற்றல் என்று எங்களிடம் ஹாக்கிங் விளக்கினார்.

**திரும்புதல்:**

விண்வெளி ஓடம் பூமிக்கு திரும்பிக் கொண்டிருந்த போது பல வடிவிலான விண்கற்கள் மற்றும் தொலைவில் தூசுகள் போன்ற பால்வீதிகளையும் கண்டு அதனைப் பற்றிய சில கருத்துகளைப் பேசிக் கொண்டே பூமியை வந்தடைந்தோம். எங்களை வரவேற்க பலரும் கூடி வந்திருந்தனர்.

**நிறைவுரை:**

விண்வெளிப் பயணம் மேற்கொண்ட எங்களை வரவேற்றுப் பாராட்டி, வாழ்த்துகளைத் தெரிவித்தனர். இந்நிகழ்வுகள் அனைத்தும் எம் வாழ்வில் மறக்க முடியாதவையாகவே இருக்கின்றன.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு __________.**

அ) 1978 ஆ) 1988
இ) 1972 ஈ) 1982 **[விடை: ஆ) 1988]**

2. **பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகத்திலுள்ள காட்சிக் கூடங்கள் __________.**

அ) 8 ஆ) 9
இ) 10 ஈ) 15 **[விடை: இ) 10]**

3. **தற்காலத்தின் __________ என்று புகழப்படுபவர் ஸ்டீபன் ஹாக்கிங்.**

அ) விடிவெள்ளி ஆ) நம்பிக்கை மனிதன்
இ) ஐன்ஸ்டைன் ஈ) அரிஸ்டாட்டில் **[விடை: இ) ஐன்ஸ்டைன்]**

4. **ஸ்டீபன் ஹாக்கிங் இங்கிலாந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஆண்டு __________ வயது __________.**

அ) 1963, 21 ஆ) 1965, 23
இ) 1961, 19 ஈ) 1959, 17 **[விடை: அ) 1963, 21]**

5. **ஸ்டீபன் ஹாக்கிங்கிற்கு ஏற்பட்ட நோய் __________.**

அ) காலரா ஆ) தொழு நோய்
இ) பக்கவாதம் ஈ) காய்ச்சல் **[விடை: இ) பக்கவாதம்]**

6. **ஸ்டீபன் ஹாக்கிங் மூச்சுக்குழாய்த் தடங்கலால் பேசும் திறனை இழந்த ஆண்டு __________.**

அ) 1963 ஆ) 1983
இ) 1985 ஈ) 1973 **[விடை: இ) 1985]**

7. **பக்கவாதம் என்னும் நரம்பு நோய்ப் பாதிப்புடன் ஸ்டீபன் ஹாக்கிங் மேலும் இயங்கிய ஆண்டுகள் __________.**

அ) 23 ஆ) 21
இ) 43 ஈ) 53 **[விடை: ஈ) 53]**



www.tnpscjob.com

8. இப்பேரண்டம் பெருவெடிப்பினால் உருவானதே என்பதற்கான சான்றுகளை ________ அடிப்படையில் ஸ்டீபன் ஹாக்கிங் விளக்கினார்.

அ) புவியியல் ஆ) கணிதவியல்
இ) புள்ளியியல் ஈ) வானியல் [விடை: ஆ) கணிதவியல்]

9. இப்புவியின் படைப்பில் கடவுள் என்ற ஒருவர் பின்னணியில் இருந்தார் என்பதை ஸ்டீபன் ஹாக்கிங் ________.

அ) ஏற்றுக் கொண்டார் ஆ) ஆய்வுக்கு உட்பட்டது என்றார்
இ) மறுத்தார் ஈ) உலகம் முழுவதும் பரப்பினார்
[விடை: இ) மறுத்தார்]

10. பிரபஞ்சத்தை இயக்க வைக்கும் ஆற்றலாகக் கடவுள் என்ற ஒருவரைக் கட்டமைக்க வேண்டியதில்லை என்று கூறியவர் ________

அ) ஸ்டீபன் ஹாக்கிங் ஆ) வேர்ட்ஸ்வொர்த்
இ) அரிஸ்டாட்டில் ஈ) கார்ல் மார்க்ஸ் [விடை: அ) ஸ்டீபன் ஹாக்கிங்]

11. கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் பயன்படுத்தியவர் ________

அ) ஸ்டீபன் ஹாக்கிங் ஆ) ஜான் வீலர்
இ) வேர்டுஸ்மித் ஈ) வாட்சன் [விடை: அ) ஸ்டீபன் ஹாக்கிங்]

12. ஸ்டீபன் ஹாக்கிங்கின் முன்னோடிகள் ________

i) ஐன்ஸ்டைன் ii) நியூட்டன் iii) கிரிகோர் மெண்டல்

அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி
இ) மூன்றும் சரி ஈ) மூன்றும் தவறு [விடை: அ) i, ii - சரி]

13. நியூட்டன், ஸ்டீபன் ஹாக்கிங் ஆகியோர் கணக்கியல் துறையின் லூகாசியன் பேராசிரியர் என்ற மதிப்பு மிகுந்த பதவியை வகுத்த பல்கலைக்கழகம் ________

அ) கொலம்பியா ஆ) ஆக்ஸ்போர்டு
இ) கேம்பிரிட்ஜ் ஈ) டிரான்ஸ்போர்டு [விடை: இ) கேம்பிரிட்ஜ்]

14. ஈர்ப்பலைகள் குறித்த முடிவுகளைக் கணிதச் சமன்பாடுகள் மூலம் கோட்பாடுகளாகச் சொன்னவர்

அ) ஐன்ஸ்டைன் ஆ) ஜான் வீலர்
இ) ஸ்டீபன் ஹாக்கிங் ஈ) சார்லஸ் டார்வின் [விடை: அ) ஐன்ஸ்டைன்]

15. ஐன்ஸ்டைன் காலத்தில் ________ என்னும் கோட்பாட்டை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அ) $E = mc^2$ ஆ) $F = cm^2$
இ) $E = cm^2$ ஈ) $F = mc^2$ [விடை: அ) $E = mc^2$]

16. ஐன்ஸ்டைன் ஈர்ப்பலைகள் இருப்பதாகக் கூறியதை உலகம் ________ ஆண்டுகளுக்குப் பின் கண்டு கொண்டது.

அ) 100 ஆ) 200
இ) 150 ஈ) 250 [விடை: அ) 100]

17. ஸ்டீபன் ஹாக்கிங் விளக்கிய கருந்துளைக் கோட்பாட்டை உலகம் எளிதில் புரிந்து கொள்ளக் காரணம்

அ) கணிதச் சமன்பாடுகள் மூலம் கோட்பாடுகளாகச் சொன்னதால்
ஆ) விண்மீன் இயக்கத்தோடு ஒப்பிட்டுக் கூறியதால்
இ) பருப்பொருள்களோடு ஒப்பிட்டுக் கூறியதால்
ஈ) பெருவெடிப்பைச் சான்று காட்டியதால்

[விடை: ஆ) விண்மீன் இயக்கத்தோடு ஒப்பிட்டுக் கூறியதால்]



www.tnpscjob.com

18. அமெரிக்காவின் உயரிய விருதான அதிபர் விருதினைப் பெற்றவர் ________

அ) ஸ்டீபன் ஹாக்கிங் ஆ) அன்னை தெரசா
இ) ஹெலன் ஹெல்லர் ஈ) கிரிகோல் மெண்டல் [விடை: அ) ஸ்டீபன் ஹாக்கிங்]

19. ஸ்டீபன் ஹாக்கிங் பெற்றுள்ள விருதுகளைக் கண்டறிக.

i) ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் விருது ii) உல்ஃப் விருது
iii) காப்ளி பதக்கம் iv) அடிப்படை இயற்பியல் பரிசு
அ) i, ii - சரி ஆ) i, ii, iii - சரி
இ) i, iv - சரி ஈ) நான்கும் சரி [விடை: ஈ) நான்கும் சரி]

20. கலீலியோவின் நினைவு நாளில் பிறந்து, ஐன்ஸ்டைனின் பிறந்த நாளில் இறந்தவர் ________

அ) நியூட்டன் ஆ) ஹெலன் கெல்லர்
இ) ஸ்டீபன் ஹாக்கிங் ஈ) கிரிகோர் மெண்டல் [விடை: இ) ஸ்டீபன் ஹாக்கிங்]

21. ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய நூல்களுள் 'காலத்தின் சுருக்கமான வரலாறு' என்ற நூல் ________ மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

அ) 30 ஆ) 40
இ) 50 ஈ) 70 [விடை: ஆ) 40]

22. ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய 'காலத்தின் சுருக்கமான வரலாறு' வெளிவந்த ஆண்டு ________

அ) 1972 ஆ) 1976
இ) 1982 ஈ) 1988 [விடை: ஈ) 1988]

23. பெருவெடிப்பு, கருந்துளை ஆகியவை பற்றிய அரிய உண்மைகளைப் பொதுமக்களிடையே பரப்பி, ஒரு கோடிப் படிகளுக்கு மேல் விற்பனையான நூல் ________

அ) காலத்தின் சுருக்கமான வரலாறு ஆ) ஞாலத்தின் சுருக்கமான வரலாறு
இ) ஹாக்கிங்கின் தத்துவங்கள் ஈ) பெருவெடிப்பும் கருந்துளையும்
[விடை: அ) காலத்தின் சுருக்கமான வரலாறு]

24. "கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திரு மாவியல் நகர்க் கருவூர் முன்துறை" என்று குறிப்பிடும் நூல்?

அ) அகநானூறு ஆ) புறநானூறு
இ) கலித்தொகை ஈ) பரிபாடல் [விடை: அ) அகநானூறு]

25. "திரு மாவியல் நகர்க் கருவூர் முன்துறை" என்பதில் குறிப்பிடப்படும் மாவட்டம்

அ) கரூர் ஆ) பெரம்பலூர்
இ) தஞ்சாவூர் ஈ) திருச்சி [விடை: அ) கரூர்]

26. ________ இல் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா நாயகர் என்ற சிறப்பை ஸ்டீபன் ஹாக்கிங் பெற்றார்.

அ) 2010 ஆ) 2005
இ) 2007 ஈ) 2012 [விடை: ஈ) 2012]

27. ஸ்டீபன் ஹாக்கிங் பங்கேற்ற தொலைக்காட்சித் தொடர்கள் ________.

i) அடுத்த தலை முறை ii) முந்தைய தலை முறை
iii) பெருவெடிப்புக் கோட்பாடு iv) சிறுவெடிப்புக் கோட்பாடு
அ) i, ii - சரி ஆ) i, iii - சரி
இ) iii, iv - சரி ஈ) நான்கும் சரி [விடை: ஆ) i, iii - சரி]



www.tnpscjob.com

28. ஸ்டீபன் ஹாக்கிங் சூடான காற்று நிரம்பிய பலூனில் வானில் பறந்து தனது ________ ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

அ) 40 ஆ) 50
இ) 60 ஈ) 70 [விடை: இ) 60]

29. ஸ்டீபன் ஹாக்கிங் ________ என்ற விமானத்தில் பூஜ்ஜிய ஈர்ப்பு விசைப் பயணத்தை மேற்கொண்டு எடையற்ற தன்மையை உணர்ந்தார்.

அ) போயிங் 725 ஆ) போயிங் 726
இ) போயிங் 727 ஈ) போயிங் 729 [விடை: இ) போயிங் 727]

30. அறிவுத் தேடலில் உடல், உள்ளத் தடைகளைத் தகர்த்த மாமேதை ________.

அ) ஸ்டீபன் ஹாக்கிங் ஆ) எடிசன்
இ) நியூட்டன் ஈ) மேரி கியூரி [விடை: அ) ஸ்டீபன் ஹாக்கிங்]

31. தலை விதிதான் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என நம்புபவர்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது. விதிதான் தீர்மானிக்கிறது என்றால் சாலையைக் கடக்கும் போது ஏன் இருபுறமும் பார்த்துக் கடக்கிறார்கள்? என்று கூறியவர் ________.

அ) அரிஸ்டாட்டில் ஆ) பெர்னாட்ஷா
இ) ஸ்டீபன் ஹாக்கிங் ஈ) டெமாதனிஸ் [விடை: இ) ஸ்டீபன் ஹாக்கிங்]

32. அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத்திறன் என்று கூறியவர் ________.

அ) ஐன்ஸ்டைன் ஆ) நியூட்டன்
இ) ஸ்டீபன் ஹாக்கிங் ஈ) எடிசன் [விடை: அ) ஐன்ஸ்டைன்]

33. வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன். அதன் மூலம் மனித இனம் தொடர வழி வகுப்பேன் என்று கூறியவர் ________.

அ) ஐன்ஸ்டைன் ஆ) நியூட்டன்
இ) ஸ்டீபன் ஹாக்கிங் ஈ) எடிசன் [விடை: இ) ஸ்டீபன் ஹாக்கிங்]

## கூடுதல் வினா

### நெடுவினா

1. "விண்ணைத் தாண்டிய நம்பிக்கை" கதையினைச் சுருக்கி எழுதுக.

| குறிப்புச்சட்டம் |
|---|
| முன்னுரை |
| தளராத நம்பிக்கை |
| ஹாக்கிங் கதிர்வீச்சு |
| சிறப்புகள் |
| நிறைவுரை |

**முன்னுரை:**

உண்மையைக் கண்டறியும் அறிவியல் கொள்கை போற்றுதலுக்குரியது ஆகும். தன்னால் எந்த இயக்கமும் செய்ய இயலாத நிலையிலும், அறிவியலின் உண்மைகளைச் சொன்ன ஒருவர் ஸ்டீபன் ஹாக்கிங். அவரின் பாராட்டுக்குரிய செயல்களைக் காண்போம்.



www.tnpscjob.com

**தளராத நம்பிக்கை:**

21ஆம் அகவையில் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார் ஹாக்கிங். மருத்துவ உலகமே மிரண்டு போகுமளவு மேலும் 53 ஆண்டுகள் இயங்கினார். மூச்சுக்குழாய் தடங்களால் பேச்சை இழந்தார். பேசும் திறனை இழந்தபோதும் கன்னத்தசை அசைவு, கண் சிமிட்டல் மூலம் தன் கருத்துகளைக் கணினியில் தட்டச்சு செய்து வெளிப்படுத்தினார்.

**ஹாக்கிங் கதிர்வீச்சு:**

பேரண்டப் பெருவெடிப்பினால் உருவானதே இந்தப் புனித பூமி ஆகும். ஸ்டீபன் ஹாக்கிங் அமெரிக்க அறிவியல் அறிஞர் ஜான் வீலரின் கருந்துளைக் கோட்பாட்டை ஆராய்ச்சி செய்தார். கருந்துளையில் இருந்து வெளிவரும் கதிர்வீச்சும் அணுத்துகள்களும் இறுதியில் வெடித்து மறையும். கருந்துளைக்குள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளிவர இயலாது. இந்த ஆராய்ச்சியின் முடிவே 'ஹாக்கிங் கதிர்வீச்சு' எனப்படுகிறது.

**சிறப்புகள்:**

அமெரிக்காவின் உயரிய விருதான அதிபர் விருது, ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் விருது, உல்ப் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றார். 2012 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா நாயகர் என்ற சிறப்பைப் பெற்றார்.

**முடிவுரை:**

"பூ ஒற்றைக் காலில் நிற்பதால் ஊனம் என்று கருதுவதில்லை" அதுபோல, தன் உடல் இயலாமையைப் பொருட்படுத்தாமல் சாதனைப்பூவாகி அறிவியல் உலகில் திகழ்ந்த ஹாக்கிங்கே நமக்குத் தன்னம்பிக்கைப் பாடம் எனலாம்.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 89*

1. **"அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன். ஏனெனில் அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்து விடுகிறது. கற்பனைத் திறனோ இந்த ஒட்டு மொத்தப் பேரண்டத்தையும் அளப்பது. இன்று நாம் அறிந்திருப்பதை மட்டுமன்று; இனி நாம் அறிந்து கொள்ளப் போவதையும் உள்ளடக்கியது" - *ஐன்ஸ்டைன்.***

**"வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன். அதன்மூலம் மனித இனம் தொடர வழி வகுப்பேன்" - *ஸ்டீபன் ஹாக்கிங்.***

**இவ்விருவரின் கூற்றுகளைப் பாடப்பகுதி உணர்த்தும் கருத்துகளோடு ஒப்பிட்டு உரையாடுக.**

**மணி:** அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன் என அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டைன் கூறியுள்ளாரே. அதைப் பற்றிய காரணம் என்னவாக இருக்கும்?

**முகில்:** அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பதோடு முடிந்து விடுகிறது. கற்பனைத் திறனோ இந்த ஒட்டு மொத்தப் பேரண்டத்தையும் அளந்து விடுகிறது. இன்று நாம் அறிந்திருப்பதை மட்டுமன்று; இனி நாம் அறிந்து கொள்ளப் போவதையும் உள்ளடக்கியது.

**மணி:** ஐன்ஸ்டைனது $E=Mc^2$ கோட்பாட்டை யாரும் ஏற்றுக் கொள்ளாததற்கான காரணம் இதுவாக இருக்குமோ?

**முகில்:** ஆம்! ஐன்ஸ்டைன் ஈர்ப்பலைகள் குறித்த முடிவுகளைக் கணிதச் சமன்பாடுகள் மூலம் கோட்பாடுகளாகச் சொன்னார். அவரது கோட்பாடுகளை அறிவுத்திறனுடன் கற்பனையையும் சேர்த்து யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. 100 ஆண்டுகளுக்குப் பின் ஈர்ப்பலைகள் இருப்பதை உலகம் கண்டு கொண்டது.

www.tnpscjob.com

இயல் 4

**மணி:** 'வாழ்க்கை எவ்வளவு கடினமாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது' என்று ஸ்டீபன் ஹாக்கிங் கூறியதைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன?

**முகில்:** ஆம் ஹாக்கிங்கின் கூற்றுக்கு அவரே சிறந்த உதாரணமாக இருக்கிறார்கள்.

**மணி:** எப்படி?

**முகில்:** 1963 ஆம் ஆண்டு பக்கவாதம் என்னும் நரம்பு நோயால் பாதிக்கப்பட்ட போது அவருக்கு வயது 21. மருத்துவர்கள் இவர் சில நாட்கள் மட்டுமே உயிரோடிருப்பார் என்றனர். ஆனால் மருத்துவ உலகமே மிரண்டு போகும்படி 53 ஆண்டுகள் இயங்கினார். 1985 இல் மூச்சுக்குழல் தடங்களால் பேசும் திறனை இழந்தார். எஞ்சியது கன்னத்தின் தசையசைவும் கண் சிமிட்டலும் மட்டுமே.

**மணி:** ஹாக்கிங்கின் உடல்நலக் குறைவிற்கும் தன்னம்பிக்கைக்கும் உள்ள தொடர்பு யாது?

**முகில்:** ஹாக்கிங் அவருடைய கன்னத்து அசைவுகள் மூலம் தன் கருத்தை தட்டச்சு செய்து வெளிப்படுத்தினார். கருந்துளை பற்றி ஆராய்ச்சி செய்து தன் கோட்பாடுகளை விண்மீன் இயக்கத்தோடு ஒப்பிட்டு உலகம் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கினார். 1988ஆம் ஆண்டு இவர் இயற்றிய 'காலத்தின் சுருக்கமான வரலாறு' என்ற நூல் நாற்பது மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அந்நூல் ஒரு கோடி படிகளுக்கு மேல் விற்பனையாகி உள்ளது.

**மணி:** கருந்துளைப் பெருவெடிப்பு ஆகியன பற்றிய அரிய உண்மைகள் அந்நூலில் உள்ளன. அறிவுத் தேடலில் உடல், உள்ளத் தடைகளைத் தகர்த்த மாமேதை ஸ்டீபன் ஹாக்கிங்.

**முகில்:** உண்மைதான். அவர் கூறிய தத்துவத்திற்கு அவரே சிறந்த எடுத்துக்காட்டாக வாழ்ந்திருக்கிறார். இத்தகைய அறிஞர்களைப் பற்றிய செய்திகளை விளக்கிய தங்களுக்கு மிக்க நன்றி!

**2. கருந்துளைச் சார்ந்த செய்தியை அறிவியல் இதழ் ஒன்றிற்குக் குறுங்கட்டுரையாக எழுதுக.**

| குறிப்புச்சட்டம் |
|---|
| முன்னுரை |
| விண்மீன் சுருக்கம் |
| ஜான் வீலர் கருத்து |
| ஹாக்கிங் கதிர்வீச்சு |
| கருந்துளைக் கோட்பாடு |
| முடிவுரை |

**முன்னுரை :**

நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிர்கின்றன. அவற்றுள் நம் ஞாயிறும் ஒன்று விண்மீன்களின் ஆயுள் கால முடிவில் நிகழும் நிகழ்வுகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**விண்மீன் சுருக்கம் :**

ஒரு விண்மீனின் ஆயுள் கால முடிவில் உள்நோக்கிய ஈர்ப்பு விசை கூடுகிறது. அதனால் விண்மீன் சுருங்கத் தொடங்குகிறது. விண்மீன் சுருங்கச் சுருங்க அதன் ஈர்ப்பாற்றல் உயர்ந்து கொண்டே சென்று அளவற்றதாகிறது.

**ஜான் வீலர் கருத்து :**

கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதன் முதலில் வெளியிட்டவர் ஜான்வீலர். சுருங்கிய விண்மீனின் ஈர்ப்பெல்லைக்குள் செல்கிற எதுவும் ஏன் ஒளியும் கூட ஈர்க்கப்படும். இவ்வாறு உள்சென்ற எதுவும் வெளிவர முடியாததனால் இதனைக் கருந்துளை என்றார் ஜான் வீலர்.



www.tnpscjob.com

**ஹாக்கிங் கதிர்வீச்சு :**

சில நேரங்களில் உண்மை பொய்யையும் மிஞ்சுவதாக அமைகிறது. கருந்துளைப் பற்றிய உண்மைகளும் அப்படியே. ஹாக்கிங் மேற்கொண்ட கருந்துளை ஆராய்ச்சி முடிவு ஹாக்கிங் ‘கதிர்வீச்சு’ என அழைக்கப்படுகிறது.

**கருந்துளைக் கோட்பாடு :**

கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வர முடியாது. கருந்துளையின் ஈர்ப்பு எல்லையிலிருந்து கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கருந்துளை உண்மையிலேயே கருப்பாக இருப்பதில்லை. கருந்துளையில் இருந்து ஒரு கட்டத்தில் கதிர் வீச்சும் அணுத்துகள்களும் கசியத் தொடங்கி இறுதியில் கருந்துளை வெடித்து மறைந்து விடும். இக்கோட்பாடுகளை ஹாக்கிங் கோட்பாடுகளாக வெளியிடாமல் விண்மீன் இயக்கத்தோடு ஒப்பிட்டு விளக்கியதால் உலகம் கருந்துளைக் கோட்பாட்டை எளிதில் புரிந்து கொண்டது.

**முடிவுரை :**

அண்டவெளியில் காணப்படும் கருந்துளை அழிவு ஆற்றல் என்று கருதப்பட்டது. ஆனால் ஹாக்கிங், கருந்துளைப் படைப்பின் ஆற்றல் என்று நிரூபித்தார்.

⊙⊙•••⊙⊙

இயல் 4 தொழில்நுட்பம்

கற்கண்டு

# இலக்கணம் - பொது

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **குலசேகர ஆழ்வார் ‘வித்துவக் கோட்டம்மா’ என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்.**
**பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார்.**
**ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே**

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி

ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி

ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி **[விடை: இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி]**

### குறுவினா

1. **வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?**

கோடையில் பள்ளி விடுமுறை என்பதால் ஆரல்வாய்மொழிக்குச் செல்லத் திட்டமிட்டிருக்கும் உறுதித்தன்மை நோக்கி காலவழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக இத்தொடர் அமைகிறது.



www.tnpscjob.com

2. **"சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்கமாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.**

சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் **கேட்கும்**. புதியவர்களைப் பார்த்துக் குரைக்குமே தவிர **கடிக்காது** என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினான்.

## சிறுவினா

1. **நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய் பார்" என்றார். 'இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, "என்னடா விளையாட வேண்டுமா?" என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள், அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.**

**இப்பத்தியிலுள்ள வழுக்களைத் திருத்தியும் வழுவமைதிகளைப் பட்டியலிட்டும் எழுது.**

**திருத்தப்பட்ட வழுக்கள் :**

- நேற்றிரவு பெய்த மழை தொட்டியை **நிறைத்தது**.
- வாழைத் **தோட்டத்தில் கன்றுடன்** நின்றிருந்த மாடு **கதறியது**.
- துள்ளிய **கன்றைத்** தடவிக்கொடுத்த....

| வழுவமைதித் தொடர்கள் | வழுவமைதி வகை |
|---|---|
| ♦ நேற்று பெய்த மழை தொட்டியை நிறைத்திருந்தது. (நிறைந்தது) | கால வழுவமைதி |
| ♦ இலட்சுமி கூப்பிடுகிறாள். (மாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |
| ♦ இதோ சென்றுவிட்டேன். (சென்று விடுகிறேன்) | காலவழுமைதி |
| ♦ என்னடா விளையாட வேண்டுமா? (மாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |
| ♦ அவனை அவிழ்த்து விட்டேன். (பசு மாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |
| ♦ இலட்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். (மாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |

## கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **பொருத்தமான விடை வரிசையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

அ) தன்மை வினைகள் - 1. நடந்தாய், வந்தீர்
ஆ) முன்னிலை வினைகள் - 2. நீர், நீங்கள்
இ) படர்க்கை வினைகள் - 3. வந்தேன் வந்தோம்
ஈ) முன்னிலை பெயர்கள் - 4. வந்தான், சென்றான்

அ) 1, 2, 3, 4 ஆ) 4, 3, 2, 1
இ) 3, 1, 4, 2 ஈ) 2, 4, 1, 3 **[விடை: இ) 3, 1, 4, 2]**

இயல் 4

www.tnpscjob.com

**2. பொருத்தமான விடை வரிசையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

அ) மருதன் - 1. பலர்பால்
ஆ) பெண்கள் - 2. ஒன்றன்பால்
இ) யானை - 3. ஆண்பால்
ஈ) பசுக்கள் - 4. பலவின்பால்

அ) 4, 3, 1, 2 ஆ) 3, 1, 2, 4
இ) 2, 4, 1, 3 ஈ) 4, 1, 3, 2 **[விடை: ஆ) 3, 1, 2, 4]**

**3. பால் என்பது __________ உட்பிரிவு ஆகும்.**

அ) திணையின் ஆ) திணையின்
இ) காண்டத்தின் ஈ) படலத்தின் **[விடை: ஆ) திணையின்]**

**4. உயர்திணையின் பிரிவுகள் __________.**

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **[விடை: ஆ) மூன்று]**

**5. அஃறிணையின் பிரிவுகள் __________.**

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **[விடை: அ) இரண்டு]**

**6. இடம் __________ வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஆறு **[விடை: ஆ) மூன்று]**

**7. பொருத்திக் காட்டுக.**

i) நான், யான், நாம், யாம் - 1. தன்மை வினைகள்
ii) வந்தேன், வந்தோம் - 2. தன்மைப் பெயர்கள்
iii) நீ, நீர், நீவிர், நீங்கள் - 3. முன்னிலை வினைகள்
iv) நடந்தாய், வந்தீர், சென்றீர்கள் - 4. முன்னிலைப் பெயர்கள்

அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1
இ) 2, 4, 3, 1 ஈ) 3, 4, 2, 1 **[விடை: அ) 2, 1, 4, 3]**

**8. பொருத்திக் காட்டுக.**

i) அவன் - 1. தன்மை வினை
ii) பறந்தன - 2. முன்னிலை வினை
iii) நடந்தாய் - 3. படர்க்கை வினை
iv) வந்தேன் - 4. படர்க்கைப் பெயர்

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2
இ) 4, 2, 1, 3 ஈ) 3, 4, 2, 1 **[விடை: அ) 4, 3, 2, 1]**

**9. பொருத்திக் காட்டுக.**

i) செழியன் வந்தது - 1. கால வழு
ii) கண்ணகி உண்டான் - 2. இட வழு
iii) நீ வந்தேன் - 3. பால் வழு
iv) நேற்று வருவான் - 4. திணை வழு

அ) 4,3, 2, 1 ஆ) 3, 4, 1, 2
இ) 4, 2, 1, 3 ஈ) 2, 1, 3, 4 **[விடை: அ) 4,3, 2, 1]**

இயல் 4

www.tnpscjob.com

**10. ஒரு விரலைக் காட்டிச் சிறியதோ? பெரியதோ என்று கேட்பது __________ வழு.**

அ) விடை ஆ) வினா
இ) மரபு ஈ) கால **[விடை: ஆ) வினா]**

**11. கண்ணன் எங்கே இருக்கிறார் என்ற வினாவிற்குக் கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று கூறுவது __________ வழு.**

அ) பால் ஆ) வினா
இ) விடை ஈ) மரபு **[விடை: இ) விடை]**

**12. தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம் என்று கூறுவது __________ வழு.**

அ) பால் ஆ) வினா
இ) விடை ஈ) மரபு **[விடை: ஈ) மரபு]**

**13. பொருத்திக் காட்டுக.**

i) என் அம்மை வந்தாள் - 1. பால் வழுவமைதி
ii) கத்துங் குயிலோசை என்றன் காதில் விழ வேண்டும் - 2. கால வழுவமைதி
iii) குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் - 3. மரபு வழுவமைதி
iv) வாடா ராசா மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது - 4. திணை வழுவமைதி

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 3, 1, 4
இ) 4, 2, 3, 1 ஈ) 3, 4, 1, 2 **[விடை: அ) 4, 3, 2, 1]**

**14. மாறன் என்பான் தன்னைப் பற்றிப் பிறரிடம் கூறும்போது, "இந்த மாறன் ஒரு நாளும் பொய் கூறமாட்டான் என்று கூறுவது __________.**

அ) பால் வழுமமைதி ஆ) திணை வழுவமைதி
இ) இட வழுவமைதி ஈ) மரபு வழுவமைதி **[விடை: இ) இட வழுவமைதி]**

**15. பொருத்துக.**

1. வீரன், அண்ணன், மருதன் - அ) பெண்பால்
2. மகள், அரசி, தலைவி - ஆ) பலர்பால்
3. மக்கள், பெண்கள், ஆடவர் - இ) ஒன்றன்பால்
4. யானை, புறா, மலை - ஈ) ஆண்பால்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

**16. பொருத்துக.**

1. நீ வந்தேன் - அ) இட வழாநிலை
2. நீ வந்தாய் - ஆ) இட வழு
3. நேற்று வருவான் - இ) கால வழாநிலை
4. நேற்று வந்தான் - ஈ) கால வழு

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

**17. பொருத்துக.**

1. என் அம்மை வந்தாள் என்று மாட்டைக் கூறுவது - அ) பால் வழுவமைதி
2. வாடா இராசா, வாடா கண்ணா என மகளைத் தாய் அழைப்பது - ஆ) இடவழுவமைதி

3. இந்த மாறன் ஒரு நாளும் பொய் கூறமாட்டான் என மாறன் பிறரிடம் சொல்வது - இ) கால வழுவமைதி
4. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் - ஈ) திணைவழுவமைதி

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

## குறுவினா

**1. திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

திணை இரண்டு வகைப்படும். அவை: உயர்திணை, அஃறிணை.

**2. பால் என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறு..**

பால் என்பது திணையின் உட்பிரிவு. பால் ஐந்து வகைப்படும். அவை:
ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.

**3. உயர்திணைக்குரிய பால்கள் எத்தனை? அவை யாவை?**

உயர்திணைக்குரியப் பால்கள் மூன்று. அவை: ஆண்பால், பெண்பால், பலர்பால்.

**4. அஃறிணைக்குரிய பால் பகுப்புகள் எத்தனை? அவை யாவை?**

அஃறிணைக்குரியப் பால் பிரிவுகள் இரண்டு. அவை: ஒன்றன்பால், பலவின்பால்.

**5. உயர்திணைக்குரிய பால் பகுப்புகளைக் கூறுக.**

- வீரன், அண்ணன், மருதன் - ஆண்பால் (ஒரு ஆணை மட்டும் குறிக்கும்)
- மகள், அரசி, தலைவி - பெண்பால் (ஒன்றுக்கு மேற்பட்ட நபரைக் குறிக்கும்)
- மக்கள், பெண்கள், ஆடவர் - பலர்பால் (ஒன்றுக்கு மேற்பட்ட நபரைக் குறிக்கும்)

**6. அஃறிணைக்குரிய பால் பகுப்புகளைக் கூறுக.**

- அஃறிணையில் ஒன்றனை மட்டும் குறிப்பது ஒன்றன்பால். **எ.கா:** யானை, புறா, மலை
- அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால். **எ.கா:** பசுக்கள், மலைகள்.

**7. இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

இடம் மூன்று வகைப்படும். அவை: தன்மை, முன்னிலை, படர்க்கை.

**8. வழு - வழா நிலை இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளைக் கூறுக.**

| வழு நிலை | வழா நிலை |
|---|---|
| இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழுநிலை. | இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழா நிலை. |

**9. வழு எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

வழு ஏழு வகைப்படும். அவை:
திணை வழு, பால் வழு, இட வழு, கால வழு, வினா வழு, விடை வழு, மரபு வழு.

**10. வழுவமைதி என்றால் என்ன?**

இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக் கொள்ளப்படுவது வழுவமைதி ஆகும்.

**11. வழுவமைதி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

வழுவமைதி ஐந்து வகைப்படும். அவை:
திணை வழுவமைதி, பால் வழுவமைதி, இட வழுவமைதி, கால வழுவமைதி, மரபு வழுவமைதி.



www.tnpscjob.com

**12. திணை வழுவமைதிக்குச் சான்று தந்து அதற்கான காரணத்தைக் கூறுக.**

**எ.கா** : "என் அம்மை வந்தாள்" என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது திணை வழு.

**காரணம்** : உவப்பின் காரணமாக அஃறிணை உயர்திணையாகக் கொள்ளப்பட்டது.

**13. பால் வழுவமைதிக்குச் சான்று தந்து அதற்கான காரணத்தைக் கூறுக.**

**எ.கா** : "வாடா ராசா, வாடா கண்ணா" என்று தன் மகளைப் பார்த்துக் கூறுவது பால் வழுவமைதி.

**காரணம்** : உவப்பின் காரணமாக பெண்பால் ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது.

**14. இட வழுவமைதிக்குச் சான்று தந்து அதற்கான காரணத்தைக் கூறுக.**

**எ.கா** : மாறன் என்பான் தன்னைப் பற்றி பிறரிடம் கூறும்போது, "இந்த மாறன் ஒரு நாளும் பொய் கூற மாட்டான்" எனக் கூறுதல்.

**காரணம்** : தன்மையினைப் படர்க்கை இடத்தில் கூறுவதால் இடவழுவமைதி ஆயிற்று.

**15. கால வழுவமைதிக்குச் சான்று தந்து அதற்கான காரணத்தைக் கூறுக.**

**எ.கா** : குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார். (வருவார் என்பதே சரி)

**காரணம்** : குடியரசுத் தலைவர் நாளை வருவார் என அமைதல் வேண்டும். வருகையின் உறுதித் தன்மை காரணமாக கால வழுவமைதியாக ஏற்றுக் கொள்கிறோம்.

**16. மரபு வழுவமைதிக்குச் சான்று தந்து அதற்கான காரணத்தைக் கூறுக.**

**எ.கா** : "கத்துங் குயிலோசை என்றன் காதில் விழ வேண்டும்"-பாரதியார்.
(குயில் கூவும் - மரபு)

**காரணம்** : குயில் கூவும் என்பது மரபு. பாரதியார் மகாகவி, அவர் குயில் கத்தும் என்று கூறியதால் வழுவாயினும் மரபு வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**17. வீரன், அண்ணன், மருதன் ஆகிய சொற்கள் எவ்வகைத் திணை எவ்வகைப் பால் எனக் குறிப்பிடுக.**

- திணை : உயர்திணை
- பால் : ஆண்பால்

**18. மகள், அரசி, தலைவி ஆகிய சொற்கள் எவ்வகைத் திணை எவ்வகைப் பால் எனக் குறிப்பிடுக.**

- திணை : உயர்திணை
- பால் : பெண்பால்

**19. மக்கள், பெண்கள், ஆடவர் ஆகிய சொற்கள் எவ்வகைத் திணை எவ்வகைப் பால் எனக் குறிப்பிடுக.**

- திணை : உயர்திணை
- பால் : பலர்பால்

**20. யானை, புறா, மலைஆகிய சொற்கள் எவ்வகைத் திணை எவ்வகைப் பால் எனக் குறிப்பிடுக.**

- திணை : அஃறிணை
- பால் : ஒன்றன்பால்

**21. பசுக்கள், மலைகள் ஆகிய சொற்கள் எவ்வகைத் திணை எவ்வகைப் பால் எனக் குறிப்பிடுக.**

- திணை : அஃறிணை
- பால் : பலவின்பால்

**22. வழா நிலை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

வழாநிலை ஏழு வகைப்படும். அவையாவன:

1. திணை வழாநிலை, 2. பால் வழாநிலை, 3. இடவழாநிலை, 4. காலவழாநிலை, 5. வினாவழாநிலை, 6. விடைவழாநிலை, 7. மரபுவழாநிலை

இயல் 4

www.tnpscjob.com

**23. "நான் தேர்வில் தேர்ச்சியடைந்து விட்டேன்" என்று தேர்வு முடிவுகள் வெளிவரும் முன்பு கூறும் வழுவமைதி யாது?**

கால வழுவமைதி; நம்பிக்கையின் அடிப்படையில் கூறப்படுவது.

## சிறுவினா

**1. மூவிடப் பெயர்களைப் பெயர்/வினை அடிப்படையில் எடுத்துக்காட்டுடன் பட்டியலிடுக.**

| இடம் | பெயர்/வினை | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| தன்மை | தன்மைப் பெயர்கள் | நான், யான், நாம், யாம் |
| | தன்மை வினைகள் | வந்தேன், வந்தோம் |
| முன்னிலை | முன்னிலைப் பெயர்கள் | நீ, நீர், நீவிர், நீங்கள்...... |
| | முன்னிலை வினைகள் | நடந்தாய், வந்தீர், சென்றீர்கள்..... |
| படர்க்கை | படர்க்கைப் பெயர்கள் | அவன், அவள், அவர், அது, அவை...... |
| | படர்க்கை வினைகள் | வந்தான், சென்றாள், படித்தனர், பேசினார்கள், பறந்தது, பறந்தன....... |

**2. செழியன் வந்தது**
**கண்ணகி உண்டான்**
**நீ வந்தேன்**
**நேற்று வருவான்.**
**ஒரு விரலைக் காட்டிச் 'சிறியதோ? பெரியதோ? என்று கேட்டல்.**
**கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று விடையளித்தல். தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம் என்று கூறுதல் - இத்தொடர்களில் உள்ள வழு எவ்வகை வழு எனவும் வழுவை நீக்கியும் பட்டியலிடுக.**

| வழு வகை | வழு | வழாநிலை |
|---|---|---|
| **திணை** | செழியன் வந்தது. | செழியன் வந்தான். |
| **பால்** | கண்ணகி உண்டான். | கண்ணகி உண்டாள். |
| **இடம்** | நீ வந்தேன். | நீ வந்தாய். |
| **காலம்** | நேற்று வருவான். | நேற்று வந்தான். |
| **வினா** | ஒரு விரலைக் காட்டிச் "சிறியதோ? பெரியதோ?" என்று கேட்டல். | இரு விரல்களைக் காட்டி 'எது சிறியது?' எது பெரியது என்று கேட்டல். |
| **விடை** | 'கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று விடையளித்தல். | கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்கு கண்ணன் வீட்டிற்குள் இருக்கிறார் என்று விடையளித்தல். |
| **மரபு** | தென்னை மரங்கள் பகுதியைத் தென்னந் தோட்டம் என்று கூறுதல். | தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோப்பு என்று கூறுதல். |



www.tnpscjob.com

## கற்பவை கற்றபின்

பக்கம்: 92

**1. கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.**

அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்.

**கால வழுவமைதி.**

ஆ) "இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அனைவரும் ஏற்பர்" என்று கூறினான்.

**இட வழுவமைதி.**

இ) சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்.

**கால வழுவமைதி.**

ஈ) செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்திருக்கிறார்.

**பால் வழுவமைதி.**

**2. அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**

அ) தந்தை, "மகனே! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா!" என்று சொன்னார். *(ஆண்பாற் பெயர்களைப் பெண்பாற் பெயர்களாக மாற்றி எழுது)*

தாய், "மகளே! நாளை உன்னுடைய தோழி அழகியை அழைத்து வா" என்று சொன்னாள்.

ஆ) அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. *(வழுவை வழாநிலையாக மாற்றுக)*

அக்கா நேற்று வீட்டிற்கு வந்தாள். அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பினார்(னாள்).

இ) "இதோ முடித்துவிடுவேன்" என்று செயலை முடிக்கும் முன்பே முன்னர் கூறினார். *(வழாநிலையை வழுவமைதியாக மாற்றுக)*

"இதோ முடித்துவிட்டேன்" என்று செயலை முடிக்கும் முன்னர் கூறினார்.

ஈ) அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை. *(படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக)*

நீ என்னிடமும் அவனிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

உ) குழந்தை அழுகிறான் பார். *(வழுவை வழாநிலையாக மாற்றுக).*

குழந்தை அழுகிறது பார்.

இயல் 4

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 95

**மொழி பெயர்க்க.**

| | | |
|---|---|---|
| Malar | Devi, switch off the lights when you leave the room. | தேவி, நீ அறையை விட்டு வெளியே செல்லும் முன் விளக்கை அணைத்துவிடு. |
| Devi | Yeah, we have to save electricity. | ஆம், நாம் மின்சாரத்தைச் சேமிக்க வேண்டும். |
| Malar | Our nation spends a lot of electricity for lighting up our streets in the night. | நம் நாடு தெரு விளக்குகளை எரிய வைப்பதற்கு நிறைய மின்சாரத்தைச் செலவு செய்கிறது. |
| Devi | Who knows? In future our country may launch artificial moons to light our night time sky! | யாருக்குத் தெரியும்? வருங்காலத்தில் நம் நாடு செயற்கை நிலாவை நிறுவி இரவில் வானத்தில் விளக்குகளை எரிய வைக்கலாம். |

www.tnpscjob.com

| | | |
|---|---|---|
| Malar | I have read some other countries are going to launch these types of illumination satellites near future. | வருங்காலத்தில் நிறைய நாடுகள் இவ்வகையான செயற்கைக்கோளை நிறுவ இருப்பதாக நான் வாசித்துள்ளேன். |
| Devi | Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power! | நல்ல செய்தி! நாம் செயற்கை நிலவை நிறுவினால் அது பேரழிவு மற்றும் மின்சாரம் இல்லாத சமயத்தில் ஒளியூட்டி நிவாரண உதவிகளை செய்ய வழி செய்கிறது! |

## வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.

**காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?**

எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காதுக் கேட்கும் பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம்.

*யுரேகா! யுரேகா! - அறிவியல் வெளியீடு.*

**விடை :**

**காகத்திற்குக் காது உண்டா? அதற்குக் காது கேட்குமா?**

எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு. செவித்துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறச்செவிமடல் இருக்காது. காகத்திற்குக் காது உண்டு, காதுக் கேட்கும் பறவைகளுக்குப் பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சி பெற்று இருக்கும். சுவைத்தல் **உணர்வு** குறைவாகவும் நுகர்தல் உணர்வு **இல்லையென்றே** கூறலாம்.

## கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

**அ) இயற்கை - செயற்கை**

எ.கா : பாதைதெரியாதஇயற்கைக்காடுகளில்பயணிக்கச்செயற்கைக்கருவிகள்பயன்படுகின்றன.

**ஆ) கொடு - கோடு**

இராகவன் தன் நண்பன் கொடுத்த அளவுகோலைக் கொண்டு கோடு வரைந்தான்.

**இ) கொள் - கோள்**

கோள்களின் இயக்கம் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

**ஈ) சிறு - சீறு**

சிறு பொந்துக்குள் இருந்து பாம்பு சீறுவதைக் கண்டேன்.

**உ) தான் - தாம்**

இராமன், "தான் தான் குற்றவாளி" என்று தாமே ஒப்புக் கொண்டான்.

**ஊ) விதி - வீதி**

கண்ணனின் தலைவிதி அவனை வீதியில் நிறுத்தியது.

## பத்தியைப் படித்துப் பதில் தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறித்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய



www.tnpscjob.com

உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்று நிலைபெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

**வினாக்கள் :**

1. **பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.**
2. **புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?**
3. **பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.**
4. **இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?**
5. **உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?**

**விடைகள் :**

1. மீண்டும் மீண்டும்.
2. தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.
3. பெய்மழை.
4. பருப்பொருள்கள் சிதறுதல் (பெரு வெடிப்புக் கொள்கை).
5. நிலம், நீர், காற்று, நெருப்பு.

## கட்டுரை எழுதுக.

**தலைப்பு - விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்**

| **குறிப்புச் சட்டம்** |
|---|
| முன்னுரை<br>பிறப்பு<br>கல்வி<br>விண்வெளிப் பயணம்<br>கொலம்பியா விண்கல நிகழ்வு<br>விருதுகளும் அங்கீகாரங்களும்<br>முடிவுரை |

**முன்னுரை :**

'ஆணுக்குப் பெண் சரிசமம்' என்ற கருத்தை மெய்ப்பிக்கும் வண்ணம் விண்வெளியில் கால்பதித்த இந்தியாவின் முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவர் கல்பனா சாவ்லா. அவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பிறப்பு :**

> **"நிலாவைப் பார்த்து சோறு உண்ணும் போதே நிலவுக்குச் செல்வதையே கனவு கண்டவள் நீ"**

- 01.07.1961 அன்று இந்தியாவில் உள்ள ஹரியானா மாநிலத்தில் பிறந்தார்.
- பெற்றோர் - பனாரஸ் லால் சாவ்லா (தந்தை), சன்யோகிதா தேவி (தாய்).
- பஞ்சாபிக் குடும்பத்தைச் சார்ந்தவள்.
- 'கல்பனா' என்றால் 'கற்பனை' என்று பொருள்.
- இவருக்குச் சுனிதா மற்றும் தீபா என்ற இரு சகோதரிகளும் சஞ்சய் என்ற சகோதரனும் இருக்கின்றனர்.

**கல்வி :**

கர்னலில் உள்ள தாகூர் அரசுப் பள்ளியில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். 1982-இல் சண்டிகரில் உள்ள "பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் விமான ஊர்தியியல் துறையில் இளங்கலைப்



www.tnpscjob.com

பட்டம் பெற்றாள். 1984-இல் அமெரிக்காவில் உள்ள "டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம்'' பெற்றாள். 1988-இல் விண்வெளிப் பொறியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றார்.

**விண்வெளிப் பயணம் :**

- நாசா ஆராய்ச்சிக் கூடத்தில் "ஓசெர்செட் மேதொட்ஸ் இன்க் இல்'' துணைத்தலைவராக பொறுப்பேற்றார்.
- 1995-இல் நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்தார்.
- 1997 ஆம் ஆண்டு கொலம்பிய விண்வெளி ஊர்தியான STS-87ல் முதல் விண்வெளி பயணத்தைத் தொடங்கினார்.
- 372 மணி நேரம் விண்வெளியிலேயே இருந்து சாதனை படைத்தார்.

**கொலம்பியா விண்கல நிகழ்வு :**

- 16.01.2003ல் அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ் - 107 (STS - 107) விண்ணில் செலுத்தப்பட்டது.
- இந்த விண்கலத்தில் சாவ்லா உட்பட ஏழு பேர் பயணித்தனர்.
- பதினாறு நாட்கள் ஆய்வை முடித்துவிட்டு திரும்பிய போது, அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான் பரப்பில் அவ்விண்கலம் வெடித்துச் சிதறியது.
- சாவ்லா உட்பட ஏழு பேரும் பலியாகினர்.

**விருதுகளும் அங்கீகாரங்களும் :**

- இளம் பெண் விஞ்ஞானிகளை ஊக்குவிக்க தமிழக அரசாங்கம் "கல்பனா சாவ்லா'' விருதினை 2004 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது.
- நாசா ஸ்பேஸ் பிளைட் மெடல்.
- நாசா டிஸ்டிங்குவிஷ்ட் சர்வீஸ் மெடல்.
- நியூயார்க்கில் உள்ள ஒரு தெருவிற்குக் "கல்பனா (way)'' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**முடிவுரை :**

- பெண்ணினத்திற்கே பெருமை சேர்ந்தவர் கல்பனா.
- "கனவுகளைக் கண்டு அந்தக் கனவுகளை நனவாக்குவதற்கு விடா முயற்சியோடும் முழுமனதோடும் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்'' என்ற உண்மையை உலகிற்கு உணர்த்திச் சென்ற வீரப்பெண்ணை நாமும் போற்றுவோம்.

**நீ.....**
**இந்தியனாகப் பிறந்தது பெருமை**
**அதைவிட**
**இந்தியாவுக்கே**
**நீ..... பெருமை!**

**நயம் பாராட்டுக.**

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;

இயல் 4

பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ? - *பாரதியார்*

**தலைப்பு :** இயற்கை

**ஆசிரியர் :** பாரதியாா

**திரண்ட கருத்து :**

**வாழைக்கு அழகு குருத்து**
**செய்யுளுக்கு அழகு திரண்ட கருத்து**

நிலா, விண்மீன், காற்று ஆகிய இவற்றையெல்லாம் செம்மையுற்ற ஏற்படுத்தி வைத்து, அவற்றிலெல்லாம் தோய்ந்துள்ளது. திருவருளாகிய அமுதரசம். அந்த அமுதரசத்தைப் பருகி, அழகிய உன்னத நிலைக்கு யாம் உள்ளானோம். உலவுகின்ற மனமாகிய சிறுபறவையை எங்கெங்கும் செலுத்திக் களிப்படைவோம். பலாச்சுளை ஏற்றப்பட்ட வண்டியை ஒரு வண்டானது ரீங்காரம் செய்து வட்டமிடுவது ஆச்சரியகரமானதா என்ன?

**தொடை நயம் :**

**தொடையற்ற பாட்டு**
**நடையற்றுப் போகும்**

செய்யுளில் எதுகை, மோனை, இயைபு, முரண் ஆகிய உறுப்புகளால் தொடுக்கப்படுவது தொடை.

**மோனை நயம் :**

**மோனையற்ற பாட்டு**
**சேனையற்ற நாடு**

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.

**சான்று:** குலாவும், குழம்பைக், குடித்தொரு

**எதுகை நயம் :**

**வீரத்துக்கு அழகு வேங்கை**
**பாட்டுக்கு அழகு எதுகை**

முதல் எழுத்து அளவொத்து இருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும்.

**சான்று:**

**அடி எதுகை:**

நிலாவையும்
குலாவும்
உலாவும்
பலாவின்

**அணி நயம் :**

**கோவிலுக்கு மணி அழகு**
**செய்யுளுக்கு அணி அழகு**

இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி இடம் பெற்றுள்ளது.



www.tnpscjob.com

## மொழியோடு விளையாடு

பக்கம்: 96

### தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.

**(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)**

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் **கற்றல்**.
2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை **கரு**.
3. கல் சிலை ஆகுமெனில், நெல் **சோறு** ஆகும்.
4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து **எழுத்து**.
5. மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது **பூவில்.**

### குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.

| குறிப்பு | எதிர்மறையான சொற்கள் |
|---|---|
| மீளாத் துயர் | மீண்ட இன்பம் |
| கொடுத்துச் சிவந்த | கொடுக்காது சிவக்காது |
| மறைத்துக் காட்டு | மறைக்காது காட்டாதே |
| அருகில் அமர்க | தொலைவில் நில் |
| பெரியவரின் அமைதி | சிறியவரின் இரைச்சல் |
| புயலுக்குப் பின் | புயலுக்கு முன் |

### அகராதியில் காண்க.

**அவிர்தல்** - ஒளி செய்தல், பீரல், விரிதல், பாடம் செய்தல்.

**அழல்** - உட்டணம், எருக்கு, கள்ளி, கேட்டை நாள், கொடுவேலி, செவ்வாய், தீ, நரகம், வெப்பம், பொறாமை, அழுதல்.

**உவா** - அமாவாசி, இளமை, இளையோன், கடல், நிறைவு, பூரணை, யானை, வாலிபன், உகாமரம்.

**கங்குல்** - இரவு, இருள், பரணி நாள்.

**கனலி** - கள்ளி, கொடுவேலி, கரியன், நெருப்பு, சூரியன்.

இயல் 4

### காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



மாட்டிற்கு......
மூக்கணாங்கயிறு போடும்
மானிடப் பிறவிகளே!
இதோ......
உனக்கு
மூக்கணாங்கயிறு போட
வந்துவிட்டான்
திறன்பேசி நாயகன்''
திறன்பேசிக்கு
அடிமையானால்
இதுதான்....... நாளைய நிலைமை

www.tnpscjob.com

## செயல்திட்டம்

**செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் வணிக நிறுவனங்கள் சில இயங்கி வருகின்றன. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ரோபோக்களை உருவாக்கும் நிறுவனங்கள் சில உலகினில் இருக்கின்றன. அவற்றைப் பற்றிய படங்களுடன் குறிப்பு எழுதி வருக.**

**செய்தி -1 :**

- ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்.
- இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.
- வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன.
- இவை மனிதனின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுகின்றன.
- பெப்பரை வரவேற்பாளராகவும், பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

**செய்தி - 2 :**

- 2016இல் ஐ.பி.எம். நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன், சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

**செய்தி - 3 :**

- ஹாங்காங் நகரத்தின் ஹான்சன் ரோபோட்டிக்ஸ் நிறுவனம் உருவாக்கிய சோபியா என்னும் இயந்திரப் பெண்ணுக்கு சௌதி அரேபியாவில் குடியுரிமை வழங்கியிருக்கிறார்கள்.
- இதனுடைய உரையாடல்களும், முகபாவனைகளும் மனிதர்களைப் போன்றிருந்தன.

### கலைச்சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| மீநுண் தொழில்நுட்பம் | - | Nanotechnology |
| விண்வெளித் தொழில்நுட்பம் | - | Space Technology |
| உயிரித் தொழில்நுட்பம் | - | Biotechnology |
| விண்வெளிக் கதிர்கள் | - | Cosmic Rays |
| புறஊதாக் கதிர்கள் | - | Ultraviolet Rays |
| அகச்சிவப்புக் கதிர்கள் | - | Infrared Rays |

## நிற்க அதற்குத் தக

**தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி;**
**திறன் பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை;**
**காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்;**
**எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி;**

**இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.**



**விடை :**

- கபடி, சதுரங்கம் போன்ற விளையாட்டுகளை விளையாடச் செய்வேன்.
- கோலி, பம்பரம் போன்ற விளையாட்டுகளை விளையாடச் செய்வேன்,
- நூலகத்திற்கு அழைத்துச் செல்வேன்.
- சமூகசேவை செய்ய பழக்குவேன்.

www.tnpscjob.com

இயல் கல்வி 5

உரைநடை உலகம்

# மொழிபெயர்ப்புக் கல்வி

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி ________.**

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

**[விடை: அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.]**

### குறுவினா

1. **தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுது.**

தாய்மொழித் தமிழும் உலகப்பொதுமொழி ஆங்கிலமும் தவிர, நான் கற்க விரும்பும் மொழி இந்தி.

**இந்தி கற்க விரும்பும் காரணம் :**

- இந்தி நமது நாட்டின் தேசிய மொழி.
- இந்தி இந்திய பாராளுமன்ற மொழி.
- பாராளுமன்ற விவாதங்களை அறிய உதவும் மொழி.
- அரசு மற்றும் தனியார் வேலை வடக்கே கிடைத்தால் துணையாக இருக்கும் மொழி.
- வடநாட்டு மக்களின் பண்பாட்டைப் புரிந்து கொள்ளவும் உதவும் மொழி இந்தி.

### சிறுவினா

1. **உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?**

- என்னுடன் படித்த மாணவன் வறுமையின் காரணமாக வேலைக்குச் செல்கிறான்.
- நான் அவனைக் கண்டு இளம் வயது படிப்பதற்கு உரியது, பணி செய்வதற்கு அல்ல.
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா!
- நாம் இன்று வேலைக்குச் செல்வதால் இன்றைய தேவைதான் பூர்த்தியாகும். நாளைய தேவை பூர்த்தியாகுமா?

**கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையார் கல்லா தவர்.**

என்கிறார் வள்ளுவர்.



www.tnpscjob.com

- அப்துல் கலாம் அவர்கள் வறுமையில் வாடினாலும் காலை, மாலை வேலைக்குச் செல்வார். இடைப்பட்ட நேரத்தில் பள்ளிக்குச் சென்றதால் தான் உலகம் போற்றும் உத்தமர் ஆனார். இவர்போல நீயும் உழை; இடைப்பட்ட நேரத்தில் என்னோடே பள்ளிக்கு வா. படித்துப் பணிக்குப் போகலாம்.
- அரசும், தொண்டு நிறுவனமும் உடை முதல் உணவு வரை இலவசமாகத் தருகிறது.

**நாம் கல்வியால் இணைவோம்!**
**நம் தேசத்தைக் கல்வியில் உயர்த்துவோம்!!**

### 2. ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு

**ஐ.நா.அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (Translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது. ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது, விளக்குவது என்று (InterPreting) சொல்லப்படுகிறது. ஐ.நா.அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணி கேட்பியில் (Head Phone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வெளியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தன்முன் உள்ள காதணி கேட்பியை (Head Phone) எடுத்து பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்து கொள்வார்.**

**இப்பகுதியில் இருந்து 5 வினாக்களை உருவாக்குக.**

1. ஐ.நா.அவையில் உறுப்பினர்கள் தம் மொழியில் பேசும்போது மொழி தெரியாதவர்களுக்கு ஏதேனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?
2. மொழி பெயர்ப்பு என்றால் என்ன?
3. பார்வையாளர்கள் அவையில் பேசுவோர் உரையை எப்படிப் புரிந்து கொள்கின்றனர்?
4. மொழிபெயர்ப்பாளர்கள் எங்கு அமர்ந்திருப்பர்?
5. ஐ.நா.அவையில் பேசுவோரின் பேச்சு எவ்வளவு நேரத்தில் மொழிபெயர்க்கப் படுகிறது?
6. ஐ.நா.அவையில் செய்யப்பட்டுள்ள வசதி யாது?
7. காதணி கேட்பியை எதற்குப் பயன்படுத்துவர்?
8. ‘விளக்குவது’ (Inter Preting) என்றால் என்ன?

## நெடுவினா

### 1. தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை.

**மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை, என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக.**



www.tnpscjob.com

## தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக்கலை

| குறிப்புச் சட்டம் |
| --- |
| முன்னுரை |
| வரையறை |
| தமிழ் இலக்கிய வளம் |
| கல்வி மொழி |
| பிறமொழி இலக்கியம் |
| அறிவியல் கருத்துகள் |
| பல்துறை கருத்துகள் |
| முடிவுரை |

**முன்னுரை :**

உலகம் தகவல் தொழில்நுட்பத்தினால் சுருங்கி விட்ட சூழலில் கூட மொழிபெயர்ப்புத் துறை முக்கிய இடம் பெறுகிறது. இத்தகு மொழிபெயர்ப்பு கலை மக்களின் வாழ்வில் எத்தகு போக்கினைச் செய்கிறது என்பது பற்றிக் காண்போம்.

**வரையறை:**

மொழிபெயர்ப்பு என்பது மூல மொழியில் உள்ள சொல் அல்லது சொற்றொடர்களை எந்தவித பொருள் மாற்றமும் இல்லாமல் வேறு மொழியில் பெயர்ப்பு செய்வது மொழிபெயர்ப்பு எனப்படும்.

**தமிழ் இலக்கிய வளம் :**

தமிழ் இலக்கிய வளம் பெற வேண்டும் என்றால் பிறமொழியில் சிறந்து விளங்கிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இருந்து தமிழில் மொழிபெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் கம்பரின் இராமவதாரம், வில்லிபுத்தூராரின் வில்லிபாரதம் போன்ற காவியங்கள் அனைத்தும் மொழிபெயர்க்கப்பட்டவையே.

**கல்வி மொழி :**

மொழிபெயர்ப்பைக் கல்வியாக்குவதன் மூலம் அனைத்துலக அறிவை நாம் பெற்றுப் பல்வேறு துறையில் சிறந்து விளங்கமுடியும்.

**பிறமொழி இலக்கியம் :**

ரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கீதாஞ்சலியை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தப் பிறகு நோபல் பரிசு கிடைத்தது.

**அறிவியல் கருத்துகள் :**

மொழிபெயர்ப்பு அறிவியல் சார்ந்த துறையிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. Tele என்ற ஆங்கிலச் சொல் தொலை என்பதைக் குறிக்கும். இதன் அடிப்படையில் Telephone - Telescope - தொலைபேசி, தொலைநோக்கி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**பல்துறை கருத்துகள் :**

கல்வி, அறிவியல், இலக்கியம் மட்டுமல்லாமல் பிறதுறையிலும் வளர்ச்சி அடைந்துள்ளன. வானொலி, திரைப்படம், இதழியியல், விளம்பரம் போன்ற துறைகளிலும் மொழிபெயர்ப்புப் பணி சிறந்து விளங்குகிறது. தொலைக்காட்சித் தொடர்கள் வேற்றுமொழிக்கு மாற்றப்படுவதால் அனைத்து மக்களையும் சென்றடைகிறது.



www.tnpscjob.com

**முடிவுரை:**

எந்த மொழியின் படைப்பாக இருந்தாலும் எதை மொழிபெயர்க்க வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? என்பதனை அறிந்து இலக்கண விதிமுறையுடன் செய்தால் நிலைபெற்று விளங்கும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **பிறநாட்டு தூதரகங்கள் நம் நாட்டில் எப்போது நிறுவப்பட்டன?**
அ) சுதந்திரத்திற்கு முன் ஆ) விடுதலைக்குப் பின்
இ) குடியரசுக்கு முன் ஈ) குடியரசுக்குப் பின் **[விடை: ஆ) விடுதலைக்குப் பின்]**

2. **மொழிபெயர்த்தல் என்னும் தொடரைத் தொல்காப்பியர் கையாண்ட இடம் ________.**
அ) பெயரியல் ஆ) வினையியல்
இ) மரபியல் ஈ) உயிரியல் **[விடை: இ) மரபியல்]**

3. **இராமாயண மகாபாரத தொன்மச் செய்திகள் இடம் பெற்றுள்ள தமிழ் இலக்கியம் எது?**
அ) சங்க இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம்
இ) சிற்றிலக்கியம் ஈ) நவீன இலக்கியம் **[விடை: அ) சங்க இலக்கியம்]**

4. **மொழிபெயர்க்கப்பட்டதால் நோபல் பரிசு பெற்ற இந்தியக் கவிஞர் யார்?**
அ) வி.சூ. நைப்பால் ஆ) இரட்யார்ட் கிப்ளிங்
இ) வெங்கட்ராமன் ஈ) இரவீந்திரநாத் தாகூர் **[விடை: ஈ) இரவீந்திரநாத் தாகூர்]**

5. **'மொகு சாஸ்ட்டு' என்னும் ஜப்பானிய சொல்லின் பொருள் ________.**
அ) பதில் தர மறுக்கிறோம் ஆ) விடைதர அவகாசம் வேண்டும்
இ) விடைதர முடியாது ஈ) இரவீந்திரநாத் தாகூர்
**[விடை: ஆ) விடைதர அவகாசம் வேண்டும்]**

6. **வடமொழிக் கதையைத் தழுவி படைக்கப்பட்ட நூல் ________.**
அ) கம்பராமாயணம் ஆ) சீவகசிந்தாமணி
இ) கலிங்கத்துப்பரணி ஈ) வில்லிபாரதம் **[விடை: இ) கலிங்கத்துப்பரணி]**

7. **மொழிபெயர்ப்பு முயற்சியில் ஈடுபடும் நிறுவனங்கள் ________.**
அ) சாகித்திய அகாதெமி ஆ) தேசிய புத்தக நிறுவனம்
இ) தென்னிந்திய புத்தக நிலையம் ஈ) இவை அனைத்தும் **[விடை: ஈ) இவை அனைத்தும்]**

8. **பன்னாட்டு மொழிகளைக் கற்பிப்பவை ________.**
அ) தனியார் நிறுவனங்கள் ஆ) வெளிநாட்டுதூதரகங்கள்
இ) பள்ளிகள் ஈ) இவை அனைத்தும் **[விடை: ஈ) இவை அனைத்தும்]**

9. **'காசினியில் இன்றுவரை அறிவின் மன்னர் கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணிப் பேசி மகிழ் நிலை வேண்டும்'' என்று கூறியவர் யார்?**
அ) குலோத்துங்கன் ஆ) பராந்தகன்
இ) இராஜராஜன் ஈ) இராஜேந்திரன் **[விடை: அ) குலோத்துங்கன்]**

இயல் 5

**10. பொருத்தித் தெரிக.**

அ) 1942 - 1. யூமா வாசுகி
ஆ) 1949 - 2. முத்துமீனாட்சி
இ) 2016 - 3. ராகுல் சாங்கிருத்யாயன்
ஈ) 2018 - 4. கணமுத்தையா

அ) 3, 4, 2, 1 ஆ) 4, 3, 2, 1
இ) 1, 2, 3, 4 ஈ) 2, 4. 3, 1 **[விடை: அ) 3, 4, 2, 1]**

**11. நம்மிடம் எல்லாம் உள்ளது என்ற பட்டை கட்டிய பார்வையை ஒழித்து அகன்ற பார்வையைத் தருவது ________.**

அ) நாடகம் ஆ) மொழிபெயர்ப்பு
இ) தியானம் ஈ) செல்வம் **[விடை: ஆ) மொழிபெயர்ப்பு]**

**12. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்று கூறியவர் ________.**

அ) மு. கு. ஜகந்நாதர் ஆ) மணவை முஸ்தபா
இ) அ. முத்துலிங்கம் ஈ) அப்துல் ரகுமான் **[விடை: ஆ) மணவை முஸ்தபா]**

**13. உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும் என்று கூறியவர் ________.**

அ) மு. கு. ஜகந்நாதர் ஆ) மணவை முஸ்தபா
இ) மு. மேத்தா ஈ) அ. முத்துலிங்கம் **[விடை: அ) மு. கு. ஜகந்நாதர்]**

**14. "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று குறிப்பிடும் செப்பேட்டுக் குறிப்பு ________.**

அ) உத்திரமேரூர் ஆ) மண்டகப்பட்டு
இ) சின்னமனூர் ஈ) ஆதிச்சநல்லூர் **[விடை: இ) சின்னமனூர்]**

**15. சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்தும் சான்று ________.**

அ) உத்திரமேரூர் கல்வெட்டு ஆ) உறையூர்ச் செப்பேட்டுக் குறிப்பு
இ) மண்டகப்பட்டுக் கல்வெட்டு ஈ) சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு
**[விடை: ஈ) சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு]**

**16. வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்படாத இலக்கியத்தைக் கண்டறிக.**

அ) சீவக சிந்தாமணி ஆ) கம்பராமாயணம்
இ) சிலப்பதிகாரம் ஈ) வில்லிபாரதம் **[விடை: இ) சிலப்பதிகாரம்]**

**17. வடமொழிக் கதையைத் தழுவி எழுதப்பட்ட இலக்கியத்தைக் கண்டறிக.**

அ) பெருங்கதை ஆ) முக்கூடற்பள்ளு
இ) கலிங்கத்துப் பரணி ஈ) மணிமேகலை **[விடை: அ) பெருங்கதை]**

**18. பாரதியின் மொழிபெயர்ப்புகளைப் பொருத்திக் காட்டுக.**

i) பொருட்காட்சி - 1. Strike
ii) இருப்புப் பாதை - 2. Revolution
iii) புரட்சி - 3. East Indian Railways
iv) வேலை நிறுத்தம் - 4. Exhibition

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2
இ) 2, 1, 4, 3 ஈ) 2, 4, 1, 3 **[விடை: அ) 4, 3, 2, 1]**

இயல் 5

www.tnpscjob.com

**19. ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகம் ஆன __________ அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்டவர்.**

அ) வேர்ட்ஸ் வொர்த் ஆ) ஷேக்ஸ்பியர்
இ) லாங்பெல்லோ ஈ) ஜி.யு. போப் **[விடை: ஆ) ஷேக்ஸ்பியர்]**

**20. __________ ஆம் நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் தமிழில் ஆக்கப்பட்டன.**

அ) 16 ஆ) 17
இ) 18 ஈ) 19 **[விடை: இ) 18]**

**21. மொழிபெயர்ப்பின் மூலம் பெற்றிருக்கக்கூடிய கொள்கை __________.**

அ) நடப்பியல் ஆ) தத்துவவியல்
இ) இலக்கியத் திறனாய்வு ஈ) திறனாய்வு **[விடை: இ) இலக்கியத் திறனாய்வு]**

**22. 1942 ஆம் ஆண்டு ஹஜிராபாக் மத்திய சிறையிலிருந்த போது 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலை இந்தி மொழியில் எழுதியவர் __________.**

அ) ராகுல் சாங்கிருத்யாயன் ஆ) சசிதேவ்
இ) கணமுத்தையா ஈ) வெ. ஸ்ரீராம் **[விடை: அ) ராகுல் சாங்கிருத்யாயன்]**

**23. 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலைக் கணமுத்தையா தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட ஆண்டு __________.**

அ) 1942 ஆ) 1945
இ) 1949 ஈ) 1952 **[விடை: இ) 1949]**

**24. 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூல் மொழிபெயர்க்கப்பட்ட ஆண்டும், மொழி பெயர்த்தவர்களையும் பொருத்திக்காட்டுக.**

i) கணமுத்தையா - 1. 1949
ii) டாக்டர் என். ஸ்ரீதர் - 2. 2016
iii) முத்து மீனாட்சி - 3. 2016
iv) யூமாவாசுகி - 4. 2018

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1
இ) 4, 3, 2, 1 ஈ) 4, 3, 1, 2 **[விடை: அ) 1, 2, 3, 4]**

**25. வடம் (கயிறு), ஒட்டகம் என்ற இருபொருளுக்குரியச் சொல் __________**

அ) Camel ஆ) Cow
இ) Horse ஈ) Rope **[விடை: அ) Camel]**

**26. ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து __________ நூல்கள் வரை மொழி பெயர்க்கப் படுகின்றன.**

அ) 1000 ஆ) 2000
இ) 4000 ஈ) 5000 **[விடை: ஈ) 5000]**

**27. தமிழ் நூல்கள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்படுவதில் முதலிடத்தில் __________ இரண்டாமிடத்தில் __________ இடம் வகிக்கின்றன.**

அ) ஆங்கிலம், மலையாளம் ஆ) மலையாளம், ஆங்கிலம்
இ) தெலுங்கு, கன்னடம் ஈ) இந்தி, வடமொழி **[விடை: அ) ஆங்கிலம், மலையாளம்]**

**28. மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி __________ ஏற்படுகிறது.**

அ) மொழிவளம் ஆ) மொழி வளமிழப்பு
இ) மொழி சிதைவு ஈ) மொழி மாற்றம் **[விடை: அ) மொழிவளம்]**



www.tnpscjob.com

29. **கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் __________ என்று குறிப்பிடுவார்கள்.**

அ) பயன்கலை ஆ) நிகழ்கலை
இ) கவின்கலை ஈ) ஆயக்கலை **[விடை: அ) பயன்கலை]**

30. **__________ பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கை அத்தகைய பணிகளில் ஈடுபட வேண்டும்.**

அ) கொலம்பியா ஆ) ஆக்ஸ்போர்டு
இ) ஹார்வர்ட் ஈ) சென்னை **[விடை: இ) ஹார்வர்ட்]**

31. **"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" - என்று பாடியவர்.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன் **[விடை: அ) பாரதியார்]**

32. **"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும் வகை செய்தல் வேண்டும்" - என்று பாடியவர்?**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வாணிதாசன் ஈ) அப்துல் ரகுமான் **[விடை: அ) பாரதியார்]**

33. **பிரான்சு தேசிய நூற்கூடத்தில் ஏறக்குறைய __________ பழைய தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.**

அ) நூறு ஆ) ஆயிரம்
இ) மூவாயிரம் ஈ) பதினாறாயிரம் **[விடை: ஆ) ஆயிரம்]**

34. **'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்**
**- பாரதியாரின் இக்கூற்று உணர்த்தும் கருத்து?**

அ) பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும்.
ஆ) பலகலைகள் தமிழில் புதிதாகத் தோன்ற வேண்டும்.
இ) உலகெங்கும் காணப்படும் செல்வங்கள் தமிழகத்தில் வந்து சேர்தல் வேண்டும்.
ஈ) கலைச் செல்வங்களை உலகம் முழுவதும் பயணம் செய்து கண்டுகளிக்க வேண்டும்.

**[விடை: இ) உலகெங்கும் காணப்படும் செல்வங்கள் தமிழகத்தில் வந்து சேர்தல் வேண்டும்.]**



## குறுவினா

1. **மொழிபெயர்ப்பு குறித்து மணவை முஸ்தபா கூறுவது யாது?**

ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை, வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்கிறார் மணவை முஸ்தபா.

2. **மொழிபெயர்ப்பின் இன்றியமையாமை யாது?**

ஒரு மொழி, வளம் பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாதது.

3. **மொழிபெயர்ப்பு குறித்து மு.கு ஜகந்நாதர் குறிப்பிடுவது யாது?**

உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பு ஒரு காரணமாகும் என்று மு.கு. ஜகந்நாதர் குறிப்பிடுகிறார்.

4. **மொழிபெயர்ப்பு பற்றிக் கூறிய இலக்கண நூல் எது?**

தொல்காப்பியர் மரபியலில் மொழிபெயர்த்தல் என்ற தொடரைக் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் மொழிபெயர்ப்பு பற்றிக் கூறிய இலக்கண நூல் தொல்காப்பியம் என்பதை உணர முடிகிறது.

www.tnpscjob.com

**5. சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை நிறுவுக.**

'மாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர் செப்பேடு குறிப்பின் மூலம் சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டு உள்ளது என்பதை உணர முடிகிறது.

**6. வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள் யாவை?**

வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள். பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலியவை ஆகும்.

**7. பிறமொழிக் கருத்துகள் சங்க காலத்திலேயே தமிழ்ப்படுத்தப்பட்டன என்பதை விளக்குக.**

வடமொழியில் வழங்கிவந்த இராமாயண மகாபாரத செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்று இருப்பதைக் காணும்போது பிறமொழிக் கருத்துகள் சங்க காலத்திலேயே தமிழ்ப்படுத்தப் பட்டன என்பதை உணர முடிகிறது.

**8. மொழிபெயர்ப்பு முயற்சியை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை?**

சாகித்திய அகாதமி, தேசிய புத்தக நிறுவனம், தென்னிந்திய புத்தக நிறுவனம் ஆகியவை மொழிபெயர்ப்பு முயற்சி மேற்கொண்ட நிறுவனங்கள் ஆகும்.

**9. இந்திய அரசு மக்களிடையே மொழிபெயர்ப்பை எதற்குப் பயன்படுத்தியது?**

மக்களிடையே தேசிய உணர்வை ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் மொழிபெயர்ப்பை இந்திய அரசு கருவியாக பயன்படுத்தியது.

**10. அனைத்துலக அறிவையும் எளிதில் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?**

மொழிபெயர்ப்பைக் கல்வியாகவும் அதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதில் பெறலாம்.

**11. பிறநாட்டுத் தூதரகங்கள் தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்க முயற்சிப்பதன் நோக்கம் யாது?**

பிறநாட்டுத் தூதரகங்கள் தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, கலை போன்றவற்றை மக்களிடம் அறிமுகப்படுத்தும் நோக்கத்துடனே தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றன.

**12. பிறநாட்டு மொழிகள் எங்கு கற்பிக்கப்படுகிறது?**

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் பிறநாட்டு மொழிகளைக் கற்கலாம். சில தனியார் நிறுவனங்களும் பிற நாட்டு மொழிகளைக் கற்பிக்கின்றன.

**13. மொழிபெயர்ப்பு எதற்கு உதவுகிறது?**

பிற மொழி இலக்கியங்களை அறிந்து கொள்ளவும் அவை போன்ற புதிய படைப்புகளை உருவாக்கவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

**14. மொழி வேலியை மொழிபெயர்ப்பு அகற்றுகிறது என்பதை விளக்குக.**

கலைச் சிறப்புடையதாக இருக்கின்ற இலக்கியங்கள் அனைவரது அனுபவமாக மாறும்போது பொதுநிலை பெறுகிறது. அத்தகைய பொதுநிலை பெற்ற இலக்கியத்தை மொழிவேலி சிறையிடுகிறது. மொழியை வெளியே அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது.

**15. ஜெர்மன் யாரை தன் நாட்டு படைப்பாளியாகக் கொண்டாடுகிறது? ஏன்?**

ஷேக்ஸ்பியர்.

**காரணம்:**

ஷேக்ஸ்பியர் தாம் எழுதிய நூலை ஜெர்மன் மொழிபெயர்ப்பு செய்த காரணத்தால் ஜெர்மன் தன் நாட்டுப் படைப்பாளியாகக் கொண்டாடுகிறது.



www.tnpscjob.com

**16. ஆங்கிலேயர் வருகைக்குப்பின் தமிழ் மொழியில் அறிமுகமான பிறமொழி நூல்கள் யாவை?**

ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும் ஆங்கிலம் வழியாக பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின. இவற்றில் தரமான நூல்கள் குறைவே.

**17. மொழிபெயர்ப்பால் திருக்குறள் அடைந்த பெருமை யாது?**

தமிழ் மொழிக்குரிய நூலாகிய திருக்குறள் உலகில் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதன் காரணமாக உலகப் பொதுமறையாக உயர்ந்தது.

**18. மொழிபெயர்ப்பின் தோற்றம் குறித்து எழுதுக.**

எப்பொழுது உலகத்தில் நான்கைந்து மொழிகள் உருவாயினவோ அப்பொழுதே மொழிபெயர்ப்பு தொடங்கியது.

**19. மொழிபெயர்ப்பு வாயிலாக சர்வதேசத் தன்மை பெறும் முறைகள் யாவை?**

கருத்துப் பரிமாற்றம், தகவல் பகிர்வு, அறநூல் அறிதல், இலக்கியம், தத்துவம் என்பன மொழிபெயர்ப்பு வாயிலாகவே சர்வதேசத் தன்மை பெறுகின்றன.

**20. தன் நூலை தானே மொழிபெயர்த்தவர் யார்? அதனால் அவருக்கு கிடைத்த சிறப்பு யாது?**

இரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அவர் மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.

**21. மொழிபெயர்க்கப்படாமையால் உரிய ஏற்பு கிடைக்காத நூல் எது?**

மகாகவி பாரதியின் கவிதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தால் உலகளவில் உயரிய விருதுகளும் ஏற்பும் கிடைத்திருக்கும்.

**22. ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி எதன் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது?**

ஒரு நாடு எவ்வளவு மின்னாற்றலைப் பயன்படுத்துகிறது என்பதைப் பொறுத்தே அந்த நாட்டின் தொழில் வளர்ச்சியை மதிப்பிடுகிறார்கள்.

**23. ஒரு நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியையும் அறிவையும் மதிப்பிடுவது எது?**

ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள்.

**24. இப்பொழுது நேரடியாக மொழிபெயர்க்கப்படும் நூல்கள் யாவை?**

பிரெஞ்சு, ஜெர்மன், ஆப்பிரிக்கா, லத்தீன், அமெரிக்கா முதலான நாடுகளின் நூல்கள் நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டு கிடைக்க தொடங்கியிருப்பது நல்ல பயனைத் தரும் என எதிர்பார்க்கலாம்.

**25. இலக்கியத் திறனாய்வு கொள்கை பற்றி எழுதுக.**

மொழிபெயர்ப்பின் மூலம்தான் நாம் இலக்கியத்திறனாய்வு கொள்கைகளைப் பெற்று இருக்கிறோம். இன்றுள்ள திறனாய்வு குறைகளை எல்லாம் நாம் ஆங்கிலத்தின் வழியாகவே பெற்றிருக்கிறோம்.

**26. மொழிபெயர்ப்பு எவ்வாறு அமைய வேண்டும்?**

மொழிபெயர்ப்புகள் கழிவின்றி சிதறலின்றி மூலமொழியின் கருத்துகளை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

**27. Camel என்பதன் மொழிபெயர்ப்பை விளக்குக.**

- Camel என்பதற்கு வடம், ஒட்டகம் என்ற இரு பெயர்கள் உண்டு.
- "ஊசி காதில் வடம் நுழையாது" என்ற வேற்றுமொழித் தொடரை "ஊசி காதில் ஒட்டகம் நுழையாது" எனத் தவறுதலாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனவே மொழிபெயர்க்கும் போது கருத்தும் பொருளும் மாறாமல் சரியாக மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

இயல் 5

## சிறுவினா

1. **மொழிபெயர்ப்பு பற்றி அறிஞர்கள் கூறும் கருத்து யாது?**

**மணவை முஸ்தபா :**

'ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்கிறார். மு.கு. ஜகந்நாதர்.

'ஒரு மொழி வளம் பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும் உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்' என்கிறார்.

2. **மொழிபெயர்ப்பு சரியாக அமையாததால் காலத்திற்கும் அழிவு தரும் கலங்கம் நேர்ந்தது விவரி.**

உலகப் போரின்போது அமெரிக்கா சரணடையாவிட்டால் குண்டு வீசப்படும் என்ற செய்தியை ஜப்பானுக்கு அனுப்பியதாகவும் அதற்கு ஜப்பான், 'மொகு சாஸ்ட்டு' என்று விடை அனுப்பியதாகவும் கூறுவர். அந்தத் தொடரின் பொருள் தெரியாமையால் அமெரிக்கா, ஹிரோஷிமாவில் குண்டு வீசியது என்று சொல்கிறார்கள். அந்தத் தொடருக்கு 'விடைதர அவகாசம் வேண்டும்' என்பதாம். ஆனால் அதற்கு அமெரிக்கர்கள் 'மறுக்கிறோம்' என்று பொருள் கொண்டதாகவும் கூறுவர். அதனால்தான் அழிவு தரும் களங்கம் நேர்ந்தது; மொழிபெயர்ப்புச் சரியாக அமைந்து இருந்தால் பேரழிவு தடுக்கப்பட்டிருக்கும்.

3. **இடம்பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதைச் சான்றுடன் விவரிக்க.**

Tele என்பது தொலை என்பதைக் குறிக்கிறது. ஆகவே Telegraph, Television, Telephone, Telescope, Telemetry முதலிய சொற்கள் மொழிபெயர்க்கப்படுகிற போது தொலைவரி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைநோக்கி, தொலை அளவியல் என்றவாறு முன்ஒட்டுகளுடன் மொழிபெயர்க்கப்பட்டன. இதற்கு மாறாக Transcribe, Transfer, Transform, Transact ஆகியவற்றை மொழிபெயர்க்கும்போது படியெடுத்தல், மாறுதல், உருமாற்றுதல், செயல்படுத்துதல் என்றவாறு மொழிபெயர்க்கப்படுகின்றன. இங்கு Trans என்ற முன்ஒட்டை வைத்து மொழிபெயர்க்கவில்லை. எனவே இடம் பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 105*

1. **தாகூரின் கீதாஞ்சலி தமிழ்மொழிபெயர்ப்புப் பாடல் ஒன்றையும் கலீல் கிப்ரானின் கவிதை ஒன்றின் மொழிபெயர்ப்பையும் நூலகத்தில் படித்து எழுதி வருக.**

**தாகூரின் கீதாஞ்சலி தமிழ்மொழிபெயர்ப்புப் பாடல்**

'நான் எந்தப்பாடலைப் பாடுவதற்காக இங்கு வந்தேனோ
இது இன்றுவரை பாடப்படாமலேயே உள்ளது
என் இசைக்கருவிகளைச் சரிசெய்வதிலேயே
என் நாட்களைக் கழித்துவிட்டேன்

உண்மையில் நேரம் வரவில்லை
வார்த்தைகள் பொருத்தப்படவில்லை
ஆசையினால் வரும் வலி ஒன்றே என் இதயத்தில் உள்ளது
பூமலரவில்லை காற்று பெருமூச்சுவிடுகிறது

நான் அவனது முகத்தைப் பார்த்ததில்லை
அவனது குரலைக் கவனித்தது இல்லை
என் வீட்டிற்கு முன்னாள் உள்ள சாலையில் இருந்து
அவனது மெல்லிய காலடி ஓசையை மட்டும் கேட்டிருக்கிறேன்


www.tnpscjob.com

**கலீல் கிப்ரான் கவிதைகள் : மொழிபெயர்ப்பு**

'நானொரு வார்த்தை சொல்ல
வந்தேன்!
நானதைச் சொல்ல வேண்டும்
இப்போது!
மரணம் என்னைத் தடுத்தால்
நாளைக்கு
உரைக்கப்படும் அது!
ஏனெனில்
நீடிக்கும் வரலாற்று நூலில்
வருங்காலம்
ஒருபோதும்
புறக்கணிப்ப தில்லை
ஒரு ரகசியத்தை'

**2. மொழிபெயர்ப்புச் சிறுகதை ஒன்றைப் படித்து அதன் கதைச்சுருக்கத்தையும் உங்கள் கருத்துகளையும் வகுப்பறையில் கூறுக.**

| | |
|---|---|
| **உருது மொழிச் சிறுகதை** | கர்வத்தின் விலை |
| **ஆசிரியர்** | சிராஜ் அன்வர் |
| **மொழிபெயர்த்தவர்** | வல்லிக்கண்ணன் |

சிப்பிப் புழு ஒன்றின் கதை இது.

சிப்பிப் புழு உலகில் தானே அதி முக்கியமான ஜீவனாக எண்ணியது. பட்டுப் புழுவும் பயன் உள்ளதே ஆனால் பட்டு முத்துக்களைப் போல் அதிக விலை பெற்றுத் தருவது இல்லை. எனவே தன்னை உயர்வாக எண்ணியது சிப்பிப்புழு.

ஒரு நாள் கடலில் பெரும்புயல் வீசியது. சிப்பிப் புழு தன் கூட்டை மூடிக் கொண்டு, பாதுகாப்புக்காகத் தரைக்குப் போகக் கூடாது என்று எண்ணி கடலுக்குள் இருந்தது. ஆனால் இந்த அலை சிப்பிப்புழுவை விட்டு வைக்கவில்லை. அதனைத் தூக்கிக் கடலில் வாரிப் போட்டது. புழு மெதுவாக சிப்பியைத் திறந்து வெளியில் மெதுவாக எட்டிப் பார்த்தது. அதற்குள் மற்றொரு அலை வந்து அதனை மணலில் தூக்கிப் போட்டது. கடலுக்குள் திரும்பிப் போக வழியில்லாமல் அங்கேயே கிடந்தது. அது மிகவும் கோபம் அடைந்தது.

காகம் ஒன்று சிப்பியிடம் வெளியே வா என்றது; ஆனால் சிப்பி புழு, அருவருப்பான முட்டாளான உன்னிடம் பேச முடியாது என்றது. காகம் எவ்வளவு சொல்லியும் சிப்பி புழு வெளிவரவில்லை. மாறாக காகத்தைக் கேலி செய்து கொண்டே இருந்தது. நான் முத்துகளை உண்டாக்குவதால் தான் கடலுக்குப் பெருமை என்று கர்வமாகச் சிப்பி புழு கூறியது. 'முத்து செய்யும் பெரிய நபரைப் பார்க்கின்றேன்' வெளியே வா என்றது காகம். ஆனால் முடிந்தால் நீ பெரிய புத்திசாலி என்றால் என் சிப்பியை நீயே திறந்து கொள் என்றது புழு.

நல்லது நீயே சொல்லி விட்டாய் என்று சொல்லிக் காகம் சிப்பியைத் தன் அலகில் தூக்கி மேலே பறந்து போய்ப் பாறைகள் நடுவே போட்டது. சிப்பி தூள் தூளானது. காகம் சிப்பியைத் தன் அலகால் கொத்தி விழுங்கியது. பிறகு காகம் முத்தைப் பார்த்தது. முத்து அதனிடம் இருந்து விலகி, சாணக்குவியலில் விழுந்தது. காகம் உயரப் பறந்து மகிழ்வுடன் கத்திச் சென்றது.



www.tnpscjob.com

இயல் 5 கல்வி

கவிதைப் பேழை

# நீதி வெண்பா

– கா.ப. செய்குதம்பிப் பாவலர்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. அருந்துணை என்பதைப் பிரித்தால் ___________.

அ) அருமை + துணை ஆ) அரு + துணை

இ) அருமை + இணை ஈ) அரு + இணை **[விடை: அ) அருமை + துணை]**

2. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை"
– என்ற இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல்

இ) கல்வி ஈ) இலக்கியம் **[விடை: இ) கல்வி]**

### குறுவினா

1. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

கற்போம்! கற்போம்!
அருளைப் பெருக்க கற்போம்!

கற்போம்! கற்போம்!
அறிவினைப் பெற கற்போம்!

கற்போம்! கற்போம்!
மயக்கம் விலக்க கற்போம்!

கற்போம்! கற்போம்!
உயிருக்குத் துணையாக கல்வியைக் கற்போம்!

## கூடுதல் வினாக்கள்

### இலக்கணக் குறிப்பு.

| | | |
|---|---|---|
| **பெருக்கி** | - | வினையெச்சம் |
| **திருத்தி** | - | வினையெச்சம் |
| **அகற்றி** | - | வினையெச்சம் |
| **அருந்துணை** | - | பண்புத்தொகை |
| **போற்று** | - | வினையெச்சம் |



www.tnpscjob.com

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| | |
|---|---|
| **பெருக்கி - பெருக்கு + இ** | **திருத்தி - திருத்து + இ** |
| பெருக்கு - பகுதி | திருத்து - பகுதி |
| இ - வினையெச்ச விகுதி | இ - வினையெச்ச விகுதி |

## பலவுள் தெரிக

1. **'அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி' - இவ்வடியில் பயின்று வரும் தொடை நயம் யாது?**
   அ) எதுகை ஆ) மோனை
   இ) இயைபு ஈ) முரண் **[விடை: ஆ) மோனை]**

2. **'கற்றவர் வழி அரசு செல்லும்' என்று கூறும் இலக்கியம் ________.**
   அ) காப்பிய இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம்
   இ) சங்க இலக்கியம் ஈ) நீதி இலக்கியம் **[விடை: இ) சங்க இலக்கியம்]**

3. **'செய்கு தம்பிப் பாவலர்' இவ்வாறு அழைக்கப்படுகிறார் ________.**
   அ) சதாவதானி ஆ) தசாவதானி
   இ) மொழி ஞாயிறு ஈ) கவிமணி **[விடை: அ) சதாவதானி]**

4. **'ஊறும் நீர்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும்' என்று கூறியவர் யார்?**
   அ) ஔவையார் ஆ) கபிலர்
   இ) திருவள்ளுவர் ஈ) செய்குதம்பிப் பாவலர் **[விடை: இ) திருவள்ளுவர்]**

5. **செய்குதம்பிப் பாவலர் சிறந்து விளங்கிய கலை ________.**
   அ) ஓவியம் ஆ) சதாவதானம்
   இ) நாட்டியம் ஈ) சிற்பம் **[விடை: ஆ) சதாவதானம்]**

6. **செய்குதம்பிப் பாவலரின் மாவட்டம் ________ வட்டம் ________.**
   அ) கன்னியாகுமரி, இடலாக்குடி ஆ) தஞ்சாவூர், படைத்தலைவன்குடி
   இ) கடலூர், மஞ்சக்குப்பம் ஈ) சென்னை, மயிலாப்பூர்
   **[விடை: அ) கன்னியாகுமரி, இடலாக்குடி]**

7. **செய்குதம்பிப் பாவலர் ________ வயதிலேயே செய்யுள் இயற்றும் திறன் பெற்றவர்.**
   அ) பத்து ஆ) பதினைந்து
   இ) பதினெட்டு ஈ) இருபது **[விடை: ஆ) பதினைந்து]**

8. **சதாவதானி என்ற பாராட்டப் பெற்றவர் ________.**
   அ) உமறுப்புலவர் ஆ) பனு அகமது மரைக்காயர்
   இ) செய்குதம்பிப் பாவலர் ஈ) படிக்காத புலவர் **[விடை: இ) செய்குதம்பிப் பாவலர்]**

9. **சதாவதானி என்பது ________.**
   அ) நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டுவது
   ஆ) ஆயிரம் யானைகளைப் போரில் கொல்வது
   இ) நூறு மலர்களை ஒரே இடத்தில் குவிப்பது
   ஈ) ஆயிரம் பேருக்கு உணவிடுவது
   **[விடை: அ) நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டுவது]**



www.tnpscjob.com

**10. செய்குதம்பிப்பாவலர் சதாவதானி என்று பாராட்டுப் பெற்ற இடம் __________ நாள் __________.**

அ) சென்னை விக்டோரியா அரங்கம், 1907 மார்ச் 10

ஆ) சென்னை தீவுத் திடல், 1909 மார்ச் 8

இ) தஞ்சாவூர் திலகர் திடல், 1908 பிப்ரவரி 8

ஈ) திருச்சி அண்ணா மைதானம், 1906 மார்ச் 6

**[விடை: அ) சென்னை விக்டோரியா அரங்கம், 1907 மார்ச் 10]**

**11. செய்குதம்பிப் பாவலரின் நினைவைப் போற்றும் வகையில் மணிமண்டபமும் பள்ளியும் அமைந்துள்ள இடம் __________.**

அ) கன்னியாகுமரி ஆ) இடலாக்குடி

இ) சென்னை ஈ) மயிலாப்பூர் **[விடை: ஆ) இடலாக்குடி]**

**12. 'சதம்' என்றால் __________ என்று பொருள்.**

அ) பத்து ஆ) நூறு

இ) ஆயிரம் ஈ) இலட்சம் **[விடை: ஆ) நூறு]**

**13. தோண்டும் அளவு நீர்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும் என்று கூறுவது __________.**

அ) நாலடியார் ஆ) திருக்குறள்

இ) ஏலாதி ஈ) திரிகடுகம் **[விடை: ஆ) திருக்குறள்]**

## குறுவினா

**1. ஏன் கல்வியைப் போற்றிக் காக்க வேண்டும் எனச் செய்குதம்பிப் பாவலர் குறிப்பிடுகிறார்?**

அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே, அதைப் போற்றிக் கற்க வேண்டும் எனச் செய்குதம்பிப் பாவலர் குறிப்பிடுகிறார்.

**2. சதாவதானம் குறிப்பு வரைக.**

'சதம்' என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண்ணறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம் ஆகும்.

**3. செய்குதம்பிப் பாவலர் ஏன் சதாவதானி என்று போற்றப்படுகிறார்?**

செய்குதம்பியார் 1907 ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் நாள் சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி 'சதாவதானி' என்று பாராட்டப் பெற்றார். அன்று முதல் 'சதாவதானி செய்கு தம்பிப் பாவலர்' என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

**4. செய்குதம்பிப் பாவலர் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | செய்குதம்பிப் பாவலர் |
| காலம் | : | 1874 - 1950 |
| ஊர் | : | கன்னியாகுமரி - இடலாக்குடி |
| சிறப்பு | : | 15 வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றல், 1907இல் சதாவதானி பட்டம் பெற்றார். |



www.tnpscjob.com

## கற்பவை கற்றபின்

பக்கம்: 106

**1. எதிர்காலத்தில் நீங்கள் பயில விரும்பும் கல்வி குறித்து வகுப்பறையில் கலந்துரையாடிக் குறிப்புரை உருவாக்குக.**

**ஆசிரியர்** : கலை, நீ வருங்காலத்தில் என்னக் கல்வி பெற விரும்புகிறாய்?

**கலை** : அம்மா, நான் இளங்கலைத் தமிழ் படிக்க விரும்புகின்றேன். ஏனென்றால், உலகமே போற்றும் செந்தமிழ்த்தாயின் பெருமையை நான் அறிந்துகொள்ளவே கற்கின்றேன்.

**ஆசிரியர்** : நன்று. லில்லி நீ என்ன கற்க விரும்புகிறாய்?

**லில்லி** : அம்மா, நான் மருத்துவம் படிக்க விரும்புகின்றேன். ஏனென்றால், ஏழைகளுக்கு இலவசமாக உயர் மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக.

**ஆசிரியர்** : நல்லது, நல்லது. சமீனா நீ என்ன கற்க விரும்புகிறாய்?

**சமீனா** : அம்மா, நான் சட்டம் படிக்க விரும்புகின்றேன். ஏனென்றால், ஏழைகளுக்கு இலவசமாக சட்டஉதவி செய்வதற்காக.

**ஆசிரியர்** : ஓ! அப்படியா!

**செல்வி** : அம்மா, நான் வரலாறு படிக்க விரும்புகின்றேன். ஏனென்றால், பலவகையில் மறைந்துள்ள நம் வரலாற்றை வெளிக்கொண்டு வருவதற்காக.

**ஆசிரியர்** : நல்லது. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் படிப்பதோடு மட்டுமல்லாமல் நம்மைச் சுற்றியுள்ள சமூகத்தைப் படிக்க வைக்க வேண்டும்.



www.tnpscjob.com

இயல் 5 கல்வி

கவிதைப் பேழை

# திருவிளையாடற் புராணம்

- பரஞ்சோதி முனிவர்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ________ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ________.

அ) அமைச்சர், மன்னன்  ஆ) அமைச்சர், இறைவன்
இ) இறைவன், மன்னன்  ஈ) மன்னன், இறைவன்  **[விடை: ஈ) மன்னன், இறைவன்]**

### குறுவினா

1. **“கழிந்த பெரும்கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால்
பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்”**

**- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்?
காதல் மிகு கேண்மையினான் யார்?**

கழிந்த பெரும் கேள்வியினான் (மிகுந்த கல்வியறிவு உடையவர்) - குலேசபாண்டியன்.
காதல்மிகு கேண்மையினான் (கபிலரிடம் நட்பு கொண்டவர்) - இடைக்காடனார்.

2. **அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

| | | |
|---|---|---|
| **அமர்ந்தான்** | - | **அமர் + த் (ந்) + த் + ஆன்** |
| **அமர்** | - | பகுதி |
| **த்** | - | சந்தி, ‘ந்’ ஆனது விகாரம் |
| **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **ஆன்** | - | ஆண்பால் வினைமுற்று விகுதி |

### சிறுவினா

1. **மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.**

- குலேச பாண்டியன் தமிழ்ப் புலமை வாய்ந்தவன்.
- அவன் அவையில் புலவர் இடைக்காடனார் பாடிய பாடலை மன்னன் பொருட்படுத்தாமல் அவமதித்தான்.
- இடைக்காடனார் கடம்பவனத்து இறைவனிடம் முறையிட்டார்.
- இறைவன் கடம்பவனம் கோயிலை விட்டு நீங்கி வைகை ஆற்றின் தெற்கே கோயில் உருவாக்கி அமர்ந்தார்.
- இதையறிந்த மன்னன் யான் என்ன தவறு செய்தேன்? ஏன் இங்கு அமர்ந்தீர்? என்று வருந்தினான்.
- இறைவன், இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றமே தவிர, வேறு எந்த தவறும் இல்லை என்றார்.

www.tnpscjob.com

- தன் தவறை உணர்ந்த மன்னன் இடைக்காடனாரை அழைத்து மங்கல ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் அமர்த்தி, பணிந்து வணங்கி தம் தவறைப் பொறுத்தருள வேண்டினான்.

## நெடுவினா

1. இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

| குறிப்புச் சட்டம் |
|---|
| மன்னனின் அவையில் இடைக்காடனார் |
| இடைக்காடனாரின் புலமையை அவமதித்தல் |
| இடைக்காடனார் இறைவனிடம் முறையிடுதல் |
| இறைவன் கோவிலை விட்டு வெளியேறுதல் |
| இறைவனிடம் மன்னன் வேண்டுதல் |
| இறைவனின் பதில் |
| பிழையைப் பொறுத்தருள இறைவனிடம் வேண்டுதல் |
| மன்னன் இடைக்காடனாருக்குப் பெருமை செய்தல் |
| மன்னன் புலவரிடம் வேண்டுதல் |

**மன்னனின் அவையில் இடைக்காடனார் :**

வேப்பமாலை அணிந்த குலேச பாண்டியன் மிகுந்த கல்வியறிவு உடையவன். இதைக் கேள்வியுற்ற இடைக்காடனார் குலேசனின் அவைக்குச் சென்று தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.

**இடைக்காடனாரின் புலமையை அவமதித்தல் :**

வேப்பமாலை அணிந்த குலேசபாண்டியன் மிகுந்த கல்வியறிவு உடையவன். தமிழறியும் பெருமான், அடியார்க்கு நல்நிதி போன்றவன், பொருட்செல்வமும் கல்விச் செல்வமும் உடையவன் என்று கேட்டுணர்ந்து தாங்கள் முன் சுவை நிரம்பிய கவிதை பாடினார் இடைக்காடனார். பாண்டியன் சிறிதேனும் பாடலைப் பொருட்படுத்தாமல் புலவரின் புலமையை அவமதித்தான்.

**இடைக்காடனார் இறைவனிடம் முறையிடுதல் :**

இறைவா! பாண்டியன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவான பார்வதியையும், பொருளின் வடிவான உம்மையும் அவமதித்தான் என்று சினத்துடன் இறைவனிடம் கூறினார்.

**இறைவன் கோவிலை விட்டு வெளியேறுதல் :**

இடைக்காடனாரின் வேண்டுகோளை ஏற்று வைகை ஆற்றின் தெற்கே கோயில் அமைத்துக் குடிகொண்டார் இறைவன். உடனே கபிலரும் மகிழ்ந்து இடைக்காடனாரோடு வெளியேறினார்.

**இறைவனிடம் மன்னன் வேண்டுதல் :**

இதையறிந்த மன்னன் இறைவனிடம் என் படைகளால், பகைவரால், கள்வரால், விலங்குகளால் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் ஒழுக்கம் குறைந்தாரோ? தவமும், தானமும் சுருங்கியதோ? இல்லறமும், துறவறமும் தத்தம் வழியில் தவறினவோ? தந்தையே நான் அறியேன் என்றார் குலசேகரபாண்டியன்.

**இறைவனின் பதில் :**

'வயல் சூழ்ந்த கடம்ப வனத்தைவிட்டு ஒருபோதும் நீங்கமாட்டோம்.' 'இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர உன்னிடம் குற்றம் இல்லை' என்றார். 'இடைக்காடன் மீது கொண்ட அன்பினால் இங்கு வந்தோம்' என்றார்.

www.tnpscjob.com

### பிழையைப் பொறுத்தருள இறைவனிடம் வேண்டுதல் :

வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொல் கேட்டான் குலேச பாண்டியன். மகிழ்ந்து, பரம்பொருளே! புண்ணியனே! சிறியவரின் குற்றம் பொறுப்பது பெரியவர்க்குப் பெருமை என்று குற்றத்தைப் பொறுக்க வேண்டினான்.

### மன்னன் இடைக்காடனாருக்குப் பெருமை செய்தல் :

மன்னனின் மாளிகை வாழை, சாமரை இவற்றாலான விதானமும் விளக்கும் உடையது. பூரண கும்பம் மாலை, கொடி இவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது. புலவர்கள் சூழ இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் அமர்த்தினான்.

### மன்னன் புலவரிடம் வேண்டுதல் :

மன்னன் புலவர்களிடம், தான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றான். புலவர்களும், நீர் கூறிய அமுதம் போன்ற சொல்லால் எங்கள் சினம் தணிந்துவிட்டது என்றனர்.

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **கேள்வியினான்** | - | வினையாலணையும் பெயர் |
| **காடனுக்கும் கபிலனுக்கும்** | - | எண்ணும்மை |
| **கழிந்த** | - | பெயரெச்சம் |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

**தணிந்தது - தணி + த் (ந்) + த் + அ + து**

| | | |
|---|---|---|
| **தணி** | - | பகுதி |
| **த்** | - | சந்தி, 'ந்' ஆனது விகாரம் |
| **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **அ** | - | சாரியை |
| **து** | - | படர்க்கை வினைமுற்று விகுதி |

## கூடுதல் வினாக்கள்

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **கற்றோர்** | - | வினையாலணையும் பெயர் |
| **உணர்ந்தகபிலன்** | - | பெயரெச்சம் |
| **தீம்தேன், நல்நிதி, பெருந்தகை** | - | பண்புத்தொகைகள் |
| **ஒழுகுதார்** | - | வினைத்தொகை |
| **மீனவன்** | - | ஆகுபெயர் |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

**தாழ்ந்தான் - தாழ் + த்(ந்) + த் + ஆன்**

| | | |
|---|---|---|
| **தாழ்** | - | பகுதி |
| **த்** | - | சந்தி, 'ந்' ஆனது விகாரம் |
| **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **ஆன்** | - | ஆண்பால் வினைமுற்று விகுதி |



www.tnpscjob.com

## பலவுள் தெரிக

1. **கபிலரின் நண்பர் யார்?**
   அ) பரஞ்சோதி முனிவர் ஆ) இடைக்காடனார்
   இ) குலேச பாண்டியன் ஈ) ஒட்டக்கூத்தர் **[விடை: ஆ) இடைக்காடனார்]**

2. **திருவிளையாடற்புராணத்தின் ஆசிரியர் யார்?**
   அ) சமண முனிவர் ஆ) அகத்தியர் முனிவர்
   இ) பரஞ்சோதி முனிவர் ஈ) இடைக்காடனார் **[விடை: இ) பரஞ்சோதி முனிவர்]**

3. **திருவிளையாடற்புராணம் படலங்களின் எண்ணிக்கை __________.**
   அ) 64 ஆ) 96
   இ) 30 ஈ) 18 **[விடை: அ) 64]**

4. **'தகடூர் எறிந்த பெருஞ்சேரல்' இரும்பொறை யாருக்குக் கவரி வீசினான்?**
   அ) பரஞ்சோதி முனிவர் ஆ) கபிலர்
   இ) இடைக்காடனார் ஈ) மோசிகீரனார் **[விடை: ஈ) மோசிகீரனார்]**

5. **வேப்ப மாலை அணிந்த மன்னன்?**
   அ) சேரன் ஆ) சோழன்
   இ) பாண்டியன் ஈ) பல்லவன் **[விடை: இ) பாண்டியன்]**

6. **மோசிகீரனார் முரசுக் கட்டிலில் கண்ணயரக் காரணம் __________.**
   அ) குளிர்ந்த காற்று வீசியதால் ஆ) நல்ல உறக்கம் வந்ததால்
   இ) களைப்பு மிகுதியால் ஈ) அரசன் இல்லாமையால் **[விடை: இ) களைப்பு மிகுதியால்]**

7. **'மூரித் தீம் தேன் வழிந்து ஒழுகு தாரானைக் கண்டு' என்னும் தொடரில் தாரானை என்பது யாரைக் குறிக்கிறது?**
   அ) சிவபெருமான் ஆ) கபிலர்
   இ) பாண்டியன் ஈ) இடைக்காடனார் **[விடை: இ) பாண்டியன்]**

8. **பரஞ்சோதி முனிவர் பிறந்த ஊர் __________.**
   அ) தஞ்சாவூர் ஆ) திருமறைக்காடு
   இ) திருத்துறைப் பூண்டி ஈ) திருவண்ணாமலை **[விடை: ஆ) திருமறைக்காடு]**

9. **திருவிளையாடற்புராணம் காண்டங்களின் எண்ணிக்கை __________.**
   அ) 3 ஆ) 4
   இ) 6 ஈ) 10 **[விடை: அ) 3]**

10. **இடைக்காடனார் பிணக்குத் தீர்த்த படலம் இடம் பெறும் காண்டம் __________.**
    அ) மதுரைக் காண்டம் ஆ) கூடற் காண்டம்
    இ) திரு ஆலவாய்க் காண்டம் ஈ) யுத்த காண்டம் **[விடை: இ) திரு ஆலவாய்க் காண்டம்]**

11. **இடைக்காடனார் பிணக்குத் தீர்த்த படலம் திருவிளையாடற்புராணத்தில் எத்தனையாவது படலம்?**
    அ) 64 ஆ) 56
    இ) 46 ஈ) 48 **[விடை: ஆ) 56]**

இயல் 5

12. **அரசரும் புலவருக்குக் __________ வீசுவர்.**

அ) கவண் ஆ) கணையாழி

இ) கவரி ஈ) கல் **[விடை: இ) கவரி]**

13. **குலேசபாண்டியன் __________ நாட்டை ஆட்சி புரிந்தான்.**

அ) பாண்டிய ஆ) சேர

இ) சோழ ஈ) பல்லவ **[விடை: அ) பாண்டிய]**

14. **குலேச பாண்டியன் என்னும் மன்னன் __________ புலமையில் சிறந்து விளங்கினான்.**

அ) தமிழ் ஆ) வடமொழி

இ) தெலுங்கு ஈ) கன்னடம் **[விடை: அ) தமிழ்]**

15. **சொல்லின் வடிவாக இறைவனின் இடப்புறம் வீற்றிருப்பவள் __________.**

அ) பார்வதி ஆ) திருமகள்

இ) கலைமகள் ஈ) அலைமகள் **[விடை: அ) பார்வதி]**

16. **சொல்லின் பொருளாக விளங்குவது __________.**

அ) இறைவன் ஆ) இடைக்காடனார்

இ) கபிலர் ஈ) பார்வதி **[விடை: அ) இறைவன்]**

17. **சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்ததாக இறைவனிடம் இடைக்காடனார் __________ கூறிச் சென்றார்.**

அ) அழுகையுடன் ஆ) சினத்துடன்

இ) ஏளனத்துடன் ஈ) உருக்கத்துடன் **[விடை: ஆ) சினத்துடன்]**

18. **இடைக்காடனாரின் சொல் __________ போல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.**

அ) கூரிய அம்பு ஆ) வேற்படை

இ) தீ ஈ) விடமுள் **[விடை: ஆ) வேற்படை]**

19. **__________ ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோவிலை ஆக்கி இறைவன் அங்குச் சென்று இருந்தார்.**

அ) காவிரி ஆ) கங்கை

இ) வைகை ஈ) தாமிரபரணி **[விடை: இ) வைகை]**

20. **திரு ஆலவாய்க் கோவிலை விட்டு வெளியேறிய இறைவன் __________ வடிவத்தை மறைத்து வடக்கே வையை ஆற்றின் தென் பக்கத்தே சென்று இருந்தார்.**

அ) நரசிங்க ஆ) பலராம

இ) இலிங்க ஈ) சர்ப்ப **[விடை: இ) இலிங்க]**

21. **கடம்பவனத்தை விட்டு ஒரு போதும் நீங்க மாட்டோம் என்று கூறியவர் __________.**

அ) குலேச பாண்டியன் ஆ) இறைவன்

இ) இடைக்காடனார் ஈ) கபிலர் **[விடை: ஆ) இறைவன்]**

22. **மன்னன் இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து __________ இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.**

அ) மரகத ஆ) பொன்

இ) தன் ஈ) வைர **[விடை: ஆ) பொன்]**

இயல் 5

23. **கேள்வியினான், காடனுக்கும் கபிலனுக்கும் - இச்சொற்களுக்குரிய இலக்கணக் குறிப்புகளைக் கண்டறிக.**

அ) வினையாலணையும் பெயர், எண்ணும்மை

ஆ) எண்ணும்மை, வினையாலணையும் பெயர்

இ) முற்றெச்சம், உம்மைத் தொகை

ஈ) வினையெச்சம், தொழிற் பெயர் **[விடை: அ) வினையாலணையும் பெயர், எண்ணும்மை]**

24. **'மாசற விசித்த வார்புறு வள்பின்' என்று பாடிய புலவர் __________ பாடப்பட்டவன் __________.**

அ) மோசிகீரனார், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

ஆ) ஔவையார், அதியமான்

இ) பரணர், தலையாளங்கானத்துச் செருதவன்ற பாண்டியன்

ஈ) கபிலர், பாரி

**[விடை: அ) மோசிகீரனார், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை]**

25. **அரண்மனையின் முரசுக் கட்டிலில் தூங்கியவர் __________ கவரி வீசிய மன்னர் __________.**

அ) இடைக்காடனார், குலேச பாண்டியன்

ஆ) மோசிகீரனார், பெருஞ்சேரல் இரும்பொறை

இ) கபிலர், பாரி

ஈ) பரணர், பேகன் **[விடை: ஆ) மோசிகீரனார், பெருஞ்சேரல் இரும்பொறை]**

26. **பரஞ்சோதி முனிவர் __________ நூற்றாண்டைச் சேர்ந்தவர்.**

அ) பத்தாம் ஆ) பதினேழாம்

இ) பதினெட்டாம் ஈ) பதினைந்தாம் **[விடை: ஆ) பதினேழாம்]**

27. **பரஞ்சோதி முனிவர் __________ பக்தி மிக்கவர்.**

அ) சிவ ஆ) பெருமாள்

இ) முருக ஈ) தேச **[விடை: அ) சிவ]**

28. **திருவிளையாடற் கதைகள் __________ முதற்கொண்டு கூறப்பட்டு வருகிறது.**

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை

இ) சீவகசிந்தாமணி ஈ) தொல்காப்பியம் **[விடை: அ) சிலப்பதிகாரம்]**

## குறுவினா

1. **நும் கவிதைப் பேழைப் பகுதி அமைந்த திருவிளையாடற்புராணப் பாடல் அமைந்த காண்டம் மற்றும் படலம் எது?**

காண்டம்: திரு ஆலவாய்க் காண்டம்

படலம் : இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

2. **"சந்நிதியில் வீழ்ந்து எழுந்து தமிழ் அறியும் பெருமானே" என்று யார் யாரிடம் கூறியது?**

இடைக்காடனார் இறைவனிடம் கூறினார்.

3. **'நின்இடம் பிரியா இமையப் பாவை' - இவ்வடிகளில் சுட்டப்படுபவர் யார்?**

ஈசனின் இடத்தில் வீற்றிருக்கும் பார்வதி தேவியே இவ்வடிகளில் சுட்டப்படுகின்றார்.



www.tnpscjob.com

4. **'சொல் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன்' - பொருளானவன் யார்? இகழ்ந்தவன் யார்?**

1.பொருளானவன் - திருஆலவாய் இறைவன் ஈசன்

2. இகழ்ந்தவன் - குலேச பாண்டியன்

5. **''பிழைத்தனவோ யான் அறியேன் எந்தாய்'' யார் யாரிடம் கூறியது?**

குலேச பாண்டியன் இறைவனிடம் (ஈசன்) கூறினார்.

6. **''யாம் அவனிடத்தில் வைத்த அருளினால் வந்தேம்'' என்று யார் யாரிடம் கூறியது?**

இறைவன் (ஈசன்) குலேச பாண்டியனிடம் கூறினார்.

7. **''யாம் அவனிடத்தில் வைத்த அருளினால் வந்தேம்'' என்று இறைவன் கூறக் காரணம் யாது?**

இடைக்காடனாரின் செய்யுளை குலேச பாண்டியன் இகழ்ந்தான். இறைவன் இடைக்காடனாரின் மீது மிகுந்த அன்பு வைத்திருந்ததனால் இறைவன் கோவிலை விட்டு நீங்கினான்.

8. **''சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமையன்றோ
எண்ணிய பெரியோர்க்கு'' என்று யார் யாரிடம் கூறியது?**

குலேச பாண்டியன் இறைவினடம் (ஈசன்) கூறினார்.

9. **சொல் வடிவாய் நின்றவர் யார்? சொல் பொருளாய் விளங்கியவர் யார்?**

1. சொல் வடிவாய் நின்றவர்: பார்வதி தேவி

2. சொல் பொருளாய் விளங்கியவர்: இறைவன் (ஈசன்)

10. **''சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமையன்றோ
எண்ணிய பெரியோர்க்கு'' - இவ்வடிகளில் அமைந்த முரண் சொற்கள் எவை?**

சிறியோர் - பெரியோர்

11. **''தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது'' என்று யார் யாரிடம் கூறியது?**

புலவர் இடைக்காடனார் குலேச பாண்டியனிடம் கூறினார்.

12. **''பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப்பரவித் தாழ்ந்தவன்'' என்று யார் யாரிடம் கூறியது?**

குலேச பாண்டியன் புலவர் இடைக்காடனாரிடம் கூறினார்.

13. **பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப்பரவித் தாழ்ந்தவன்'' பண்ணிய குற்றம் யாது?**

குலேச பாண்டியன் இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தார். அதனால் இறைவன் கோயிலை விட்டு நீங்கினார்.

14. **சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன் - சொல்லேருழவன் யார்? வில்லேருழவன் யார்?**

1. சொல்லேருழவன் (புலவன்) - மோசிகீரனார்

2. வில்லேருழவன் (மன்னன்) - தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

## சிறுவினா

**1. "பிழைத்தனவோ யான் அறியேன் எந்தாய்" என்று பாண்டியன் இறைவனிடம் வினவியதை எழுதுக.**

- இறைவனே, என்னால், என்படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா?
- வேதங்களை பயின்றவர் நல்லொழுக்கத்தில் தவறினாரா?
- தவமும் தருமமும் சுருங்கியதோ?
- இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ?

– எமது தந்தையே யான் அறியேன் என்று குலேச பாண்டியன் இறைவனிடம் வினவினான்.

**2. "பிழைத்தனவோ யான் அறியேன் எந்தாய்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டல்:**

பெரியபுராணம் திரு ஆலவாய்க் காண்டத்தில், இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தில் குலேச பாண்டியன் இறைவனிடம் வினவினான்.

**பொருள் விளக்கம்:**

இறைவனே, என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? வேதங்களை பயின்றவர் நல்லொழுக்கத்தில் தவறினாரா? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியனே் என்று பாண்டியன் இறைவனிடம் வினவினான்.

**3. "சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமையன்றோ எண்ணிய பெரியோர்க்கு" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டல்:**

பெரியபுராணம் திரு ஆலவாய்க் காண்டத்தில், இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தில் குலேச பாண்டியன் இறைவனிடம் வினவினான்.

**பொருள் விளக்கம்:**

வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொல் கேட்டுப் பாண்டியன், "பார்வதி தேவியை ஒரு பாகத்தில் கொண்ட பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?" என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டினார்.

இயல் 5

## கற்பவை கற்றபின்

பக்கம்: 110

**1. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தை நாடகமாக்கி வகுப்பில் நடித்துக் காட்டுக.**

| | |
|---|---|
| **நாடகம்** | இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் |
| **நாடகமாந்தர்** | இடைக்காடனார் , குலேசபாண்டியன், இறைவன் (சிவன்), கபிலர். |
| **நிகழிடம்** | பாண்டியநாடு |

**இடைக்காடனார்** : மன்னா, வாழ்க! நான் கபிலனின் நண்பன். நான் இயற்றிய பாடலை உங்கள் முன் பாட விரும்புகின்றேன்.

**குலேசபாண்டியன்** : (கர்வத்தோடும்) பாடும். (இடைக்காடனார் பாடலைப் பாடுகின்றார்)

www.tnpscjob.com

**இடைக்காடனார்** : (இறைவனிடம் முறையிடல்) இறைவா! பாண்டியன் என் பாடலைப் பொருட்படுத்தாமல் உம்மையும் பார்வதிதேவியையும் அவமதித்தான்.

**இறைவன்** : கபிலருக்காகவும் இடைக்காடனாருக்காகவும், இந்தக் கோவிலை விட்டுச் செல்கின்றேன். (இறைவன் கோவிலை விட்டு வெளியேறல்)

**குலேசபாண்டியன்** : இறைவனே! என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? வேதங்களைப் பயின்றவர் நல்லொழுக்கத்தில் தவறினாரா? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியேன்.

**இறைவன்** : இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பால் இங்கு வந்தோம்.

**குலேசபாண்டியன்** : பார்வதிதேவியை ஒரு பாகத்தில் கொண்ட பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?என் குற்றத்தைப் பொறுக்க.

(புலவர்களை ஒப்பனை செய்து பொன் இருக்கையில் அமர வைத்தல்)

**குலேசபாண்டியன்** : புலவர்களே என்னை மன்னியும். இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுக்க .

**கபிலர் மற்றும் இடைக்காடனார்** : மன்னா! நீர் கூறிய அமுதம் போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது.



www.tnpscjob.com

இயல் 5 கல்வி

விரிவானம்

# புதிய நம்பிக்கை

- கமலாலயன்

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

1. **கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே - என்கிறது வெற்றிவேற்கை.**
**மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| இளமை வாழ்க்கை |
| மேரிக்கு ஏற்பட்ட அவமானம் |
| மேரியின் ஏக்கம் |
| தந்தையின் அறிவுரை |
| மேரியின் தன்னம்பிக்கை |
| பட்டமளிப்பு விழா |
| மேற்படிப்பு |
| புதியதோர் பயணம் |
| ஊரே கூடுதல் |
| முடிவுரை |

**முன்னுரை :**

வரலாற்றில் மனிதர்கள் வருகிறார்கள். சிலர் வரலாறாகவே வாழ்கிறார்கள். அந்த வகையில் கல்வி அறிவற்ற, இருட்சமூகத்தில் ஒற்றைச் சுடராய் பிறந்து ஓராயிரம் சுடர்களை ஏற்றி, மேரி மெக்லியோட் பெத்யூன் கதையைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**இளமை வாழ்க்கை :**

மேரி தன் தாய் தந்தையோடு பருத்திக் காட்டில் வேலை செய்யும் கல்வி அறிவற்ற உழைக்கும் குடும்பம். அச்சூழலிலும் மேரி தனக்கென்ற தனி பாதை வகுப்பாள். அது, எதுவாகினும் தான் முதலில் பார்க்க வேண்டும் என ஆசைப்படுவாள்.

**மேரிக்கு ஏற்பட்ட அவமானம்:**

மேரிஒருநாள்தாயுடன்வில்சன்வீட்டிற்குச்செல்கிறாள்.அங்குக்குழந்தைகள்விளையாடுவதைக் கண்டு வியப்புற்றாலும் அவள் கண்கள் அங்கு இருந்த புத்தகத்தின் மீதே சென்றது. ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்க்கின்றபோது வில்சனின் இளைய மகள் புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கி உன்னால் படிக்கமுடியாது என்று கூறினாள். அந்த வார்த்தை அவள் மனதைக் கிழித்தது. உடனே வீட்டை விட்டு வெளியேறினாள்.

www.tnpscjob.com

**மேரியின் ஏக்கம் :**

வில்சனின் வீட்டில் நடந்த அவமானங்களை எண்ணி கண்ணீர் வடித்துத் தன் தந்தையிடம் நான் படிக்க வேண்டும். படித்தால்தான் இச்சமூகம் மதிக்கும் என்று கூறுகிறாள்.

**தந்தையின் அறிவுரை :**

மேரி நாம் பள்ளிச் செல்லமுடியாது. நமக்கென்று தனியாகப் பள்ளிக்கூடம் இல்லை. வெளியூரில் பள்ளியில் வெள்ளைக்காரர்கள் படிக்கும் பள்ளிதான் இருக்கிறது. அதிலும் நம்மைச் சேர்க்கமாட்டார்கள் என்றார்.

**மேரியின் தன்னம்பிக்கை:**

பதினொரு வயது நிரம்பிய மேரி வயல்காட்டிலிருந்து பருத்திமூட்டையைச் சுமந்துகொண்டு வீட்டிற்கு வந்தாள். அப்போது வீட்டில் முன்பின் அறிமுகம் இல்லாத பெண் தன்னை அறிமுகம் செய்துகொண்டு, நீ படிக்க வேண்டும்; உன் வேலைகளை முடித்துக்கொண்டு சீக்கிரம் வரவேண்டும் என்றார். மேரிக்கு நா எழவில்லை, வாயடைத்து நின்று வாசிக்கப் புறப்பட்டாள்; படிக்கத் தொடங்கினாள்.

புதிது புதிதாக கற்றாள். தன் பாதையை மெல்ல மெல்ல உயர்த்தினாள். இறுதி வகுப்பு படித்து, சான்றிதழ் பெற்றாள்.

**பட்டமளிப்பு விழா :**

தோல்வியே வெற்றிக்கு முதல்படி என்பதை உணர்ந்த மேரி, வில்சனின் இளைய மகள் என்னை அவமதிக்கா விட்டால் இந்த ஊக்கம் கிடைத்திருக்காது. அச்சிறுமியின் செயல் எனக்கு நேரிடாவிட்டால் இந்த விருது பெற இயலாது என்று எண்ணி பெருமிதம் அடைந்த மேரிக்கு எழுத படிக்கத் தெரியும் எனப் பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

**மேற்படிப்பு :**

பட்டமளிப்பு விழாவின்போது வில்சன் தோளில் மேரியை அணைத்து ‘நீ எனக்கு என்ன செய்யப் போகிறாய்’ என்றார். “மிஸ் நான் மேலும் படிக்க விரும்புகிறேன்” என்றார். ஆனால் அலைகடலில் அகப்பட்ட கப்பல் கரைசேர இயலாத நிலைபோல் இருந்தாள்.

**புதியதோர் பயணம் :**

மீண்டும் தன் பணியினைப் பருத்திக்காட்டில் தொடங்கினார்கள். அப்போது மிஸ் வில்சன் அங்கு வந்து, வெள்ளைக்காரப் பெண்மணி ஒரு கருப்பின குழந்தையின் படிப்பிற்காக பணம் அனுப்பி இருக்கிறார். அதைப் பெறுவதற்குரிய ஆளாக நீதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாய். நீ மேல்படிப்பிற்காக டவுனுக்குப் போகவேண்டும் தயாராகு என்றார் மேரியிடம்.

**ஊரே கூடுதல் :**

மேரி மேல்படிப்பிற்குச் செல்ல தொடர்வண்டி நிலையத்தில் ஊரே ஒன்று கூடியது. அனைவரும் குட்பை மேரி, குட்பை வெற்றி உண்டாகட்டும் என்று வாழ்த்தி விடை கொடுத்தனர்.

**முடிவுரை:**

சாதாரணப் பெண்ணாகப் பிறந்து சாதனைப் பெண்ணாக மாறியது மேரியின் வாழ்வு.மேலும், சமுதாயத்தின் அறியாமை இருளைப் போக்க தோன்றிய மேரிஜேன்னின் வாழ்வியல் நிகழ்வுகளைப் போல நாமும் அவமானங்களை வெகுமானமாக மாற்ற முயற்சிப்போம்.

**“கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே”**

என்பதனை உணர்வோம்! வெற்றி பெறுவோம்!!

இயல் 5

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'உனக்குப் படிக்கத் தெரியாது' என்று உள்ளத்தில் பெற்ற அடி மேரி மெக்லியோட் பெத்யூன் ________ உருவாக்கிடக் காரணமானது.**
அ) குப்பை கொட்டும் இடத்தில் ஒரு பள்ளியை
ஆ) தெருமுனையில் ஒரு கல்லூரியை
இ) மக்கள் கூடுமிடத்தில் ஒரு சமுதாயக் கூடத்தை
ஈ) கிராமத்தில் ஏழை மாணவர்களுக்கான பள்ளியை
**[விடை: அ) குப்பை கொட்டும் இடத்தில் ஒரு பள்ளியை]**

2. **மேரி மெக்லியோட் பெத்யூன் குப்பை கொட்டும் இடத்தில் ஒரு பள்ளியை உருவாக்கிட பணம் சேர்த்த விதங்கள் ________.**
i) சமையல் செய்து ii) தோட்டமிட்டு
iii) பொது இடங்களில் பாட்டுப் பாடி iv) பிச்சையெடுத்து
அ) i, ii, iii - சரி ஆ) ii, iii, iv - சரி
இ) நான்கும் சரி ஈ) iii - மட்டும் சரி **[விடை: அ) i, ii, iii - சரி]**

3. **அமெரிக்க கறுப்பினப் பெண்மணி மேரி மெக்லியோட் பெத்யூன் ________ சமூகங்களின் ஒரு குரலாக இருந்தவர்.**
அ) உலகெங்கும் மூலை முடுக்குகளில் உள்ள ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட
ஆ) கைவிடப்பட்ட, நோய்வாய்ப்பட்ட
இ) மறுமணம் மறுக்கப்பட்ட
ஈ) உழைக்கும்
**[விடை: அ) உலகெங்கும் மூலை முடுக்குகளில் உள்ள ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட]**

4. **மேரி மெக்லியோட் பெத்யூன் என்னும் அமெரிக்கக் கல்வியாளரின், வாழ்க்கையை 'உனக்குப் படிக்கத் தெரியாது' என்ற தலைப்பில் நூலாகப் படைத்தவர் ________.**
அ) அகிலன் ஆ) கமலாலயன்
இ) கீதாலயன் ஈ) ஜெயகாந்தன் **[விடை: ஆ) கமலாலயன்]**

5. **கொற்கை என்னும் ஊர் அமைந்துள்ள மாவட்டம் ________.**
அ) திருநெல்வேலி ஆ) மதுரை
இ) தூத்துக்குடி ஈ) குமரி **[விடை: இ) தூத்துக்குடி]**

6. **"கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை" என்று குறிப்பிடும் நூல் ________.**
அ) அகநானூறு ஆ) புறநானூறு
இ) ஐங்குறுநூறு ஈ) நற்றிணை **[விடை: இ) ஐங்குறுநூறு]**

### கற்பவை கற்றபின்

பக்கம்: 116

1. **கல்வி வாய்ப்பற்ற சூழலில் ஒற்றைச் சுடராக வந்து ஒளியேற்றினார் மேரி மெக்லியோட் பெத்யூன், அதுபோலத் தமிழகத்தில் கல்வி வாய்ப்பற்றவர்களின் வாழ்வில் முதற்சுடர் ஏற்றியவர்களுள் யாரேனும் ஒருவர் குறித்த செய்திகளைத் தொகுத்துச் சில படங்களுடன் குறும்புத்தகம் ஒன்றைக் குழுவாக உருவாக்குக.**



www.tnpscjob.com


அயோத்திதாசர்

**இளமை:**

- 20.5.1845ல் கோவை அரசம்பாளையத்தில் பிறந்தார்.
- இயற்பெயர் : காத்தவராயன்
- தந்தை : கந்தசாமி
- தன் ஆசிரியர் மீதுள்ளபற்றின் காரணமாக அவர் பெயராகிய அயோத்திதாசர் என்பதைத் தன் பெயராக மாற்றிக்கொண்டார்.

**கல்விப் பணி:**

தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் அயோத்திதாசர் பிரம்ம ஞான சபை ஆல்காட் தொடர்பால், சென்னையில் முக்கியமான ஐந்து இடங்களில் பஞ்சமர் பள்ளிகள் எனத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசப் பள்ளிகளை நிறுவி சிறந்த கல்வியினை வழங்கினார்.

**சமூகப்பணி:**

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரும்பாடுபட்டவர். தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி வசதியோடு கல்வி உதவித்தொகை கிடைக்கவும் ஏற்பாடு செய்தார். கல்வியில் தேர்ச்சி பெற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு வேலையும் உள்ளாட்சி அமைப்புகளில் வாய்ப்பும் வழங்கச் செய்தார்.

**படைப்புகள்:**

புத்தரது ஆதிவேதம், திருவாசக உரை, ஒருபைசாத் தமிழன் இதழ்.

**2. கல்விக் கண் திறந்தவர்களுக்கிடையில் கைவிடப்பட்ட பெண்களுக்காக உழைத்த தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி பற்றிய ஒரு தொகுப்பேட்டினை உருவாக்கி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

**இளமைப்பருவம்:**
புதுக்கோட்டை திருக்கோகர்ணம் என்ற இடத்தில் 1886ல் பிறந்தார்.
பெற்றோர் :
நாராயணசாமி – சந்திராம்பாள்

**பெண்ணுரிமை முழக்கம்:**
1926ல் அகில இந்திய பெண்கள் மாநாட்டில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் முன்னேற வேண்டும். பெண்களை அடிமைகளாக நடத்தும் வழக்கம் ஒழிய வேண்டும் என்று முழக்கம் செய்தார்.



**சிறப்பு:**
- இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.
- சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டமுதல் பெண்மணி.

**சமூகப் பணி:**
- தேவதாசிமுறை ஒழிப்பு,
- இருதாரத் தடைச்சட்டம்,
- பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம்,
- குழந்தைத் திருமணத் தடைச்சட்டம்.


www.tnpscjob.com

இயல் 5 கல்வி

கற்கண்டு

# வினா, விடை வகைகள், பொருள்கோள்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. ''இங்கு நகரப் பேருந்து நிற்குமா?'' என்று வழிப்போக்கர் கேட்டது __________ வினா. 'அதோ அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது __________ விடை.
   அ) ஐயவினா, வினா எதிர் வினாதல்
   ஆ) அறிவினா, மறைவிடை
   இ) அறியாவினா, சுட்டுவிடை
   ஈ) கொளல் வினா, இனமொழி விடை **[விடை: இ) அறியாவினா, சுட்டுவிடை]**

### குறுவினா

1. **இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? இதோ. இருக்கிறது! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?**

   **மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.**

   **விடை:**

   அ) மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது?
   **- அறியாவினா**

   ஆ) இதோ.... இருக்கிறதே!
   **- சுட்டு விடை**

   இ) சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?
   **- ஐயவினா**

### சிறுவினா

1. **முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
   **இன்மை புகுத்தி விடும்.**

   இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

   **இப்பாடலில் அமைந்துள்ள பொருள்கோள் ஆற்றுநீர்ப் பொருள்கோள்.**

   **பொருள்கோள் இலக்கணம்:**

   பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை ஆற்றுநீரின் போக்கைப் போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைதல் ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

www.tnpscjob.com

**பொருள்கோள் விளக்கம் :**

இப்பாடலில் முயற்சி செல்வத்தைத் தரும்; முயற்சி செய்யாமை வறுமையைத் தரும் என்று பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை நேராகப் பொருள் கொள்ளும் முறையில் அமைந்திருப்பதால் இது ஆற்று நீர்ப்பொருள்கோள் ஆயிற்று.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது ________.**
அ) அறிவினா ஆ) அறியாவினா
இ) ஐயவினா ஈ) ஏவல் வினா **[விடை: ஆ) அறியாவினா]**

2. **பிறருக்குப் பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது ________.**
அ) ஏவல் வினா ஆ) கொளல் வினா
இ) ஐய வினா ஈ) கொடை வினா **[விடை: ஈ) கொடை வினா]**

3. **மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை ________.**
அ) மறைவிடை ஆ) இனமொழிவிடை
இ) நேர்விடை ஈ) ஏவல்விடை **[விடை: ஈ) ஏவல்விடை]**

4. **வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறுவது ________.**
அ) உறுவது கூறல் விடை ஆ) உற்றது உறைத்தல் விடை
இ) இனமொழி விடை ஈ) வினா எதிர் வினாதல் விடை
**[விடை: அ) உறுவது கூறல் விடை]**

5. **உடன்பட்டுக் கூறும் விடை ________.**
அ) சுட்டுவிடை ஆ) மறைவிடை
இ) நேர்விடை ஈ) ஏவல்விடை **[விடை: இ) நேர்விடை]**

6. **வினாவிற்கு வினாவை திரும்பக் கேட்பது ________.**
அ) ஏவல் விடை ஆ) வினா எதிர்வினாதல் விடை
இ) மறைவிடை ஈ) நேர்வினா **[விடை: ஆ) வினா எதிர்வினாதல் விடை]**

7. **மறுத்துக் கூறும் விடை ________.**
அ) சுட்டு விடை ஆ) மறைவிடை
இ) ஏவல்விடை ஈ) நேர் விடை **[விடை: ஆ) மறைவிடை]**

8. **ஆடத்தெரியுமா என்ற வினாவிற்குப் பாடத்தெரியும் என்று கூறுவது ________.**
அ) வினாஎதிர் வினாதல் ஆ) உற்றது உரைத்தல்
இ) உறுவது கூறல் ஈ) இனமொழி விடை **[விடை: ஈ) இனமொழி விடை]**

9. **ஊருக்கு வருவாயா? என்ற வினாவிற்கு வராமல் இருப்பேனா? என்று கூறுவது என்ன விடை?**
அ) வினாஎதிர் வினாதல் விடை
ஆ) உற்றது உரைத்தல் விடை
இ) உறுவது கூறல் விடை
ஈ) இனமொழி விடை **[விடை: அ) வினாஎதிர் வினாதல் விடை]**


www.tnpscjob.com

10. ஆசிரியர் மாணவனிடம் இப்பாடலின் பொருள் யாது?
அ) அறிவினா ஆ) ஐயவினா
இ) அறியாவினா ஈ) கொளல்வினா [விடை: அ) அறிவினா]

11. மாணவன் ஆசிரியரிடம் இப்பாடலின் பொருள் யாது என வினவுவது ________.
அ) அறிவினா ஆ) அறியாவினா
இ) ஐயவினா ஈ) ஏவல்வினா [விடை: ஆ) அறியாவினா]

12. இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?
அ) அறிவினா ஆ) அறியாவினா
இ) ஐயவினா ஈ) ஏவல்வினா [விடை: இ) ஐயவினா]

13. ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கபடுவது ________.
அ) அறிவினா ஆ) அறியாவினா
இ) ஐயவினா ஈ) ஏவல்வினா [விடை: இ) ஐயவினா]

14. வினா ________ வகைப்படும்.
அ) நான்கு ஆ) ஐந்து
இ) ஆறு ஈ) ஏழு [விடை: இ) ஆறு]

15. 'என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா'? என்று கொடுப்பதற்காக வினவுவது ________.
அ) கொளல் வினா ஆ) ஐய வினா
இ) கொடை வினா ஈ) ஏவல் வினா [விடை: இ) கொடை வினா]

16. "வீட்டில் தக்காளி இல்லை, நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்வது
அ) ஐயவினா ஆ) அறியாவினா
இ) கொளல் வினா ஈ) ஏவல் வினா [விடை: ஈ) ஏவல் வினா]

17. விடை ________ வகைப்படும்.
அ) ஆறு ஆ) ஏழு
இ) எட்டு ஈ) ஒன்பது [விடை: இ) எட்டு]

18. வெளிப்படை விடைகளில் பொருந்தாததைக் கண்டறிக.
அ) சுட்டு விடை ஆ) மறை விடை
இ) நேர் விடை ஈ) ஏவல் விடை [விடை: ஈ) ஏவல் விடை]

19. நேரடி விடைகளாக இருக்கும் வெளிப்படை விடைகள் எத்தனை?
அ) மூன்று ஆ) நான்கு
இ) ஐந்து ஈ) ஆறு [விடை: அ) மூன்று]

20. குறிப்பு விடைகளாக இருக்கும் குறிப்பு விடைகள் எத்தனை?
அ) மூன்று ஆ) நான்கு
இ) ஐந்து ஈ) ஆறு [விடை: இ) ஐந்து]

21. குறிப்பு விடைகளில் பொருந்தாததைக் கண்டறிக.
அ) நேர் விடை ஆ) ஏவல் விடை
இ) உறுவது கூறல் ஈ) இனமொழி [விடை: அ) நேர் விடை]

இயல் 5

www.tnpscjob.com

**22. செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்கு ________ என்று பெயர்.**

அ) பொருள்கோள் ஆ) வழாநிலை
இ) அணி ஈ) வழுவமைதி **[விடை: அ) பொருள்கோள்]**

**23. பொருள்கோள் ________ வகைப்படும்.**

அ) 6 ஆ) 7
இ) 8 ஈ) 9 **[விடை: இ) 8]**

**24. பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைவது ________ ஆகும்.**

அ) ஆற்று நீர்ப் பொருள்கோள்
ஆ) நிரல் நிறைப் பொருள்கோள்
இ) கொண்டு கூட்டுப் பொருள்கோள்
ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள் **[விடை: அ) ஆற்று நீர்ப் பொருள்கோள்]**

**25. ஒரு செய்யுளில் சொற்கள் முறையே பிறழாமல் நிரல் நிறையாக அமைந்து வருவது ________.**

அ) நிரல் நிறைப் பொருள்கோள் ஆ) விற்பூட்டுப் பொருள்கோள்
இ) ஆற்று நீர்ப் பொருள்கோள் ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள்
**[விடை: அ) நிரல் நிறைப் பொருள்கோள்]**

**26. நிரல் நிறைப் பொருள்கோள் ________ வகைப்படும்.**

அ) இரு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஆறு **[விடை: அ) இரு]**

**27. செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச் சொற்களை வரிசையாக நிறுத்தி, அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் ________ ஆகும்.**

அ) விற்பூட்டுப் பொருள்கோள்
ஆ) முறை நிரல் நிறைப் பொருள்கோள்
இ) எதிர் நிரல் நிறைப் பொருள்கோள்
ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள் **[விடை: ஆ) முறை நிரல் நிறைப் பொருள்கோள்]**

**28. செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் ________ ஆகும்.**

அ) விற்பூட்டுப் பொருள்கோள்
ஆ) முறை நிரல் நிறைப் பொருள்கோள்
இ) எதிர் நிரல் நிறைப் பொருள்கோள்
ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள் **[விடை: இ) எதிர் நிரல் நிறைப் பொருள்கோள்]**

**29. ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள் கொள்வது ________ ஆகும்.**

அ) கொண்டு கூட்டுப் பொருள்கோள்
ஆ) ஆற்று நீர்ப் பொருள்கோள்
இ) மொழிமாற்றுப் பொருள்கோள்
ஈ) நிரல் நிறைப் பொருள்கோள் **[விடை: அ) கொண்டு கூட்டுப் பொருள்கோள்]**



www.tnpscjob.com

## குறுவினா

**1. வினா எத்தனை வகைப்படும் அவை யாவை?**

அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா, என்று வினா ஆறு வகைப்படும்

**2. அறிவினா என்றால் என்ன?**

தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது அறிவினா எனப்படும்.

**சான்று:** மாணவரிடம் 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று ஆசிரியர் கேட்டல்.

**3. அறியா வினா என்றால் என்ன?**

தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது அறியா வினா ஆகும்.

**சான்று:** ஆசிரியரிடம் 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று மாணவன் கேட்பது.

**4. ஐய வினா என்றால் என்ன?**

ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது ஐய வினா ஆகும்.

**சான்று:** இப்படத்தை வரைந்தது மங்கையா? மணிமேகலையா? என வினவுதல்.

**5. கொளல் வினா என்றால் என்ன?**

தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது கொளல்வினா எனப்படும்.

**சான்று:** பத்தாம் வகுப்பு தமிழ் புத்தகம் இருக்கிறதா? என்று கடைக்காரரிடம் வினவுவது.

**6. கொடை வினா என்றால் என்ன?**

பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது கொடை வினா எனப்படும்.

**சான்று:** என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா? என்று கொடுப்பதற்காக வினவுதல்.

**7. ஏவல் வினா என்றால் என்ன?**

ஒரு செயலைச் செய்யுமாறு வினவுவது ஏவல் வினா எனப்படும்.

**சான்று:** வீட்டில் தக்காளி இல்லை நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையை சொல்லுதல்.

**8. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை, என்று விடை எட்டு வகைப்படும்.

**9. வெளிப்படை விடைகள் எத்தனை வகை? அவை யாவை?**

சுட்டு விடை, மறை விடை, நேர் விடை ஆகிய மூன்றும் நேரடி விடைகளாக இருப்பதால் அவை வெளிப்படை விடைகள் ஆகும்.

**10. குறிப்பு விடைகள் எத்தனை? அவை யாவை?**

ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை, ஆகிய ஐந்து விடைகளும் குறிப்பாக விடையை உணர்த்துவதால் இவை குறிப்பு விடைகளாகும்.

**11. சுட்டுவிடையை விவரி.**

'கடைத்தெரு எங்கு உள்ளது?' என்ற வினாவிற்கு 'வலப்பக்கத்தில் உள்ளது' என்று சுட்டிக் காட்டும் விடை சுட்டுவிடை எனப்படும்.



www.tnpscjob.com

**12. மறை விடை என்றால் என்ன?**

'கடைக்குப் போவாயா?' என்ற வினாவிற்குப் 'போகமாட்டேன்' என மறுத்துக் கூறுவது மறைவிடை எனப்படும்.

**13. நேர் விடை என்றால் என்ன?**

'கடைக்குப் போவாயா?' என்ற வினாவிற்குப் 'போவேன்' என்று உடன்பட்டு விடையளிப்பது நேர்விடை எனப்படும்

**14. ஏவல் விடை என்றால் என்ன?**

'இது செய்வாயா?' என்ற வினாவிற்கு 'நீயே செய்' என்று மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை ஏவல் விடை எனப்படும்.

**15. வினா எதிர் வினாதல் விடை என்றால் என்ன?**

வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது வினா எதிர் வினாதல் விடை ஆகும்.

**சான்று:** என்னுடன் ஊருக்கு வருவாயா? என்ற வினாவிற்கு வராமல் இருப்பேனா என்று கூறுவது.

**16. உற்றது உரைத்தல் விடையைக் கூறுக.**

'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கிறது' என்று ஏற்கனவே நேர்ந்ததை விடையாகக் கூறுவது உற்றது உரைத்தல் விடை எனப்படும்.

**17. உறுவது கூறல் விடை என்றால் என்ன?**

'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கும்' என்று இனிமேல் நேர்வதை விடையாகக் கூறுவது உறுவது கூறல் எனப்படும்.

**18. இனமொழி விடை என்றால் என்ன?**

'உனக்குக் கதை எழுதத் தெரியுமா?' என்ற வினாவிற்குக் 'கட்டுரை எழுதத் தெரியும்' என்று அதற்கு இனமான மற்றொன்றை விடையாகக் கூறுவது இனமொழிவிடை எனப்படும்.

**19. பொருள்கோள் என்றால் என்ன?**

செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்குப் பொருள்கோள் என்று பெயர்.

**20. பொருள்கோள் எத்தனை வகைப்படும். அவை யாவை?**

பொருள் கோள் எட்டு வகைப்படும். அவை:

- ஆற்றுநீர்ப் பொருள்கோள்
- மொழிமாற்றுப் பொருள்கோள்
- நிரல் நிறைப் பொருள்கோள்
- விற்பூட்டுப் பொருள்கோள்
- தாப்பிசைப் பொருள்கோள்
- அளைமறி பாப்புப் பொருள்கோள்
- கொண்டு கூட்டுப் பொருள்கோள்
- அடிமறி மாற்றுப் பொருள்கோள்.

## சிறுவினா

**1. முறைநிரல் நிறைப் பொருள்கோளை விவரிக்க.**

**பொருள்கோள் இலக்கணம்:**

செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச் சொற்களை வரிசையாக நிறுத்தி அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் "முறை நிரல் நிறைப் பொருள்கோள்" ஆகும்.

**சான்று:**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.** (குறள்)

இயல் 5

www.tnpscjob.com

**விளக்கம்:**

இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்க்கை பண்பும் பயனும் உடையதாக அமையும்.

இக்குறளில் பண்பு, பயன் இருசொற்களை வரிசைப்படுத்தி அவற்றின் விளைவுகளாக அன்பு அறன் என்று வரிசைப்படுத்தியுள்ளார். இல்வாழ்க்கையின் பண்பு, அன்பு என்றும், அதன் பயன் அறன் என்றும் பொருள்கொள்ள வேண்டும்.

அன்புக்கு - பண்பும், அறத்துக்கு - பயன் என்று நிரல் நிரையாக நிறுத்திப் பொருள் கொள்வதால் "முறை நிரல் நிறைப் பொருள்கோள்" ஆகும்.

2. **எதிர் நிரல்நிறைப் பொருள்கோளை விவரிக்க.**

**பொருள்கோள் இலக்கணம்:**

செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் "எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்" ஆகும்.

**சான்று:**

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றோரோடு ஏனை யவர்** (குறள்)

**விளக்கம்:**

மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமிடையே என்ன வேற்றுமையோ அதே அளவு வேற்றுமை கற்றவருக்கும், கல்லாதவருக்கும் இடையே உண்டு. இப்பாடலில் விலங்கு மக்கள் என்ற எழுவாய்களை முதல் அடியில் வரிசைப்பட நிறுத்தி விட்டு கற்றார், கல்லாதவர் (ஏனை) என்ற பயனிலைகளை அடுத்த வரிசையில் நிறுத்தி விட்டுப் பொருள் கொள்ளும்போது **கற்றார் மக்கள் என்றும், கல்லாதார் விலங்கு என்றும்** பயனிலைகளை எதிர் எதிராக மாற்றிப் பொருள் கொள்ளும் முறை "எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்" ஆகும்.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 120*

1. **வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.**

- "காமராசர் நகர் எங்கே இருக்கிறது?" "இந்த வழியாகச் செல்லுங்கள்." - என்று விடையளிப்பது.

**காமராசர் நகர் எங்கே இருக்கிறது?** அறியாவினா
**'இந்த வழியாகச் செல்லுங்கள் ' என்று விடையளிப்பது.** சுட்டுவிடை

- "எனக்கு எழுதித் தருகிறாயா?" என்ற வினாவுக்கு, "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" என்று விடையளிப்பது.

**எனக்கு யார் எழுதித்தருவார்கள் என்று விடையளிப்பது.** வினா எதிர்வினாதல்

2. **உரையாடலில் இடம் பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.**

**பாமகள்** : வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே? (அறியா வினா)
**ஆதிரை** : ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன். (நேர் விடை)
**பாமகள்** : அப்படியா! என்ன தலைப்பு? (அறியா வினா)
**ஆதிரை** : கல்வியில் சிறக்கும் தமிழர்! (நேர் விடை)
நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களா? மாட்டீர்களா? (ஐய வினா)
**பாமகள்** : ஏன் வராமல்? (வினா எதிர் வினாதல்)

www.tnpscjob.com

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 123

### மொழிபெயர்ப்பு

**ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக.**

| யாழிசை | It's like new lute music |
|---|---|
| அறைக்குள் யாழிசை<br>ஏதென்று சென்று<br>எட்டிப் பார்த்தேன்<br>பேத்தி,<br>நெட்டுருப் பண்ணினாள்<br>நீதிநூல் திரட்டையே.<br>- *பாரதிதாசன்* | Wondering at the lute music<br>Coming from the chamber<br>Entered I to look up to in still<br>My grand-daughter<br>Learning by rote the verses<br>Of a didactic compilation<br>*Translated by Kavignar Desini* |

Lute music - யாழிசை
Chamber - கூடம்
at look up - எட்டிப் பார்த்தேன்
Grand daughter - பேத்தி
rote - நெட்டுரு
didactic compilation - நீதிநூல் திரட்டு

**அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.**

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே! | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | **சொன்ன அம்மா** | சொல்லிச் சென்றார் | **அம்மா நில்!** | கதையைச் சொன்னார் |
| தா | **அரசன் தந்தார்** | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக! | **தந்ததைக் கேட்டார்** |
| பார் | துளிர் பார்த்தாள் | **பார்த்த துளிர்** | பார்த்துச் சிரித்தாள் | **துளிரே பார்!** | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | **வந்து நின்றான்** | குழந்தையே வா! | **குழந்தையோடு வந்தான்** |

**தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்

**எ.கா: அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.**

1. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

   **பயன்தரும்** மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

2. வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

   **இன்பமும் துன்பமும் நிறைந்த** வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

3. கல்வியே ஒருவர்க்கு உயர்வு தரும்.

   **நன்னெறிக்** கல்வியே உயர்வு தரும்.

4. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

   படைப்புத்திறன் மிக்க குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.



www.tnpscjob.com

**மதிப்புரை எழுதுக.**

**பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை /கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.**

**குறிப்பு:**

**நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் மொழிநடை வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்**

**நூலின் தலைப்பு : சந்தித்ததும் சிந்தித்ததும் (கதை)**

**நூலின் மையப்பொருள்:**

வாழ்வில் ஒவ்வொரு நாளும் பலவிதமான மனிதர்களைச் சந்திக்கிறோம். நாம் அவர்களிடம் கற்றுக்கொண்ட பாடம் என்ன என்பதே மையப்பொருள்.

**மொழிநடை:**

வாசகர் வாசிப்புக்கு ஏற்றநடையில் இலகுவான முறையில் ஆங்கில மேற்கோளுடன் அமைந்த நூல். தெளிந்த நீரோடையினைப் போல கதையின் சொற்றொடர்கள் பொருள் தெளிவுடன் செல்கின்றது.

**வெளிப்படுத்தும் கருத்து:**

நம்மை வியக்க, விம்ம செய்கின்ற வகையில் நம்மை நாமே பரிசோதனை செய்து, தூண்டும் வகையில் மனதை உருக்கும் வகையில் பதிவு செய்துள்ளார். மானுடர்கள் இன்றைய நிலையில் எப்படி வாழவேண்டும்? எத்தகைய புரிதல்கள் தேவை? தன்னம்பிக்கையும் முயற்சியும் எவ்வாறு வெற்றி தரும்? ஆகிய நற்கருத்துகளை இந்நூல் வெளிப்படுத்துகின்றது.

**நூலின் நயம்:**

படிக்க விறுவிறுப்பாக, படித்தவுடன் தெளிவடையும் எதுகை, மோனையோடு அமைந்துள்ளது. எளிமையான சொற்கள், எதார்த்தமான கருத்துகள், உன்னதமான நீதிகள், உணர்வான சான்றுகள், சிந்திக்க வைக்கும் உணர்ச்சிப் பெருக்கு ஆகியவை நூலின் நயத்திற்குச் சான்றாகும்.

**நூலின் கட்டமைப்பு:**

மங்கையர் மலரில் 50 கட்டுரைகளாக வெளிவந்த நூல். மொத்தம் 200 பக்கங்களைக் கொண்டு விஜயா பதிப்பகத்தால் பதிக்கப்பட்டது. அழகிய சிந்தனையைத் தூண்டும் அட்டைப்படம், பார்வைக்கு எளிய, சிறப்பான கட்டமைப்பு கொண்டது இந்நூல்.

**சிறப்புக்கூறு:**

“ஆரோக்கியமான பார்வையோடு உலகத்தைப் பார்த்தால் அத்தனை மனிதர்களுமே சுவாரசியத்துக்குப் பஞ்சமில்லாதவர்கள்; உண்மை நமக்குப் புரியும்’’ என்கிறார் ஆசிரியர். மேலும், “தன்னம்பிக்கை இருந்தால் போதும் தரணியையே ஆளலாம்’’ என்ற உட்கருத்து மிகச்சிறப்பாகும்.

**நூல் ஆசிரியர் :**

வெ. இறையன்பு.

வாழ்க்கைக்கு வழிகாட்டும் கருத்துகளை எளிமையாகவும், தெளிவாகவும் கட்டுரையாக்கும் வல்லவர், ஐ.ஏ.எஸ். அதிகாரியும் ஆவார்.

இயல் 5

**படிவத்தை நிரப்புக.**

**நூலக உறுப்பினர் படிவம்**

**கன்னியாகுமரி மாவட்ட நூலக ஆணைக்குழு**

**மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் - மாவட்ட மைய நூலம்**

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் : 514

உறுப்பினர் எண்: 41512

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | க. தமிழச்சி |
| 2. | தந்தை பெயர் | : | கு. தமிழரசன் |
| 3. | பிறந்த தேதி | : | 14-04-2005 |
| 4. | வயது | : | 15 |
| 5. | படிப்பு | : | பத்தாம் வகுப்பு |
| 6. | தொலைபேசி எண் | : | 9876543210 |
| 7. | முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : | 18 பூங்கா சாலை, திருவள்ளுவர் நகர். கன்னியாகுமரி - 629 001. |

நான் மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. 100 சந்தா தொகை ரூ. 10 ஆக மொத்தம் ரூ.110 ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : கன்னியாகுமரி,
நாள் : 06-06-2020.

*தங்கள் உண்மையுள்ள,*
தமிழச்சி.

திரு / திருமதி / செல்வி / செல்வன் நளினி அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

**ராஜன்**

அலுவலக முத்திரை

*பிணைப்பாளர் கையொப்பம்*
(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள் கல்லூரி முதல்வர்கள் பேராசிரியர்கள் உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர்கள் நகராட்சி/மாநகராட்சி/ஒன்றிய/பேரூராட்சி உறுப்பினர்கள்)

## மொழியோடு விளையாடு

*பக்கம்: 125*

**புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க.**

**தார் போன்ற நிறமுண்டு கரியுமில்லை**
**பார் முழுவதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை**
**சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை**
**சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளருமில்லை**
**வீட்டுக்கு வருமுன்னே வருவதைக் கூறுவேன்.** நான் யார்?

விடை : காகம்



www.tnpscjob.com

**தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.**

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் புதையல் யாவும் அரசுக்கே சொந்தம் நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் புதைத்தல் நிலத்தடி நீர் வளத்தைக் குன்றச் செய்யும். **(புதைத்தல் / புதையல்)**
2. காட்டு விலங்குகளைச் சுடுதல் தடை செய்யப்பட்டுள்ளது செய்த தவறுகளைச் சுட்டல் திருந்த உதவுகிறது. **(சுட்டல் / சுடுதல்)**
3. காற்றின் மெல்லிய தொடுதல் பூக்களைத் தலையாட்ட வைக்கிறது, கைகளில் நேர்த்தியான தொடுத்தல் பூக்களை மாலையாக்குகிறது. **(தொடுத்தல் /தொடுதல்)**
4. பசுமையான காட்சிஐக் காணுதல் கண்ணுக்கு நல்லது.**(காணுதல் /காட்சி)**
5. பொது வாழ்வில் நடித்தல் கூடாது. நடிப்பு இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. **(நடித்தல் / நடிப்பு)**

**அகராதியில் காண்க.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **மன்றல்** | - | திருமணம் | **தூவல்** | - | மழை / நீர்த்துளி |
| **அடிச் சுவடு** | - | காலடிக்குறி | **மருள்** | - | மயக்கம் |
| **அகராதி** | - | அகரவரிசை சொற்பொருள் நூல் | | | |

## செயல் திட்டம்

**"பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" - குறித்த செயல்திட்ட வரைவு முறை ஒன்றை உருவாக்கித் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுதுதுக.**

**அனுப்புநர்**

பத்தாம் வகுப்பு மாணவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை - 18.

**பெறுநர்**

தலைமையாசிரியர் அவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை - 18.

**ஐயா,**

பொருள்: பள்ளித் தூய்மை குறித்த செயல் திட்ட வரைவு ஒப்புதல் வழங்கி செயல்படுத்த வேண்டுதல் - சார்பாக.

வணக்கம். நாங்கள் நம் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறோம். கடந்த 4 ஆண்டுகளாக நம் பள்ளியை நன்கு கவனித்து வருகிறோம். அதன் மூலம் நம் பள்ளி மாணவர்களின் கற்றல் அடைவுகளுக்குத் தடையாக இருக்கும் காரணிகளைப் பற்றி ஆய்வு செய்து வந்தோம். அவற்றை ஒரு செயல்திட்டமாக தயாரித்து தங்கள் பார்வைக்கு அனுப்பி உள்ளோம். அதன் பரிந்துரைகளை ஆராய்ந்து அதற்கு ஒப்புதல் வழங்கி நம் பள்ளியில் செயல்படுத்தி மாணவர்களாகிய எங்கள் கல்வி நலனையும் வருங்கால தலைமுறையினரின் கல்வி நலனையும் காக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

நன்றி

இடம் : சென்னை
நாள் : 13.03.2020

இப்படிக்கு,
அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்.



www.tnpscjob.com

### பள்ளித் தூய்மை

நல்ல நீரும் நல்ல காற்றும் சூழலுமே வாழ்விற்கு ஆதாரம். அந்த வகையில் மாணவராகிய நாங்கள் தலைமை ஆசிரியர் ஒப்புதலோடு பின்வரும் செயல்திட்டங்களை மேற்கொள்ள உள்ளோம்.

- வகுப்பறையில் உணவுக்கழிவுகளைப் போடாது இருத்தல்.
- குப்பைத்தொட்டிகளை உலர வைத்துப் பயன்படுத்துதல்.
- கழிப்பறைகளைத் தூய்மையாக வைத்தல்.
- பாதுகாக்கப்பட்ட தூய்மையான நீரைக் குடித்தல்.

மேற்கண்ட செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தி பள்ளியையும், பாரதத்தையும் தூய்மையாக்கித் தூய்மை இந்தியாவை உருவாக்குவோம்.

### காட்சியைக் கவிதையாக்குக.



மரங்களை வெட்டிவிட்டு
மரம் பற்றி பாடம் நடத்தினால்
நாட்டுக்கு என்ன பலன்?
மரத்தை மறந்தான் மனிதன்
மரம் நமக்கு வரம்
மரம் நடுவோம்! மழை பெறுவோம்!!

## நிற்க அதற்குத் தக

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | அம்மாவுடன் சேர்ந்து பணிகளைச் செய்வேன். |
| எனக்குத் தெரியாதவற்றை தெரிந்த மாணவர்களிடம் கேட்டு தெரிந்துகொள்வேன். | பாடத்தொடர்பான ஐயங்களை எனது உடன்பிறந்தவர்களிடம் கேட்டு தெரிந்துகொள்வேன். |
| வகுப்பறைத் தூய்மையில் கவனம் செலுத்துவேன். | வீட்டுத் தூய்மையில் கவனம் செலுத்துவேன். |

### கலைச்சொல் அறிவோம்

- Emblem - சின்னம்
- Thesis - ஆய்வேடு
- Intellectual - அறிவாளர்
- Symbolism - குறியீட்டியல்

இயல் 5

இயல் 6 கலை

உரைநடை உலகம்

# நிகழ்கலை

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?**

அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்.
ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

**[விடை: இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.]**

**2. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?**

அ) கரகாட்டம் என்றால் என்ன?
ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?
ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை? **[விடை: ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?]**

### குறுவினா

**1. "நேற்று நான் பார்த்த அர்ச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்!" என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக மாற்றுக.**

நேற்று நான் பார்த்த அர்ச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும், சிறந்த நடிப்பையும், இனிய பாடல்களையும் நுகர்ந்து மகிழ்ந்ததாக சேகர் என்னிடம் கூறினான்.

### சிறுவினா

**1. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.**

**அ) காலில் சலங்கை அணிந்து ஆடும் நிகழ்கலை ஏதேனும் இரண்டு கூறுக.**

ஒயிலாட்டம், தேவராட்டம்.

**ஆ) கரகாட்டம் என்றால் என்ன?**

கரகம் என்பது, பித்தளைச் செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுதல் ஆகும்.





www.tnpscjob.com

## நெடுவினா

**1. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.**

**பாராட்டுரை**

இன்றைய நம் பள்ளியின் ஆண்டு விழாவிற்கு வருகைத் தந்து பொம்மலாட்ட நிகழ்ச்சியை நடத்தித் தந்த குழுவினருக்குப் பள்ளியின் சார்பாக வணக்கம்.

நெகிழியானது பயன்படுத்துவதற்கு எளிதாக இருந்தாலும், நம் மண்ணின் வளத்தைக் குன்றச் செய்து நிலத்தடி நீர் குறைவதை, மிக அழகாக பொம்மலாட்டம் மூலம் எடுத்துரைத்ததற்குப் பாராட்டுகள்.

மழைநீர் பூமிக்குள் நுழைய விடாமல் தடுக்கும் நெகிழியைப் பற்றியும், மரங்களில் நெகிழிப் பைகள் சிக்குவதால் பாதிக்கும் ஒளிச்சேர்க்கையைப் பற்றியும் பாடல் வாயிலாக எடுத்துரைத்தீர்கள். மிகவும் அருமையாக இருந்தது. பாராட்டுகள்.

மட்காத நெகிழிகளை மழைநீர் அடித்துச் செல்வதால் நீர் மாசு அடைவதையும், நெகிழிப் பைகளில் தேநீர், குளிர்பானம் போன்ற உணவுப்பொருட்கள் வாங்குவதால் மனிதனுக்குப் புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படுவதையும் பொம்மலாட்டம் மூலம் நிகழ்த்தினீர்கள். பாராட்டுகள்.

நெகிழிப் பைகளை எரிக்கும்போது ஏற்படும் நச்சு வாயு காற்றையும் மாசுபடுத்துவதைத் தங்களது இனிய குரலால் பாடி, எங்களைப் பரவசமடையச் செய்தீர்கள். பாராட்டுகள்.

**நெகிழியைத் தவிர்த்தல் :**

மேற்கண்ட தீமைகள் ஒழிந்திட நெகிழியைத் தவிர்ப்போம் என்ற உறுதிமொழியை நாம் அனைவரும் ஏற்போம்.

தமிழர்களின் மிகப்பழமையான மரபுவழிக் கலைகளில் ஒன்று பொம்மலாட்டம். இது பொழுதுபோக்குக் காட்சிக்கலை ஆகும். இது பொழுதுபோக்குக் காட்சியாக மட்டுமல்லாமல் கல்வியறிவு, மக்களிடையே காணப்படும் அறியாமையைப் பாடல் வழியாக போக்குவதற்கு நல்ல கலையாக விளங்குகிறது. குறைந்த நேரத்தில் அதிக செலவில்லாமல் இக்கலை வடிவம் வாயிலாக நம் பள்ளியின் ஆண்டு விழாவில் பொம்மலாட்ட நிகழ்ச்சியை நடத்திய கலைக்குழுவுக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

நெகிழிப் பைகளால் ஏற்படும் தீமையைப் பொம்மலாட்டம் வாயிலாக நிகழ்த்தி எங்கள் நெஞ்சத்தை நெகிழச் செய்த அனைவருக்கும் வணக்கம்.

**2. நிகழ்கலை வடிவங்கள் அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| நிகழ்கலையின் வடிவங்கள் |
| ஒப்பனைகள் |
| சிறப்பும் பழைமையும் |
| குறைந்து வருவதற்கான காரணங்கள் |
| வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன |

**முன்னுரை:**

ஆயக்கலைகள் 64 என்பர் சான்றோர். ஆனால் அவை இன்று நம்மிடையே பல்வேறு சூழலால் குறைந்து வருகின்றன.

**நிகழ்கலையின் வடிவங்கள்:**

பொதுவாக நிகழ்கலை, அவை நிகழும் இடங்கள் ஊரில் பொதுமக்கள் கூடும் இடம், கோயில் போன்ற இடங்களில் நடைபெறும். இவ்வகை கலைகள் பல்வேறு வழிகளில் ஆடல் பாடல்களோடு நடைபெறும். சான்றாக கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், தெருக்கூத்து போன்றன.

**ஒப்பனைகள் :**

- கரகாட்டம் - ஆண், பெண் வேடமிட்டு ஆடுதல்
- மயிலாட்டம் - மயில் வடிவ கூண்டுக்குள் உடலை மறைத்தல்
- ஒயிலாட்டம் - ஒரே நிறத்துணியை முண்டாசு போலக்கட்டுதல், காலில் சலங்கை, கையில் சிறுதுணி
- தேவராட்டம் - வேட்டி, தலையிலும் இடுப்பிலும் சிறு துணி, எளிய ஒப்பனை.

**சிறப்பும், பழைமையும் :**

- வாழ்வியல் நிகழ்வில் பிரிக்க முடியாத, மகிழ்ச்சி தருகின்ற, கவலையைப் போக்குகின்ற, போன்ற சிறப்புகளை நிகழ்கலை மூலம் அறிய முடிகிறது.
- பொம்மலாட்டம், கையுறைப் பாவைக்கூத்து, தெருக்கூத்து போன்ற இக்கலைகள் எல்லாம் நம்முன்னோர் காலத்தில் இருந்த பழமை வாய்ந்த கலைகளாகும்.

**குறைந்து வருவதற்கான காரணங்கள் :**

நாகரிகத்தின் காரணமாகவும், கலைஞர்களுக்குப் போதிய வருமானம் இல்லாத காரணத்தாலும், திரைத்துறை வளர்ச்சியினாலும் இக்கலைகள் குறைந்து வருகின்றன.

**வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன :**

நம் இல்லங்களில் நடைபெறும் விழாக்களில் நல்ல வாழ்வியல் தொடர்பான நிகழ்கலைகளை நடத்தி, கலைகளையும், கலைஞரையும் பாராட்டுவோம். இப்பெரிய செயலில் ஊடகம் மற்றும் செய்தித்தாள் ஆகியவை முழுமையாக இணைத்துக் கொண்டால் நம் கலைகள் நிலைபெற்று நிற்கும்.

**முடிவுரை:**

நாமும் நிகழ்கலைகளைக் கற்று, கலைகளை அழியாமல் காப்போம்.



## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **சரியான விடை வரிசையைத் தேர்ந்தெடு.**

| | | | |
|---|---|---|---|
| i) | கரகாட்டம் | - | 1. உறுமி எனப்படும் தேவதுந்துபி |
| ii) | மயிலாட்டம் | - | 2. தோலால் கட்டப்பட்ட குடம், தவில் சிங்கி, டோலாக், தப்பு |
| iii) | ஒயிலாட்டம் | - | 3. நையாண்டி மேளம் |
| iv) | தேவராட்டம் | - | 4. நையாண்டி மேள இசை, நாகசுரம், தவில், பம்பை |

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 2, 3, 4

இ) 3, 4, 1, 2 ஈ) 2, 1, 4, 3 **[விடை: அ) 4, 3, 2, 1]**

2. **பொருத்தமான விடை வரிசையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | மயிலாட்டம் | - | 1. கரகாட்டத்தின் துணை ஆட்டம் |
| ii) | ஒயிலாட்டம் | - | 2. கம்பீரத்துடன் ஆடுதல் |
| iii) | புலியாட்டம் | - | 3. வேளாண்மை செய்வோரின் கலை |
| iv) | தெருக்கூத்து | - | 4. தமிழரின் வீரத்தைச் சொல்லும் கலை |

அ) 4, 1, 3, 2 ஆ) 3, 4, 2, 1
இ) 1, 2, 4, 3 ஈ) 4, 3, 1, 2 **[விடை: இ) 1, 2, 4, 3]**

3. **தேவராட்டத்தில் எத்தனை கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்பது மரபு?**

அ) மூன்று முதல் பதின்மூன்று ஆ) எட்டு முதல் பத்து
இ) பத்து முதல் பதின்மூன்று ஈ) எட்டு முதல் பதின்மூன்று
**[விடை: ஈ) எட்டு முதல் பதின்மூன்று]**

4. **சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாதக் கூறுகளாகத் திகழ்பவை யாவை?**

அ) நிகழ்கலைகள் ஆ) பெருங்கலைகள்
இ) அருங்கலைகள் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ) நிகழ்கலைகள்]**

5. **கரகாட்டத்தை வேறு எவ்வாறு அழைக்கலாம்?**

அ) குட ஆட்டம் ஆ) கும்பாட்டம்
இ) கொம்பாட்டம் ஈ) செம்பாட்டம் **[விடை: ஆ) கும்பாட்டம்]**

6. **கரகாட்டத்திற்கு இசைக்கப்படும் இசைக்கருவிகள் __________.**

i) நையாண்டி மேள இசை ii) நாகசுரம்
iii) தவில் iv) பம்பை

அ) i, ii - சரி ஆ) i, ii, iii - சரி
இ) நான்கும் சரி ஈ) iii - சரி **[விடை: இ) நான்கும் சரி]**

7. **கரகாட்டம் நிகழ்த்துதலில் எத்தனை பேர் நிகழ்த்த வேண்டும்?**

அ) 12 ஆ) 2
இ) 24 ஈ) வரையறை இல்லை **[விடை: ஈ) வரையறை இல்லை]**

8. **"நீரற வறியாக் கரகத்து" என்ற பாடலடியில் கரகம் என்ற சொல் இடம்பெறும் நூல் __________.**

அ) அகநானூறு ஆ) புறநானூறு
இ) கலித்தொகை ஈ) நற்றிணை **[விடை: ஆ) புறநானூறு]**

9. **சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய __________ வகை ஆடல்களில் 'குடக்கூத்து' என்ற ஆடலும் குறிப்பிடப்படுகிறது.**

அ) பத்து ஆ) பதினொரு
இ) ஏழு ஈ) எண் **[விடை: ஆ) பதினொரு]**

10. **குடக்கூத்து என்பது __________.**

அ) மயிலாட்டம் ஆ) கரகாட்டம்
இ) பொம்மலாட்டம் ஈ) ஒயிலாட்டம் **[விடை: ஆ) கரகாட்டம்]**

11. **கரகாட்டத்தின் துணையாட்டம் __________.**

அ) மயிலாட்டம் ஆ) ஒயிலாட்டம்
இ) காவடியாட்டம் ஈ) தேவராட்டம் **[விடை: அ) மயிலாட்டம்]**

இயல் 6

12. காவடியாட்டம் - இச்சொல்லில் 'கா' என்பதன் பொருள் ________.
அ) சோலை ஆ) பாரந்தாங்கும் கோல்
இ) கால் ஈ) காவல் [விடை: ஆ) பாரந்தாங்கும் கோல்]

13. இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது ________.
அ) கரகாட்டம் ஆ) மயிலாட்டம்
இ) காவடியாட்டம் ஈ) ஒயிலாட்டம் [விடை: இ) காவடியாட்டம்]

14. மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி என்று எதன் அடிப்படையில் அழைக்கின்றனர்?
அ) அமைப்பு ஆ) நிறம்
இ) அழகு ஈ) வடிவம் [விடை: அ) அமைப்பு]

15. இலங்கை, மலேசியா உள்ளிட்ட புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் ஆடப்படுவது ________.
அ) கரகாட்டம் ஆ) மயிலாட்டம்
இ) ஒயிலாட்டம் ஈ) காவடியாட்டம் [விடை: ஈ) காவடியாட்டம்]

16. ஒயிலாட்டம் ஆடுவோரின் வரிசை எண்ணிக்கை ________.
அ) இரண்டு ஆ) நான்கு
இ) ஆறு ஈ) எட்டு [விடை: அ) இரண்டு]

17. தேவராட்டம் என்பது யார் மட்டுமே ஆடும் ஆட்டம்?
அ) ஆண்கள் ஆ) பெண்கள்
இ) சிறுவர்கள் ஈ) முதியவர்கள் [விடை: அ) ஆண்கள்]

18. தேவராட்டம், ________ ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.
அ) வானத்துத் தேவர்கள் ஆ) விறலியர்
இ) பாணர்கள் ஈ) அரசர்கள் [விடை: அ) வானத்துத் தேவர்கள்]

19. உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படுவது ________.
அ) தேவதுந்துபி ஆ) சிங்கி
இ) டோலக் ஈ) தப்பு [விடை: அ) தேவதுந்துபி]

20. தேவதுந்துபி என்னும் இசைக்கருவி பயன்படுத்தும் ஆட்ட வகை ________.
அ) கரகாட்டம் ஆ) மயிலாட்டம்
இ) தேவராட்டம் ஈ) சேவையாட்டம் [விடை: இ) தேவராட்டம்]

21. தேவராட்டம் எவ்வகை நிகழ்வாக ஆடப்படுகின்றது?
அ) அழகியல் ஆ) நடப்பியல்
இ) சடங்கியல் ஈ) வாழ்வியல் [விடை: இ) சடங்கியல்]

22. தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை ________.
அ) மயிலாட்டம் ஆ) காவடியாட்டம்
இ) சேவையாட்டம் ஈ) ஒயிலாட்டம் [விடை: இ) சேவையாட்டம்]

23. சேவையாட்டக் கலைஞர்கள் இசைத்துக்கொண்டே ஆடும் இசைக்கருவிகளைக் கண்டறிக.
i) சேவைப்பலகை ii) சேமக்கலம் iii) ஜால்ரா
அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி
இ) i, iii - சரி ஈ) மூன்றும் சரி [விடை: ஈ) மூன்றும் சரி]

இயல் 6

www.tnpscjob.com

**24. எந்தப் பண்புகளைக் கொண்டு நிகழ்த்திக்காட்டும் கலை பொய்க்கால் குதிரையாட்டம் ஆகும்?**

அ) போலச் செய்தல் ஆ) இருப்பதைச் செய்தல்
இ) மெய்யியல் ஈ) நடப்பியல் **[விடை: அ) போலச் செய்தல்]**

**25. புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களில் அழைக்கப்படும் ஆட்டம்?**

அ) மயிலாட்டம் ஆ) ஒயிலாட்டம்
இ) பொய்க்கால் குதிரையாட்டம் ஈ) காவடியாட்டம் **[விடை: இ) பொய்க்கால் குதிரையாட்டம்]**

**26. பொய்க்கால் குதிரையாட்டம் யாருடைய காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது?**

அ) சோழர் ஆ) நாயக்கர்
இ) மராட்டியர் ஈ) ஆங்கிலேயர் **[விடை: இ) மராட்டியர்]**

**27. இராஜஸ்தானில் கச்சிகொடி என்றும் கேரளத்தில் குதிரைக்களி என்றும் அழைக்கப்படுவது?**

அ) காவடியாட்டம் ஆ) மயிலாட்டம்
இ) ஒயிலாட்டம் ஈ) பொய்க்கால் குதிரையாட்டம்
**[விடை: ஈ) பொய்க்கால் குதிரையாட்டம்]**

**28. பாடல்கள் பயன்படுத்தாத ஆட்ட வகை __________.**

அ) கரகம் ஆ) பொய்க்கால் குதிரை
இ) காவடி ஈ) மயில் **[விடை: ஆ) பொய்க்கால் குதிரை]**

**29. பொய்க்கால் குதிரையாட்டத்திற்கு இசைக்கப்படும் இசைக்கருவிகளைக் கண்டறிக.**

i) நையாண்டி மேளம் ii) நாகசுரம்
iii) தவில் iv) டோலக்
அ) i, ii - சரி ஆ) iii, iv - சரி
இ) iii - மட்டும் தவறு ஈ) நான்கும் சரி **[விடை: அ) i, ii - சரி]**

**30. தப்பு என்பது __________.**

அ) தோற்கருவி ஆ) துளைக்கருவி
இ) நரம்புக்கருவி ஈ) தொழிற்கருவி **[விடை: அ) தோற்கருவி]**

**31. "தகக தகதகக தந்தத்த தந்தகக**
**என்று தாளம்**
**பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக"**
**- என்ற தப்பாட்ட இசை குறித்துப் பதிவு செய்யும் நூலாசிரியர், நூல்?**

அ) அண்ணாமலையார், காவடிச்சிந்து
ஆ) அருணகிரிநாதர், திருப்புகழ்
இ) திருநாவுக்கரசர், தேவாரம்
ஈ) இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் **[விடை: ஆ) அருணகிரிநாதர், திருப்புகழ்]**

**32. பறை என்று அழைக்கப்படும் ஆட்டம் __________.**

அ) தப்பாட்டம் ஆ) மயிலாட்டம்
இ) ஒயிலாட்டம் ஈ) கரகாட்டம் **[விடை: அ) தப்பாட்டம்]**

**33. __________ குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்றாகப் பறை இடம் பெறுகிறது.**

அ) அகத்தியம் ஆ) தொல்காப்பியம்
இ) நன்னூல் ஈ) யாப்பருங்கலம் **[விடை: ஆ) தொல்காப்பியம்]**



www.tnpscjob.com

34. **சொல்லுவது போன்றே இசைக்கவல்ல தாளக் கருவி ___________.**
அ) பறை ஆ) தவில்
இ) டோலக் ஈ) உறுமி [விடை: அ) பறை]

35. **தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது ___________.**
அ) கரகாட்டம் ஆ) காவடியாட்டம்
இ) புலி ஆட்டம் ஈ) ஒயிலாட்டம் [விடை: இ) புலி ஆட்டம்]

36. **___________ தெருக்கூத்து அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாகவும் இருக்கிறது.**
அ) காளி ஆ) மாரி
இ) சர்க்கை ஈ) திரௌபதி [விடை: ஈ) திரௌபதி]

37. **நிகழ்த்தப்பட்ட இடத்தை அடிப்படையாகக் கொண்ட கலை ___________.**
அ) புலி ஆட்டம் ஆ) காவடியாட்டம்
இ) தெருக்கூத்து ஈ) குடக்கூத்து [விடை: இ) தெருக்கூத்து]

38. **களத்துமேடுகளில் நிகழ்த்தப்பட்டது எது?**
அ) புலி ஆட்டம் ஆ) காவடியாட்டம்
இ) குடக்கூத்து ஈ) தெருக்கூத்து [விடை: ஈ) தெருக்கூத்து]

39. **தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர் ___________.**
அ) ந. முத்துசாமி ஆ) பேரா. லூர்து
இ) வானமாமலை ஈ) அ.கி. பரந்தாமனார் [விடை: அ) ந. முத்துசாமி]

40. **நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றவர் ___________.**
அ) ந. முத்துசாமி ஆ) சங்கரதாசு சுவாமிகள்
இ) பரிதிமாற்கலைஞர் ஈ) தி.வை. நடராசன் [விடை: அ) ந. முத்துசாமி]

41. **கலைஞாயிறு என்று அழைக்கப்பட்டவர் ___________.**
அ) தேவநேயப் பாவாணர் ஆ) ந. முத்துசாமி
இ) தியாகராஜ பாகவதர் ஈ) எம்.எஸ். சுப்புலட்சுமி [விடை: ஆ) ந. முத்துசாமி]

42. **கூத்துப்பட்டறை ந. முத்துசாமிக்கு இந்திய அரசு வழங்கிய விருது ___________.**
அ) பத்ம ஸ்ரீ ஆ) அர்ஜுனா
இ) பத்மபூஷண் ஈ) பாரத ரத்னா [விடை: அ) பத்ம ஸ்ரீ]

43. **தமிழ்நாடு அரசு ந. முத்துசாமிக்கு வழங்கிய விருது ___________.**
அ) கலைமாமணி ஆ) நாடகமாமணி
இ) வ.உ.சி. விருது ஈ) கம்பன் விருது [விடை: அ) கலைமாமணி]

44. **வேளாண்மை செய்வோரின் கலையாக இருந்து வருவது ___________.**
அ) காவடியாட்டம் ஆ) புலி ஆட்டம்
இ) தேவராட்டம் ஈ) தெருக்கூத்து [விடை: ஈ) தெருக்கூத்து]

45. **அர்ச்சுனன் தபசு எனப்படுவது ___________.**
அ) பொருள் வேண்டி நிகழ்த்தப்படுவது
ஆ) மழை வேண்டி நிகழ்த்தப்படுவது
இ) அருள் வேண்டி நிகழ்த்தப்படுவது
ஈ) அமைதி வேண்டி நிகழ்த்தப்படுவது [விடை: ஆ) மழை வேண்டி நிகழ்த்தப்படுவது]

இயல் 6

www.tnpscjob.com

**46. கதகளி போன்று செவ்வியல் கலையாக ஆக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் கலை**

அ) மயிலாட்டம் ஆ) ஒயிலாட்டம்
இ) தெருக்கூத்து ஈ) குடக்கூத்து **[விடை: இ) தெருக்கூத்து]**

**47. தமிழ் இலக்கியங்களில் பாவைக் குறித்த செய்திகள் காணப்படும் கால எல்லை**

அ) சங்ககாலம், பதினெட்டாம் நூற்றாண்டு
ஆ) சங்கம் மருவிய காலம், பதினேழாம் நூற்றாண்டு
இ) காப்பியக்காலம், பதினாறாம் நூற்றாண்டு
ஈ) சங்ககாலம், பதினைந்தாம் நூற்றாண்டு **[விடை: அ) சங்ககாலம், பதினெட்டாம் நூற்றாண்டு]**

**48. மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடும் நூல் __________.**

அ) திருக்குறள் ஆ) நாலடியார்
இ) அகநானூறு ஈ) புறநானூறு **[விடை: அ) திருக்குறள்]**

**49. தோற்பாவைக் கூத்து பற்றிய செய்திகளைக் குறிப்பிடுவன __________.**

i) திருவாசகம் ii) பட்டினத்தார் பாடல்கள்
அ) i - சரி ஆ) ii - சரி
இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு **[விடை: இ) இரண்டும் சரி]**

**50. மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் புகழ்மிக்க மையப் பகுதியில் காணப்படும் தெருவின் பெயர் __________.**

அ) இராச சோழன் தெரு ஆ) வன்னி தெரு
இ) ராசேந்திர சோழன் தெரு ஈ) கம்பன் தெரு **[விடை: அ) இராச சோழன் தெரு]**

**51. மலேசியாவில் "இராச சோழன் தெரு" உள்ளதைப் பற்றிக் குறிப்பிடும் மலர் __________.**

அ) முதலாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்
ஆ) இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்
இ) நான்காம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்
ஈ) ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர் **[விடை: ஈ) ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்]**

## குறுவினா

**1. நிகழ்கலை என்றால் என்ன?**

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள்.

**2. இலக்கியத்தில் கரகத்தின் பங்கு யாது?**

**புறநானூறு :**

'நீரற வறியாக் கரகத்து' என்னும் புறநானூற்றுப் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

**சிலப்பதிகாரம் :**

மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் ஒன்று 'குடக்கூத்து' எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

**3. தமிழகத்தில் கரகாட்டம் நிகழ்த்தப்படும் மாவட்டங்கள் யாவை?**

- திருநெல்வேலி
- திண்டுக்கல்
- மதுரை
- தஞ்சாவூர்
- திருச்சி
- கோயம்புத்தூர்



www.tnpscjob.com

**4. மயிலாட்டம் என்றால் என்ன?**

- மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு நையாண்டி மேளத்திற்கு ஏற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டம்.
- கரகாட்டத்தின் துணையாட்டம் மயிலாட்டமே.

**5. மயிலாட்டத்தில் பின்பற்றப்படும் அசைவுகள் யாவை?**

- ஊர்ந்து ஆடுதல்
- மிதந்து ஆடுதல்
- இறகை விரித்தாடுதல்
- தலையைச் சாய்த்தாடுதல்
- தாவியாடுதல்
- இருபுறமும் சுற்றியாடுதல்
- அகவுதல்
- தண்ணீர் குடித்துக் கொண்டே ஆடுதல்

**6. காவடியாட்டம் என்றால் என்ன?**

- 'கா' என்பதன் பொருள் பாரந்தாங்கும் கோல்.
- இரு முனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம்.

**7. காவடியின் அமைப்புக்கேற்ப அவை எந்தெந்தப் பெயர்களில் அழைக்கப்படுகின்றன?**

- மச்சக்காவடி
- சர்ப்பக்காவடி
- பூக்காவடி
- தேர்க்காவடி
- பறவைக்காவடி

**8. காவடியாட்டம் ஆடப்படும் நாடுகள் எவை?**

இலங்கை, மலேசியா உட்பட தமிழர் வாழும் பிற நாடுகள்.

**9. ஒயிலாட்டம் என்றால் என்ன?**

- ஒரே நிறத்துணியை முண்டாசு போலக் கட்டுதல்.
- காலில் சலங்கையை அணிதல்.
- சிறு துணியை இசைக்கேற்ப வீசி ஒயிலாக ஆடும் குழு ஆட்டம்.
- கம்பீரத்துடன் ஆடுதல் தனிச்சிறப்புடையது.

**10. ஒயிலாட்டத்திற்குப் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள் யாவை?**

தவில், தப்பு, சிங்கி, தோலால் கட்டப்பட்ட குடம், டோலக்.

**11. தேவராட்டம் என்றால் என்ன?**

- வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.
- இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம்.

**12. தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி குறித்து எழுதுக.**

- தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி தேவதுந்துபி.
- இதன் பொதுவான பெயர் உறுமி.

**13. தேவராட்டத்திற்குரிய உடை மற்றும் அலங்காரம் குறித்து எழுதுக.**

**உடை :**

- இடையிலும் தலையிலும் சிறுதுணி கட்டுவர்.
- வேட்டி அணிந்திருப்பர்.

**அலங்காரம் :**

- கால்களில் சலங்கை அணிவர்.
- எளிய ஒப்பனை செய்து கொள்வர்.



www.tnpscjob.com

**14. சேவையாட்டம் என்றால் என்ன?**

தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை சேவையாட்டம்.

**இசைக்கருவிகள் :**

- சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா.
- இசைச்சார்பு கலையாகவும், வழிபாட்டுக் கலையாகவும் உள்ளது.

**15. பொய்க்கால் குதிரையாட்டத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

- புரவி ஆட்டம்
- கச்சி கொடி (இராஜஸ்தான்)
- புரவி நாட்டியம்
- குதிரைக்களி (கேரளா)

**16. தப்பாட்டம் என்றால் என்ன? அதற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

**தப்பு :**

தப்பு என்ற தோற்கருவியை இசைத்துக் கொண்டே, அதன் இசைக்கேற்ப ஆடும் ஆட்டமே தப்பாட்டம்.

**வேறு பெயர்கள் :**

- தப்பாட்டம், தப்பு, தப்பட்டை, பறை.
- 'தப் தப்' என ஒலிப்பதால் தப்பாட்டம் எனப் பெயர் பெற்றது.

**17. தப்பாட்டம் நிகழ்த்தப்படும் இடங்களைக் கூறுக.**

- கோவில் திருவிழா
- விளம்பர நிகழ்ச்சி
- திருமண விழா
- விழிப்புணர்வு முகாம்
- இறப்பு

**18. 'பறை' குறிப்பு வரைக.**

- பறை – தமிழிசைக் கருவி.
- பறை என்பதற்குப் பேசு என்பது பொருள்.
- பேசுவதை இசைக்கப்படும் தாளக்கருவி பறை.

**கருப்பொருள் :**

தொல்காப்பியர் குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்று பறை.

**19. தப்பாட்டத்திற்குரிய ஆட்டக் கூறுகள் யாவை?**

- வட்டமாக ஆடுதல்
- உட்கார்ந்து எழுதல்
- குதித்துக் குதித்து ஆடுதல்
- நடையாட்டம்
- இரண்டு வரிசையாக எதிர் எதிர் திசையில் நின்று ஆடுதல்.

**20. புலியாட்டம் என்றால் என்ன?**

- தமிழரின் வீரத்தை சொல்லும் கலையாகத் திகழ்வது புலியாட்டம்.
- பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் ஒன்று.
- புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக் கோடுகளையிட்டுத் துணியால் ஆன வாலை இடுப்பில் கட்டி ஆடுவர்.

**21. புலியாட்டத்திற்குரிய அசைவுகளைக் கூறுக.**

- புலியைப் போல நடத்தல்
- எம்பிக் குதித்தல்
- பதுங்குதல்
- நாக்கால் வருடுதல்
- பாய்தல்
- பற்கள் தெரிய வாயைப் பிளந்து உறுமுதல்.



www.tnpscjob.com

**22. தெருக்கூத்து - குறிப்பு வரைக.**

**ஆடுகளம் :**

திறந்த வெளியை ஆடுகளமாக்கி ஆடை, அணி ஒப்பனையுடன் தெருச்சந்திப்புகளிலும் களத்து மேடுகளிலும் நடத்தப்படும் நடனம்.

**ஒருங்கிணைப்பு :**

இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடுகளுடன் கதையை ஒருங்கிணைத்து வழங்குவர்.

**23. கூத்துப்பட்டறை ந. முத்துசாமி பெற்ற விருதுகள் யாவை?**

- இந்திய அரசின் தாமரைத்திரு விருது. (பத்மஸ்ரீ)
- தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது.

**24. 'அருச்சுனன் தபசு' - குறிப்பு வரைக.**

மழை வேண்டி நிகழ்த்தப்படும் தெருக்கூத்தை அருச்சுனன் தபசு என்பர்.

**25. தோற்பாவைக் கூத்து என்றால் என்ன?**

- தோலால் ஆன பாவையைக் கொண்டு நிகழ்த்தும் கலையாதலால் தோற்பாவை எனப் பெயர் பெற்றது.
- தோலில் செய்த வெட்டு வரைபடங்களை விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்துவர்.
- கதைக்கேற்ப மேலும் கீழும், பக்கவாட்டிலும் அசைத்துக் காட்டி உரையாடியும் பாடியும் காட்டுவது தோற்பாவைக் கூத்து.

**26. தோற்பாவைக் கூத்து எவ்வடிவில் மாற்றம் பெற்றுள்ளது?**

கையுறைப் பாவைக்கூத்து, பொம்மலாட்டம்.

**27. கரகாட்டத்தில் பயன்படுத்தபடும் இசைக்கருவிகள் யாவை?**

நையாண்டி மேளம், தவில், நாகசுரம், பம்பை.

**28. கரகாட்டத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

கரகம், கும்பாட்டம், குடக்கூத்து.



## சிறுவினா

**1. பொய்க்கால் குதிரையாட்டம் என்னும் நிகழ்கலை குறித்து நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.**

- "போலச் செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று.
- மரத்தாலான பொய்க்காலில் நின்றுகொண்டும் குதிரைவடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்துகொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம்.
- அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம், 'புரவி ஆட்டம்', 'புரவி நாட்டியம்' என்றும் அழைக்கப்படுகிறது.
- இவ்வாட்டம் இராஜஸ்தானில், 'கச்சிக்கொடி' என்றும் கேரளத்தில், 'குதிரைக்களி' என்றும் அழைக்கப்படுகிறது.

**2. கூத்துப்பட்டறை ந. முத்துசாமி குறித்தெழுதுக.**

- தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர் தான் கூத்துப்பட்டறை ந.முத்துசாமி.
- "நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றார்.

www.tnpscjob.com

- இவர் தமிழ்நாட்டின் வழிவழி நாடகமுறையான கூத்துக்கலையின் ஒப்பனை முறை, கதை சொல்லும் முறைகளையும் எடுத்துகொண்டு புதுவிதமான நாடகங்களை உருவாக்கினார்.
- நாடகத்தில் பயன்படுத்தும் நேரடி இசைமுறையை அறிமுகம்செய்து இசையிலும் மாற்றங்களை நிகழ்த்தினார்.
- இவரின் நாடகங்கள் பெரும் சமூக அரசியல் மாற்றங்களைப் பேசின.
- இவர் இந்திய அரசின் தாமரைத்திரு விருதையும் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றுள்ளார்.

## நெடுவினா

**1. மூன்று நிகழ்கலை கலைஞர்களை நேர்முகம் கண்டு அவர்களது கருத்துகளையும் அவர்களது மறுவாழ்விற்கான வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றையும் குறிப்பிட்டு எழுதுக.**

| குறிப்புச் சட்டம் |
|---|
| அறிமுகம் |
| கலைகள் |
| பெரியசவால் |
| காப்பாற்றுதல் |
| அரசின் உதவி |
| செய்ய வேண்டுவது |
| நிறைவு |

**அறிமுகம்:**

நிகழ்கலை கலைஞர்களில் கரகாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் ஆகியவற்றை நிகழ்த்திக்காட்டும் கலைஞர்களை நேரில் கண்டு, அவர்களின் வாழ்வியல் சூழல்களையும், கலை நிலையையும் குறித்துக் கேட்டறிந்தேன்.

**கலைகள்:**

நாட்டார் வழக்காறுகளை ஆழமாக ஆய்வு செய்த நா.வானமாமலை கூற்றுப்படி, தமிழ்நாட்டில் ஏறக்குறைய 1,026 கலைகள் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் அவை இன்றைக்கு ஒவ்வொன்றாக மறைந்து வருவதோடு, எளிதில் எண்ணிவிடக் கூடிய அளவில் குறைந்துவிட்டதையும் அறிய முடிகிறது.

**பெரியசவால்:**

நிகழ்கலை கலைஞர்கள் சிறுசிறு குழுக்களாக ஒருங்கிணைக்கப்படாமல் எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறார்கள் என்பதையும், எப்போதாவது கிடைக்கின்ற வாய்ப்பினைப் பயன்படுத்தி நிகழ்கலைகளை நிகழ்த்தினாலும், அதனால் வாழ்வை நடத்துவதற்குப் போதுமான வருமானம் கிட்டுவதில்லை. இதனால் வறுமையில் சிக்கியுள்ள பெரும்பாலான கலைஞர்களை வேறுபணிகளை நாடிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. தொலைக்காட்சி மற்றும் நவீன மின்னணு ஊடகங்கள் கோலோச்சுகின்ற இக்காலக்கட்டத்தில் நாட்டுப்புறக் கலைகளும், அவற்றை நிகழ்த்துகின்ற கலைஞர்களும் பெரிய சவால்களை எதிர்காக்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**காப்பாற்றுதல்:**

நிகழ்கலைகளை நிகழ்த்துவதற்கான ஆடை, ஆபரணங்கள் செலவும் அதிகமாக உள்ளது. அரசும் மக்களும் தங்கள் கலைகளை ஊக்குவித்து, வாய்ப்பளித்து, வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதமாய் உதவினால் மட்டுமே கலைகளையும், கலைஞர்களையும் காப்பாற்ற முடியும் என்பது அம்மூன்று கலைஞர்களின் ஒருமித்த குரலில் வெளிப்பட்டது.

www.tnpscjob.com

**அரசின் உதவி:**

தமிழகமெங்கும் உள்ள கலைஞர்களை ஒவ்வொரு கலையின் அடிப்படையிலும் ஆவணப்படுத்தி அவர்களுக்கு முறையான அங்கீகாரம் வழங்குவது மிகவும் தேவையான ஒன்றாகும். நிகழ்கலைகளை மீட்டுருவாக்கம் செய்கின்ற வகையில், கிராமம் கிராமமாகத் தேடிச் சென்று கலைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து ஆவணப்படுத்த வேண்டும். கலைக்குழுக்களை அரசுத்துறையில் முறையாகப் பதிவு செய்யப்பட வேண்டும். எல்லாக் கலைஞர்களுக்கம் அடையாள அட்டை வழங்கி ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

**செய்ய வேண்டுவது:**

நிகழ்கலைகளை ஆவணப்படுத்துவதற்கும், கலைகள் குறித்த வகுப்புகள், கருத்தரங்குகள், விவாதங்கள், உரையாடல் நடத்தவும் நிகழ்கலைகளுக்கான தனிப்பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு, நிகழ்கலைகளுக்கான கலைஞர்கள் உருவாக்கப்பட வேண்டும்.

அரசின் சார்பில் நிகழ்கலைகளுக்கென்று தனிவிழாக்கள் நடத்தப்பட வேண்டும். பள்ளி, கல்லூரிகளிலும் நிகழ்கலைகளை நடத்திட வேண்டும்.

**நிறைவு:**

தமிழரின் பண்பாட்டு அடையாளங்களாக விளங்கும் நிகழ்கலைகளையும், கலைஞர்களையும் ஆதரித்துக் காக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழனுக்கும் உரியது என்பது திண்ணம்.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 132*

1. **நீங்கள் அறிந்த நிகழ்கலைகளை தனியாகவோ குழுவாகவோ வகுப்பறையில் நிகழ்த்துக.**
   (மாணவர் செயல்பாடு)

2. **நீங்கள் வாழும் பகுதியிலுள்ள நிகழ்கலைக் கலைஞர்களை நேர்முகம் கண்டு, அவற்றைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

நிகழ்கலைக் கலைஞர்களிடம் நேர்காணலின் போது நான் கேட்ட சில வினாக்களுக்கு அவர்கள் அளித்த பதிலை நான் இப்போது உங்களுக்கு படித்துக் காட்டுகிறேன்.

கலைஞர்களே! இன்றைய காலக் கட்டத்தில் உங்களது கலைத்தொழில் எந்த அளவிற்கு சிறப்பாக உள்ளது என நான் கேட்ட போது அவர்கள் கூறிய செய்தியானது நாங்கள் மிகவும் தொழிலில் நலிவடைந்துள்ளோம். ஆகவே வறுமை நிலையில் இருக்கிறோம் என்றனர். எப்போதாவது இத்தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்தை மட்டுமே நம்பினால் வாழ்க்கை. ஆகவே இத்தொழிலை விட்டு விட்டு வேறு தொழிலில் ஈடுபடலாம் என்று கருதுகிறோம் எனக் கூறினர்.

மேலும் இக்கலையை நிகழ்த்துவதற்கான ஆடை, ஆபரணங்களின் செலவும் அதிகமாக உள்ளது. அரசும் மக்களும் எங்கள் கலையை ஊக்குவித்து வாய்ப்பளித்தார்களேயானால் இக்கலையை அழியாமல் பாதுகாக்க முடியும் என்றார் மற்றொரு கலைஞர்.

இவ்வாறு வேதனையடையும் நிகழ்கலை கலைஞர்களின் கலையை ஆதரித்து, அவர்களுக்கும் வாய்ப்பளித்து அவர்களை வாழ வைப்போம். கலையைப் பாதுகாப்போம்.



www.tnpscjob.com

இயல் 6 கலை

## கவிதைப் பேழை

# பூத்தொடுத்தல்

- உமா மகேஸ்வரி

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **மலர்கள் தரையில் நழுவும். எப்போது?**

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால் **[விடை: ஆ) தளரப் பிணைத்தால்]**

### குறுவினா

1. **"சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்" - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.**

சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கிற ஒல்லித் தண்டுகளாகக் குறிப்பிடப்படுவோர் பெண்கள். இவர்கள் அமைதியான முறையில் இவ்வுலகத்தைத் தாங்கி நிறுத்தப் போராடும் போராளிகள்.

### சிறுவினா

1. **நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.**

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்<br>காம்புகளின் கழுத்து முறியும்.<br>தளரப் பிணைத்தால்<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான்<br>- நவீன கவிதை | கையாலே பூவெடுத்தா - மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா - மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு - மாரிமுத்துத்<br>தாங்கி மலரெடுத்தாள்.<br>- நாட்டுப்புறப் பாடல் |

**விடை :**

**ஒப்பீடு**

**நவீன கவிதையில்**

பூவின் மென்மை, அழகு, நளினத்தன்மை, எதற்கும் வருந்தாமல் சிரிக்கும் மலரைப் பெண்ணோடு ஒப்பிட்டுள்ளார்.

**நாட்டுப்புறப் பாடலில்**

பெண் தெய்வமாகிய மாரியோடு ஒப்பிட்டுப் பாடப்பட்டுள்ளது.

www.tnpscjob.com

| நவீன கவிதை கருத்து | நாட்டுப்புறப் பாடல் கருத்து |
|---|---|
| ♦ பூவை இறுக்கி முடிச்சிட்டால் காம்பின் கழுத்து முறிவது போல பெண்களின் கழுத்து முறியும். | ♦ மாரியாகிய பெண் தெய்வத்திற்குக் கையாலே பூப்பறித்தால் காம்பு அழுகிவிடும் என்று கையாலே பூப்பறிக்கவில்லை. |
| ♦ தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவுவது போல பெண் தளர்ந்தால் வாழ்வும் நழுவும். | ♦ விரலால் பூப்பறித்தால் பயனற்றதாய் வெம்பிவிடும் என்று விரலால் பூப்பறிக்கவில்லை. |
| ♦ வாசலிலே மரணம் வந்து நின்றாலும் வருந்தாமல் சிரிக்கும் பூவைப் போல பெண்ணும் வருத்தங்கள் வந்தபோது அவற்றைச் சுமையாகக் கருதாமல் குடும்பத்தைக் காப்பாள். | ♦ மேற்கண்ட காரணத்தால் மாரியாகிய பெண் தெய்வத்துக்குத் தங்கத் துரட்டி கொண்டு பூப்பறித்தார். |

மேற்கண்ட இரு பாடலிலும் பெண்ணை மலரோடு ஒப்பிட்டுப் பாடுவதை அறியமுடிகிறது.

## கூடுதல் வினாக்கள்

**இலக்கணக் குறிப்பு.**

**இறுக்கி** - வினையெச்சம்
**தளர** - பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| | |
|---|---|
| **இறுக்கி - இறுக்கு + இ** | **சிரிக்கும் - சிரி + க்+ க் + உம்** |
| **இறுக்கு** - பகுதி | **சிரி** - பகுதி |
| **இ** - வினையெச்சவிகுதி | **க்** - சந்தி |
| | **க்** - எதிர்கால இடைநிலை |
| | **உம்** - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி |

### பலவுள் தெரிக

**1. இந்தப் பூவைத்தொடுப்பது எப்படி? என்ற கவிதையை எழுதியவர்?**
அ) உமா மகேஸ்வரி ஆ) இரா. மீனாட்சி
இ) இந்திர பார்த்தசாரதி ஈ) தாமரை **[விடை: அ) உமா மகேஸ்வரி]**

**2. கவிஞர் உமா மகேஸ்வரி எங்குப் பிறந்தார்?**
அ) மதுரை ஆ) திருநெல்வேலி
இ) சேலம் ஈ) தேனி **[விடை: அ) மதுரை]**

**3. உமா மகேஸ்வரி, தற்போது வாழ்ந்து வருகின்ற மாவட்டம் யாது?**
அ) தேனி, ஆண்டிபட்டி ஆ) மதுரை, அனுப்பானடி
இ) தஞ்சாவூர், வல்லம் ஈ) திருச்சி, உறையூர் **[விடை: அ) தேனி, ஆண்டிபட்டி]**



www.tnpscjob.com

## குறுவினா

**1. 'பூத்தொடுத்தல்' என்னும் கவிதை நூலின் ஆசிரியரைப் பற்றி நீ அறிந்தவற்றைக் கூறுக.**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் பெயர் | : | கவிஞர் உமா மகேஸ்வரி |
| பிறப்பு | : | மதுரை |
| வாழ்ந்து வரும் ஊர் | : | தேனி, ஆண்டிப்பட்டி. |
| நூல்கள் | : | நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை. |

**2. பூக்களைத் தொடுக்கும் போது இறுக்கி முடிச்சிடுவதாலும் தளரப் பிணைப்பதாலும் நிகழ்வது என்ன?**

- இறுக்கி முடிச்சிடுவதால் காம்புகளின் கழுத்து முறியும்.
- தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும்.

**3. பூத்தொடுத்தல் என்னும் கவிதையில் பூவை என்ற சொல் யாரைக் குறிக்கிறது? அப்பூவைத் தொடுப்பது எப்படி?**

- பூவை என்ற சொல் பெண்ணைக் குறிக்கிறது.
- மனமாகிய நுட்பமான நூலால் மட்டுமே தொடுக்க முடியும்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 133

**ஒவ்வொரு நாளும் நீங்கள் பார்க்கும் காட்சிகளில் / எதிர்கொள்ளும் நிகழ்வுகளில் கண்டுணரும் அழகை மூன்று நிமிடங்கள் சொற்களில் விவரிக்க.**

**காக்கையிடம் உணர்ந்தது :**

தினமும் காலையில் வந்து மரத்தின் மீது அமர்ந்திருக்கும் ஒரு காக்கைக்கு உணவிடுவது வழக்கம். காக்கையின் இடது கால் ஊனம். இடது பக்க இறக்கை சரிந்திருக்கும். தன் உடன் வரும் காக்கைகள் செய்யும் அனைத்துச் செயல்களையும் ஊனமுற்ற காக்கையும் செய்ய தெரிந்து கொண்டது குறையிருப்பினும் குறையை மறந்து புதிய முயற்சியில் ஈடுபட வேண்டும்.

**நிறைவு விழாவில் உணர்ந்தது :**

ஒரு பள்ளியில் சிற்றுண்டி உணவகம் நடத்திவந்த தம்பதியினர் வயது முதிர்வு காரணமாக தங்கள் பணியை நிறைவு செய்யும் பொருட்டு காலை இறை வணக்கத்திற்குப் பின் அனைவருக்கும் இனிப்பு வழங்கினர். இனிப்பைப் பெற்றுக் கொண்ட அனைவரும் நன்றி என்ற ஒரு வார்த்தையை மட்டுமே கூறினர். ஆனால் ஒரு சிறுவன் மட்டும், “பாட்டி உடம்பை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்” என்றான். அச்சிறுவன் பிறர் மீது காட்டும் அன்பும் அக்கறையும் பெரியவர்களிடம் இல்லையே.



www.tnpscjob.com

இயல் 6 கலை

கவிதைப் பேழை

# முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

- குமரகுருபரர்

## பாடநூல் வினாக்கள்

### சிறுவினா

1. **வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.**

**வைத்தியநாதபுரி முருகன் செங்கீரை ஆடும் அழகு :**

**கிண்கிணி :**

கால்களில் அணிந்திருந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.

**அரைஞாண் மணி :**

இடையில் அரைஞாண் மணியோடு ஒளி வீசுகின்ற அரை வட்டங்கள் ஆடின.

**சிறு வயிறு :**

பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறு வயிறு சரிந்தாடியது.

**நெற்றிச் சுட்டி :**

பட்டம் கட்டிய நெற்றியில் பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பந்தாடியது.

**குண்டலங்கள் :**

கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடின.

**உச்சிக் கொண்டை :**

உச்சிக் கொண்டை அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளியுள்ள முத்துக்களோடு ஆடியது.

**ஆடுக :**

வைத்திய நாதபுரி முருகனே! செங்கீரை ஆடி அருள்புரிவாயாக.
பவளம் போன்ற உன் திருமேனி ஆட, செங்கீரை ஆடுக.

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **குண்டலமும் குழைகாதும்** | - | எண்ணும்மை |
| **ஆடுக** | - | வியங்கோள் வினைமுற்று |
| **கட்டிய** | - | பெயரெச்சம் |
| **வட்டச் சுட்டி** | - | குறிப்புப் பெயரெச்சம் |
| **செங்கீரை, செம்பொன்னடி** | - | பண்புத் தொகை |
| **பைம்பொன், சிறுகிங்கிணி** | - | பண்புத் தொகை |

www.tnpscjob.com

## பகுபத உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **பதிந்து - பதி + த்(ந்) + த் + உ**<br>பதி - பகுதி<br>த் - சந்தி, 'ந்' ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி | **ஆடுக - ஆடு + க**<br>ஆடு - பகுதி<br>க - வியங்கோள் வினைமுற்று விகுதி |

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழை இயற்றியவர்?**

அ) குமரகுருபரர் ஆ) இராமலிங்க அடிகள்
இ) தாயுமானவர் ஈ) செயங்கொண்டார் **[விடை: அ) குமரகுருபரர்]**

**2. செங்கீரைப்பருவம் பிள்ளைத்தமிழில் எத்தனையாவது பருவம்?**

அ) இரண்டு ஆ) நான்கு
இ) ஐந்து ஈ) ஒன்று **[விடை: அ) இரண்டு]**

**3. குமரகுருபரரின் காலம் ___________ ஆம் நூற்றாண்டு.**

அ) 16 ஆ) 17
இ) 18 ஈ) 19 **[விடை: ஆ) 17]**

**4. குமரகுருபரர் அறிந்திராத மொழியைக் கண்டறிக.**

அ) தமிழ் ஆ) வடமொழி
இ) இந்துஸ்தானி ஈ) மலையாளம் **[விடை: ஈ) மலையாளம்]**

**5. குமரகுருபரர் இயற்றாத நூலைக் கண்டறிக.**

அ) கந்தர் கலிவெண்பா ஆ) நீதிநெறி விளக்கம்
இ) மதுரைக் கலம்பகம் ஈ) திருக்காவலூர்க் கலம்பகம்
**[விடை: ஈ) திருக்காவலூர்க் கலம்பகம்]**

**6. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சகலகலாவல்லி மாலை, திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்களை இயற்றியவர்.**

அ) குமரகுருபரர் ஆ) இராமலிங்க அடிகள்
இ) தாயுமானவர் ஈ) ஞானியாரடிகள் **[விடை: அ) குமரகுருபரர்]**

**7. சிற்றிலக்கியங்களின் வகைகள் ___________.**

அ) 16 ஆ) 64
இ) 96 ஈ) 108 **[விடை: இ) 96]**

**8. பிள்ளைத்தமிழில் இடம் பெறும் பருவங்கள் ___________.**

அ) 8 ஆ) 10
இ) 12 ஈ) 7 **[விடை: ஆ) 10]**

**9. பொருத்திக் காட்டுக :**

i) அரை நாண் - 1. தலையில் அணிவது
ii) சுட்டி - 2. காதில் அணிவது

iii) குண்டலம், குழை - 3. நெற்றியில் அணிவது
iv) சூழி - 4. இடையில் அணிவது
அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2
இ) 4, 2, 1, 3 ஈ) 1, 2, 4, 3 **[விடை: அ) 4, 3, 2, 1]**

10. **ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குப் பொருந்தாத பருவத்தைக் கண்டறிக.**
அ) சிற்றில் ஆ) சிறுபறை
இ) சிறுதேர் ஈ) ஊசல் **[விடை: ஈ) ஊசல்]**

11. **பெண்பாற் பிள்ளைத் தமிழுக்குப் பொருந்தாத பருவத்தைக் கண்டறிக.**
அ) கழங்கு ஆ) அம்மானை
இ) ஊசல் ஈ) சிற்றில் **[விடை: ஈ) சிற்றில்]**

12. **பிள்ளைத்தமிழில் இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் __________.**
அ) 6 ஆ) 7
இ) 8 ஈ) 10 **[விடை: ஆ) 7]**

13. **பிள்ளைத் தமிழில் இருபாலருக்கும் இடையே வேறுபடும் பருவங்கள் __________.**
அ) 6 ஆ) 3
இ) 7 ஈ) 5 **[விடை: ஆ) 3]**

14. **காற்றில் ஆடுவது போன்று மிகவும் மென்மையாகக் குழந்தை ஆடும் பருவம்**
அ) காப்பு ஆ) செங்கீரை
இ) தால் ஈ) சப்பாணி **[விடை: ஆ) செங்கீரை]**

15. **செங்கீரைப் பருவத்தில் குழந்தையின் தலை அசைந்தாடும் மாதம் எது?**
அ) 3 - 4 ஆ) 5 - 6
இ) 7 - 8 ஈ) 9 - 10 **[விடை: ஆ) 5 - 6]**

16. **கிண்கிணி என்ற அணிகலன் அணியும் இடம் __________.**
அ) காலில் ஆ) இடையில்
இ) நெற்றியில் ஈ) காதில் **[விடை: அ) காலில்]**

17. **குண்டலமும், குழைகாதும், ஆடுக.**
**இச்சொற்களுக்கான இலக்கணக் குறிப்பைக் கண்டறிக.**
அ) எண்ணும்மை, வினையெச்சம்
ஆ) எண்ணும்மை, வியங்கோள் வினைமுற்று
இ) முற்றும்மை, வினையெச்சம்
ஈ) உம்மைத்தொகை, வியங்கோள் வினைமுற்று
**[விடை: ஆ) எண்ணும்மை, வியங்கோள் வினைமுற்று]**

18. **'பதிந்து' என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை __________.**
அ) பதி + த்(ந்) + த் + உ ஆ) பதி + த் + த் + உ
இ) பதி + த் + ந் + உ ஈ) பதிந்து + உ **[விடை: அ) பதி+த்(ந்)+த்+உ]**

19. **குமரகுருபரர் எவ்விறைவனைச் செங்கீரை ஆடுமாறு வேண்டுகிறார்?**
அ) சுவாமி மலை முருகன் ஆ) வைத்தியநாத முருகன்
இ) திருக்கழுக்குன்ற முருகன் ஈ) திருச்செந்தூர் முருகன் **[விடை: ஆ) வைத்தியநாத முருகன்]**



www.tnpscjob.com

20. ''கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக் கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட'' - என்ற அடிகளில் இடம்பெற்றுள்ள இலக்கிய நயங்கள் ________.

அ) மோனை, இயைபு ஆ) மோனை, எதுகை
இ) எதுகை, இயைபு ஈ) இயைபு, முரண் **[விடை: அ) மோனை, இயைபு]**

21. 'சிறு பண்டி சரிந்தாடப்' என்பதில் 'பண்டி' என்பதன் பொருள் ________.

அ) வயிறு ஆ) பெருக்கம்
இ) தலை ஈ) சுருக்கம் **[விடை: அ) வயிறு]**

## குறுவினா

1. **குமரகுருபரர் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| **ஆசிரியர் பெயர்** | - | குமரகுருபரர் |
| **காலம்** | - | கி.பி. 17ஆம் நூற்றாண்டு |
| **புலமை பெற்ற மொழிகள்** | - | தமிழ், வடமொழி, இந்துஸ்தானி. |
| **இயற்றிய நூல்கள்** | - | கந்தர்கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை. |

2. **பிள்ளைத்தமிழ் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பிள்ளைத்தமிழ் இரண்டு வகைப்படும். அவை:
ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ்.

3. **ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பத்துப் பருவங்களையும் எழுதுக.**

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்.

4. **பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பத்துப் பருவங்களையும் எழுதுக.**

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல்.

5. **ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் உரிய பொதுவான பருவங்கள் எத்தனை? அவை யாவை?**

பொதுவான பருவங்கள் ஏழு. அவை:
காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி.

6. **பிள்ளைத்தமிழில் குமரகுருபரர் குறிப்பிடும் அணிகலன்கள் யாவை? அவை எவ்விடங்களில் அணியப்படும் என்பதையும் பட்டியலிடுக.**

| அணிகலன்கள் | அணியப்படும் இடம் |
|---|---|
| சிலம்பு, கிண்கிணி | கால் |
| சுட்டி | நெற்றி |
| அரைநாண் | இடையில் அணியப்படும் (இடுப்பு) |
| குண்டலம், குழை | காது |
| சூழி | தலை |

7. **செங்கீரைப் பருவம் குறிப்பு வரைக.**

- செங்கீரைச் செடி காற்றில் ஆடுவது போல குழந்தையின் தலை 5-6ஆம் மாதங்களில் மென்மையாக அசையும்.

♦ இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒரு காலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகம் அசைந்தும் ஆடும்.

**8. பிள்ளைத்தமிழில் பாட்டுடைத் தலைவராகக் கருதப்படுவோர் யார்?**

இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு குழந்தையாகக் கருதிப் பாடப்படும்.

**9. குமரகுருபரர் சுட்டி குறித்து கூறுவது யாது?**

பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பதிந்தாடட்டும்.

## சிறுவினா

**1. பிள்ளைத்தமிழ் குறிப்பு வரைக.**

**வகை :**

96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

**வரையறை :**

இறைவனையோ தலைவரையோ அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதி பாடப்படும். பாட்டுடைத் தலைவனின் செயற்கரிய செயலை எடுத்தியம்பும்.

**வகைகள் :**

இரண்டு வகைப்படும். அவை: ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ்.

**பருவங்களின் எண்ணிக்கை :**

பத்து. பருவத்துக்குரிய 10 பாடல்கள் வீதம் 100 பாடல்கள் உள்ளன.

**ஆண்பால் பிள்ளைத்தமிழின் பருவங்கள் :**

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்.

**பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் :**

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல்.

**பொதுவான பருவங்கள் :**

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, வருகை, முத்தம், அம்புலி.

இயல் 6

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 135*

**1. சந்தநயமிக்க குழந்தைப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து, வகுப்பறையில் பாடி மகிழ்க.**

‘வாசித்துப்’ பழகுவோம் குழந்தைகளே!
‘வார்த்தை தொடரை’ வாசித்து
பழகி மகிழ்வோம் குழந்தைகளே!
‘பேசிப்’ பழகுவோம் குழந்தைகளே!
‘தூய’ தமிழில் பேசிப் பழகுவோம் குழந்தைகளே!
‘எழுதிப்’ பழகுவோம் குழந்தைகளே!
‘எழுத்துப் பிழைகளைத்’ தவிர்ப்போம் குழந்தைகளே!
நூலகம் செல்வோம் குழந்தைகளே!
நூல்களை அறிவோம் குழந்தைகளே!

www.tnpscjob.com

இயல் 6 கலை

கவிதைப் பேழை

# கம்பராமாயணம்

- கம்பர்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?**

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

ஈ) அங்கு வறுமை இல்லாததால் **[விடை: ஈ) அங்கு வறுமை இல்லாததால்]**

### குறுவினா

**1. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'
காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'
கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?**

- 'கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கி விட்டது. அதனைக் காண்பதற்கு எழுந்திடுவாய்' என்று சொல்லி எழுப்பினார்கள்.
- வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையிலே படுத்து உறங்கச் சொல்கிறார்கள்.

### சிறுவினா

**1. 'கடற்கரையில் உப்புக்காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப்பகுதியில் மலைப்பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத்தொழிலும் நடைபெறுகின்றன' - காலப் போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும் பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.**

| நிலம் | தொழில் / உணவுப் பயிர் | இன்றைய வளர்ச்சி |
|---|---|---|
| குறிஞ்சி | மலைநெல், திணை நெல், தேன், கிழங்கு | ஏற்றுமதிப் பொருட்களாக இருக்கின்றன. நாட்டு மருத்துவத் துறையில் தேன் முக்கிய பங்கு வகிக்கிறது. |
| மருதம் | செந்நெல், வெண்ணெல் | உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பெரும்பாலான மக்களின் உணவுப் பொருளாக இருப்பதால் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. |
| நெய்தல் | உப்பு, மீன் | மீன்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் மிகுதியாகி உள்ளன. இத்தொழிற்சாலைகள் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. இங்குப் பதப்படுத்தப்பட்ட மீன்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதைப் போலவே உப்பளங்களில் உள்ள உப்பு சுத்திகரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. |



www.tnpscjob.com

## நெடுவினா

1. **சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.**

**அன்பும் பண்பும் குணச்சித்திரமும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொகுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலை நிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி... தண்டலை மயில்கள் ஆட....**

**இவ்வுரையைத் தொடர்க.**

**“தண்டலை மயில்களாட தாமரை விளக்கத் தாங்கக்,**
**கொண்டல்கண் முழவினேங்க குவளைகண் விழித்து நோக்க,**
**தெண்டிரை யெழினி காட்டத், தேம்பிழி மகரயாழின்**
**வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும்மாதோ.”**

தண்டல மயில்கள் ஆட என்னும் பாடலில் கம்பரின் கவித்திறம்,
சோலையை நாட்டிய மேடையாகவும்
மயிலை நடன மாதராகவும்
குளங்களில் உண்டான அலைகளைத் திரைச்சீலையாகவும்
தாமரை மலரை விளக்காகவும்
மேகக்கூட்டங்களை மத்தளமாகவும்
வண்டுகளின் ஓசையை யாழின் இசையாகவும்
பார்வையாளர்களைக் குவளைமலர்களாகவும் சித்தரித்து
தன் கவித்திறனைச் சான்றாக்குகிறார்.

இந்தப் பாடலில் கம்பனின் சொல்லாட்சி மாண்புறச் செய்கின்றன. கம்பனின் கவித்திறம், தான் சொல்ல வந்ததை விளக்க கையாண்ட உத்திகள் அனைத்தையும் நாம் நினைத்துப் பார்த்தால் கம்பன் தமிழுக்குக் கிடைத்த வரம் எனலாம்.

படைப்பாளி தான் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்லாது, தான் வீழ்ந்த பின்னரும் வாழ்கின்றான் என்றால் மிகையாகாது. அந்த வகையில் கம்பன் இன்றும் தன் சந்தக் கவிதையோடு வாழ்ந்து வருகின்றான்.

**“காலமெனும் ஆழியிலும்**
**காற்றுமழை ஊழியிலும் சாகாது**
**கம்பனவன் பாட்டு, அது**
**தலைமுறைக்கு அவன் எழுதி வைத்த சீட்டு”**

எனக் கண்ணதாசன் கம்பனைப் பாடுகிறார். இது அவரது கவித்திறனுக்குச் சான்று.

கம்பன் கவிகளை எழுதுவதற்கு முன்னர் அவன் ரசிக்கிறான். ரசித்ததை அனுபவித்து, அதனுள் கரைந்து விடாமல் படிக்கும் வாசகனை உள்ளே இழுத்து வருகிறான். தன் ஒவ்வொரு வார்த்தையிலும் ஓசை நயத்தை உருவாக்குகிறான். தம்மை உச்சிக்குக் கொண்டு சேர்க்கிறான்.

உதாரணமாக,

தாடகை என்ற அரக்கியைக் கம்பர் உருவாக்குகிறார்.

**“இறைக்கடை துடித்த புருவங்கள் எயிறு என்னும்**
**பிறைக்கிடை பிறக்கிட மடித்த பிலவாயள**
**மறக்கடை அரக்கி”** – என எவ்வளவு அழகாக தன் கவித்திறனைப் பதிவு செய்கிறார்.

இயல் 6

www.tnpscjob.com

கம்பனின் கவிதை மூலம் பெறும் இன்பங்கள் எத்தனையோ அதில் ஒன்று சந்தம். ஓசை தரும் இன்பம் ஒரு கோடி இன்பம் என்பதற்கு ஏற்ப,

கம்பர் கங்கை காண் படலத்தில்,

**"ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ**
**வேழ நெடும் படை........"**

எனத் தொடங்கும் பாடல் உலக்கையால் மாறி மாறி இடிக்கும் ஒத்த ஓசையில் அமைந்த சந்தம் இடிக்கும் காட்சியைக் கம்பர் கண்முன் எழுப்புகிறார்.

**"உறங்குகின்ற கும்பகன்ன! வுங்கண் மாய வாழ்வெ லாம்**
**இறங்குகின்றது! இன்று காண்; எழுந்திராய்! எழுந்திராய்!**
**கறங்கு போல வில்பிடித்த கால தூதர் கையிலே,**
**உறங்குவாய், உறங்குவாய்! இனிக் கிடந்து உறங்குவாய்!"**

மேற்சொன்ன கவிதைகளை உற்று நோக்கும்போது சந்தக் கவிதையில் சிறகடித்துப் பறக்கும் தமிழ் நெடிய உலகில் கம்பனைத் தவிர வேறு யாருமில்லை என்பதை அறியமுடிகிறது.

## கூடுதல் வினாக்கள்

### இலக்கணக் குறிப்பு.

**தண்டலை, வெய்யோன், நெடுந்திரை, நெடும்படை, புதுமணல்** – பண்புத்தொகைகள்

| | | |
|---|---|---|
| **சண்பகக்காடு** | - | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| **கிடந்து, கடந்து, விழித்து** | - | வினையெச்சங்கள் |
| **நோக்க** | - | பெயரெச்சம் |
| **மறிகடல், விரிசோதி** | - | வினைத்தொகைகள் |
| **எழுந்திராய்! எழுந்திராய்!** | - | அடுக்குத்தொடர் |
| **உறங்குவாய்! உறங்குவாய்!** | - | அடுக்குத்தொடர் |
| **காலதூதர்** | - | உருவகம் |

### பகுபத உறுப்பிலக்கணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **கிடந்து** | - | **கிட + த்(ந்) + த் + உ** | **விழித்து** | - | **விழி + த் + த் + உ** |
| **கிட** | - | பகுதி | **விழி** | - | பகுதி |
| **த்** | - | சந்தி(ந்) ஆனது விகாரம் | **த்** | - | சந்தி |
| **த்** | - | இறந்தகால இடைநிலை | **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **உ** | - | வினையெச்ச விகுதி | **உ** | - | வினையெச்ச விகுதி |
| **உறங்குகின்ற** | - | **உறங்கு + கின்று + அ** | **பிடித்த** | - | **பிடி + த் + த் + அ** |
| **உறங்கு** | - | பகுதி | **பிடி** | - | பகுதி |
| **கின்று** | - | நிகழ்கால இடைநிலை | **த்** | - | சந்தி |
| **அ** | - | பெயரெச்ச விகுதி | **த்** | - | இறந்தகால இடைநிலை |
| | | | **அ** | - | பெயரெச்ச விகுதி |
| **உறங்குவாய்** | - | **உறங்கு + வ் + ஆய்** | | | |
| **உறங்கு** | - | பகுதி | | | |
| **வ்** | - | எதிர்கால இடைநிலை | | | |
| **ஆய்** | - | முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | | | |



www.tnpscjob.com

## பலவுள் தெரிக

1. **பாலகாண்டம் ஆற்றுப்படலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு எது?**
அ) சரயு ஆறு ஆ) கங்கை ஆறு
இ) நர்மதை ஆறு ஈ) யமுனை ஆறு **[விடை: அ) சரயு ஆறு]**

2. **கீழ்க்காண்பனவற்றுள் கொடி வகையைச் சேர்ந்தது எது?**
அ) செண்பகம் ஆ) கமுகு
இ) குருக்கத்தி ஈ) கொன்றை **[விடை: இ) குருக்கத்தி]**

3. **கம்பர் இராமாயணத்திற்கு இட்ட பெயர் எது?**
அ) இராமகாதை ஆ) இராமாயணம்
இ) கம்பராமாயணம் ஈ) இராமாவதாரம் **[விடை: ஈ) இராமாவதாரம்]**

4. **பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.**
அ) பாலகாண்டம் - ஆற்றுப்படலம், நாட்டுப்படலம்
ஆ) அயோத்தியா காண்டம் - கங்கைப் படலம், கங்கை காண் படலம்
இ) யுத்தகாண்டம் - கும்பகருணன் வதைப் படலம்
ஈ) சுந்தர காண்டம் - குகப் படலம் **[விடை: ஈ) சுந்தர காண்டம் - குகப் படலம்]**

5. **'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பெருமைப்படுபவர் ____________.**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) கம்பதாசன் **[விடை: அ) பாரதியார்]**

6. **கம்பர் பிறந்த ஊர் ____________.**
அ) திருவழுந்தூர் ஆ) திருக்கடையூர்
இ) திருவாரூர் ஈ) திருவெண்காடு **[விடை: அ) திருவழுந்தூர்]**

7. **கம்பராமாயணத்திலுள்ள காண்டங்கள் ____________.**
அ) ஆறு ஆ) ஏழு
இ) எட்டு ஈ) ஒன்பது **[விடை: அ) ஆறு]**

8. **கம்பர் பிறந்த நாடு ____________.**
அ) பாண்டிய நாடு ஆ) சோழ நாடு
இ) சேரநாடு ஈ) பல்லவ நாடு **[விடை: ஆ) சோழ நாடு]**

9. **சடையப்ப வள்ளலின் ஊர் ____________.**
அ) தென்காசி ஆ) திருவெண்ணெய் நல்லூர்
இ) திருநெல்வேலி ஈ) திருவழுந்தூர் **[விடை: ஆ) திருவெண்ணெய் நல்லூர்]**

10. **'விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' என்று புகழப்பட்டவர் ____________.**
அ) புகழேந்தி ஆ) செயங்கொண்டார்
இ) கம்பர் ஈ) ஒட்டக்கூத்தர் **[விடை: இ) கம்பர்]**

11. **கம்பர் இயற்றாத நூலைக் கண்டறிக.**
அ) சரசுவதி அந்தாதி ஆ) பதிற்றுப் பந்தாதி
இ) திருக்கை வழக்கம் ஈ) ஏரெழுபது **[விடை: ஆ) பதிற்றுப் பந்தாதி]**



www.tnpscjob.com

12. **சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்ற புலவர் ________.**

அ) கம்பர் ஆ) புகழேந்தி

இ) ஒட்டக்கூத்தர் ஈ) ஔவையார் **[விடை: அ) கம்பர்]**

13. **உறங்குகின்ற கும்பகன்ன! என்னும் பாடல் இடம் பெற்றுள்ள காண்டம் ________ படலம் ________.**

அ) யுத்த காண்டம், கும்பகருணன் வதைப் படலம்

ஆ) பாலகாண்டம், நாட்டுப்படலம்

இ) பாலகாண்டம், ஆற்றுப்படலம்

ஈ) அயோத்தியா காண்டம், கங்கைப் படலம்

**[விடை: அ) யுத்த காண்டம், கும்பகருணன் வதைப் படலம்]**

14. **'தாதுகு சோலைதோறுஞ்' - என்று ஆற்றின் அழகை வர்ணிக்கும் கம்பராமாயணத்தின் காண்டம் எது? படலம் எது?**

அ) பாலகாண்டம், நாட்டுப்படலம்

ஆ) பாலகாண்டம், ஆற்றுப்படலம்

இ) அயோத்தியா காண்டம், கங்கைப் படலம்

ஈ) யுத்த காண்டம் கும்பகருணன் வதைப்படலம் **[விடை: ஆ) பாலகாண்டம், ஆற்றுப்படலம்]**

15. **ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல பாயும் நதியாகப் பாலகாண்டத்தில் குறிப்பிடப்படுவது ________.**

அ) சரயு ஆ) யமுனை

இ) பிரம்மபுத்திரா ஈ) கங்கை **[விடை: அ) சரயு]**

16. **''தண்டலை மயில்களாட'' - என்று இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலை நிகழ்வே நடப்பதால் தோற்றமாகக் கம்பன் எடுத்தியம்பும் காண்டம் ________.**

அ) பாலகாண்டம், நாட்டுப்படலம்

ஆ) பாலகாண்டம், ஆற்றுப்படலம்

இ) அயோத்தியா காண்டம், கங்கைப்படலம்

ஈ) யுத்த காண்டம் கும்பகருணன் வதைப்படலம் **[விடை: அ) பாலகாண்டம், நாட்டுப்படலம்]**

17. **'வண்மையில்லை' என்ற கம்பனின் பாடலால் அறியப்படுவது ________.**

அ) ஒன்றின் இருப்பால் இன்னொன்று அடையாளப்படுகிறது என்பதை

ஆ) பலவற்றின் இருப்பால் சிலவற்றைக் காண இயலாமல் போவதை

இ) அல்வழி நல்வழி அறிதல்

ஈ) இயற்கைக் காட்சிகளை மனிதர்களோடு ஒப்பிடல்

**[விடை: அ) ஒன்றின் இருப்பால் இன்னொன்று அடையாளப்படுகிறது என்பதை]**

18. **'ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவா ரோ?
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ?'
இப்பாடலில் அமைந்த நயங்கள் யாவை?**

அ) எதுகை ஆ) மோனை

இ) முரண் ஈ) அந்தாதி **[விடை: அ) எதுகை]**

19. **பொருத்திக் காட்டுக.**

i) தாதுகு சோலை - 1. ஆற்றுப்படலம்

ii) தண்டலை மயில்களாட - 2. நாட்டுப்படலம்

iii) வெய்யோன் ஒளி - 3. கங்கைப்படலம்
iv) ஆழ நெடுந்திரை - 4. கங்கை காண் படலம்

அ) 1, 2, 3, 4  ஆ) 4, 3, 2, 1
இ) 2, 3, 4, 1  ஈ) 1, 4, 3, 2  **[விடை: அ) 1, 2, 3, 4]**

## குறுவினா

**1. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்கள் யாவை?**
- கல்வியில் பெரியவர் கம்பர்.
- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
- விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்.

**2. கம்பர் இயற்றிய நூல்கள் யாவை?**
- சரசுவதி அந்தாதி
- சடகோபர் அந்தாதி
- திருக்கை வழக்கம்
- ஏரெழுபது
- சிலை எழுபது

**3. கம்பராமாயணம் குறிப்பு வரைக.**
- இராமனது வரலாற்றைக் கூறும் நூல்.
- கம்பர் தம் எழுதிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.
- ஆறு காண்டங்களை உடையது.
- சந்தநயம் மிக்கது.

**4. சரயு ஆறு எவ்விடங்களிலெல்லாம் பரவிப் பாய்ந்ததாக கம்பர் குறிப்பிட்டுள்ளார்?**
- மகரந்தம் சிந்துகின்ற சோலைகள்
- அரும்புகள் மலரும் பொய்கைகள்
- புதுமணல் தடாகங்கள்
- நெல்வயல்கள்

**5. கோசல நாட்டில் எவையெல்லாம் இல்லை? ஏன்?**
- வறுமை இல்லாததால் அங்கே கொடை இல்லை.
- நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால் உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை.
- பொய்மொழி இல்லாததால் மெய்மை தனித்து விளங்கவில்லை.
- கேள்விச் செல்வம் மிகுந்திருப்பதால் அறியாமை இல்லை.

**6. இராமனின் வடிவை எவற்றிற்கெல்லாம் உவமையாக்கியுள்ளார் கம்பர்?**
- மை
- பச்சை நிற மரகதம்
- நீலக்கடல்
- கார்மேகம்

**7. கங்கை காண் படலத்தில் வேடனின் கூற்றை எழுதுக.**
- யானைகள் கொண்ட சேனையைக் கண்டு, புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில் வீரனல்ல நான்.
- இராமனுடைய தோழமையை எண்ணாமல் ஆழமும் பெரிய அலைகளையும் உடைய கங்கை ஆற்றை அவர்கள் தனியே கடந்து போக விடலாமா?
- அவ்வாறு செய்தால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என்று உலகத்தார் என்னைப் பழிசொல்ல மாட்டார்களா? என்று கூறினான்.



www.tnpscjob.com

## சிறுவினா

**1. கம்பர் குறிப்பு வரைக.**

ஆசிரியர் பெயர் : கம்பர்

பிறந்த ஊர் : சோழ நாட்டில் உள்ள திருவழுந்தூர்

ஆதரித்தவர் : திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல்

பெற்ற சிறப்புகள் : கல்வியில் பெரியவர் கம்பர், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்''

இயற்றிய நூல்கள் : கம்பராமாயணம், சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், ஏர் எழுபது, சிலை எழுபது.

**2. இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலை நிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் கவி எவ்வாறு காட்டுகிறது. (அல்லது) மருதம் எவ்வாறு வீற்றிருக்கிறது?**

- குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆடின.
- விரிதாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல் தோன்றின.
- சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழுந்தன.
- மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பது போல் காட்சியளித்தன.
- நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிந்தன.
- மகர யாழின் தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருந்தது.

**3. சரயு ஆறு பாய்ந்து வருவதைக் கம்பர் எவ்வாறு காட்சிப்படுத்துகின்றார்?**

- மகரந்தம் சிந்தும் சோலைகள்,
- மரங்கள் மிகுந்த செண்பகக் காடுகள்,
- அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள்,
- புதுமணல் குளங்கள்,
- குருக்கத்தி வேலியுள்ள பாக்குத் தோட்டங்கள்
- நெல் வயல்கள் - இவை அனைத்தும் பரவிப் பாய்கிறது. சரயு ஆறு, ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களில் பாய்கின்றது.

**4. கும்பகருணனைக் கம்பர் தம் கவிநயத்தால் எவ்வாறு எழுப்புகிறார்?**

- உறங்குகின்ற கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது.
- அதனைக் காணபதற்காக எழுந்திடுவாய்! எழுந்திடுவாய்!
- காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த எமனுக்குத் தூதரானவர் கையில் இனிப்படுத்து உறங்குவாயாக!

## நெடுவினா

**1. கம்பரின் கவிக்காட்சிகளை (வருணனைத் திறம்) விளக்குக.**

**சரயு ஆறு:**

- மகரந்தம் சிந்தும் சோலைகள்,
- மரங்கள் மிகுந்த செண்பகக் காடுகள்,
- அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள்,
- புதுமணல் குளங்கள்,
- குருக்கத்தி வேலியுள்ள பாக்குத் தோட்டங்கள்

- நெல் வயல்கள் – இவை அனைத்தும் பரவிப் பாய்கிறது. சரயு ஆறு, அது ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களில் பாய்கின்றது.

**மருதம் வீற்றிருத்தல்:**

- குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆடின.
- விரிதாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல் தோன்றின.
- சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழுந்தன.
- மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பது போல் காட்சியளித்தன.
- நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிந்தன.
- மகர யாழின் தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருந்தது.

**கும்பகருணனை எழுப்புதல்:**

- உறங்குகின்ற கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது.
- அதனைக் காணபதற்காக எழுந்திடுவாய்! எழுந்திடுவாய்!
- காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த எமனுக்குத் தூதரானவர் கையில் இனிப்படுத்து உறங்குவாயாக!

## கற்பவை கற்றபின்

பக்கம்: 138

**1. கம்பராமாயணக் கதைமாந்தர்களுள் எவரேனும் ஒருவர் குறித்து வகுப்பில் உரையாற்றுக.**

**கதைமாந்தர் : குகன்**

தன் மனைவி சீதையுடனும், தம்பி இலக்குவனுடனும் இராமன் காட்டிற்குச் சென்றான். செல்லும் வழியில் கங்கைக் கரையை அடைந்தான். அங்கே அன்பே வடிவான வேட்டுவத்தலைவன் குகன் இராமனைச் சந்தித்தான்.

போர்க்குணமிக்க குகனானவன் ஆயிரம் படகுகளுக்குத் தலைவன்; கங்கையாற்றுத் தோணித் துறைக்குத் தொன்றுதொட்டு உரிமையுடையவன்; பகைவர்களை அழிக்கும் வில்லாற்றல் பெற்றவன்; மலை போன்ற திரண்ட தோள்களை உடையவன்; துடி என்னும் பறையை உடையவன்; வேட்டை நாய்களைக் கொண்டிருப்பவன்; தோல் செருப்பு அணிந்த பெருங்கால்களை உடையவன் ; கரிய நிறத்தவன். கரிய மேகக் கூட்டம் திரண்டு வந்தாற்போல் மிகுதியான படைபலம் உடையவன்.

இத்தகைய குகன் கங்கைக் கரையின் பக்கத்திலுள்ள சிருங்கிபேரம் என்னும் நகரில் வாழ்பவன். அவன் முனிவர் தவச்சாலையில் உள்ள இராமனைக் காண தேனும் மீனும் கொண்டு சென்றான் (அரசன், குரு, தெய்வம் ஆகியோரைக் காணச் செல்லும் போது வெறுங்கையோடு செல்லலாகாது என்பது தமிழ் மரபு).

இராமனைக் கண்டதும் இருள் போன்ற நீண்ட முடியுடைய தலை மண்ணில் படியக் கீழே விழுந்து வணங்கினான். பின், எழுந்து வாயை கையால் பொத்தி, உடலை வளைத்து அடக்கமாய் நின்றான். இராமன் அவனை தன் அருகில் அமருமாறு கூறியும் மரியாதை நிமித்தமாக அவன் அமரவில்லை.

குகனின் அன்பு மற்றும் மரியாதையைக் கண்ட இராமன் குகனிடம், உள்ளத்து அன்பு முதிர்வினால் நீ கொண்டு வந்த இந்தப் பொருட்கள் எத்தன்மையதாய் இருந்தாலும் அமுதத்தைவிட சிறந்தனவே. அன்பு கலந்ததனால் தூயனவே. நான் இதை ஏற்றுக் கொண்டதே விரும்பி உண்டதற்குச் சமம் என்றான்.

மேலும் குகனிடம், முன்னர் நாங்கள் உடன்பிறந்தோர் நால்வராய் இருந்தோம் ; விரிந்த அன்பினால் உன்னோடு ஐவரானோம் என்றான் இராமன்.



www.tnpscjob.com

இயல் 6 கலை

விரிவானம்

# பாய்ச்சல்

– சா. கந்தசாமி

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. பாய்ச்சல் என்னும் சிறுகதை எந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது?
அ) சா. கந்தசாமியின் கதைகள் ஆ) தக்கையின் மீது நான்கு கண்கள்
இ) சுடுமண் சிலைகள ஈ) தொலைந்து போனவர்கள்
[விடை: ஆ) தக்கையின் மீது நான்கு கண்கள்]

2. பாய்ச்சல் என்னும் சிறுகதையின் ஆசிரியர் __________.
அ) ஜெயகாந்தன் ஆ) சா. கந்தசாமி
இ) ஜெயமோகன் ஈ) அகிலன் [விடை: ஆ) சா. கந்தசாமி]

3. சா. கந்தசாமியின் மாவட்டம் __________ ஊர் __________.
அ) நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆ) தஞ்சாவூர், படைத்தலைவன்குடி
இ) திருச்சி, உறையூர் ஈ) திருவாரூர், வலங்கைமான்
[விடை: அ) நாகப்பட்டினம், மயிலாடுதுறை]

4. சா. கந்தசாமி எந்தக் குறும்படத்திற்கு அனைத்துலக விருதைப் பெற்றுள்ளார்?
அ) தொலைந்து போனவர்கள் ஆ) சூர்ய வம்சம்
இ) சாந்தகுமாரி ஈ) சுடுமண் சிலைகள் [விடை: ஈ) சுடுமண் சிலைகள்]

5. சா. கந்தசாமிக்கு எழுத்துலகில் புகழைப் பெற்றுத் தந்த புதினம் __________.
அ) சாயாவனம் ஆ) சூர்ய வம்சம்
இ) சாந்தகுமாரி ஈ) தொலைந்து போனவர்கள் [விடை: அ) சாயாவனம்]

6. பொருத்திக் காட்டுக. (சா. கந்தசாமியின் படைப்புகள்)
i) தக்கையின் மீது நான்கு கண்கள் - 1. சாகித்திய அகாதெமி விருது
ii) விசாரணைக் கமிஷன் - 2. புதினம்
iii) சுடுமண் சிலைகள் - 3. அனைத்துலக விருது
iv) சூர்ய வம்சம் - 4. சிறுகதைத் தொகுப்பு
அ) 4, 1, 3, 2 ஆ) 4, 3, 2, 1
இ) 3, 4, 2, 1 ஈ) 2, 1, 3, 4 [விடை: அ) 4, 1, 3, 2]

7. பாய்ச்சல் கதையில் இடம் பெறுபவர் __________.
அ) அனுமார் ஆ) இராமன்
இ) வாலி ஈ) இராவணன் [விடை: அ) அனுமார்]

8. சா. கந்தசாமியின் சாகித்ய விருது பெற்ற நூல் __________.
அ) சூர்யவம்சம் ஆ) சாந்தகுமாரி
இ) சாயாவனம் ஈ) விசாரணைக் கமிஷன் [விடை: ஈ) விசாரணைக் கமிஷன்]



www.tnpscjob.com

## நெடுவினா

**1. சா. கந்தசாமியின் 'பாய்ச்சல்' கதையில் வரும் 'அனுமார்' என்ற கலைஞனின் கலைத்திறனை விளக்குக. (அல்லது) அனுமார் ஆட்டம் குறித்து பாய்ச்சல் கதையின் வாயிலாக சா. கந்தசாமி கூறுவன யாவை?**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| தெருமுனை |
| திறமைகள் |
| பக்க வாத்தியம் |
| அனுமார் ஆட்டம் |
| அனுமார் அருகில் அழகு வரல் |
| ஆற்றங்கரை ஓரம் |
| முடிவுரை |

**முன்னுரை:**

புதின எழுத்துகளால் தனது புகழைத் தமிழ் உலகில் முத்திரைப் பதித்து சாகித்திய அகாதெமி விருதுபெற்ற சா. கந்தசாமியின் 'பாய்ச்சல்' கதையில் வரும் அனுமார் கலைஞனின் கலைத்திறனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தெருமுனை:**

தெருமுனையில் தினந்தோறும் எத்தனையோ கலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நடுத்தர மக்களை நம்பி தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள அனுமார் வேடமிட்டு ஒருவன் அனைவரையும் மகிழ்விக்கிறான்.

**திறமைகள்:**

குரங்குபோல ஓடிவந்தான். இரண்டு கால்களையும் மாறிமாறி தலையில் அடித்து வேகமாகக் கைகளை வீசி நடந்தான். கொஞ்சம் தூரம் சென்று கடையில் இருந்த வாழைத் தாரிலிருந்து பழங்களைப் பறித்து அருகில் இருந்தவர்களுக்கெல்லாம் கொடுத்து தானும் ஒரு பழம் சாப்பிட்டான்.

**பக்க வாத்தியம்:**

சதங்கை மேளம், தாளம், நாதசுரம் ஒலிக்க அதற்கு ஏற்றாற்போல் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்தோடினான். நீண்ட வாலை மேலே சுழற்றி தரையில் அடித்து புழுதியைக் கிளப்பினான்.

**அனுமார் ஆட்டம்:**

இசைக்கேற்ப ஆடியவன் தன்னையே மறந்து கைகளை மார்போடு அணைத்துக் கொண்டான். தான் உண்மை அனுமாராக மாறியதை எண்ணி 'கீச் கீச்' என்று கத்திக்கொண்டே பந்தக்காலைப் பற்றிக்கொண்டு மேலே ஏறினான்.

திடீரென மேளமும் நாதசுரமும் ஒலிக்கத் தொடங்கியபோது கூட்டம் திகைத்தது. கண்மூடி கண் திறப்பதற்குள் அனுமார் கீழே குதித்தார். வாலில் பெரிய தீப்பந்தம் கண்டு கூட்டம் பின்வாங்கியது.

அனுமார் கால்களைத் தரையில் அடித்து உடம்பைக் குலுக்கினார். நெருப்பு அலைபாய்ந்தது. கைகளைத் தட்டிக் குட்டிக்கரணம் போட்டான். கூட்டம் பாய்ந்தோடியது. அனுமார் தன் கம்பீரமான தோற்றத்தோடு நின்று சிரித்தார். கூட்டமும் அமைதியானது.

**அனுமார் அருகில் அழகு வரல்:**

அனுமாரால் வாலை வெகு நேரமாகச் சுமக்க முடியாததால் அழகு கையில் கொடுத்துவிட்டு நடக்க ஆரம்பித்தான். வாலைத் தூக்கிக் கொண்டு அழகுவாலும் ஓட முடியவில்லை. வெட்கத்தோடு வாலைப் போட்டுவிட்டு வெளியேறினான்.

www.tnpscjob.com

காரில் வந்தவர் ஹாரன் அடிக்க ஒருவன் காரை மறித்தான். அனுமார் எரிச்சலுற்று அவனை வாலால் பின்னுக்கு இழுத்தான். கார் முன்னே வந்து அனுமாருக்குப் பணம் கொடுக்க அனுமார் வாங்காமல் மேளக்காரனைப் பார்க்க மேளக்காரன் வாங்கி மடியில் வைத்துக் கொண்டான்.

**ஆற்றங்கரை ஓரம்:**

ஆட்டமில்லாமல் அனுமார் நடக்க ஆரம்பித்தபோது கூட்டம் குறைய ஆரம்பித்தது. மேளக்காரன் தவுலைக் கீழே இறக்கி வைத்தான். ஆட்டம் முடிந்தது என்று தீர்மானம் செய்து கூட்டம் முற்றிலும் கலைந்தது. அனுமார் வாயால் மூச்சுவிட்டு ஆலமரத்தில் சாய்ந்துகொண்டார்.

மேளக்காரன் பணத்தைப் பங்கு போட்டுப் பிரித்துக் கொடுத்தான். அனுமார் அதை வாங்கிக் கொண்டு ஆற்றங்கரையோரமுள்ள கோயில் தூணில் சாய்ந்துகொண்டு அனுமார் உட்கார்ந்தார்.

**முடிவுரை:**

இக்கதையில் கூட்டத்தினரை மகிழ்விக்க வந்த அனுமாரின் ஆட்டத்தைக் கண்டு மயங்கி அனுமாரைப் போலத் தானும் ஆடினான் அழகு. அனுமாரோடு ஒன்றிப் போனான். கலைக் கலைக்காகவே என்பதுபோல ஒரு கலைஞன் இன்னொரு கலைஞனை உருவாக்க முடியும் என்பதை 'பாய்ச்சல்' கதையில் வரும் அனுமார் மூலம் அறியமுடிகிறது.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 143*

**1. உங்கள் தெருக்களில் கண்டு மகிழ்ந்த பகல் வேடக் கலைஞர்களைப் போல வேடமிட்டு ஆடல் நிகழ்த்திக் காட்டுக.**

(மாணவர் செயல்பாடு)

**2. மேடைக் கலைஞர்களும் பகல் வேடக் கலைஞர்களும் எதிர் கொள்ளும் இடர்பாடுகள் குறித்து வகுப்பறையில் விவாதிக்க.**

**ஆசிரியர் :**

மாணவர்களே! மேடைக் கலைஞர்களும் பகல் வேடக் கலைஞர்களும் எதிர் கொள்ளும் இடர்பாடுகள் குறித்து உங்களது கருத்து என்ன?

**மாணவர் குழு - 1 :**

ஒப்பனைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் அலங்காரப் பொருட்கள் ஒவ்வாமையை ஏற்படுத்தும் சலங்கைகள் காலில் குத்துவதற்கு வாய்ப்புள்ளது. வித்தைகளைக் காட்டும் போது சில விபத்துகள் நேர வாய்ப்புள்ளது.

**மாணவர் குழு - 2 :**

எத்தொழில் செய்யினும் வருமான நோக்குடன் செய்யப்படுகிறது. நிகழ்கலை கலைஞர்கள் வருமானம் ஈட்டுவதையே முதன்மையாகக் கொண்டவர்கள். உழைப்பதனால் வரும் வருமானம் மகிழச்சியைக் கொடுக்கும் போது, ஏற்படும் பிரச்சனைகளைச் சமாளித்துக் கொள்ள வேண்டியதுதான்.

**ஆசிரியர் :**

எத்தொழில் ஆயினும் வெவ்வேறு விதமான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டும். இவ்வுலகில் நாம் வாழும் வாழ்க்கை நாடகத்தில் நடிகர்களாக இருக்கும் கலைஞர்கள் சந்திக்கும் இடர்பாடுகள் வேறு மாதிரியானவை.

கோமாளிகளாக நடிக்கும் கலைஞர்கள் பிறரின் கேலிக் கூத்துக்கு ஆளாகின்றனர். தங்களுக்குரிய சோகங்கள் எதுவாக இருந்தாலும் அதனை வெளிப்படுத்தாது மக்களை மகிழ்விக்க நினைக்கும் கலைஞர்கள் உயர்ந்தவரே.



www.tnpscjob.com

இயல் கலை 6

கற்கண்டு

# அகப்பொருள் இலக்கணம்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ___________.

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்

ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்

ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

[விடை: இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்]

### குறுவினா

1. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

**முதற்பொருள்:**

| | | |
|---|---|---|
| நிலம் | காடு | முல்லை |
| பொழுது | பெரும்பொழுது - கார்காலம் | சிறுபொழுது - மாலை |

**கருப்பொருள் :**

| | |
|---|---|
| உணவு | வரகு, சாமை. |

2. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருள்களைத் திருத்தி எழுதுக.
உழவர்கள் மலையில் உழுதனர்.
முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

- உழவர்கள் வயலில் உழுதனர்.
- நெய்தல்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர்கள் கடலுக்குச் சென்றனர். (அல்லது) தாழைப்பூச் செடியைப் பார்த்தவாரே பரதவர்கள் கடலுக்குச் சென்றனர்.
- முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாறே இடையர்கள் காட்டுக்குச் சென்றனர்.



www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் சரியான விடை வரிசையைத் தேர்ந்தெடு.**

i) குறிஞ்சி - 1. பேரூர், மூதூர்
ii) முல்லை - 2. பட்டினம், பாக்கம்
iii) மருதம் - 3. சிறுகுடி
iv) நெய்தல் - 4. குறும்பு
v) பாலை - 5. பாடி, சேரி

அ) 3, 4, 1, 2, 5 ஆ) 4, 3, 1, 5, 2
இ) 3, 2, 5, 1, 4 ஈ) 3, 5, 1, 2, 4 **[விடை: ஈ) 3, 5, 1, 2, 4]**

**2. பொருத்தமான விடையைக் கண்டறிக.**

i) குறிஞ்சி - 1. வற்றிய சுனை, கிணறு
ii) முல்லை - 2. மனைக்கிணறு, பொய்கை
iii) மருதம் - 3. காட்டாறு
iv) நெய்தல் - 4. அருவிநீர், சுனைநீர்
v) பாலை - 5. மணற்கிணறு, உவர்க்கழி

அ) 4, 3, 2, 5, 1 ஆ) 5, 4, 1, 2, 3
இ) 4, 3, 5, 1, 2 ஈ) 3, 4, 5, 2, 1 **[விடை: அ) 4, 3, 2, 5, 1]**

**3. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) முல்லை - வரகு, சாமை
ஆ) மருதம் - செந்நெல், வெண்ணெல்
இ) நெய்தல் - தினை
ஈ) பாலை - சூறையாடலால் வரும் பொருள் **[விடை: இ) நெய்தல் - தினை]**

**4. முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுதினைத் தேர்ந்தெடு.**

அ) கார்காலம் ஆ) குளிர்காலம்
இ) முன்பனி ஈ) பின்பனி **[விடை: அ) கார்காலம்]**

**5. ஐந்திணைகளுக்கு உரியன __________.**

i) முதற்பொருள் ii) கருப்பொருள் iii) உரிப்பொருள்

அ) i - சரி ஆ) ii - சரி
இ) மூன்றும் சரி ஈ) iii - மட்டும் சரி **[விடை: இ) மூன்றும் சரி]**

**6. பொருத்திக் காட்டுக.**

i) குறிஞ்சி - 1. கடலும் கடல் சார்ந்த இடமும்
ii) முல்லை - 2. வயலும் வயல் சார்ந்த இடமும்
iii) மருதம் - 3. காடும் காடு சார்ந்த இடமும்
iv) நெய்தல் - 4. மலையும் மலைசார்ந்த இடமும்

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2
இ) 4, 2, 3, 1 ஈ) 3, 4, 2, 1 **[விடை: அ) 4, 3, 2, 1]**



www.tnpscjob.com

**7. மணலும் மணல் சார்ந்த இடமும் - எத்திணைக்குரியது?**

அ) குறிஞ்சி ஆ) முல்லை
இ) நெய்தல் ஈ) பாலை **[விடை: ஈ) பாலை]**

**8. பொழுது எத்தனை வகைப்படும்?**

அ) இரு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஆறு **[விடை: அ) இரு]**

**9. பொருத்திக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| i) கார்காலம் | - | 1. மாசி, பங்குனி |
| ii) குளிர்காலம் | - | 2. மார்கழி, தை |
| iii) முன்பனிக்காலம் | - | 3. ஐப்பசி, கார்த்திகை |
| iv) பின்பனிக்காலம் | - | 4. ஆவணி, புரட்டாசி |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2
இ) 4, 2, 3, 1 ஈ) 3, 4, 2, 1 **[விடை: அ) 4, 3, 2, 1]**

**10. இளவேனிற் காலத்துக்குரிய மாதங்கள் ___________.**

அ) ஆவணி, புரட்டாசி ஆ) சித்திரை, வைகாசி
இ) ஆனி, ஆடி ஈ) மார்கழி, தை **[விடை: ஆ) சித்திரை, வைகாசி]**

**11. ஆனி, ஆடி முதலான மாதங்கள் ___________.**

அ) கார்காலம் ஆ) குளிர்காலம்
இ) இளவேனிற்காலம் ஈ) முதுவேனிற்காலம் **[விடை: ஈ) முதுவேனிற்காலம்]**

**12. பொருத்திக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| i) காலை | - | 1. மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை |
| ii) நண்பகல் | - | 2. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை |
| iii) எற்பாடு | - | 3. காலை 10 மணி முதல் 2 மணி வரை |
| iv) மாலை | - | 4. காலை 6 மணி முதல் 10 மணி வரை |

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 3, 4
இ) 4, 3, 1, 2 ஈ) 2, 1, 4, 3 **[விடை: அ) 4, 3, 2, 1]**

**13. இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை உள்ள சிறுபொழுது ___________.**

அ) எற்பாடு ஆ) மாலை
இ) யாமம் ஈ) வைகறை **[விடை: இ) யாமம்]**

**14. வைகறைக்குரிய கால நேரம் ___________.**

அ) இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை
ஆ) காலை 6 மணி முதல் 10 மணி வரை
இ) காலை 10 மணி முதல் 2 மணி வரை
ஈ) இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை **[விடை: அ) இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை]**

**15. பொருத்திக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| i) குறிஞ்சி | - | 1. கார்காலம் |
| ii) முல்லை | - | 2. குளிர்காலம், முன்பனிக்காலம் |
| iii) மருதம், நெய்தல் | - | 3. இளவேனில், முதுவேனில், பின்பனி |
| iv) பாலை | - | 4. ஆறு பெரும்பொழுதுகள் |

அ) 2, 1, 4, 3 ஆ) 4, 1, 3, 2
இ) 4, 3, 1, 2 ஈ) 2, 4, 3, 1 **[விடை: அ) 2, 1, 4, 3]**



www.tnpscjob.com

**16. நண்பகல் எத்திணைக்குரிய சிறுபொழுது?**

அ) குறிஞ்சி ஆ) முல்லை
இ) நெய்தல் ஈ) பாலை [விடை: ஈ) பாலை]

**17. பொருத்திக் காட்டுக.**

i) குறிஞ்சி - 1. வைகறை
ii) முல்லை - 2. எற்பாடு
iii) மருதம் - 3. யாமம்
iv) நெய்தல் - 4. மாலை

அ) 3, 4, 1, 2 ஆ) 4, 3, 2, 1
இ) 1, 2, 3, 4 ஈ) 3, 2, 1, 4 [விடை: அ) 3, 4, 1, 2]

**18. திணைகளுக்குரிய தெய்வத்தைப் பொருத்திக் காட்டுக.**

i) குறிஞ்சி - 1. கொற்றவை
ii) முல்லை - 2. வருணன்
iii) மருதம் - 3. இந்திரன்
iv) நெய்தல் - 4. திருமால்
v) பாலை - 5. முருகன்

அ) 5, 4, 3, 2, 1 ஆ) 4, 5, 2, 3, 1
இ) 3, 2, 4, 5, 1 ஈ) 1, 2, 3, 4, 5 [விடை: அ) 5, 4, 3, 2, 1]

**19. திணைகளுக்குரிய மக்களைப் பொருத்திக் காட்டுக.**

i) வெற்பன் - 1. குறிஞ்சி
ii) தோன்றல் - 2. முல்லை
iii) ஊரன் - 3. மருதம்
iv) சேர்ப்பன் - 4. நெய்தல்
v) எயினர் - 5. பாலை

அ) 5, 4, 3, 2, 1 ஆ) 4, 5, 2, 3, 1
இ) 3, 5, 4, 1, 2 ஈ) 1, 2, 3, 4, 5 [விடை: ஈ) 1, 2, 3, 4, 5]

**20. பொருத்திக் காட்டுக.**

i) புலி - 1. பாலை
ii) மான் - 2. நெய்தல்
iii) எருமை - 3. மருதம்
iv) முதலை - 4. முல்லை
v) வலியிழந்த யானை - 5. குறிஞ்சி

அ) 5, 4, 3, 2, 1 ஆ) 4, 5, 2, 3, 1
இ) 2, 1, 4, 5, 3 ஈ) 4, 2, 3, 1, 5 [விடை: அ) 5, 4, 3, 2, 1]

**21. பொருத்திக் காட்டுக.**

i) குறிஞ்சி - 1. குரவம், பாதிரி
ii) முல்லை - 2. தாழை
iii) மருதம் - 3. தாமரை, செங்கழுநீர்
iv) நெய்தல் - 4. தோன்றி
v) பாலை - 5. காந்தள்

அ) 5, 4, 3, 2, 1 ஆ) 4, 5, 2, 1, 3
இ) 2, 3, 4, 1, 5 ஈ) 3, 1, 4, 2, 5 [விடை: அ) 5, 4, 3, 2, 1]



www.tnpscjob.com

22. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | குறிஞ்சி | - | 1. அகில், வேங்கை |
| ii) | முல்லை | - | 2. கொன்றை, காயா |
| iii) | மருதம் | - | 3. காஞ்சி |
| iv) | நெய்தல் | - | 4. புன்னை, ஞாழல் |
| v) | பாலை | - | 5. இலுப்பை |

அ) 1, 2, 3, 4, 5 ஆ) 2, 3, 1, 5, 4
இ) 3, 4, 2, 1, 5 ஈ) 5, 4, 3, 2, 1 **[விடை: அ) 1, 2, 3, 4, 5]**

23. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | குறிஞ்சி | - | 1. கடற்காகம் |
| ii) | முல்லை | - | 2. காட்டுக் கோழி, மயில் |
| iii) | மருதம் | - | 3. நாரை, நீர்க்கோழி, அன்னம் |
| iv) | நெய்தல் | - | 4. கிளி, மயில் |
| v) | பாலை | - | 5. புறா, பருந்து |

அ) 4, 2, 3, 1, 5 ஆ) 5, 4, 3, 2, 1
இ) 4, 3, 1, 5, 2 ஈ) 3, 4, 2, 5, 1 **[விடை: அ) 4, 2, 3, 1, 5]**

24. **விளரி யாழ் எத்திணைக்கு உரியது?**

அ) குறிஞ்சி ஆ) மருதம்
இ) நெய்தல் ஈ) பாலை **[விடை: இ) நெய்தல்]**

25. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | குறிஞ்சி | - | 1. துடி |
| ii) | முல்லை | - | 2. மீன் கோட்பறை |
| iii) | மருதம் | - | 3. மணமுழா |
| iv) | நெய்தல் | - | 4. ஏறுகோட்பறை |
| v) | பாலை | - | 5. தொண்டகம் |

அ) 5, 4, 3, 2, 1 ஆ) 4, 5, 2, 1, 3
இ) 3, 4, 5, 2, 1 ஈ) 3, 5, 1, 2, 4 **[விடை: அ) 5, 4, 3, 2, 1]**

26. **செவ்வழிப்பண், பஞ்சுரப்பண் முதலியனவற்றுக்குரிய திணைகள் முறையே ________.**

அ) நெய்தல், பாலை ஆ) குறிஞ்சி, முல்லை
இ) மருதம், நெய்தல் ஈ) மருதம், பாலை **[விடை: அ) நெய்தல், பாலை]**

27. **முல்லை நிலமக்களின் உணவுப் பொருள்கள் ________.**

அ) வெண்நெல், வரகு ஆ) மலைநெல், திணை
இ) வரகு, சாமை ஈ) மீன், செந்நெல் **[விடை: இ) வரகு, சாமை]**

## குறுவினா

1. **பொருள் இலக்கணம் குறிப்பு வரைக.**

- பொருள் என்பது ஒழுக்க முறை.
- தமிழர் வாழ்வியல் ஒழுக்கங்களை அகம், புறம் என வகுத்தனர்.
- இவற்றைப் பற்றிக் கூறுவதே பொருள் இலக்கணம்.

www.tnpscjob.com

**2. அகத்திணை என்றால் என்ன?**

அன்புடைய தலைவன் தலைவி இடையிலான உறவு நிலைகளைக் கூறுவது அகத்திணை ஆகும்.

**3. அன்பின் திணைகள் எத்தனை? அவை யாவை?**

அன்பின் திணைகள் ஐந்து. அவை:

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

**4. அகத்திணைக்குரிய பொருள்கள் எத்தனை? அவை யாவை?**

அகத்திணைக்குரிய பொருள்கள் மூன்று. அவை:

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்.

**5. முதற்பொருளாவது யாது?**

நிலமும் பொழுதும் முதற்பொருள் ஆகும்.

**6. ஐவகை நிலங்களின் அமைவிடங்களைக் கூறுக.**

- குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்
- முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
- மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்
- நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்
- பாலை - சுரமும் சுரம் சார்ந்த இடமும்

**7. பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பொழுது இரண்டு வகைப்படும் அவை: பெரும்பொழுது, சிறுபொழுது.

**8. பெரும்பொழுதிற்குரிய கூறுகள் எத்தனை? அவை யாவை?**

பெரும்பொழுதிற்குரிய கூறுகள் ஆறு. அவை:

கார்காலம், குளிர்காலம், முன்பனிக் காலம், பின்பனிக் காலம், இளவேனிற் காலம், முதுவேனிற் காலம்.

**9. சிறுபொழுதிற்குரிய கூறுகள் எத்தனை? அவை யாவை?**

சிறுபொழுதிற்குரிய கூறுகள் ஆறு. அவை:

காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை.

**10. எற்பாடு பிரித்து பொருள் எழுதுக.**

எல் + பாடு = எற்பாடு

எல் - சூரியன்

பாடு - மறையும் நேரம்

பொருள் - சூரியன் மறையும் நேரம்.

**11. கருப்பொருள் என்றால் என்ன?**

ஒவ்வொருநிலத்திற்கும்உரியதெய்வம்முதலாகத்தொழில்வரையில்தனித்தனியேகுறிப்பிடப்படுவது கருப்பொருள்.

**12. உரிப்பொருள் என்றால் என்ன?**

கவிதைகளில் கருப்பொருளின் பின்னணியில் அமைத்துப் பாடப்படுவது உரிப்பொருள்.

**13. ஐவகை நிலத்திற்குரிய தெய்வங்களின் பெயர்களைக் கூறு.**

குறிஞ்சி - முருகன்

முல்லை - திருமால்

இயல் 6

மருதம் - இந்திரன்
நெய்தல் - வருணன்
பாலை - கொற்றவை

**14. ஐவகை நிலத்திற்குரிய பறைகளைக் கூறு.**

குறிஞ்சி - தொண்டகப் பறை
முல்லை - ஏறுகோட்பறை
மருதம் - மணமுழா, நெல்லரிகிணை
நெய்தல் - மீன் கோட்பறை
பாலை - துடி

**15. ஐவகை நிலத்திற்குரிய யாழ், பண் எவை என எழுதுக.**

| நிலம் | யாழ் | பண் |
|---|---|---|
| குறிஞ்சி | குறிஞ்சி யாழ் | குறிஞ்சிப்பண் |
| முல்லை | முல்லை யாழ் | முல்லைப்பண் |
| மருதம் | மருத யாழ் | மருதப்பண் |
| நெய்தல் | விளரி யாழ் | செவ்வழிப்பண் |
| பாலை | பாலை யாழ் | பஞ்சுரப்பண் |

**16. ஐவகை நிலத்திற்குரிய மரம், பூ ஆகியவற்றை எழுதுக.**

| நிலம் | மரம் | பூ |
|---|---|---|
| குறிஞ்சி | அகில், வேங்கை | குறிஞ்சி, காந்தள் |
| முல்லை | கொன்றை, காயா | முல்லை, தோன்றி |
| மருதம் | காஞ்சி, மருதம் | செங்கழுநீர், தாமரை |
| நெய்தல் | புன்னை, ஞாழல் | தாழை, நெய்தல் |
| பாலை | இலுப்பை, பாலை | குரவம், பாதிரி |

**17. ஐவகை நிலத்திற்குரிய மக்கள் யாவர்?**

| நிலம் | மக்கள் |
|---|---|
| குறிஞ்சி | வெற்பன், குறவர், குறத்தியர் |
| முல்லை | தோன்றல்,ஆயர், ஆய்ச்சியர் |
| மருதம் | ஊரன், உழவர், உழத்தியர் |
| நெய்தல் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் |
| பாலை | எயினர், எயிற்றியர் |

**18. ஐவகை நிலத்திற்குரிய விலங்குகள் மற்றும் பறவைகள் எவை எனக் கூறுக.**

| நிலம் | விலங்குகள் | பறவைகள் |
|---|---|---|
| குறிஞ்சி | புலி, கரடி, சிங்கம் | கிளி, மயில் |
| முல்லை | முயல் மான், புலி | காட்டுக்கோழி, மயில் |
| மருதம் | எருமை, நீர் நாய் | நாரை, அன்னம், நீர்க்கோழி |
| நெய்தல் | முதலை, சுறா | கடற்காகம். |
| பாலை | வலியிழந்த யானை | புறா, பருந்து. |



www.tnpscjob.com

19. ஐவகை நிலத்திற்குரிய தொழில்கள் யாவை?

| நிலம் | தொழில்கள் |
|---|---|
| குறிஞ்சி | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் |
| முல்லை | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் |
| மருதம் | நெல்லரிதல், களை பறித்தல் |
| நெய்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் |
| பாலை | வழிப்பறி, நிரை கவர்தல் |

20. ஐவகை நிலத்திற்குரிய நீரை எழுதுக.

| நிலம் | நீர் |
|---|---|
| குறிஞ்சி | அருவி நீர், சுனைநீர் |
| முல்லை | காட்டாறு |
| மருதம் | மனைக்கிணறு, பொய்கை |
| நெய்தல் | மணற்கிணறு, உவர்க்கழி |
| பாலை | வற்றிய சுனை, கிணறு |

21. ஐவகை நிலத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

| நிலம் | உணவுப் பொருள்கள் |
|---|---|
| குறிஞ்சி | மலைநெல், தினை |
| முல்லை | வரகு, சாமை |
| மருதம் | செந்நெல், வெண்ணெல் |
| நெய்தல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் |
| பாலை | சூறையாடலால் வரும் பொருள் |

22. ஐவகை நிலத்திற்குரிய ஊர்களைக் குறிப்பிடுக.

| நிலம் | ஊர் |
|---|---|
| குறிஞ்சி | சிறுகுடி |
| முல்லை | பாடி, சேரி |
| மருதம் | பேரூர், மூதூர் |
| நெய்தல் | பட்டினம், பாக்கம் |
| பாலை | குறும்பு |



## சிறுவினா

1. பெரும்பொழுதிற்குரிய கூறுகளை எழுதி, அக்காலத்திற்கான மாதங்களையும் எழுதுக.

| பெரும்பொழுது | மாதம் |
|---|---|
| கார்காலம் | ஆவணி, புரட்டாசி |
| குளிர்காலம் | ஐப்பசி, கார்த்திகை |
| முன்பனிக் காலம் | மார்கழி, தை |
| பின்பனிக் காலம் | மாசி, பங்குனி |
| இளவேனிற் காலம் | சித்திரை, வைகாசி |
| முதுவேனிற் காலம் | ஆனி, ஆடி |

www.tnpscjob.com

(1 ஆண்டின் 12 மாதங்களும் இரண்டிரண்டு மாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (12/2 = 6)

**2. சிறுபொழுதிற்குரிய கூறுகளையும் அதற்குரிய நேர அளவுகளையும் குறிப்பிடுக.**

| சிறுபொழுது | நேரம் |
|---|---|
| காலை | காலை 6 மணி முதல் காலை 10 மணி வரை |
| நண்பகல் | காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை |
| எற்பாடு | பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை |
| மாலை | மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை |
| யாமம் | இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை |
| வைகறை | இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை |

(1 நாளின் 24 மணி நேரமும் நான்கு நான்கு மணி நேரமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (24/4=6)

**3. ஐந்திணைக்கும் உரிய பெரும்பொழுதுகள் சிறுபொழுதுகளை எழுதுக.**

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக் காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 146*

**1. பண்டைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறையையும் இன்றைய தமிழரின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு ஒவ்வொருவர் கருத்தையும் பதிவு செய்து பொதுக் கருத்தை அறிக.**

**பதிவு செய்யப்பட்ட கருத்துகள்**

**கருத்து - 1:**

காலங்கள் பல கடந்தாலும் தெய்வநம்பிக்கையும் சடங்குகளும் பெருமளவில் மாறாமல் உள்ளன. மக்களிடம் சாதி வெறியும் சாதி வேறுபாடும் நீங்கியுள்ளது. மக்கள் அனைவரும் சமம் என்ற நிலைக்குத் தகுதிபடுத்தப்பட்டுள்ளனர்.

**கருத்து - 2:**

உணவு முறையில் இன்று பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இயற்கையான தானியங்கள் மற்றும் பயிறு வகை உணவுப் பொருட்கள் பெரும்பாலும் உணவில் சேர்க்கப்படுவதில்லை.

**கருத்து - 3:**

தங்களுக்கெனக் குறித்த பண், யாழ், பறை ஆகியவற்றைப் பண்டைத் திணை நில தமிழர் பயன்படுத்தியதைப் போல இன்று யாரும் பயன்படுத்தவில்லை. அவரவர் விருப்பமான இசையை இசைப் பள்ளிகளுக்குச் சென்று கற்றுக் கொள்கின்றனர்.

**கருத்து - 4:**

திணை நிலத்திற்கேற்ப தொழில்கள் இன்று பெருமளவில் நடைபெறவில்லை. இயற்கையின் விளையாட்டால் இன்று மருதநில தொழில்களும், நெய்தல் நில தொழில்களும் மிகவும்



www.tnpscjob.com

நலிவடைந்துள்ளன. மேலும் அதிக வருமானம் பெறுவதற்காகவும் கல்வியறிவு பெற்று வருவதால் உயர் பதவியில் உள்ள வேலைகளைத் தேடி நகரங்களுக்கு மக்கள் இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

**கருத்து - 5:**

இயற்கைச் சூழலும், நாகரிக வளர்ச்சியும், காலச் சூழலும் எல்லா நிலைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தினாலும் பண்டைய மரபு மாறாது வாழ்கின்றனர்.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 149

**மொழிபெயர்ப்பு:**

**Koothu**

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient Puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

**தமிழாக்கம் :**

**கூத்து**

தெருக்கூத்து அதன் பெயருக்கு ஏற்றாற்போல் தெருவில் நடக்கும் ஒரு மிகச் சிறந்த கலை. இதில் கிராமப்புற கலைஞர்கள் பங்கேற்கிறார்கள். இதன் கதைகள் பழங்காவியமான இராமாயணம், மகாபாரதம் மற்றும் பழைய புராணங்களில் இருந்து எடுக்கப்படுகிறது. இதில் பழைய பாடல்களை உரையாடலுடன் கலைஞர்கள் உருவாக்குகிறார்கள். பதினைந்து முதல் இருபது கலைஞர்கள் சிறிய இசைக்குழுவாக சேர்ந்ததுதான் தெருக்கூத்து கூட்டம். இசைக்குழுவில் பல பாடல்கள் இருந்தபோதும் கலைஞர்கள் தங்கள் குரலிலேயே பாடுவார்கள். கலைஞர்கள் மிகச் சிறந்த உடையலங்காரமும் ஒப்பனையும் செய்திருப்பர். கிராமப் புறங்களில் கூத்துமிகவும் பிரபலமானது.

**தொடர்களை அறிவோம், தொடர்ந்து செய்வோம்.**

1. **ஒரு தனிச்சொற்றொடரில் ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ இருந்து ஒரு பயனிலையைக் கொண்டு அமையும்.**

   எ.கா: அ) மேரி பேருந்திற்காகக் காத்திருந்தார்.

   ஆ) மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்.

2. **தொடர் சொற்றொடர், ஒன்றுக்கும் மேற்பட்ட பயனிலையைக் கொண்டு இருக்கும்.**

   எ.கா: அ) இனிய நிலா பேச்சுப் போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசைத் தட்டிச் சென்றார்.

   ஆ) அன்வர் அரங்கத்திற்கு வந்து நாடகம் பார்த்து, மகிழ்ச்சி அடைந்தார்.

3. **கலவைச் சொற்றொடரில் கருத்து முழுமை பெற்ற ஒரு முதன்மைத் தொடரும் கருத்து முழுமை பெறாத துணைத் தொடர்களும் கலந்து வரும்.**

   எ.கா: அ) மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்.

   பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான் - முதன்மைத் தொடர்

   மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் - துணைத் தொடர்



www.tnpscjob.com

**தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

**எ.கா: அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.**

*(தனிச் சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடர்களாக மாற்றுக)*

அழைப்பு மணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

1. **இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.**

   *(தொடர் சொற்றொடராக மாற்றுக)*

   இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்கங்களில் அடுக்கி, புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

2. **ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்து கொண்டு, கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.**

   *(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)*

   ஒயிலாட்டக் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக் கொள்வர். காலில் சலங்கை அணிந்து கொள்வர். கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

3. **கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.**

   *(கலவைச் சொற்றொடராக மாற்றுக)*

   கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

4. **ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.**

   *(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)*

   ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அதனால் அறையில் உள்ளவர்களின் பேச்சு தடைபட்டது.

**பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றுக.**

**புதிர்:**

உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை இரு முறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும்.

**விடை:**

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்வலாக இருந்தால், கையில் மிச்சம் உள்ள பிஸ்கட்டே வெயிட் குறைவானது. பட் ஆனால், ஒரு பக்க தராசுத் தட்டு உயர்ந்தால் அதில் உள்ள மூன்று பிஸ்கட்களில் ஒன்று வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஸ்கட்டுகளை மட்டும் எடுத்துவைத்துக்கொள்ளுங்கள். இரண்டு தட்டுகளிலும் ஒரு ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட்!

| பிறமொழிச் சொல் | தமிழ்ச் சொல் | பிறமொழிச் சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|
| **கோல்டு பிஸ்கட்** | **தங்கக்கட்டி** | பட் | ஆனால் |
| ஈக்வலாக | சமமாக | ரிப்பீட் | மறுபடி |
| வெயிட் | எடை | ஆன்சரை | விடையை |
| எக்ஸ்பெரிமெண்ட் | பரிசோதனை | ஆல் தி பெஸ்ட் | எல்லாம் நன்மைக்கே! |



www.tnpscjob.com

**நாட்டுப்புறப் பாடலுக்கேற்ற சூழலை எழுதுக.**

| | |
|---|---|
| **பாடல்** | ஆத்துக்கு அந்தண்டையே அண்ணன் வச்ச தென்னம்புள்ளே!<br>அண்ணன் புள்ள வாடினாலும் யம்மாடி! யம்மாடி!<br>தென்னம்புள்ள வாடலாமோ? யம்மாடி! யம்மாடி!<br>வாய்க்காலுக்கு மேற்குப்புறம் வஞ்சி வெச்ச வாழைமரம்<br>வஞ்சி மனம் வாடினாலும் யம்மாடி! யம்மாடி!<br>வாழைமரம் வாடலாமோ யம்மாடி! யம்மாடி! |
| **பாடல் எழுந்த சூழல்** | அண்ணன் நட்டு வைத்த தென்னம்பிள்ளைக்கு நீர் பாய்ச்ச, தோப்புக்கு வரும் பெண்ணொருத்தி குழந்தையை இடுப்பிலிருந்து இறக்கி விடுகிறாள். தென்னம்பிள்ளைக்கு நீரூற்றுகிறாள்; குழந்தை அழுகிறது; பாடலைப் பாடியவாறே குழந்தையின் அழுகையை நிறுத்தி நீரூற்றுதலைத் தொடர்கிறாள். |

| பாடல் | பாடல் எழுந்த சூழல் |
|---|---|
| பாடறியேன் படிப்பறியேன் - நான்தான்<br>பள்ளிக்கூடம் தானறியேன்<br><br>ஏடறியேன் எழுத்தறியேன் - நான்தான்<br>எழுத்துவகை தானறியேன்.<br><br>படிக்க நல்லா தெரிஞ்சிருந்தா - நான்தான்<br>பங்காளிய ஏன் தேடுறேன்<br><br>எழுத நல்லா தெரிஞ்சிருந்தா - நான்தான்<br>எதிராளிய ஏன் தேடுறேன்<br><br>நாலெழுத்துப் படிச்சிருந்தா - நான்தான்<br>நாலு தேசம் போய்வருவேன்.<br><br>நாலு பக்கம் வரப்புக்குள்ளே - தெனமும்<br>நான் பாடுறேன் தெம்மாங்குதான். | வரப்புகளுக்கு இடையே நின்று வயலில்<br>வேலை செய்யும் விவசாயி ஒருவன் தனக்கு<br>கல்வியறிவு இல்லாத காரணத்தினால்<br>தான் படும் துன்பத்தை எண்ணி<br>வருத்தத்துடன் பாடிக்கொண்டே<br>தன் வேலையைச் செய்கிறான். |

**மனிதனுக்கும் மலருக்குமான மணம் வீசும் இந்த நயவுரையைத் தொடர்க.**

வண்டுகளை ஈர்க்கும் வாசனையில்
பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே!
பூச்சியைக் கவரும் வண்ணங்களில்
பூக்களிடம் விழுவது மனிதர்களே!
**அழகைக் கொண்டு பூ கவருகையில்**
**அப்பூக்களிடம் பணிவது மனிதர்களே!**



www.tnpscjob.com

கட்டுரை எழுதுக.

**உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.**

**தலைப்பு: அரசுப் பொருட்காட்சி**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| நுழைவுச்சீட்டு |
| பல்துறைக் கண்காட்சி அரங்கங்கள் |
| அங்காடிகள் |
| இராட்டினம் |
| பிற பொழுதுபோக்கு அம்சங்கள் |
| முடிவுரை |

**முன்னுரை:**

எங்கள் ஊரில், அரசுப் பொருட்காட்சி, திலகர் திடலில் நடைபெற்றது. அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்தேன். அங்கே நான் கண்டு மகிழ்ந்த நிகழ்வுகளைக் குறித்து இக்கட்டுரை மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**நுழைவுச்சீட்டு:**

பொருட்காட்சி நடைபெறும் இடத்தின் உள்ளே செல்ல நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. பத்து வயதிற்குட்பட்டவர்களுக்கு ரூ.30ம் பத்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ரூ.50ம் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. நாங்கள் நுழைவுச் சீட்டைப் பெற்றுக்கொண்டு உள்ளே சென்றோம்.

**பல்துறைக் கண்காட்சி அரங்கங்கள்:**

வனத்துறை அரங்கத்தின் உள்ளே சென்று பார்த்தபோது வனத்தையும் வனவிலங்குகளையும் பாதுகாப்பது எப்படி என்பதை அறிந்து கொண்டேன். கல்வித்துறை அரங்கத்தின் உள்ளே கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் கல்வியின் சிறப்பு குறித்து பல்வேறு செய்திகள் அச்சிடப்பட்டு ஒட்டிவைக்கப்பட்டிருந்தது. போக்குவரத்துத் துறையினர் சாலை விதிகளைக் கடைபிடிப்பதால் சாலை விபத்துக்களைத் தவிர்க்கலாம் என்ற விழிப்புணர்ச்சி கருத்துகளைத் தெரிவித்தன. மேலும் சில போக்குவரத்துக் குறியீடுகளுக்கான விளக்கங்களும் அளிக்கப்பட்டன. காவல்துறை, பொதுப்பணித் துறை, மீன் வளத்துறை, வேளாண்துறை போன்று பல்வேறு துறை சார்ந்த அரங்கங்களின் உள்ளே சென்று அரிய பல தகவல்களை அறிந்து கொண்டேன்.

**அங்காடிகள்:**

வீட்டு உபயோகப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் எனப் பல்வேறு பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கிக் கொள்ளும் அளவுக்கு பல்வேறு அங்காடிகள் இருந்தன. தேவையான சில பொருட்களை மட்டும் நான் வாங்கிக் கொண்டேன். உணவு அங்காடிக்குச் சென்று டெல்லி அப்பளம், மிளகாய் பஜ்ஜி, பனிக்கூழ் முதலியவற்றை வாங்கி உண்டேன்.

**இராட்டினம்:**

மயக்கம் தந்தாலும் மனதை மயக்கும் இராட்டினங்களைச் சுழலும் முறையை வியப்புடன் பார்த்தேன். இராட்சச இராட்டினம், குவளை இராட்டினம், டிராகன் இராட்டினம் எனப் பல்வேறு இராட்டினங்களைக் கண்டு மகிழ்ந்தேன்.

**பிற பொழுதுபோக்கு அம்சங்கள்:**

பேய்வீடு, பாதாளக் கிணறு, முப்பரிமாண திரையரங்கம், மீன்காட்சி சாலை, பனிவீடு எனப் பல்வேறு அரங்கங்கள் இருந்தன. இப்பொழுதுபோக்கு அரங்கங்களுக்குத் தனித்தனியே கட்டணம் வசூலிக்கப்பட்டது.



www.tnpscjob.com

**முடிவுரை:**

பல மணி நேரமாக சுற்றிப்பார்த்த களைப்பு ஒருபுறம் இருந்தாலும் அங்கே சுற்றிப்பார்த்த மகிழ்ச்சி மிகுதியுடன் வீடு திரும்பினேன்.

> **“எண்ணிலாக் காட்சி**
> **எண்ணமெல்லாம் மாட்சி**
> **அதுவே பொருட்காட்சி”**

## மொழியோடு விளையாடு

*பக்கம்: 152*

**தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

1. வானம் **கருக்கத்** தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் **சிவந்தது.**
3. **வெள்ளை** மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் **பச்சை** புல்வெளிகளில் கதிரவனின் **மஞ்சள்** வெயில் பரவிக் கிடக்கிறது.
5. வெயிலில் அலையாதே; உடல் **கருத்து** விடும்.

**பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

| |
|---|
| தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து. |

1. விரட்டாதீர்கள் - பறவைக்கு **மரம் வீடு**
   வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவை தரும் **மரவீடு.**
2. காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்.**
   சோலைப் பூவினில் வண்டினம் **கவிழும்.**
3. மலை முகட்டில் மேகம் **தங்கும்.** அதைப்
   பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்.**
4. வாழ்க்கையில் **தோற்பவை** மீண்டும் வெல்லும் - இதைத்
   தத்துவமாய்த் **தோற்பாவை** கூத்து சொல்லும்.
5. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைதட்டலே **விருது.** - அதில்
   வரும்காசு குறைந்தாலும் அதுவே அவர் **விருந்து.**

**அகராதியில் காண்க.**

**தால்** – தாலாட்டு, தாலு, பிள்ளைக் கவியுறுப்பில் ஒன்று, நாக்கு.

**உழுவை** – ஒருவித மீன், புலி, தும்பிலி

**அகவுதல்** – அழைத்தல், ஆடல், கூத்தாடல்

**ஏந்தெழில்** – மிக்க அழகு, மிகு வனப்பு

**அணிமை** – சமீபம், அருகு, நுட்பம், நுண்மை.



www.tnpscjob.com

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**ஆடுவோம்**

ஆடுவோம் மேள தாளத்தோடு
பாடுவோம் பம்பை உடுக்கையோடு
வண்ண துணியசைத்து
வட்டமாய் ஆடுவோம்
வரிசையாய் ஆடுவோம்
எண்ணக் கருத்துகளை
எல்லோருக்கும் கூறுவோம்
துன்பமில்லா சமுதாயத்தை
ஆட்டத்தால் ஆக்குவோம்

## செயல்திட்டம்

**பல்வேறு நிகழ்கலைகளின் ஒளிப்படங்களைத் தொகுத்து வகுப்பறையில் கண்காட்சி அமைக்க.**
(மாணவர் செயல்பாடு)

## நிற்க அதற்குத் தக

**அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர்க் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள். ஒருபுறம் திரைகட்டித் தோற்பாவைக் கூத்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இன்னொருபுறம் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்டம் ஆடியவாறு மண்ணின் மக்கள்... இக்கலைகளை நீங்கள் நண்பர்களுடன் பார்த்தவாறும் சுவைத்தவாறும் செல்கிறீர்கள்.**

**இக்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விருப்பனவற்றை வரிசைப்படுத்துக.**

| | |
|---|---|
| 1 | பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன். |
| 2 | எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன். |
| 3 | **திருமண விழாக்களில் பொய்க்கால் ஆட்டத்தை நடத்துவேன்.** |
| 4 | **விளையாட்டு விழாக்களில் புலியாட்டம் நடத்த ஏற்பாடு செய்வேன்.** |
| 5 | **கோவில் திருவிழாக்களில் கரகாட்டம், காவடியாட்டம் முதலிய கலைநிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்வேன்.** |
| 6 | **விடுமுறை காலங்களில் தெருக்கூத்து நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்வேன்.** |

**கலைச்சொல் அறிவோம்**

- Aesthetics – அழகியல், முருகியல்
- Terminology – கலைச்சொல்
- Artifacts – கலைப் படைப்புகள்
- Myth – தொன்மம்

இயல் 6

www.tnpscjob.com

இயல் 6 கலை

வாழ்வியல் இலக்கியம்

# திருக்குறள்

- திருவள்ளுவர்

## கற்பவை கற்றபின்

பக்கம்: 157

**1. புதுக்கவிதையையும் குறளையும் ஒப்பிட்டுப் பேசுக.**

**புதுக்கவிதை**

தக்காளியையும் வெண்டைக்காயையும்
தள்ளுவண்டிக்காரர் தராசில் நிறுக்கையில்,
தள்ளி நிற்கும் பிள்ளை
அவசியமாகக் கேட்கும் ஆயிரம் ரூபாயை
எப்படிக் கொடுக்க என்றே அவர் மனம் யோசிக்கும்...
"அத்தனைக் காய்களையும் விற்றால்தான்
மீதி ஐந்நூறாவது மிஞ்சும்; என்ன செய்ய..."
காய்கறி வாங்கியவர்
கவனக் குறைவாகக் கொடுத்த
இரண்டாயிரம் ரூபாயைக்
கூப்பிட்டுத் தந்துவிட்டுப்
பிள்ளைக்கு உதவ யாரிடம் கேட்கலாம்.
என்பதை அடுத்தபடி யோசிக்கும் அவர் மனம்!

**குறள்**

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்

**விடை:**

மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருளை ஏற்றுக் கொள்ளாது நீக்கிவிடவேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றிய தள்ளுவண்டிக்காரர், காய்கறி வாங்கியவர் கவனக் குறைவாகக் கொடுத்த இரண்டாயிரம் ரூபாயைத் தான் வைத்துக்கொள்ளாமல் காய்கறி வாங்கியவரை கூப்பிட்டுக் கொடுத்துவிட்டார்.

தனக்குத் தேவை மிகுதியாய் இருப்பினும் தள்ளுவண்டிக்காரர் அறவழியில் செல்வம் ஈட்டுவதையே விரும்புகிற ஒரு நல்ல பண்பாளர்.

**2. குறிப்புகள் உணர்த்தும் குறளின் கருத்துகள் குறித்துக் கலந்துரையாடுக.**

**அ) அவருக்கு அறிவும் அதிகம்; படிப்பும் அதிகம். யாராலும் அவருக்கெதிராகச் செயல்பட முடியாது.**

**பாலா** : அவருக்கு அறிவும் அதிகம்; படிப்பும் அதிகம். யாராலும் அவருக்கெதிராகச் செயல்பட முடியாது.

**மாலா** : குடிசெயல்வகை எனும் அதிகாரத்தில் 1022 வது குறளில் விடாமுயற்சி, சிறந்த அறிவாற்றல் உடையவனின் குடி உயர்ந்து விளங்கும்.



www.tnpscjob.com

ஆ) **எச்சரிக்கையாக இரு. பழகுபவர்களில் யார் நல்லவர், யார் கெட்டவர் என்று கண்டுபிடிப்பது கடினம்.**

**பாலா** : எச்சரிக்கையாக இரு. பழகுபவர்களில் யார் நல்லவர், யார் கெட்டவர் என்று கண்டுபிடிப்பது கடினம்.

**மாலா** : கூடாநட்பு எனும் அதிகாரத்தில் 828-ஆவது குறளில் பகைவர் நம்மை வணங்கி தொழும்போது கையில் கத்தியை மறைத்து வைத்திருப்பர்.

இ) **அவர் குடும்பம் முன்னேறியிருப்பதற்குக் காரணம் தொடர்ந்து முயல்வதும் தொழிலில் அவருக்கிருந்த அறிவும்.**

**பாலா** : அவர் குடும்பம் முன்னேறியிருப்பதற்குக் காரணம் தொடர்ந்து முயல்வதும் தொழிலில் அவருக்கிருந்த அறிவும்.

**மாலா** : ஊக்கமுடைமை எனும் அதிகாரத்தில் 594-ஆவது குறளில் தளராது ஊக்கத்தோடு உழைப்பவனிடம் தொடர்ந்து செல்வம் சேரும்.

ஈ) **வாழ்க்கையில் நன்றாகப் பொருளீட்டு. அதுதான் உன்னைத் தாழ்வாக நினைத்தவர்களின் வாயை அடைக்கும்.**

**பாலா** : வாழ்க்கையில் நன்றாகப் பொருளீட்டு. அதுதான் உன்னைத் தாழ்வாக நினைத்தவர்களின் வாயை அடைக்கும்.

**மாலா** : பொருள் செயல்வகை எனும் அதிகாரத்தில் 759-ஆவது குறளில் பொருள் இல்லாரை எல்லாரும் இகழ்வர். பொருள் உள்ளவரை போற்றுவர்.

உ) **அக்கம்பக்கத்தாரிடம் பழகாமல் ஒதுங்கியே இருந்தார்; துணைக்கும் யாரும் இல்லை. இப்போது உடம்பு சரியில்லாதபோது யாருமின்றித் திண்டாடுகிறார்.**

**பாலா** : அக்கம்பக்கத்தாரிடம் பழகாமல் ஒதுங்கியே இருந்தார்; துணைக்கும் யாரும் இல்லை. இப்போது உடம்பு சரியில்லாதபோது யாருமின்றித் திண்டாடுகிறார்.

**மாலா** : அன்புடைமைஎனும்அதிகாரத்தில்80-ஆவதுகுறளில்பிறரிடம்அன்போடுவாழ்பவன் உயிருடன் கூடிய உடல். அன்பு இல்லாததால் உயிரற்ற எலும்புக்கூட்டுக்குச் சமம்.



## குறுவினா

1. **கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.**

தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லவர்.

2. **தஞ்சம் எளியன் பகைக்கு - இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| தஞ் / சம்<br>நே / நே | நேர் நேர் | தேமா |
| எளி / யர்<br>நி / நே | நிரை நேர் | புளிமா |
| பகைக் /கு<br>நி / நே | நிரை நேர் (நிரைபு) | பிறப்பு |

www.tnpscjob.com

**3. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?**

இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால் இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.

**4. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.**

**பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்**

- **கூரான ஆயுதம்:** உழைத்ததால் கிடைத்த ஊதியம்.
- **காரணம்:** இதுவே அவனுடைய பகைவனை வெல்லும் கூரான ஆயுதம்.

## சிறுவினா

**1. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.**

**கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்ட தமைச்சு.**

தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயல்களைச் செய்தல் வேண்டும்.

**வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ**
**டைந்துடன் மாண்ட தமைச்சு.**

மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சிமுறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைய வேண்டும்.

**சூழ்ச்சிகள்:**

**மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்**
**யாவுள முன்நிற் பவை.**

இயற்கையான நுண்ணறிவு, நூலறிவு இவற்றை உடையவர்கள் முன் எந்த சூழ்ச்சியும் நிற்க இயலாது.

**நடைமுறைகளை அறிதல்:**

**செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்**
**தியற்கை அறிந்து செயல்.**

ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருப்பினும் உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

**2. பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

**பகைவரின் வலிமை:**

**அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்**
**என்பரியும் ஏதிலான் துப்பு.**

சுற்றத்தாரிடம் ஒருவர் அன்பு இல்லாமலும் பொருந்திய துணை இல்லாமலும் வலிமை இல்லாமலும் இருந்தால் அவரால் பகைவரின் வலிமையை எதிர்கொள்ள முடியாது.

இயல் 6

**பகைக்கு ஆட்படல்:**

> **அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்**
> **தஞ்சம் எளியன் பகைக்கு.**

மனதில் துணிவு இல்லாதவராய் அறிய வேண்டியவற்றை அறியாதவராய் பொருந்தும் பண்பு இல்லாதவராய், பிறருக்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.

## கூடுதல் வினாக்கள்

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **கருவியும் காலமும்** | - | எண்ணும்மை |
| **அருவினை** | - | பண்புத்தொகை |
| **வன்கண்** | - | பண்புத்தொகை |
| **வந்த பொருள்** | - | பெயரெச்சம் |
| **வாராப்பொருளாக்கம்** | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| **செய்க** | - | வியங்கோள் வினைமுற்று |
| **நீள்வினை** | - | வினைத்தொகை |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| | | |
|---|---|---|
| **அறிந்த** | - | **அறி + த்(ந்) + த் + அ** |
| **அறி** | - | பகுதி |
| **த்(ந்)** | - | சந்தி (ந்) ஆனது விகாரம் |
| **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **அ** | - | பெயரெச்ச விகுதி |

| | | |
|---|---|---|
| **அறியான்** | - | **அறி + ய்+ ஆன்** |
| **அறி** | - | பகுதி |
| **ய்** | - | உடம்படுமெய்யாகிய சந்தி |
| **ஆன்** | - | ஆண்பால் வினைமுற்று விகுதி |

| | | |
|---|---|---|
| **செய்வான்** | - | **செய் + வ்+ ஆன்** |
| **செய்** | - | பகுதி |
| **வ்** | - | எதிர்கால இடைநிலை |
| **ஆன்** | - | ஆண்பால் வினைமுற்று விகுதி |



## பலவுள் தெரிக

1. **பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
   **பொருளல்ல தில்லை பொருள் - இக்குறளில் பயின்று வரும் அணி.**
   அ) உவமையணி
   ஆ) பொருள் பின்வருநிலையணி
   இ) சொல்பின்வருநிலை அணி
   ஈ) சொற்பொருள் பின் வருநிலையணி **[விடை: ஈ) சொற்பொருள் பின் வருநிலையணி]**

2. **குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
   **றுண்டாகச் செய்வான் வினை - இக்குறளில் பயின்று வரும் அணி.**
   அ) உவமையணி ஆ) உருவக அணி
   இ) வேற்றுமை அணி ஈ) பிறிது மொழிதல் அணி **[விடை: அ) உவமையணி]**

www.tnpscjob.com

3. **இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது - இக்குறளில் பயின்று வரும் அணி.**

அ) சொல்பின்வருநிலையணி ஆ) சொற்பொருள் பின்வருநிலையணி
இ) உவமையணி ஈ) உருவக அணி

**[விடை: ஆ) சொற்பொருள் பின்வருநிலையணி]**

4. **மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில். - இக்குறளில் பயின்று வரும் அணி.**

அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) வேற்றுமை அணி ஈ) பிறிதுமொழிதல் அணி **[விடை: அ) உவமை அணி]**

5. **தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழு கலான் - இக்குறளில் பயின்று வரும் அணி.**

அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) வஞ்சப்புகழ்ச்சி அணி
இ) உவமை அணி ஈ) உருவக அணி **[விடை: ஆ) வஞ்சப்புகழ்ச்சி அணி]**

6. **சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல
கொல்லப் பயன்படும் கீழ் - இக்குறளில் பயின்று வரும் அணி.**

அ) உவமையணி ஆ) உருவக அணி
இ) பிறிதுமொழிதல் அணி ஈ) வேற்றுமை அணி **[விடை: அ) உவமையணி]**

7. **சிறந்த அமைச்சருக்குரிய குண நலன்கள் __________.**

அ) 4 ஆ) 5
இ) 3 ஈ) 6 **[விடை: ஆ) 5]**

8. **விடாமுயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி __________.**

அ) உயர்ந்து விளங்கும் ஆ) தாழ்ந்து நிற்கும்
இ) வாடிப் போகும் ஈ) காணாமல் நீங்கும் **[விடை: அ) உயர்ந்து விளங்கும்]**

## குறுவினா

1. **எத்தகைய அரிய செயலைச் செய்பவர் அமைச்சர் ஆவார்?**

தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயலைச் செய்பவர் அமைச்சர் ஆவார்.

2. **அமைச்சருக்குரிய ஐந்து சிறப்புகள் யாவை?**

மனவலிமை, குடிகளைக் காத்தல், விடா முயற்சி, ஆட்சி முறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல்.

3. **எத்தகைய அமைச்சர்களுக்கு முன் சூழ்ச்சியும் நிற்க இயலாது?**

இயற்கையான நுண்ணறிவு, நூலறிவு இவற்றையுடைய அமைச்சர்களுக்கு முன் சூழ்ச்சிகள் நிற்க இயலாது.

4. **ஓர் அமைச்சன் எவற்றை அறிந்து செயல்பட வேண்டும்?**

ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல் வழியாக அறிந்திருப்பினும் உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

5. **அறத்தையும் இன்பத்தையும் தருவது எது?**

முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்ந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் தரும் இன்பத்தையும் தரும்.



www.tnpscjob.com

**6. எத்தகையப் பொருளை ஏற்காமல் நீக்கிவிட வேண்டும்?**

மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருளை ஏற்றுக்கொள்ளாமல் நீக்கிவிட வேண்டும்.

**7. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது? ஏன்?**

- ஒரு பொருட்டாக மதிக்கத்தகாதவரையும் பிறர் மதிக்கும்படி செய்வது செல்வம்.
- ஏனெனில் அதைவிட சிறந்த பொருள் உலகில் வேறு எதுவும் இல்லை.

**8. ஒருவன் தன் கைப்பொருளைக் கொண்டு செய்யும் செயல் எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?**

ஒருவன் தன் கைப்பொருளைக் கொண்டு செய்யும் செயலானது, குன்றின் மேல் பாதுகாப்பாக நின்று கொண்டு யானைப் போரைக் காண்பது போன்றது.

**9. கூடா நட்பு குறித்து வள்ளுவர் கூறும் செய்தி யாது?**

**கொலைக் கருவி:**

பகைவரின் தொழுது நிற்கும் கையின் உள்ளேயும் கொலைக் கருவி மறைந்து இருக்கும்.

**வஞ்சகம்:**

பகைவரின் அழுத கண்ணீர் உள்ளும் வஞ்சகம் மறைந்து இருக்கும்.

**10. யாரால் பகைவரின் வலிமையை எதிர்கொள்ள முடியாது?**

- சுற்றத்தாரிடம் அன்பு இன்மை
- பொருந்திய துணை இன்மை
- வலிமையின்மை

இவற்றையுடையவன் பகைவரின் வலிமையை எதிர்கொள்ள முடியாது.

**11. ஒருவன் எளிதில் பகைக்கு ஆட்பட நேரிடுவது எப்போது?**

- மனதில் துணிவு இல்லாமை
- அறியவேண்டியவற்றை அறியாமை
- பொருந்தும் பண்பு இல்லாமை
- பிறருக்குக் கொடுத்து உதவாமை

மேற்கண்ட செயல்களை உடையவர் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.

**12. ஒருவனது குடி எப்போது சிறந்து விளங்கும்?**

விடாமுயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி சிறந்து விளங்கும்.

**13. உலகத்தார் யாரை உறவாகக் கொண்டு போற்றுவார்?**

குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச் செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகக் கொண்டு போற்றுவர்.

**14. வறுமையின் கொடுமை முழுவதும் கெடும் எப்போது?**

தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் கண்டால் வறுமையின் கொடுமை முழுவதும் கெடும்.

**15. யாருடைய உள்ளத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். எப்போது?**

இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால் இரப்பவரின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும்.



www.tnpscjob.com

**16. மக்கள், கயவர் குறித்து வள்ளுவர் கூறிய செய்தி யாது?**

கயவர் மக்களைப் போலவே இருப்பர், கயவர்க்கும் மக்களுக்கும் உள்ள ஒப்புமை 'தோற்றம்' மட்டுமே வேறெந்த ஒப்புமையும் கிடையாது.

**17. தேவர் கயவர் குறித்து வள்ளுவர் கூறியது யாது?**

தேவரும் கயவரும் ஒரே தன்மையர், தேவர்களைப் போலவே கயவர்களும் தாம் விரும்புவனவற்றைச் செய்து வாழ்வர்.

**18. சான்றோர் கயவர் குறித்து வள்ளுவர் கூறுவது யாது?**

- ஒருவர் தம் குறையை சொல்வதைக் கேட்டவுடன் உதவி செய்பவர் சான்றோர்.
- கரும்பைப் பிழிவது போல நெருக்கிப் பிழிந்தால்தான் பயன்படுபவர் கயவர்.

**19. ஒரு செயலைச் செய்வதற்கு உலகியல் நடைமுறைகளும் அவசியம் என்பதை வலியுறுத்தும் திருக்குறளை எழுதுக.**

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.

**20. ஒரு பொருளாக மதிக்கத்தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வது செல்வம் என்பதை எடுத்துரைக்கும் திருக்குறளை எழுதுக.**

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

**21. மலைமேல் நின்றுகொண்டு யானைப் போரைக் காண்பதனை உவமையாகக் குறிப்பிடும் திருக்குறளை எழுதுக.**

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

**22. குற்றமற்றுக் குடிப்பெருமையுடன் வாழ்பவரை உலகத்தார் போற்றுவர் என்பதற்குச் சான்றாக விளங்கும் திருக்குறளை எழுதுக.**

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

**23. வறுமையைப் போன்று துன்பம் தருவது வறுமையே என்று குறிப்பிடும் குறட்பாவினை எழுதுக.**

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

## சிறுவினா

**1. 'குடிச்செயல் வகை என்னும் அதிகாரத்தில் குடி உயர்வு குறித்து வள்ளுவர் கூறும் கருத்து யாது?**

**இடைவிடாமல் பின்பற்றுதல்:**

விடா முயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி உயர்ந்து விளங்கும்.

**குற்றம் இன்மை:**

குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச் செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகக் கொண்டு போற்றுவர்.



www.tnpscjob.com

**2. 'கயமை' என்னும் அதிகாரத்தில் கயவர் குறித்து வள்ளுவர் குறிப்பிடும் செய்தி யாது?**

**தோற்ற ஒப்புமை:**

கயவருக்கும் மக்களுக்கும் உள்ள ஒப்புமை தோற்றம் மட்டுமே. வேறெதிலும் ஒப்புமை இல்லை.

**தேவரும் கயவரும்:**

தேவரும் கயவரும் ஒரே தன்மையர், தேவர்களைப் போலவே கயவர்களும் தீயவற்றைச் செய்து ஒழுகுவார்கள்

**சான்றோர்-கயவர்:**

ஒருவர் தம் குறையைச் சொல்வதைக் கேட்ட உடனேயே உதவி செய்பவர் சான்றோர். கரும்பைப் பிழிவது போல நெருக்கிப் பிழிந்தால்தான் பயன்படுவர் கயவர்.

**3. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள் - இப்பாடலில் பயின்று வந்துள்ள அணியைக் கூறி விளக்குக.**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி சொல் பின்வருநிலையணி.

**அணி இலக்கணம்:**

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது சொல் பின்வருநிலையணி ஆகும்.

**விளக்கம்:**

இக்குறட்பாவில் பொருள் என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து பொருட்டு, செல்வம் ஆகிய வெவ்வேறு பொருளைத் தருகிறது. எனவே, இக்குறட்பா சொல் பின்வருநிலையணிக்குச் சான்றாகிறது.

**4. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
**றுண்டாகச் செய்வான் வினை - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைக் கூறி விளக்குக.**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி உவமை அணி.

**அணி இலக்கணம்:**

செய்யுளில் உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும், உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

**உவமை** : மலைமேல் பாதுகாப்பாக நின்று யானைப் போரைக் காணுதல்.

**உவமேயம்** : தன் கைப்பொருளைக் கொண்டு செய்யும் செயல்.

**உவம உருபு** : அற்று (வெளிப்படை)

**பொருத்தம்:**

தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது மலைமேல் பாதுகாப்பாக நின்று கொண்டு யானைப் போரைக் காண்பது போன்றது ஆகும்.

**5. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைக் கூறி விளக்குக.**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி சொற்பொருள் பின்வருநிலையணி.

**அணி இலக்கணம்:**

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**பொருள் விளக்கம்:**

இக்குறட்பாவில் இன்மை என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து வறுமை என்னும் ஒரே பொருளைத் தருகிறது. எனவே, இக்குறட்பா சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.



www.tnpscjob.com

6. **தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான் - இக்குறட்பாவில் பயின்றுவந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி வஞ்சப் புகழ்ச்சி அணி.

**அணி இலக்கணம்:**

பழிப்பது போலப் புகழ்வதும் புகழ்வது போலப் பழிப்பதும் வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும். இப்பாடல் புகழ்வது போலக் கூறி பழிக்கப்பட்டுள்ளது.

**விளக்கம்:**

புகழ்தல் – கயவர் தேவர்களுக்கு ஒப்பாவர்
பழித்தல் – கயவர் தம் மனம் போன போக்கில் தீய செயல்களைச் செய்வார்கள்.

தேவரும் கயவரும் ஒரு தன்மையர். தேவரைப் போல கயவரும் தாம் விரும்பியதைச் செய்வர் என்று புகழ்வது போல பழித்தலால், இஃது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆயிற்று.

7. **மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில் - இப்பாடலில் பயின்று வந்துள்ள அணியைக் கூறி விளக்குக.**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி உவமை அணி ஆகும்.

**அணி இலக்கணம்:**

செய்யுளில் உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் மற்றொரு வாக்கியமாவும், உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

**உவமை** : கயவர் மக்களைப் போல் இருப்பர்.
**உவமேயம்** : தோற்ற ஒப்புமையைத் தவிர வேறெந்த ஒப்புமையும் இல்லை.
**உவம உருபு** : அன்ன (வெளிப்படை)

**விளக்கம் :**

கயவர் மக்களைப் போலவே இருப்பர்; கயவருக்கும் மக்களுக்கும் உள்ள தோற்ற ஒப்புமையை வேறெதிலும் காண்பதில்லை.

## நெடுவினா

1. **பொருள் செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துக்களைக் கூறுக.**

**சிறந்த பொருள்:**

ஒரு பொருட்டாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வது செல்வம். செல்வத்தை அல்லாமல் சிறந்த பொருள் உலகில் வேறு எதுவும் இல்லை.

**அறம், இன்பம்:**

முறையறிந்து தீமையற்ற வழியில் ஒருவர் சேர்த்த செல்வம் அவருக்கு அறத்தையும் தரும், இன்பத்தையும் தரும்

**நீக்கவேண்டிய பொருள்:**

மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருளை ஏற்றுக்கொள்ளாமல் நீக்கிவிட வேண்டும்.

**தன் கைப்பொருள்:**

தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவன் செய்யும் செயலானது, குன்றின்மேலே பாதுகாப்பாக நின்று கொண்டு யானைப் போரைக் காண்பதற்குச் சமமாகும்.

**கூர்மையான ஆயுதம்:**

பொருளை ஈட்ட வேண்டும். பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் பொருளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.



www.tnpscjob.com

இயல் 7 நாடு

உரைநடை உலகம்

# சிற்றகல் ஒளி

- ம.பொ.சிவஞானம்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' -மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ________.

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

**[விடை: அ) திருப்பதியும் திருத்தணியும்]**

2. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ________.

அ) திருக்குறள் ஆ) புறநானூறு

இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம் **[விடை: ஈ) சிலப்பதிகாரம்]**

### குறுவினா

1. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

- ம.பொ.சி. வறுமையிலும் நூல் வாங்குவதற்குப் பணமில்லாத நிலையில் பழைய புத்தகங்கள் வாங்கி படிப்பார்.
- இவர் விருப்பமான புத்தகங்களைக் குறைந்த விலைக்கு வாங்கும் வழக்கம் உள்ளவர்.
- இவர் பல வேளைகளில் பட்டினி கிடந்து புத்தகம் வாங்கி ஆனந்தம் அடைவார்.
- செவி வழியாகவும் இலக்கிய அறிவைப் பெற்றார்.

2. பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியிடுக.

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி.

### சிறுவினா

1. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

**இடம்:**

'ம.பொ.சி'யின் தன் வரலாற்றுப் பகுதியில் சிற்றகல் ஒளி என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளன.

**பொருள்:**

ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திர மாநிலத் தலைவர்கள் விரும்பினர். அதனை எதிர்த்து ம.பொ.சி. கூறிய கூற்று இது.



www.tnpscjob.com

**விளக்கம்:**

மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர். அப்பொழுது, தமிழ் மாநிலத்தின் தலைநகர் 'சென்னை' என்ற தீர்மானத்தை முன்மொழிந்தனர்.முன்மொழிந்து 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என்று ம.பொ.சி முழங்கினார். 25.03.1953இல் பிரதமர் நேரு, சென்னை தமிழருக்கே என்ற உறுதிமொழியை, நாடாளுமன்றத்தில் நடுவணரசின் சார்பில் வெளியிட்டார்.

## நெடுவினா

1. **நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.**

### 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்'

**அறிமுகவுரை:**

- அன்பார்ந்த அவையோரே! வணக்கம்! மாணவப் பருவத்திலே நாம் நாட்டுப்பற்று உடையவர்களாய் இருத்தல் வேண்டும் என்பதைப் பற்றி உங்கள் முன் பேச வந்துள்ளேன்.

**மாணவப்பருவமும் நாட்டுபற்றும்:**

- 'நாட்டின் எதிர்காலம் வகுப்பறைகளில் தான் வடிவமைக்கப்படுகிறது' என்றார் நேரு. எனவே கல்வியோடு நாட்டுப்பற்றையும் கண் எனப் போற்றி வளர்க்க வேண்டும்.
- சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற நாட்டு விழாக்களைக் கொண்டாடும்போது நம் முன்னோர்கள் சிந்திய கண்ணீரையும், செந்நீரையும், விலைமதிப்பில்லாத உயிரையும் மனப்பூர்வமாக உணர்ந்து செயல்படவேண்டும்.
- அகிம்சை, தீண்டாமை விலக்கு, கதர் விற்பனை, வெள்ளையனே வெளியேறு போன்ற விடுதலைப் போராட்ட முறைகளை நாம் மறத்தல் கூடாது.
- செக்கடியிலும், சிறைச்சாலையிலும் நம் வீரர்கள் பட்ட துன்பத்தை எண்ணிப் பார்த்து, நாட்டு விழாக்களைக் கொண்டாடும் போது நாட்டைக் காக்கும் சூளுரை ஏற்பவர்களாகவும், அதனைச் செயல்படுத்துகிறவர்களாகவும் நாம் இருத்தல் வேண்டும்.
- மாணவப் பருவத்தில் நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர்படை ஆகியவற்றில் இணைந்து நாட்டுப்பற்றையும், சேவை மனப்பான்மையையும் நாம் வளர்த்துக் கொண்டால் நாளை நாம் நாட்டைக் காக்கும் நல்லோராய், பற்றாளராய் மாற முடியும்.
- கல்வி, பொருளாதாரம், தொழில் பெருக்கம் இவற்றில் நாம் அக்கறை உடையவர்களாய் இருப்பதும் நாட்டுப்பற்றே.
- நம் நாட்டின் உயர்வுக்கும் முற்போக்கு வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக இருப்பவைகளை முறியடித்து கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் கவனம் செலுத்தல் வேண்டும்.
- சொந்த நலன் கருதி சொந்த நாட்டையே சீரழிக்கும் கயவர் போல் இல்லாமல் இருத்தல் வேண்டும்.

**நிறைவுரை:**

- நாடு நமக்கு என்ன செய்தது என்பதை நினைக்காமல் நாட்டிற்காக நாம் நல்ல செயல்கள் செய்வோம் எனக் கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.



www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. ம.பொ.சி.க்கு பெற்றோர் இட்ட பெயர் ________.
அ) சிவஞானம் ஆ) ஞானப்பிரகாசம்
இ) பிரகாசம் ஈ) பொன்னுசாமி **[விடை: ஆ) ஞானப்பிரகாசம்]**

2. சிவஞானி என்ற பெயரே ________ என நிலைத்தது.
அ) சிவஞானம் ஆ) சிவப்பிரகாசம்
இ) ஞானப்பிரகாசம் ஈ) பிரகாசம் **[விடை: அ) சிவஞானம்]**

3. ம.பொ.சியின் இயற்பெயரை மாற்றிய முதியவர் ________.
அ) பொன்னுசாமி ஆ) சரவணன்
இ) சரபையர் ஈ) சிவஞானி **[விடை: இ) சரபையர்]**

4. காந்தியடிகள் 'சத்தியாகிரகம்' என்னும் அறப்போர் முறையைத் தொடங்கிய ஆண்டு ________.
அ) 1806 ஆ) 1906
இ) 1916 ஈ) 1919 **[விடை: ஆ) 1906]**

5. ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கான இரண்டு வழிகள் ________.
அ) கல்வி, கேள்வி ஆ) கல்வி, ஓவியம்
இ) கலை, பண்பாடு ஈ) கலை, மேடைப்பேச்சு **[விடை: இ) கலை, பண்பாடு]**

6. 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற தீர்மானத்தை இந்தியப் பேராயக் கட்சி நிறைவேற்றிய நாள் ________.
அ) 1942 ஜனவரி 8 ஆ) 1939 ஆகஸ்டு 8
இ) 1942 ஆகஸ்டு 8 ஈ) 1947 ஆகஸ்டு 18 **[விடை : இ) 1942 ஆகஸ்டு 8]**

7. பசல் அலி ஆணையம் நடுவண் அரசுக்குத் தந்த பரிந்துரை வெளியான நாள் ________.
அ) 1955 அக்டோபர் 10 ஆ) 1957 ஆகஸ்டு 10
இ) 1957 ஆகஸ்டு 10 ஈ) 1949 அக்டோபர் 15 **[விடை : அ) 1955 அக்டோபர் 10]**

8. ஆஸ்டிரியா நாட்டின் தலைநகர் ________.
அ) இலண்டன் ஆ) டெல்அவிவ்
இ) வியன்னா ஈ) சிட்னி **[விடை: இ) வியன்னா]**

9. 'சிற்றகல் ஒளி' இடம் பெற்ற நூல் ________.
அ) எனது போராட்டம் ஆ) என் பயணம்
இ) என் விருப்பம் ஈ) என் பாதை **[விடை: அ) எனது போராட்டம்]**

10. ம.பொ.சிவஞானத்தின் சிறப்புப் பெயர் ________.
அ) சொல்லின் செல்வர் ஆ) நாவலர்
இ) சிலம்புச் செல்வர் ஈ) சிலம்பு அறிஞர் **[விடை: இ) சிலம்புச் செல்வர்]**

11. சாகித்திய அகாதெமி விருது பெற்ற ம.பொ.சியின் நூல் ________.
அ) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ஆ) மனுமுறை கண்ட வாசகம்
இ) எனது போராட்டம் ஈ) வானம் வசப்படும்
**[விடை: அ) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு]**



www.tnpscjob.com

12. ம.பொ.சி சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஆண்டு __________.

அ) 1956 ஆ) 1966
இ) 1976 ஈ) 1986 [விடை: ஆ) 1966]

13. மார்ஷல் ஏ. நேசமணிக்குச் சிலையோடு மணி மண்டபமும் அமைந்துள்ள ஊர் __________.

அ) கன்னியாகுமரி ஆ) தூத்துக்குடி
இ) நெல்லை ஈ) நாகர்கோவில் [விடை: ஈ) நாகர்கோவில்]

14. ம.பொ.சிவஞானம் வாழ்ந்த காலம் __________.

அ) 1906-1955 ஆ) 1906-1995
இ) 1906 -1966 ஈ) 1906-1998 [விடை: ஆ) 1906-1995]

15. ம.பொ.சி. சிலை அமைந்துள்ள இடங்கள் __________.

அ) திருத்தணி, தியாகராயநகர் ஆ) திருத்தணி, திருநெல்வேலி
இ) திருத்தணி, கன்னியாகுமரி ஈ) திருத்தணி, திருப்பதி
[விடை: அ) திருத்தணி, தியாகராயநகர்]

16. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகவும் சிறப்புடைய ஆண்டு __________.

அ) 1906 ஆ) 1908
இ) 1947 ஈ) 1946 [விடை: அ) 1906]

17. மா.பொ.சி பிறந்த சென்னை வட்டம் __________.

அ) ஆயிரம் விளக்கு ஆ) சால்வன் குப்பம்
இ) திருவல்லிக்கேணி ஈ) சேப்பாக்கம் [விடை: அ) ஆயிரம் விளக்கு]

18. மா.பொ.சி பிறந்த சென்னைப் பகுதி __________.

அ) ஆயிரம் விளக்கு ஆ) சால்வன் குப்பம்
இ) திருவல்லிக்கேணி ஈ) சேப்பாக்கம் [விடை: ஆ) சால்வன் குப்பம்]

19. மா.பொ.சி பள்ளியில் படிக்கும் போது ஆசிரியர் கண்டிக்க காரணம் __________.

அ) தாமதமாக வந்தது ஆ) பாடப் புத்தகம் கொண்டுவராமை
இ) படிக்காமை ஈ) வீட்டுப் பாடம் எழுதாமை
[விடை: ஆ) பாடப் புத்தகம் கொண்டுவராமை]

20. மா.பொ.சியின் பள்ளி வாழ்க்கை முடிவுற்ற வகுப்பு __________.

அ) ஐந்தாம் வகுப்பு ஆ) மூன்றாம் வகுப்பு
இ) ஆறாம் வகுப்பு ஈ) இரண்டாம் வகுப்பு [விடை: ஆ) மூன்றாம் வகுப்பு]

21. மா.பொ.சிக்கு இளமையிலேயே பாக்களைப் பயிற்றுவித்தவர் __________.

அ) அன்னை ஆ) திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்
இ) மங்கலங்கிழார் ஈ) மார்சல் ஏ.நேசமணி [விடை: அ) அன்னை]

22. மா.பொ.சி அறிவு விளக்கம் பெற எடுத்துக்கொண்ட வழி __________.

அ) கல்வி ஆ) கேள்வி
இ) கட்டுரை ஈ) சிறுகதை [விடை: ஆ) கேள்வி]

23. மா.பொ.சிக்குக் கேள்வி ஞானம் பெருக்கியவர் __________.

அ) அன்னை ஆ) திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்
இ) மங்கலங்கிழார் ஈ) மார்சல் ஏ.நேசமணி
[விடை: ஆ) திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்]

24. **வடக்கெல்லைத் தமிழர்களை ஒருங்கிணைத்துத் தமிழுணர்வு கொள்ளச் செய்தவர் ________.**
அ) அன்னை ஆ) திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்
இ) மங்கலங்கிழார் ஈ) மார்சல் ஏ.நேசமணி **[விடை: இ) மங்கலங்கிழார்]**

25. **இளம் வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடிய வழக்கறிஞர் ________.**
அ) அன்னை ஆ) திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்
இ) மங்கலங்கிழார் ஈ) மார்சல் ஏ.நேசமணி **[விடை: ஈ) மார்சல் ஏ.நேசமணி]**

26. **நாகர்கோவில் நகர்மன்றத்தலைவர், சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர் ________.**
அ) அன்னை ஆ) திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்
இ) மங்கலங்கிழார் ஈ) மார்சல் ஏ.நேசமணி **[விடை: ஈ) மார்சல் ஏ.நேசமணி]**

27. **குமரிமாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் ________.**
அ) அன்னை ஆ) திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்
இ) மங்கலங்கிழார் ஈ) மார்சல் ஏ.நேசமணி **[விடை: ஈ) மார்சல் ஏ.நேசமணி]**

28. **'தலையைக் கொடுத்தாவது தலைநகரைக் காப்போம்' என்று முழங்கியவர் ________.**
அ) மா.பொ.சி ஆ) செங்கல்வராயன்
இ) மங்கலங்கிழார் ஈ) மார்சல் ஏ.நேசமணி **[விடை: அ) மா.பொ.சி]**

29. **சிலம்புச் செல்வர் என்று போற்றப்படுபவர் ________.**
அ) மா.பொ.சி ஆ) செங்கல்வராயன்
இ) மங்கலங்கிழார் ஈ) மார்சல் ஏ.நேசமணி **[விடை: அ) மா.பொ.சி]**

30. **மா.பொ.சிவஞானத்தின் 'எனது போராட்ட நூல்' ஒரு ________ நூல்.**
அ) தன்வரலாறு ஆ) கவிதை
இ) சிறுகதை ஈ) புதினம் **[விடை: அ) தன்வரலாறு]**

31. **தமிழரசுக் கழகத்தைத் தொடங்கியவர் ________.**
அ) மா.பொ.சி ஆ) செங்கல்வராயன்
இ) மங்கலங்கிழார் ஈ) மார்சல் ஏ.நேசமணி **[விடை: அ) மா.பொ.சி]**

32. **பொருத்துக.**

1. திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் - அ) வடக்கெல்லைத்தமிழ் மக்களை ஒருங்கிணைத்த தமிழாசான்
2. மங்கலங்கிழார் - ஆ) மா.பொ.சிக்குக் கேள்வி ஞானம் பெருக்கியவர்
3. மார்சல் ஏ.நேசமணி - இ) மா.பொ.சிவஞானம்
4. சிலம்புச் செல்வர் - ஈ) குமரிமாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

33. **பொருத்துக.**

1. ஞானியாரடிகள் - அ) தமிழாசான்
2. மங்கலங்கிழார் - ஆ) வழக்கறிஞர்
3. மார்சல் ஏ.நேசமணி - இ) முதல்வர்
4. இராஜாஜி - ஈ) திருப்பாதிரிப்புலியூர்



www.tnpscjob.com

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ　　　ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ　　　ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ　　　**[விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

**34. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. வாஞ்சு | - | அ) மாநகரத் தந்தை |
| 2. செங்கல்வராயன் | - | ஆ) நீதிபதி |
| 3. தேவசகாயம், செல்லையா | - | இ) மொழிவாரி ஆணையத் தலைமை |
| 4. சர்தார் கே.எம்.பணிக்கர் | - | ஈ) தமிழரசுக் கழகத் தோழர்கள் |

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ　　　ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ　　　ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ　　　**[விடை: இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ]**

## குறுவினா

**1. 1906 ஆம் ஆண்டின் சிறப்புகள் யாவை?**

- ம.பொ.சி. சென்னை ஆயிரம் விளக்கு சால்வன் குப்பத்தில் 1906இல் பிறந்தார்.
- காந்தியடிகள் ‘சத்தியாகிரக’ அறப்போர் தென்னாப்பிரிக்காவில் தொடங்கிய ஆண்டு.
- ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார் வ.உ.சி.

**2. ம.பொ.சிக்கு அவரது அன்னையார் பயிற்றுவித்த பாக்கள் யாவை?**

அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களைப் பயிற்றுவித்தார்.

**3. விடுதலைப் போரில் ஈடுபட தமிழர்க்கு ம.பொ.சி எவ்வாறு அழைப்பு விடுத்தார்?**

- 30.09.1932ல் ‘தமிழா துள்ளி எழு’ என்னும் தலைப்புடைய துண்டறிக்கையை மக்களிடையே வழங்கினார்.
- பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமை, சோழன் ஆண்ட சிறப்பு, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம்நாடு, ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்தார்.

**4. ம.பொ.சி. சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பியக் காரணம் என்ன?**

சிலப்பதிகாரம் தமிழினத்தின் பொதுச்சொத்து. இந்திய தேசிய ஒருமைப்பாட்டையும், தமிழ் இனத்தை ஒன்றுபடுத்தும் முயற்சிக்கு உண்டான செய்திகள் அனைத்தும் சிலப்பதிகாரத்தில் காணப்பட்டதால் மக்களிடையே சிலப்பதிகாரத்தைக் கொண்டு சென்றார்.

**5. ம.பொ.சி வகித்த பதவிகளைக் குறிப்பிடுக.**

- 1952 முதல் 1954 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினர்.
- 1972 முதல் 1978 வரை சட்டமன்ற மேலவைத் தலைவர் - போன்ற பதவிகளை வகித்துள்ளார்.

**6. ம.பொ.சி வாழ்நாள் மகிழ்ச்சியாக எதனைக் குறிப்பிடுகிறார்?**

- புறநானூற்றிலும், சிலப்பதிகாரத்திலும் தமிழகத்தின் வட எல்லை வேங்கட மலையாகவும், தென் எல்லை குமரிமுனையாகவும் உள்ளது.
- இதனைப் படித்தபோது ம.பொ.சி மகிழ்ந்து, ‘மலையும் கடலும் ஒரு நாட்டின் இயற்கை எல்லைகளாக அமைவது தவப்பயன். இத்தெய்வீக எல்லையை, தமிழகம் திரும்பப் பெற்றதே தன் வாழ்நாள் மகிழ்ச்சி’ என்று குறிப்பிடுகிறார்.

**7. விடுதலைப் போரில் ஈடுபட்ட முன்னணித் தலைவர்களாக மா.பொ.சி. குறிப்பிடுவோர் யாவர்?**

காமராசர், தீரர் சத்தியமூர்த்தி, பிரகாசம்.



www.tnpscjob.com

**8. ஞானப்பிரகாசம் என்ற இயற்பெயர் பெற்ற தமிழறிஞர் யார்? அவரின் பெற்றோர் யாவர்?**

- ஞானப்பிரகாசம் என்ற இயற்பெயர் பெற்ற தமிழறிஞர் மா.பொ.சிவஞானம்.
- அவரின் பெற்றோர் : பொன்னுசாமி - சிவகாமி

**9. மா.பொ.சிக்குச் சிவஞானம் என்னும் பெயர் அமையக் காரணம் யாது?**

- மா.பொ.சிக்குப் பெற்றோர் இட்டபெயர் : ஞானப்பிரகாசம்
- சரபையர் என்ற முதியவர் ஒருவர் 'ஞானப்பிரகாசம்' என்ற இயற்பெயரை மாற்றி 'சிவஞானி' என்று அழைத்தார்.
- சிவஞானி என்ற பெயர் திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

**10. அறிவு விளக்கம் பெற மா.பொ.சிவஞானம் தேர்ந்தெடுத்த வழி யாது?**

- அறிவு விளக்கம் பெறுவதற்கு இரு வழிகள் உள்ளன. ஒன்று கல்வி, மற்றொன்று கேள்வி.
- ஏட்டுக் கல்வி நின்று போனதால் மா.பொ.சிவஞானம் தேர்ந்தெடுத்த வழி கேள்வியாகும்.

**11. பொன்னெழுத்துகளால் பொறிக்கத் தக்க புனித நாள் எது, ஏன்?**

- 1942 ஆகஸ்டு 8.
- இந்தியாவை விட்டு வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை நிறைவேற்றிய நாள்.

**12. சென்னை மாநிலத்திலிருந்து கேரளாவுடன் இணைந்த மாவட்டம் எது?**

சென்னை மாநிலத்திலிருந்து கேரளாவுடன் இணைந்த மாவட்டம்: மலபார்

**13. கேரளாவிலிருந்து சென்னை மாநிலத்திற்கு இணைந்த பகுதிகள் யாவை?**

கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகத்தீசுவரம், செங்கோட்டை.

## சிறுவினா

**1. 'சென்னையை மீட்போம்' - என்று ம.பொ.சி. குறிப்பிடுவது பற்றி எழுதுக.**

- ஆந்திர மாநிலம் பிரியும் போது சென்னை அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று சில ஆந்திரத் தலைவர்கள் கருதினர்.
- தலைநகர் காக்க தன் முதலமைச்சர் பதவியைத் துறக்கவும் இராஜாஜி முன்வந்தார்.
- மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு சென்னை பற்றிய தீர்மானம் முன்மொழியப்பட்டது.
- தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழங்கிய தன் விளைவாக 25.08.1953 அன்று சென்னை தமிழருக்கே என்பது உறுதியானது என்று 'சென்னையை மீட்போம்' என்று சென்னையை மீட்டது குறித்து ம.பொ.சி குறிப்பிடுகிறார்.

**2. மார்ஷல் ஏ. நேசமணி - குறிப்பு வரைக.**

- இளம் வயதில் சமூக விடுதலைக்காகப் போராடியவர்.
- நாகர்கோவில் நகர் மன்றத் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பதவிகளை வகித்தவர்.
- குமரி மாவட்ட போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றதால் 'மார்ஷல்' என்று அழைக்கப்பட்டார்.
- 1956 நவம்பர் 1-இல் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்து தமிழக தென் எல்லையாக மாறக் காரணமானவர்.
- தமிழக அரசு இவர் நினைவாக நாகர்கோவிலில் சிலையோடு மணி மண்டபமும் அமைத்துள்ளது.

**3. பண்டைய 'கடல் கடந்த தமிழ் வணிகம்' குறித்து எழுதுக.**

- ஆஸ்டிரியா நாட்டுத் தலைநகரான வியன்னாவில் உள்ள அருங்காட்சியகத்தில் 'பேபிரஸ்தாளில்' எழுதப்பட்ட கையெழுத்து சுவடி கண்டு பிடிக்கப்பட்டது.



www.tnpscjob.com

- அச்சுவடியில் சேரர் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும், எகிப்தின் ‘அலெக்ஸாண்டிரியா’ துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையில் ஏற்பட்ட வணிக ஒப்பந்தம் பற்றிய குறிப்புகள் உள்ளன.
- இது கி.பி. 2ம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதாகும்.
- இதிலிருந்து பண்டைத் தமிழர் கடல் கடந்த வணிகத்தில் சிறந்திருந்தனர் என்பதை அறியலாம்.

**4. மா.பொ.சிவஞானம் குறிப்பு வரைக**

| | | |
|---|---|---|
| பெயர் | : | மா.பொ.சிவஞானம் |
| பெற்றோர் | | |
| இட்ட பெயர் | : | ஞானப்பிரகாசம் |
| பெற்றோர் | : | பொன்னுச்சாமி - சிவகாமி |
| பெயர் மாற்றம் | : | சரபையர் என்ற முதியவர் இவரைச் ‘சிவஞானி’ என்றே அழைத்தார். அதுவே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்றானது. |
| சிறப்பு | : | சிலப்பதிகாரத்தின் பெருமையை உலகறியச் செய்ததால் ‘சிலம்புச்செல்வர்’ என்று போற்றப்படுகின்றார். |
| படைப்புகள் | : | எனது போராட்டம், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு முதலியன. |
| பணி | : | சிறந்த விடுதலைப்போராட்ட வீரர், 1952 முதல்1954 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினர், 1972 முதல் 1978 வரை சட்டமன்ற மேலவைத் தலைவர். |
| விருது | : | 1966ல் ‘வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு’ என்ற நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது. |
| அரசு | : | தமிழக அரசு திருத்தணி மற்றும் சென்னை தியாகராயநகரிலும் இவருக்குச் சிலை அமைத்துள்ளது. |

**5. சிலப்பதிகாரம் குறித்து சிலம்புச் செல்வர் மா.பொ.சிவஞானம் கூறுவது யாது?**

- நான் சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பியதற்குக் காரணம் உண்டு.
- திருக்குறளையோ , கம்பராமாயணத்தையோ விரும்பாதவன் அல்லன்.
- ஆயினும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில், தமிழினத்தை ஒன்றுபடுத்தக் கூடிய ஓர் இலக்கியம் தமிழில் உண்டு என்றால் , அது சிலப்பதிகாரத்தைத் தவிர வேறு இல்லை என்று உறுதியாகக் கூறுவேன்.
- இளங்கோ தந்த சிலம்பு, தமிழினத்தின் பொதுச்சொத்து. எனவேதான் தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் சிலப்பதிகார மாநாடுகள் நடத்தினோம்.

என்று சிலப்பதிகாரம் குறித்து சிலம்புச் செல்வர் மா.பொ.சிவஞானம் கூறினார்.

**6. சிலம்புச் செல்வர் மா.பொ.சிவஞானம் ‘புத்தகப்பித்தன்’ என்பதை நிறுவுக.**

- நூல் வாங்குவதற்குப் போதிய பணம் இல்லாத குறையைப் போக்க பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் சென்று, விருப்பமான புத்தகங்களை, மிகக்குறைந்த விலைக்கு வாங்குவதை வழக்கமாகக் கொண்டு இருந்தார் மா.பொ.சிவஞானம் .
- உணவுக்காக வைத்திருந்த பணத்தில் புத்தகம் வாங்கி, பல வேளைகளில் பட்டினிகிடந்தார்.
- குறைந்த விலைக்கு நல்ல நூல் ஒன்று கிடைத்தால் பேரானந்தம் அடைவார்.
- இவர் தன்னுடைய வாழ்நாளில் சேர்த்து வைத்துள்ள சொத்துகள் பல்லாயிரக் கணக்கான நூல்களைத் தவிர வேறில்லை என்கிறார்.

இதன் மூலம் சிலம்புச் செல்வர் மா.பொ.சிவஞானம், ‘புத்தகப்பித்தன்’ என்பதை அறியலாம்.



www.tnpscjob.com

## கற்பவை கற்றபின்

பக்கம்: 164

**1. எவரேனும் ஓர் அறிஞர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் உங்களைக் கவர்ந்த ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.**

**பேரறிஞர் அண்ணா வாழ்வில் நிகழ்ந்ததைக் கூறுதல்.**

அண்ணாவாகிய நான்,

என்னைப் பொறுத்தவரை, சிந்திப்பதும், படிப்பதும் என் வாழ்வின் ஒரு பகுதியாகும்.

கல்லூரி படித்துக் கொண்டிருந்த பொழுது, நான் ஆங்கில கட்டுரை ஒன்று எழுதினேன். அதனைப் படித்துப் பார்த்த என் பேராசிரியர், 'பொருட் செறிவுடனும், நயமுடனும் இருக்கிறது. இதை எங்கிருந்து எடுத்தாய்' என்றார்.

'நான் இங்கிருந்து எடுத்தேன்' என்று என் நெஞ்சைத் தொட்டுக் காட்டினேன். பேராசிரியர் வியப்புடனும், மகிழ்வுடனும் என்னைக் கட்டியணைத்துக் கொண்டார்.

பெரியாருடன் நான் இணைந்து பணியாற்றினேன். அப்போது இருவரும் ஒன்றாக பல ஊர்களுக்குச் செல்வோம். வடநாட்டுப் பயணங்களில் பெரியாரின் தமிழ்ப்பேச்சை நானே ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பேன்.

என் அழகான ஆங்கிலத்தால் கவரப்பட்ட மக்கள் அனைவரும் என்னையே பேசும்படி வற்புறுத்துவர். ஆனால் நான் நயமாக அவ்வலியுறுத்தலை மறுத்துவிடுவேன்.

எவ்வளவுதான் புலமை திறமை இருந்தாலும், ஒருவருடைய பேச்சை மொழிபெயர்க்க வந்ததை விட்டு தனியுரை நிகழ்த்த முற்படுவது, கண்ணியமற்ற செயல் அல்லவா! அதனை நான் செய்யலாமா? கண்ணியம் தவறக் கூடாதன்றோ.

**2. நீங்கள் படித்துச் சுவைத்த வரலாற்றுக் கதைகள் பற்றி வகுப்பறையில் உரை நிகழ்த்துக.**

மாணவர்களே! சமீபத்தில் நான் படித்துச் சுவைத்த வரலாற்றுக் கதை 'சிவகாமியின் சபதம்' ஆகும். இது ஒரு வரலாற்றுப் புதினம். இதனை எழுதியவர் அமரர் கல்கி ஆவார்.

12 வருடங்களாக வாரந்தோறும் 'கல்கி' வார இதழில் தொடர்கதையாக வெளிவந்த இக்கதை பின்பே நூல் வடிவம் பெற்றது.

முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் அரசாண்ட காலத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சம்பவங்களைப் பயன்படுத்தி, எழுதப்பட்ட புதினம் ஆகும். முதலாம் நரசிம்ம பல்லவன் இப்புதினத்தில் முக்கிய இடம் பெறுகிறார். பரஞ்சோதியாத்திரை, காஞ்சி முற்றுகை, பட்சுவின் காதல், சிதைந்த கனவு என நான்கு பாகங்களைக் கொண்டது.

வாதாபியின் மீது பல்லவர் போர் தொடுத்தது, காஞ்சியின் போர்ச் சூழல், சாளுக்கிய நாட்டின் வரலாறு ஆகியவை சுவைபட எடுத்தியம்பப்பட்டுள்ளது. சமணர்களால் காஞ்சியால் ஏற்பட்ட மதமாற்றம் குறித்தும் கூறுகிறது.

பேரழகியான சிவகாமியையும், அவள் தந்தை ஆயனாரும் மதம் கொண்ட யானையின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட செய்தியும் நயம்பட நவிலப்பட்டுள்ளது. மூலிகை ஓவியங்கள், அஜந்தா குகைகளில் உள்ள வண்ண ஓவியங்கள் குறித்தும் இப்புதினத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

மனம் வெதும்பிய சிவகாமி சீற்றம் கொண்டு 'தன் காதலர் நரசிம்மவர்மர் பல்லவர் வாதாபி நகரை தீக்கிரையாக்கி தன்னை மீட்டுச் செல்லும் வரை, அந்நகரை விட்டு, வெளியேறுவதில்லை என்ற சூளுரைப் பகுதியையும் கல்கி நம் கண்முன் விரித்துக் காட்டுகிறார்.

மேலும் பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன், கடல்புறா என பல வரலாற்றுக் கதைகள் நம் சிந்தையைக் கொள்ளை கொள்ளும் வண்ணமாக மட்டுமின்றி, நற்றமிழை நாம் அறியும் வகையிலும் உள்ளது. மாணவர்களே நேரம் கிடைக்கும் போது, நூலகம் செல்லுங்கள். கற்று இன்புறுங்கள்.



www.tnpscjob.com

இயல் 7 நாடு

கவிதைப் பேழை

# ஏர் புதிதா?

– கு.ப.ராஜகோபாலன்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.**

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண் **[விடை: இ) உழவு, ஏர், மண், மாடு]**

### சிறுவினா

**1. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?**

- முதல் மழை விழுந்தவுடன் நிலம் ஈரத்தால் பண்பட்டது.
- விரைந்து சென்று பொன் போன்ற ஏரிலே காளைகளைப் பூட்டி, நிலத்தை உழுதனர். ஊக்கத்துடனும், வலிமையுடனும் உழைத்தனர். நாற்று நட்டனர்.
- மேலும் மழை பொழிய நிலம் குளிர்ந்தது. நாற்றுகள் நிமிர்ந்து வளர்ந்தன. கிழக்கும் வெளுத்தது. கவலையும் மறந்தது.

**"முதல்மழை விழுந்ததும்
மேல்மண் பதமாகிவிட்டது
வெள்ளி முளைத்திடுது, விரைந்துபோ நண்பா!"**

## கூடுதல் வினாக்கள்

### இலக்கணக் குறிப்பு.

| | | |
|---|---|---|
| **தொழுது, விரைந்து, அமுத்து** | - | வினையெச்சம் |
| **நண்பா** | - | விளிவேற்றுமை |

### பகுபத உறுப்பிலக்கணம்.

**விரைந்து- விரை + த்(ந்) + த் + உ**

| | | |
|---|---|---|
| **விரை** | - | பகுதி |
| **த்(ந்)** | - | சந்தி (ந்) ஆனது விகாரம் |
| **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **உ** | - | வினையெச்ச விகுதி |

www.tnpscjob.com

## பலவுள் தெரிக

1. சங்கத்தமிழரின் திணை வாழ்வு எதை அடிப்படையாகக் கொண்டது?
அ) நெசவை ஆ) போரினை
இ) வேளாண்மையை ஈ) கால்நடையை [விடை: இ) வேளாண்மையை]

2. தமிழரின் தலையான தொழிலாகவும், பண்பாடாகவும் திகழ்வது ________.
அ) கல்வி ஆ) உழவு
இ) நெசவு ஈ) போர் [விடை: ஆ) உழவு]

3. தமிழர் பண்பாட்டின் மகுடமாகத் திகழ்வது ________.
அ) நாகரிகம் ஆ) கலை
இ) உழுதல் ஈ) பொன் ஏர் பூட்டுதல் [விடை: ஈ) பொன் ஏர் பூட்டுதல்]

4. பொன்ஏர் பூட்டுதல் நடத்தப்படும் மாதம் ________.
அ) சித்திரை ஆ) ஆனி
இ) ஆடி ஈ) தை [விடை: அ) சித்திரை]

5. 'ஏர் புதிதா?' என்னும் கவிதை இடம் பெற்ற நூல் ________.
அ) அகலிகை ஆ) ஆத்மசிந்தனை
இ) கு.ப.ரா. படைப்புகள் ஈ) ஏர்முனை [விடை: இ) கு.ப.ரா. படைப்புகள்]

6. கு.ப.ரா. பிறந்த ஊர் ________.
அ) தஞ்சை ஆ) மதுரை
இ) கும்பகோணம் ஈ) நெல்லை [விடை: இ) கும்பகோணம்]

7. கு.ப.ரா. பிறந்த ஆண்டு ________.
அ) 1902 ஆ) 1912
இ) 1915 ஈ) 1922 [விடை: அ) 1902]

8. கு.ப.ரா ஆசிரியராகப் பணிபுரிந்த இதழ்களில் ஒன்று ________.
அ) தமிழ் ஊழியன் ஆ) தினமணி
இ) இந்தியா ஈ) கிராம ஊழியன் [விடை: ஈ) கிராம ஊழியன்]

9. 'கடுகி செல்' - இதில் 'கடுகி' என்பதன் பொருள் ________.
அ) செல்லுதல் ஆ) மெதுவாக
இ) விரைந்து ஈ) இயல்பாக [விடை: இ) விரைந்து]

10. நிலம் சிலிர்க்கும், நாற்று ________.
அ) வளரும் ஆ) வளையும்
இ) நிமிரும் ஈ) நெகிழும் [விடை: இ) நிமிரும்]

11. ஊக்கம் புதிது, உரம் புதிது - இதில் உரம் என்ற சொல் குறிப்பது ________.
அ) வலிமை ஆ) பயிர் உரம்
இ) சத்து ஈ) வித்து [விடை: அ) வலிமை]

12. உலகத்தார்க்கு அச்சாணி என்போர் ________.
அ) தொழுவோர் ஆ) கற்போர்
இ) உழுவோர் ஈ) போரிடுவோர் [விடை: இ) உழுவோர்]



www.tnpscjob.com

13. **பொருத்துக.**

1. முதல் மழை - அ) பதமாகியது
2. மேல்மண் - ஆ) முளைத்தது
3. வெள்ளி - இ) தொழு
4. பொன்னேர் - ஈ) விழுந்தது

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

14. **'வெள்ளி முளைத்திடுது விரைந்து போ நண்பா' என்று பாடியவர் ____________.**

அ) மா.பொ.சி ஆ) கு.ப.ராஜகோபாலன்
இ) சுரதா ஈ) பாரதிதாசன் **[விடை: ஆ) கு.ப.ராஜகோபாலன்]**

15. **தவறான ஒன்றினைக் கண்டறிக.**

அ) மண் புரளும் ஆ) மேற்கு வெளுக்கும்
இ) மழை பொழியும் ஈ) எல்லைத் தெய்வம் காக்கும்
**[விடை: ஆ) மேற்கு வெளுக்கும்]**

16. **'பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில்
நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை' என்று பாடியவர்?**

அ) மா.பொ.சி ஆ) கு.ப.ராஜகோபாலன்
இ) சுரதா ஈ) பாரதிதாசன் **[விடை: ஆ) கு.ப.ராஜகோபாலன்]**

## குறுவினா

1. **கு.ப.ராவின் படைப்புகள் அடங்கிய நூல் தொகுப்புகளைக் குறிப்பிடுக.**
அகலிகை, ஆத்மசிந்தனை.

2. **கு.ப.ராஜகோபாலன் பணிபுரிந்த இதழ்கள் யாவை?**
தமிழ்நாடு, பாரதமணி, பாரததேவி, கிராம ஊழியன் – ஆகியவையாகும்.

3. **பொன் ஏர் பூட்டுதல் விளக்குக.**
- வேளாண்மை செழிக்கவும், மானுடம் தழைக்கவும் சித்திரைத் திங்களில் நடத்தப்படும் பண்பாட்டு நிகழ்வு பொன் ஏர் பூட்டுதல்' ஆகும்.
- இந்நிகழ்வு தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்.

4. **கு.ப.ராஜகோபாலனின் பன்முகங்களைக் குறிப்பிடுக.**
சிறுகதை எழுத்தாளர், கவிஞர், நாடக ஆசிரியர், மறுமலர்ச்சி எழுத்தாளர்.

5. **விரைந்து போ நண்பா எனக் கவிஞர் கூறக் காரணம் யாது?**
முதல் மழை விழுந்துவிட்டதாலும், மேல் மண் பக்குவமானதாலும், வெள்ளி முளைத்ததாலும் ஏறினைப் பூட்ட விரைந்து போ என்கிறார் கவிஞர்.

6. **மண் எப்போது புரளும்?**
மாட்டைத் தூண்டி, கொழுவை (கலப்பை இரும்பை) அமுத்தினால் மண் புரளும்.



www.tnpscjob.com

## சிறுவினா

**1. ‘பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில் நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை’ இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் சுட்டல்:**

கு.ப.ராஜகோபாலனின் ‘கு.ப.ரா. படைப்பு’களில் ஏர் புதிதா? என்ற கவிதைகளில் இவ்வரிகள் இடம் பெறுகின்றன.

**பொருள் விளக்கம்:**

பொழுது விடிந்து ஏரின் அடியில் பொன்னொளி பரப்பும் நல்ல காலைப் பொழுதில் ஏர் முனையின் கலப்பை இரும்பை நிலத்தில் நாட்டுவோம்.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 165*

**1. ‘முதல் மழை விழுந்தது’ தொடர்ந்து நிகழும் உழவுச் செயல்களை ‘ஏர் புதிதா?’ கவிதை கொண்டு வரிசைப்படுத்திப் பேசுக.**

வணக்கம்!

- உழுவோர் உலகுக்கு அச்சாணி எனப் போற்றும் வகையில்,
- உழவர் பெருமக்களை மனம் மகிழச்செய்யும் வகையில் முதல் மழை நிலத்திலே விழுந்து விட்டது.
- மழையினால் நம் நிலம் சரியான நிலையில் பண்பட்டுள்ளது.
- நண்பர்களே! சோம்பலினால் இன்னும் உறங்கிக் கொண்டு இருக்காதீர்கள்.
- விடிந்தது, விரைந்து எழுந்துவா நண்பா! ஏரைப்பூட்டி வயலுக்கு விரைந்து செல்.
- காடு நமக்குப் புதிதன்று. கரையும் நம் வசப்பட்டது தான். ஏர் நமக்குப் புதிதன்று.
- காளைகளும் புதியவையல்ல. பொன் ஏர் தொழுது, மாட்டைப் பூட்டி நிலத்தை உழுவோம்.
- மண்புரளும் வகையில் அழுந்த நன்கு உழுவோம். மேலும் மழை பொழியும்.
- நம் நிலமும் நெகிழ்ந்து குளிரும். புதிய ஊக்கத்துடனும், புதிய வலுவுடனும் உழைப்போம்.
- நாற்று நிமிர்ந்து வளரும். எல்லை தெய்வம் நம்மைக் காக்கும். கவலைகள் இனி இல்லை. புதிய விடியலுக்கு அடையாளமாய் கிழக்கும் வெளுத்து விட்டது.
- நிறைவாக,

உழைப்போம்! நாமும் உயர்வோம்!! நாட்டையும் உயர்த்துவோம்!!!

என்று கூறி விடைபெறுகிறேன்.

இயல் 7

இயல் 7 நாடு

கவிதைப் பேழை

# மெய்க்கீர்த்தி

- இரண்டாம் இராசராச சோழன்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' - என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்?**

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்

ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்

ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர் **[விடை: ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்]**

### குறுவினா

1. **மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?**

மன்னர் தம் நாட்டின் வளத்தையும் ஆட்சிச் சிறப்பையும் காலம் கடந்தும் உணர்த்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக புகழும் பெருமையும் அழியாதவகையில் அவை அனைத்தையும் கல்லில் செதுக்கினார்கள். இதுவே மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கமாகும்.

### சிறுவினா

1. **பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.**

பேரரசனது மெய்ப்புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி, பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக்கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்திக் காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை. ஏனைய பகுதிகள் உள்ளன. எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்கீர்த்திகளின் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியுள்ளன.

**மையக்கருத்து:**

பேரரசனது புகழை எடுத்துக் கூறுவது மெய்க்கீர்த்தி. இது சோழ மன்னருடைய சாசனங்களில் அரசனுடைய ஆட்சியாண்டு கூறுமிடத்தில் அமைக்கப் பெறும்.மன்னனுடைய வெற்றிகளையும், வரலாறுகளையும் கூறும். முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில் தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படுவதில்லை. இதன் பின் வந்த மெய்க்கீர்த்திகள் வமிச பரம்பரையை விரித்துக் கூறுகின்றன.

www.tnpscjob.com

## நெடுவினா

**1. பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.**

**(இரண்டாம் இராசராச சோழன் மெய்க்கீர்த்தி)**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை<br>சோழ நாட்டின் வளம்<br>மன்னனின் சிறப்பும் பெருமையும்<br>முடிவுரை |

**முன்னுரை:**

நம் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள இரண்டாம் இராசராச சோழனது மெய்க்கீர்த்தி பாடல், சோழநாட்டின் வளத்தையும். மன்னனின் சிறப்பையும் நயமுடன் எடுத்துரைக்கிறது.

**சோழ நாட்டின் வளம்:**

| நாட்டு வளம் | மக்கள் வளம் |
|---|---|
| யானைகள் மட்டும் பிணிக்கப்படுகின்றன. | மக்கள் பிணிக்கப்படுவதில்லை. |
| சிலம்புகள் மட்டும் புலம்பும். | மக்கள் புலம்புவதில்லை. |
| ஓடைகள் மட்டும் கலக்கமடையும். | மக்கள் கலக்கம் அடைவதில்லை. |
| மாங்காய் மட்டும் வடுப்படும். | மக்கள் வடுப்படுவதில்லை. |
| மலர்கள் மட்டும் பறிக்கப்படுகின்றன. | மக்கள் உரிமை பறிக்கப்படுவதில்லை. |
| காடுகள் மட்டும் (கொடியவனாய்) கொடி உடையதாய் இருக்கும். | மக்கள் கொடியவராய் இல்லை. |
| வண்டுகள் மட்டும் கள்(தேன்) உண்டு மயங்கும். | மக்கள் கள் உண்பதில்லை. |
| மலை மூங்கில் மட்டுமே வெறுமையாய் இருக்கும். | மக்களிடையே வெறுமை இல்லை. |
| வயலில் நெற்கதிர்கள் மட்டும் போராக எழுகின்றன. | சோழநாட்டில் போர் இல்லை. |
| நீண்ட மலைகளை இருள் சூழ்ந்திருக்கின்றன. | நாட்டில் வறுமை இருள் இல்லை. |
| மான்களின் கண்கள் மருள்கின்றன. | மக்கள் கண்களில் மருட்சியில்லை. |
| குளத்து மீன்கள் பிறழ்ந்து செல்கின்றன. | மக்கள் நிலை பிறழ்வதில்லை. |
| செவிலியரே சினங்கொள்வர். | வேறு யாரும் சினம் கொள்வதில்லை. |
| புலவர் பாட்டில் பொருள் மறைந்து இருக்கிறது. | சோழநாட்டில் யாரும் பொருளை மறைப்பதில்லை. |
| இசைப்பாணரே தெருவில் கூடி ஆடிப்பாடுவர். | மக்கள் தெருவில் ஆடுவதில்லை. |

**மன்னனின் சிறப்பும் பெருமையும் :**

மன்னன் மக்களுக்குக் காவல் தெய்வமாக, தாயாக, தந்தையாக இருக்கிறான். மகன் இல்லாதோர்க்கு மகனாக இருக்கிறான். உலக உயிர்களுக்கு உயிராக, விழியாக, மெய்யாக, புகழ் பெற்ற நூலாக புகழ் அனைத்துக்கும் தலைவனாக விளங்குகிறான்.



www.tnpscjob.com

**முடிவுரை :**

சோழ அரசனின் பெருமையும் அவன் காலத்தில் நாடு பெற்றிருந்த வளத்தையும் மெய்க்கீர்த்திப்பாடல் வழியாக நயம்பட உரைக்கிறது.

## கூடுதல் வினாக்கள்

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **வருபுனல்** | - | வினைத்தொகை |
| **இளமான்** | - | பண்புத்தொகை |
| **மாமலர்** | - | உரிச்சொல் தொடர் |
| **எழு கழனி** | - | வினைத்தொகை |
| **நெடுவரை** | - | பண்புத்தொகை |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| | | |
|---|---|---|
| **கடிந்து** | - | **கடி + த்(ந்) + த் + உ** |
| **கடி** | - | பகுதி |
| **த்(ந்)** | - | சந்தி (ந்) ஆனது விகாரம் |
| **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **உ** | - | வினையெச்ச விகுதி |

### பலவுள் தெரிக

1. **மெய்க்கீர்த்திக்கு முன்னோடியாய்த் திகழும் சங்க இலக்கியப்பாடல்கள் ________.**
   அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து
   இ) குறுந்தொகை ஈ) அகநானூறு **[விடை: ஆ) பதிற்றுப்பத்து]**
2. **பல்லவர் கால கல்வெட்டும், பாண்டியர் கால செப்பேடும் சோழர் காலத்தில் ________ எனப் பெயர் பெற்றது.**
   அ) மெய்க்கீர்த்தி ஆ) மெய்யுரை
   இ) நூல் ஈ) செப்பம் **[விடை: அ) மெய்க்கீர்த்தி]**
3. **________ இந்திரன் முதலாகத் திசைபாலர் எட்டு பேரும் ஒருவரும் பெற்றதுபோல் ஆட்சி செய்தவன்.**
   அ) இளஞ்சேரலாதன் ஆ) இரண்டாம் இராசராசன்
   இ) இராஜேந்திர சோழன் ஈ) முதலாம் இராசராசன் **[விடை: ஆ) இரண்டாம் இராசராசன்]**
4. **சோழநாட்டில் பிறழ்ந்தொழுகுவது ________.**
   அ) இளமான்கள் ஆ) யானைகள்
   இ) மக்கள் ஈ) கயற்குலம் **[விடை: ஈ) கயற்குலம்]**
5. **'காவுகளே கொடியவாயின' - இதில் 'காவு' என்பதன் பொருள் ________.**
   அ) காடுகள் ஆ) மலைக்குகை
   இ) கடல் ஈ) யானைகள் **[விடை: அ) காடுகள்]**
6. **'இயற்புலவரே பொருள் வைப்பார்' - எதில்?**
   அ) இல்லத்தில் ஆ) மன்றத்தில்
   இ) செய்யுளில் ஈ) சான்றோர் அவையில் **[விடை: இ) செய்யுளில்]**

இயல் 7

www.tnpscjob.com

7. ‘முகம் பெற்ற பனுவலென்னவும்’ - பனுவல் என்பதன் பொருள் ________.
அ) பொருள் ஆ) முன்னுரை
இ) நூல் ஈ) கோல் **[விடை: இ) நூல்]**

8. கோப்பரகேசரி, திருபுவனச்சக்கரவர்த்தி எனப் பட்டங்கள் பெற்றவன் ________.
அ) இரண்டாம் இராசராசன் ஆ) குலோத்துங்கன்
இ) முதலாம் இராசராசன் ஈ) விக்கிரமசோழன் **[விடை: அ) இரண்டாம் இராசராசன்]**

9. யாருடைய காலந்தொட்டு மெய்க்கீர்த்தி கல்லில் வடிக்கப்பட்டது?
அ) பல்லவர் ஆ) பாண்டியர்
இ) முதலாம் இராசராசன் ஈ) இராஜேந்திர சோழன் **[விடை: இ) முதலாம் இராசராசன்]**

10. இரண்டாம் இராசராச சோழனின் மெய்க்கீர்த்தியின் வரிகள் ________.
அ) 81 ஆ) 91
இ) 101 ஈ) 112 **[விடை: ஆ) 91]**

11. அழியாத கல் இலக்கியம் எனப் போற்றப்படுவது ________.
அ) செப்பேடு ஆ) சிற்பங்கள்
இ) ஓவியம் ஈ) மெய்க்கீர்த்தி **[விடை: ஈ) மெய்க்கீர்த்தி]**

12. சோழநாட்டில் சிறைப்படுவன ________.
அ) மா ஆ) வண்டுகள்
இ) வருபுனல் ஈ) காவுகள் **[விடை: இ) வருபுனல்]**

13. திசாபாலர் ________ ஆவார்.
அ) அறுவர் ஆ) எழுவர்
இ) எண்மர் ஈ) பதின்மர் **[விடை: இ) எண்மர்]**

14. பொருத்துக.
1. பிணிப்பு - அ) நீர்
2. புனல் - ஆ) கட்டுதல்
3. கழனி - இ) இருள்
4. மை - ஈ) வயல்
அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

15. பொருத்துக.
1. முகம் - அ) மலை
2. வரை - ஆ) செவிலித்தாய்
3. கைத்தாய் - இ) நூல்
4. பனுவல் - ஈ) முன்னுரை
அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

16. பொருத்துக.
1. யானை - அ) புலம்புகின்றன
2. சிலம்புகள் - ஆ) பிணிக்கப்படுவன
3. ஓடைகள் - இ) வடுப்படுகின்றன
4. மாங்காய்கள் - ஈ) கலக்கமடைகின்றன



www.tnpscjob.com

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

**17. பொருத்துக.**

1. மலர்கள் - அ) பறிக்கப்படுகின்றன
2. காடுகள் - ஆ) தேன் உண்ணுகின்றன
3. வண்டுகள் - இ) கொடியன
4. மலை மூங்கில் - ஈ) உள்ளீடு இன்றி வெறுமை

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ]**

**18. பொருத்துக.**

1. நெற்கதிர்கள் - அ) இருள் சூழ்ந்திருக்கின்றன
2. மலைகள் - ஆ) மருள்கின்றன
3. மான்களின் கண்கள் - இ) பிறழ்ந்து செல்கின்றன
4. குளத்து மீன்கள் - ஈ) போராக எழுகின்றன

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

**19. பொருத்துக.**

1. செவிலித்தாய் - அ) பொருள் பொதிந்து கிடக்கின்றது.
2. புலவர் பாட்டு - ஆ) தெருவில் ஆடிப்பாடுபவர்.
3. இசைப்பாணர் - இ) பிறழ்ந்து செல்கின்றன.
4. குளத்து மீன்கள் - ஈ) சினங்காட்டுவார்.

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

**20. சொற்றொடரை முறைப்படுத்துக.**

i) கல்தச்சர்களால் ii) புலவர்களால் எழுதப்பட்டு
iii) மெய்க்கீர்த்திகள் iv) கல்லில் பொறிக்கப்பட்டவை

அ) (iii)-(ii)-(i)-(iv) ஆ) (ii)-(i)-(iii)-(iv)
இ) (i)-(iii)-(iv)-(ii) ஈ) (iv)-(iii)-(i)-(ii) **[விடை: அ) (iii)-(ii)-(i)-(iv)]**

**21. பொருந்தாததைக் கண்டறிக.**

அ) யானைகள் பிணிக்கப்படும் - மக்கள் பிணிக்கப்படுவதில்லை
ஆ) சிலம்புகள் புலம்பும் - மக்கள் புலம்புவதில்லை
இ) ஓடைகள் கலக்கமடையும் - மக்கள் கலக்கமடைவதில்லை
ஈ) ஓடைகள் அடைக்கப்படுவதில்லை - மக்கள் அடைக்கப்படுகின்றனர்

**[விடை: ஈ) ஓடைகள் அடைக்கப்படுவதில்லை - மக்கள் அடைக்கப்படுகின்றனர்]**

**22. செப்பமான வடிவம் பெற்றது, கல்லிலக்கியமாய் அமைந்தது __________.**

அ) கல்வெட்டு ஆ) மெய்க்கீர்த்தி
இ) செப்பேடு ஈ) இலக்கியம் **[விடை: ஆ) மெய்க்கீர்த்தி]**

**23. தந்தையில்லாதவருக்குத் தந்தையாக இருக்கின்றவன் __________.**

அ) இராசராச சோழன் ஆ) ஒட்டக்கூத்தர்
இ) பல்லவர் ஈ) சேரர் **[விடை: அ) இராசராச சோழன்]**



www.tnpscjob.com

24. **தாயில்லாதவருக்குத் தாயாக இருக்கின்றவன் __________.**

அ) இராசராச சோழன் ஆ) ஒட்டக்கூத்தர்
இ) பல்லவர் ஈ) சேரர் **[விடை: அ) இராசராச சோழன்]**

25. **மகனில்லாதவருக்கு மகனாக இருக்கின்றவன் __________.**

அ) இராசராச சோழன் ஆ) ஒட்டக்கூத்தர்
இ) பல்லவர் ஈ) சேரர் **[விடை: அ) இராசராச சோழன்]**

26. **உலக உயிர்களுக்கு எல்லாம் உயிராக இருக்கின்றவன் __________.**

அ) இராசராச சோழன் ஆ) ஒட்டக்கூத்தர்
இ) பல்லவர் ஈ) சேரர் **[விடை: அ) இராசராச சோழன்]**

27. **விழி பெற்ற பயனாகவும் மெய் பெற்ற அருளாகவும் மொழி பெற்ற பொருளாகவும் புகழ்பெற்ற நூலாகவும் திகழ்பவன் __________.**

அ) இராசராச சோழன் ஆ) ஒட்டக் கூத்தர்
இ) பல்லவர் ஈ) சேரர் **[விடை: அ) இராசராச சோழன்]**

28. **புகழ் அனைத்திற்கும் தலைவனானவன் __________.**

அ) இராசராச சோழன் ஆ) ஒட்டக் கூத்தர்
இ) பல்லவர் ஈ) சேரர் **[விடை: அ) இராசராச சோழன்]**

## குறுவினா

1. **இரண்டாம் இராசராசனின் பட்டங்கள் யாவை?**

கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி ஆகியவையாகும்.

2. **திசாபாலர் எண்மர் யாவர்? (அல்லது) திசைபாலகர் எட்டு பேர் யாவர்?**

இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயகுபேரன், ஈசானன் ஆவர்.

3. **இராசராசனின் நாட்டில் புலம்புவதும், அடைக்கப்படுவதும் எது?**

- சோழமன்னனின் ஆட்சியில் சிலம்புகளே புலம்புகின்றன. மக்கள் எதனை நினைத்தும் துன்புற்றுப் புலம்புவதில்லை.
- நீர் மட்டுமே தேக்கி வைக்கும்பொருட்டு அடைக்கப்படும். மக்கள் எதற்காகவும் சிறைப்படுத்தி அடைக்கப்படுவதில்லை.

4. **காவல்நெறி பூண்டு ஆண்டவன் இராசராசன் என்பதை மெய்க்கீர்த்தி எவ்வாறு கூறுகின்றது?**

- தந்தையில்லாதோருக்குத் தந்தையாய் இருந்தான்.
- தாயில்லாதோருக்குத் தாயாய்த் திகழ்ந்தான்.
- மகனில்லாதோருக்கு மகனாய் இருந்தான்.
- உலகின் உயிர்களுக்கெல்லாம் உயிராக இருந்து காவல் நெறி. பூண்டு ஆண்டான் என்று மெய்க்கீர்த்தி போற்றுகிறது.

5. **இராசராசசோழனின் புகழ் பற்றி எழுதுக.**

- விழி பெற்ற பயனாகவும்,
- மெய் பெற்ற அருளாகவும்,
- மொழி பெற்ற பொருளாகவும்,
- புகழ் பெற்ற நூல் போலும்

புகழ் அனைத்திற்கும் தலைவனாய்ப் பெருமையுற்று நின்றான்.

இயல் 7

www.tnpscjob.com

6. **'படியானையே பிணிப்புண்பன வடிமணிச்சிலம்பே யரற்றுவன' - இம்மெய்க்கீர்த்தி வரிகள் உணர்த்தும் பொருள் யாது?**

**சோழ நாட்டில் :**

- யானைகள் பிணிக்கப்படுகின்றன. ஆனால் மக்கள் பிணிக்கப்படுவதில்லை.
- சிலம்புகள் புலம்புகின்றன. ஆனால் மக்கள் புலம்புவதில்லை.

7. **'செல்லோடையே கலக்குண்பன வருபுனலே சிறைப்படுவன' - இம்மெய்க்கீர்த்தி வரிகள் உணர்த்தும் பொருள் யாது?**

**சோழ நாட்டில் :**

- ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன. ஆனால் மக்கள் கலக்கமடைவதில்லை.
- புனல்(நீர்) மட்டுமே அடைக்கப்படுகின்றன. ஆனால் மக்கள் அடைக்கப்படுவதில்லை.

8. **'மையுடையன நெடுவரையே மருளுடையன இளமான்களே' - இம்மெய்க்கீர்த்தி வரிகள் உணர்த்தும் பொருள் யாது?**

**சோழ நாட்டில் :**

- நீண்ட மலையை இருள் சூழ்ந்து இருக்கின்றன. ஆனால் நாட்டில் வறுமை இருள் இல்லை.
- இளமான்கள் கண்கள் மருள்கின்றன. மக்கள் கண்களில் மருட்சி இல்லை.

9. **'கயற்குலமே பிறழ்ந்தொழுகும் கைத்தாயரே கடிந்தொறுப்பர்' - இம்மெய்க்கீர்த்தி வரிகள் உணர்த்தும் பொருள் யாது?**

**சோழ நாட்டில் :**

- குளத்து மீன்கள் பிறழ்ந்து செல்கின்றன. ஆனால் மக்கள் நிலை பிறழ்வதில்லை.
- செவிலித்தாய் சினம் காட்டுவார். ஆனால் வேறு யாரும் சினம் கொள்வதில்லை.

10. **''தந்தையில்லோர்க்கு தந்தையாகியுந் தாயாரில்லோர் தாயாராகி'' இருப்பவர் யார்?**

தந்தையில்லாதவருக்குத் தந்தையாகவும், தாய் இல்லாதவருக்குத் தாயாகவும் இருப்பவர் இராசராச சோழன் ஆவார்.

11. **மைந்தரில்லோர்க்கு மைந்தராகவும் மன்னுயிர்க்குயிராகவும் இருப்பவர் யார்?**

மகன் இல்லாதவருக்கு மகனாகவும், உலக உயிர்களுக்கு எல்லாம் உயிராகவும் இருப்பவர் இராசராச சோழன் ஆவார்.

## சிறுவினா

1. **மெய்க்கீர்த்தி குறிப்பு வரைக.**

- அரசர்கள் தம் வரலாறும், பெருமையும் காலம் கடந்தும் நிலைத்து நிற்கச் செய்யும் சாசனம்.
- பல்லவர் கல்வெட்டுகளிலும், பாண்டியர் செப்பேடுகளிலும் முளைவிட்ட இவ்வழக்கம் சோழர் காலத்தில் மெய்க்கீர்த்தி எனப் பெயர் பெற்றது.
- முதலாம் இராசராசன் காலந்தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டன.
- மெய்க்கீர்த்தி ஒரு மன்னரின் ஆட்சிச் சிறப்பு, நாட்டு வளம், ஆகியவற்றை ஒருசேர உணர்த்துவதாக உள்ளது.



www.tnpscjob.com

**2. இராசராச சோழன் மெய்க்கீர்த்தியில் எவற்றுக்கெல்லாம் உவமைப்படுத்தப்பட்டுள்ளான்?**

- தந்தையில்லாதவருக்குத் தந்தை
- தாயில்லாதவருக்குத் தாய்
- மகனில்லாதவருக்கு மகன்
- உலக உயிர்களுக்கு உயிர்
- விழி பெற்ற பயன்
- மெய் பெற்ற அருள்
- மொழி பெற்ற பொருள்
- புகழ்பெற்ற நூல்

– ஆகியவற்றுக்கெல்லாம் இராசராச சோழன் உவமைப்படுத்தப்பட்டுள்ளதாக மெய்க்கீர்த்திகள் மூலம் அறியலாம்.

**3. சோழ நாட்டில் மையுடையன, மருளுடையன யாவை?**

- ‘மை‘ என்றால் இருள் என்று பொருள்.
- சோழநாட்டின் மலைப்பகுதியும் மலைக்குகைகளுமே இருள் சூழ்ந்து காணப்படுவன.
- மக்கள் தம் வாழ்வில் வறுமை இருள் சூழ்வதில்லை.
- ‘மருள்’ என்பது ஒருவித பயஉணர்வு ஆகும்.
- அத்தகு மருட்சி இளமான்களின் கண்களில் மட்டுமே காணப்படும். மக்கள் எதற்கும் மருட்சியடைவதில்லை.

**4. ‘படியானையே பிணிப்புண்பன**
**வடிமணிச்சிலம்பே யரற்றுவன’ -இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டுதல் :**

இராசராச சோழனின் மெய்க்கீர்த்திப் பகுதியில் இவ்வரிகள் இடம்பெறுகின்றன.

**பொருள் விளக்கம் :**

இராசராச சோழன் நாட்டில் யானைகள் பிணிக்கப்படுகின்றன. ஆனால் மக்கள் பிணிக்கப்படுவதில்லை. சிலம்புகள் புலம்புகின்றன. ஆனால் மக்கள் புலம்புவதில்லை.

**5. ‘மையுடையன நெடுவரையே**
**மெருளுடையன இளமான்களே’ - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டுதல் :**

இராசராச சோழனின் மெய்க்கீர்த்திப் பகுதியில் இவ்வரிகள் இடம்பெறுகின்றன.

**பொருள் விளக்கம் :**

இராசராச சோழன் நாட்டில் நீண்ட மலையை இருள் சூழ்ந்து இருக்கின்றன. ஆனால் நாட்டில் வறுமை இருள் இல்லை. இளமான்கள் கண்கள் மருள்கின்றன. மக்கள் கண்களில் மருட்சி இல்லை.

**6. ‘கயற்குலமே பிறழ்ந்தொழுகும்**
**கைத்தாயரே கடிந்தொறுப்பர்’ - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டுதல் :**

இராசராச சோழனின் மெய்க்கீர்த்திப் பகுதியில் இவ்வரிகள் இடம்பெறுகின்றன.

**பொருள் விளக்கம் :**

இராசராச சோழன் நாட்டில் குளத்து மீன்கள் பிறழ்ந்து செல்கின்றன. ஆனால் மக்கள் நிலை பிறழ்வதில்லை. செவிலித்தாய் சினம் காட்டுவார். ஆனால் வேறு யாரும் சினம் கொள்வதில்லை.



www.tnpscjob.com

இயல் நாடு 7

கவிதைப் பேழை

# சிலப்பதிகாரம்

- இளங்கோவடிகள்

## பாடநூல் வினாக்கள்

### குறுவினா

1. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

- பாசவர் - வெற்றிலை விற்பவர்கள்
- வாசவர் - நறுமணப்பொருட்களை விற்பவர்கள்
- பல்நிணவிலைஞர் - பல்வகை இறைச்சிகளை விலைகூறி விற்பவர்கள்
- உமணர் - உப்பு விற்பவர்

### சிறுவினா

1. பகர்வனர் திரிதிரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்;
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்.

அ) இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?

சிலப்பதிகாரம்

ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.

பகர்வனர், பட்டினும்

இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.

பட்டினும் மயிரினும், கட்டு நுண்வினை

ஈ) காருகர் - பொருள் தருக.

நெய்பவர் (நெசவாளர்)

உ) இப்பாடலடியில் காணப்படும் நறுமணப் பொருட்கள் யாவை?

சந்தனமும் அகிலும்.

### நெடுவினா

1. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

- மருவூர்ப்பாக்கத்து வணிகவீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப் பொடி விற்பது போல் இன்றைய அங்காடிகளிலும், வணிக வளாகங்களிலும் விற்கப்படுகின்றன.
- குளிர்ச்சி பொருந்திய சந்தனம், பூ வகைகள், ஊதுவத்தி, அகில் போன்ற நறுமணப்பொருள்களும் இன்றைய வணிக வளாகத்திலும், கிடைக்கின்றன. விற்கப்படுகின்றன.



www.tnpscjob.com

- பொன், மணி, முத்து, பவளம் ஆகியவை மருவூர்ப்பாக்க வீதிகளில் விற்பனை செய்யப்பட்டது. இன்று வணிக வளாகத்திலும் நகைக்கடைகளில் 'பொன், மணி, முத்து, பவளம்' விற்கப்படுகிறது.
- வணிக வீதிகளில் குவியலாகக் கிடந்தது தானிய வகைகள்.
- இன்று அங்காடிகளில் தானிய வகைகளை எடைபோட்டு பொட்டலங்களில் கட்டி விற்பனை செய்கின்றனர்.
- மருவூர்ப்பாக்கத் தெருக்களில் உப்பு, வெற்றிலை, நறுமணப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது போல், இன்றைய அங்காடிகளிலும் விற்கப்படுகின்றது.
- வெண்கலம், செம்புப் பாத்திரம், மரப்பொருட்கள். இரும்புப் பொருட்கள் கிடைத்ததைப் போல, இன்றைய அங்காடிகளிலும விற்கப்படுகின்றது.
- வெண்கலம், செம்புப் பாத்திரம், மரப்பொருட்கள், இரும்புப் பொருட்கள் கிடைத்ததைப் போல, இன்றைய அங்காடி, வணிக வளாகங்களில் கிடைப்பதோடு, கூடுதலாக பல நவீனப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள (நெகிழி) பொருள்கள் நவீன அலங்காரங்களுடன் கிடைக்கின்றன.
- மருவூர்ப்பாக்க வீதிகளில் பொற்கொல்லர், இரத்தினவேலை செய்பவர், தையற்காரர், தோல் பொருள் செய்பவர், துணியாலும், கட்டையாலும் பொம்மை செய்பவர்கள் எனப் பலதிறப்பட்ட கைவினைஞர்கள் இருந்தனர்.
- அதைப்போலவே, இன்றைய அங்காடிகளிலும், வணிக வளாகங்களிலும் இத்தகு கைவினைக் கலைஞர்கள், நவீன தொழில் நுட்பத்துடன் தொழில் வல்லோராய் இருக்கின்றார்கள். அழகு மிளிரும் கைவினைப் பொருள்களைச் செய்து விற்பனையும் செய்கின்றனர்.

**இலக்கணக்குறிப்பு**

| | | |
|---|---|---|
| **வண்ணமும் சுண்ணமும்** | - | எண்ணும்மை |
| **பயில்தொழில்** | - | வினைத்தொகை |
| **நுண்வினை, அரும்பெறல்** | - | பண்புத்தொகை |
| **பகருநர்** | - | வினையாலணையும் பெயர் |
| **செறிந்த** | - | பெயரெச்சம் |
| **நன்கலம், வெறுக்கை** | - | பண்புத்தொகை |
| **குழலினும் யாழினும்** | - | எண்ணும்மை |

**பகுபத உறுப்பிலக்கணம்**

| | |
|---|---|
| **மயங்கிய - மயங்கு + இ(ன்) + ய் + அ**<br>**மயங்கு** - பகுதி<br>**இன்** - இறந்தகால இடைநிலை<br>**ய்** - உடம்படுமெய் சந்தி<br>**அ** - பெயரெச்ச விகுதி. | **குவித்த - குவி + த் + த் +அ**<br>**குவி** - பகுதி<br>**த்** - சந்தி<br>**த்** - இறந்தகால இடைநிலை<br>**அ** - பெயரெச்சவிகுதி. |
| **அளந்து - அள + த் (ந்) + த் + உ**<br>**அள** - பகுதி<br>**த்** - சந்தி, 'ந்' ஆனது விகாரம்<br>**த்** - இறந்தகால இடைநிலை<br>**உ** - வினையெச்ச விகுதி | **காட்டும் - காட்டு + உம்**<br>**காட்டு** - பகுதி<br>**உம்** - செய்யும் என்னும் வாய்பாட்டு பெயரெச்ச விகுதி |



www.tnpscjob.com

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறும் நூல் __________.
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) வளையாபதி ஈ) குண்டலகேசி [விடை: அ) சிலப்பதிகாரம்]

2. சிலப்பதிகாரத்தில் உள்ள காண்டங்கள் __________.
அ) ஐந்து ஆ) ஏழு
இ) மூன்று ஈ) ஒன்பது [விடை: இ) மூன்று]

3. சிலப்பதிகாரத்தின் காதைகள் __________.
அ) 30 ஆ) 27
இ) 33 ஈ) 36 [விடை: அ) 30]

4. 'அடிகள் நீரே அருளுக' என்று இளங்கோவடிகளிடம் வேண்டிக் கொண்டவர் __________.
அ) கம்பர் ஆ) கபிலர்
இ) திருத்தக்கதேவர் ஈ) சீத்தலைச்சாத்தனார் [விடை: ஈ) சீத்தலைச்சாத்தனார்]

5. சிலப்பதிகாரத்தோடு தொடர்புடைய காப்பியம் __________.
அ) மணிமேகலை ஆ) சூளாமணி
இ) வளையாபதி ஈ) நீலகேசி [விடை: அ) மணிமேகலை]

6. நாட்டுதும் யாமோர் பாட்டுடைச்செய்யுள் என்றவர் __________.
அ) பாரதியார் ஆ) கம்பர்
இ) இளங்கோவடிகள் ஈ) உமறுப்புலவர் [விடை: இ) இளங்கோவடிகள்]

7. மணிமேகலையின் ஆசிரியர் __________.
அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச்சாத்தனார்
இ) திருத்தக்கதேவர் ஈ) புத்தமித்திரர் [விடை: ஆ) சீத்தலைச்சாத்தனார்]

8. இந்திரவிழா ஊரெடுத்த காதை அமைந்த காண்டம் __________.
அ) புகார்க்காண்டம் ஆ) மதுரைக்காண்டம்
இ) வஞ்சிக்காண்டம் ஈ) பாலகாண்டம் [விடை: அ) புகார்க்காண்டம்]

9. சிலப்பதிகாரத்தின் பெரும் பிரிவு __________.
அ) பாகம் ஆ) அங்கம்
இ) காண்டம் ஈ) காதை [விடை: இ) காண்டம்]

10. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு __________.
அ) படலம் ஆ) சருக்கம்
இ) காதை ஈ) காட்சி [விடை: இ) காதை]

11. சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ் நடை __________.
அ) உரைப்பாட்டு மடை ஆ) உரைநடை
இ) வசனநடை ஈ) செய்யுள் நடை [விடை அ) உரைப்பாட்டு மடை]



www.tnpscjob.com

12. **பேசும் மொழியின் ஒட்டம் என்பது ________.**
அ) மொழி ஆ) உரை
இ) காதை ஈ) காட்சி **[விடை: ஈ) காட்சி]**

13. **சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ________ ஆகும்.**
அ) இணைகாப்பியம் ஆ) முதற்காப்பியம்
இ) பிணைகாப்பியம் ஈ) இரட்டைக்காப்பியம் **[விடை: ஈ) இரட்டைக்காப்பியம்]**

14. **கண்ணகியும் கோவலனும் சென்று அடைந்த ஊர் ________.**
அ) காவிரிப்பூம்பட்டினம் ஆ) திருவரங்கம்
இ) உறையூர் ஈ) கொடும்பாளூர் **[விடை: ஈ) கொடும்பாளூர்]**

15. **இளங்கோவடிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**
அ) சேர ஆ) சோழ
இ) பாண்டிய ஈ) பல்லவ **[விடை: அ) சேர]**

16. **அழகர் மலை என்பது ________.**
அ) திருவரங்கம் ஆ) திருமால்குன்றம்
இ) வேலவன்குன்றம் ஈ) மால்குன்றம் **[விடை: ஆ) திருமால்குன்றம்]**

17. **கோவலனையும் கண்ணகியையும் அழைத்துச் சென்றவர் ________.**
அ) கவுந்தியடிகள் ஆ) மாதரி
இ) மாதவி ஈ) ஆயர்குலப்பெண் **[விடை: அ) கவுந்தியடிகள்]**

18. **கணவனை இழந்த கண்ணகி சென்று அடைந்த இடம் ________.**
அ) வைகைக்கரை ஆ) வேங்கைக்கானல்
இ) அழகர்மலை ஈ) உறையூர் **[விடை: ஆ) வேங்கைக்கானல்]**

19. **பெருங்குணத்துக் காதலாள் யார்?**
அ) கண்ணகி ஆ) மாதவி
இ) மாதரி ஈ) மணிமேகலை **[விடை: அ) கண்ணகி]**

20. **சொல்லையும் பொருளையும் பொருத்துக.**
அ) தூசு - 1. செல்வம்
ஆ) துகிர் - 2. பட்டு
இ) வெறுக்கை - 3. விலை
ஈ) நொடை - 4. பவளம்
அ) 3, 1, 4, 2 ஆ) 2, 4, 1, 3
இ) 3, 1, 2, 4 ஈ) 2, 1, 3, 4 **[விடை: ஆ) 2, 4, 1, 3]**

21. **மருவூர்ப்பாக்கம் அமைந்த நகரம் ________ ஆகும்.**
அ) புகார் ஆ) மதுரை
இ) வஞ்சி ஈ) காஞ்சி **[விடை: அ) புகார்]**

22. **மண்ணீட்டாளர் எனக் குறிக்கப் பெறுபவர் ________.**
அ) ஓவியர் ஆ) வணிகர்
இ) சிற்பி ஈ) சாலியர் **[விடை: இ) சிற்பி]**

23. **கூவம் குவித்த - இதில் 'கூவம்' என்பதன் பொருள் ________.**
அ) தானியம் ஆ) குப்பை
இ) பழம் ஈ) தோல் **[விடை: அ) தானியம்]**



www.tnpscjob.com

24. **கள் விற்பவர் __________.**

அ) பரதவர் ஆ) உமணர்
இ) பாசவர் ஈ) வலைச்சியர் **[விடை: ஈ) வலைச்சியர்]**

25. **பொருத்துக.**

1. கண்ணுள் வினைஞர் - அ) சிற்பி
2. மண்ணீட்டாளர் - ஆ) ஓவியர்
3. கிழி - இ) தொழில்
4. வினை - ஈ) துணி

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

26. **சொல்லும் பொருளும் பொருந்தாத சொல் எது?**

அ) சுண்ணம் - நறுமணப்பொடி
ஆ) காருகர் - நெய்பவர்
இ) தூசு - பட்டு
ஈ) துகிர் - முத்து **[விடை: ஈ) துகிர் - முத்து]**

27. **சொல்லும் பொருளும் சரியாகப் பொருந்திய சொல் எது?**

அ) சுண்ணம் - நெய்பவர்
ஆ) காருகர் - பவளம்
இ) தூசு - பட்டு
ஈ) துகிர் - நறுமணப்பொடி **[விடை: இ) தூசு - பட்டு]**

28. **சொல்லும் பொருளும் சரியாகப் பொருந்திய சொல் எது?**

அ) வெறுக்கை - செல்வம்
ஆ) நொடை - எண்ணெய் விற்போர்
இ) பாசவர் - விலை
ஈ) ஓசுநர் - வெற்றிலை விற்போர் **[விடை: அ) வெறுக்கை - செல்வம்]**

29. **'பருத்தி நூலினும் கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்' இவ்வடிகளில் 'காருகர்' என்பதைச் சுட்டும் சொல் __________.**

அ) நெய்பவர் ஆ) நுண்வினை
இ) சிற்பி ஈ) ஓவியர் **[விடை: அ) நெய்பவர்]**

30. **'அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா' இவ்வடிகளில் 'வெறுக்கை' என்பதைச் சுட்டும் சொல் __________.**

அ) துணி ஆ) பவளம்
இ) பட்டு ஈ) செல்வம் **[விடை: ஈ) செல்வம்]**

31. **'ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்' இவ்வடிகளில் 'ஓசுநர்' என்பதைச் சுட்டும் சொல் __________.**

அ) எண்ணெய் விற்போர் ஆ) வெற்றிலை விற்போர்
இ) சிற்பி ஈ) துணி விற்போர் **[விடை: அ) எண்ணெய் விற்போர்]**

32. **'கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும்' இவ்வடிகளில் 'மண்ணுள்' என்பதைச் சுட்டும் சொல் __________.**

அ) சிற்பி ஆ) ஓவியர்
இ) சாலியர் ஈ) செல்வம் **[விடை: ஆ) ஓவியர்]**



www.tnpscjob.com

33. 'வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்' இவ்வடிகளில் அமைந்த நயம் ________.

அ) எதுகை ஆ) மோனை

இ) முரண் ஈ) இயைபு **[விடை: அ) எதுகை]**

## குறுவினா

**1. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?**

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

**2. சிலப்பதிகாரத்தின் காண்டங்கள், காதைகள் குறிப்பிடுக.**

சிலப்பதிகாரத்தின் காண்டங்கள் மூன்று, காதைகள் முப்பது ஆகும். அவை:

- புகார்க்காண்டம் - 10
- மதுரைக்காண்டம் - 13
- வஞ்சிக்காண்டம் - 7

**3. சிலப்பதிகாரத்தின் வேறுபெயர்கள் யாவை?**

முதல்காப்பியம், முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக்காப்பியம் - உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.

**4. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் விளக்குக.**

- உரையிடையிட்ட பாட்டுடை என்பது 'உரைப்பாட்டு மடை' என்னும் தமிழ்நடை.
- இது சிலப்பதிகாரத்தில் இடம் பெறுகிறது.
- உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு என்பது பொருளாகும்.

**5. 'கஞ்சகாரரும் செம்பு செய்குநரும்
மரம் கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்'**

**இவ்வடி அமைந்த நூல் எது?**

சிலப்பதிகாரம்.

**இவ்வடி அமைந்த காதை எது?**

இந்திரவிழா ஊரெடுத்த காதை.

**கருங்கைக் கொல்லர் எனப்படுபவர் யார்?**

இரும்புக் கொல்லர்.

**இவ்வடியில் அமைந்த தொடை எது?**

இயைபுத் தொடை - **செய்குநரும் கொல்லரும்.**

**6. மருவூர்ப்பாக்க வீதியில் இருந்த கைவினைத் தொழில் வல்லுநர்கள் யாவர்?**

செப்புப் பாத்திரம் செய்வோர், மரத்தச்சர், இரும்புக்கொல்லர், ஓவியர், பொற்கொல்லர், தையற்காரர், தோல் பொருள் தைப்பவர் ஆகியோர்.

**7. இரட்டைக் காப்பியங்கள் யாவை?**

- சிலப்பதிகாரமும், மணிமேகலையும், இரட்டைக்காப்பியம் ஆகும்.
- காலத்தாலும், கதைத் தொடர்பாலும் தொடர்புடையதாய் இருக்கும்.

**8. சிலப்பதிகாரத்தில் மருவூர்ப்பாக்கம் பற்றிய செய்தி இடம் பெறும் காண்டம் மற்றும் காதை யாவை?**

மதுரைக் காண்டம், இந்திரவிழா ஊரெடுத்த காதை.



www.tnpscjob.com

**9. 'கூலம் குவித்த கூல வீதியும்' தொடர் பொருள் கூறுக.**

மருவூர்ப்பாக்கத்தில் எட்டு வகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்கள் உள்ளன.

**10. 'குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்வழுவின்றி இசைத்து' இவ்வடிகளில் சுட்டும் குரல் முதலான ஏழிசைகள் யாவை?**

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்,

**11. ஏழு சுரங்களைச் சுட்டுக.**

ஸ, ரி, க, ம, ப, த, நி.

**12. நன்கலம் தருநர் - என்று எவரைச் சிலப்பதிகாரம் சுட்டுகிறது?**

இரத்தினம் முதலான அணிகலன்கள் வேலை செய்பவர்.

**13. 'பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்' இவ்வடிகளில் இளங்கோவடிகள் புலப்படுத்தும் கருத்தினை எழுதுக.**

மருவூர்ப்பாக்கத்தில் பட்டு, பருத்தி நூல், முடி இவற்றைக் கொண்டு அழகாகப் பின்னிக் கட்டும் கைத்தொழில் வல்லுநரான நெசவாளர் வாழும் வீதிகளும் உள்ளன.

**14. 'மீன்விலைப் பரதவர், வெள்உப்புப் பகருநர்' - இவ்வடியில் சிலப்பதிகாரம் சுட்டும் செய்தி யாது?**

- மீன்விலைப் பரதவர் - மீன் விற்கும் பரதவர்
- வெள்உப்புப் பகருநர் - வெண்மையான உப்பு விற்கும் உமணர்

**சுட்டும் செய்தி :**

மீன்களை விற்பனை செய்யும் நெய்தல் நில பரதவர் மற்றும் வெண்மையான உப்பு விற்கும் உமணர்மருவூர்ப்பாக்கத் தெருக்களில் வணிகம் செய்கின்றனர்.

## சிறுவினா

**1. 'பால்வகை தெரிந்த பகுதிப் பாண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

சிலப்பதிகாரம் புகார்க்காண்டத்தில் இந்திர விழா காதையில் இடம் பெற்றுள்ளது.

**பொருள்:**

மருவூர்ப்பாக்க வணிக வீதியில் நடைபெற்ற வணிகம்.

**விளக்கம் :**

மருவூர்ப்பாக்கத் தெருக்களில் பலப்பல பண்டங்களின் (பொருட்களின்) விற்பனை நடைபெறுகின்றது. எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன.

**2. மருவூர்ப்பாக்கத் தெருக்களில் எவ்வெவ் மணப்பொருட்களை விற்பனை செய்துகொண்டு இருந்தனர்?**

**புகார் நகர மருவூர்ப்பாக்க வணிக வீதிகளில் :**

வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, குளிர்ந்த மணச்சாந்து, பூ, நறுமணப்பொருள்கள், அகில் - முதலான மணப்பொருட்களை விற்பனை செய்துகொண்டு இருந்தனர்.



www.tnpscjob.com

## கற்பவை கற்றபின்

பக்கம்: 170

**1. சிலப்பதிகாரக் கதைச் சுருக்கத்தை அறிந்துவந்து வகுப்பறையில் கூறுக.**

பதினாறு வயதுடைய கோவலனுக்கும், பன்னிரண்டு வயதுடைய கண்ணகிக்கும் திருமணம் நடைபெறுகிறது. இருவரும் இனிதே வாழ்கின்றனர்.

கோவலன் கலைகளின் காதலன். ஆடல் பாடல்களில் விருப்பம் கொண்டவன். யாழ் மீட்டுவதில் வல்லவன். ஒரு நாள் ஆடல் அரசி அழகுப்பாவை மாதவியின் ஆடலில் மயங்குகிறான்.

மாதவியின் பசிய மாலையை யார் வாங்குகிறார்களோ அவர்கள் மாதவியை அடையலாம் என்று அவள் இல்லத்தில் ஒருத்தி கடைத்தெருவுக்கு வந்து கூறுகிறாள்.

கோவலன் மாலையை வாங்கி மாதவியை அடைகிறான். மாதவியோடு வாழ்கின்ற காலத்தில் அவன் செல்வம் எல்லாம் கரைகிறது.

மனம் வேறுபட்டு கண்ணகியை வந்தடைகிறான். இழந்தப் பொருளை மீட்டு மதுரைக்குச் சென்று ஆயர்குலப் பெண் மாதரியின் வீட்டில் தங்குகிறான்.

பொருள் ஈட்டுவதற்காக கண்ணகியின் காற்சிலம்பை எடுத்துக்கொண்டு மதுரை வீதிக்குச் செல்கிறான். பொற்கொல்லனிடம் காட்டுகிறான். அப்பொற்கொல்லன் அரசியின் சிலம்பைத் திருடியவன் அதை மறைக்க சமயம் கிடைத்ததை எண்ணி அரண்மனைச் சென்று மன்னனிடம் கோவலன் மீது பழி சுமத்துகிறான். மன்னனின் ஆணையால் கோவலன் கொலை செய்யப்படுகிறான்.

இதைக்கேட்ட கண்ணகி அழுது புலம்பி அரசபைக்குச் சென்று வழக்குரைக்கிறாள். உண்மை அறிந்த அரசனும் அரசியும் உயிர் துறக்கிறார்கள். மதுரையும் தீக்கிரையாகிறது.

பின் சேரநாட்டை அடைந்து வேங்கை மர நிழலில் தங்குகிறாள். பிறகு வானுலகோர் சூழ கோவலன் கண்ணகியை அழைத்துச் சென்றதைக் குன்றக் குறவர்கள் கூறுகிறார்கள்.

செங்குட்டுவன் இமயம் வென்று, கல்லெடுத்து கங்கையில் நீராட்டி வஞ்சியில் கண்ணகிக்குக் கோயில் கட்டுகிறான்.

**இக்கதையின் மூலம் நாம் அறியும் மூன்று உண்மைகள்:**

1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்

**2. சிலப்பதிகாரம் காட்டும் மருவூர்ப்பாக்கம் பற்றிய விவரிப்பை இன்றைய கடைத் தெருவுடன் ஒப்பிட்டு உரையாடுக.**

### உரையாடல்

மாணவர்களே! மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் பற்றிக் கற்றோம் அல்லவா! அதை மனதில் கொண்டு இன்றைய கடை வீதிகளோடு ஒப்பிட்டு உரையாடலாமா?

சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றை ஒளிப்படங்களாகச் சேகரித்து. வரலாற்றுக் குறிப்பேடாக வைத்துக் கொள்ளுங்கள்.

**உரையாடுபவர்கள்: மதன், சுதன், உமா.**

**மதன்** : சுதன், உமா எப்படி இருக்கிறீர்?

**இருவரும் :** நன்றாக இருக்கிறோம்!

**மதன்** : இருவரும் விடுமுறைக்கு எங்காவது சென்றீர்களா?



www.tnpscjob.com

**உமா** : நான் சென்னை சென்றேன் மதன்.

**சுதன்** : நான் மதுரைக்குப் போனேன்.

**மதன்** : நானும் திருச்சிக்குச் சென்று இருந்தேன்.

**சுதன்** : நான் மதுரைக்குப் போனபோது அங்கு ‘மால்’ என்று சொல்லப்படும் வணிக வளாகத்துக்குச் சென்றேன்.

**உமா** : சென்னையிலும் பெரிய பெரிய வணிக வளாகங்கள் அதிகமாக உள்ளன.

**மதன்** : நானும் தான் சென்றேன். அவற்றையெல்லாம் பார்க்கும் போது ஏனோ! என் மனதில் நாம் பாடத்தில் பயின்று தெரிந்து கொண்ட மருவூர்ப்பாக்கம் வணிக வீதிகளின் காட்சி என் மனதில் வந்து போனது.

**சுதன்** : ஆமாடா....... வணிக வீதிகளில் எல்லாப் பொருள்களும் கிடைத்தது போல் இங்கும் கிடைக்கிறது.

**உமா** : மருவூர்ப்பாக்க வீதியை விட இங்கு ஆரவாரமும், அலங்காரமும் அதிகமாக உள்ளது.

**மதன்** : அங்கு உற்பத்தியாளரே பொருளைக் கொண்டு வந்து விற்பார். இங்கு முதலீட்டாளர்கள் இடைத்தரகர் மூலம் வாங்கி வந்து விற்பனையாளரை வைத்து விற்கின்றனர்.

**சுதன்** : அந்தக் காலத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் நியாயமான விலை, பண்டமாற்று முறை இருந்தது.

**உமா** : தானியங்கள் குவித்து வைத்து அளந்து கொடுத்தனர். ஆனால். இந்த வளாகங்களிலும், அங்காடிகளிலும் வண்ணக் காகிதங்களில் ஏற்கனவே கட்டிவைத்து அடுக்கி வைத்துள்ளார்கள். நாம் எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

**மதன்** : மூன்று ஊர்களிலும் பொதுவான முறையில் ஒரு விற்பனை முறை இருந்ததை யாரும் உணர்ந்தீர்களா.....

**சுதன்** : பொதுவான விற்பனை முறையா...... என்னடா அது?

**உமா** : எனக்குத் தெரிந்து விட்டது. நடைபாதை கடைகளைத்தானே சொல்கிறாய்.

**மதன்** : ஆமா உமா.... ஒவ்வொரு கடைத்தெருவிலும் கண்ணைக் கவரும் பலமாடிக் கட்டிடங்கள், அலங்கார விளக்குகள் அமைத்து பல பொருள் அங்காடிகள் இருப்பினும் அதே பொருள்களை நடைபாதைகளில் வைத்து சிறுகுறு வியாபாரிகள், விவசாயிகள் தங்கள் உற்பத்திப்பொருளை விற்றல் ஆகிய காட்சிகளையும் காண முடிந்தது தானே.....

**இருவரும்** : ஆம் மதன்! நடைபாதைக் கடைகளிலும் தரமான பொருள் கிடைக்கும் என்று என் அம்மா அடிக்கடி சொல்வார்கள்.

**மூவரும்** : ஒருவருக்கொருவர் ...... நேரமாகிவிட்டது போய் வரலாமா..... என்று விடைபெற்றனர்.

⊙⊙•••⊙⊙



www.tnpscjob.com

இயல் 7 நாடு

விரிவானம்

# மங்கையராய்ப் பிறப்பதற்கே....

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

1. **நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.**

**மகளிர் நாள் விழா**

*இடம் : பள்ளிக் கலையரங்கம். நாள் : 08.03.2020*

*கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை.*

**மகளிர் நாள் விழா**

**எம்பள்ளிக் கலையரங்கில் 08.03.2020 அன்று மகளிர் நாள் விழா நடைபெற்றது. அவ்விழாவினைப் பற்றிய அறிக்கையாவது.**

விழா நாள் : 08.03.2020

இடம் : பள்ளிக் கலையரங்கம்.

எம் பள்ளி அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. சரியாக மாலை 3.30 மணி அளவில் விழா நிகழ்விடமான பள்ளிக் கலையரங்கிற்குள் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மகிழ்வுடன் வந்து அமர்ந்தனர். சரியாக 4.00 மணிக்கு சிறப்பு விருந்தினர் இதழாளர் கலையரசி வருகை புரிந்தார். மாணவர்கள் ஆசிரியர்கள் மகிழ்வுடன் ஆரவாரம் செய்து கைதட்டி சிறப்பு விருந்தினர் அவர்களை வரவேற்றனர்.

**தலைமையாசிரியரின் வரவேற்பு:**

இதழியல் துறையில் பட்டம் பெற்று, பட்டப்படிப்புடன் அச்சுத்துறையில் முதுகலையும் பயின்று, நாளிதழ் வாரஇதழ் படிப்பவர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்திருக்கும் இதழாளர் திருமதி. கலையரசி அவர்கள் தான் பணிபுரியும் இதழில் செய்திகளை வெளியிடுவது, சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தும் கட்டுரை எழுதுவது, குழந்தைகளுக்கான பகுதிகளை வடிவமைப்பது. கேலிச்சித்திரம் வாயிலாக சமூக அவலங்களைச் சுட்டிக்காட்டி விழிப்புணர்வு ஏற்படுத்துவது என இதழியல் துறையில் பன்முகத் திறமை பெற்றவர். அவரை இவ்விழாவிற்கு வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**இதழாளரின் சிறப்புரை:**

'காரிருள் அகத்தில் கதிரொளி பாய்ச்சுவதும், துயில்பவர்கள் நெஞ்சில் எழுச்சியை ஏற்படுத்துவதும்' இதழ்களே என்றால் மிகையில்லை. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்களால் இயலும் என்பதை மகாகவி நமக்கு ஒரு ஊக்க சக்தியாக தந்து சென்றிருக்கிறார். பெண்களே உங்களுக்கு முழுமையான கல்வி கட்டாயம் தேவை. எந்த ஒரு காரணத்திற்காகவும் உங்கள் கல்வியை விட்டுக் கொடுக்காதீர்கள். 'கல்வியில்லா பெண் களர் நிலம்' என்றார் புரட்சிக்கவி. நாம் களர்நிலமாக பயனற்றுப் போக பிறக்கவில்லை. ஞானச் செருக்கும் உடையவர்களாய், புதிய



www.tnpscjob.com

உலகம் படைக்கும் வலிமை பொருந்தியவர்களாய்ப் பிறந்திருக்கிறோம். எனவே நன்கு படியுங்கள்; புதிய சமுதாயம் படையுங்கள்; புதுமைப் பெண்ணின் மகிழ்வு கண்டு இம்மண்ணுலகம் வியக்கட்டும் என்று சிறப்புரையாற்றினார்.

**நன்றியுரை:**

நிறைவாக பள்ளியின் மாணவத் தலைவர் 'மோகனா' நன்றி கூறினார். அழைப்பிற்கிணங்கி வருகை தந்த சிறப்பு விருந்தினருக்கும், அவரை அழைத்து வந்து விழாவினை ஏற்பாடு செய்த தலைமையாசிரியருக்கும், உடன் ஒத்துழைத்த ஆசிரியப் பெருமக்களுக்கும், பெற்றோர்களுக்கும், அமைதி காத்த மாணவ நண்பர்களுக்கும் நன்றி கூறினாள்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பொருந்தாத இணையைத் தேர்க.**

அ) பாலசரஸ்வதி - மீரா
ஆ) எம்.எஸ். சுப்புலட்சுமி - மகசேசே
இ) ராஜம் கிருஷ்ணன் - வேருக்கு நீர்
ஈ) சின்னப்பிள்ளை - களஞ்சியம் **[விடை: அ) பாலசரஸ்வதி - மீரா]**

**2. 1954-ல் தாமரையணி விருது பெற்றவர் __________.**

அ) சின்னப்பிள்ளை ஆ) பாலசரசுவதி
இ) எம்.எஸ். சுப்புலட்சுமி ஈ) ராஜம் கிருஷ்ணன் **[விடை: இ) எம்.எஸ். சுப்புலட்சுமி]**

**3. எம்.எஸ். சுப்புலட்சுமியைத் தொட்டுத் தடவிப் பாராட்டியவர் __________.**

அ) சரோஜினி நாயுடு ஆ) கமலாநேரு
இ) ஹெலன் கெல்லர் ஈ) மீரா **[விடை: இ) ஹெலன் கெல்லர்]**

**4. வெங்கடேச சுப்ரபாதம் திருப்பதியில் ஒலிக்கத் தொடங்கிய ஆண்டு __________.**

அ) 1966 ஆ) 1963
இ) 1971 ஈ) 1976 **[விடை: அ) 1966]**

**5. இசைக்குக் கிடைத்த மகுடம் எனப் போற்றப்பட்ட விருது __________.**

அ) நோபல் பரிசு ஆ) தாமரை விருது
இ) மகசேசே விருது ஈ) இந்தியமாமணி விருது **[விடை: இ) மகசேசே விருது]**

**6. பொருத்துக.**

| பெண்கள் | | விருது |
|---|---|---|
| அ) எம்.எஸ். சுப்புலட்சுமி | - | 1. ஔவை விருது |
| ஆ) பாலசரசுவதி | - | 2. வாழ்வுரிமை விருது |
| இ) ராஜம் கிருஷ்ணன் | - | 3. சாகித்திய அகாதெமி விருது |
| ஈ) சின்னப்பிள்ளை | - | 4. இந்திய மாமனி விருது |

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 2, 3, 4
இ) 3, 4, 2, 1 ஈ) 2, 3, 4, 1 **[விடை: அ) 4, 3, 2, 1]**

இயல் 7

7. **கிருஷ்ணம்மாளுக்கு 'வாழ்வுரிமை விருது' வழங்கிய நாடு ________.**
அ) சுவிட்சர்லாந்து ஆ) சுவீடன்
இ) தாய்லாந்து ஈ) மலேசியா **[விடை: ஆ) சுவீடன்]**

8. **படுகர் இனமக்களின் வாழ்வியல் மாற்றத்தைப் பேசும் புதினம் ________.**
அ) கரிப்புமணிகள் ஆ) வேருக்குநீர்
இ) சேற்று மனிதர்கள் ஈ) குறிஞ்சித்தேன் **[விடை: ஈ) குறிஞ்சித்தேன்]**

9. **'பூதான இயக்கத்தில்' பணிபுரிந்தவர் ________.**
அ) சின்னப்பிள்ளை ஆ) கிருஷ்ணம்மாள்
இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) பாலசரசுவதி **[விடை: ஆ) கிருஷ்ணம்மாள்]**

10. **சமூக அவலங்களை உற்று நோக்கி எழுத்தின் வழியாக உலகுக்குக் காட்டியவர் ________.**
அ) ராஜம்கிருஷ்ணன் ஆ) கிருஷ்ணம்மாள்
இ) பாலசரசுவதி ஈ) எம்.எஸ்.சுப்புலட்சமி **[விடை: அ) ராஜம்கிருஷ்ணன்]**

11. **'களஞ்சியம்' மகளிர் குழு முதன் முதலில் ஆரம்பித்தவர் ________.**
அ) சின்னப்பாப்பா ஆ) சின்னத்துரை
இ) சின்னப்பிள்ளை ஈ) சரசுவதி **[விடை: இ) சின்னப்பிள்ளை]**

12. **'உழுபவருக்கே நில உரிமை இயக்கம்' தொடங்கியவர் ________.**
அ) ராஜம்கிருஷ்ணன் ஆ) கிருஷ்ணம்மாள்
இ) பாலசரசுவதி ஈ) எம்.எஸ்.சுப்புலட்சுமி **[விடை: ஆ) கிருஷ்ணம்மாள்]**

13. **எம்.எஸ். சுப்புலட்சுமியைப் பிரபலப்படுத்திய பாடல் ________.**
அ) சுப்ரபாதம் ஆ) காற்றினிலே வரும் கீதம்
இ) இரகுபதி ராகவராஜாராம் ஈ) மீரா பற்றிய பாடல் **[விடை: ஆ) காற்றினிலே வரும் கீதம்]**

14. **பாலசரசுவதியின் நாட்டியக் கச்சேரியைப் புகழ்ந்தவர் ________.**
அ) பண்டிட் நேரு ஆ) காந்தி
இ) பண்டிட் இரவிசங்கர் ஈ) இயக்குநர் இரவிக்குமார் **[விடை: இ) பண்டிட் இரவிசங்கர்]**

15. **'காந்தி அமைதி விருதை' கிருஷ்ணம்மாளுக்கு வழங்கிய நாடு ________.**
அ) இந்தியா ஆ) சுவிட்சர்லாந்து
இ) சிங்கப்பூர் ஈ) சுவீடன் **[விடை: ஆ) சுவிட்சர்லாந்து]**



## குறுவினா

1. **எம்.எஸ் சுப்புலட்சுமியின் இசையைப் பாராட்டியோர் யாவர்?**
   - ஜவஹர்லால் நேரு
   - சரோஜினி நாயுடு
   - காந்தியடிகள்
   - ஹெலன் கெல்லர் – ஆவர்

2. **ராஜம்கிருஷ்ணனின் புகழ்பெற்ற சமூக நாவல்களைப் பட்டியலிடுக.**
   - கரிப்பு மணிகள்
   - குறிஞ்சித்தேன்
   - அலைவாய்க் கரையில்
   - சேற்றில் மனிதர்கள்
   - வேருக்கு நீர் – ஆகியவையாகும்

www.tnpscjob.com

**3. எம்.எஸ். சுப்புலட்சுமி தன் இசைத்திறனை எம்மொழிகளிலெல்லாம் வெளிப்படுத்தினார்?**

தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கன்னடம், மலையாளம், இந்தி, மராத்தி, குஜராத்தி ஆகிய இந்திய மொழிகளில் பாடியுள்ளார். ஆங்கிலத்திலும் பாடியுள்ளார்.

**4. கிருஷ்ணம்மாள் களப்பணிபுரிந்த இயக்கங்கள் யாவை?**

- ஒத்துழையாமை இயக்கம்
- சட்டமறுப்பு இயக்கம்
- வெள்ளையனே வெளியேறு இயக்கம்
- பூதான இயக்கம்
- உழுபவருக்கே நில உரிமை இயக்கம் ஆகியவற்றில் பணிபுரிந்தார்.

**5. களஞ்சியம் மகளிர் குழு மூலம் செய்யப்பட்ட பணிகள் யாவை?**

- விவசாய நிலத்தை குத்தகைக்கு எடுத்தல்.
- கூலிவேலைக்கு ஆட்களைச் சேர்த்தல்.
- அவர்கள் மூலம் நடவு, களையெடுப்பு, அறுவடை வேலைகளைச் செய்தல்.
- கூலியை சரிசமமாகப் பிரித்துக் கொடுத்தல்.
- வயதானவர், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுதல் ஆகியவையாகும்.

**6. மகளிர் குழுமூலம் செய்யப்பட்ட பணிகள் யாவை?**

- விவசாய நிலத்தை குத்தகைக்கு எடுத்தல்.
- கூலிவேலைக்கு ஆட்களைச் சேர்த்தல்.
- அவர்கள் மூலம் நடவு, களையெடுப்பு, அறுவடை வேலைகளைச் செய்தல்.
- கூலியை சரிசமமாகப் பிரித்துக் கொடுத்தல்.
- வயதானவர், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுதல் ஆகியவையாகும்.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 175*

**1. உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் - சிறப்புமிக்கவர் - போற்றத்தக்கவர் - என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து வழங்குக.**

**கடின உழைப்பாளர்**

**(மாலையில் பூ விற்பவர், வீட்டு வேலை செய்பவர்)**

எங்கள் ஊரில் விமலா என்றொரு பெண்மணி இருந்தார். மாலையில் பூ விற்பார், வீட்டு வேலை செய்வார். அவர் கல்வியாளரோ, எழுத்தாளரோ, போராட்டக்காரரோ அல்லர். கடின உழைப்பாளர்.

எவ்வாறெனில், திருமணமான நாள் முதல் கணவரால் பல இன்னல்களைத் துன்பங்களை அனுபவித்ததோடு, இளம்வயதிலேயே விதவையுமாகி சமூக அவலத்துக்கும், உள்ளானார்.

துன்பங்களைப் பெற்ற அவர் 'துன்பம்' துடைத்தூன்றும் தூணாக மாறினார்.

உழைப்பை மட்டும் மூலதனமாகக் கொண்டார். உழைப்பையே உயிர் மூச்சாய் மாற்றினார். வீட்டு வேலை முதல் கிடைக்கும் வேலைகளை எல்லாம் செய்து. தன் பிள்ளைகளின் கல்விக் கண்களைத் திறந்தார்.

ஒரு குழந்தையை மருத்துவராகவும் மற்றொரு குழந்தையைப் பொறியாளராகவும் மாற்றிய விமலா உழைப்பின் இலக்கணமாகத் திகழ்ந்தார்.

இயல் 7

### சிறப்புமிக்கவர்

**(நர்த்தகி நடராஜ்)**

மதுரை மாநகரில் பிறந்து, உலகின் பல்வேறு பகுதிக்குச் சென்று தன் கலையை நடத்தி சிறப்பு செய்தவர் நர்த்தகி நடராஜ்.

இவர் யார் என்றால் நமக்கும் நம் எண்ணங்கள் எல்லாம் சிதறும். இவர் ஒரு மூன்றாம் பாலினத்தவர். செல்வக் குடும்பத்தில் பிறந்த இவர் பெற்றோரால் வெறுக்கப்பட்டு, தன் ஆசிரியரால் ஈர்க்கப்பட்டு, அவரிடமே குருகுலமுறையில் பரதக் கலையை கற்றவர்.

தன் ஆசிரியரால் நர்த்தகி என்று அழைக்கப்பட்ட இவர் 30 ஆண்டுகளாக தன் பரதக் கலையை உலக அரங்கில் நடத்தி 2019-ஆம் ஆண்டு இந்தியா இவருக்கு பத்மஸ்ரீ விருதளித்தது. மனித இனத்தில் மற்றவரால் தாம் வெறுக்கப்பட்டாலும் தன்னையும், தமிழரின் பரதக்கலையையும் உலகிற்குக் கொண்டு சென்ற சிறப்புமிக்கவர் நர்த்தகி நடராஜ்

### போற்றத்தக்கவர்

**(சாலை ஓரம் உணவகம் நடத்துபவர்)**

கோவை பேரூர் பகுதியில் வசிக்கும், பாட்டி பெயர் சொன்னாலே அனைவருக்கும் தெரியும். அந்த அளவுக்கு இட்லியால் புகழ் பெற்றவர். இன்றும் ஒரு ரூபாய்க்கு ஆவி பறக்கும் இட்லி விற்பவர்.

நல்ல சுவையான சட்னியோடு 80 வயதிலும் இலாபத்தை நோக்காமல் பலரின் பசியாற்றியவர். அவர் தேவையை ஆட்சியர் கேட்டாலும் எதுவும் வேண்டாம் என்பார்.

ஆட்சியர் அவருக்கு பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா வீடும், அரசு அவரை கௌரவித்தும் வருகிறது. ஒரு ரூபாய் இட்லியால் ஓராயிரம் கோடி மக்களால் போற்றப்படுபவர்.



www.tnpscjob.com

இயல் நாடு 7

கற்கண்டு

# புறப்பொருள் இலக்கணம்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவதன் காரணம் ________.
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
[விடை: இ) வலிமையை நிலைநாட்டல்]

### குறுவினா

1. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

| | | |
|---|---|---|
| வெட்சித் திணை | × | கரந்தைத் திணை |
| வஞ்சித் திணை | × | காஞ்சித் திணை |
| நொச்சித் திணை | × | உழிஞைத் திணை |

### சிறுவினா

1. அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பா மாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

- இந்நிகழ்வுக்குப் பொருத்தமான திணை ‘வஞ்சித்திணை’ ஆகும்.
- மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணையாகும்.
- அவந்தி நாட்டுமன்னன், மருத நாட்டு மன்னனுடன் பகைகொண்டு போர் புரிந்து மருத நாட்டைக் கைப்பற்ற நினைப்பதால் இந்நிகழ்வு ‘வஞ்சித்திணைக்குப்’ பொருந்தி வருகிறது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது ________.
அ) புறத்திணை ஆ) புறநானூறு
இ) பதிற்றுப்பத்து ஈ) பரிபாடல் [விடை: அ) புறத்திணை]

இயல் 7

www.tnpscjob.com

2. புறத்திணைகள் எத்தனை வகைப்படும்?
அ) ஒன்பது ஆ) பதினொன்று
இ) பன்னிரண்டு ஈ) பதிமூன்று [விடை: இ) பன்னிரண்டு]

3. வெட்சிப் பூ இன்று எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) மல்லிகைப்பூ ஆ) இட்லிப்பூ
இ) சங்குப்பூ ஈ) உன்னிப்பூ [விடை: ஆ) இட்லிப்பூ]

4. ஒரு தலைக்காமத்தைக் குறிக்கும் திணை __________.
அ) பெருந்திணை ஆ) பொதுவியல்
இ) கைக்கிளை ஈ) கொடையை [விடை: இ) கைக்கிளை]

5. 'வாகை' என்பது எதனைக் குறிக்கும்?
அ) போர் ஆ) வெற்றி
இ) ஆநிரைமீட்டல் ஈ) மதில் வளைத்தல் [விடை: ஆ) வெற்றி]

6. 'நொச்சி' எந்நிலத்துக்கு உரியது __________.
அ) குறிஞ்சி ஆ) மருதம்
இ) முல்லை ஈ) பாலை [விடை: ஆ) மருதம்]

7. நொச்சிப் பூவை சூடிப் போரிடுவது __________.
அ) கோட்டையைக் காக்க ஆ) மன்னனைக் காக்க
இ) ஆநிரைக் கவர ஈ) வலிமையை நிலைநாட்ட
[விடை: அ) கோட்டையைக் காக்க]

8. பாடாண் திணை பிரித்து எழுதுக.
அ) பாடாண் + திணை ஆ) பாடாண் + ஆண் + திணை
இ) பாடு + ஆண் + திணை ஈ) பாட + ஆண் + திணை [விடை:இ)பாடு+ஆண்+திணை]

9. காஞ்சி என்பது ஒரு வகை __________.
அ) நெடுமரம் ஆ) குறுமரம்
இ) குறுஞ்செடி ஈ) புதர்ச்செடி [விடை: ஆ) குறுமரம்]

10. போரைத் தொடங்கும் நிகழ்வாகக் கருதப்படுவது __________.
அ) கோட்டை வளைத்தல் ஆ) போரிடல்
இ) ஆநிரை கவர்தல் ஈ) கோட்டை காத்தல் [விடை: இ) ஆநிரை கவர்தல்]

11. மக்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த போது __________ சொத்தாகக் கருதினர்.
அ) கோட்டையை ஆ) ஆநிரைகளை
இ) நிலத்தை ஈ) வீரத்தை [விடை: ஆ) ஆநிரைகளை]

12. மன்னனது போரை மட்டும் சொல்லாது பிற மாண்புகளையும் பாடும் திணை __________.
அ) பாடாண் திணை ஆ) பொதுவியல் திணை
இ) வாகைத் திணை ஈ) நொச்சித் திணை [விடை: அ) பாடாண் திணை]

13. அன்பின் ஐந்திணை பற்றியது __________ ஆகும்.
அ) அகப்பொருள் ஆ) புறப்பொருள்
இ) நுண்பொருள் ஈ) ஐவகைநிலம் [விடை: அ) அகப்பொருள்]



www.tnpscjob.com

**14. கவர்ந்து செல்லப்பட்ட ஆநிரைகளை மீட்பது ________.**

அ) வெட்சி ஆ) வஞ்சி

இ) கரந்தை ஈ) உழிஞை **[விடை: இ) கரந்தை]**

**15. பொருத்துக.**

1. வெட்சித்திணை - அ) கவர்ந்து செல்லப்பட்ட ஆநிரை மீட்டல்
2. கரந்தைத்திணை - ஆ) மண்ணாசை கருதி பகைநாட்டைக் கைப்பற்ற போரிடல்
3. வஞ்சித்திணை - இ) நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர் நின்று போரிடல்
4. காஞ்சித்திணை - ஈ) ஆநிரை கவர்தல்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ

இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

**16. பொருத்துக.**

1. நொச்சித்திணை - அ) கோட்டையைக் கவர கோட்டையைச் சுற்றி வளைத்தல்
2. உழிஞைத்திணை - ஆ) கோட்டையைக் காத்தல் வேண்டி உள்ளிருந்து போரிடல்
3. தும்பைத்திணை - இ) இருபெரு வேந்தரும் வீரர்களும் ஒருவரோடு ஒருவர் போரிடுவது
4. வாகைத்திணை - ஈ) போரில் வெற்றி

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ

இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ]**

**17. பொருத்துக.**

1. பாடாண்திணை - அ) வெட்சி முதல் பாடாண் வரை கூறப்படாத செய்திகள்
2. பொதுவியல் திணை - ஆ) ஆளுமையாளரின் கல்வி முதலானவற்றைப் புகழ்ந்து பாடல்
3. கைக்கிளை - இ) பொருந்தாக் காமம்
4. பெருந்திணை - ஈ) ஒருதலைக்காமம்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ

இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

**18. பூக்கள் இடம்பெறும் புறத்திணைகள் ________.**

அ) 8 ஆ) 12

இ) 6 ஈ) 4 **[விடை: அ) 8]**

**19. பூக்கள் இடம்பெறாத புறத்திணைகள் ________.**

அ) 8 ஆ) 12

இ) 6 ஈ) 4 **[விடை: ஈ) 4]**

**20. அகத்திணையாக இருந்து புறத்திணையாக்கப்பட்ட திணைகள் ________.**

அ) கைக்கிளை, பெருந்திணை ஆ) பொதுவியல், பாடாண்

இ) வெட்சி, கரந்தை ஈ) நொச்சி, உழிஞை **[விடை: அ) கைக்கிளை, பெருந்திணை]**

**21. முடக்கத்தான் (முடக்கொற்றான்) என்பது ________.**

அ) உழிஞைப் பூ ஆ) தும்பைப் பூ

இ) வெட்சிப் பூ ஈ) நொச்சிப் பூ **[விடை: அ) உழிஞைப் பூ]**

**22. மருத நிலத்திற்குரியப் பூ ________.**

அ) உழிஞைப் பூ ஆ) தும்பைப்பூ

இ) வெட்சிப்பூ ஈ) நொச்சிப்பூ **[விடை: ஈ) நொச்சிப்பூ]**



www.tnpscjob.com

**23. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) வெட்சித்திணை - ஆநிரை கவர்தல்
ஆ) கரந்தைத்திணை - ஆநிரை மீட்டல்
இ) வஞ்சித்திணை - மண்ணாசை காரணமாக போர்
ஈ) காஞ்சித்திணை - கோட்டையைக் காத்தல்

**[விடை: ஈ) காஞ்சித்திணை - கோட்டையைக் காத்தல்]**

**24. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) காஞ்சித்திணை - எதிர்த்துப் போரிடல்
ஆ) நொச்சித்திணை - கோட்டை காத்தல்
இ) உழிஞைத்திணை - மதில் வளைத்தல்
ஈ) தும்பைத்திணை - போரில் வெற்றி **[விடை: ஈ) தும்பைத்திணை - போரில் வெற்றி]**

## குறுவினா

**1. புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் புறத்திணைகள் யாவை?**

- வெட்சி
- கரந்தை
- வஞ்சி
- காஞ்சி
- நொச்சி
- உழிஞை
- தும்பை
- வாகை
- பாடாண்
- பொதுவியல்
- கைக்கிளை
- பெருந்திணை

**2. நொச்சிப் பூக்களின் வகைகளைக் குறிப்பிடுக.**

மணிநொச்சி, கரு நொச்சி, மலை நொச்சி, வெண் நொச்சி - போன்றவையாகும்.

**3. தும்பைத் திணையை விளக்குக.**

பகை கொண்ட வேந்தர்கள் இருவரும் 'தம் வலிமையே பெரிது' என்பதை நிலை நாட்டும் பொருட்டு தம் வீரர்களுடன் தும்பைப் பூச்சூடி களம் குறித்துப் போரிடுதல் ஆகும்.

**4. பாடாண் திணையை விளக்குக.**

- பாடு + ஆண் + திணை எனப் பிரிக்கப்படும்.
- பாடப்படும் ஆண்மகனது, கல்வி, வீரம், செல்வம், புகழ், ஈகை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது.
- போரை மட்டும் சொல்லாது ஒருவரின் பிற மாண்புகளையும் குறிப்பிடுவதே பாடாண் திணையாகும்.

**5. பொதுவியல் திணையை விளக்குக.**

வெட்சி முதல் பாடாண் வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது பொதுவியல் திணை ஆகும்.

**6. புறத்திணை என்பது யாது ?**

புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணையாகும்.

**7. ஆநிரை கவர்தல் நடைபெறக் காரணம் யாது?**

- மக்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த காலத்தில், ஆநிரைகளை (மாடுகளை) சொத்தாகக் கருதினர்.
- ஒரு குழுவினர் மற்றொரு குழுவினர் ஆநிரைகளைக் கவர்தல் வழக்கமாயிற்று.
- போரைத் தொடங்கும் நிகழ்வாக ஆநிரை கவர்தல் மேற்கொள்ளப்பட்டது.

**8. போரிடும் அரசர்கள் இருவரும் ஒரே வகைப் பூவைச் சூடுவர் - எப்போது? எவ்வகைப்பூ?**

பகை மன்னர் இருவரும் வலிமை பெரிது என்று நிலைநாட்ட, தம் வீரர்களுடன் தும்பைப் பூவைச்



www.tnpscjob.com

சூடிப் போரிடுவர்.

**9. பூக்கள் இடம்பெறும் புறத்திணைகள் எத்தனை ? அவை யாவை?**

பூக்கள் இடம்பெறும் புறத்திணைகள் : எட்டு

- வெட்சிப்பூ - வெட்சித்திணை
- கரந்தைப் பூ - கரந்தைத் திணை
- வஞ்சிப்பூ - வஞ்சித்திணை
- காஞ்சிப்பூ - காஞ்சித்திணை
- நொச்சிப்பூ - நொச்சித்திணை
- உழிஞைப்பூ - உழிஞைத்திணை
- தும்பைப்பூ - தும்பைத்திணை
- வாகைப்பூ - வாகைத்திணை

**10. பூக்கள் இடம்பெறாத புறத்திணைகள் எத்தனை? அவை யாவை?**

பூக்கள் இடம்பெறாத புறத்திணைகள் : நான்கு.

அவை: பாடாண் திணை, பொதுவியல் திணை, கைக்கிளை, பெருந்திணை

**11. தொல்காப்பியர் காலத்தில் அகத்திணையாக இருந்து புறத்திணையாக்கப்பட்ட திணைகள் யாவை?**

கைக்கிளை, பெருந்திணை.

**12. மதில் போர் பற்றிய திணைகள் யாவை?**

நொச்சித்திணை, உழிஞைத்திணை.

**13. ஆநிரை பற்றிய திணைகள் யாவை?**

வெட்சித்திணை, கரந்தைத்திணை.

**14. எதிர் எதிர் புறத்திணைகள் யாவை?**

- வெட்சித்திணை (கவர்தல்)
- கரந்தைத்திணை (மீட்டல்)
- வஞ்சித்திணை (மண்ணாசை கருதிப் போரிடல்)
- காஞ்சித்திணை (எதிர்போரிடல்)
- நொச்சித்திணை (கோட்டை காத்தல்)
- உழிஞைத்திணை (கோட்டை முற்றுகையிடல்)

**15. வெற்றிப்பூ எது?**

வெற்றிப்பூ : வாகை

போரில் வெற்றி பெற்ற மன்னனுக்கு வாகைப்பூ சூடி மகிழ்வர்.

**16. கல்வி, செல்வம், வீரம் முதலியவற்றைப் புகழ்ந்து பாடும் புறத்திணை எது?**

பாடாண் திணை.

**17. புறப்பொருள் பற்றி உரையாடியவர்கள் யாவர்?**

- கிள்ளிவளவன் : முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்
- சேரலாதன் : பத்தாம் வகுப்பு மாணவர்

**18. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பெரும்போர் நடக்கின்றது. இதனைப் புறப்பொருள் வெண்பா மாலை கூறும் இலக்கணம் வழி விளக்குக.**

**புறப்பொருள் வெண்பா மாலை கூறும் இலக்கணம் :**

பகைமன்னர் இருவரும் வலிமை பெரிது என்று நிலைநாட்ட, தம் வீரர்களுடன் தும்பைப்பூவைச் சூடிப் போரிடுவர். இது தும்பைத் திணை.

**விளக்கம் :**

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் தங்கள் வலிமை பெரிது என்று நிலைநாட்ட, தம் வீரர்களுடன் போரிடுவதால், இதனைத் தும்பைத் திணையாகக் கொள்ளலாம்.

இயல் 7

19. **மலைப்பகுதியில் அரியதாகக் கிடைக்கும் நெல்லிக்கனி. அது நீண்ட ஆயுள் தரும். அதியனே நீவிர் உண்ணாது. எம் சாதல் ஒழிய கொடுத்த பெருமகனே என்று வாழ்த்துகிறார் ஔவையார். இதனைப் புறப்பொருள் வெண்பா மாலை கூறும் இலக்கணம் வழி விளக்குக.**

**புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணம் :**

பாடுவதற்குத் தகுதி உடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப்பாடுவது பாடாண் திணையாகும்.

**விளக்கம் :**

அதியமானின் புகழை ஔவையார் பாடுவதால், இஃது பாடாண் திணையாகும்.

## சிறுவினா

1. **புறத்திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை? விளக்குக.**

புறத்திணை 12 வகைப்படும். அவை:

- வெட்சித்திணை - நிரை கவர்தல்
- கரந்தைத்திணை - நிரை மீட்டல்
- வஞ்சித்திணை - வஞ்சிப்பூ சூடி போருக்குச் செல்லுதல்
- காஞ்சித்திணை - காஞ்சிப்பூ சூடி எதிர்த்துப் போரிடல்
- நொச்சித்திணை - கோட்டையைக் காக்க உள்ளிருந்து போரிடுதல்
- உழிஞைத்திணை - கோட்டையைக் கைப்பற்ற சுற்றி வளைத்தல்.
- தும்பைத்திணை - வலிமையை நிலைநாட்ட களம் குறித்துப் போரிடுதல்
- வாகைத்திணை - போரில் வெற்றி பெற்றவன் வாகை சூடி மகிழ்தல்
- பாடாண்திணை - போரை மட்டும் சொல்லாது மன்னனின் பேராண்மைகளைப் பாடுவது
- பொதுவியல் - புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது.
- கைக்கிளை பெருந்திணை - ஒருதலைக்காமம்
- பெருந்திணை - பொருந்தாக்காமம்

## மொழியை ஆள்வோம்

*பக்கம்: 180*

**மொழிபெயர்க்க.**

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

**விடை:**

**மருத நிலம்**

பண்டைய சங்க இலக்கிய காலத்தில், பூகோள அடிப்படையில் (நில அமைப்புப்படி) தமிழ்நாடு ஐந்து வகையாக இருந்தது. அவற்றுள் மருத நிலப்பகுதியே உழவுத் தொழிலுக்கு ஏற்றதாய் இருந்தது. அந்த நிலப்பகுதியில் விவசாயிகள் (உழவர்கள்) பயன்பெறும் வகையான தேவையான பருவ காலங்கள் சிறந்திருந்தது. தேவையான சூரிய வெப்பம், வளமான நிலம், போதுமான அளவு மழையும் இருந்தது. அதனால் விவசாயம் செழித்தது. மருத நிலத்தின் இயற்கைக் கூறுகளாலும், போதுமான சூரிய வெப்பத்தினாலும் பழந்தமிழகத்தில் மருதநிலத்தில் உழவுத்தொழில் சிறந்திருந்தது.



www.tnpscjob.com

**பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**

வரப்போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்.

**வரப்போகிறேன்**

என் நண்பன் இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகிறேன் என்றான்.

**இல்லாமல் இருக்கிறது**

எங்கள் நாடு பஞ்சம் இல்லாமல் இருக்கிறது.

**கொஞ்சம் அதிகம்**

சங்ககாலத்தில் மன்னர்களுக்கு காதலும் வீரமும் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது.

**முன்னுக்குப் பின்**

முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவது நன்றன்று.

**மறக்க நினைக்கிறேன்.**

எனக்கு பிடிக்காத நிகழ்வுகளை மறக்க நினைக்கிறேன்.

**தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.**

மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.

**தொகைச் சொற்கள்**

| தொகைச் சொற்கள் | எண்ணுரு | |
|---|---|---|
| **நாற்றிசை : நான்கு + திசை** | **(நான்கு - ச)** | கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு. |
| **முத்தமிழ் : மூன்று + தமிழ்** | **(மூன்று - ௩)** | இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ். |
| **இருதிணை : இரண்டு + திணை** | **(இரண்டு - உ)** | உயர்திணை, அஃறிணை. |
| **முப்பால் : மூன்று + பால்** | **(மூன்று - ௩)** | அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால். |
| **ஐந்திணை : ஐந்து + திணை** | **(ஐந்து - ரு)** | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. |
| **அறுசுவை : அறு + சுவை** | **(ஆறு - சுn)** | இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கசப்பு, உவர்ப்பு (கரிப்பு), துவர்ப்பு. |

**கடிதம் எழுதுக.**

**நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்

ஆர். இராகவன்,
16, பெரியகடைவீதி,
மதுரை.

www.tnpscjob.com

பெறுநர்

ஆசிரியர் அவர்கள்,
‘கனல்’ நாளிதழ்,
மதுரை.

பொருள்: கட்டுரை வெளியிட வேண்டுதல் - தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

தங்கள் நாளிதழின் சார்பாக பொங்கல் பண்டிகையை ஒட்டி வெளியிடும் பொங்கல் மலருக்காக உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளேன். அக்கட்டுரையைத் தங்கள் அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளேன். தாங்கள் அக்கட்டுரையைத் தங்கள் நாளிதழ் சார்பாக வெளியிடும் பொங்கல் சிறப்பு மலரில் என் கட்டுரையும் வெளிவர ஆவன செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

இடம் : மதுரை
நாள் : 8.3.2020

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
ஆர். இராகவன்.

உறைமேல் முகவரி:

| |
|---|
| பெறுநர்<br>ஆசிரியர் அவர்கள்,<br>‘கனல்’ நாளிதழ் அலுவலகம்,<br>மதுரை - 10. |

**கவிதையை உரையாடலாக மாற்றுக.**

| | கவிதை | உரையாடல் |
|---|---|---|
| **மகள் சொல்லுகிறாள்** | அம்மா என் காதுக்கொரு தோடு - நீ<br>அவசியம் வாங்கி வந்து போடு!<br>சும்மா இருக்க முடியாது - நான்<br>சொல்லி விட்டேன் உனக்கு இப்போது! | அம்மா! என் காதுக்கு ஒரு தோடு வாங்கித் தாங்கம்மா! தோடு இல்லாமல் வெறுங்காதோடு என்னால் இருக்க முடியாது... சொல்லிட்டேன். |
| **தாய் சொல்லுகிறாள்** | காதுக்குக் கம்மல் அழகன்று - நான்<br>கழறுவதைக் கவனி நன்று<br>நீதர் மொழியை வெகுபணிவாய் - நிதம்<br>நீ கேட்டு வந்து காதில் அணிவாய்! | காதிற்குத் தங்கக் கம்மல் மட்டும் அழகு கிடையாது. நான் சொல்வதைக் கவனித்து பணிவான சொற்களையும் நல்ல கருத்துகளையும் உன் காதுகளுக்கு அணியாக அணிந்து கொள். |
| **மகள் மேலும் சொல்லுகிறாள்** | கைக்கிரண்டு வளையல் வீதம் - நீ<br>கடன்பட்டுப் போட்டிடினும் போதும்!<br>பக்கியென் றென்னை யெல்லோரும் -என்<br>பாடசாலையிற் சொல்ல நேரும்! | கைக்கு இரண்டு வளையல்கள் கடன் வாங்கியாவது எனக்கு வாங்கித்தா அம்மா பக்கி வளையல் இல்லையா- என்று பள்ளியில் என்னைக் கேலி செய்கிறார்கள். |



www.tnpscjob.com

| | | |
|---|---|---|
| **தாய் சொல்லும் சமாதானம்** | வாரா விருந்து வந்த களையில்–அவர்<br>மகிழ உபசரித்தால் வளையல்!<br>ஆராவமுதே மதி துலங்கு – பெண்ணே<br>அவர்சொல்வ துன்கைகட்கு விலங்கு! | மகளே..... நம்மைத் தேடி வரும் விருந்தினரை மகிழ்ச்சியுடன் உபசரித்தலே வளையல் .... அறிவார்ந்த மகளே கேள்... அவர்கள் சொல்லும் வளையல்... உனக்கு கை விலங்கு. |
| **பின்னும் மகள்** | ஆபரணங்கள் இல்லை யானால் – என்னை<br>யார் மதிப்பார் தெருவில் போனால்?<br>கோபமோ அம்மா இதைச் சொன்னால் – என்<br>குறைதவிர்க்க முடியும் | அணிகலன்கள் இல்லாமல் தெருவில் போனால் என்னை யார் தான் மதிப்பார்? இதைச் சொன்னால் உனக்குக் கோபம் வருகிறது. என் குறையை நீக்க மாட்டாய்... |
| **அதற்குத் தாய்:** | கற்பது பெண்களுக்கா பராணம் – கெம்புக்<br>கல்வைத்த, நகைதீராத ரணம்!<br>கற்ற பெண்களை இந்த நாடு–தன்<br>கண்ணில் ஒற்றிக் கொள்ளுமன் போடு!<br>– பாரதிதாசன் | கல்விதான் பெண்களுக்கு உண்மையான அணிகலன்; மாணிக்கக்கல் வைத்த அணிகலன் தீராத ரணத்தையே தரும் மகளே; கல்வி என்னும் அணிகலன் அணிந்த பெண்களை இந்நாடு கண்ணுக்குள் வைத்துப் போற்றும் என்பதை உணர்ந்துகொள். |

## மொழியோடு விளையாடு

பக்கம்: 181

**ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| தஞ்சாவூர் | தஞ்சை | புதுச்சேரி | புதுவை |
| புதுக்கோட்டை | புதுகை | கும்பகோணம் | குடந்தை |
| திருச்சிராப்பள்ளி | திருச்சி | திருநெல்வேலி | நெல்லை |
| உதகமண்டலம் | உதகை | மன்னார்குடி | மன்னை |
| கோயம்புத்தூர் | கோவை | மயிலாப்பூர் | மயிலை |
| நாகப்பட்டினம் | நாகை | சைதாப்பேட்டை | சைதை |

**படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.**



**செய்தி :**

பகை கொண்ட வேற்று நாட்டு மன்னனை எதிர்த்துப் போரிட வஞ்சிப்பூ சூடி வென்றே தீருவோம் என குதிரைப்படை, காலாட்படை,யானைப்படையோடு முன்னேறிச்செல்லும் 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம் ஆகும்.

**அகராதியில் காண்க.**

**மிரியல்** - மிளகு
**வருத்தனை** - பிழைப்பு, தொழில், பெருகுதல், மானிய உரிமை, சம்பளம்.
**அதசி** - சணல்
**துரிஞ்சில்** - வௌவால்வகை, சீக்கரிமரம்

இயல் 7

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

| | |
|---|---|
|  | கிழக்கு வெளுத்தது<br>பொழுது புலர்ந்தது<br>அரைகுறை உறக்கத்திலும்<br>எழுந்தான் ஆர்வத்தோடு<br>தோளிலே ஏற்றினான் ஏரினை.....<br>சந்ததிகள் செழித்து வளர<br>பசித்தவனுக்குப் பசியாற்ற.....<br>பகலவனை வணங்கி<br>உணவைப் படைக்க<br>புறப்பட்டு விட்டான்.<br>அரை நிர்வாணத்தோடு..... |

**கலைச்சொற்கள் அறிவோம்.**

- Consulate - துணைத்தூதரகம்
- Guild - வணிகக்குழு
- Patent - காப்புரிமை
- Irrigation - பாசனம்
- Document - ஆவணம்
- Territory - நிலப்பகுதி

## நிற்க அதற்குத் தக

அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை.

அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள்தானே? இவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்.

| | |
|---|---|
| கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன். | அவற்றின் மதிப்பைக் குறைக்கும் படி எதுவும் கூற அனுமதிக்கமாட்டேன். |
| கல்வெட்டுகளைக் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன். | **வரலாற்று சாசனம் என்பதை உணரச் செய்வேன்.** |
| **கல்வெட்டு மன்னர்களைப் பின்பற்றி நாட்டுப்பற்றை வளர்க்கலாம் என்பதை உணர்த்துவேன்.** | **கல்வெட்டு கூறும் இலக்கிய, கலை வரலாற்றை மக்கள் அறியச் செய்வேன்.** |



www.tnpscjob.com

இயல் அறம்

8

உரைநடை உலகம்

# சங்க இலக்கியத்தில் அறம்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. மேன்மை தரும் அறம் என்பது ___________.**

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது.

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது.

இ) புகழ் கருதி அறம் செய்வது.

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது.

**[விடை: அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது.]**

**2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் ___________.**

அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்

இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

**[விடை: ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்]**

### குறுவினா

**1. குறிப்பு வரைக: அவையம்.**

- அறம் கூறும் மன்றங்கள் அரசனின் ஆட்சிக்குத் துணைபுரிந்தன.
- "அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்" என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அவையம் தனிச்சிறப்புப் பெற்றது.
- மதுரையிலிருந்த அவையம் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.
- மதுரை அவையம் துலாக்கோல் போல் நடுநிலை மிக்கது.

### சிறுவினா

**1. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.**

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும், சமூக உறுப்பினராகவும் இயங்குவதற்கும், அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவுகிறது.

**அரசியல் அறம்:**

**"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"**

நீர் நிலையைப் பெருக்கி, நிலவளம் கண்டு, உணவுப் பெருக்கம் காண்பதும், அதனை அனைவருக்கும் கிடைக்கச்செய்வதும் அரசனின் அறம். இவ்வறம் இன்றைய சூழலில் காணப்படுகிறது.



www.tnpscjob.com

**வணிகத்தில் அறம்:**

**''அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்''**

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருத்தல் கூடாது. நோக்கமின்றி அறம் செய்வதே வணிக அறனின் மேன்மையாகும்.

**போர் அறம்:**

தமிழர் போர் செய்வதிலும் அறநெறி உடையவர்களாக இருந்தனர். போர் அறம் என்பது, வீரமற்றோர், சிறார், முதியோர் போன்றவரை எதிர்த்து போர் செய்யாமல் இருப்பது.

**உதவி செய்வதில் அறம்:**

- பிறருக்கு உதவி செய்வதை அறமாகக் கருதினர். அதாவது, தன்னைத் தாண்டி பிறரைப் பற்றிச் சிந்திக்கும் நிலை.
- 'பிழையா நன்மொழி' என்று நற்றிணையும் கூறுகிறது.
- நிலம் பெயர்ந்தாலும் பொய் சொல்லக் கூடாது. மெய்பேசும் நாவே மனிதனை உயர்த்தும்.
- சங்க இலக்கியங்கள் காட்டும் அறம் ஒரு மனிதன் தனியாகவும், சமூக உறுப்பினராகவும் இயங்குவதற்குப் பண்பு நலனே காரணம் என்று சங்க இலக்கியம் மூலமாக அறிய முடிகிறது.

இறுதியாக, சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைய மனிதனுக்கு அடிப்படையாகவும், வழிகாட்டுதலாகவும் உள்ளது.

## நெடுவினா

**1. பள்ளித் திடலில் கிடந்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

**உறவினருக்கு மடல்**

திருச்சி,
18.03.2020

அன்புள்ள சித்தப்பாவிற்கு இரகு எழுதுவது,

நலம். நலம் அறிய ஆவல்.

நான் இன்று மிக்க மகிழ்ச்சியில் இருக்கிறேன். ஏன் தெரியுமா? நேற்று வகுப்பு முடிந்து வெளியே வந்து கொண்டிருந்தேன். அப்போது பள்ளித்திடலில் ஒரு பணப்பை கிடந்தது. அதில் அதிகமான பணம் இருந்தது. ஒரு நிமிடம் பயம்! ஐயோ! இவ்வளவு பணம் இருக்கிறதே. பையை எடுத்துக் கொண்டு தலைமை ஆசிரியரிடம் சென்றேன். அவர் அலுவலக ஊழியர் கட்டணம் வசூலித்த பணம் இருசக்கர வாகனத்தில் எடுத்துச் செல்லும்போது தவற விட்டுவிட்டார் என்றார்.

தலைமை ஆசிரியர் மிகவும் மகிழ்ந்தார். என் நேர்மையையும், கண்ணியமான செயலையும் பாராட்டினார்.

'பிறர் பொருளுக்கு ஆசைப்படாத உன்னைப் பாராட்டியே தீர வேண்டும் என்று, மறுநாளே காலை இறைவணக்கக் கூட்டத்தில் மாணவர்கள் மத்தியில் என் நேர்மையைப் பாராட்டி, சன்மானத் தொகையைப் பரிசாகவும் வழங்கினார்.

அது மட்டுமில்லாமல் என்னைப் பள்ளி மாணவர் தலைவராக்கினார். நேர்மைக்கு எப்போதும் உயர்வு உண்டு என்று கூறி, அதற்கு 'இரகுவே' சான்று என்று என்னைப் பாராட்டினார்.

இந்நிகழ்வின் மகிழ்ச்சியை உங்களுடனும், சித்தி, தங்கையுடனும் இக்கடிதம் மூலம் பகிர்ந்து கொள்வதற்கு மகிழ்கிறேன்.



www.tnpscjob.com

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள,
இரகு.ம.

உறைமேல் முகவரி:

பெறுநர்
ச. இரவி,
11, பாரதி நகர்,
கோவை - 2.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **சங்க காலத்திற்குப் பிந்தையக் காலம் ________.**
அ) அறநெறிக் காலம் ஆ) மன்னர் காலம்
இ) பக்திக் காலம் ஈ) சமயக் கலப்பில்லாக் காலம் **[விடை: அ) அறநெறிக் காலம்]**

2. **சங்க இலக்கியத்தைப் பற்றி 'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்றவர் ________.**
அ) ஜி.யூ. போப் ஆ) ஆர்னால்டு
இ) கால்டுவெல் ஈ) வீரமாமுனிவர் **[விடை: ஆ) ஆர்னால்டு]**

3. **சங்கப் பாடலில் அறம் பற்றிய கருத்துகள் யாரை முதன்மைப்படுத்தியே கூறப்படுகிறது?**
அ) வீரர்களை ஆ) மக்களை
இ) அமைச்சர்களை ஈ) அரசர்களை **[விடை: ஈ) அரசர்களை]**

4. **மதுரையின் அவையம் பற்றிக் குறிப்பிடும் நூல் ________.**
அ) சிலப்பதிகாரம் ஆ) மதுரைக்காஞ்சி
இ) பரிபாடல் ஈ) மதுரை மும்மணிக்கோவை **[விடை: ஆ) மதுரைக்காஞ்சி]**

5. **உதவி செய்தலை 'உதவியாண்மை' என்று குறிப்பிட்டவர் ________.**
அ) ஈழத்துப் பூதன் தேவனார் ஆ) நக்கீரர்
இ) திருமுடிக்காரி ஈ) கபிலர் **[விடை: அ) ஈழத்துப் பூதன் தேவனார்]**

6. **'இரப்போர்க்கு ஈயாது வாழ்வதை விட உயிர் துறப்பது மேலானது' என்று கூறும் அகநூல் ________.**
அ) கலித்தொகை ஆ) குறுந்தொகை
இ) ஐங்குறுநூறு ஈ) பரிபாடல் **[விடை: அ) கலித்தொகை]**

7. **பேகன், மறுமை நோக்கிக் கொடுக்காதவர் என்று பாராட்டியவர் ________.**
அ) கபிலர் ஆ) ஔவையார்
இ) நக்கீரர் ஈ) பரணர் **[விடை: ஈ) பரணர்]**

8. **'வள்ளலின் பொருள், இரவலனின் பொருள்' - என்றவர் ________.**
அ) நக்கீரர் ஆ) கபிலர்
இ) பெரும்பதுமனார் ஈ) நல்வேட்டனார் **[விடை: இ) பெரும்பதுமனார்]**

9. **'நிறைவடைகிறவனே செல்வன்' என்று கூறும் தத்துவம் ________.**
அ) மாவோவியம் ஆ) தாவோவியம்
இ) பௌத்தம் ஈ) ஜென்தத்துவம் **[விடை: ஆ) தாவோவியம்]**



www.tnpscjob.com

10. ‘பிழையா நன்மொழி’ என்று வாய்மையைக் குறிப்பிடும் நூல் ________.
அ) கலித்தொகை ஆ) புறநானூறு
இ) நற்றிணை ஈ) கொன்றை வேந்தன் [விடை: இ) நற்றிணை]

11. நம்மிடமுள்ள அதிசயத் திறவுகோல் எது?
அ) மூளை ஆ) நாக்கு
இ) கண் ஈ) கை [விடை: ஆ) நாக்கு]

12. சேர அரசர்களின் கொடைப் பதிவாக திகழும் நூல் ________.
அ) புறநானூறு ஆ) பரிபாடல்
இ) பதிற்றுப்பத்து ஈ) சிலப்பதிகாரம் [விடை: இ) பதிற்றுப்பத்து]

13. தன்னிடமுள்ள எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று திருமுடிக்காரியைப் பாராட்டியவர்
அ) கம்பர் ஆ) கபிலர்
இ) ஔவையார் ஈ) நல்வேட்டனார் [விடை: ஆ) கபிலர்]

14. பின்வரும் புலவர்களையும், மன்னர்களையும் சரியான இணையாகப் பொருத்துக.
அ) நக்கீரர் - 1. ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்
ஆ) ஔவையார் - 2. பெருஞ்சாத்தன்
இ) கபிலர் - 3. அதியன்
ஈ) நச்செள்ளையார் - 4. திருமுடிக்காரி
அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4
இ) 2, 3, 4, 1 ஈ) 2, 4, 3, 1 [விடை: இ) 2, 3, 4, 1]

15. இரவலர் வராவிட்டாலும் தேடி வரவழைத்துக் கொடுக்கும் மன்னன் ________.
அ) அதியன்
ஆ) திருமுடிக்காரி
இ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
ஈ) நல்வேட்டனார் [விடை: இ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்]

16. காஞ்சி மாநகரத்து சிற்றரசரே ________ என்றும் சமயப் பெயர் கண்டார்.
அ) தர்மர் ஆ) கன்பூசியஸ்
இ) போதி தர்மர் ஈ) புத்தர் [விடை: இ) போதி தர்மர்]

17. போதி தர்மருக்குக் கோயில் கட்டியவர்கள் ________.
அ) சீனர்கள் ஆ) ஜப்பானியர்
இ) கிரேக்கர் ஈ) புத்தர் [விடை: அ) சீனர்கள்]

18. சமூகக் கடலின் ஒரு துளி ________.
அ) பறவைகள் ஆ) விலங்குகள்
இ) மரங்கள் ஈ) மனிதன் [விடை: ஈ) மனிதன்]

19. சொற்றொடர்களை முறைப்படுத்துக.
i) செய்ய வெறுத்தனர் ii) பழிதரும் செயல்களை
iii) பரிசாகக் கிடைத்தாலும் iv) உலகே
அ) (iv)-(iii)-(ii)-(i) ஆ) (iii)-(iv)-(i)-(ii)
இ) (ii)-(i)-(iv)-(iii) ஈ) (i)-(iv)-(iii)-(ii) [விடை: அ) (iv)-(iii)-(ii)-(i)]



www.tnpscjob.com

**20. பொருத்துக.**

1. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் - அ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
2. இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி அழைக்கும் இயல்பு - ஆ) பேகன்
3. மறுமை நோக்கிக் கொடுக்காதவன் - இ) மலையமான் திரு முடிக்காரி
4. எல்லாவற்றையும் கொடுப்பவன் - ஈ) அதியன்

அ) 1.அ 2.ஆ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஆ)1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

**21. பொருத்துக.**

1. கொடை வள்ளல் எழுவரின் கொடைப்பெருமை - அ) ஆற்றுப்படை இலக்கியங்கள்
2. கொடை இலக்கியங்கள் - ஆ) சிறுபாணாற்றுப் படை
3. சேர அரசர்களின் கொடைப்பதிவு - இ) வள்ளல்கள்
4. இல்லோர் ஒக்கல் தலைவன் - ஈ) பதிற்றுப்பத்து

அ) 1.அ 2.ஆ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: இ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

**22. தவறான சொற்றொடரைக் கண்டறிக.**

அ) நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல்.
ஆ) நாக்கு இன்பத்தின் கதவைத் திறப்பது.
இ) நாக்கு துன்பத்தின் கதவைத் திறப்பது.
ஈ) மெய் பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.

**[விடை: ஈ) மெய் பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.]**

**23. 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்றழைக்கப்பட்டவர் ________.**

அ) அமைச்சர்கள் ஆ) மன்னர்கள்
இ) புலவர்கள் ஈ) சான்றோர்கள் **[விடை: அ) அமைச்சர்கள்]**

**24. 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்று அமைச்சர்களைக் குறிப்பிட்ட புலவர் ________.**

அ) மாங்குடி மருதனார் ஆ) பரணர்
இ) ஆவூர் மூலங்கிழார் ஈ) நக்கீரர் **[விடை: அ) மாங்குடி மருதனார்]**

**25. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதைக் குறிப்பிட்ட புலவர் ________.**

அ) மாங்குடி மருதனார் ஆ) பரணர்
இ) ஆவூர் மூலங்கிழார் ஈ) நக்கீரர் **[விடை: இ) ஆவூர் மூலங்கிழார்]**

**26. குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்று கூறிய புலவர் ________.**

அ) மாங்குடி மருதனார் ஆ) பரணர்
இ) ஆவூர் மூலங்கிழார் ஈ) ஊன் பொதிப் பசுங்குடையார்

**[விடை: ஈ) ஊன் பொதிப் பசுங்குடையார்]**

**27. 'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' எனக் குறிப்பிடும் நூல் ________.**

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து
இ) பரிபாடல் ஈ) நற்றிணை **[விடை: அ) புறநானூறு]**



www.tnpscjob.com

28. **தனிச் சிறப்புப் பெற்றிருந்த அற அவையம் அமைந்திருந்த இடம் ________.**

அ) உறையூர் ஆ) மதுரை
இ) திருநெல்வேலி ஈ) மாமல்லபுரம் **[விடை: அ) உறையூர்]**

29. **உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் நீக்குவது தான் என்றவர் ________.**

அ) நல்வேட்டனார் ஆ) பரணர்
இ) ஆவூர் மூலங்கிழார் ஈ) நக்கீரர் **[விடை: அ) நல்வேட்டனார்]**

30. **சங்க இலக்கியங்கள் பேசும் சிறந்த அறம் ________.**

அ) உதவி ஆ) கொடை
இ) வாய்மை ஈ) பொருள் **[விடை: இ) வாய்மை]**

31. **ஈதல் பற்றியச் செய்திகளைக் கூறும் அகஇலக்கியம் ________.**

அ) கலித்தொகை ஆ) குறுந்தொகை
இ) அகநானூறு ஈ) நற்றிணை **[விடை: அ) கலித்தொகை]**

32. **செல்வத்துப் பயனே ஈதல் என்று கூறும் நூல் ________.**

அ) புறநானூறு ஆ) கலித்தொகை
இ) அகநானூறு ஈ) பரிபாடல் **[விடை: அ) புறநானூறு]**

## குறுவினா

1. **அறத்தின் குறியீடாக போற்றப்பட்டவை எவை?**

மன்னர்களுடைய செங்கோலும், வெண்கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன.

2. **அமைச்சரின் கடமைகளாகச் சங்க இலக்கியம் யாது கூறுகிறது?**

- அரசன் அறநெறியில் ஆட்சி செய்ய உதவி புரிய வேண்டும்.
- நன்றும் தீதும் ஆய்தலும், அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது.

3. **தனிச்சிறப்புப் பெற்ற அவையம் எவை?**

- உறையூரில் இருந்த அறஅவையம் தனிச் சிறப்புப் பெற்றிருந்தது.
- மதுரையில் இருந்த அவையமும் சிறப்புப் பெற்று இருந்தது.
- இவ் அவையங்கள் துலாக் கோல் போல் நடுநிலைமையுடன் இருந்தன.

4. **மகிழ்ச்சி என்பதை விளக்குக.**

- ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து, மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி.
- அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி.

5. **வாய்மை பற்றி இலக்கியங்கள் குறிப்பிடுவதைக் கூறுக.**

- 'பொய்யாச் செந்நா'
- 'பொய்படு பறியா வயங்கு செந்நா'
- 'பிழையா நன்மொழி - நற்றிணை'
- 'பொய்மொழிக் கொடுஞ்சொல்'

என்று பொய் கூறக்கூடாது, வாய்மையே கூறவேண்டும் என்பதை இலக்கியங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன.



www.tnpscjob.com

**6. சங்க இலக்கியம் முதல் தரமான அறம் என்பதை விளக்குக.**

- இயல்பாக அறியும் அறம் முதல் தரமானது.
- சிந்தித்து அறிந்து கொள்ளும் அறம் இரண்டாம் தரமான அறம்.
- தாம் சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாந்தரமான அறம்.

எனவே, சங்க இலக்கிய அறங்கள் இயல்பான முதல் தரமான அறம் என்பது சாலப் பொருந்தும்.

**7. அற இலக்கியங்களில் ஈதல் பற்றிக் கூறப்பட்டுள்ளதை விளக்குக.**

- புற இலக்கியங்களில் மட்டுமல்ல, அற இலக்கியங்களிலும் ஈகை பற்றிய செய்திகள் உள்ளன.
- ஈயாமை இழிவு என அற இலக்கியம் கூறுகிறது.
- இரப்போர்க்கு ஈயாது வாழ்வதைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்று கலித்தொகை கூறுகிறது.

**8. கொடையில் சிறந்த மன்னர்கள் நால்வரைக் குறிப்பிடுக.**

- உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் - அதியன்
- மறுமை நோக்கி கொடுக்காதவன் - பேகன்
- இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்துக் கொடுப்பவன் - ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.
- எல்லாவற்றையும் கொடுப்பவன் - திருமுடிக்காரி.

இவ்வாறு மன்னர்கள் கொடையால் சிறந்திருந்தனர்.

**9. ‘செம்மை சான்ற காவிதி மாக்கள்’ தொடர் பொருள் கூறுக.**

நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் செம்மை சான்ற அமைச்சர் கடமையாகும்.

**10. ‘அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்’ என்ற புறநானூற்று வரிகளின் உட்கருத்தைப் புலப்படுத்துக.**

இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கம் கூடாது. அத்தகைய நோக்கம் இல்லாதவன் வள்ளல் ஆய்.

**11. அறங்கூறவையம் இருந்த இடங்கள் யாவை?**

1. உறையூர் 2. மதுரை

**12. வள்ளல்கள் எவ்வாறெல்லாம் போற்றப்பட்டனர்?**

இல்லோர் ஒக்கல் தலைவன், பசிப்பிணி மருத்துவன் என்றெல்லாம் வள்ளல்கள் போற்றப்பட்டனர்.

**13. உதவியாண்மை என்ற சொல்லின் பொருள் மற்றும் அதனைக் குறிப்பிட்டவர் யார் என்பதைக் குறிப்பிடவும்?**

உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் ‘உதவியாண்மை’ என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.

**14. உண்மையான செல்வம் எது என நல்வேட்டனார் குறிப்பிடுகின்றார்?**

பிறர் துன்பம் தீர்ப்பது தான் உண்மையான செல்வம் என நல்வேட்டனார் குறிப்பிடுகின்றார்.

**15. ‘ஆற்றுப்படை இலக்கியங்கள் கொடை இலக்கியங்களாக உள்ளன’ - இக்கூற்றில் சுட்டப்படும் ஆற்றுப்படை இலக்கியங்கள் யாவை?**

- திருமுருகாற்றுப் படை
- பெரும்பாணாற்றுப்படை
- பொருநாராற்றுப்படை
- கூத்தராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை

**16. வள்ளல் எழுவரின் கொடைச்சிறப்பைப் புலப்படுத்துவன எவை?**

வள்ளல் எழுவரின் கொடைச்சிறப்பை சிறுபாணாற்றுப்படையும், பெருஞ்சித்திரனார் பாடல்களும் புலப்படுத்துகின்றன.



www.tnpscjob.com

**17. குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிடும் செய்தி யாது?**

தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, நாட்டை இழந்த துன்பத்தை விடப் பெருந்துன்பம் என்று குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிடுகின்றார்.

**18. 'இல்லோர் ஒக்கல் தலைவன்' யார் என்பதை விளக்குக.**

பொருள் இல்லாத ஏழைச் சுற்றத்திற்குத் தலைவன் வள்ளல்கள் ஆவர்.

**19. கொடை என்பதும் ஓர் அறம் என்பதனை ஔவையார் எவ்வாறு குறிப்பிடுகிறார்?**

'உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்' என்கின்ற ஔவையின் கூற்று கொடை என்பதும் ஓர் அறம் என்பதனைத் தெளிவாக்குகிறது.

## சிறுவினா

**1. உண்மையான செல்வம் எது?**

உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்.

'சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்'
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே'

என்று நல்லந்துவனார் குறிப்பிடுகிறார். செல்வம் என்பது சிந்தையின் நிறைவு.

**2. சங்ககாலப் போர் அறம் குறித்து எழுதுக.**

- தமிழர் போரிலும் அறத்தைப் பின்பற்றினர்.
- போர் அறம் என்பது வீரமற்றோர் புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கும்.
- பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போரிடுவதும் போர் அறமாகக் கருதப்பட்டது.

**3. நோக்கம் கருதி அறம் செய்தல் கூடாது விளக்குக.**

- அறம் செய்வதில் வணிக நோக்கம் இருத்தல் கூடாது.
- இப்பிறப்பில் அறம் செய்தால் மறுபிறப்பில் பயன் பெறலாம் என்று கருதியும் செய்தல் கூடாது.
- நோக்கமின்றித் தரும் அறமே சிறந்த அறமாகும்.

**4. கொடையின் சிறப்பை இலக்கியங்கள் போற்றுவது பற்றி எழுதுக.**

- கடையெழு வள்ளல்களின் கொடைச் சிறப்பு, சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் போற்றப்பட்டுள்ளது.
- ஆற்றுப்படை இலக்கியங்கள் கொடை இலக்கியங்களாகவே உள்ளன.
- பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகும்.
- புறநானூற்றிலும் குறிப்பிட்ட மன்னர்களின் கொடைச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

**5. மகிழ்ச்சி பெருக என்ன செய்ய வேண்டும்?**

- மனிதன் சமூகக் கடலின் ஒரு துளி.
- மனிதன் எல்லோரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கு எவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவு மகிழ்ச்சி பெருகும்.
- இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொதுவிதியான அறத்தை மனிதன் ஏற்றால் மகிழ்ச்சி பெருகும்.



www.tnpscjob.com

6. **கொடை என்னும் பகுதியில் அமைந்த வள்ளல்கள் பெயரினைத் தொகுத்து எழுதுக.**

- பிடவூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தன்
- அதியன்
- ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
- பேகன்
- குமணன்
- திருமுடிக்காரி

## கற்பவை கற்றபின்

பக்கம்: 187

1. **'பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அறக் கருத்துக்களை வலியுறுத்தும் சங்க இலக்கியப் பாடலடிகள் ஐந்தினைத் தொகுத்து அவை கூறும் அறச் செய்திகளை எழுதுக.**

சங்க இலக்கியப் பாடலடிகள் கீழ்க்காணும் ஐந்தின் அடிப்படையில் அறச்செய்திகளை வலியுறுத்துகிறது.

- வறுமை
- நிலையான செல்வம்
- நேரிய ஆட்சி
- வாய்மை
- ஈகை

**'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
**அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்.....'** - புறநானூறு

இப்பிறப்பில் அறம் செய்தால், அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கம் கூடாது. நோக்கம் இன்றி அறம் செய்வதே மேன்மை.

**'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்**
**அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்'**

மன்னருடைய செங்கோலும் வெண் கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசின் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும்.

**'செல்வத்துப் பயனே ஈதல்'** - *புறநானூறு*

வீரத்தைப் போலவே ஈகையையும் தமிழ் நூல் போற்றியது. ஈகையும் ஓர் அறச்செயலே. செல்வத்தின் பயன் கொடுத்து மகிழ்வதே என்று வாழ்ந்தனர்.

**'சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே'** - *நற்றிணை*

பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதி உதவுதலே பண்பு. பிறர் துன்பம் தீர்ப்பதே உண்மையான செல்வம் ஆகும்.

**'பிழையா நன்மொழி'** - *நற்றிணை*

மெய் பேசுவது நன்மொழியாகும் வாய்மை எனப்படுவது தவறியும் பொய் பேசாதிருத்தல். நிலம் பெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது.



www.tnpscjob.com

**2. கொன்றை வேந்தன் முதலான பிற்கால அறநூல்களின் பெயர்களை அறிந்து, அவற்றுள் ஏதேனும் ஒரு நூலின் அறக் கருத்துக்களை எடுத்துக் கொண்டு அவை இன்றும் பொருந்தி நிற்பது குறித்துக் கலந்துரையாடுக.**

**கலந்துரையாடுபவர்கள் : சோமு, கலா, மாலா,**

சோமு : நானும் நலம்தான் சரி நாம் இன்றைக்கு வகுப்பில் அறக் கருத்துக்கள் பற்றிப் படித்தோம் அல்லவா, அதைப் போலவே எளிமையான அறக்கருத்துக்களை நாம் புரிந்து கொள்ளும் வகையில் சில நூல்கள் கூறுகிறது. அதனைப் பற்றிப் பேசுவோமா.

கலா : எனக்கு கொன்றை வேந்தன் மிகவும் பிடிக்கும்

மாலா : எனக்கும்தான்...

சோமு : அதைப்பற்றிப் பேசுவோம். இந்நூல் அகரநிரல் அமைப்புப்படி 91 ஒற்றை வரிப் பாக்களால் ஆனது

கலா : அதை எழுதினது ஔவைதானே.

மாலா : சரியாகச் சொல்லி விட்டாயே!

சோமு : அந்த நூலில் ஈகை என்னும் அறத்தைப் பற்றி ஒரு வரி உணர்த்துகிறது. அது என்ன தெரியுமா?

கலா : ‘ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார்’

சோமு : சரியாகச் சொன்னாய்.

மாலா : ஆமாடா நாம் ஒருவருக்கும் கொடுக்காமல், யாருக்கும் நன்மை செய்யாமல் சேர்த்து வைத்திருக்கும் செல்வம் யாருக்கும் பயன்படாது, அதனை திருடரோ மற்றவரோ கொள்வர்.

கலா : எங்கள் பக்கத்து ஊரில் மிகப் பெருஞ்செல்வந்தர். வேலை பார்ப்பவருக்குக் கூட கூலி ஒழுங்காத் தர மாட்டார். இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்துவிடுவார். ஒரு நாள் வந்த திருடன் பெட்டியை உடைத்து அத்தனையும் கொள்ளையடித்து விட்டான்.

சோமு : புரிந்து கொண்டீர்களா தோழிகளே! எக்காலத்திலும் அறக்கருத்துகள் எப்போதும், முக்காலத்துக்கும் பொருந்துவனவாகவே உள்ளது.



www.tnpscjob.com

இயல் 8 அறம்

கவிதைப் பேழை

# ஞானம்

- தி.சொ. வேணுகோபாலன்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது ________.**

அ) காலம் மாறுவதை

ஆ) வீட்டைத் துடைப்பதை

இ) இடையறாது அறப்பணி செய்தலை

ஈ) வண்ணம் பூசுவதை **[விடை: இ) இடையறாது அறப்பணி செய்தலை]**

### குறுவினா

**1. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?**

- காலக் கழுதை கட்டெறும்பானது என்பது காலம் மாறி வயது முதிர்தலைக் குறிப்பது ஆகும்.
- வயது முதிர்ந்து உடலும் உடல் உறுப்புகளும் வலுவிழந்தாலும் அறப்பணியைத் தொடர்ந்து செய்கிறார்.
- வாளித்தண்ணீர், சாயக்குவளை, துணிகந்தையானாலும், சாயம்அடிக்கும்தூரிகைகட்டையானாலும் சுத்தம் செய்வது போல, காலக்கழுதை கட்டெறும்பான பின்னும் அறப்பணி ஓயாது தொடர்கிறது.

### சிறுவினா

**1. ‘சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம் என்ற தலைப்பில்’, பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக.**

**(குறிப்பு: சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்)**

**உரைக்குறிப்புகள்:**

- அறம் என்பதன் விளக்கம் தரல்.
- சுற்றுச்சூழல் என்றால் என்ன?
- சுற்றுச்சூழலோடு அறத்திற்கு உள்ள தொடர்பை விளக்குதல்.
- அறம் சார்ந்த வகையில் மாசு அடைவதைத் தவிர்க்க வழி கூறுதல்.
- சட்டங்கள் வன்மையாக இருந்தாலும், அரசின் வாயிலாக மென்மைப்படுத்தல் வேண்டும்.
- நெகிழி, ஆலைக்கழிவு, நச்சுக்காற்று, வாகனப்புகை இவற்றால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்பதை மக்கள் மனதில் பதிய வைத்தல்.
- இக்குறிப்புகளை மையமாக வைத்து உரையாற்ற வேண்டும்.



www.tnpscjob.com

**2. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.**

வீட்டின் சுவர், சன்னல் போன்றவற்றில் அழுக்குப்படிந்தும், சன்னல்களில் கரையான் படிவதைத் தடுக்க, வாளித் தண்ணீரைக் கொண்டு சுவரையும் சன்னலையும் நன்கு கழுவ வேண்டும். பிறகு கந்தைத் துணியால் நன்கு துடைத்துவிட வேண்டும். மூன்றாவதாக, சாயக் குவளையில் உள்ள சாயத்தைக் கட்டைத் தூரிகைக் கொண்டு சாயம் பூசி புதுப்பிக்க வேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

### இலக்கணக் குறிப்பு.

**காலக்கழுதை** - உருவகம்

**கந்தைத்துணி** - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

### பகுபத உறுப்பிலக்கணம்.

| | |
|---|---|
| **துடைத்தேன் - துடை + த் + த் + ஏன்**<br>துடை - பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகால இடைநிலை<br>ஏன் - குறிப்பு வினைமுற்று விகுதி | **அடித்தேன் - அடி + த் + த் + ஏன்**<br>அடி - பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகால இடைநிலை<br>ஏன் - குறிப்பு வினைமுற்று விகுதி |
| **பொருத்தினேன் - பொருத்து + இன் + ஏன்**<br>பொருத்து - பகுதி<br>இன் - இறந்தகால இடைநிலை<br>ஏன் - குறிப்பு வினைமுற்று விகுதி | **ஓய்ந்து - ஓய் + த்(ந்) + த் + உ**<br>ஓய் - பகுதி<br>த் - சந்தி, 'ந்' ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி |

### பலவுள் தெரிக

**1. 'ஞானம்' - கவிதையின் ஆசிரியர் ___________.**

அ) அப்துல் ரகுமான் ஆ) வேணுகோபாலன்
இ) இராஜகோபாலன் ஈ) இராமகோபாலன் **[விடை: ஆ) வேணுகோபாலன்]**

**2. உலகிற்கான பணிகள் எதைச் சார்ந்து வளர வேண்டும்?**

அ) மறம் ஆ) அறம்
இ) ஞானம் ஈ) கல்வி **[விடை: ஆ) அறம்]**

**3. 'ஞானம்' கவிதை இடம்பெற்ற தொகுப்பு ___________.**

அ) தீக்குச்சி ஆ) மீட்சி விண்ணப்பம்
இ) கோடை வயல் ஈ) கோடைமழை **[விடை: இ) கோடை வயல்]**

**4. தி.சொ.வேணுகோபாலன் பிறந்த ஊர் ___________.**

அ) தஞ்சாவூர் ஆ) திருவாதவூர்
இ) திருவாரூர் ஈ) திருவையாறு **[விடை: ஈ) திருவையாறு]**

**5. தி.சொ.வேணுகோபாலன் எக்காலத்துப் புதுக்கவிஞர்களில் ஒருவர்?**

அ) மணிக்கொடி ஆ) எழுத்து
இ) வானம்பாடி ஈ) கவிக்குயில்கள் **[விடை: ஆ) எழுத்து]**



www.tnpscjob.com

6. வேணுகோபாலன் பேராசிரியராகப் பணியாற்றியது ________.
அ) கோவை மருத்துவக் கல்லூரியில்
ஆ) மணிப்பால் பொறியியல் கல்லூரியில்
இ) சென்னை கிண்டி கல்லூரியில்
ஈ) வேளாண்மைக் கல்லூரியில் [விடை: ஆ) மணிப்பால் பொறியியல் கல்லூரியில்]

7. ''மீட்சி விண்ணப்பம்'' கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் ________.
அ) வேணுராம் ஆ) வேணுகோபாலன்
இ) சி.சு. செல்லப்பா ஈ) கபிலன் [விடை: ஆ) வேணுகோபாலன்]

8. 'ஞானம்' கவிதை உணர்த்தும் பொருள் ________.
அ) சமூக அறப்பணி
ஆ) வீட்டைப் புதுப்பித்தல்
இ) இடைவிடாத சமூக அறப்பணியை
ஈ) உலகப் பணிகள் [விடை: இ) இடைவிடாத சமூக அறப்பணியை]

9. அறப்பணி ஓய்ந்தால் ________ இல்லை.
அ) மனிதன் ஆ) இயற்கை
இ) உலகம் ஈ) கடல் [விடை: இ) உலகம்]

10. ''புதுக்கொக்கி பொருத்தினேன்'' - இத்தொடர் உணர்த்துவது ________.
அ) சாளரக் கதவை சீர்ப்படுத்துதல்
ஆ) சமூகத்தைச் சீர்ப்படுத்துதல்
இ) பொய்களை நீக்குதல்
ஈ) வீட்டைப் புதுப்பித்தல் [விடை: ஆ) சமூகத்தைச் சீர்ப்படுத்துதல்]

11. பொருத்துக.
1. கரையான் - அ) கட்டெறும்பு
2. காலக்கழுதை - ஆ) வந்தொட்டும்
3. தெருப்புழுதி - இ) காற்றுடைக்கும்
4. சட்டம் - ஈ) மண்வீடு கட்டும்
அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ [விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]

12. 'அறப்பணி ஓய்வதில்லை
ஓய்ந்திடில் உலகமில்லை!' - இவ்வடிகளில் அமைந்த நயம்?
அ) எதுகை ஆ) மோனை
இ) முரண் ஈ) இயைபு [விடை: ஈ) இயைபு]

13. பொருத்துக.
1. வாளி - அ) குவளை
2. சாயம் - ஆ) தண்ணீர்
3. கந்தை - இ) தூரிகை
4. கட்டை - ஈ) துணி
அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ [விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]



www.tnpscjob.com

## குறுவினா

**1. வேணுகோபாலனின் கவிதைத் தொகுப்புகள் யாவை?**

கோடை வெயில், மீட்சி விண்ணப்பம் ஆகியவை ஆகும்.

**2. 'ஞானம்' என்னும் கவிதையில் இடம்பெறும் அஃறிணை உயிர்கள் யாவை?**

கரையான், கழுதை, கட்டெறும்பு.

**3. 'காலக்கழுதை**
**கட்டெறும்பான**
**இன்றும்**
**கையிலே' – என இவ்வடிகளுக்கு இணையான தமிழ்ப்பழமொழி எழுதுக.**

கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது.

## சிறுவினா

**1. தி.சொ. வேணுகோபாலன் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | தி.சொ.வேணுகோபாலன் |
| பிறப்பு | : | 7.11.1929 |
| ஊர் | : | தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவையாறு. |
| கல்வி | : | சென்னை லயோலா கல்லூரியில் இளம் அறிவியல் பட்டம், ராஜஸ்தான் பிலானியில் இயந்திரவியல் (mechanical) பொறியியல் பட்டம். |
| பணி | : | மணிப்பால் பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். |
| நூல்கள் | : | கோடைவயல், மீட்சி விண்ணப்பம். 1959 முதல் "எழுத்து" இதழில் கவிதை எழுதத் தொடங்கினார். |

**2. 'ஞானம்' கவிதை உணர்த்தும் பொருள் யாது? (அல்லது) "அறப்பணி ஓய்வதில்லை, ஓய்ந்திடில் உலகமில்லை" – எனக் கவிஞர் கூறக் காரணம் யாது?**

- 'ஞானம்' கவிதை இடையுறாது செய்யும் அறப்பணியாம் சமூகப் பணியை உணர்த்துகிறது.
- வீட்டின் சாளரத்தில் எத்தனை முறை புழுதி ஒட்டினாலும், கரையான் மண் வீடு கட்டினாலும் துடைக்கிறோம். சுத்தப்படுத்துகிறோம்.
- சுத்தப்படுத்தும் இப்பணியை முதிர் வயதாகும் வரை செய்து கொண்டேதான் இருக்கிறோம்.
- சமுதாயத்திலும் சீர்கேடுகள் தொடர்ந்து ஏற்படும்.
- அவலங்கள் நடந்துகொண்டேதான் இருக்கும்.
- எனினும் அவற்றைத் தடுத்து சமூகத்தைச் சீர்படுத்தும் பணியான அறப்பணியை தொடர்ந்து நாம் செய்துகொண்டே இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

**3. அறப்பணி ஓய்வதில்லை**
**ஓய்ந்திடில் உலகமில்லை!.**

**அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?**
கோடைவயல்.

**ஆ) இவ்வடிகள் இடம்பெற்ற கவிதை எது?**
ஞானம்.

**இ) எது ஓய்வதில்லை?**
அறப்பணிகள் ஓய்வதில்லை.



www.tnpscjob.com

ஈ) **இவ்வடியில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்களை எழுதுக.**

ஓய்வதி**ல்லை** உலக**மில்லை**

4. **'காலக்கழுதை**
**கட்டெறும்பான**
**இன்றும்**
**கையிலே**
**வாளித்தண்ணீர்.......' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:**

தி.சொ.வேணுகோபாலனின் கோடை வயல் தொகுப்பில் 'ஞானம்' என்னும் தலைப்புக் கவிதையில் இவ்வரிகள் இடம்பெறுகின்றன.

**பொருள்:**

காலமாகிய கழுதை கட்டெறும்பாகத் தேய்ந்துபோன இன்று வரை கையில் வாளித் தண்ணீர் மட்டுமே வைத்துள்ளோம்.

**விளக்கம்:**

- காலக் கழுதை கட்டெறும்பானது என்பது காலம் மாறி வயது முதிர்தலைக் குறிப்பது ஆகும்.
- வயது முதிர்ந்து உடலும் உடல் உறுப்புகளும் வலுவிழந்தாலும் அறப்பணியைத் தொடர்ந்து செய்கிறார்.
- வாளித்தண்ணீர், சாயக்குவளை, துணிகந்தையானாலும், சாயம் அடிக்கும் தூரிகை கட்டையானாலும் சுத்தம் செய்வது போல, காலக்கழுதை கட்டெறும்பான பின்னும் அறப்பணி ஓயாது தொடர்கிறது.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 188*

1. **''துளிப்பா'' ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அதில் வெளிப்படும் கருத்தினைப் பற்றி வகுப்பறையில் இரண்டு நிமிடம் உரை நிகழ்த்துக.**

**ஆராய்ச்சி மணிஅடித்த மாடுகள்**
**அரண்மனைத் தட்டில்**
**பிரியாணி ஆகிவிட்டன.**

- நீதி தவறாத செங்கோல் வளையாத மரபாக இருந்தது சோழ மரபு. அச்சோழ மரபிலே வந்தவன் மனுநீதிச் சோழன்.
- அரண்மனை வாயிலின் ஆராய்ச்சி மணியை அடித்த பசுவின் துயரைத் துடைக்கத் தன் ஒரே மகனை தேர்க்காலில் இட்டுக் கொன்று பசுவின் துயரைத் தானும் அனுபவித்து "வாயில்லா ஜீவனுக்கும் அறம்'' உணர்த்திய மாண்பு நம் தமிழ் மண்.
- ஆனால் சீர்கேடு அடைந்து உள்ள இன்றைய சமூகச் சூழலில் நீதி கேட்டுப் போராடுபவர்களே தண்டிக்கப்படுகிறார்கள்; அழிக்கப்படுகிறார்கள்.
- இச்சமூக அவலத்தையே இக்கவிதை தோலுரித்துக் காட்டியுள்ளது. அன்று ஆராய்ச்சி மணி அடித்த போது பசுவுக்கு நீதி கிடைத்தது. இன்றோ! நீதி கேட்கும் மாடுகள் அழிக்கப்பட்டு விடும் என்பதைக் குறிப்பாக இக்கவிதை உணர்த்துகிறது.



www.tnpscjob.com

**2. திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் தலைப்பினை எழுதி, அகரவரிசைப்படுத்தி அதன் பொருளினை எழுதுக.**

அறத்துப்பாலில் 38 அதிகாரங்கள் உள்ளன. அவை:

| | | |
|---|---|---|
| 1. அடக்கமுடைமை | - | அடக்கத்தின் மேன்மை |
| 2. அருளுடைமை | - | கருணை உடையவராய் இருத்தல் வேண்டும். |
| 3. அவாவறுத்தல் | - | பேராசையை விலக்கு |
| 4. அழுக்காறாமை | - | பொறாமை நீக்க வேண்டும். |
| 5. அறன் வலியுறுத்தல் | - | அறத்தின் சிறப்பை எடுத்துக் கூறுதல் |
| 6. அன்புடைமை | - | அன்பின் மகத்துவம் |
| 7. இல்வாழ்க்கை | - | குடும்ப வாழ்வின் சிறப்பு, பெருமை |
| 8. இன்னாசெய்யாமை | - | துன்பம் செய்யாதிருத்தல் |
| 9. இனியவைகூறல் | - | இனிய சொற்களின் சிறப்பு |
| 10. ஈகை | - | கொடுத்து மகிழ்தலின் சிறப்பு |
| 11. ஊழ் | - | விதி வலிமை |
| 12. ஒப்புரவறிதல் | - | கொடுத்தல் |
| 13. ஒழுக்கமுடைமை | - | ஒழுக்கமே உயர் செல்வம் |
| 14. கடவுள் வாழ்த்து | - | இறைவனை வாழ்த்துதல் |
| 15. கள்ளாமை | - | மது அருந்துதல் கூடாது |
| 16. கூடாவொழுக்கம் | - | பொய் ஒழுக்கம் |
| 17. கொல்லாமை | - | உயிர்க்கொலைக் கூடாது. |
| 18. செய்ந்நன்றியறிதல் | - | ஒருவர் செய்த நன்மையை நினைத்தல் |
| 19. தவம் | - | துன்பத்தைப் பொறுத்தல், பிறருக்குத் துன்பம் செய்யாமை |
| 20. தீவினையச்சம் | - | தீச் செயல் செய்ய அஞ்சுதல் |
| 21. துறவு | - | உலகப் பற்றை நீக்குதல் |
| 22. நடுவு நிலைமை | - | பாரபட்சம் பாராதிருத்தல் |
| 23. நிலையாமை | - | எதுவும் நிலையன்று |
| 24. நீத்தார் பெருமை | - | துறவு மேற்கொள்பவர் சிறப்பு |
| 25. பயனில சொல்லாமை | - | பயனற்ற சொற்களைத் தவிர்த்தல் |
| 26. பிறனில் விழையாமை | - | பிறர் மனைவி, பொருளை விரும்பாமை |
| 27. புகழ் | - | சிறப்பு |
| 28. புலால் மறுத்தல் | - | ஊன் உண்ணாதிருத்தல் |
| 29. புறங்கூறாமை | - | ஒருவர் இலாதிடத்து அவரைப் பற்றிப் பேசாமை |
| 30. பொறையுடைமை | - | பொறுமை |
| 31. மக்கட்பேறு | - | பிள்ளைச் செல்வம் |
| 32. மெய்யுணர்தல் | - | பொய் மயக்கத்திலிருந்து விடுபடுதல் |
| 33. வாழ்க்கைத் துணை நலம் | - | நன்மனையாள் பெருமை |
| 34. வாய்மை | - | உண்மையின் மேன்மை |
| 35. வான்சிறப்பு | - | மழையின் சிறப்பு |
| 36. விருந்தோம்பல் | - | விருந்தினரை உபசரித்தல் |
| 37. வெகுளாமை | - | சினம் கொள்ளாமை |
| 38. வெஃகாமை | - | பிறர் பொருளை விரும்பாமை |



www.tnpscjob.com

இயல் 8 அறம்

கவிதைப் பேழை

# காலக்கணிதம்

- கண்ணதாசன்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **காலக் கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ............**

அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது.

ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது.

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என் மனம்.

ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால். **[விடை: அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது]**

### குறுவினா

1. **"கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!**
**உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது."**
**அ) அடி எதுகையை எழுதுக.**
**ஆ) இலக்கணக்குறிப்பு எழுதுக: கொள்க, குரைக்க.**

**அடி எதுகை:**

கொள்வோர்
உள்வாய்

**இலக்கணக்குறிப்பு:**

கொள்க, குரைக்க - வியங்கோள் வினைமுற்று

### நெடுவினா

1. **காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.**

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படுபொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக! *- கண்ணதாசன்*

www.tnpscjob.com

**"காலக்கணிதம்"**

**திரண்ட கருத்து:**

கவிஞன் நானே காலத்தைக் கணிப்பவன். உள்ளத்தில் உதிக்கும் பொருளை வார்த்தை வடிவம் கொடுத்து ஒரு உருவமாய் அவற்றை நான் படைப்பதால் இப்பூமியில் நானும் புகழ்பெற்ற தெய்வம். பொன்னைவிட விலை உயர்ந்த செல்வம் என்னுடைய கருத்துகள்.சரியானவற்றை எடுத்துச் சொல்வதும், தவறானவற்றை எதிர்ப்பதும் என் பணி. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று பணிகளும் நானும் கடவுளும் அறிந்தவை.

**மோனை நயம்:**

**காட்டுக்கு யானை**
**பாட்டுக்கு மோனை**

செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.

**க**விஞன்...
**க**ருப்படு....
**இ**வை சரி
**இ**வை தவறாயின் ... மோனை நயம் பெற்று வந்துள்ளது.

**எதுகை நயம்:**

**மதுரைக்கு வைகை**

**செய்யுளுக்கு எதுகை**

செய்யுளில் முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

கருப்படு பொருளை உருப்பட வைப்பேன் - சீர் எதுகை நயம் அமைந்துள்ளது.

**முரண்:**

**நாட்டுக்கு அரண்**

**பாட்டுக்கு முரண்**

செய்யுளில் அடியிலோ சீரிலோ எதிரெதிர் பொருள் தரும் வகையில் தொடுக்கப்படுவது முரண் ஆகும். **ஆக்கல்** × **அழித்தல்** என்று முரண்பட்ட சொற்கள் அமைத்து தொடுத்திருப்பதால் முரண் நயமும் உள்ளது.

**இயைபு நயம்:**

அடிதோறும் இறுதி எழுத்தோ, சொல்லோ இயைந்து வரத் தொடுப்பது இயைபு ஆகும்.

... புகழுடைத் தெய்வம்
...பொருளென் செல்வம் - இயைபு நயமும் உள்ளது.

**அணி நயம்:**

கண்ணதாசன் இப்பாடலில், கடவுளுக்கு இணையாக

**யானோர் காலக்கணிதம்**
**நானோர் புகழுடையத் தெய்வம்**

என உருவகப்படுத்தி உள்ளதால் இப்பாடலில் உருவக அணி பயின்று வந்துள்ளது.

**சந்த நயம்:**

சந்தம் தமிழுக்குச் சொந்தம் என்பதற்கு ஏற்ப, இப்பாடலில் 'எண்சீர் கழிநெடிலடி' ஆசிரிய விருத்தம் இடம் பெற்றுள்ளது. அகவலோசையுடன் இனிய சந்த நயமும் பெற்றுள்ளது.

## கூடுதல் வினாக்கள்

### இலக்கணக் குறிப்பு.

| | | |
|---|---|---|
| காலக்கணிதம் | - | உருவகம் |
| ஆக்கல், அளித்தல், அழித்தல் | - | தொழிற்பெயர் |
| கொள்க, எழுதுக | - | வியங்கோள் வினைமுற்று |
| கொள்வோர் | - | வினையாலணையும் பெயர் |
| அறிந்து | - | வினையெச்சம் |

### பகுபத உறுப்பிலக்கணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இறந்த | - | இற + த்(ந்) + த் + அ | அழித்தல் | - | அழி + த் + த் + அல் |
| இற | - | பகுதி | அழி | - | பகுதி |
| த் | - | சந்தி, (ந்) ஆனது விகாரம் | த் | - | சந்தி |
| த் | - | இறந்தகால இடைநிலை | த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி | அல் | - | தொழிற்பெயர் விகுதி |
| அமர்வேன் | - | அமர் + வ் + ஏன் | | | |
| அமர் | - | பகுதி | | | |
| வ் | - | எதிர்கால இடைநிலை | | | |
| ஏன் | - | குறிப்பு வினைமுற்று விகுதி | | | |

### பலவுள் தெரிக

1. காலத்தை வெல்பவன் __________.
   அ) ஆசிரியர் ஆ) அரசர்
   இ) கவிஞன் ஈ) ஓவியன் **[விடை: இ) கவிஞன்]**
2. கண்ணதாசனின் இயற்பெயர் யாது?
   அ) முத்தரசன் ஆ) முத்தையா
   இ) முத்துக்குமார் ஈ) முத்துசாமி **[விடை: ஆ) முத்தையா]**
3. கண்ணதாசன் பிறந்த மாவட்டம் __________.
   அ) இராமநாதபுரம் ஆ) நெல்லை
   இ) புதுக்கோட்டை ஈ) சிவகங்கை **[விடை: ஈ) சிவகங்கை]**
4. கண்ணதாசன் பிறந்த ஊர் __________.
   அ) சிறுகூடல்பட்டி ஆ) கூடல் மாநகர்
   இ) முக்கூடல் ஈ) சிவகங்கை **[விடை: அ) சிறுகூடல்பட்டி]**
5. கண்ணதாசன் முதன் முதலில் திரைப்படத்திற்குப் பாடல் எழுதிய ஆண்டு __________.
   அ) 1939 ஆ) 1942
   இ) 1949 ஈ) 1950 **[விடை: இ) 1949]**
6. கண்ணதாசன் எழுதிய முதல் திரைப்படப் பாடல் __________.
   அ) வாழ நினைத்தால் வாழலாம் ஆ) கலங்காதிரு மனமே
   இ) மலர்களைப் போல் தங்கை ஈ) உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால்
   **[விடை: ஆ) கலங்காதிரு மனமே]**

இயல் 8

7. **கண்ணதாசன் திரைப்படப் பாடல் வாயிலாக மக்களுக்கு ________ உணர்த்தினார்.**
அ) மெய்யியலை ஆ) உலகியலை
இ) ஆன்மீகத்தை ஈ) இலக்கணத்தை **[விடை: அ) மெய்யியலை]**

8. **சாகித்திய அகாதெமி விருது பெற்ற கண்ணதாசனின் நூல் ________.**
அ) மாங்கனி ஆ) இயேசு காவியம்
இ) சேரமான் காதலி ஈ) சிவகங்கைச் சீமை **[விடை: இ) சேரமான் காதலி]**

9. **தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர் ________.**
அ) பாரதியார் ஆ) கண்ணதாசன்
இ) வைரமுத்து ஈ) மேத்தா **[விடை: ஆ) கண்ணதாசன]**

10. **கண்ணதாசன் அட்சயப்பாத்திரம் என்று எதைக் குறிப்பிடுகிறார்?**
அ) தத்துவம் ஆ) கொள்கை
இ) ஞானம் ஈ) பண்பாடு **[விடை: அ) தத்துவம்]**

11. **கண்ணதாசன் தன் வாக்கு மூலங்களாக எவற்றைக் குறிப்பிடுகிறார்?**
அ) தன் நூல்களை ஆ) உரைகளை
இ) இதழ்களை ஈ) வளமார் கவிகளை **[விடை: ஈ) வளமார் கவிகளை]**

12. **'மாற்றம் எனது மானிடத் தத்துவம்' என்றவர் யார்?**
அ) பாரதிதாசன் ஆ) பாரதி
இ) கண்ணதாசன் ஈ) பெரியார் **[விடை: இ) கண்ணதாசன்]**

13. **'கவிஞன் யானோர் காலக் கணிதம்' – இவ்வடிகளில் அமைந்த நயம்.**
அ) எதுகை ஆ) மோனை
இ) இயைபு ஈ) முரண் **[விடை: ஆ) மோனை]**

14. **'புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது**
**இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது!' – இவ்வடிகளில் அமைந்த முரண் சொல்?**
அ) என்னுடல் × என்மனம்
ஆ) புல்லரிக்காது × இறந்துவிடாது
இ) புகழ்ந்தால் × இகழ்ந்தால்
ஈ) புகழ்ந்தால் × என்மனம் **[விடை: இ) புகழ்ந்தால் × இகழ்ந்தால்]**

15. **'கவிஞன் யானோர் காலக் கணிதம்' என்று கூறியவர் ________.**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கண்ணதாசன் **[விடை: ஈ) கண்ணதாசன்]**

16. **'மாற்றம் எனது மானிடத் தத்துவம்' என்று கூறியவர் ________.**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கண்ணதாசன் **[விடை: ஈ) கண்ணதாசன்]**

17. **'வண்டாய் எழுந்து மலர்களில் அமர்வேன்' –எனக் கூறியவர் ________.**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கண்ணதாசன் **[விடை: ஈ) கண்ணதாசன்]**



www.tnpscjob.com

## குறுவினா

**1. கவிஞன் என்பவன் யார்?**

மனம் என்னும் வயலில் சொல்லேர் கொண்டு உழுது, சிந்தனை விதைகளைத் தூவி, மடமை என்னும் களை பறித்து, தத்துவ நீர்ப் பாய்ச்சி, அறம் என்னும் கதிர் அறுப்பவனே கவிஞன் ஆவான்.

**2. எவர் கூறாத ஒன்றைத் தான் கூற முனைவதாக கண்ணதாசன் குறிப்பிடுகிறார்?**

கம்பன், பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் சொல்லாத சிலவற்றைச் சொல்லிட முனைவேன் (முயல்வேன்) என்று கண்ணதாசன் குறிப்பிடுகிறார்.

**3. எவையெல்லாம் மாறாதவை?**

காடு, மேடு, மரம், கல், வனவிலங்குகள் ஆகியவை மாறாதவையாகும்.

**4. கண்ணதாசனின் சிறப்பியல்புகள் யாவை?**

பாடல்கள் புனைவதில், இலக்கிய உலகில் சிறந்த கவிஞர், பேச்சாளர், இதழாளர் போன்றவற்றில் சிறந்து விளங்கினார்.

**5. கண்ணதாசனின் பெற்றோர் யாவர்?**

கண்ணதாசனின் பெற்றோர் : சாத்தப்பன், விசாலாட்சி ஆவர்.

**6. 'ஆக்கல் அளித்தல், அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை' - அவனும் யானும் யாவர்?**

- அவன் என்பது இறைவன் (இறைவன்)
- யான் என்பது கவிஞனாகிய கண்ணதாசன்.

**7. 'கருப்படுப் பொருளை உருப்பட வைப்பேன்' யார்?**

கருப்படுப் பொருளை உருப்பட வைப்பவர் கவிஞர் (கண்ணதாசன்).

**8. 'உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது' - இத்தொடர் பொருள் ஆழத்தை விளக்குக.**

ஒருவர் தன் வாயால் புகழ்வதும் இகழ்வதும் நம் உடம்பின் மீது வந்து சேராது.

## சிறுவினா

**1. கண்ணதாசன் பற்றிக் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | முத்தையா |
| பிறப்பு | : | 24.6.1927 |
| பெற்றோர் | : | சாத்தப்பன் - விசாலாட்சி |
| ஊர் | : | சிவகங்கை - சிறுகூடல்பட்டி |
| சிறப்பு | : | தமிழக அரசவைக் கவிஞர்<br>சாகித்திய அகாதெமி விருது - இயேசு காவியம் |
| புனைப்பெயர் | : | வணங்காமுடி, ஆரோக்கியநாதன், காரைமுத்துப்புலவர். |
| இறப்பு | : | 17.10.1981 |

**2. காலக்கணிதம் கவிதையில் இடம் பெறும் முரண் சொற்களை எழுதுக.**

- சரி × தவறு
- ஆக்கல் × அழித்தல்
- அவனும் × யானும்
- உண்டாயின் × இல்லாயின்
- புகழ்ந்தால் × இகழ்ந்தால்
- தீமை × நன்மை
- தொடக்கம் × முடிவு

இயல் 8

3. **'கவிஞன் யானோர் காலக் கணிதம்**
**கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டல்:**

கண்ணதாசன் கவிதைத்தொகுப்பில் 'காலக்கணிதம்' என்னும் தலைப்பில் இவ்வரிகள் கவிஞர் கூறுவதாக அமைந்துள்ளது.

**பொருள் விளக்கம்:**

கவிஞனாகிய நான் காலமாகிய கணிதம் போன்றவன். கவிதைகளில் கருவான பொருளைக் கூட பயன்படும் பொருளாக ஆக்குவேன் என்கிறார் கவிஞர்.

4. **'நானே தொடக்கம்; நானே முடிவு;**
**நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டல்:**

கண்ணதாசன் கவிதைத்தொகுப்பில் 'காலக்கணிதம்' என்னும் தலைப்பில் இவ்வரிகள் கவிஞர் கூறுவதாக அமைந்துள்ளது.

**பொருள் விளக்கம்:**

கவிஞனாகிய நானே அனைத்தின் தொடக்கம் ஆவேன். நானே முடிவும் ஆவேன். நான் சொல்வது தான் நாட்டினுடைய சட்டம் ஆகும்.

5. **'கவிஞன் யானோர் காலக் கணிதம்' - எனத் தொடங்கும் கவிஞர் கண்ணதாசனின் கவிதையில் உங்களைக் கவர்ந்த மூன்று தொடர்களை எழுதி காரணத்தைக் குறிப்பிடுக.**

**புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது**
**இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது'**

- தன்னை ஒருவர் புகழ்வதினால் பெருமகிழ்ச்சியடைவதோ, இகழ்வதினால் மனம் வருந்துவதோ இல்லை என்பது பண்பட்ட மனத்திற்குச் சான்றாகிறது.

**'செல்வர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்;**
**பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்!''**

- என்பதிலிருந்து பணமோ, பதவியோ தன்னை ஒருபோதும் அடிமைப்படுத்த இயலாது என்பதற்குச் சான்றாக அமைகிறது.

**'எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை**
**என்ப தறிந்து ஏகுமென் சாலை!'**

- நல்லது எது கெட்டது எது என்பதறிந்து பகுத்தறிவுடன் செயல்படுவதற்குச் சான்றாகிறது.

## நெடுவினா

1. **கண்ணதாசனின் 'காலக்கணிதம்' கவிதைக் கருத்துகளில் உன்னைக் கவர்ந்ததைச் சுருக்கி எழுதுக.**

- கவிஞன் நான் ஓர் காலக்கணிதம் கருவாகிய பொருளை உருப்பட வைப்பேன். பூமியில் புகழுக்கு உரிய தெய்வம் நான்.
- பொன்னைவிட உயர்ந்தது என் செல்வம். ஒரு செயல் சரி என்றால் எடுத்துச் சொல்வேன்; தவறு என்றால் எதிர்ப்பேன். அதுதான் என் வேலை.
- முத்தொழில் நானும் அவனும் மட்டுமே அறிந்தது. செல்வர் வாளில் சிறைப்பட மாட்டேன். பதவி வாளுக்குப் பயப்பட மாட்டேன். அன்பும், விருப்பமும் மிகுந்து ஆசை தருவதை விரும்புவேன்.
- என்னிடம் உண்டு என்றால், பிறர் உண்ணத் தருவேன். இல்லை என்றால் பிறர் இல்லம் தட்டுவேன். வண்டு போல மாறி மலரில் அமர்ந்து, குடித்த தேனை ஊர்ப்புறம் தருவேன்.

இயல் 8

www.tnpscjob.com

- கம்பன், பாரதி, பாரதிதாசன் ஆகியோர் சொல்லாத கருத்துகளைச் சொல்லிட முயற்சிப்பேன். என்னுடல் புகழ்ந்தால் புல்லரிக்காது. இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது.
- என் கவிதை வாக்குமூலம் அதை வைத்து இறந்த பிறகு தீர்ப்பை எழுதுங்கள். கல், மரம், விலங்காக மாற நான் காட்டு விலங்கு கிடையாது.
- மாற்றம் எனது மானிடத் தத்துவம். மாறும் உலகின் மகத்துவம் அறிவேன். நன்மை, தீமை அறிந்து ஏற்கும் என் சாலை.
- தலைவர் மாறுவார்கள், தர்பார் மாறும், தத்துவம் மட்டும் குறையாத அட்சயப் பாத்திரம் ஏற்றுக்கொள்வோர் ஏற்றுக்கொள்ளட்டும். குரைப்போர் குரைக்கட்டும்.
- வாய்ச்சொற்கள் உடம்பினைத் தொடாது. நானே தொடக்கம் நானே முடிவு. நான் சொல்வதுதான் நாட்டின் சட்டம்.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 190*

1. **கவிதைகளை ஒப்பிட்டுக் கருத்துரைக்க.**

| கவிச்சக்கரவர்த்தியும் கவியரசும் | |
|---|---|
| நதியின் பிழையன்று<br>நறும்புனலின்மை அன்றே<br>பதியின் பிழையன்று<br>பயந்த நம்மைப் புரந்தான்<br>மதியின் பிழையன்று<br>மகன் பிழையன்று மைந்த<br>விதியின் பிழை நீ<br>இதற்கென்னை வெகுண்டதென்றன்<br>*- கம்பன்* | நதிவெள்ளம் காய்ந்து விட்டால்<br>நதிசெய்த குற்றம் இல்லை<br>விதிசெய்த குற்றம் இன்றி<br>வேறு - யாரம்மா!<br>*- கண்ணதாசன்* |

### நதியின் பிழையன்று:

- இராமன் கானகம் செல்ல வேண்டும் என்றவுடன் இலக்குவன் சினம் கொண்டான்.
- அண்ணனைக் கானகம் போகச் சொல்லிவிட்டார்களே, விதிக்கு விதி காரணம் என் வில்லினால் அனைவரையும் அழிப்பேன் என்று ஆவேசப்பட்ட இலக்குவனைத் தடுத்து நிறுத்தி இராமன் கூறியது இது.
- நதியின் பிழை எதுவும் அல்ல நல்ல தண்ணீர் இல்லாதது.
- நறும்புனல் இன்மை என்பது, நதியில் நீர் இருக்கிறது. ஆனால் நல்லதாக இல்லை. அதுபோல நான் கானகம் செல்வது தசரதன் பிழையும் அன்று. அன்போடு நம்மை வளர்த்த கைகேயின் மதியின் பிழையும் அன்று.
- பரதன் பிழையும் இதில் இல்லை. விதியின் பிழை. நீ ஏன் இதற்காகக் கோபப்படுகிறாய். "சினமும் வேகமும் தவிர்"
- இதைப் போலவே கண்ணதாசனின் பாடலான "நதிவெள்ளம் காய்ந்து விட்டால்..." பாடல் உணர்த்துவதும் விதியைத் தான்.
- தவறு செய்யாத நாயகன் மீது பழி சுமத்தப்படும் சூழலில் நதியின் நீர்மையைப் போல மானுடர் உள்ளங்களில் இருக்கும் நற்பண்புகள், மனசாட்சி உண்மை, பொய் அறிதல் வற்றிவிடுகிறது.
- நதி வற்றிவிட்டால் அது நதியின் குற்றம் அல்ல. விதியின் குற்றமே.
- அதைப்போலவே மானுடர் பண்புகள் மாற்றம் பெற்று நாயகன் மீது சுமத்தப்பட்ட பழி பாவங்களும் விதி செய்த பிழையேயன்றி வேறு யாருமில்லை என்பதை கண்ணதாசன் கூறியுள்ளார்.



www.tnpscjob.com

இயல் 8 அறம்

விரிவானம்

# இராமானுசர் - நாடகம்

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

1. **குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.**

**மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி.**

**காட்சி - 1**

| | |
|---|---|
| இடம் | : வகுப்பறை |
| பாத்திரங்கள் | : குகன், செழியன், தமிழாசிரியர் மற்றும் மாணவர்கள். |

**குகன்** : செழியா! வந்துவிட்டாயா.

**செழியன்** : வந்துவிட்டேன் குகன். இன்று நம் தமிழாசிரியர் அவர்கள் மாணவன் எப்படி இருக்கவேண்டும் என்று சில குறிப்புகளை வழங்குகிறேன் என்றாரே! அவர் அறைக்குச் செல்வோமா?

**குகன்** : செல்வோம் செழியன்! இதுவரை நான்கைந்து முறை சென்று பார்த்தோம். ஆசிரியரைச் சந்திக்க முடியவில்லை...

**செழியன்** : இன்று கட்டாயம் நம்மை சந்திப்பார்.

**காட்சி - 2**

| | |
|---|---|
| இடம் | : வகுப்பறை |
| பாத்திரங்கள் | : ஆசிரியர், குகன், செழியன். |

**மாணவர்கள் இருவரும்** : வணக்கம் ஐயா!

**ஆசிரியர்** : வணக்கம்!

**குகன்** : ஐயா! உள்ளே வரலாமா?

**ஆசிரியர்** : வாருங்கள்! வந்ததன் காரணம் கூறுங்கள்.

**செழியன்** : ஐயா, வாழ்வில் முன்னேற சில குறிப்புகளைச் சொல்லி அறிவுரை கூறுகிறேன் என்றீர்களே... அதற்காகத்தான் வந்தோம்.

**ஆசிரியர்** : நல்லது. உங்களுக்கு மூன்று உதாரணங்கள் கூறப்போகிறேன். முதலில் கொக்கைப் போல' வாய்ப்பு கிட்டும் வரை கொக்கைப் போல காத்திருக்க வேண்டும். வாய்ப்பு கிட்டியவுடன் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதைத்தான் வள்ளுவர், 'கொக்கொக்க' எனப் பாடியுள்ளார்.

www.tnpscjob.com

**குகன்** : சரிங்க ஐயா! இனிமேல் நாங்கள் அவசரப்பட்டு எதையும் சிந்திக்காது செயல்பட மாட்டோம்.

**ஆசிரியர்** : இரண்டாவதாக, 'கோழியைப் போல்!'

**செழியன்** : ஆமாங்க ஐயா! அதென்ன கோழியைப் போல்......

**ஆசிரியர்** : கோழி, குப்பையைக் கிளறினாலும் குப்பைக்குள் இருந்தாலும் தனக்குத் தேவையான 'உணவை மட்டுமே' கொத்தித் தின்னும். அதுபோல இந்த சமுதாயத்தில் உங்களைக் கெடுக்கும் குப்பைகளைப் போல பல இருந்தாலும் உமக்குத் தேவையான நன்மணிகளை மட்டும் தேர்ந்தெடுத்து வாழ வேண்டும்.

**இருவரும்** : நன்றாகப் புரிந்தது ஐயா!

**ஆசிரியர்** : மூன்றாவதாக, உப்பைப் போல...

**குகன்** : ஆம். ஐயா, 'உப்பைப்போல' என்பதன் விளக்கம் தாருங்கள்.

**ஆசிரியர்** : கூறுகிறேன்! உப்பைக் கண்ணால் பார்க்கலாம். சுவையை நாவில் இட்டு உணரலாம். அதுபோல ஒவ்வொருவரின் வெளித்தோற்றம் எப்படியிருப்பினும், உங்களைச் சார்ந்தவரின் குணநலன்களை ஆராய்ந்து உணர்ந்து அறிந்து நடந்து கொள்ள வேண்டும். மிக நெருங்கி இருந்தாலும், மிக தூரம் இருந்தாலும் துன்பந்தான். உப்பு குறைவானாலும் உண்ண முடியாது. அதிகமானாலும் உண்ண முடியாது. அளவோடு இருந்தால்தான் ருசிக்க முடியும். நாமும் அளவோடு இருப்போம்.

**இருவரும்** : மிக்க மகிழ்ச்சி ஐயா! எம் அறிவுக் கண்களைத் திறந்து நாங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தி விட்டீர்கள்.

நன்றி! ஐயா!

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது __________.**

அ) பிரம்மகமலம் ஆ) சண்பகம்
இ) குறிஞ்சி ஈ) முல்லை **[விடை: அ) பிரம்மகமலம்]**

**2. தண்டு கொடிக்கு இணையானவர்கள் யாவர்?**

அ) பூரணர் ஆ) கூரேசர்
இ) முதலியாண்டான், கூரேசர் ஈ) இராமானுசர் **[விடை: இ) முதலியாண்டான், கூரேசர்]**

**3. தலைமுறைக்கு ஒருமுறை மட்டுமே மலர்வது __________.**

அ) மூங்கில் ஆ) குறிஞ்சி
இ) கமலம் ஈ) செண்பகம் **[விடை: அ) மூங்கில்]**

**4. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு.**

i) இறைவனின் திருவருளால் இன்று திருமந்திரம் உமக்குக் கிடைத்தது என்றார் பூரணர்.
ii) ஆசிரியர் கட்டளையை மீறினால் தண்டனையாக நரகமே கிடைக்கும்.
iii) செளம்பிய நாராயணனை அடைக்கலமாகக் கொடுக்கவில்லை.



www.tnpscjob.com

அ) மூன்று கூற்றுகளும் சரியானவை
ஆ) ஆ மட்டும் சரியான கூற்று
இ) ஆ, இ இரண்டும் சரியானவை.
ஈ) கூற்று அ, ஆ இரண்டும் சரியானவை. **[விடை: ஈ) கூற்று அ, ஆ இரண்டும் சரியானவை.]**

5. **பூரணரின் மகன் பெயர் ___________.**
அ) நாராயணன் ஆ) சௌம்ய நாராயணன்
இ) சௌம்ய ராஜன் ஈ) முதலியாண்டான் **[விடை: ஆ) சௌம்ய நாராயணன்]**

6. **“நான் மட்டுமே தண்டனை பெற்று நரகம் சேர்வேன். மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும் - என்று கூறியவர்?**
அ) இராமானுசர் ஆ) பூரணர்
இ) கூரேசர் ஈ) முதலியாண்டான் **[விடை: அ) இராமானுசர்]**

7. **சௌம்ய நாராயணன் யாரிடம் அடைக்கலப்படுத்தப்பட்டான்?**
அ) முதலியாண்டானிடம் ஆ) பூரணரிடம்
இ) இராமானுசரிடம் ஈ) கூரேசரிடம் **[விடை: இ) இராமானுசரிடம்]**

8. **பிறவிப் பிணியைத் தீர்க்கும் அருமருந்து ___________.**
அ) திருமந்திரம் ஆ) திருநீறு
இ) மந்திரம் ஈ) துறவு **[விடை: அ) திருமந்திரம்]**

9. **நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்பவர் ___________.**
அ) திருமகள் ஆ) மலைமகள்
இ) கலைமகள் ஈ) அலைமகள் **[விடை: அ) திருமகள்]**

10. **இளையாழ்வாரே! என்று பூரணர் யாரை அழைத்தார்?**
அ) கூரேசரை ஆ) முதலியாண்டானை
இ) இராமானுசரை ஈ) பெரியவரை **[விடை: இ) இராமானுசரை]**

11. **12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டும் மலரும் மலர்**
அ) செண்பகம் ஆ) குறிஞ்சி
இ) முல்லை ஈ) பிரம்மகமலம் **[விடை: ஆ) குறிஞ்சி]**

12. **கூர்வேல் குவைஇய மொய்ம்பின் தேர்வண் பாரிதண் பறம்பு நாடே! -இப்பாடல் வரி எந்நூலில் இடம்பெற்றுள்ளது?**
அ) அகநானூறு ஆ) புறநானூறு
இ) நற்றிணை ஈ) கலித்தொகை **[விடை: ஆ) புறநானூறு]**

13. **சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள மலை**
அ) பழனி மலை ஆ) பிரான் மலை
இ) பொதிகை மலை ஈ) நல்லி மலை **[விடை: ஆ) பிரான் மலை]**



www.tnpscjob.com

## நெடுவினா

**1. இராமானுசர் நாடகம் மூலம் இராமானுசரின் பண்புகளைக் கூறுக.**

| குறிப்புச் சட்டம் |
| --- |
| முன்னுரை<br>பொறுமை உடையவர்<br>நட்புக்கு மரியாதை<br>தன்னலமற்ற பரந்த உள்ளம்<br>முடிவுரை |

**முன்னுரை:**

பிறர்நலம் போற்றுவதே மனித வாழ்வின் சிறந்த நிலை ஆகும். தான் மட்டும் நன்றாக இருந்தால் போதும் என்று எண்ணுவோர் மத்தியில் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று சொல்லி வாழ்ந்து காட்டிய இராமானுசரின் பண்புநலன்கள் பற்றிக் காண்போம்.

**பொறுமை உடையவர்:**

- திருமந்திரத் திருவருளைக் கற்றுக் கொள்வதற்காக பதினெட்டு முறை பூரணரைச் சந்திக்கச் சென்றார்.
- இன்றாவது நம் விருப்பம் நிறைவேறுமா! என்ற உடன்வந்தவர்களையும் பொறுமையுடன் வழி நடத்துகிறார்.
- உங்களை மட்டும்தானே வரச்சொன்னேன் என்ற பூரணரிடமும் பொறுமையுடன் பதில் கூறுகிறார்.
- இவ்வாறு இராமானுசர் பொறுமை என்னும் பண்பில் சிறந்திருத்தலை அறியலாம்.

**நட்புக்கு மரியாதை:**

- எப்பொழுதும் தன்னுடன் இருக்கும் கூரேசரையும், முதலியாண்டானையும் உண்மையான நட்புடன் நேசிக்கிறார்.
- திருமந்திர திருவருளைக் கற்கப் போகும் பொழுதுகூட, பூரணர் தண்டு கொடியுடன் மட்டும் வாருங்கள் என்கிறார்.
- அப்போதும் இவர்கள் இருவரும் என்னுடன் இருக்கும் தண்டும் கொடியும் போன்றவர்கள்தான் என்று கூறி நட்பு உணர்வை வெளிப்படுத்துகிறார்.

**தன்னலமற்ற பரந்த உள்ளம்:**

- பிறவிப் பிணி தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை கற்றபின் தன்னலம் கருதி அதனைத் தனக்காக வைத்துக்கொள்ளாமல் மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்பியவர்.
- குருவின் கட்டளையை மீறினால் நரகம் வந்து சேரும் என்று தெரிந்தபோதும் மக்களுக்குத் திருமந்திரத்தை வெளிப்படுத்துகிறார்.
- திருமந்திரத் திருவருளை வெளியில் சொன்னால் நான் மட்டுமே நரகம் செல்வேன். இத்தனை மக்கள் நரகத்தில் இருந்து விடுபடுவார்கள் அல்லவா! என்ற பரந்த எண்ணம் கொண்டிருந்தார்.
- அதனால் மக்கள் கூட்டத்தை அழைத்து பிறவிப் பிணியறுக்கும் திருமந்திரத்தைக் கற்றுக்கொடுத்து மக்களை நரகில் இருந்து காத்த மகிழ்ச்சியைப் பெற்றார்.
- பரந்த மனப்பான்மை பெற்றிருந்தபடியால் பூரணரால் "எம் பெருமான்" என்று அழைக்கப் பெற்றார்.
- அது மட்டுமின்றி பூரணர் தன் மகன் சௌம்ய நாராயணனையும் அடைக்கலமாக அளித்தார்.
- இவையே இராமானுசர் நாடகம் மூலம் நாம் உணர்ந்து கொள்ளும் தலைமைப் பாத்திரமான "இராமானுசரின் பண்புகள்" ஆகும்.

இயல் 8

**முடிவுரை:**

தன்னலம் அகற்றி, பொதுநலம் போற்றுபவரே உண்மையான மகான்களாக முடியும் என்பதற்கு இராமானுசரே சான்றாக விளங்குகிறார் எனலாம்.

**2. 'என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும். எல்லாரும் நலமுடன்' என்ற இராமானுசரின் கூற்றுக்கு ஏற்ப தன்னலமற்ற பண்புகளைக் கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும் என்பதனை நீங்கள் அறிந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| அன்னை தெரசா |
| விவேகானந்தர் |
| அப்துல்கலாம் |
| முடிவுரை |

**முன்னுரை:**

நாளுக்கு ஒருமுறை மலர்வது செண்பகம். ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது பிரம்ம கமலம். பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி. தலைமுறைக்கு ஒருமுறை மட்டுமே மலர்வது மூங்கில். அதைப்போல் நம் தலைமுறைக்கு ஒருமுறை பிறப்பவர்கள் ஞானிகள். அவ்வாறு உதித்தவர்தான் இராமானுசர். அவர் தனக்கு மட்டுமே வீடுபேறு கிடைக்க வேண்டும் என்று நினைப்பவர் மத்தியில் எல்லாருக்கும் நலம் கிட்ட வேண்டும் என்று எண்ணி, வாழ்ந்து காட்டிய அவரது வாழ்க்கை போற்றுத்தற்குரியது.

**அன்னை தெரசா:**

அயல்நாட்டுப் பெண்மணியாக இருந்தாலும், இந்திய நாட்டுக் குடிமகளாகவே வாழ்ந்தவர் அன்னை தெரசா. அவர் நோய்வாய்ப்பட்ட மக்களுக்கும், ஆதரவற்ற எளியோருக்கும் தனது களங்கமில்லாத சேவையால் பெருந்தொண்டாற்றினார்.

> **"காண்கின்ற மனிதர்களிடத்தில் அன்பு கூறாவிட்டால்**
> **காணாத இறைவனிடத்தில் எப்படி அன்பு கூறுவாய்"**

என்ற விவிலியத்தின் வார்த்தைகளைக் கொள்கையாகக் கொண்டு "உதவும் கரங்கள் ஜெபிக்கும் உதடுகளைவிட மேலானவை" என்று கூறி தன்னலமற்ற உதவிகளை அன்னை தெரசா செய்தமையால் ஒரு கவிஞர் தனது கவிதையில்,

> **"நீ கருவுற்றிருந்தால் ஒரு குழந்தைக்குத் தாயாகி இருப்பாய்...**
> **கருணையுற்றதால் உலகத்திற்கே தாயாகிவிட்டாய்"**

என்று எழுதினார்.

**விவேகானந்தர்:**

அயல்நாட்டிலும் ஆகச்சிறந்த ஆன்மீக உரையால் இந்தியப் பண்பாட்டை உலகறிய செய்த மகான் விவேகானந்தர்.

> **"எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத்**
> **துயரத்தில் அழுமோ, அவரையே நான் மகாத்மா என்பேன்'**

என்று குறிப்பிடும் விவேகானந்தர்,

www.tnpscjob.com

> **"சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு
> வேலை செய்யுங்கள்"**

என்கிறார்.

**அப்துல்கலாம்:**

தன்னலமற்ற தனிப்பெரும் தலைவராக வாழ்ந்து மறைந்தவர் அப்துல் கலாம்.

> **"நம்மை அனைவரும் நினைவு கூரும் வகையில்
> ஒரு பெரும் செல்வத்தை நம் வருங்கால
> சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லும்
> உரிமையும் பொறுப்பும் நம் அனைவருக்கும் உள்ளது"**

என்று குறிப்பிடும் கலாம், 'என்ன செய்வாய்' என எதிர்பார்க்கும் இளைஞனைத் தான் பிறர்க்கு என்னவெல்லாம் செய்யலாமென மாற்றும் கல்வி முறைதான் ஒரு நாட்டின் எதிர்காலத்தலைவர்களை உருவாக்கும்' என தன்னலமற்றவர்களை உருவாக்குவதற்கான வழிகாட்டுதலையும் வழங்குகிறார்.

**முடிவுரை:**

தான் மட்டும் வாழ வேண்டும் என்று நினைப்பவர் மத்தியில் பிறரையும் வாழ வைப்பதற்கான நெறிமுறைகளை அளிப்பதாக பலரின் கூற்றுகளையும் சான்றாகக் கூறிட இயலும். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் திருமூலரின் வாக்கினுக்கேற்ப வாழ்வை அமைத்துக் கொண்டால் உலகில் அன்பே நிலைத்து நிற்கும். பரிதி முன் பனி காணாமல் போவதைப் போல் பகை இவ்வுலகைவிட்டு நீங்கிவிடும்.

## கற்பவை கற்றபின்

*பக்கம்: 194*

1. **கருத்துகளை உரைநடையாகப் படிப்பதிலும் நாடகமாகப் படிப்பதிலும் நீங்கள் உணரும் வேறுபாடுகள் குறித்துக் கலந்துரையாடுக.**

**கலந்துரையாடல்**

**கலந்துரையாடுபவர்கள்:** மீனாட்சி, கயல்விழி, கண்ணன்.

**மீனாட்சி** : அனைவருக்கும் வணக்கம்! இன்றைய பொழுதில் அனைவரும் ஒன்றாய் உள்ளோம். இப்பொழுதை நல்லமுறையில் கழிக்க வேண்டும்.

**கயல்விழி** : நாம் இன்று கல்வி தொடர்பான செய்திகளைக் கலந்துரையாடலாமா?

**மீனாட்சி** : இராமானுசரைப்பற்றி கலந்துரையாடலாமா?

**கயல்விழி** : ஒ... கலந்துரையாடலாமே!

**கண்ணன்** : நாம் இன்று நாடகமாக இராமானுசரைப் பற்றிப் படித்தோம் அல்லவா...

**மீனாட்சி** : ஆம்! அதற்கென்ன...

**கண்ணன்** : உரைநடையைப் படிப்பதற்கும் நாடகத்தைப் படிப்பதற்கும் உள்ள வேறுபாடு குறித்துப் பேசுவோமா...

**கயல்விழி** : ஒ தாராளமாக... நானே தொடங்கி வைக்கிறேன். உரைநடை நீண்ட வாக்கிய அமைப்பு உடையதாக இருக்கும். எனவே படிப்பதற்குச் சலிப்பாக இருக்கும்.

**மீனாட்சி** : சரியாகச் சொன்னாய். நாடகமாகப் படிக்கும்போது கதைப்போக்கில் அமைந்து விடுகிறது.

**கண்ணன்** : கதைப்போக்கில் அமைவதால் படிப்பதற்கு ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.

**கயல்விழி** : உரையாடல் வடிவில் கருத்துகள் இருப்பதால் நேரில் பேசிக் கேட்பது போல் உள்ளது.

**மீனாட்சி** : கதைமாந்தர்கள் பெயர் நினைவுக்கு வரும்போதே அவர்கள் கூறும் கருத்தும் நினைவுக்கு வந்துவிடும்.

**கயல்விழி** : ஆம் மீனாட்சி. உரைநடையை நாம்தான் சொல்லிச் சொல்லிப் பார்த்து நினைவுக்குக் கொண்டு வரவேண்டும்.

**கண்ணன்** : ஆம் தோழிகளே! நம் கலந்துரையாடலில் இருந்து ஒரு கருத்தை உரைநடையில் படிப்பதை விட நாடக வடிவில் படிப்பதே எளிது என்பதை உணர்ந்து கொண்டோம் அல்லவா!

**2. இந்நாடகம் வெளிப்படுத்துவது போன்று இராமானுசர் வாழ்க்கை நிகழ்வுகள் சிலவற்றைத் தொகுத்து அவை குறித்த உங்களின் கருத்துகளை எடுத்துரைக்க.**

- இராமானுசர் தினமும் ஆற்றில் குளிக்கப் போகுமுன் முதலியாண்டான் என்ற அந்தணச் சீடரின் கரம் பற்றி நீராடப் புகுவார்.
- நீராடி முடித்த பின் அந்தணர் அல்லா "உறங்காவில்லி தாசரின்" கரம் பற்றி எழுவார்.
- இது வர்ணாசிரம் தருமத்துக்கு எதிரானது என்றும், பிராமணன் கீழ்க் குலத்தோனைத் தொடுவது தவறல்லவா? இது நீர் அறியாததா? இதற்கான காரணம் என்ன என்றனர் பிற சீடர்கள்.

இராமானுசர் பின்வருமாறு பதில் கூறினாராம்:

- எத்தனை தான் ஞானம் பெற்றாலும், உயர்குலத்தில் பிறந்தோம் என்ற எண்ணம் எனக்குள் ஆணவமாக இருந்தால் இறைநிலை அடைய முடியாமல் போய்விடும் அல்லவா?
- எனவே இப்பிறவியின் அகங்காரத்தைப் போக்க அகங்காரமே சிறிதும் இல்லாத இந்த அடியவனைத் தீண்டி என்னைச் சுத்தம் செய்து கொள்கிறேன் என்றார்.
- "சாதியை ஒழிப்போம், ஆன்மீகத்தால் சமத்துவம் வளர்ப்போம், உயர்வு தாழ்வு நீக்குவோம் என்று வெறும் வாய்ப்பேச்சு பேசாதவராய்த் தன் செய்கையால் வாழ்ந்து காட்டியவர் இராமானுசர். அவர் வழியை நாமும் பின்பற்றுவோம்.



www.tnpscjob.com

இயல் 8 அறம்

கற்கண்டு

# பா-வகை, அலகிடுதல்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ___________.**

அ) அகவற்பா　　ஆ) வெண்பா

இ) வஞ்சிப்பா　　ஈ) கலிப்பா　　**[விடை: அ) அகவற்பா]**

### குறுவினா

**1. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.**

- குறள் வெண்பா என்பது வெண்பாவின் பொது இலக்கணம் அமையப் பெற்று இரண்டு அடிகளாய் வரும்.
- முதலடி நான்கு சீராகவும், இரண்டாம் அடி மூன்று சீராகவும் வரும்.

**எ.கா:** கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

**2. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.**

வஞ்சிப்பா தூங்கல் ஓசையையும், கலிப்பா துள்ளல் ஓசையையும் பெற்று வரும்.

### சிறுவினா

**1. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.**

- அகவல் ஓசை பெற்று வரும்.
- ஈரசைச் சீர் மிகுதியாகவும் காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.
- ஆசிரியத்தளை மிகுதியாக வரும்.
- வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவி வரும்.
- மூன்றடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.
- ஏகாரத்தில் முடியும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. யாப்பின் உறுப்புகள் ___________.**

அ) 3　　ஆ) 5

இ) 6　　ஈ) 7　　**[விடை: இ) 6]**



www.tnpscjob.com

**2. பொருத்திக் காட்டுக.**

| **பாவகை** | | **ஓசை** |
|---|---|---|
| அ) வெண்பா | - | 1. துள்ளல் ஓசை |
| ஆ) ஆசிரியப்பா | - | 2. செப்பலோசை |
| இ) கலிப்பா | - | 3. தூங்கல் ஓசை |
| ஈ) வஞ்சிப்பா | - | 4. அகவலோசை |

அ) 2, 4, 1, 3 ஆ) 2, 1, 3, 4
இ) 3, 1, 2, 4 ஈ) 1, 4, 2, 3 **[விடை: அ) 2, 4, 1, 3]**

**3. மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அடி அமையும் பாவகை ________.**

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா
இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா **[விடை: ஆ) ஆசிரியப்பா]**

**4. வெண்பாக்களின் வகைகள் எத்தனை?**

அ) நான்கு ஆ) ஆறு
இ) ஐந்து ஈ) ஏழு **[விடை: இ) ஐந்து]**

**5. செய்யுளில் இடையிடையே உயர்ந்து வரும் ஓசை ________.**

அ) அகவல் ஆ) துள்ளல்
இ) தூங்கல் ஈ) செப்பல் **[விடை: ஆ) துள்ளல்]**

**6. வெண்பாவில் அமைந்த நூல்கள் ________.**

அ) குறள்; நாலடியார் ஆ) நாலடியார்; மணிமேகலை
இ) குறள்; சிலம்பு ஈ) குறள், வளையாபதி **[விடை: அ) குறள்; நாலடியார்]**

**7. ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும் பா ________.**

அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா
இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா **[விடை: ஆ) வெண்பா]**

**8. "பெருங்கதை", "மணிமேகலை", "சிலப்பதிகாரம்" போன்ற காப்பியத்தில் அமைந்த பா வகை ________.**

அ) அகவற்பா ஆ) வெண்பா
இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா **[விடை: அ) அகவற்பா]**

**9. பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும் பா வகை ________.**

அ) கலிவெண்பா ஆ) வஞ்சிப்பா
இ) நேரிசை ஆசிரியப்பா ஈ) இன்னிசை வெண்பா **[விடை: ஆ) வஞ்சிப்பா]**

**10. சீர்தோறுந் துள்ளாது தாழ்ந்தே வருவது ________.**

அ) தூங்கலோசை ஆ) துள்ளலோசை
இ) செப்பலோசை ஈ) அகவலோசை **[விடை: அ) தூங்கலோசை]**

**11. இருவர் உரையாடுவது போன்ற ஓசை ________.**

அ) செப்பலோசை ஆ) அகவலோசை
இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை **[விடை: அ) செப்பலோசை]**

**12. ஆசிரியப்பாவின் வகைகள் ________.**

அ) மூன்று ஆ) நான்கு
இ) ஐந்து ஈ) ஆறு **[விடை: ஆ) நான்கு]**

இயல் 8

www.tnpscjob.com

13. "ஏகாரத்தில்" முடியும் சிறப்புடைய பா வகை ________.

அ) வெண்பா
ஆ) ஆசிரியப்பா
இ) கலிப்பா
ஈ) வஞ்சிப்பா

[விடை: ஆ) ஆசிரியப்பா]

14. பொருத்துக.

1. இருவர் உரையாடுவது போன்றது - அ) அகவலோசை
2. சொற்பொழிவாற்றுவது போன்றது - ஆ) செப்பலோசை
3. தாழ்ந்து உயர்ந்து வருவது - இ) தூங்கலோசை
4. தாழ்ந்தே வருவது - ஈ) துள்ளளோசை

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ
ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ
ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ

[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]

15. அகவற்பாவுடன் தொடர்பில்லாத ஒன்று ________.

அ) சிலப்பதிகாரம்
ஆ) மணிமேகலை
இ) பெருங்கதை
ஈ) நாலடியார்

[விடை: ஈ) நாலடியார்]

16. பொருத்துக.

1. நேர் - அ) மலர்
2. நிரை - ஆ) காசு
3. நேர்பு - இ) பிறப்பு
4. நிரைபு - ஈ) நாள்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ
ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ
ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ

[விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]

17. பொருத்துக.

1. நேர் நேர் - அ) புளிமா
2. நிரை நேர் - ஆ) தேமா
3. நேர் நிரை - இ) கருவிளம்
4. நிரை நிரை - ஈ) கூவிளம்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ
ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ
ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ

[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]

18. பொருத்துக.

1. நேர் நேர் நேர் - அ) புளிமாங்காய்
2. நிரை நேர் நேர் - ஆ) தேமாங்காய்
3. நேர் நிரை நேர் - இ) கருவிளங்காய்
4. நிரை நிரை நேர் - ஈ) கூவிளங்காய்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ
ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ
ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ

[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]

19. பொருத்துக.

1. நேர் நேர் நிரை - அ) புளிமாங்கனி
2. நிரை நேர் நிரை - ஆ) தேமாங்கனி
3. நேர் நிரை நிரை - இ) கருவிளங்கனி
4. நிரை நிரை நிரை - ஈ) கூவிளங்கனி

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ
ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ
ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ

[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]



www.tnpscjob.com

20. **புலவர் குழந்தை இயற்றிய யாப்பு நூல் ___________.**

அ) யாப்பதிகாரம் ஆ) யாப்பருங்கலம்

இ) யாப்பருங்கலங்காரிகை ஈ) நன்னூல் **[விடை: அ) யாப்பதிகாரம்]**

## குறுவினா

1. **யாப்பின் உறுப்புகள் யாவை?**

எழுத்து, அசை, சீர், அடி, தொடை, தளை ஆகியவை ஆகும்.

2. **பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பா நான்கு வகைப்படும். அவையாவன: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

3. **வெண்பாவின் வகைகள் யாவை?**

வெண்பா ஐந்து வகைப்படும்: அவையாவன:

குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகியவையாகும்.

4. **ஆசிரியப்பாவின் வகைகள் எத்தனை? அவை யாவை?**

ஆசிரியப்பாவின் வகைகள் நான்கு வகைப்படும். அவை:

நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா.

5. **திருக்குறளும் நாலடியாரும் எவ்வகைப் பாவில் அமைந்துள்ளது எனச் சுட்டி, அதன் ஓசைகளையும் குறிப்பிடுக.**

- திருக்குறளும் நாலடியாரும் வெண்பாவில் அமைந்துள்ளது.
- அதன் ஓசை : செப்பலோசை.

6. **சங்க இலக்கியங்கள் எவ்வகைப் பாவில் அமைந்துள்ளது எனச் சுட்டி, அதன் ஓசைகளையும் குறிப்பிடுக.**

- சங்க இலக்கியங்கள் அகவற்பாவில் அமைந்துள்ளது.
- அதன் ஓசை :அகவல் ஓசை

7. **அகவலோசையில் அமைந்த நூல்கள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.**

சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை.

8. **பதின்மூன்று அடிக்கு மேல் வரும் வெண்பா எது?**

கலிவெண்பா.

9. **கலித்தளையும் வெண்டளையும் விரவிவரும் பா எது?**

ஆசிரியப்பா (அகவற்பா).

10. **ஓரசைச் சீர்கள் யாவை?**

நேர் – நாள் ; நிரை – மலர்

நேர்பு – காசு ; நிரைபு – பிறப்பு

11. **ஈரசைச் சீர்கள் யாவை?**

நேர் நேர் – தேமா ; நிரை நேர் – புளிமா

நிரை நிரை – கருவிளம் ; நேர் நிரை – கூவிளம்



www.tnpscjob.com

**12. மூவசைச் சீர்கள் யாவை?**

| காய்ச்சீர் | | | கனிச்சீர் | | |
|---|---|---|---|---|---|
| நேர் நேர் நேர் | - | தேமாங்காய் | நேர் நேர் நிரை | - | தேமாங்கனி |
| நிரை நேர் நேர் | - | புளிமாங்காய் | நிரை நேர் நிரை | - | புளிமாங்கனி |
| நிரை நிரை நேர் | - | கருவிளங்காய் | நிரை நிரை நிரை | - | கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் | - | கூவிளங்காய் | நேர் நிரை நிரை | - | கூவிளங்கனி |

## சிறுவினா

**1. வெண்பாவின் பொது இலக்கணத்தை விளக்குக.**

- வெண்பா செப்பல் ஓசை பெற்று வரும்.
- ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும்.
- இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும்.
- ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.

**2. அகவற்பாவை விளக்கி, சான்று தருக.**

- அகவல் ஓசை ஆசிரியப்பாவுக்கு உரியது.
- இலக்கணக் கட்டுக் கோப்பு குறைவாகவும், கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருப்பது அகவற்பா.

**சான்று:** சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை - ஆகியவையாகும்.

**3. அலகிட்டு வாய்பாடு எழுதுக.**

குறள்: உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | உல / கத் / தோ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2 | டொட் / ட | நேர் நேர் | தேமா |
| 3 | வொழு / கல் | நிரை நேர் | புளிமா |
| 4 | பல / கற் / றும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5 | கல் / லார் | நேர் நேர் | தேமா |
| 6 | அறி / விலா | நிரை நிரை | கருவிளம் |
| 7 | தார் | நேர் | நாள் |

## கற்பவை கற்றபின்

பக்கம்: 196

**1. பாடநூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளையும் அவற்றின் பாவகைகளையும் வகைப்படுத்தி பட்டியல் இடுக.**

1. குறள்வெண்பா : திருக்குறள்
2. வெண்பா : நீதி வெண்பா, திருவிளையாடற்புராணம், தேம்பாவணி,
3. கலிவெண்பா : முல்லைப்பாட்டு, பரிபாடல்
4. ஆசிரியப்பா : அன்னைமொழியே, மலைபடுகடாம், திருமால் திருமொழி, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், மெய்க்கீர்த்தி, சிலப்பதிகாரம், ஞானம், காலக்கணிதம், ஏர் புதிதா?



www.tnpscjob.com

5. இணைக்குறள் ஆசிரியப்பா : காற்றே வா, பூத்தொடுத்தல், சித்தாளு.

6. கலிப்பா : கம்பராமாயணம்

**2. வெண்பாவில் அமைந்த நூல்கள், ஆசிரியப்பாவில் அமைந்த இலக்கியங்கள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.**

வெண்பாவில் அமைந்த நூல்கள் : திருக்குறள், நாலடியார்.

ஆசிரியப்பாவில் அமைந்த இலக்கியங்கள் : சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை.

**கலந்துரையாடல்**

**கலந்துரையாடுபவர்கள்:** இரகு, மது, சாந்தி.

**இரகு** : நண்பா! இரகு செய்யுள் நூல்கள் பல எழுதப்பட்டாலும் நாம் இப்போது வெண்பாவிலும், ஆசிரியப்பாவிலும் எழுதப்பட்ட நூல்கள் பற்றி உரையாடுவோம்.

**மது** : நல்ல செய்தி தான், வெண்பாவில் ஒன்றும் ஆசிரியப்பாவில் ஒன்றும் எடுத்துக்கொள்ளலாமா?

**சாந்தி** : மது அண்ணா! வெண்பாவில் திருக்குறளும், ஆசிரியப்பாவில் சிலப்பதிகாரமும் பற்றி பேசலாமா!.

**இரகு** : பேசலாமே! முதலில் வெண்பாவில் திருக்குறளைப் பற்றி பேசலாம்.

**மது** : உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறள் அறம், பொருள், இன்பம் என மூன்றை தலைமையாகக் கொண்டு 133 அதிகாரத்தையும் 1330 பாக்கள் கொண்டு குறள் வெண்பாவால் பாடப்பட்ட நூல்.

**சாந்தி** : இந்த நூலுக்கு பத்து பேர் உரை எழுதி உள்ளார்களாம்.

**இரகு** : இன்று ஏராளமானவர் எழுதி உள்ளனர். பரிமேலழகர் உரைதான் சிறந்த உரை.

**சாந்தி** : நாம் திருக்குறளைப் படிப்பதோடு இல்லாமல் திருக்குறளோடு குறள் கூறியுள்ளது போல் வாழ்வோம்.

**மது** : சரி, வெண்பாவினால் அமைந்த நூலைப் பார்த்தோம்.

**சாந்தி** : ஆசிரியப்பாவால் அமைந்த நூல், தமிழில் முதன் முதலில் தோன்றிய காப்பியம் எது என்றுசொல்லுங்கள்?

**மது** : சிலப்பதிகாரம் சாந்தி!.

**இரகு** : இந்நூல் கோவலன், கண்ணகி, மாதவி என மூன்று மூன்றாக பாடினாலும் குடிமக்களைப்பற்றி பாடிய நூல்.

**சாந்தி** : 1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
3. ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்
என்னும் மூன்று உண்மைகளைக் கூறுகிறது.

**இரகு** : ஒவ்வொரு நூலையும் பற்றி நாம் பேசிக்கொண்டே போகலாம். நேரம் போய்க் கொண்டே இருக்கிறது. வீட்டில் தேடுவார்கள். புறப்படுவோமா!

**மூவரும்** : நல்லது. புறப்படுவோம்.

**3. யாப்போசை தரும் பாவோசைகள் எவையெனப் புலவர் குழந்தை குறிப்பிடுகிறார்?**

யாப்போசை தரும் பாவோசை

1. செப்பலோசை : இருவர் உரையாடுவது போன்ற ஓசை.
2. அகவலோசை : ஒருவர் பேசுதல் போன்ற - சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை



www.tnpscjob.com

3. துள்ளலோசை : கன்று துள்ளினாற்போலச் சீர்தோறுந் துள்ளிவரும் ஓசை. அதாவது தாழ்ந்து உயர்ந்து வருவது

4. தூங்கலோசை : சீர்தோறுந் துள்ளாது தூங்கிவரும் ஓசை, தாழ்ந்தே வருவது - யாப்பதிகாரம், புலவர் குழந்தை

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 199

### மொழிபெயர்ப்பு:

Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, "He is helped whom God helps". The Second beggar used to cry, "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar's behaviour, the Emperor summoned him to his presence and asked him, "What have you done with the loaf of bread that I had sent you lately?" The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked" Then the Emperor said, "Truly he whom God helps is helped indeed," and turned the beggar out of his palace.

### தமிழாக்கம்:

- முன்பொருநாள் ரோம் நகரில் இரண்டு பிச்சைக்காரர்கள் இருந்தனர். முதல் பிச்சைக்காரன் கடவுள் எப்படியாவது யார் மூலமாவது எனக்கு உதவுவார் என்று கண்ணீர் விட்டான். இரண்டாம் பிச்சைக்காரன் மன்னனைப் புகழ்ந்து பாடினால் மன்னன் காப்பான் என்றான். தினமும் இருவரும் இப்படியே சொல்லிக்கொண்டு இருந்தார்கள்.
- ரோம் அரசர் தன்னைப் பற்றிப் பேசிப் புகழ்ந்து எப்படியாவது தான் பாதுகாப்பேன் என்று நம்புகிற பிச்சைக்காரனுக்கு உதவ விரும்பினார்.
- நீளமான ரொட்டிப் பொட்டலத்தில், ரொட்டித் துண்டுகள் நடுவே சில பொற்காசுகளை வைத்துக் கொடுத்தான்.
- இரண்டாம் பிச்சைக்காரன் ரொட்டித் துண்டு பொட்டலம் கனமாக இருக்கிறது; விற்றால் பணம் சம்பாதிக்கலாம் என்று முதல் பிச்சைக்காரனான நண்பனிடம் விற்றுவிடுகிறான்.
- இப்படியே ரொட்டித் துண்டை தினமும் விற்கிறான். அதனை வாங்கும் முதலாம் பிச்சைக்காரன் ரொட்டித்துண்டை வெட்டிப்பார்த்தால் தினமும் பொற்காசுகள் மின்னின.
- தினமும் கடவுளுக்கு நன்றி சொல்லி பொற்காசுகளை எடுத்து வைத்து சேர்த்து வைத்தான். பிச்சை எடுப்பதை நிறுத்தி விடுகிறான்.
- இரண்டாம் பிச்சைக்காரன் தொடர்ந்து வீதிகளில் பிச்சை எடுத்துக்கொண்டே இருக்கிறான். மன்னன் அவனை அழைத்து நான் கொடுத்த ரொட்டிப் பொட்டலங்களை என்ன செய்தாய் என்று கேட்டார்.
- அது எடுத்துச்செல்ல கனமாக இருந்தபடியால் என் பிச்சைக்கார நண்பனிடம் அதனை விற்றுவிட்டேன் என்றான்.
- மன்னர் தனக்குள் நினைத்துக்கொண்டார். "கடவுள் தன்னைத் தேடுபவர்களுக்கு உண்மையிலே யார் மூலமாவது உதவுகிறார்'' இரண்டாம் பிச்சைக்காரனிடம் திரும்பி, 'சரி நீ போகலாம்' என்று அரண்மனையில் இருந்து வெளியேறச் சொன்னார்.



www.tnpscjob.com

**மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.**

**மனக்கோட்டை:**

படிக்காமலே தேர்வில் வெற்றி பெற்றுவிடலாம் என்று சில மாணவர்கள் **மனக்கோட்டை** கட்டுகிறார்கள்.

**கண்ணும் கருத்தும்:**

**கண்ணும் கருத்தாய்** கவனமுடன் படித்தால் முதல் மதிப்பெண் பெறலாம்.

**அள்ளி இறைத்தல்:**

பணத்தைக் கணக்குப் பார்க்காமல் **அள்ளி இறைத்தால்** விரைவில் வறுமைநிலை அடைவாய்.

**ஆறப்போடுதல்:**

பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தாது **ஆறப்போடுதல்** அநேக தீயவிளைவுகளைத் தடுக்கும்.

**பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.**

**பேச்சுவழக்கு:**

“தம்பீ? எங்க நிக்கிறே?”

“நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது.”

“அங்ஙனக்குள்ளயே டீ சாப்டுட்டு, பேப்பரப் படிச்சிட்டு இரு.. நா வெரசா வந்துருவேன்”

“அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு!”

“அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனேக் கூட்டிக்கிட்டு வர்றேன்.”

“ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே! அப்ப அவனுக்கு மூணு வயசு இருக்கும்!”

“இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி, போனை வையி. நாங் கௌம்பிடேன்...”

“சரிங்கண்ணே”

**எழுத்து வழக்கு:**

“தம்பி எங்கே நிற்கிறாய்?”

“நீங்கள் சொன்ன இடத்தில்தான் அண்ணா! எதிர்ப்புறத்தில் ஒரு தேநீர் கடை இருக்கிறது.”

“அங்கேயே தேநீர் சாப்பிட்டுவிட்டு, செய்தித்தாள் படித்துக்கொண்டிரு. நான் விரைவாக வந்து விடுகிறேன்.”

“அண்ணா! சண்முகத்தையும் கூட்டிக்கொண்டு வாருங்கள் அண்ணா! அவனைப் பார்த்து அதிக நாட்களாகிவிட்டன.”

“அவன் பாட்டியுடன் வெளியூர் சென்றிருக்கிறான். உங்கள் ஊருக்கே அவனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்.”

“நிறைய நாளுக்கு முன்னால் சின்ன வயதில் பார்த்தது அண்ணா. அப்போது அவனுக்கு மூன்று வயது இருக்கும்”

“இப்போது உயரமாக வளர்ந்துவிட்டான். உனக்கு அடையாளமே தெரியாது. ஊருக்கு என்னுடன் வருவான். பார்த்துக்கொள். சரி. தொலைபேசியை வைத்துவிடு. நான் புறப்படுகிறேன்.”

“சரி அண்ணா!”

**கடிதம் எழுதுக.**

**உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்து உள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.**



www.tnpscjob.com

அனுப்புநர்

எஸ். சங்கரன்,
23, வள்ளலார் சாலை,
பாரதிதாசன் நகர்,
திருச்சி.

பெறுநர்

உயர்திரு. மின்வாரிய செயற்பொறியாளர் அவர்கள்,
செயற்பொறியாளர் அலுவலகம்,
திருச்சி.

பொருள்: தெருவிளக்குகள் பழுது நீக்குதல் - தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம். நான் பாரதிதாசன் நகர் வள்ளலார் சாலையைச் சார்ந்தவன். கடந்த வாரம் வீசிய தானே புயலால் எங்கள் தெருவில் உள்ள மினவிளக்கு கம்பங்கள் அனைத்தும் சாய்ந்துவிட்டன. இதனால் இரவில் வெளியே செல்வோர்க்கு மிகவும் துன்பமாக இருக்கிறது. தெருவிளக்கு இல்லாததைப் பயன்படுத்தி சமூக விரோதிகளின் செயல்களும் அதிகமாகி விட்டது. அதனால் தயவுசெய்து நேரில் பார்வையிட்டு பழுதடைந்த மின்விளக்குக் கம்பங்களைச் சரிசெய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

இப்படிக்கு,
தெருமக்கள் சார்பாக,
எஸ். சங்கரன்.

21.03.2020
பாரதிதாசன் நகர்.

உறைமேல் முகவரி:

| |
|---|
| பெறுநர்<br>உயர்திரு. மின்வாரிய செயற்பொறியாளர் அவர்கள்,<br>செயற்பொறியாளர் அலுவலகம்,<br>திருச்சி. |

**நயம் பாராட்டுக.**

**கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த**
**குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே**
**ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே**
**உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே**
**மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே**
**மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே**
**ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்**
**ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.** - *வள்ளலார்*

**திரண்ட கருத்து:**

கோடையில் இளைப்பாறும் வகையில் கிடைத்த குளிர்ச்சி பொருந்திய தரு ஆனவன். மரம் (தரு) தரும் நிழலாகவும், நிழலின் குளிர்ச்சியாகவும், நிழல்தரும் கனியாகவும் இருப்பவன். ஓடையிலே



www.tnpscjob.com

ஊறுகின்ற இன்சுவை நீராகவும், நீரின் இடையில் மலர்ந்து சுகந்தம் தரும் வாசமலராகவும் திகழ்பவன். மேடையிலே வீசுகின்ற மென்பூங்காற்றாகவும், மென்காற்று தரும் சுகமாகவும் சுகத்தின் பயனாகவும் இருக்கும் இறைவா. இவ்வுலக வாழ்வில் ஆடிக்கொண்டிருக்கும் என்னையும் ஏற்றுக்கொண்ட (மனந்த) தலைவனே (மணவாளனே) பொதுவிலே ஆடுகின்ற, ஆட்டுவிக்கின்ற எம் அரசே நான் தரும் பாமாலையை (அலங்கல்) அணிந்து எனக்கு அருள் செய்வாயாக.

**மோனை நயம்:**

**குயவனுக்கு பானை**

**செய்யுளுக்கு மோனை**

செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும்.

மேடையிலே

மென்காற்று...

ஆடையிலே...

ஆடுகின்ற... என்று மோனை நயமும் மிகுந்து வருகின்றது.

**எதுகை நயம்:**

**மதுரைக்கு வைகை**

**செய்யுளுக்கு எதுகை**

முதல் எழுத்து அளவொத்திருக்க அடியிலோ சீரிலோ இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகையாகும். இப்பாடலில்,

கோடையிலே

ஓடையிலே

மேடையிலே

ஆடையிலே என்று எதுகை நயம் அமைந்துள்ளது.

**இயைபு நயம்:**

செய்யுளில் அடிதோறும் இறுதி எழுத்தோ சொல்லோ இயைந்து வரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

தண்ணீரே

மலரே என இயைபு நயமும் உள்ளது.

**அணி நயம்:**

அணி என்றால் அழகு. இப்பாடலின் அழகுக்கு அழகு செய்யும் வகையில்,

**"குளிர் தருவே...**

**நிழல் கனிந்த கனியே..."**

இறைவனை உருவகப்படுத்தும் "உருவக அணியும்" இறைவனை மேன்மைப்படுத்தி உயர்த்திப் புகழ்ந்து பாடியிருப்பதால் "உயர்வு நவிற்சி அணியும்" அமைந்து பாடலுக்கு நயம் கூட்டியுள்ளது.

**சந்த நயம்:**

இப்பாடல் இனிய ஓசையுடன், இசையுடன் பாடும் வகையில், ஒழுகிய ஓசையாய் 'எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்' பெற்று அகவலோசையுடன் சந்த நயமும் மிக்குள்ளது.

- இப்பாடல் அனைத்து இலக்கிய நயங்களுமுடையதாய்ப் படிப்போர் மனதில் இறைபக்தியையும், இலக்கிய ஆர்வத்தையும் ஊட்டும் வகையில் அமைந்துள்ளது.



www.tnpscjob.com

## மொழியோடு விளையாடு

பக்கம்: 200

**கண்டுபிடித்து எழுதுக.**

**ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து** ஆகிய எண்ணுப் பெயர்கள் இடம்பெறும் திருக்குறளைக் கண்டுபிடித்து எழுதுக.

**எண்ணுப்பெயர்கள் இடம்பெறும் திருக்குறள் பாக்கள்:**

**ஒன்று** : கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

**இரண்டு** : தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்காது எனின்.

**மூன்று** : காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

**நான்கு** : அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்காறு இயன்றது அறம்.

**ஐந்து** : பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

**ஆறு** : படைகுடி கூழ்அமைச்சு நட்பரன் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

**ஏழு** : எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

**எட்டு** : கோயில் பொறியில் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை.

**ஒன்பது** : ஒன்பது என்ற எண்ணை திருவள்ளுவர் தம் நூலில் எங்கும் பயன்படுத்தவில்லை

**பத்து** : நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும்.

**சொற்களைப் பிரித்துப் பொருள் தருக.**

| | | | |
|---|---|---|---|
| 1. **கானடை :** | கான் அடை | - | காட்டைச் சேர் |
| | கான் நடை | - | காட்டுக்கு நடத்தல் |
| | கால் நடை | - | காலால் நடத்தல் |
| 2. **வருந்தாமரை:** | வரும் தாமரை | - | தாமரை மலர் |
| | வரும் தா மரை | - | தாவும் மான் வருகிறது. |
| | வருந்தா மரை | - | துன்புறாத மான் |
| 3. **பிண்ணாக்கு :** | பிண்ணாக்கு | - | எள், கடலை ஆட்டும்போது கிடைப்பது. |
| | பிள் நாக்கு | - | பிளவுபட்ட நாக்கு |
| 4. **பலகையொலி :** | பலகை ஒலி | - | பலகையால் ஏற்படும் ஒலி |
| | பல கை ஒலி | - | பல கைகள் தட்டும் ஒலி. |

இயல் 8

www.tnpscjob.com

**அகராதியில் காண்க.**

**ஆசுகவி** – கொடுத்தப் பொருளை உடனே பாடும் பாட்டு.
அப்பாடலைப் பாடும் புலவன்.

**மதுரகவி** – இனிமை பெருகப் பாடும் கவி.
சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிய பாட்டு.

**சித்திரகவி** – சித்திரத்தில் அமைத்ததற்கு ஏற்ப பாடும் இறைக்கவி, 21 நயங்களில் கவிதை இயற்றுபவர்

**வித்தாரகவி** – விரித்துப் பாடப் பெறும் பாட்டு.
விரிவாகப் பாடும் நூல்.

**கலைச்சொல் அறிவோம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Belief | - | நம்பிக்கை | Renaissance | - | மறுமலர்ச்சி |
| Philosopher | - | மெய்யியலாளர் | Revivalism | - | மீட்டுருவாக்கம் |

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



"மனம் நொந்து மறுகி
கேட்கவும் நா எழாது
வாழவும் வகை யறியாது
இரத்தலே வழி என்பதை
இறுதி முடிவு ஆக்கி
"ஈயென" இரத்தல் கொடிது
இரக்கத்துடன் ஈவாரைத்
தடுத்தல் அதனினும் கொடிதன்றோ"

## நிற்க அதற்குத் தக

நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை, நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன் பயில்பவருடனோ, உடன்பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது..... இந்தச் சமயத்தில் சினம்கொள்ளத் தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம்; இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படுகளும் நன்மைகளும்...

| நாம் செய்ய வேண்டுவன (அறங்கள்) | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| ♦ நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல்.<br>♦ ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல்.<br>♦ பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல்.<br>♦ **பொய்தவிர்த்து உண்மை பேசுதல்.** | ♦ நல்ல நண்பர்களைப் பெறலாம். எதிரிகளையும் நண்பராக்கலாம்.<br>♦ **தேவையற்ற சண்டையைப் பகையை தவிர்த்து, அனைவருடனும் அன்பாய் வாழலாம்.**<br>♦ **மன அமைதி பெறலாம். நண்பரிடத்தும், உறவினரிடத்தும் நற்பெயர் பெறலாம்.**<br>♦ **உண்மை நம் வாழ்வை உயர்த்தும் அச்சமின்றி வாழலாம்.** |



www.tnpscjob.com

இயல் 9 மனிதம்

உரைநடை உலகம்

# ஜெயகாந்தம்

- நினைவு இதழ்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ________.**

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்

ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம்

ஈ) வெளிநாட்டு முதலீடுகள் **[விடை: ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்]**

**2. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது?**

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்.

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்.

**[விடை: ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.]**

### குறுவினா

**1. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.**

- நான் எழுதுவதற்குத் தூண்டுதல் ஒன்றுண்டு.
- நான் எழுதுவதற்குத் தூண்டுதலுக்குரிய காரணமும் ஒன்றுண்டு.

### சிறுவினா

**1. ஜெயகாந்தன் தம் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். - இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் "தர்க்கத்திற்கு அப்பால்" கதை மாந்தர் வாயிலாக விளக்குக.**

**"தர்க்கத்திற்கு அப்பால்" கதை மாந்தர்:**

கண்ணில்லாத பிச்சைக்காரன், தர்மம் செய்தவன்

**மாந்தர்களின் சிறப்புக் கூறி மெய்ப்பிக்கும் செயல்:**

இரயில் நிலையத்திற்கு வெளியே இருந்த கண்ணில்லாத பிச்சைக்காரனுக்கு இரண்டணாவை அவர் போட்டார். அதைப் பெற்றுக்கொண்டவர் கைகள் குவித்து, 'சாமி, நீங்கபோற வழிக்கெல்லாம் புண்ணியம் உண்டு, என்று வாழ்த்தினான். அந்தப் பிச்சைக்காரனுக்குத் தர்மம் செய்யாமல்



www.tnpscjob.com

இருந்திருந்தாலோ அல்லது தர்மம் செய்த ஓரணாவை எடுத்துச் சென்றிருந்தாலோ? விபத்துக்குள்ளான இரயிலில்தான் சென்றிருப்பான். தர்மம் தலைகாக்கும் என்பதைத் தர்மம் செய்தவன் உணர்ந்தான்.

தர்மம் தந்தவனும் அதைப்பெற்றவனும் மனதார வாழ்த்தும் நன் மாந்தர்களின் சிறப்புக் கூறுகளாகும்.

## நெடுவினா

1. **ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.**

**சுவரொட்டி**

**கங்கா வார இதழ்**



*வெளியிடும்*

**ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழ் - 2020**

வெளியீட்டு நாள்
29.03.2020

**உள்ளே.....**
- ★ வாழ்க்கை வரலாறு
- ★ படைப்பின் அனுபவம்
- ★ காந்தம் ஜெயகாந்தன்: கட்டுரை
- ★ புகழ் கவிதைகள்
- ★ திரைபேசும் காந்தம் - துணுக்குகள்
- ★ சாகித்திய அகாதெமி விருது அனுபவம்

**100 பக்கங்கள்**

"முதலில் எழுதுகிறவன் என்ற முறையில், எதை எழுதுவது என்று தீர்மானிப்பவன் நானே"
- ஜெயகாந்தன்

**விலை ₹ 30**

முன்பதிவுக்கு: ____________________

**ஸ்ரீ கங்கா பதிப்பகம், திருநெல்வேலி-1.**

**தொலைபேசி: 0462-2338899**

## கற்பவை கற்றபின்

1. **வகுப்பு மாணவர்களின் படைப்புகளைத் திரட்டிக் குழுவாக இணைந்து கையெழுத்து இதழ் ஒன்றை உருவாக்குக.**

(மாணவர் செயல்பாடு)

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர் ___________.**

அ) ஜெயகாந்தன் ஆ) ஜெயமோகன்
இ) புதுமைப்பித்தன் ஈ) சுஜாதா [விடை: அ) ஜெயகாந்தன்]

2. **சாகித்திய அகாதெமி விருதுபெற்ற ஜெயகாந்தனின் புதினம் ___________.**

அ) கங்கை எங்கே போகிறாள்
ஆ) யாருக்காக அழுதாள்

இ) சில நேரங்களில் சில மனிதர்கள்
ஈ) இமயத்துக்கு அப்பால் [விடை: இ) சில நேரங்களில் சில மனிதர்கள்]

3. **தர்மார்த்தங்களை உபதேசிக்கவே ________ பாரதத்தை எழுதியவர்.**
அ) வியாசர் ஆ) கம்பர்
இ) வில்லிபுத்தூரார் ஈ) பாரதியார் [விடை: அ) வியாசர்]

4. **“நாற்பொருட் பயத்தலொடு” - இதில் ‘நாற்பொருட்’ என்பது ________.**
அ) அறம், மானம், கல்வி, புகழ் ஆ) அறம், பொருள், இன்பம், வீடு
இ) அறம், மறம், மானம், புகழ் ஈ) புகழ், கல்வி, வீரம், பெருமை
[விடை: ஆ) அறம், பொருள், இன்பம், வீடு]

5. **கலைப்பணி என்றாலே அதனுள் அடங்குவது ________.**
அ) மானுடம் ஆ) சமூகப்பார்வை
இ) நன்னெறி ஈ) நாட்டுப்பற்று [விடை: ஆ) சமூகப்பார்வை]

6. **ஜெயகாந்தன் வாழ்ந்த காலம் ________.**
அ) 1934-2015 ஆ) 1936-2016
இ) 1939-2017 ஈ) 1940-2018 [விடை: அ) 1934-2015]

7. **பிரெஞ்சு மொழியில் வந்த “காந்தி வாழ்க்கை வரலாற்றின்” தமிழாக்க நூல் எது?**
அ) உண்மை சுடும் ஆ) ஒரு கதாசிரியரின் கதை
இ) வாழ்விக்க வந்த காந்தி ஈ) தேவன் வருவார் [விடை: இ) வாழ்விக்க வந்த காந்தி]

8. **முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு ________.**
அ) ஒரு கதாசிரியனின் கதை ஆ) பிரளயம்
இ) இனிப்பும் கரிப்பும் ஈ) யுகசந்தி [விடை: அ) ஒரு கதாசிரியனின் கதை]

9. **“தர்க்கத்திற்கு அப்பால்” சிறுகதை அமைந்த தொகுப்பு ________.**
அ) ரிஷிமூலம் ஆ) யுகசந்தி
இ) குருபீடம் ஈ) ஒரு பிடி சோறு [விடை: ஆ) யுகசந்தி]

10. **தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரை எழுதும் பழக்கம் உடையவர் ________.**
அ) மேத்தா ஆ) சுஜாதா
இ) ஜெயமோகன் ஈ) ஜெயகாந்தன் [விடை: ஈ) ஜெயகாந்தன்]

11. **ஜெயகாந்தன் யாரைப் பற்றி கவிதை எழுதியுள்ளார்?**
அ) கண்ணதாசன் ஆ) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
இ) புலமைப்பித்தன் ஈ) வாலி [விடை: ஆ) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்]

12. **சோவியத் நாட்டின் விருது பெற்ற ஜெயகாந்தனின் நூல் ________.**
அ) உன்னைப்போல் ஒருவன் ஆ) இமயத்துக்கு அப்பால்
இ) புதிய வார்ப்புகள் ஈ) ஒரு மனிதன் ஒருவீடு ஒரு உலகம்
[விடை: ஆ) இமயத்துக்கு அப்பால்]

13. **கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ________.**
அ) அகிலன் ஆ) ஜெயகாந்தன்
இ) புதுமைப்பித்தன் ஈ) கல்கி [விடை: ஆ) ஜெயகாந்தன்]



www.tnpscjob.com

14. சமகாலக் கருத்துகளையும் நிகழ்வுகளையும் சமகால மொழியில் சமகால உணர்வில் தந்தவர்

அ) அகிலன் ஆ) ஜெயகாந்தன்
இ) புதுமைப்பித்தன் ஈ) கல்கி **[விடை: ஆ) ஜெயகாந்தன]**

15. உன்னைப்போல் ஒருவன் - திரைப்படத்திற்காக ஜெயகாந்தன் பெற்ற விருது __________.

அ) குடியரசுத்தலைவர் விருது ஆ) சாகித்ய அகாதெமி விருது
இ) ஞானபீட விருது ஈ) தாமரைத் திரு விருது **[விடை: அ) குடியரசுத்தலைவர் விருது]**

16. மாறுபட்ட குழுவினைத் தேர்வு செய்க.

அ) குருபீடம், யுகசந்தி
ஆ) ஒருபிடி சோறு, உண்மை சுடும்
இ) இனிப்பும் கரிப்பும், தேவன் வருவாரா
ஈ) பிரளயம், கைவிலங்கு **[விடை: ஈ) பிரளயம், கைவிலங்கு]**

17. கீழ்க்கண்டவற்றுள் ஜெயகாந்தன் சிறுகதைத் தொகுப்பினைக் கண்டறிக.

அ) குருபீடம் ஆ) பிரளயம்
இ) பாரீசுக்குப்போ ஈ) ஒரு கதாசிரியரின் கதை **[விடை: அ) குருபீடம்]**

18. கீழ்க்கண்டவற்றுள் ஜெயகாந்தனின் குறும்புதினத்தைக் கண்டறிக.

அ) குருபீடம் ஆ) பிரளயம்
இ) பாரீசுக்குப் போ ஈ) ஒரு கதாசிரியரின் கதை **[விடை: ஆ) பிரளயம்]**

19. கீழ்க்கண்டவற்றுள் ஜெயகாந்தன் மொழிபெயர்ப்பு நூலினைக் கண்டறிக.

அ) குருபீடம் ஆ) பிரளயம்
இ) பாரீசுக்குப்போ ஈ) ஒரு கதாசிரியரின் கதை **[விடை: ஈ) ஒரு கதாசிரியரின் கதை]**

20. பொருத்துக.

1. தேவன் வருவாரா - அ) குறும்புதினம்
2. சினிமாவுக்குப் போன சித்ததாளு - ஆ) சிறுகதைத் தொகுப்பு
3. சுந்தர காண்டம் - இ) மொழிபெயர்ப்பு
4. வாழ்விக்க வந்த காந்தி - ஈ) புதினம்

அ) 1.இ 2.அ 3.ஈ 4.ஆ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: இ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

21. ஜெயகாந்தனின் திரைப்படம் ஆகாத படைப்பு ஒன்று __________.

அ) உன்னைப் போல் ஒருவன்
ஆ) ஒரு நடிகை நாடகம் பார்க்கின்றாள்
இ) ஒருபிடி சோறு
ஈ) ஊருக்கு நூறு பேர் **[விடை: இ) ஒருபிடி சோறு]**

22. சிறுகதை மன்னன் என்று சிறப்பிக்கக்கூடியவர் __________.

அ) அகிலன் ஆ) ஜெயகாந்தன்
இ) புதுமைப்பித்தன் ஈ) கல்கி **[விடை: ஆ) ஜெயகாந்தன்]**

23. படிக்காத மேதை என்று கா.செல்லப்பன் குறிப்பிடும் எழுத்தாளர் __________.

அ) அகிலன் ஆ) ஜெயகாந்தன்
இ) புதுமைப்பித்தன் ஈ) கல்கி **[விடை: ஆ) ஜெயகாந்தன்]**



www.tnpscjob.com

24. **திரைப்படமான ஜெயகாந்தனின் குறும்புதினம் எது?**

அ) உன்னைப் போல் ஒருவன் ஆ) யாருக்காக அழுதான்

இ) சிலநேரங்களில் சில மனிதர்கள் ஈ) ஊருக்கு நூறு பேர் **[விடை: ஆ) யாருக்காக அழுதான்]**

25. **ஜெயகாந்தனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற புதினம் __________.**

அ) உன்னைப் போல் ஒருவன் ஆ) யாருக்காக அழுதான்

இ) சிலநேரங்களில் சில மனிதர்கள் ஈ) ஊருக்கு நூறு பேர்

**[விடை: இ) சிலநேரங்களில் சில மனிதர்கள்]**

26. **ஜெயகாந்தன் சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஆண்டு __________.**

அ) 1972 ஆ) 1971

இ) 1975 ஈ) 1978 **[விடை: அ) 1972]**

## குறுவினா

1. **ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?**
   - குடியரசுத் தலைவர் விருது
   - சாகித்திய அகாதெமி விருது
   - சோவியத் நாட்டு விருது
   - ஞானபீட விருது
   - தாமரைத்திரு விருது - ஆகியவையாகும்.

2. **ஜெயகாந்தன் என்ற தமிழனின் சிறந்த அடையாளங்கள் என்று கா. செல்லப்பன் குறிப்பிடுவது யாது?**

   நேர்கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிமுறைகள், திமிர்ந்த ஞானச் செருக்கு, கம்பீரமான குரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்திரங்கள் இவையே ஜெயகாந்தனின் சிறந்த அடையாளங்கள்.

3. **ஜெயகாந்தன் இயற்றிய குறும்புதினங்களுள் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.**
   - கைவிலங்கு
   - ரிஷி மூலம்
   - கருணையினால் அல்ல
   - சினிமாவுக்குப் போன சித்தாளு

4. **ஜெயகாந்தனின் இன்னொரு முகம் கவிஞன் - என்பதற்குச் சான்று தருக.**

   பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பற்றி கவிதை எழுதியதே, ஜெயகாந்தன் ஒரு கவிஞர் என்பதற்குச் சான்றாகும்.

   **“எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை**
   **கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்**
   **பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் - பழைய**
   **மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்.”**

5. **ஜெயகாந்தனின் சாதனையாக தீபம் இதழ் வாசகர்கள் கூறியது யாது?**

   சிறுகதைகளில் பலதிறப்பட்ட சூழ்நிலைகளையும் புதிய கருத்துகளையும் வெற்றிகரமாக சித்தரிப்பது ஜெயகாந்தனின் அரிய சாதனை என்று பாராட்டுகின்றனர்.

6. **திரைப்படமான ஜெயகாந்தனின் படைப்புகள் யாவை?**
   - சில நேரங்களில் சில மனிதர்கள்.
   - ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்.
   - உன்னைப்போல் ஒருவன், ஊருக்கு நூறு பேர்.
   - யாருக்காக அழுதான் - ஆகியவையாகும்.

7. **‘பாயிரந் தோன்றி மும்மை யினொன்றாய்’ - இவ்வடிகளில் உள்ள ‘மும்மை’ எவை?**

   1. இறப்பு 2. நிகழ்வு 3. எதிர்வு

இயல் 9

www.tnpscjob.com

**8. ஜெயகாந்தனின் சிறுகதைத் தொகுப்பு நூல்கள் சிலவற்றை எழுதுக.**

- குருபீடம்
- யுகசந்தி
- ஒருபிடி சோறு
- உண்மை சுடும்
- இனிப்பும் கரிப்பும்
- தேவன் வருவாரா
- புதிய வார்ப்புகள்

**9. ஜெயகாந்தனின் மொழிபெயர்ப்பு நூல்கள் யாவை?**

வாழ்விக்க வந்த காந்தி, ஒரு கதாசிரியனின் கதை.

**10. 'பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் - ஏழை மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்' - என்ற பாடலடியைப் பாடியவர் யார்? எவரைப் பற்றிய பாடல் இது?**

- ஜெயகாந்தன்
- பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பற்றியது இப்பாடல்.

**11. 'எண்ணும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்' என்ற பாடலடியைப் பாடியவர் யார்? எவரைப் பற்றிய பாடல் இது?**

- ஜெயகாந்தன்.
- பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பற்றியது இப்பாடல் பாடினார்.

**12. ஜெயகாந்தன் பார்வையில் சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை எது? மிகப்பெரிய சவால் எது?**

- மகத்தான சாதனை: பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்,
- அதுவே மிகப்பெரிய சவால் என்கிறார் ஜெயகாந்தன்.

**13. இந்த வயதில், தேசம் செல்லும் பாதை, எழுத்துலகத்தின் போக்கு இவற்றை எல்லாம் பார்க்கும்போது எப்படி இருக்கிறது? என்ற வாசகரின் கேள்விக்கு ஜெயகாந்தன் அளித்த பதில் யாது?**

காலந்தோறும் மாற்றங்களை நாம் பார்க்கிறோம், நாமும் மாறிக்கொண்டே இருக்கிறோம்.

இயல் 9

## சிறுவினா

**1. ஜெயகாந்தனின் புகழ்பெற்ற புதினங்கள் யாவை?**

- பாரீசுக்குப் போ!
- உன்னைப்போல் ஒருவன்
- கங்கை எங்கே போகிறாள்
- இன்னும் ஒரு பெண்ணின் கதை
- சுந்தரகாண்டம்
- ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
- ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்

**2. "எதற்காக எழுதுகிறேன்" என்று ஜெயகாந்தன் விளக்கமளிக்கிறார்?**

- நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு.
- முழுக்க முழுக்க வாழ்க்கையில் இருந்து நான் பெறும் கல்வியின், முயற்சியின் பயனை வெளிப்படுத்த எழுதுகிறேன்.
- சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவும் எழுதுகிறேன்.
- கலாதேவியின் (கலை) காதல் கணவனாக இருப்பதாலும், சமுதாயத் தாயின் அன்புப் புதல்வனாக இருப்பதாலும் எழுதுகிறேன். - என்று ஜெயகாந்தன் விளக்கம் அளிக்கிறார்.

www.tnpscjob.com

**3. நூலின் இயல்பாகத் தமிழ் இலக்கணம் கூறுவது யாது?**

**"நூலினியல்பே நுவலின் ஓரிரு**
**பாயிரந் தோற்றி மும்மை யினொன்றாய்**
**நாற்பொருட் பயத்தலொடு எழுமதந் தழுவி"**

என்று நூலின் இயல்பாகத் தமிழ் இலக்கணம் கூறுகிறது.

**4. நாற்பொருள் பயத்தல் - என்பது எவற்றைக் குறிப்பிடுகிறது?**

- நூல் என்பது நாற்பொருள் தருவதாய், பயனுடையதாய் இருத்தல் வேண்டும்.
- அறம், பொருள், இன்பம், வீடு என்பதே நாற்பொருள் ஆகும்.

**5. முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன் குறித்து எழுதுக.**

- எழுத்தாளர், ஒருவருடைய படைப்பு நோக்கத்தையும் படைப்பு பாங்கையும் வாழ்க்கைச் சிக்கல்கள் குறித்த கண்ணோட்டத்தையும் உணர்த்துவதுதான் முன்னுரை.
- தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரைகள் எழுதிக்கொள்ளும் ஜெயகாந்தன், பின்னர் வரவிருக்கும் கேள்விகளுக்குத் தரும் பதில்களாக அவற்றை ஆக்கிவிடுவார்.
- "ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம். ஓர் எழுத்தாளன் ஆத்ம சக்தியோடு எழுதுகிறானே அது கேவலம் பிழைப்போ அல்லது ஒரு தொழிலோ அல்ல. அது ஒரு தவம். நீங்கள் கதை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே அது காலத்தின், ஒரு வாழ்க்கையின் சாசனம்" (1966) என்று பாரீசுக்குப் போ என்னும் புதினத்தின் முன்னுரையில் ஜெயகாந்தன் குறிப்பிட்டுள்ளார்.

**6. சிறுகதைகளைப் படைப்பதில் தங்களுடைய தனித்தன்மை வாய்ந்த திறமையை வாசகர்கள் கொண்டாடுகிறார்களே, இத்துறையில் தாங்கள் கடைப்பிடிக்கும் நுணுக்கங்கள் யாவை என்ற வாசகரின் கேள்விக்கு ஜெயகாந்தன் அளித்த பதில் யாது?**

நுணுக்கமா? அப்படித் தனியாக நான் எதையும் கையாளுவதாக எண்ணிச் செய்வதில்லை. என் மனத்தால், புத்தியால், உணர்வாய் நான் அறிந்து அனுபவப்படாத எதைப்பற்றியும் நான் எழுதினதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சனைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாகி அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சனைகளே.

## நெடுவினா

**1. "எதற்காக எழுதுகிறேன்" என்று ஜெயகாந்தன் எழுதுவதற்கான காரணத்தை எவ்வாறு விளக்கமளிக்கிறார்?**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| தனிமுயற்சியின் பயன் |
| நாற்பயன் |
| கணவன்-புதல்வன் |
| சமுதாயப் பார்வை |
| முடிவுரை |

**முன்னுரை:**

தன்னையறிதல் என்பதிலும் தன்னை உணர்த்துதல் என்பதிலும் முனைப்பாக இருந்தவர் ஜெயகாந்தன் மட்டுமே! அவர் எழுத்துலகில் எழுதுவதற்கான காரணங்களைக் காண்போம்.

**தனிமுயற்சியின் பயன்:**

நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு, என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு. நான் எழுதுவது, முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும் எனது தனி முயற்சியின் பயனுமாகும்.

**நாற்பயன்:**

வியாசன் முதல் பாரதி வரை தாங்கள் எதற்காக எழுதுகிறோம்? என்பதையும் கலையைத் தாங்கிப்பிடிக்கச் சொல்லவும் இல்லை. ஆனால் இவர்களைவிட கலையைத் தாங்கியவர்கள் யாரும் இல்லை. அறநெறியை உபதேசிக்க பாரதத்தை வியாசர் எழுதினார். தமிழ் இலக்கணம் நாற்பயனையே நூலின் பயனாகச் சுட்டுகிறது.

**கணவன்-புதல்வன்:**

கலைத்தன்மைக்கு எவ்விதக் குறைவும் வாராமல், கலாதேவியின் காதற் கணவனாகவும் சமுதாயத் தாயின் அன்புப் புதல்வனாகவும் இருந்துதான், நான் எழுதுகிறேன்.

**சமுதாயப் பார்வை:**

அர்த்தமே வடிவத்தை வளமாக்கும். வெறும் வடிவம் மரப்பொம்மைதான். அதனால் அதைப்பிடித்து துன்பப்படுத்தாமல், சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன். கலைப்பணியில் சமூகப்பார்வை அடக்கம்.

**முடிவுரை:**

'எதற்காக எழுதுகிறேன்?' என்று நான் சொன்ன காரணங்களுக்கு எதிராக நடந்தால் நான் கண்டிக்கப்படவும், திருத்தப்படவும் உட்பட்டு இருக்கிறேன் என்கிறார் ஜெயகாந்தன்.



www.tnpscjob.com

இயல் 9 மனிதம்

கவிதைப் பேழை

# சித்தாளு

– நாகூர் ரூமி

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'இவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான் எப்போதும்' - இவ்வடிகளில் கற்காலம் என்பது ________.**

அ) தலைவிதி ஆ) பழையகாலம்

இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

**[விடை: ஈ) தலையில் கல் சுமப்பது]**

### குறுவினா

1. **'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?**

"வாழ்வில் தலைக்கனம் (அகந்தை) பிடித்தவர் இடையில் ஏழ்மை காரணமாகித் தலையில் கல் சுமந்து தலைக்கனமாகவே வாழ்கிறாள் சித்தாள்.

### சிறுவினா

1. **சித்தாளின் மனச்சுமைகள்**
**செங்கற்கள் அறியாது - இடஞ்சுட்டிப் பொருள் கூறுக.**

**இடம் சுட்டல்:** "சித்தாளு'' என்னும் தலைப்பில் நாகூர் ரூமி எழுதியுள்ள கவிதையில் இவ்வடி இடம்பெற்றுள்ளது.

**பொருள் :** சித்தாளின் துன்பங்களைச் செங்கற்கள் அறிவது இல்லை.

**விளக்கம்:** அடுத்த வேளை உணவுக்காக சுமைகளை இறக்காமல் சுமக்கும் இவர்களின் மரணம்கூட சிறிதளவே சலனத்தை ஏற்படுத்தும். பல இன்னல்களின் நடுவே தன் வாழ்வைத் தொலைக்காதிருக்க சுமை சுமக்கும் சித்தாள்களின் மனச்சுமையைச் செங்கற்களும், கற்களும் அறியாது.

## கூடுதல் வினாக்கள்

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **கற்காலம்** | - | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| **புலம்புவார்** | - | வினையாலணையும் பெயர் |
| **செங்கற்கள்** | - | பண்புத்தொகை |

www.tnpscjob.com

**பகுபத உறுப்பிலக்கணம்.**

| | | |
|---|---|---|
| புலம்புவார் | - | புலம்பு + வ் + ஆர் |
| புலம்பு | - | பகுதி |
| வ் | - | எதிர்கால இடைநிலை |
| ஆர் | - | படர்க்கை வினைமுற்று விகுதி |

## பலவுள் தெரிக

1. **நாகூர் ரூமியின் இயற்பெயர் யாது?**
அ) முகம்மதுரஃபி ஆ) முகம்மது மீரான்
இ) முகம்மது இஸ்மாயில் ஈ) முகம்மது **[விடை: அ) முகம்மதுரஃபி]**

2. **நாகூர் ரூமி பிறந்த மாவட்டம்**
அ) மதுரை ஆ) நெல்லை
இ) தஞ்சை ஈ) திருச்சி **[விடை: இ) தஞ்சை]**

3. **நாகூர் ரூமி முதன் முதலில் எழுதிய இதழ் ___________.**
அ) குங்குமம் ஆ) கணையாழி
இ) தென்றல் ஈ) புதிய பார்வை **[விடை: ஆ) கணையாழி]**

4. **நாகூர் ரூமி எழுதிய புதினம் (நாவல்) ___________.**
அ) சொல்லாத சொல் ஆ) ஏழாவது சுவை
இ) கப்பலுக்குப் போன மச்சான் ஈ) சுபமங்களா **[விடை: இ) கப்பலுக்குப் போன மச்சான்]**

5. **சிறிதளவே சலனத்தை ஏற்படுத்துவது ___________.**
அ) தலைக்கனம் ஆ) அடுத்தவர் கனவு
இ) சித்தாளின் மரணம் ஈ) சித்தாளின் புலம்பல் **[விடை: இ) சித்தாளின் மரணம்]**

6. **தொழிலாளர்களின் மனச் சுமையை அறியாதது ___________.**
அ) கட்டடம் ஆ) செங்கற்கள்
இ) கம்பிகள் ஈ) மணல் **[விடை: ஆ) செங்கற்கள்]**

7. **தன் வாழ்வு தொலைக்காமல் காக்க தலையில் கை வைப்பவர் ___________.**
அ) சித்தாளு ஆ) பொறியாளர்
இ) உழவர் ஈ) காவலர் **[விடை: அ) சித்தாளு]**

8. **நாகூர் ரூமியின் கவிதைத் தொகுப்புகளில் ஒன்று ___________.**
அ) கப்பலுக்குப் போன மச்சான் ஆ) கொல்லிப்பாவை
இ) நதியின் கால்கள் ஈ) மீட்சி **[விடை: இ) நதியின் கால்கள்]**

9. **இன்னலில் இருக்கும் தொழிலாளர் நிலையை நினைப்பவர்கள் ___________.**
அ) முதலாளிகள் ஆ) கவிஞர்கள்
இ) மக்கள் ஈ) அமைச்சர்கள் **[விடை: ஆ) கவிஞர்கள்]**

10. **தன் வாழ்வு தொலைக்காமல்
தற்காத்து வைப்பதற்காய் - இத்தொடரில் உள்ள நயம்?**
அ) மோனை நயம் ஆ) எதுகை நயம்
இ) இயைபு ஈ) உவமை அணி **[விடை: அ) மோனை நயம்]**



www.tnpscjob.com

11. ‘சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது’ எனக் குறிப்பிடும் கவிஞர்?
அ) நாகூர் ரூமி ஆ) கண்ணதாசன்
இ) ஜெயகாந்தன் ஈ) பாரதியார் [விடை: அ) நாகூர் ரூமி]

12. மாறுபட்ட ஒன்றினைக் கண்டறிக.
அ) மீட்சி ஆ) சுபமங்களா
இ) ஏழாவது சுவை ஈ) புதியபார்வை [விடை: இ) ஏழாவது சுவை]

13. நதியின் கால்கள் என்பது நாகூர் ரூமியின் __________.
அ) கவிதைத் தொகுதி ஆ) படைப்புகள் வெளியான இதழ்
இ) நாவல் ஈ) சிறுகதைத் தொகுதி [விடை: அ) கவிதைத் தொகுதி]

14. ‘கப்பலுக்குப் போன மச்சான்’ என்பது நாகூர் ரூமியின் __________.
அ) கவிதைத் தொகுதி ஆ) படைப்புகள் வெளியான இதழ்
இ) நாவல் ஈ) சிறுகதைத் தொகுதி [விடை: இ) நாவல்]

## குறுவினா

1. நாகூர் ரூமியின் படைப்புகள் வெளியான இதழ்களைப் பட்டியலிடுக.
   - மீட்சி
   - சுபமங்களா
   - புதிய பார்வை
   - குங்குமம்
   - கொல்லிப்பாவை
   - குமுதம்
   - இலக்கிய வெளிவட்டம்
2. நாகூர் ரூமியின் கவிதைத் தொகுப்புகள் யாவை?
   - நதியின் கால்கள்
   - ஏழாவது சுவை
   - சொல்லாத சொல் ஆகியவையாகும்.
3. சித்தாள் கற்கள் சுமக்கக் காரணம் யாது?
   - வாழ்வைத் தொலைக்காமல் தன்னைக் காக்கவும்,
   - அடுத்த வேளை உணவுக்காகவும் சித்தாள் கற்களைச் சுமக்கிறாள்.
4. ‘தலைக்கனமே வாழ்வாக
ஆகிப்போனது இவளுக்கு’ - ஏன்? யாருக்கு?
செங்கற்களைச் சுமந்து , சித்தாளுக்குத் தலைக்கனமே வாழ்வாகிப்போனது.
5. ‘சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது’ என்று கவிஞர் நாகூர் ரூமி கூறுவதன் உள்நோக்கம் யாது?
   - சித்தாள் தலையில் சுமக்கும் செங்கற்கள் சுமைகளைவிட,
   - அவளது மனதில் சுமக்கும் வறுமை உள்ளிட்ட சுமைகள் ஏராளம் ஆகும்.
6. ‘நதியின் கால்கள்’ என்ற கவிதைத் தொகுதியை எழுதியவர் யார்? அவர் இயற்பெயர் யாது?
   - ‘நதியின் கால்கள்’ என்ற கவிதைத் தொகுதியை எழுதியவர் : நாகூர் ரூமி
   - அவரின் இயற்பெயர் : முகம்மது ரஃபி

## சிறுவினா

**1. நாகூர் ரூமி குறிப்பு வரைக.**

- நாகூர் ரூமி தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்.
- இவரது இயற்பெயர் முகம்மது ரஃபி.
- இவர் 1980களில் "கணையாழி" இதழில் எழுதத் தொடங்கினார்.
- குறுநாவல், கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்பு எனப் பல தளங்களில் இயங்கி வருபவர்.
- கப்பலுக்குப் போன மச்சான் என்ற புதினத்தையும் படைத்துள்ளார்.

**2. சித்தாளின் இன்னல்களை விளக்குக (அல்லது) நாகூர் ரூமியின் 'சித்தாளு' கவிதைக் கருத்தை எழுதுக.**

- பொற்காலமாக இருந்தாலும் சித்தாள் தலையில் எழுதப்பட்டதோ கற்காலம்.
- தன் வாழ்வை தொலைத்துவிடாமல் காத்துக்கொள்வதற்காக தலையில் கை வைப்பவள்.
- வாழ்வில் தலைக்கனம் (இறுமாப்பு) கொண்டவர் உண்டு. ஆனால், கல் சுமந்து தலைக்கனமானது இவளுக்கு.
- அடுத்தவர் கனவுக்காக அலுக்காமல் சுமக்கும் கற்களெல்லாம் இவளின் அடுத்தவேளை உணவுக்குதான். இவள் இறந்தால்கூட சலனம் சிறிதளவுதான்.
- இந்தச் சித்தாளின் மனச்சுமையை அவள் சுமக்கும் செங்கற்கள் அறியாது.

**3. 'அலுக்காமல் இவள் சுமக்கும்**
**கற்களெல்லாம்**
**அடுத்தவேளை உணவுக்காக' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் சுட்டுதல்:**

நாகூர் ரூமியின் 'சித்தாளு' என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் சித்தாள் ஒருவர் கூறுவதாக இவ்வரிகள் இடம்பெற்றுள்ளன.

**பொருள் விளக்கம்:**

அடுக்குமாடி வீடாகவோ அல்லது அலுவலகமாகவோ, எதுவாக இருப்பினும் அடுத்தவர் கட்டும் கட்டிடத்தின் கனவுக்கு அலுப்பில்லாமல் கற்களைச் சுமந்து உழைப்பது எல்லாம், சித்தாளின் அடுத்தவேளை உணவுக்காகத் தான்.



## கற்பவை கற்றபின்

பக்கம்: 211

**1. மனிதநேயத்தை வெளிப்படுத்தும் புதுக்கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

வானம் பார்த்த பூமியாய்
வறண்டு கொண்டிருக்கின்றது
மனித நேயம்.

மனிதா,
உன்னையும் விலங்கையும்
வேறுபடுத்துவது மனிதநேயம்தான்
ஆதலால் மனிதநேயம் வளர்ப்போம்
புதியதோர் உலகம் படைப்போம்.

உடல் என்பதில்
வேற்றுமை இருப்பினும்
உயிர் என்பதில்
ஒற்றுமை கொண்டு
துயரம் கண்டதும்
கண்ணீர் விடுத்து
இஷ்டப்பட்டு இனிதே உதவுவதே
இறைவன் விரும்பும் மனிதநேயம்...

இயல் 9 மனிதம்

கவிதைப் பேழை

# தேம்பாவணி

- வீரமாமுனிவர்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று __________, __________ வேண்டினார்.

அ) கருணையன், எலிசபெத்துக்காக

ஆ) எலிசபெத், தமக்காக

இ) கருணையன், பூக்களுக்காக

ஈ) எலிசபெத், பூமிக்காக

[விடை: அ) கருணையன், எலிசபெத்துக்காக]

### குறுவினா

1. காய்மணி யாகு முன்னர்க்
காய்ந்தெனக் காய்ந்தேன்
- உவமை உணர்த்தும் கருத்து யாது?

**உவமை:**

இளம்பயிர் நெல்மணி காணும் முன்னே மழையின்றி வாழக் காய்தல்

**உவமை உணர்த்தும் கருத்து:**

கருணையனாகிய நான் என் தாயார் எலிசபெத் அவர்களை இழந்து வாடுகின்றேன்.

### சிறுவினா

1. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

- கருணையனாகிய நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.
- அறிவோடு பொருந்திய உறுப்புகள் இயங்காத இந்த உடலின் தன்மையை அறியேன்.
- உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொண்டு வரும் வழிவகைகளை அறியேன்.
- காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன் என்று கூறுகிறார்.

"செய்முறை அறியேன்; கானில்
செல்வழி அறியேன்"



www.tnpscjob.com

## நெடுவினா

**1. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரி.**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை<br>வீரமாமுனிவரின் உவமை உருவக கவிதாஞ்சலி<br>முடிவுரை |

**முன்னுரை:**

தாயின் அன்பை எழுத உலக மொழிகள் போதாது. தாயை இழந்த துயரம் சொல்லில் சொல்ல இயலாது. தாயை இழந்த கருணையனின் கண்ணீர் சொற்களை அறிவோம்.

**வீரமாமுனிவரின் உவமை உருவக கவிதாஞ்சலி :**

**1) மலர்ப்படுக்கை:**

கருணையனின் தாய் மறைந்துவிட்டாள். கருணையன் தன் கையைக் குவித்துப் 'பூமித்தாயே! என் அன்னையின் உடலைக் காப்பாயாக என்று கூறி, குழியிலே மலர்ப்படுக்கையை பரப்பினான். அன்னையின் உடலை மண்ணிட்டு மூடி மலர்களையும் தன் கண்ணீரையும் பொழிந்தான்.

**2) இளம்பயிர் வாட்டம்:**

என் தாயின் மார்பில் மணிமாலையென அசைந்து வாழ்ந்தேனே! இப்பொழுது. இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து காய்ந்து மணியாகு முன்பே, தூய மணி போன்ற மழைத்துளி இன்றி வாடிக் காய்ந்து விட்டது போல நானும் வாடுகிறேன். என் மனம் மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலர்போல் வாடுகிறது.

**3) அம்பு துளைத்த வேதனை:**

தீயையும் நஞ்சையும் தன் முனையில் கொண்ட அம்பு துளைத்ததால் ஏற்படும் புண்ணின் வரியைப் போல என் துயரம் வேதனை தருகிறது. துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இக்காட்டில் அழுது வாடுகிறேன்.

**4) தவிப்பு:**

சரிந்த வழுக்கு நிலப்பகுதியிலே தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன். நவமணிகள் பதித்த மணிமாலைகளை இணைத்தது போன்று நல்ல அறன்கள் எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன் புலம்பினான்.

**5) உயிர்கள் அழுதல்:**

புலம்பலைக் கேட்டு பல்வேறு இசைகளை இயக்கியது போல் தேன் மலர்கள்தோறும் மணம் வீசும் மலர்களும், மலர்ந்த சுனை தோறும் உள்ள பறவைகளும், வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போல கூச்சலிட்டன.

**முடிவுரை:**

வீரமாமுனிவர் உவமை, உருவக மலர்களால் தன் கவிதை மூலம் எலிசபெத்துக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

www.tnpscjob.com

**இலக்கணக் குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **காக்கென்று** | - | காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம் |
| **கணீர்** | - | கண்ணீர் என்பதன் இடைக்குறை |
| **காய் மணி** | - | வினைத்தொகை |
| **உய்முறை** | - | வினைத்தொகை |
| **செய்முறை** | - | வினைத்தொகை |
| **மெய்முறை** | - | வேற்றுமைத்தொகை |
| **கைமுறை** | - | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| **ஒலித்து** | - | வினையெச்சம் |
| **வாழ்ந்தேன்** | - | தன்மை ஒருமை வினைமுற்று |
| **பரப்பி** | - | வினையெச்சம் |
| **வீ** | - | ஓரெழுத்தொருமொழி |
| **தடவிலா** | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| **நல்லறம்** | - | பண்புத்தொகை |
| **இளங்கூழ்** | - | பண்புத்தொகை |

**பகுபத உறுப்பிலக்கணம்.**

**அறியேன் - அறி + ய் + ஆ + ஏன்**
அறி - பகுதி
ய் - சந்தி
ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**பரப்பி - பரப்பு + இ**
பரப்பு - பகுதி
இ - வினையெச்ச விகுதி

**ஒலித்து - ஒலி + த் + த் + உ**
ஒலி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. கிறிஸ்துவுக்கு முன் தோன்றியவர் ________.**
அ) பேதுரு ஆ) ஆபிரகாம்
இ) திருமுழுக்கு யோவான் ஈ) சூசை **[விடை: இ) திருமுழுக்கு யோவான்]**

**2. திருமுழுக்கு யோவானுக்கு வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இட்ட பெயர் ________.**
அ) கருணாகரன் ஆ) கருணையன்
இ) கருணாமூர்த்தி ஈ) வலின் **[விடை: ஆ) கருணையன்]**

**3. கருணையனின் தாயார் யார்?**
அ) எலிசபெத் ஆ) மரியாள்
இ) சாரா ஈ) அண்ணாள் **[விடை: அ) எலிசபெத்]**

இயல் 9

4. **சொல்லையும் பொருளையும் பொருத்துக.**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) சேக்கை | - | 1. நிலம் |
| ஆ) அசும்பு | - | 2. இளம்பயிர் |
| இ) இளங்கூழ் | - | 3. மாலை |
| ஈ) படலை | - | 4. படுக்கை |

அ) 3, 2, 1, 4 ஆ) 4, 1, 2, 3
இ) 2, 1, 3, 4 ஈ) 2, 1, 4, 3 **[விடை: ஆ) 4, 1, 2, 3]**

5. **தேம்பா + அணி என்பதன் பொருள் __________.**
அ) வாடாத மாலை ஆ) சூடாத மாலை
இ) பாடாத மாலை ஈ) தேன்மாலை **[விடை: அ) வாடாத மாலை]**

6. **கிறித்துவின் வளர்ப்புத் தந்தை __________.**
அ) கருணையன் ஆ) சூசையப்பர்
இ) தாவீது ஈ) ஈசாக்கு **[விடை: ஆ) சூசையப்பர்]**

7. **தேம்பாவணி நூலில் உள்ள காண்டங்கள் __________.**
அ) இரண்டு ஆ) மூன்று
இ) ஐந்து ஈ) ஏழு **[விடை: ஆ) மூன்று]**

8. **தேம்பாவணி படைக்கப்பட்ட காலம் __________.**
அ) 7ஆம் நூற்றாண்டு ஆ) 12ஆம் நூற்றாண்டு
இ) 17ஆம் நூற்றாண்டு ஈ) 19ஆம் நூற்றாண்டு **[விடை: இ) 17ஆம் நூற்றாண்டு]**

9. **தேம்பாவணியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை __________.**
அ) 3656 ஆ) 3565
இ) 3613 ஈ) 3615 **[விடை: ஈ) 3615]**

10. **தேம்பாவணியின் படலங்களின் எண்ணிக்கை __________.**
அ) 33 ஆ) 35
இ) 36 ஈ) 39 **[விடை: இ) 36]**

11. **தேம்பாவணி ஒரு __________ நூல் ஆகும்.**
அ) பெருங்காப்பிய ஆ) புதின
இ) நாடக நூல் ஈ) வரலாற்று **[விடை: அ) பெருங்காப்பிய]**

12. **தேம்பாவணியை இயற்றியவர் யார்?**
அ) கபிலர் ஆ) கால்டு வெல்
இ) வீரமாமுனிவர் ஈ) ஜி.யு.போப் **[விடை: இ) வீரமாமுனிவர்]**

13. **தமிழ் முதல் அகராதி எது?**
அ) சதுரகராதி ஆ) தமிழ் அகராதி
இ) தொன்மை அகராதி ஈ) பழைய அகராதி **[விடை: அ) சதுரகராதி]**

14. **வீரமாமுனிவரின் இயற்பெயர் __________ ஆகும்.**
அ) கான்சுடான்சு ஜோசப் பெசுகி ஆ) தாமஸ் பெஸ்கி
இ) இஸ்மத் ஈ) கால்டுவெல் **[விடை: அ) கான்சுடான்சு ஜோசப் பெசுகி]**

www.tnpscjob.com

**15. சந்தா சாகிப் வீரமாமுனிவருக்கு அளித்த பட்டம் யாது?**

அ) சாகிப் ஆ) இஸ்மத்
இ) இஸ்மத் சன்னியாசி ஈ) சன்னியாசி **[விடை: இ) இஸ்மத் சன்னியாசி]**

**16. இஸ்மத் சன்னியாசி என்பதன் பொருள் ___________.**

அ) தூயவன் ஆ) புனிதன்
இ) பெரியோன் ஈ) தூயதுறவி **[விடை: ஈ) தூயதுறவி]**

**17. இஸ்மத் சன்னியாசி என்பது ___________ மொழிச் சொல்.**

அ) பாரசீக ஆ) இலத்தீன்
இ) எபிரேய ஈ) உருது **[விடை: அ) பாரசீக]**

**18. கானில் செல்வழி அறியேன் - யார் கூற்று?**

அ) எலிசபெத் கூற்று ஆ) கருணையன் கூற்று
இ) சூசையப்பர் கூற்று ஈ) தாவீது கூற்று **[விடை: ஆ) கருணையன் கூற்று]**

**19. பொருத்துக.**

1. கூழ் - அ) கிளை
2. கொம்பு - ஆ) பயிர்
3. புழை - இ) காடு
4. கான் - ஈ) துளை

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

**20. பொருத்துக.**

1. கடிந்து - அ) விலக்கி
2. உவமணி - ஆ) மாலை
3. படலை - இ) மணமலர்
4. துணர் - ஈ) மலர்கள்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ]**

**21. பொருத்துக.**

1. காக்கென்று - அ) இடைக்குறை
2. கணீர் - ஆ) தொகுத்தல் விகாரம்
3. காய்மணி - இ) வேற்றுமைத்தொகை
4. மெய்முறை - ஈ) வினைத்தொகை

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

**22. வேறுபட்ட ஒன்றினைத் தேர்வு செய்க.**

அ) திருமுழுக்கு யோவான் ஆ) அருளப்பன்
இ) கருணையன் ஈ) எலிசபெத் **[விடை: ஈ) எலிசபெத்]**

**23. வேறுபட்ட ஒன்றினைத் தேர்வு செய்க.**

அ) சூசையப்பர் ஆ) யோவான்
இ) வளன் ஈ) இயேசு **[விடை: ஈ) இயேசு]**



www.tnpscjob.com

24. 'சரிந்தன அசும்பில் செல்லும்' இவ்வடிகளில் 'அசும்பு' என்பதன் பொருள் ________.
அ) வானம் ஆ) நிலம்
இ) காடு ஈ) கிளை [விடை: ஆ) நிலம்]

25. நவமணி என்பதில் 'நவம்' என்ற சொல் குறிப்பது ________.
அ) ஆறு ஆ) ஒன்பது
இ) பத்து ஈ) ஐந்து [விடை: ஆ) ஒன்பது]

26. 'நல்லறப் படலைப் பூட்டும்' இவ்வடிகளில் 'படலை' என்னும் பொருள் தரும் சொல் ________.
அ) மாலை ஆ) மணமலர்
இ) மலர்கள் ஈ) நிலம் [விடை: அ) மாலை]

27. கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி ________.
அ) சூசையப்பர் ஆ) யோவான்
இ) வளன் ஈ) இயேசு [விடை: ஆ) யோவான்]

28. கருணையன் என்பவர் ________.
அ) வீரமாமுனிவர் ஆ) யோசேப்பு
இ) அருளப்பன் ஈ) சாந்தாசாகிப் [விடை: இ) அருளப்பன்]

## குறுவினா

1. தேம்பாவணி பிரித்துப் பொருள் கூறுக.
- தேம்பாவணி – தேம்பா + அணி என்றும் தேன் + பா + அணி என்றும் பிரிக்கலாம்.
- தேம்பா + அணி என்பதற்கு வாடாத மாலை என்று பொருள்.
- தேன் + பா + அணி என்பதற்கு தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்று பொருள்.

2. வீரமாமுனிவர் படைத்த இலக்கியங்கள் யாவை?
- சதுரகராதி
- தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்)
- சிற்றிலக்கியங்கள்
- உரைநடை நூல்கள்
- பரமார்த்தக் குரு கதைகள்
- மொழிபெயர்ப்பு நூல்கள்

ஆகியவற்றைப் படைத்துள்ளார்.

3. எதனை மட்டும் தான் அறிந்ததாகக் கருணையன் கூறுகிறார்?

தன் தாயாகிய எலிசபெத் தன் கையால் காட்டிய முறைகளை மட்டும் அறிவேன். வேறொன்றும் அறியேன் என்று கூறுகிறார்.

4. தேம்பாவணி குறிப்பு வரைக.
- தேம்பாவணி பெருங்காப்பிய வகை நூல்.
- இந்நூல் மூன்று காண்டங்களை உடையது.
- 36 படலங்களையும் 3615 பாடல்களையும் உடையது.
- இந்நூல் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூலாகும்.
- இந்நூலின் ஆசிரியர் வீரமாமுனிவர் ஆவார்.

5. கருணையன் உள்ளம் வாடியது எதற்கு ஒப்பாகத் தேம்பாவணி கூறுகின்றது?

கருணையன் உள்ளம் ,மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலர் வாடுதலுக்கு ஒப்பாகத் தேம்பாவணி கூறுகின்றது.



www.tnpscjob.com

**6. கருணையன், 'இரும்புழைப் புண்போல்' நோகக் காரணம் யாது?**

கருணையனின் தாய் இறந்து விட்டார். தாயை இழந்து வாடும் அவர், தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான, புண்ணின் வலியால் வருந்துவது போன்று வருந்துகின்றார்.

**7. 'நவமணி வடக்க யில்போல்' - இவ்வடிகள் சுட்டும் நவமணிகள் யாவை?**

- கோமேதகம்
- நீலம்
- பவளம்
- மரகதம்
- மாணிக்கம்
- முத்து
- புருடராகம் (புஷ்பராகம்)
- வைடூரியம்
- வைரம்

**8. திருமுழுக்கு யோவான் என்பவர் யார்?**

- கிறித்துவிற்குமுன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான்.
- இவரை அருளப்பன் என்றும் குறிப்பிடுவர்.
- இவரே கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி.
- தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் காட்டினில் வாழ்ந்தார்.
- வீரமாமுனிவர் கருணையன் என்று இவரை அழைக்கின்றார்.

**9. 'அழுங்கணீர் பொழிந்தான்' யார்? ஏன்?**

- அழுங்கணீர் பொழிந்தவர் :திருமுழுக்கு யோவான்(கருணையன்)
- கருணையன் தன் அன்னையின் உடலை மண்ணுள் அடக்கம் செய்து, அதன் மேல் மலர்களையும் கண்ணீரையும் ஒன்றாகப் பொழிந்தான்.

**10. கருணையன் புலம்பியதைக் கேட்டு, அழுவன போன்று கூச்சலிட்டன எவை?**

கருணையன் புலம்பியதைக் கேட்டு, தேன்மலர்கள் பூத்த மணம் வீசும் மலர்களும், சிறுகுட்டைகள் தோறும் உள்ள பறவைகளும், வண்டுகளும் அக்காட்டில் அழுவன போன்று கூச்சலிட்டன.

## சிறுவினா

**1. கருணையனிடம் இயற்கை கொண்ட பரிவு யாது?**

- நல் அறங்களையெல்லாம் ஒரு கோவையாக இணைத்த அறமாலையை அணிந்த மார்பனாகிய கருணையன் கொண்ட துயரைக் கண்டு இயற்கையும் பரிவு கொண்டது.
- பல்வேறு இசைகளை இயக்கியது போன்று, தேன்மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள மணம் வீசும் மலர்களும், சுனை தோறும் தங்கியுள்ள பறவைகளும் வண்டுகளும் கருணையன் உடன் இணைந்து அழுவன போல கூச்சலிட்டன.

**2. இஸ்மத் சன்னியாசி - விளக்குக.**

- வீரமாமுனிவரின் எளிமையையும் துறவையும் கண்டு வியந்த, திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் என்னும் மன்னர் இஸ்மத் சன்னியாசி என்னும் பட்டம் வழங்கினார்.
- இஸ்மத் சன்னியாசி என்பதற்குத் தூயதுறவி என்று பொருள்.
- இஸ்மத் சன்னியாசி என்பது பாரசீகச் சொல் ஆகும்.



www.tnpscjob.com

**3. வீரமாமுனிவர் - குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| **பெயர்** | : வீரமாமுனிவர் |
| **இயற்பெயர்** | : கான்சுடான்சு (கொன்ஸ்டான்) ஜோசப் பெஸ்கி |
| **புனைபெயர்** | : தைரிய நாத சுவாமி |
| **இலக்கியப் பணி** | : இலக்கண நூல், மொழிபெயர்ப்பு, சிற்றிலக்கியம், உரைநடை. |
| **இயற்றிய நூல்கள்** | : சதுரகராதி, தொன்னூல் விளக்கம், பரமார்த்தக் குருகதைகள், வேதியர் ஒழுக்கம், செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம். |
| **காலம்** | : கி.பி. 1680-1747. |
| **பிறமொழிப் புலமை** | : இலத்தீன், கிரீக்கு, எபிரேயம், ஆங்கிலம், தெலுங்கு. |
| **மறைந்த ஊர்** | : அம்பலக்காடு |

**4. 'தூய்மணி யாகத் தூவும்**
**துளியிலது இளங்கூழ் வாடி' என்ற உவமையை விளக்கிப் பொருளொடு பொருத்துக.**

**உவமை :**

இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னர் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்தல்.

**பொருள் :**

கருணையன் தாயை இழந்து வாடுதல்.

**பொருத்தம் :**

இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னர் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்தல் போன்று கருணையன் தன் தாயை இழந்து வாடுகின்றார்.

**5. கருணையனின் துயருக்குக் கூறப்பட்ட ஒப்புமைகள் (உவமைகள்) யாவை?**

- இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னர் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்தல்
- மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலர்
- தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான, புண்ணின் வலியால் வருத்தம்.
- துணையைப் பிரிந்த பறவை
- சரிந்த வழுக்கு நிலத்தில் தனியே விடப்பட்டு வழி தெரியாமல் தவிப்பவன்.

- ஆகியன கருணையனின் துயருக்குக் கூறப்பட்ட ஒப்புமைகள் (உவமைகள்) ஆகும்.

**6. 'தாயும் கடிந்தெனைத் தனித்துப் போனாள்' என்று கருணையன் வருந்தக் காரணம் யாது?**

- நான் உயிர்ப்பிழைக்கும் வழி அறியேன்.
- நினைத்ததைக் கண்ட அறிவுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்காத இந்த உடலின் தன்மையை அறியேன்.
- உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொள்ளும் வழிகளையும் அறியாதவன்.
- என் தாய் கையால் காட்டிய அறிவுரையை மட்டுமே நான் அறிவேன்.
- இப்படி என்னைத் தவிக்க விட்டுவிட்டு என் தாய் மட்டும் தனியாகப் போய்விட்டாளே!

- என்னையும் என் தாய் கூட்டிச் சென்று இருக்கலாம், எதுவும் தெரியாத நான் எப்படி வாழ்வேனோ?



www.tnpscjob.com

## கற்பவை கற்றபின்

பக்கம்: 215

**1. வீரமாமுனிவர் தமிழகத்தில் தங்கிப் பணி செய்த இடங்களைப் பற்றியும் அங்கு அவர் ஆற்றிய தமிழ்ப் பணிகளைப் பற்றியும் நூலகத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டுக.**

- வீரமாமுனிவர் 1710 முதல் 1747 வரை தமிழகத்தில் இருந்து தமிழ்ப்பணி ஆற்றினார்.
- சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்றார்.
- இலக்கியச் சுவடிகளைத் தேடி எடுத்ததால் "சுவடி தேடும் சாமியார்" எனப்பட்டார்.
- திருக்குறள், தேவாரம், திருப்புகழ் போன்ற நூல்களைப் பிற ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்த்தார்.
- தமிழ்-லத்தீன் அகராதியை உருவாக்கினார். அதில் 1000 தமிழ்ச் சொற்களுக்கு இலத்தீனில் விளக்கம் அளித்து உள்ளார்.
- திருக்குறள் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் இலத்தீனில் மொழிபெயர்த்தார்.
- 1728இல் புதுவையில் இவரின் பரமார்த்தக் குருவின் கதை நூல் முதல் முறையாக அச்சிட்டு வெளியிடப்பட்டது.
- வேறு எந்தக் காப்பியப் புலவரும் சிற்றிலக்கியம், அகராதி இலக்கணம், உரைநடை என பிற இலக்கிய வகைகளில் நூல்கள் படைக்கவில்லை.
- இத்தமிழ்ப் பணிகளை இவர் தமிழ்நாட்டில் மதுரை, திருச்சி, கன்னியாகுமரி, ஆற்காடு வேலூர், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய பல்வேறு இடங்களில் தங்கிப் பணியாற்றினார்.

**2. கண்ணதாசனின் இயேசு காவியத்தில் மலைப் பொழிவுப் பகுதியைப் படித்து அதில் வரும் அறக் கருத்துகளை எழுதுக.**

**மலைப் பொழிவின் அறக்கருத்துகள்:**

- எளிய மனத்தோர் பேறு பெற்றோர்.
- வஞ்சமில்லாத நெஞ்சத்துடன், பிறரைப் பழி சொல்லாது வாழ்பவர் விண்ணரசு எய்துவார்.
- துயரம் அடைவோர் பேறு பெற்றோர் அவர்கள் ஆறுதல் பெறுவார்கள்.
- சாந்தம் உடையவர் பேறு பெற்றவர்கள்; தரணி (உலகம்) முழுவதும் அவர்களுக்கு உரியது.
- நீதியின்மேல் பற்றுக்கொண்டு வாழ்பவர்கள் பாக்கியம் பெற்றவர்கள்.
- இரக்க சிந்தை உடையவர்கள் பாக்கியவான்கள்; அவர்களுக்கே இரக்கம் கிடைக்கும்.
- தூய மனதையுடையவர்கள் சிறப்புப் பெற்றவர்கள்; தோன்றும் கடவுளை அவர்கள் நேரில் காண்பர்.
- பிறர் வேதனை தீர்க்க, தம்மை வருத்தும் ஞானிகள் எவரோ, அவர்கள் விண்ணக அரசை அடைந்தே தீர்வர்.
- மனிதர்கள் பால் பகை கொண்டு, மடி நிறைய காணிக்கையை இறைவனுக்கு மட்டும் செலுத்துவதால் பயன் என்ன?

**"ஊருக்குத் தீமைகள் செய்து - உன்**
**உள்ளம் மகிழ்வது பாவம்**
**யாருக்கும் தீமையில்லாமல் - நீ**
**அழிந்து விடுவதே லாபம்"**

இவைபோன்ற இன்னும் பல அறக்கருத்துகள் "மலைப்பொழிவில்" இடம்பெற்று உள்ளன.

இயல் 9

www.tnpscjob.com

இயல் 9 மனிதம்

விரிவானம்

# ஒருவன் இருக்கிறான்

- கு. அழகிரிசாமி

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

**1. அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.**

**மனித நேயம் கொண்ட கதைமாந்தர் - வீரப்பன்**

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| அன்பாளர் |
| கொடையாளர் |
| பண்பாளர் |
| முடிவுரை |

**முன்னுரை:**

கு.அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் வீரப்பன். அவர் தான் வறுமைப்பட்ட போதும் தன் அன்பையும் அருளையும் கொண்டு நட்பைப் போற்றினார்.

**அன்பாளர்:**

வீரப்பன் காஞ்சிபுரத்தில் விறகுகடையில் வேலை செய்து வந்தார். அவர் ஏழையாக இருந்தாலும் நண்பன் குப்புசாமி மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார். அனாதையான குப்புசாமிக்கு அவன் உறவினர்களும் உதவ முன்வரவில்லை. ஆனால் தன்னுடைய வறுமையையும் பொருட்படுத்தாமல் வீரப்பன், குப்புசாமியுடன் மனித நேயத்துடன் இருக்கின்றார்.

**கொடையாளர்:**

குப்புசாமி நோய்வாய்ப்பட்டு வேலை இழந்தபோது வீரப்பன் அவரை தன் வீட்டிற்கு அழைத்து வந்து உணவு கொடுப்பார். மேலும், தான் கடன் வாங்கி அதனைக் குப்புசாமிக்குக் கொடுப்பார். சென்னைக்குச் செல்லும் ஆறுமுகத்திடம் கடிதம் ஒன்றையும் மூன்று ரூபாயையும் குப்புசாமியிடம் கொடுத்து அனுப்பினார் வீரப்பன் .

**பண்பாளர்:**

வீரப்பன் குப்புசாமி குணமடைய நாள்தோறும் கோயிலுக்குச் சென்று வேண்டுகிறார். அவருக்கு வேலை இல்லாதபோதும் நண்பன் குப்புசாமிக்குக் கொடுக்க ஒருவரிடம் மூன்று ரூபாய் கடன் வாங்கி சென்னைக்குச் செல்லும் ஆறுமுகத்திடம் கொடுத்து அனுப்புகிறார். குப்புசாமியைப் பார்க்க வரலாம் என்றால், இந்த மூன்று ரூபாய் பேருந்துக்கு செலவாகிவிடும் என்பதால்தான் கொடுத்தனுப்புகிறேன். இன்னொரு இடத்திலும் பணம் கேட்டிருப்பதாகவும் கிடைத்தவுடன் குப்புசாமியைப் பார்க்க விரைவாக வருவதாகவும் வீரப்பன் தெரிவித்தார்.

**முடிவுரை:**

ஏழ்மையிலும் நட்பைப் பாராட்டி உதவும் வீரப்பன், மனித நேயத்தின் மாமகுடமாகத் திகழ்கின்றார். அவரின் செயல்பாடுகள் கல் மனதையும் கரைத்து மனிதநேயத்தைச் சுரக்க வைக்கின்றது. ஒருவன் இருக்கிறான், மனித நேயத்திற்குச் சான்றாக அவன் இருக்கின்றான்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. "ஒருவன் இருக்கிறான்" கதையின் ஆசிரியர் __________ ஆவார்.**

அ) அழகர்சாமி    ஆ) அழகிரிசாமி
இ) அண்ணாதுரை    ஈ) சுஜாதா    **[விடை: ஆ) அழகிரிசாமி]**

**2. அரசுப் பணியை உதறிவிட்டு முழுதாக எழுத்துப்பணியை மேற்கொண்டவர் __________.**

அ) அழகிரிசாமி    ஆ) புதுமைப்பித்தன்
இ) ஜெயகாந்தன்    ஈ) சுஜாதா    **[விடை: அ) அழகிரிசாமி]**

**3. __________ வரிசையில் மூத்தவர் அழகிரிசாமி ஆவார்.**

அ) வானம்பாடி    ஆ) மணிக்கொடி
இ) கரிசல் எழுத்தாளர்கள்    ஈ) கணையாழியில் எழுதியவர்
**[விடை: இ) கரிசல் எழுத்தாளர்கள்]**

**4. அழகிரிசாமி எந்நாட்டில் படைப்பாளர்களுக்கான படைப்புப் பயிற்சி அளித்தார் __________.**

அ) தாய்லாந்து    ஆ) இந்தியா
இ) இலங்கை    ஈ) மலேசியா    **[விடை: ஈ) மலேசியா]**

**5. சரியான கூற்றுகளைத் தேர்க.**

i) தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டு அழகிரிசாமி திறனாய்வு நூல்களைப் படைக்கவில்லை.
ii) கு. அழகிரிசாமி பல இதழ்களில் பணியாற்றியவர்.
iii) வீரப்பனும் குப்புசாமியும் ரொம்ப சிநேகம்.

அ) மூன்று கூற்றுகளும் சரியானவை
ஆ) கூற்று (ii), (iii) சரியானவை
இ) கூற்று (iii) மட்டும் சரி
ஈ) மூன்று கூற்றுகளும் தவறானவை.    **[விடை: ஆ) கூற்று (ii), (iii) சரியானவை]**

**6. ஒருவன் இருக்கிறான் கதை வெளியான இதழ் __________.**

அ) கலைமகள்    ஆ) கணையாழி
இ) குமுதம்    ஈ) ஆனந்தவிகடன்    **[விடை: அ) கலைமகள்]**

**7. "ஒருவன் இருக்கிறான்" கதை வெளியான ஆண்டு __________.**

அ) 1956    ஆ) 1966
இ) 1976    ஈ) 1979    **[விடை: ஆ) 1966]**

**8. வீரப்பன் குப்புசாமிக்கு கொடுத்துவிட்ட பணம் __________.**

அ) ஒரு ரூபாய்    ஆ) மூன்று ரூபாய்
இ) நான்கு ரூபாய்    ஈ) ஐந்து ரூபாய்    **[விடை: ஆ) மூன்று ரூபாய்]**



www.tnpscjob.com

## கற்பவை கற்றபின்

பக்கம்: 220

**1. சமூகத் தொண்டு செய்து உயர்ந்த விருதுகளைப் பெற்ற ஆளுமைகளைப் பட்டியலிட்டு அவர்கள் செய்த சமூகப்பணி குறித்துக் கலந்துரையாடுக.**

**கலந்துரையாடல்**

**கலந்துரையாடுபவர்கள்: மதியழகன், புனிதா**

**மதியழகன் :** புனிதா! தங்கம்மா என்ற சமூகச் சேவையாளர் எங்கு எப்போது பிறந்தார் என்று உனக்குத் தெரியுமா?

**புனிதா :** தெரியாது மதியழகா... நீ சொல் தெரிந்துகொள்கிறேன்.

**மதியழகன் :** இவர் சனவரி 7ஆம் நாள் 1925இல் யாழ்ப்பாணம் அருகில் உள்ள ஓர் ஊரில் பிறந்தவர். சைவ சித்தாந்த தத்துவங்களில் ஈடுபாடுடையவர்.

**புனிதா :** அவரது சமூகப் பணிகள் பற்றி சொல்கிறாயா?

**மதியழகன் :** ஓ!... சொல்கிறேன். 1977இல் ஓர் ஆலய நிர்வாகப் பதவியை முழுமையாக எடுத்துக்கொண்டு ஆன்மீகத்தின் வாயிலாக அறச்சாலைகள், நந்தவனம், தீர்த்த தடாகம் உருவாக்கினார். ஆதரவற்ற சிறுமிகளுக்குத் "துர்க்காபுரம் மகளிர் இல்லம்" நிறுவினார். அன்னபூரணி அன்னதான மண்டபம் அமைத்தார். வயோதிகர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார். அன்னையர் இல்லம், துர்க்காதேவி மணிமண்டபம் என்பனவற்றை ஆரம்பித்து சமூகத் தொண்டாற்றினார்.

**புனிதா :** ஓ!... இவ்வளவு சேவைகள் செய்திருக்கிறார்களா... அதனால்தான் அத்தனை விருதுகளும், பட்டங்களும் பெற்றாரோ.

**மதியழகன் :** ஆம் புனிதா. இன்னும் இதுபோன்ற ஆளுமைகளின் சிறப்புகளை மீண்டும் நாம் சந்திக்கும் போது பேசலாமா?

**புனிதா :** ஓ!... பேசலாம். இப்போது புறப்படுகிறேன். நன்றி டா...

**2. "அகநக நட்பதே நட்பு" - என்ற தலைப்பில் நண்பர்களுக்கு உதவிய சூழல்களைச் சுவைபட எழுதுக.**

**"அகநக நட்பதே நட்பு"**

எனக்கு ஒரு நண்பன் இருந்தான். அவன் எனக்கு நண்பன் என்று புறத்தே பார்ப்பவர்களுக்குத் தெரியாது. நண்பர்கள் என்று யாரும் கண்டுபிடித்ததும் இல்லை.

"முகநக நட்பது நட்பன்று" என்பதை நாங்கள் இருவரும் உணர்ந்து இருந்தோம்.

ஒருநாள் வகுப்பறைக்கு அறிவிப்பு ஒன்று வந்தது. ஒரு குறிப்பிட்ட புத்தகம் வாங்க பணம் கொடுப்பது தொடர்பான அறிவிப்பு அது. எங்கள் வகுப்பில் அனைவரும் கொடுத்து விட்டோம். என் நண்பனைத் தவிர...

அவன் என்னைப் பார்த்தான்... அன்று நான் மதிய உணவு எடுத்துவரவில்லை. கடையில் சாப்பிடுவதற்காக வைத்திருந்த பணத்தை அவனுக்காகக் கொடுத்துவிட்டேன். அவன் கொண்டு வந்திருந்த உணவைப் பகிர்ந்து உண்டோம். எல்லோரும் வியந்தனர்.

எப்படிடா நீங்க இரண்டுபேரும்... என்று கேட்டவர்களுக்கு இருவரும் ஒரே மாதிரி பதில் சொன்னோம்.

**"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பதே நட்பு"**



www.tnpscjob.com

இயல் மனிதம் 9

கற்கண்டு

# அணிகள்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி?**

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
இ) உருவகம் ஈ) தீவகம் **[விடை: இ) உருவகம்]**

### குறுவினா

**1. தீவக அணியின் வகைகள் யாவை?**

தீவக அணி மூவகைப்படும். அவை:

- முதல் நிலைத் தீவகம்
- இடைநிலைத் தீவகம்
- கடைநிலைத் தீவகம் எனப்படும்.

**2. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**
**- இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?**

- இக்குறட்பாவில் அமைந்துள்ள அணி நிரல்நிறையணியாகும்.
- இலக்கணம்: நிரல் - வரிசை: நிறை - நிறுத்துதல்
- சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறை அணி எனப்படும்.

### சிறுவினா

**1. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக் காட்டுக.**

**அணி இலக்கணம்:**

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை (கருத்தை) ஏற்றிக்கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**எ.கா: "போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி**
**'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட"**

**பாடல் பொருள்:**

கோட்டை மதில்மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல, கைகாட்டியது என்பது பொருள்.

**விளக்கம்:**

- கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேல் இருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன.

இயல் 9

♦ ஆனால் இளங்கோவடிகள், மதுரையில் கோவலன் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள், கையை அசைத்து 'இம் மதுரைக்குள் வரவேண்டா' என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாக தன் கருத்தைக் கொடியின் மேல் ஏற்றிக் கூறுகிறார். எனவே இப்பாடல் தற்குறிப்பேற்ற அணிக்குச் சான்றாகியது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. மக்களுக்கு அழகு சேர்ப்பன __________ ஆகும்.**

அ) அணிகலன்கள் ஆ) கலை
இ) கல்வி ஈ) பேச்சுத்திறன் **[விடை: அ) அணிகலன்கள்]**

**2. தீவகம் என்ற சொல்லின் பொருள் __________.**

அ) விளக்கம் ஆ) சான்று
இ) விளக்கு ஈ) வெளிச்சம் **[விடை: இ) விளக்கு]**

**3. கோவலனும் கண்ணகியும் __________ நகருக்குள் சென்றபோது கொடிகள் அசைந்தன.**

அ) தஞ்சை ஆ) புகார்
இ) மதுரை ஈ) வஞ்சி **[விடை: இ) மதுரை]**

**4. தீவக அணி __________ வகைப்படும்.**

அ) மூன்று ஆ) ஐந்து
இ) ஆறு ஈ) எட்டு **[விடை: அ) மூன்று]**

**5. நிரல் நிறையணி - இதில் 'நிரை' என்பதன் பொருள் __________.**

அ) நிறுத்துதல் ஆ) வரிசை
இ) எடை ஈ) கூட்டம் **[விடை: ஆ) வரிசை]**

**6. இயல்பாக உரியச் சொற்களின் மூலம் கூறுவது __________ அணி ஆகும்.**

அ) தற்குறிப்பேற்றணி ஆ) நிரல்நிறை அணி
இ) உயர்வு நவிற்சி அணி ஈ) தன்மையணி **[விடை: ஈ) தன்மையணி]**

**7. தன்மை அணியின் வகைகள் __________ ஆகும்.**

அ) மூன்று ஆ) நான்கு
இ) ஐந்து ஈ) ஏழு **[விடை: ஆ) நான்கு]**

**8. தன்மை அணியை __________ என்றும் கூறுவர்.**

அ) தீவக அணி ஆ) உவமை அணி
இ) தன்மை நவிற்சி அணி ஈ) தற்குறிப்பேற்ற அணி **[விடை: இ) தன்மை நவிற்சி அணி]**

**9. வைகை நதி பாயும் நகரம் __________.**

அ) நெல்லை ஆ) மதுரை
இ) தஞ்சை ஈ) கடலூர் **[விடை: ஆ) மதுரை]**

**10. 'சேந்தன வேந்தன் திரு நெடுங்கன்' எனும் பாடலில் அமைந்த அணி?**

அ) தீவக அணி ஆ) தன்மை அணி
இ) தற்குறிப்பேற்ற அணி ஈ) உவமை அணி **[விடை: அ) தீவக அணி]**



www.tnpscjob.com

**11. பொருத்துக.**

1. சேந்தன் - அ) பகை
2. தெவ் - ஆ) சிவந்தன
3. சிலை - இ) பறவை
4. புள் - ஈ) வில்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ]**

**12. பொருத்துக.**

1. தற்குறிப்பேற்றணி - அ) ஒரு சொல் பல இடங்களில் உள்ள சொற்களோடு பொருள் கொள்ளல்
2. தீவக அணி - ஆ) சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்திப் பொருள் கொள்ளல்
3. நிரல் நிறை அணி - இ) உண்மையான இயல்புத் தன்மை
4. தன்மையணி - ஈ) கவிஞனின் குறிப்பேற்றல்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ **[விடை: ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ]**

## குறுவினா

**1. தன்மையணியின் வகைகளை எழுதுக.**

தன்மையணி நான்கு வகைப்படும். அவை:

- பொருள் தன்மையணி
- குணத் தன்மையணி
- சாதித் தன்மையணி
- தொழிற் தன்மையணி ஆகியவை ஆகும்.

**2. தன்மையணியை விளக்குக.**

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும், அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரியச் சொற்கள் அமைத்துப் பாடுவது தன்மையணி ஆகும். இதனைத் தன்மை நவிற்சிஅணி என்றும் கூறுவர்.

## சிறுவினா

**1. நிரல்நிறை அணியை சான்றுடன் விளக்குக.**

**அணி இலக்கணம்:**

நிரல் - வரிசை நிறை - நிறுத்துதல்.

சொல்லையும், பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

**சான்று:**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**அணிப் பொருத்தம்:**

இக்குறளில் "அன்பும் அறனும்" என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி "பண்பும் பயனும்" என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல்நிறை அணிக்குச் சிறந்த சான்றாகும்.



www.tnpscjob.com

**11. தீவக அணியை விளக்கி, சான்று கூறுக.**

**அணி இலக்கணம்:**

தீவகம் என்னும் சொல்லுக்கு விளக்கு என்று பொருள். செய்யுளில் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவது தீவக அணி என்பர்.

**சான்று:** "சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள், இழிகுருதி - பாய்ந்து
திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்,
மிசைஅனைத்தும் புள்குலமும் வீழ்ந்து"

**பாடலின் பொருள்:**

அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன. கண்கள் சிவந்த அளவில் பகை மன்னர்களின் தோள்கள் சிவந்தன. இரத்தம் பாய்ந்த திசைகள் அனைத்தும் சிவந்தன; அம்புகள் சிவந்தன. இரத்தம் மேலே வீழ்வதால் பறவைகள் சிவந்தன.

**அணிப்பொருத்தம்:**

முதலில் உள்ள சேந்தன (சிவந்தன) என்ற சொல் பாடலில் கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது.

**12. 'எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்' அணி எது? சான்றுடன் விளக்குக. (அல்லது) தன்மை நவிற்சி அணியைச் சான்றுடன் விளக்கு.**

**அணி இலக்கணம்:**

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணி ஆகும். இதனை தன்மை நவிற்சியணி என்றும் கூறுவர்.

**சான்று:** "மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக் கோன்
கண்டளவே தோற்றான், அக்காரிகைதன்
உண்டளவே தோற்றான் உயிர்."

**பாடலின் பொருள்:**

உடம்பு முழுக்கத் தூசியும் விரித்த கருமையான தலைமுடியும் கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வையை பாயும் நகரத்து அரசன் பாண்டியன் தோற்றான். அவளது சொல் கேட்டு உயிர் நீத்தான்.

**அணிப்பொருத்தம்:**

கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாடு உரிய சொற்களின் மூலம் கூறியமையால் தன்மை நவிற்சியணி எனப்படும்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 222

**1. முன் வகுப்புகளில் கற்ற அணிகளை எடுத்துக்காட்டுகளுடன் தொகுத்து ஒப்படைவு ஒன்றை உருவாக்குக.**

**உவமையணி:**

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"



www.tnpscjob.com

**பிறிது மொழிதலணி:**

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்"

**வேற்றுமையணி:**

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு."

**சொற்பொருட்பின்வரு நிலையணி:**

"உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து."

## மொழியை ஆள்வோம்

*பக்கம்: 225*

**மொழிபெயர்ப்பு**

1. Education is what remains after one has forgotten what one has learned in School. – *Albert Einstein.*
   ஒரு பள்ளியில் கற்றுக்கொண்டதை மறந்து விட்டால், பள்ளியில் கற்ற கல்வியினால் பயன் என்னே!
2. Tomorrow is often the busiest day of the week. – *Spanish Proverb*
   இவ்வாரத்தில் நாளை ஒருநாள் மட்டுமே அதிக வேலைப்பளு உள்ளது.
3. It is during our darkest moments that we must focus to see the light. – *Aristotle*
   நம் இருண்ட தருணங்களிலும் ஒளியைப் பார்ப்பதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும்.
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – *Winston Churchill.*
   வெற்றி என்பது முடிவல்ல, தோல்வி என்பதும் விதியல்ல. இரண்டுக்காகவும் தொடர்ந்து முயற்சியுடனும் ஊக்கத்துடனும் செயல்படுவதே எண்ணப்படும்.

**உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**

1. **தாமரை இலை நீர் போல**
   என் நண்பன் தாமரை இலைநீர் போலப் பட்டும் படாமலும் பழகுவான்.
2. **மழைமுகம் காணாப் பயிர்போல**
   தாயை இழந்த கருணையன் மழை முகம் காணாப் பயிர்போல வாடினான்.
3. **கண்ணினைக் காக்கும் இமைபோல**
   இறைவன் அனுதினமும் நம்மைக் கண்ணினைக் காக்கும் இமைபோலக் காத்துக் கொண்டு இருக்கிறார்.
4. **சிலை மேல் எழுத்து போல**
   சிறுவயதில் கற்கும் அறக்கருத்துகள் சிலைமேல் எழுத்து போல் மனதிலே நிலைத்து நின்று நம் வாழ்வை வழி நடத்தும்.

**பொருத்தமான நிறுத்தற் குறியிடுக.**

சேரனின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன

**விடை:**

சேரனின் பட்டப்பெயர்களில் 'கொல்லி வெற்பன்', 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'கொல்லிமலை'யை வென்றவன் 'கொல்லி வெற்பன்' எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

இயல் 6

www.tnpscjob.com

**வாழ்த்துரை எழுதுக.**

**உம் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்கவிழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்குக.**

**" இன்றைய மாணவர்கள்**
**நாளைய தலைவர்கள்"**

ஆம்! அன்பார்ந்த மாணவர்களே! நாளைய தலைவர்களான உங்களை இந்த நாட்டு நலப்பணித்திட்ட முகாம் மூலம் வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறேன்.

**நவீன பாரதத்தை உயர்த்துபவர்களே!**

"நூறு இளைஞர்களைக் கொடுங்கள்: இந்த நாட்டையே மாற்றிக் காட்டுகின்றேன்" என்றார் சுவாமி விவேகானந்தர் அன்று. அவர் இன்று இருந்திருந்தால், இந்த முகாமிலுள்ள உங்களை வைத்து நவீன பாரதத்தையே வடிவமைத்திருப்பார். நவீன பாரதத்தை உயர்த்தும் உன்னத தூண்கள் நீங்கள்தான்.

**சேவைச் செம்மல்களே!**

மக்கள் தொண்டே! இறைவன் தொண்டு என்பார்கள். அதைப்போலவே நாட்டு நலப்பணித்திட்டம் மூலம் மக்களுக்குச் சேவை செய்ய காத்திருக்கும் சேவைச் செம்மல்களே! அன்னை தெரஸாவின் உள்ளங்களே! சேவை செய்ய பணம் தேவை இல்லை. நல்ல மனம் இருந்தால் போதும் என்பதை அறிந்து செயல்படும் செல்வங்களே! உங்களை மனம் நெகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

**நாளைய கலாம்களே!**

**"தூக்கத்தில் வருவது கனவன்று**
**உங்களைத் தூங்கவிடாமல் செய்வதே கனவு"**

என்றார் டாக்டர். அப்துல் கலாம். நாட்டைத் தூய்மையாக்குவதிலும் நாட்டைப் பசுமையாக்குவதிலும் நீங்கள் தூங்காமல் கனவு கண்டு நனவாக்குங்கள். உங்கள் கைகளால் வைக்கப்படும் இந்த மரங்கள்தான் நீங்கள் நாளைய கலாம் என்பதைப் பறைசாற்றும். இன்றைய இளைய கலாம்களுக்கு வாழ்த்துக்கள்.

நாட்டு நலத்திட்டப் பணிபுரியும் வள்ளல்களை மீண்டும் வாழ்த்தி, என்னுரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

**குறுக்கெழுத்துப் போட்டி.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | லை | | 2 தே | மா | | ள் | | | ணி |
| ர் | | தி | வ | | டு | ற | | 3 கு | வ |
| கா | ரை | த் | நே | 4 மூ | ட் | கு | | று | பா |
| ல | கீ | ர் | ய | ங் | 5 எ | க் | ழ் | ந் | ம் |
| ம் | ங் | கீ | ப் | கி | 7 தி | ரு | மி | தொ | 6 தே |
| | 8 செ | க் | பா | ல் | ங் | 9 தி | த | கை | |
| 10 சி | | ய் | வா | | 11 க | லி | த் | தொ | 12 கை |
| ங் | | 13 மெ | ண | | ள் | | ளை | த் | க் |
| 14 க | ய | வ | ர் | யா | வை | 15 ஔ | ள் | னை | கி |
| ம் | க | வ | ரு | 16 உ | | | 17 பி | 18 வி | ளை |



www.tnpscjob.com

| இடமிருந்து வலம் | வலமிருந்து இடம் |
|---|---|
| 1. சிறுபொழுதின் வகைகளுள் ஒன்று(2)- **காலை**<br>2. நேர் நேர் - வாய்பாடு (2) - **தேமா**<br>11. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று (5) - **கலித்தொகை**<br>14. மக்களே போல்வர் ..........(4) - **கயவர்** | 15. மருந்தே ஆயினும் விருந்தோடு உண் - ஆசிரியர் (4) - **என்றார் - ஔவையார்**<br>16. மதிமுகம் உவமை எனில் முகமதி ..........(5) - **உருவகம்** |
| **மேலிருந்து கீழ்** | **கீழிருந்து மேல்** |
| 1. முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது (5) - **கார்காலம்**<br>2. மொழிஞாயிறு (9)- **தேவநேயப்பாவாணர்**<br>3. நல்ல என்னும் அடைமொழி கொண்ட தொகைநூல் ..........(5)- **குறுந்தொகை**<br>4. கழை என்பதன் பொருள் (4) - **மூங்கில்**<br>7. மதியின் மறுபெயர், இது நிலவையும் குறிக்கும் (4) - **திங்கள்**<br>10. குறிஞ்சித் திணைக்குரிய விலங்கு ........(4) - **சிங்கம்**<br>12. ......... என்பது புறத்திணைகளுள் ஒன்று (4) - **கைக்கிளை** | 5. விடையின் வகைகள் (3) - **எட்டு**<br>6. வீரமாமுனிவர் இயற்றிய நூல் (5) - **தேம்பாவணி**<br>8. பிள்ளைத்தமிழின் இரண்டாம் பருவம் (4) - **செங்கீரை**<br>9. முப்பால் பகுப்பு கொண்ட நூல்களுள் ஒன்று (6) - **திருக்குறள்**<br>13. மன்னனது உண்மையானப் புகழை எடுத்துக் கூறுவது (7) - **மெய்க்கீர்த்தி**<br>17. 96 வகை சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று (7) - **பிள்ளைத்தமிழ்**<br>18. செய்தவம் - இலக்கணக்குறிப்பு (5) - **வினைத்தொகை** |

**பாடலில் இடம்பெற்றுள்ளத் தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிக.**

கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்
கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை
காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை
செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ

**புலவர் பெயர்கள்**

- கம்பன்
- உமறுப்புலவர்
- ஜவ்வாதுப் புலவர்
- அபுல் காசிம்
- குணங்குடி மஸ்தான்
- சேக்கிழார்
- செய்கு முதலியார்

**விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.**

**மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்**

**சேர்க்கை எண்:** 333 **தேதி:** 08.03.2020 **வகுப்பும் பிரிவும்:** 11 - அ

1. மாணவ/மாணவியின் பெயர் : **செ. புனிதா**
2. பிறந்த தேதி : **17.02.2004**
3. தேசிய இனம் : **இந்தியர்**
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : **கு. செல்லமணி - மணியம்மை**
5. வீட்டு முகவரி : **13, சிவன் கோவில் தெரு, சத்யா நகர், புதுக்கோட்டை.**



www.tnpscjob.com

6. இறுதியாக படித்து முடித்த வகுப்பு : **பத்தாம் வகுப்பு**
7. பயின்ற மொழி : **தமிழ்**
8. பெற்ற மதிப்பெண்கள் : **465/500**
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : **அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை.**

| தேர்வின் பெயர் | பதிவு எண்/ ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| பள்ளி இறுதித் தேர்வு (பத்தாம் வகுப்பு) | 226643 / 2019 | தமிழ் | 96 |
| | | ஆங்கிலம் | 92 |
| | | கணிதம் | 97 |
| | | அறிவியல் | 90 |
| | | சமூக அறிவியல் | 90 |
| | | மொத்தம் | 465 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : **ஆம்**
11. தாய்மொழி : **தமிழ்**
12. சேரவிரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : **பிரிவு எண்:** 103 / **தமிழ் வழி**

மாணவ/ மாணவியர் கையொப்பம்
செ. புனிதா

**நன்றியுரை எழுதுக.**

**பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "மரம் நடு விழாவுக்கு" வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர், பெற்றோர்க்கு பசுமைப் பாதுகாப்பு படை சார்பாக நன்றியுரை எழுதுக.**

## நன்றியுரை

வணக்கம், நாளைய நிகழ்வின் தொடக்கம்தான், இன்றைய நன்றி

எம் பள்ளியின் பசுமைப் பாதுகாப்பு படையின் சார்பாக கொண்டாடிக் கொண்டிருக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் நன்றி!

எம் அழைப்பிற்கிணங்க, பல பணிகளுக்கு இடையிலும் தன் நேரத்தை எங்களுக்காக ஒதுக்கித் தந்து, மரங்கள் பற்றிய சிறப்புரை வழங்கி இவ்விழாவை சிறப்பு செய்து கொண்டிருக்கும் வனச்சரக அலுவலர் அவர்களுக்கு மறவாத நன்றியை உரித்தாக்குகிறேன்.

அதுமட்டுமின்றி, மரம்நடுவதற்குத் தேவையான மரக்கன்றுகளைத் தந்து உதவியதற்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விழாவில் பங்கேற்று முன்னிலை வகித்துக்கொண்டிருக்கும் பெற்றோர் ஆசிரிய கழகத் தலைவர் ஐயா அவர்களுக்கு மிகுந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். விழாவைச் சிறப்பிக்க வருகை தந்திருக்கும் பெற்றோர்களுக்கும், எம்மை ஊக்குவித்த தலைமை ஆசிரியர்க்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் அமைதி காத்த நண்பர்களுக்கும் எம் பசுமைப் பாதுகாப்புப் படை சார்பாக நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

இப்படிக்கு,
**செயலர்,**
தேசிய பசுமைப்படை,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சேலம்.

நாள் : 08.03.2020
இடம் : சேலம்



www.tnpscjob.com

## மொழியோடு விளையாடு

பக்கம்: 228

**விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க.**




**"சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு" விழா**

*ஜனவரி 18, நெல்லை.*

*நெல்லை மாவட்டம் ஆலங்குளத்தில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு விழா கொண்டாடப்பட்டது. போக்குவரத்துக் காவல்துறை ஆய்வாளர் தலைமையேற்றார். சாலைக் குறியீடுகளை விளக்கி, குறியீடுகள் உணர்த்துவதை மனதில் கொண்டு கட்டுப்பாட்டுடன் கூடிய வேகத்தில் வாகனத்தை ஓட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார். குழந்தைகள் மாணவர்கள் மனதில் சாலைவிதிகளைப் பதித்து விழிப்புணர்வுடன் வளர்க்க அறிவுறுத்தினார். தலைக்கவசம், நான்கு சக்கர வாகனம் ஓட்டும் போது இருக்கை பட்டை கட்டாயமாக போட்டுக்கொள்ள வேண்டும் என்றார். சாலை விபத்தினால் ஏற்படும் மரணங்களை நம் விழிப்புணர்வால் தடுத்து விடலாம் என்றார். நிறைவாக வருகை தந்திருந்த பெரியோர், குழந்தைகள், காவல்துறையைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இணைந்து "சாலை விழிப்புணர்வை வலியுறுத்தி" மாரத்தான் தொடர் ஓட்டம் நிகழ்த்தினர்.*

**கீழ்க்காணும் நாட்காட்டியில் புதன் கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்டு தமிழெண்களால் நிரப்புக.**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | க | உ | ௩ | ௪ |
| ௫ | ௬ | எ | அ | ௯ | ௰ | கக |
| கஉ | க௩ | க௪ | க௫ | க௬ | கஎ | கஅ |
| க௯ | உ௰ | உக | உஉ | உ௩ | உ௪ | உ௫ |
| உ௬ | உஎ | உஅ | உ௯ | ௩௰ | | |

**அகராதியில் காண்க.**

**குணதரன்** – முனிவன், நற்குணமுள்ளவன்.
**செவ்வை** – நேர்மை, மிகுதி, வழி செப்பம், சரியான நிலை.
**நகல்** – சிரிக்கை, மகிழ்ச்சி, நட்பு, படி, ஏளனம்.
**பூட்கை** – கொள்கை, வலிமை, மனஉறுதி, சிங்கம், யானை.

## செயல் திட்டம்

மாணவர்களே விளையாட்டு உலகில் உங்களுக்குப்பிடித்த ஆளுமைத்திறன் மிக்க விளையாட்டு வீரர் பற்றிய படங்கள், செய்திகளை தொகுத்து தொகுப்பேடு (Album) செய்து கொள்ளுங்கள்.

(மாணவர் செயல்பாடு)

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



அறம் என்பது
வலக்கைக் கொடுப்பது
இடக்கைக்குத் தெரியக்கூடாது - இது
தர்மத்தின் வேர்
அறமும் நியதியும்
அக்காலமும் இக்காலமும் உண்டு
தர்மம் செய்வது விளம்பரமல்ல
தாழ்ந்தோர் உயர்வு பெற
சுயப்படம் எடுத்து
வலைதளம் அனுப்பும்
வழக்கமே இன்று அறமா?

## நிற்க அதற்குத் தக

ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள்; உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள்; சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம்; சில உதவிகள் இரக்கத்தால் செய்கிறோம். தொடர்வண்டியில் பாட்டுப் பாடிவரும் ஒருவருக்கு நம்மையறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டாம் என்று கருதி, வேண்டாவெறுப்போடு சில இடங்களில் உதவி செய்கிறோம்!

நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை...

| உதவி | மனநிலை |
|---|---|
| ♦ வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவிய போது. | ♦ இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு அவருக்கு மகிழ்ச்சி. |
| ♦ உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவிய போது. | ♦ கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு. |
| ♦ பேருந்தில் பயணம் செய்தபோது உடன் பயணம் செய்த முதியோருக்குப் பயணச் சீட்டு எடுத்துக்கொடுத்து உதவியபோது. | ♦ மனநிறைவும், அவரது முகத்தின் அமைதியும், மகிழ்ச்சியும் என்னையும் மகிழச் செய்தது. |
| ♦ ஒருவேளை உணவு வழங்கிய போது. | ♦ பசிப்பிணி தீர்த்த மகிழ்ச்சி ஏற்பட்டது. |

**கலைச்சொல் அறிவோம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Humanism | - | மனித நேயம் | Cultural Boundaries | - | பண்பாட்டு எல்லை |
| Cabinet | - | அமைச்சரவை | Cultural values | - | பண்பாட்டு விழுமியங்கள் |



www.tnpscjob.com